மொழியியல்

தொகுதி 13, 1989 ஜூலை எண்கள் 1-4
14 — 1991 ஜூன் & 1-4

பேராசிரியர்

ச. அகத்தியலிங்கனார்

மணிவிழா மலர்

சிறப்புப் பதிப்பாசிரியர்

டாக்டர். கோ. சீனிவாசவர்மா

பதிப்பாசிரியர்கள்

டாக்டர். கி. அரங்கன்
டாக்டர். மு. சுசீலா
செல்வி. அ. மணிமேகலை

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக

1989—1991

T13399
R005A07

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்

பதிவு எண். 2 (1977)

அண்ணாமலைநகர்

செயற்குழு

தலைவர் — பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் (அண்ணாமலைநகர்)

துணைத் தலைவர் — பேராசிரியர் செ. வை. சண்முகம் (அண்ணாமலைநகர்)

செயலர் — பேராசிரியர் கி. அரங்கன் (தஞ்சாவூர்)

பொருளர் — பேராசிரியர் இராம. சுந்தரம் (தஞ்சாவூர்)

உறுப்பினர் — பேராசிரியர் ஜே. நீதிவாணன் (மதுரை)

பேராசிரியர் சு. இராசாராம் (தஞ்சாவூர்)

டாக்டர் இரா. கோதண்டராமன் (புதுவை)

டாக்டர் க. திலகவதி (மலேசியா)

டாக்டர் எம். ஏ. நுஃமான் (இலங்கை)

டாக்டர் ஜி. சங்கரநாராயணன் (மைசூர்)

டாக்டர் எம். ஜெயக்குமார் (கோவை)

டாக்டர் கே. மகாலிங்கம் (கவுஹாத்தி)

டாக்டர் ஜி. பாலசுப்பிரமணியன் (கள்ளிக்கோட்டை)

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின் காலாண்டு இதழ் கட்டணம்

	உள்நாடு	வெளிநாடு
ஆயுள் கட்டணம்	ரூ. 400/-	U.S. $. 100
		U.S. S. 75 (மலேசியா, சிங்கப்பூர், தென்ஆப்பிரிக்கா, இலங்கை)
ஆண்டுக்கட்டணம்	ரூ. 40/-	U.S. $. 10
...ண்டுக்கட்டணம் (...நிறுவனங்களுக்கு)	ரூ. 60/-	U.S. $. 15
...களுக்கு	ரூ. 20/-	

பேராசிரியர்

ச. அகத்தியலிங்கனார்

மணிவிழா மலர்

பேராசிரியர் ச. அகத்தியலிங்கனார்

பேராசிரியர்

ச. அகத்தியலிங்கம் அவர்களின்

வாழ்க்கை வரலாறு

உலக மொழிகளை ஒப்புநோக்கித் தமிழ் மொழியின் இலக்கண, இலக்கியத் தொன்மையையும் புகழையும் உலக மெங்கும் பறைசாற்றியவர் பேராசிரியர் ச. அகத்தியலிங்கனார். இவர் தமிழ் மொழியின் இலக்கணப் பேழையான தொல் காப்பியத்தை மேலைநாட்டு மொழியியல் அறிஞர்கள் பலரும் வியந்து போற்றும்படி அதன் திட்ப நுட்பங்களை உலகெங்கும் பரப்பியவர்களுள் முதன்மையானவர். தமிழகத்தில் தமிழ் மொழியியல் காலூன்ற வித்திட்டவரும் இவரே. மொழியியல் மூலம் தமிழைவளர்க்கத் தலைப்பட்டு 'மொழியியல்' எனும் இக் காலாண்டு இதழைத் தோற்றுவித்து தன் விடாமுயற்சி எனும் நீரூற்றி வளர்த்த பெருமை படைத்தவர் ஆவார். இதேபோல் நம் தமிழகத்தின் பழைய மொழிக் கூறுகளும், பண்பாடும், நுண் கலைகளும் நிறைந்த நாட்டுப்புற வாய்மொழி இலக்கிய ஆராய்ச்சியைத் தூண்டுவதற்காக 'நாட்டுப்புறவியல்' எனும் காலாண்டிதழ் ஒன்றையும் துவக்கிப் பலரையும் இத்துறையில் ஈடுபடச் செய்துள்ளார். அவை மட்டுமல்லாது 'அறிவியல் தமிழ்க் கழகம்' எனும் அமைப்பைத் தோற்றி நம் தண்டமிழ் உலக அரங்கில் பீடுநடைப் போடுமாறு பாடுபட்டவர் பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் அவர்கள். இவரின் தமிழ்ப்

பணியில் மிகவும் குறிப்பிடத் தக்கது இவர் திறம்பட நடத்திக் காட்டிய 20-க்கும் மேற்பட்ட இந்திய பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற கருத்தரங்கு மாநாடுகளாகும். (இதன் பயனாக ஏறக்குறைய 8,000-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் தமிழாசிரியர்களால் எழுதப்பெற்று 'ஆய்வுக் கோவை' என்ற தலைப்பின் கீழ் 40-க்கும் மேற்பட்ட நூல் தொகுதிகளாக அச்சேறியுள்ளன.

இந்தியாவிலும், அமெரிக்காவிலும் இரண்டு டாக்டர் பட்டம் பெற்ற இவர் 55- டாக்டர்களை உருவாக்கிச் சாதனை படைத்தவர். இவர் தமிழில் 16 நூல்களையும் ஆங்கிலத்தில் 6-நூல்களையும் எழுதியதோடு 35 நூல்களை பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இவர்தம் ஆய்வுக் கட்டுரைகள் 128. இவர் 18 ஆண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையத்தின் இயக்குனராகவும் இரண்டாண்டு தமிழ் துறையின் தலைவராகவும் மூன்றாண்டு தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகவும் பணியாற்றித் தமிழக அரசின் நல்லாசிரியர் விருதையும் பெற்றுள்ளார்.

இவர் ஆசியாவின் பிற நாடுகளோடு அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா நாடுகளுக்குச் சென்று சிறப்புரை செய்துள்ளார் இந்தியப் பல்கலைக் கழகங்கள் பலவற்றில் சிறப்புரையாற்றியும், பல கல்விக் குழுக்களில் பணிபுரிந்தும் பல்கலைக் கழக மாண்யக் குழுவின் உறுப்பினராக இருந்தும் இவர் செய்த கல்வித் தொண்டுகள் பாராட்டுதற்குரியவை.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 15-க்கும் மேற்பட்ட புதிய திட்டங்களைத் துவக்கி அவற்றிற்கான நிதியுதவிகளைப் பல இடங்களிலிருந்து பெற்று தந்தமை இவருடைய சீரியபணியாகும்.

வாழ்க்கைக் குறிப்புகள்

பெற்றோர்:

தந்தை: சண்முகம் பிள்ளை

தாய்: அருணாசலத்தம்மாள்

பிறந்த ஊர்: கேசவன்புதூர், கன்னியாகுமரி மாவட்டம்

பிறந்த நாள்: 19—8—1929

முகவரி: 155-மாரியப்பா நகர்,
மாரியப்பாநகர் அஞ்சல்
அண்ணாமலை நகர்
சிதம்பரம் - 608 002

கல்வி:

பி எஸ்ஸி, (கணிதம்) கேரளப் பல்கலைக்கழகம்.

எம்.ஏ., (தமிழ்) அண்ணாமலைப் பல்கலைக்கழகம், முதல் வகுப்பு முதன்மை மாணவர்,

பிஎச். டி., (தமிழ்) கேரளப் பல்கலைக் கழகம்,

பிஎச். டி., (மொழியியல்) இந்தியானா பல்கலைக் கழகம், அமெரிக்கா.

சிறப்பறிவுத் தேர்ச்சி:

மாற்றிலக்கண மொழியியல் (தொடரியல் & பொருளியல்) திராவிட மொழிகள் சங்கத் தமிழ் நாட்டுப்புறவியலும் பண்பாடும் பழங்குடி மக்கள் இயல்

பணிகள்:

1957-59	தமிழ் விரிவுரையாளர் தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி நாகர் கோவில்
1963-65	மொழியியல் மற்றும் தமிழ் வருகைத் துணைப் பேராசிரியர், சிக்காகோ பல்கலைக் கழகம் (யு. எஸ். ஏ.)
1965-66	மொழியியல் இணைப் பேராசிரியர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அண்ணாமலைநகர்
1966-67	மொழியியல் இணைப் பேராசிரியர் தில்லிப் பல்கலைக்கழகம், புதுதில்லி
1967-85	இயக்குநர், பேராசிரியர்&தலைவர் மொழியியல் துறை மொழியியல் உயராய்வு மையம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
1985-86	மொழியியல் பேராசிரியர் அண்ணாமலைப்பல்கலைக்கழகம்
1970-71	வருகை மொழியியல் பேராசிரியர் மொழியியல் துறை மிச்சிகன் பல்கலைக்கழகம் (யு. எஸ். எ.)
1978-79	வருகை மொழியியல் பேராசிரியர் மொழியியல் துறை மிச்சிகன் பல்கலைக்கழகம் (யு. எஸ். எ.)
1980-82	துறைத்தலைவர் (கூடுதல் பொறுப்பு) தமிழ்த் துறை அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
1986 89	துணைவேந்தர் தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்

Books.

1. 1967 **A Generative Grammar of Tamil**, Annamalai University, Annamalainagar.

2. 1968 **Languages of the World (in Tamil), Part-I,** Indo-European Languages (Ist Volume in the Series of eight books on World Languages,) Annamalainagar.

3. 1969 **Languages of the World (in Tamil), Part-II** Indo-European Languages (2nd Volume in the Series of eight books on World Languages), Annamalainagar.

4. 1970 **The language of Tamil Inscriptions 1250-1350** A.D (with Dr. S.V. Shanmugam), Annamalai University, Annamalainagar.

5. 1972 **Languages of the World (in Tamil) Part III** Uralic and Americal Indian Languages (3rd Volume in the Series of eight books on World Languages), Annamalainagar.

6. 1973 **A Bibliography of Dravidian Linguistics** (with Dr. S. Sakthivel), Annamalai University, Annamalainagar.

7. 1973 **A Bibliography for the Study of the Nilgiri Hill Tribes** (with Dr. S. Sakthivel), Annamalai University, Annamalainagar.

8. 1973 **Languages of the World (in Tamil) Part - IV.** African Languages (4th Volume in the Series of the eight books on World Languages), Annamalainagar.

9. 1975 **Languages of the World** (in Tamil) Part-V. Dravidian languages- (5th Volume in the Series of eight books on World Languages), Annamalainagar.

10. 1976 **Languages of the World** (in Tamil) Vol.5. Part-II-**Dravidian Languages**, Annamalainagar

11. 1976 **Kanikkara Dialect**, Annamalai University, Annamalainagar.

12. 1977 **A Grammar of Old Tamil with Special reference to Patirruppattu**, Annamalainagar.

13. 1977 **Moliyiyal Va:lvum Varala:rum** (with Dr. K. Pushpavalli), Ponnakam, Mariappa nagar, Annamalainagar.

14. 1980 **Colliyal - Peyariyal** (in Tamil), All India Tamil Linguistics Association, Annamalainagar.

15. 1981 **Patirruppattu with Translation, Transliteration and Commentary**, Annamalainagar (forthcoming).

16. 1982 **Colliyal-1, Peyariyal**, All India Tamil Linguistics Association, Annamalainagar.

17. 1982 **Colliyal-2, Vinaiyiyal-1**, All India Tamil Linguistics Association, Annamalainagar.

18. 1983 **Sankat Tamil**, Vol. I, All India Tamil Linguistics Association, Annamalainagar,

19. 1983 **Sankat Tamil**, Vol. II, All India Tamil Linguistics Association, Annamalainagar.

20. 1984 **Sankat Tamil**, Vol. III, All India Tamil Linguistics Association, Annamalainagar.

21. 1985 **Tolka:ppiyac cintanaikal-I**, All India Tamil Linguistics Association, Annamalainagar.

22. 1987 **Sankat Tamil** Vol. IV, All India Tamil Linguistics Association, Annamalainagar.

23. 1987 **Sankat Tamil**, Vol, V, All Tamil Linguistics Association, Annamalainagar.

Books Edited

24. 1969 **Dravidian Linguistics** (Seminar Papers) (Ed. with Dr. N. Kumaraswami Raja), Annamalai University, Annamalainagar.

25. 1971 Aayvukko:vai-3 (Ed. with Dr. V. Sp. Manickam, Dr. S. V. Subramaniam and Dr. T.E. Gnanamurthy), Annamalai University.

26. 1972 **Third Seminar on Dravidian Linguistics** (Ed with Dr. S.V. Shanmugam), Annamala University, Annamalainagar.

27. 1972 **Tholka: ppiya Moliyiyal** (Ed. with Dr. K. Murugaiyan), Annamalai University, Annamalainagar.

28. 1972 **Aayvukko:vai-4** (Ed. with Dr. S.V. Subramanian & Dr. T. E. Gannamurthy) Trivandrum.

29. 1972 **Tamilakap Palankuti makkal** (Ed.) Annamalainagar.

30. 1973 **Ilakkana Aayvuk Katturaikal-I,** Seminar papers 9E.d with Dr. K. Balasubramanian), Annamalai University, Annamalainagar.

31. 1973 **Aayvukko:vai-5** (Ed. with Dr. T. E. Gnanamurthy, Dr. S. V. Subramanian and Dr. M. Sundaram), Madras.

32. 1974 **Aayvukko:vai-6** (Ed. with Dr. S. V. Subramanian, Dr. T. E. Gnanamurthy and Prof. M. R. Boopathi), Pondicherry.

33. 1975 **Aayvukko:vai-7** (Ed. with Dr. S.V. Subramanian, Dr. T. E Gnanamurthy and Dr. S.Subramaniam), Nagercoil.

34. 1976 **Dravidian Case System** (Ed. with Dr. K.Kushalappa Gowda), Annamalainagar.

35. 1976 **Aayvukko:vai-8,** (Ed. with Dr. T.K. Gnanamurthy), Central Institute of Indian Languages, Mysore-6

36. 1976 **Seminar on Dravidian Linguistics-V** (Ed. with Dr. P. Subrahmanyam), Annamalai University, Annamalainagar.

37. 1977 **Seminar on Early Dravidian Grammars** (Ed. with Dr. N. Kumaraswami Raja), Annamalai University, Annamalainagar.

38. 1977 **Aayvukkovai 9** (Ed. with Dr. T. E.Gnanamurthy), Madurai.

39. 1977 **Aayvukkovai-10** (Ed. with. Dr. T. E. Gnanamurthy,) All India University Tamil Teachers' Association, Annamalainagar

40. 1979 **Ilakkiya Innamudu** (Ed. with Dr. T. E. Gnanamurthy), All India University Tamil Teacher's Association, Annamalainagar.

41. 1979 **Aayvukko:vai-11** (Ed. with Dr. T. E. Gnanamurthy), Hyderabad.

42. 1980 **Aayvukko:vai-12** (Ed. with T.E Gnanamurthy Tuticorin.

43. 1981 **Dravidian Syntax** Annamalai University, Annamalainagar.

44. 1981 **Aayvukko:vai-13** (Ed. with Dr. T. E. Gnanamurthy), Dindugal

45. 1982 **Aayvukko:vai-14** (Ed. with Dr. T. E. Gnanamurthy, Dr. S. V. Shanmugam, Dr. K. Karunakaran), All India University, Tamil Teachers' Association, Annamalainagar.

46. 1983 **Aayvukko:vai 15** (Ed. with Dr. T. E. Gnanamurthy, Dr. S.V. Shanmugam, Dr. K. Karunakaran), All India Tamil Teachers' Association, Annamalainagar.

47. 1984 **Aayvukko:vai-16 Vol. I, II, III & IV** (Ed. with Dr. T. E. Gnanamurthy, Dr. S. V. Shanmugam, Dr. K. Karunakaran), All India University, Tamil Teachers' Association, Annamalainagar.

48. 1985 **Aayvukko:vai- 17 Vol. I, II, III & IV** (Ed. with Dr. T. E. Gnanamurthy, Dr. S.V. Shanmugam, Dr. S. Sakthivel), All India University Tamil Teachers' Association, Annamalainagar.

49. 1986 **Aayvukko:vai- 18** Vol. I, II, III & IV (Ed. with Dr. T. E. Gnanamurthy, Dr. S.V. Shanmugam), Dr. S. Sakthivel), All India University, Tamil, Teachers' Association, Annamalainagar.

50. 1987 **Aayvukko:vai-19,** Vol. I, II, III & IV (Ed. with Dr. T.E. Gnanamurthy, Dr. S. V. Shanmugam, Dr. S. Sakthivel), All India University Tamil Teachers, Association, Annamalainagar.

51. 1987 **Nattuppuraviyal Aayvukk:vai,** Tamil Folklore Association of India, Annamalainagar.

52. 1987 **Mutual Karuttaranku Tamil Ilakkiya Aayvukko:vai,** Vol. I & II. (Ed. with Dr. S.N. Kandaswamy), All India Tamil Literary Association, Thanjavur.

53. 1988 **Aayukko:vai 20,**Vol. I, II, III. & IV (Ed. with Dr. T.E. Gnanamurthy et al), All India University Tamil Teachers' Association, Annamalainagar.

54. 1988 **Irantam Karutharanku Tamil Ilakkiya Aayvukkovai,** Vol. I & II (Ed. with Dr. S.N. Kandaswamy), All India Literary Association, Thanjavur).

55. 1988 **Valar Tamilil Ariviyal- I** (Ed. with Dr. Rm. Sundaram), Tamil Ariviya Kazhagam,;Thanjavur.

56. 1989 **Aayvukko:vai-21,** Vol. I, II, III & IV (Ed) with Dr. T. E. Gnanamurthy, et al' All India University Tamil Teachers, Association, Annamalainagar.

57. 1989 **Munra:m Karutharanku Tamil Ilakkiya Aayvukko vai** (Ed. with Dr. S. N. Kandaswamy), All India Tamil Literary Association, Thanjavur.

58. 1989 **Valar Tamilil Ariviyal** (Ed. with Dr. Rm. Sundaram) Tamil Ariviyal Kazhagam, Thanjavur.

B. Articles

1. 1961 "Oliyin Varalaru" (in Tamil) (with reference to Tamil Language, **Sentamil**, Vol. 57, Madurai.

2. 1962 "Oli Iyal" (in Tamil) (with reference to Tamil) **Sentamil**, Vol. 58, Madurai.

3. 1964 "Auxillary verbs in Tamil", **Tamil Culture**, Madras.

4. 1964 Tamil Nouns", **Anthropological Linguistics** Vol. 16, Bloomington, U.S A.

5. 1965 "Tamil Numerals" (in mimeo) **South Asia Language Programme**, Univerity of Chicago Chicago.

6. 1965 "Linguistic Studies in Ancient Greece" (in Tamil), **Sentamil Selvi**, Madras.

7. 1965 "Linguistics Studies in Ancient Rome' (in Tamil), **Sentamil Selvi**, Madras.

8. 1965 "Col Mayakkam,' **Sentamil**, Madurai.

9. 1965 "Structural Ambiguities in Tamil", **Indian Linguistics**, Vol. 26, Poona

10. 1965 "Number System in world Languages" (in Tamil), **Sentamil Selvi**, Madras.

11. 1966 "Teaching Tamil as a Foreign languages", Proceedings of the Conference-Seminar of the I.A.T.R., Kualalumpur.

12. 1966 "Interrogative in Tamil", **Indian Linguistics**, Vol. 27, Poona.

13. 1967 "Passive in Tamil", Proceedings of the Conference Seminar of the I.A.T.R., Kualalumpur.

14. 1968 "Tolkappiyamum Totariyalum" (in Tamil) Tolka:ppiyam and Syntax), **Sentamil Selvi**, Vol. 42, Madras.

15. 1968 "A Note on Teaching Plural in English", **The Journal of English Language Teaching**, Madras.

16. 1968 "On Verbal participle in Tamil", **Indian Linguistics**, Vol. 25, Poona.

17. 1968 "Elliptical Sentences in Tamil", **Linguistics** Vol. 52, The Hague.

18. 1969 "Pronominal Termination in Ceylon Tamil", **Journal of the Annamalai University**, Vol. 26, Annamalainagar.

19. 1969 "Tolka:ppiyar's Treatment of Syntax", **Aaraaycci**, Vol. 2, Tirunelveli.

20. 1969 "Passive in Dravidian", **Dravidian Linguistics** (Seminal papers), Annamalainagar.

21. 1969 "Infinitive in Tamil (mimeo), **First All India University Tamil Teachers' Conference**, Madurai.

22. 1969 "Linguistics and Grammar", Presidential Address at the **First All India University Tamil Teachers Conference**, Madurai.

23. 1969 "The First Sutra of Collatika:ram" (in Tamil) (with Dr. R. M. Sundaram), **Sentamil**, Vol. 65, Madurai.

24. 1969 "Infinitive in Dravidian" (mimeo) Seminar on **Dravidian Linguistics**, Annamalai nagar.

25. 1969 "Transitive and Intransitive Verbs", **All India Oriental Conference**, XXV Session Jadavpur, Calcutta.

26. 1969 "Ceyappa:ttu Vinai", **Tamil Polil**, Vol. 42

27. 1970 "Systematic Phonemics", **Bulletin of the Deccan Research Institute**, Vol. 28 Poona.

28. 1970 "Intransitive and Transitive in Tamil" (mimeo), **Second All India University Tamil Teachers' Conference**, Trichy.

29. 1970 "On Vinaiy-y-eccam", **Seminar on Tolka: ppiyam**, Annamalai University, Annamalai nagar.

30. 1970 "Toda Phonology" (with Dr. S.Sakthivel), **Journal of the Annamalai University** Vol. 27, **Annamalainagar**.

31. 1970 "Three dialects of Tamil" Pakha Sanjam, Vol. 3, 1-2 Patiala.

32. 1970 "Dictionary making in the Tamil region", (with Dr. N. Kumaraswami Raja), **Nantional Conference on Dictionary in Indian Languages** (mimeo), Mysore.

33. 1971 'A Note on Tamil Verbs classification", **Anthropological Linguistics**, Vol. 13, Bloomington, Indiana.

34. 1971 "Tirukkural Ceyven Eccam" (infinitive in Tamil) **Aayvukko:vai-3**, Annamalainagar.

35. 1971 "Passive in Tamil", Proceedings of the **International Conference Seminar of Tamil Studies**, Madras.

36. 1971 "Modality in Tamil", **Second All India Conference of Linguists**, Delhi.

37. 1972 "A Syntactical Treatment of 'must' in **Dravidian 3rd Seminar on Dravidian Linguistics**, Annamalai University, Annamalainagar.

38. 1972 "Nouns of the Badaga", **Journal of American Oriental Society**, Vol. 92., **Philadelphia.**

39. 1972 "Verbal Constraints on the Use of the Indefinite Pronoun in Tamil", **Journal of Tamil Studies, 230-36, Madras.**

40. 1972 "ai Verrumaiya", **Aayvukko:vai-4**, Trivandrum

41. 1972 "Tiravita Moliyiyal - Oru Kannottam" (in Tamil), **Aayvumalar**, Dept. of Tamil, Kerala University, Trivandrum.

42. 1972 "Linguistics and Tamil" (in Tamil), **Vanchi Na:ttu Malar**, Trivandrum.

43. 1972 "Instrumental in Dravidian", **The Third All India Conference of Linguistics**, (mimeo), Hyderabad.

44. 1972 "Folk Songs in Tamil", **Karantai Tamil Sanga Malar**, Tanjore.

45. 1972 "Kodagu Phonology" (with R. Balakrishnan), **Journal of the Annamalai University**, Vol. XXV, VIII, Annamalainagar.

46. 1972 "Toda Nouns" (with Dr. S. Sakthivel), **Indian Linguistics**, Vol.33, Poona.

47. 1973 "Mutiyum in Tamil" (in Tamil), **Aayvukko:vai-5**, Madras.

48. 1973 "Tamil Language and Other World Languages", **Subbiah Pavala Vizha Malar** Madras.

49. 1974 "Tamil Olipeyarppu" (in Tamil) (with S.V. Shanmugam) **Kalaikkatir**, Vol. 26 2—17—20, Coimbatore.

50. 1974 "The So-called Sociative Case in Tamil", **Seminar on Dravidian Case System**, Annamalainagar.

51. 1974 "Classification of Adjectives in Tamil", **Aayvukko:vai-6**, pondicherry.

52. 1974 "Ariviyal Nu:lkalil Molinatai" (in Tamil) (with S.V. Shanmugam), **Kalaikkatir**, 26:3, 36-42, Coimbatore.

53. 1974 "Puduccorpadaippu" (In Tamil) (with S.V Shanmugam), **Kalaikkatir**, 26, 8-37.42, Coimbatore.

54. 1974 "A Note on Itu Ceyal Ve:ntum", **Prof. P. Thirugnanasambandam Pillai Commemoration Volume**, Annamalainagar.

55. 1975 "Adjectives in Dravidian", **Seminar on Dravidian Linguistics-V, Annamalainagar.**

56. 1975 "Ne:rakkilaviyum Ka:lakkilaviyum", **Aayvukko:vai-7** Nagercoil.

57. 1975 "A Note on Tamil and Sanskrit-A Comparative Study" (mimeo) **Seminar on Tamil Sanskrit and Other Indian Languages**, Madras.

58. 1975 "Peyaratai", **Pulamai**, Vol. 1, 4, 1-18, Madras.

59. 1975 'Tolka:ppiyar's Concept of Syntax", **Seminar on Early Dravidian Grammar**, Annamalainagar.

60 1976 "Tamila:kkattil Corrotar Amaippu" (with S.V. Shanmugam), 119-136, University, of Madras.

61. 1976 "Ethnographic Study of the Todas of Niligiri Hills" (with Dr. S. Sakthivel) **Bulletin of the Traditional Culture**, 119-136 University of Madras.

62. 1976 "Ulappa:ttut Tanmaip Panmaiyum Ve:ruppa:ttu Tanmaip Panmaiyum" **Aayvukko:vai**-8, 467-501. Mysore.

63. 1976 "Na:mavise: Sanam Dravida Bhasakalil' (in Malayalam) (Adjectives in Dravidian Languages), **Dravida Bhases Pathananal** (Ed. by K. M. Prabhakara Variar), 81-92 Annamalainagar.

64. 1976 "Auxilliaries and Main Verbs', **Seminar on Auxiliaries in Dravidian**, Annamalai University.

65. 1976 "What can Linguistics do for this Country?' **London Tamil Canka Malar**, London.

66. 1976 "Adjective in Tamil with Special Reference to patirruppattu', **Journal of Tamil Studies** 23-47, Madras.

67. 1977 "Ve:rrumai', **Aayvukko:vai** Vol. II, 1-6, Madurai

68. 1977 "Certain Problems in the Preparation of Text Books in Tamil', **Seminar on National Language as Medium of Instruction**, University, of Malaysia, Kualalumpur.

69. 1977 "Optative in Old Tamil', **Pulamai**, Vol. 34, Madras.

70. 1977 "First Person Plural Terminations in Old Tamil', **Journal of Tamil Studies**, - II, Madras.

71. 1977 "Moliyiyalum Tamilum', **Moliyiyal** 1,1,1 17, Annamalainagar.

72. 1978 "Participial Noun in Old Tamil', **Journal of Annamalai University (Humanities)**, Vol. XXX, Annamalainagar.

73. 1978 "Second Person Singular Terminations in Old Tamil', **Pulamai,** Vol. 4, No. 1, Madras.

74. 1978 "Second Person Plural Terminations in Old Tamil', **Aayvukko:vai** Vol. 2, Coimbatore.

75. 1978 "Tanmaip Panmai', (First Person Plural), **Moliyiyal** Vol. 2. 2, 1-52 Annamalainagar.

76. 1979 "Conditional Participle in Old Tamil', **Aayvukko:vai,** Vol. **2,** Hyderabad.

77. 1979 "Eluttu Murai - Va;lvum Varala:rum', **Moliyiyal,** Vol 2, 3 (specialissue) 1-40, Annamalainagar.

78. 1979 "Negatives in Old Tamil', **Indian Linguistics, Poona**

79. 1979 "First Person Markers from Old Tamil to Middle Tamil', **Pakhasanjam,** Patiala.

80. 1979 "Cankattamilil Tanmai Orumai', **Mozhiyiyal** 3,1:1-37

81. 1980 "Utanikalcci Ve:rrumai', **Aayvukko:vai-12,** Vol. 2, Tuticorin.

82. 1980 "Imperatives in Old Tamli", **Indian Linguistics**, Poona.

83. 1980 "Cankattamilil E:val Vinai", **Mozhiyiyal** 3,2 & 3: 257-300, Annamalainagar.

84. 1980 "Ulaka Arankil Tamil Valarcciyum payircciyum" (with Dr. S. Sakthivel) **Mozhiyiyal** 4, 1& 2131-160

85. 1981 "Cankattamilil palarpa:l", **Mozhiyiyal** 4.3: 65-95.

86. 1981 "Tamilil Vinai Vakaippa:tu", **Mozhiyiyal** 4.3: 65-95

87. 1981 "Tamilil Eluva:y Ve:rrumai", **Aayvukko:vai** Vol. 2,1-6, Annamalainagar.

88. 1981 "Historical Linguistics and Generative Grammar (mimeo)", **Seminar on History Malayalam Language,** University of Madras.

89. 1981 "Adjectives in Dravidian", **Suniti Kumar Chatterjee Commemoration Volume,** University of Burdwan.

90. 1981 "Arupatu A:ntukalil Tamilil Moliyiyal A:yvu" (with Dr. S. Sakthivel), **Saiva Siddhanta Goldan Jubilee Volume,** Madras.

91. 1981 "Tamilil Putu Vinaiya:kkam, **Pulamai,** Madras.

92. 1981 "Karana Vinai", **Mozhiyiyal,** 5-1 Annamalainagar.

93. 1981 "Imperative in Old Tamil", **Indian Linguistics** Vol. 41, 102-101, Poona.

94. 1982 "Tholk:ppiyam andModern Linguisitcs", **Aayvukkovai-14**, Vol. 4, 1-6, Bangalore.

95. 1982 "Auxilaries and Main Verbs in Tamil" Papers in Linguistics, **Dr. R.C. Hiremath Felicitation Volume 240-261,Dharwad**

96. 1982 Transformational Grammar and Historical Linguistics", **Seminar on Historical Linguistics**, Hyderabad.

97. 1982 "To Folklore Field Workers", Keynote Address - **Workshop on Folklore**, Gandhigram Rural University, Gandhigram.

98. 1983 "Mun Palantamilum Pin Palantamilum" **Moliyiyal** Vol. 6, Annamalainagar.

99. 1983 "Palantamil Nu:lkalin Tokuppu Varicaimurai", **Moliyiayal** Vol. 6, 3-1-68, Annamalainagar.

100 1983 "Relationship between Morphology and Syntax", **National ;Seminar on Morphology**, Osmania University, Hyderabad.

101. 1983 "Cilappatik:ramum Pin Palantamilum", **Aayvukko:vai-15**, Vol 3, 1-6, Palayamkottai, 1963.

102 1983 "Na:ttupuraviyal", **Nattuppuraviyal** Vol.1 & 2, 1-8, Annamalainagr.

103. 1984 "Learner Evaluvation: A Plea for Self-Evaluation", Workshop on Designing Tools of Evaluation for the President Adult Education Programme, State Resource Centre & CAS in Linguistics, Annamalainagar.

104 1984 "Vitukataikalin Amaippu - o:r oppiyal A:yvu" **Aayukkovai** !6, Vol.4, 1-6, Delhi.

105. 1984 "Ceyya:y Ennum Munnilai Vinaiccol", **Moliyiyal** 8.1&2,194-205, Annamalainagar.

106. 1984 "Na:ttuppura Valakkukal", **Na:ttuppuraviyal** 1, 3&4, 67-76 Annamalainagar.

107. 1985 "Historical Linguistics and Generative Grammar", **Aayvukko:vai** 17,Vol. 21-126, Chittoor-palghat.

108. 1985 "Palantmailil Ka:la eccankal",**Moliyiyal**, 9,1&2,181-212, Annamalainagar.

109. 1985 "Vinaiyeccam", **Moliyiyal**, Annamalainagar.

110. 1985 "Linguistics and Communicative English", Special Lecture, Gandhigram Rural Institute,(2.11.85)

111. 1985 "Dictionary Making and Grammar", Keynote Address, Kannada Sahidya parishad, Bangalore,(23.11.85)

112.	1985	"Structure of Riddles in Dravidian", Professor R.C. Hiremat Endowment Lecture, Karnatak University, Dharwad (12-2-85 to 14-2-85)
113.	1986	"New Techniques in Tamil Research". Special Lecture, Bharatiyar University, Coimbatore.
114.	1986	"Lexicography and Culture", Special Lecture, Workshop on Lexicography, Kerala University Trivandrum(20-5-1986).
115.	1986	"Linguistics and Grammar (Syntax)", Special Lectures, Summer Institute in Linguistics, Bharatiyar University Coimbatore(1-6-1986 to 5-6-1986).
116.	1986	"Language and Communication",Special Lecture, Department of Journalism, Karnatak University, Dharwad (15-2-1986)
117.	1986	"Sanga Ilakiyankalil Purananu:rrut Tokuppu, **Aayvukko:vai- 18,** Vol.IV Annamalainagr.
118.	1988	"Ka:lanto:rum Tamil", **Aayvukko:vai,** 20-2 Annamalainagar.
119.	1988	"Aca:miya Moli", **Kalaikklanciyam,** Vol.I, 134-37. Tamil University.
120.	1988	"Appirikka Molikal"(African Languges), **Kalaikkalanciyam,** Vol.2,491-93, Tamil University.

121. 1988 "Ittailiya Moli", **Kalaikkalanciyam**, Vol. 3. 151-53, Tamil University.

122. 1988 "Inavali Molippa:kupa:tu", **Kalaik-kalanciyam**, Vol. 4, 597-99, Tamil University.

123. 1988 "Ekiptiya Moli", **Kalaikkalanciyam**, Vol.5, 695-97, Tamil University.

124. 1988 "Eckimo Moli", **Kalaikkalanciyam**, Vol. t.713-715, Tamil University.

125 1988 "Ettoppiya Moli" **Kalaikkalanciyam**, Vol. 5,777-79, Tamil University.

126. 1989 "Peyareccam", **Kalaikkalanciyam**, Vol. 12, 875-77, Tamil University.

மொழிச்சங்கங்கள்

செ. வை. சண்முகம்
அண்ணாமலைநகர்

முன்னுரை

இந்தியாவில் பவுத்தமதம் சங்கத்தை அதன் மூன்று மதிப்பு மிக்க பொருள்களில் (புத்தம், 'அறிவு', தன்மம் 'அறம்', சங்கப்) ஒன்றாகவே கருதியது. தமிழகத்திலும் இடைக்காலத்தில் புத்த மதச் செல்வாக்கினால் சங்க மரபுகளைப் பவுராணிகமாக உருவாக்கி, தமிழின் மிகப்பழைய இலக்கியங்களைச் சங்கத்தில் உருவாக்கப்பட்ட இலக்கியம் என்ற கருத்தில் சங்க இலக்கியம் என்று அழைக்கும் மரபு தோன்றிவிட்டது. ஆனாலும் பதினேழாம் நூற்றாண்டு முதல் ஏற்பட்ட மேலைநாட்டுத் தாக்கத்தால், மேலையாக்கத்தால் (Westernisation), பத்தொன்பதாம் நூற்றாண்டில் முதலில் வங்காளத்திலும், பிறகு இந்தியாவின் பிற்பகுதிகளிலும், குறிப்பாகத் தமிழகத்திலும் சமூகசீர்திருத்தச் சங்கங்கள், சமயமறுமலர்ச்சிச் சங்கங்கள், கல்விக் கழகங்கள், அரசியல் சங்கங்கள் என்ற முறையில் பல சங்கங்கள் தோன்றின. இவை சமூக விழிப்புணர்வின் வெளிப்பாடுகள். இந்த முறையில் உண்டான மொழிச் சங்கங்களின் சிறப்புத்தன்மை பற்றியும், குறிப்பாக மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அமைப்பு, அமைப்பாளர்கள் யார் - எவர், செயல்பட்ட முறை ஆகியவற்றைப் பற்றியும் அறிந்து கொள்வதன் மூலம் மொழிச்சங்கங்கள் மொழியை எப்படி வளர்த்தன; மொழியை எப்படிக் கருதின; மொழியை எப்படி பயன்படுத்தின என்ற உண்மைகளை விளக்க இங்கு முயற்சி மேற் கொள்ளப்படுகிறது.

சங்கங்கள் உருவாகக் காரணமான அரசியல் சமூக பண்பாட்டுப் பின்னணி, சங்கத்தின் தோற்றம், சங்கத்தின் அமைப்பு, அமைப்பாளர்கள், செயல்பாடு, மதிப்பீடு ஆகியவை இங்கு விளக்கப்படும்.

அரசியல் சமூகப் பண்பாட்டுப் பின்னணி

பல ஐரோப்பியநாட்டு வாணிகக் குழுவினர்கள் 18, 19 ஆம் நூற்றாண்டிலே இந்தியாவுக்கு வந்து ஓரளவு அரசாட்சியையும் நிறுவினார்கள். அந்த முறையில் 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியாரின் வசம் இந்தியாவின் பெரும்பகுதியும் வந்துவிட்டது. 1858 ஆம் ஆண்டு முதல் ஆங்கில அரசர் நேரடி பார்வைக்கு மாற்றப்பட்டு ஆங்கில அரசு இந்தியாவை ஆண்டு வந்தது. என்றாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னரே இந்திய சமூகம் மேலைநாட்டு ஆதிக்கத்துக்கு உட்பட்டது. அவைகளுள், மொழித் தொடர்பாக கீழ்க்கண்ட மாற்றங்கள் சிறப்பானவை. 1) கல்வி நிறுவன மயமாக்கப்பட்டது. 2) அச்சு இயந்திரம் அறிமுகமாகி இயந்திரங்களும் அச்சிட அனுமதிக்கப்பட்டதால் உரைநடை வளர்ந்து இலக்கியத் தகுதிபெற்றது; தமிழைப் பொறுத்த வரையில் தமிழின் முழு இலக்கியப் பரப்பும் தெரியவந்தது. (வேங்கடசாமி, 1962) இதனால் மொழி விழிப்புணர்ச்சி ஏற்பட்டு மொழித்தனித்தன்மையும் புரிய ஆரம்பித்தது. இது சமூக விழிப்புணர்வின் அங்கமாகவும் வெளிப்பாடாகவும் அமைந்தது. இதனால் பலவகையான சங்கங்கள் இந்தியாவெங்கும் ஏற்படுத்தப்பட்டன.

இந்தச் சங்கங்கள் வங்காளத்தில் பிரமசமாஜம் (1828), இளைய வங்காளம் (1831) போன்றவையும் பம்பாயில் பிரார்த்தனை சமாஜமும் (1867), புனாவில் சதயஹோதக் சமாஜமும் (1873) ஏற்படுத்தப்பட்டன. தமிழகத்தில் இராமலிங்க அடிகள் சமரசசன்மார்க்க சபையும், சென்னை ரேட்டிவ் அசோசியேஷன் (1852) முதலியனவும் தோன்றின. மொழிச் சங்கங்களாக 5—3—1889 இல் திராவிட பாஷா சங்கமும் ஏப்ரல்

1890இல் தென்னாட்டுத் தமிழ்ச்சங்கமும் குறிப்பிடத்தகுந்தவை. வடஇந்தியாவில் 1893 இல் நாகரி பிரச்சாரசபை ஹிந்தி மொழிக்காக உண்டானது.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலான 19 ஆம் நூற்றாண்டு அரசியல் நிலையும் சமூகநிலையும் குறிப்பிடத்தகுந்தது. அரசியல் நிலையில் இன்றைய தமிழ்நாடு சென்னை மாகாணம் என்ற பெயருடன் பெரும்பகுதி ஆந்திரா, பெரும்பகுதி தமிழ்நாடு, சிறுபகுதி கர்நாடகம், சிறுபகுதி கேரளம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது. சமூக நிலையில் பிராமணர் - பிராமணர் அல்லாதார் உணர்வு ஆங்கில பாதிரியார்களாலும் பழந்தமிழ் வெளியீட்டாலும் அரசியல் செல்வாக்கு அடிப்படையாலும் ஏற்பட்டது. அரசியல், சமூக வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்கள் இன்று பலராலும் ஆராயப்பட்டுள்ளன. ஆனால் மொழிச் சங்கங்களின் வளர்ச்சி சமூக, பண்பாட்டு மொழியியல் நோக்கில் இதுவரை ஆராயப்படாததால் அந்த முயற்சி இங்கு மேற் கொள்ளப்படுகிறது. எனவே பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் உருவாக்கப்பட்ட மொழிச்சங்கங்களும் இருபதாம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட மதுரைத் தமிழ்ச்சங்கமும் விரிவாக ஆராயப்படுவதன் மூலம் மொழிச்சங்கங்கள் ஆற்றும் மொழிப்பணி, அதன் பின்னுள்ள சமூக உணர்வு ஆகியவை விளக்கப்படும்

தமிழ்ச்சங்க உருவாக்கப் பின்னணி

5—3—1849 அன்று திராவிட பாஷா சங்கம் சென்னையில் ஏற்படுத்தப்பட்டது. அது, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு ஆகிய மொழிகளை வளர்ப்பதற்காக அமைக்கப் பட்டது. ஆங்கிலக் கலைச்சொற்களை மொழிபெயர்த்து நான்கு திராவிட மொழிகளில் மட்டும் அச்சிட்டு வெளியிட்டது. இதற்குப் பிறகு வேறுபணிகளில் அது ஈடுபட்டதாகத் தெரியவில்லை. (சூரிய நாராயண சாஸ்திரி, 1903 : 144)

1890 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தென்னாட்டுத் தமிழ்ச் சங்கத்தின் செயல்குழு பற்றியும் அதன் நோக்கங்கள் பற்றியும் மட்டுமே செய்திகள் கிடைக்கின்றன. (இளங்குமரன், 1982: 142:)

சோமசுந்தரஞ் செட்டியார்–தலைவர்; டி. பாலசுந்தர முதலியார் செயலர்; பூண்டி அரங்கநாத முதலியார், பி. வி. விசயரங்க முதலியார், சேஷகிரி சாஸ்திரியார், சி. வை. தாமோதரம் பிள்ளை; இராமசாமி முதலியார்; எம். வீரராகவாச்சாரியார் – உறுப்பினர்கள். இவர்களில் பிராமணர் - இருவர்; முதலியார் - நால்வர்; பிள்ளை - ஒருவர்; செட்டியார் – ஒருவர்: இதில் பலரும் தமிழ் அறிஞர்கள் ஆவார். இவர்கள் 1—5—1890 அன்று காஸ்மபாலிடன் கிளப்பீல் கூடி நோக்கங்களை வரை யறுத்தார்கள். அவையாவன:

1. நூலகம் நிறுவி இதுவரையான தமிழில் வெளியான நூல்களைச் சேகரிப்பது.
2. ஓலைச் சுவடிகளை சேகரிப்பது.
3. தமிழில் எழுதப்பட்ட அல்லது மொழிபெயர்க்கப்பட்ட பொதுமக்களுக்குப் பயன்படும் உரைநடை அறிவியல் நூல்களை வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்வது.
4. வெளியான நூல்களின்பட்டியல், நூலின்பொருளடக்கம், நூல் கிடைக்கும் விவரங்களைத் தொகுப்பது.
5. பல துறைகளில் சொற்பொழிவு ஏற்பாடு செய்வது.
6. ஏட்டுப் பிரதிகளில் உள்ளவற்றை அச்சிட்டு வெளியிட உதவுவது.

இவை அவர்களின் மொழி இலக்கிய உணர்வையும் மொழிக் கல்வி உணர்வையும் புலப்படுத்துகின்றன. ஆனாலும் இவை ஏன் செயலாக உருப்பெறவில்லை என்பது தெரியவில்லை.

மதுரைத் தமிழ்ச்சங்கம் பாண்டித்துரைத் தேவரின் (21—3—1867 - 2—12—1911) சொந்த முயற்சியால் துவங்கப் பட்டு அவரே நிறுவனத் தலைவராக இறக்கும் வரையில் இருந்து நிருவகித்ததால் அவரைப்பற்றித் தெரிந்துகொள்வது சங்கம் பற்றிய சில உண்மைகளைத் தெளிவுபடுத்தும்.

பழைய இராமநாதபுர மாவட்டம் அதை ஒட்டிய சில பகுதிகள் சேதுநாடு என்று அழைக்கப்படும். அதை ஆண்ட மன்னர்கள் சேதுபதி என்று அழைக்கப் பட்டார்கள். சேதுபதிகளும் ஆங்கில ஆட்சிக்கு உட்பட்ட குறுநில மன்னர்கள் தான். சேதுபதிகளில் முத்துராமலிங்க சேதுபதி (1862 - 73) ஒருவர். அவருடை தமையனார் பொன்னுசாமி தேவர் (1870) சேது சமஸ்தானத்தின் அமைச்சராக இருந்து திறம்பட பணி ஆற்றினார்.

பொன்னுசாமித் தேவர் தமிழில் புலமை உடையவர். பல தமிழ்ப் புலவர்களை அவைப் புலவர்களாக அமர்த்தி ஆதரித்தவர். வெளி உலகத் தொடர்பும் உடையவர். சமய, சமூக மறுமலர்ச்சி இயக்கங்களிலும் ஈடுபாடு கொண்டவர். பிரம்ம சமாஜத்தின் சென்னைக்கிளை 1864இல் ஆரம்பிக்கப்பட்டபோது ஏற்படுத்திய தத்துவபோதினி என்ற பத்திரிகைக்காக ஆயிரம் ரூபாய் அளித்தவர் ஆறுமுக நாவலர். திருக்கோவையார், பரிமேலழகர் உரை போன்ற இலக்கிய நூல்களையும் இலக்கணக் கொத்து போன்ற இலக்கண நூல்களையும் பதிப்பிப்பதற்கு இவர் பொருள் உதவி செய்தவர். அதனால் நாவலர் திருக்கோவையார் பதிப்பு முன்னுரையில்

“முற்காலத்தில் பாண்டியர்களைப் போல இக்காலத்தில் இப்பிரபு (பொன்னுசாமித் தேவர்) அவர்கள் தமிழை வளர்ப்பார்கள் என்று உறுதியாகக் கருதியிருக்கிறேன்”.

என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் பொன்னுசாமித் தேவர் வைத்தியநூல் ஒன்றும் தமிழில் வெளியிட உதவி செய்துள்ளார். இவருடைய பணிகளைப் பாராட்டிய முத்துராமலிங்க சேதுபதி இராமநாதபுரம் சீமைக்குள் பாலவனத்தம் ஜமீன்தார் ஆக பொன்னுசாமித்தேவரை ஆக்கினார்.

பொன்னுசாமித் தேவரின் மகனான பாண்டித்துரைத் தேவரும் தமிழும் ஆங்கிலமும் படித்தவர்: இசையிலும் நல்ல புலமை உடையவர். தமிழ்ச்சங்கம் ஆரம்பிக்கும் முன்னரே

உ. வே. சாமிநாத ஐயருக்கு மணிமேகலை, புறப்பொருள் வெண்பா மாலை போன்ற நூல்களைப் பிறப்பிக்கப் பொருள் உதவி செய்தவர்.

இலக்கியச்சொற்பொழிவு ஆற்றும் திறனும் உடையவர். நாட்டு அரசியலிலும் ஈடுபாடு உடையவர். அதனால்தான் 1901 ஆம் ஆண்டு மே மாதம் மதுரையில் நடைபெற்ற சென்னை மாகாண அரசியல் மாநாட்டுக்கு வரவேற்புக்குழுத் தலைவராகப் பணியாற்றியவர். அப்படியே பின்னால் 1905இல் வ.உ. சிதம்பரனார் சுதேச் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி ஆரம்பித்தபோது தமிழ்ச்சங்கம் சார்பில் ஒருலட்சம் ரூபாய் பங்காகக் கொடுத்தவர்.

இவர் காலத்தில் இவருடைய சித்தப்பாவின் பிள்ளையான பாஸ்கரரே சேதுபதியாக ஆண்டுவந்தார். அவருக்கும் தமிழ்ச் சங்கம் ஆரம்பிக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தது என்பது இவருடைய தனி உதவியாளர் உ. வே. சாவுக்கு எழுதிய கடிதத் தாலும் (11—9—1892) நாட்குறிப்பாலும் (13—1—1893) அறிய முடிகிறது.

இந்தச் சூழலிலே பாண்டித்துரைத் தேவர் அரசியல் மாநாட்டில் இறுதிநாளில்தான் சங்கம் ஆரம்பிக்கும் எண்ணத்தை வந்திருந்தவர்களுக்கும் மதுரை பொதுமக்களுக்கும் தெரிவித்து மறுநாள் (25—5—1900) சேதுபதி உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்து சங்கம் ஆரம்பிப்ப-தற்கான தன்னுடைய திட்டத்தைத் தெரியபடுத்தினார்.

பின்னர் 14—9—1901 அன்று மதுரைத் தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்க முடிவு கட்டி அறிஞர் பலருக்கும் கடிதம் எழுதி பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்தினார்.

மதுரைத் தமிழ்ச்சங்கத் துவக்கம்

திட்டமிட்டபடியே 14—9—1901 அன்று பகல் 1-30 மணிக்கு மேல் 2-45 மணிக்குள் மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது. இதற்குப் பாஸ்கர

சேதுபதியும் ஒன்பது தமிழ் அறிஞர்களும் வந்திருந்தனர். இவர்களில் சென்னையைச் சார்ந்தவர் இருவர்; தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவர் ஒருவர்; ஏனையோர் மதுரை, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அப்படியே பிராமணர் ஏழுபேர்; பிள்ளை இரண்டுபேர் என்பதும் குறிப்பிட தகுந்தது.

மொழி வளர்ச்சிக்குத் தேவர்கண்ட அமைப்புகள்

சங்கத்தின் நோக்கம் 'மொழிவளர்ச்சி' என்று உ.வே.சாவுக்கு பாண்டித்துரை தேவர் எழுதிய கடிதத்தால் அறியலாம். அதனால்தான் அதேநாளில் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை பாண்டியன் புத்தகசாலை, நூலாராய்ச்சி சாலை என்று மூன்று அமைக்கப்பட்டு மூன்று நாள் விழா நடைபெற்றது. கலாசாலைக்கு நாராயண ஐயங்கார் தலைமையாசிரியராகவும் ஆராய்ச்சி சாலைக்கு இரா. இராகவ ஐயங்கார் தலைவராகவும் உடனே நியமிக்கப்பட்டார்கள்.

21—7—1902 அன்று தமிழ்ச்சங்க முத்திராசாலை என்ற அச்சகம் நிறுவப்பட்டது. 7—12—1902 அன்று செந்தமிழ் என்ற மாத இதழ் துவங்கப்பட்டது.

பொதுவாக விவேகபானு என்ற இதழ் விவரப்படி (1902) சங்கம் நான்கு அமைப்புகள் கொண்டதாகக் கருதப்பட்டது என்று தெரிய வருகிறது. (காந்திமதி, 1987:8)

1. செந்தமிழ் கலாசாலை: இதன் மூலம் மாணவர்களுக்கு உண்டி, உடை, உறையுள் கொடுத்து செந்தமிழ்க் கல்வி கற்பிக்கப்பட்டது.

2. பாண்டியன் புத்தகசாலை: யாவரும் வந்து படித்தற் குரிய வகையில் தமிழர் வடமொழி நூல்கள் தொகுத்து வைக்கப்பட்டன.

3. தமிழ்ச்சங்க முத்திராசாலை: இதுவரை வெளிவராத நூல்களை அச்சில் கொணர்வதற்காக நிறுவப் பட்டது.

4. 'செந்தமிழ்' இதழ்: அறிஞர்கள் விரும்பிப்படிக்கும் ஆராய்ச்சி இதழ்.

இங்கு இரண்டு செய்திகள் சுட்டிக்காட்டத் தகுந்தவை: 1) சங்கம் துவங்கிய அன்று நூலாராய்ச்சி சாலை ஒன்று அமைக்கப்பட்டது அல்லவா? அதன் தலைவராக இருந்த இரா. இராகவஐயங்காரே 7—12--1902 அன்று 'செந்தமிழ்' இதழ் துவக்கப்பட்டபோது அதன் ஆசிரியராகப் பணியாற்றி உள்ளார். நூலாராய்ச்சி சாலை பற்றிய வேறு எந்த விவரமும் கிடைக்காததால் அதுவே செந்தமிழ் இதழாக மாற்றம் பெற்றது என்று கொள்ளலாமா? 2) இந்த உறுப்புகள் - துணை நிறுவனங்கள் காட்டும் தனித்துவமும் சமூக உணர்வும் குறிப்பிடத் தகுந்தவை. தனித்துவமாக கல்லூரி, அச்சகம், செந்தமிழ் ஆகிய மூன்றும் குறிப்பிடலாம். சான்றாக 19-ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட மொழிச்சங்கங்கள் நேரடியாக தமிழ் வளர்ச்சியில் ஈடுபடும் திட்டம் எதுவும் வைத்திருக்கவில்லை. எனவே இவை பாண்டித்துரைத் தேவரின் பார்வையின் ஆழத்தைப் புலப்படுத்துகின்றன. இந்தத் துணை நிறுவனங்கள் அவரின் சமூக உணர்வையும் புலப்படுத்துகின்றன. செந்தமிழ்க் கல்லூரி மூலம் தமிழ்க்கல்வியைப் பரப்புவதற்கான புதிய தலை முறையை உருவாக்க முன்வந்தார். இதைச் சமூக நோக்கில் கூறினால் தமிழ் அறிஞர்களைக் கொண்டு (மேல்மட்டத்தார் என்று பொதுமைப் படுத்தலாம்) ஆய்வு, மொழிவளர்ச்சி என்ற முயற்சிகளில் ஈடுபடாமல் அது எப்பொழுதும் தொடர, புதிய தலைமுறை உருவாக்குவதில் (அடிமட்டத்தாரை மேல்-மட்டத்தார் ஆக்குவது) அவருடைய சமூக உணர்வின் வெளிப்-பாடாகக் கொள்ளலாம். அதனால்தான் அறிஞர்களுக்கு பொருள் கொடுத்து உதவியதுபோலவே மாணவர்களுக்கு உணவு, உடை, உறையுள் படிக்கும் நூல்கள் கொடுத்து உதவியுள்ளார். இதுவே பாண்டித்துரைத்தேவர் மானிட சமூகத்தின் அடிப்படைத் தன்மையை புரிந்தவர் என்பதைப் புலப்படுத்துகிறது. மேலும் தமிழ்க்கல்வி முதன்முதலாக நிறுவனப்படுத்தப்பட்டது.

செந்தமிழ் இதழ் மூலம் தமிழ் ஆராய்ச்சி நிறுவனப்படுத்தப் பட்டது. புற உலகில் ஏற்பட்ட இயந்திர தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப அறிஞர்களிடையே கருத்து பரிமாற்றமும் ஆராய்ச்சி உணர்வும் எழுவதற்கு உதவியது. அப்படியே அச்சகம் ஒன்று நிறுவிச் சங்கப் பிரசுரமாகவும் செந்தமிழ் வெளி யிட்டவற்றைச் செந்தமிழ் பிரசுரமாகவும் நூல்கள் வெளியிட்டது புதியதுறை வளர்ச்சிக்கு வழிகோலியது.

பொதுவாகக் கல்லூரி, நூலகம், அச்சகம், மாத இதழ் ஆகியவை ஒரு பல்கலைக்கழகம் நிறுவுவதற்குத் தேவையான அமைப்புகள் ஆகும். 'இந்து' ஆங்கில நாளேடு சங்கத்தின் துவக்க விழாவைக் குறிப்பிடும்போது (செப்டம்பர் 1901) காசியில் நடைபெறும் இந்துக் கல்லூரியின் அமைப்பு, அதன் செயற் பாடுகளை முன்னோடியாகத் தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளது இதை உறுதிப்படுத்துகிறது.

நிருவாகம்

சங்கத்துக்கும் துணை நிறுவனங்களுக்கும் இடையே நிருவாக முறையில் உள்ள தொடர்பு என்ன? அவைகளின் நிருவாகம் எப்படி செயல்பட்டன என்று அறிவது சங்கத்தின் செயல் திறனையும் சங்கம் அமைத்தவரின் மனப்போக்கையும் அறிந்து கொள்ள உதவும்.

சங்க நிருவாகக்குழு

சங்கத்துக்கு ஒரு தனி நிருவாகக் குழு அமைக்கப்பட்டது. அதில் தலைவர், இரண்டு செயலர், மற்றும், எட்டு உறுப்பினர்கள் இருந்தார்கள். நிறுவனத் தலைவராகப் பாண்டித்துரைதேவர் இருந்ததால் அவர் இறக்கும் வரையிலும் தலைவராக இருக்க வேண்டும் என்றும், தலைவரே சங்கத்துக்கு முழுப் பொறுப்பு என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே பாண்டித்துரைத் தேவர்தான் இறக்கும் வரையிலும் தலைவராகச் செயல் ஆற்றினார்.

முதல் நிருவாகக் குழுவில் தலைவரைத் தவிர ஏனையோரின் சமூகப் பின்னணி வருமாறு: பிராமணர் - நால்வர்; பிள்ளை -

ஒருவர்; முதலியார் - ஒருவர்; முஸ்லீம் - ஒருவர்; நாயக்கர் - ஒருவர். இருவருடைய சாதி தெரியவில்லை. 1911ஆம் ஆண்டில் துணைத்தலைவர் பதவி பாண்டித்துரைத் தேவர் இறப்பதற்கு முன்னரே உண்டாக்கப்பட்டது.

வித்துவக் கழகம்

பாண்டித்துரைத்தேவர் கல்லூரி, மாத இதழ் ஆகியவற்றை சரியாக நடத்த அறிஞர்கள் குழு ஒன்று வேண்டும் என்று சங்கத்தைத் திட்டமிட்ட காலத்திலேயே எண்ணியிருந்தார் என்பது அவர் உ.வே. சாவுக்கு 2—9—1901 அன்று எழுதிய கடிதத்தால் அறியலாம்.

'தமிழ் அபிமானிகளாகிய தாங்கள் இச்சங்கத்தின் தமிழ்-வித்துவக்கழகத்தில் ஒருவராக இருந்து பாஷா அபிவிருத்திக்காய உதவிகளைப்புரிந்து ஆதரித்துத் தங்கள் சம்மதத்தை அளிக்க மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்'.

என்பது உ. வே. சாவுக்கு எழுதிய கடித வாசகம். இதனால் தான் உ.வே.சா.வும் 14—9—1901 அன்று தமிழ்ச்சங்கம் மதுரையில் துவக்கப்பட்டபோது கலந்துகொண்டார். ஆனாலும் வித்துவக்கழகம் 21—12—1903 அன்றுதான் துவக்கப்பட்டது. அப்பொழுது சங்க உறுப்பினர்கள் எல்லோரும் வித்துவக் கழகத்தின் உறுப்பினராகக் கருதப்பட்டார்கள்.

21—12—1903 அன்று நடந்த கூட்டத்தில் 19 தமிழ் அறிஞர்களே கலந்துகொண்டார்கள். உ. வே. சா. உட்பட 13 அறிஞர்கள் வர இயலவில்லை என்று தெரிவித்துவிட்டார்கள். வந்திருந்தவர்களில் பிராமணர் - எட்டுபேர்; கவிராயர்-நால்வர்; முதலியார்-மூவர்; பிள்ளை-மூவர் பாண்டித்துரைத்தேவரே இதற்கும் தலைமை வகித்தார்.

இத்தக் கூட்டத்தில் சங்க உறுப்பினர் ஆவதற்குரிய தகுதி, விதிமுறை; செந்தமிழில் கட்டுரை வெளியிடும் முறை (அதாவது இரண்டு அறிஞர்கள் படித்துப்பார்த்து ஒப்புதல் அளித்த பிறகே

வெளியிடுவது) அதில் வெளியிடப்படும் பிறசெய்திகள் என்னென்ன என்ற விபரம்; கல்லூரிக்குரிய பாடத்திட்டம், தேர்வு திட்டம் ஆகியவை பற்றியெல்லாம் 22 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன, எனவே தமிழ்ச்சங்கத்தின் அறிவுசார் பணியைத் திட்டமிடவும் பணிக்கு வழிகாட்டவும் வித்துவக்கழகம் உதவிசெய்தது எனலாம்.

வித்துவக் கழகத்தின் இரண்டாவது கூட்டம், சங்கத்தின் இரண்டு விழாவின்போது 25—5—1904 அன்று நடைபெற்றது. அதில் தமிழுக்குச் சிறந்த அகராதி இல்லாததால் அந்த அகராதிப் பணியைச் சங்கத்தாரே ஏற்றுக்கொள்வது என்றும் அகராதிப் பணி தொடங்குமுன்னர் பல தமிழ் நூல்களையும் ஆராய்ந்து அரும்பதங்களை இடம் காட்டித் தொடுத்துக்கொள்ளவேண்டும் என்று முடிவுசெய்து, யார் யார் எந்தெந்த நூல்களை எடுத்துக் கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. பாண்டித்துரைத் தேவரே பெரிய புராணத்திலிருந்து அருஞ்சொற்களைத் தொகுத்துத்தருவதாக ஒத்துக்கொண்டார்கள் என்பது சிறப்பாக குறிப்பிடத் தகுந்தது. ஏனைய அறிஞர்களில் பிராமணர் - ஏழு பேர்; பிள்ளை - மூவர்; முதலியார்-நால்வர்; கவிராயர்-இருவர்; செட்டியார் - 2 ஆகமொத்தம் 18 அறிஞர்கள் கலந்து கொண்டார்கள்.

இது உண்மையில் சங்கத்தின் பொதுநோக்கமாகிய மொழி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அடங்கும். இந்தத் திட்டம் முற்றுப் பெறாமல் இலங்கை கதிர்வேல்பிள்ளை எழுதிவைத்திருந்த அகராதியை 1913ஆம் ஆண்டிலிருந்து பகுதியாக அச்சிட்டு வெளி இட்டது.

காரிய நிர்வாக சபை

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பணிகளில் ஒன்றாகத் தமிழக பள்ளி-கல்லூரி மாணவர்களிடையே தமிழ் அறிவு வளர ஊக்கு விக்கும் பொருட்டு, ஆங்கிலத் தமிழ்த்தேர்வு என்பதும் வேறுசிலர் தமிழில் புலமை பெறுவதற்கும் ஏனைத் தமிழ்த்தேர்வு என்பதும் நடத்துவதற்குத் திட்டம் இட்டார்கள். இந்தத் தேர்வுகளைக்

கல்லூரி நடத்தாமல் சங்கமே நடத்தியதால் இதைச் சங்கத் தேர்வுகள் என்று குறிப்பிடுகிறார்கள். எனவே சங்கத்தேர்வுகளை நடத்த ஒரு 'காரிய நிர்வாக சபை' ஒன்றும் அமைக்கப்பட்டது.

20—12—1902 அன்றிலிருந்து தேர்வுகள் நடத்தப்பட்டன ஆனால் காரிய நிர்வாக சபை என்பது இரண்டாம் ஆண்டு விழாவின் போதே 25—3—1904 அன்று அமைக்கப்பட்டது. இதில் பாண்டித்துரைத்தேவர் உட்பட ஐந்துபேர் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். 1904இல் ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட சபையாக மாற்றப்பட்டது. 1904க்குப் பிறகு காரிய நிர்வாகசபை உறுப்பினர்களைப் பற்றிய செய்திகள் தெரியவில்லை.

எனவே சங்கத்தின் நிர்வாகக்குழு மட்டும் அல்லாமல் கல்லூரியை நடத்துவதற்கு வித்துவக்கழகமும் தமிழ்க்கல்வியைப் பரப்புவதற்குத் தேர்வுகளை நடத்த காரிய நிருவாகசபை என்று இரண்டு உட்குழுக்களும் செயல்பட்டன. இவை செயல் திட்டத்துக்கு ஏற்ப செயல்குழு அமைத்து இதை இன்னார் செய்வது என்று வரையறுப்பது; இது வேலைப் பங்கீட்டு முறை. இவை நிருவாகச் சிறப்பைக் காட்டும்; இந்தப் பெருமையும் பாண்டித்துரைத் தேவருக்கே உரியது.

மதுரைத் தமிழ்ச்சங்கம் 16—10—1908 அன்று இலக்கியம் மற்றும் அறநிலைய அமைப்புகளின் 1860ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. இந்தப் பதிவு ஆவணத்தைக் கவனமாகப் படிக்கும்போது இரண்டு மாற்றங்களைக் கவனிக்க முடிகிறது. ஒன்று: ஆவணத்தில் மதுரைத் தமிழ்ச்சங்கம் தோன்றிய நாளாக - சங்கம் துவக்கத் திட்டத்தை அறிவித்த நாளான 25—4—1901 அன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த முரண்பாட்டை மட்டுமே காந்திமதி (1987:13)[1] சுட்டிக் காட்டியுள்ளார். இரண்டு: சங்கத்தின் குறிக்கோள்களை முன்னிறுத்துவதில் மாற்றமும் குறிக்கோளின் எண்ணிக்கையில் மாற்றமும் காணப்படுவது. ஆவணத்தில் 10 குறிக்கோள்கள் குறிக்கப்பட்டுள்ளன. சங்கம் துவங்கியபோது ஐந்து (கல்லூரி, நூலகம், செந்தமிழ் அச்சகம், நூல்வெளியீடு, தேர்வு) இருந்ததாக குறிப்பிடலாம். அந்த பத்தில் ஒன்று மட்டும் (8-வது) நீதித் தொடர்பானது, ஏனையவை கல்வித் தொடர்

பானவை. குறிக்கோள்களை முன்னிறுத்துவதில் மாற்றம்: 1) கல்லூரி ஏற்படுத்துவது 1901-இல் முதலாவதாகக் கருதப் பட்டது 1908இல் ஒன்பதாவதாக மாறியது. 2) நூலகம் வைத்தல் இரண்டாவதிலிருந்து ஏழாவதாக மாறியது. இந்த இரண்டும் முக்கியமானது. புதிதாகச் சேர்க்கப்பட்டது முழுப்புதுமை யானது ஒன்றும் இல்லை. (அ) 1902 ஆம் ஆண்டு தமிழ்த்தேர்வு செந்தமிழ்க் கல்லூரியில் படிக்காதவர்களுக்கும் நடத்தப்பட்டு வந்தது. இப்பொழுது புதிய குறிக்கோளாக இரண்டாவது இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. (ஆ) செந்தமிழ் இதழின் ஒரு குறிக்கோளாக இருந்த மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிடுவது தனிக்குறிக்கோளாக ஐந்தாவது இடத்தைப் பெற்றிருக் கிறது; (இ) அப்படியே முன்னரே அச்சிடப்பட்ட நூலின் திருந்திய பதிப்பு கொண்டு வருவது (6வது குறிக்கோள்) என்பதும் செந்தமிழின் குறிக்கோள்களில் ஒன்றாகச் சொல்லலாம் (ஈ) i) முதல் குறிக்கோள் சங்கத்தின் பொது குறிக்கோள்-மொழி வளர்ச்சியைத் தூண்டுதலும் இலக்கியத்தை மேம்படுத்தலும் ஆகும். ii) வித்துவக் கழகத்தின் 1902-இல் நிறைவேற்றிய தீர்மானம் இங்கு 10-வது இடத்தைப் பெற்றுவிட்டது. எனவே குறிக்கோள்களின் எண்ணிக்கை கூடியிருந்தாலும், புதுமை யாக எதுவும் இல்லாததால் குறிக்கோள்களை முன்னிறுத்துவதில் ஏற்பட்ட மாற்றத்துக்கான காரணங்களை மட்டும் பார்ப்போம்.

முதலாவதாக இருந்த செந்தமிழ்க் கல்லூரி நடத்துவது 'நிதி நிலைமைக்கேற்ப கல்லூரி நடத்துவது' என்று நியதித் தொடர் (Conditional Clause) சேர்க்கப்பட்டு ஒன்பதாவதாக மாற்றப்பட்டுள்ளது. எனவே இந்த மாற்றங்களுக்குக் காரணம் நிதிநிலைமை என்று தெளிவாகிவிடுகிறது. ஆனால் கல்லூரியைப் பொறுத்தவரையில் இன்னொரு காரணமும் இருக்கலாமோ என்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. அதை முதலில் பார்ப்போம்.

செந்தமிழ்க்கல்லூரி மாணவர்களுக்கு இலவச உணவு, உடை உறையுள் கொடுக்கப்பட்டு வந்தது. இருந்தாலும் மாணவர் தொகை குறைவாக இருந்திருக்கவேண்டும் என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஏனென்றால் 1911 ஆம் ஆண்டு கணக்குப்படி கலாசாலையில் கல்வி கற்றோர் பதினேழுபேர்; அவர்களுள்

மூன்று பேரே உணவுக்காகப் பணம்கட்டிப் படித்தார்கள். எனவே இங்கு இரண்டு உண்மைகள் புலனாகின்றன. 1) பெரும் பான்மையானவர்களுக்கு (82 விழுக்காடு) எல்லாச் செலவையும் ஏற்க வேண்டி இருப்பது; 2) அப்படி இருந்தும் படிப்பவர்கள் எண்ணிக்கை குறைவு என்பதை அறியலாம். அதாவது பொது மக்களிடம் தமிழ்க் கல்விக்கு நல்ல ஆதரவு இல்லை. மேலும் படித்த மாணவர்களும் முழுக்கல்வியும்-நான்கு ஆண்டு கல்வியும் பெறாமல் ஒன்று அல்லது இரண்டு வகுப்பு படித்தவுடனேயே கிடைத்த வேலைக்குப் போய்விட்டார்கள். (ஒரு தமிழ் நண்பன், 1913:309) எனவே நான்கு ஆண்டு படிப்பை முழுதும் முடித்தவர் வெகு சிலரே. பொருள் அதிகம் செலவு செய்ய வேண்டியிருந்தும் படிக்கவந்த மாணவர்களின் ஆதரவு குறைவே சங்கத்தார் குறிக்கோள்களை முன்னிறுத்துவதில் மாற்றம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது போலும்.

புதிய குறிக்கோள்களில் 3 (தமிழ்இலக்கிய இலக்கணங்களில் அட்டவணை, அவற்றின் தோற்றம் பற்றிய ஆராய்ச்சிகளை நடத்துவது), 5 (தமிழை வளப்படுத்த முதலில் வடமொழி. ஆங்கிலம் என்ற இரண்டு தவிர 'பிறமொழிகள்' என்று புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது), 6 (தமிழ் நூல்களின் சரியான, தெளிவான பதிப்புகளை வெளியிடுவது) ஆகிய மூன்றும் ஆராய்ச்சிப் பணிகளையும் மொழிவளர்ச்சிப் பணிகளையும் அடிப்படையாகக் கொண்டவை. 7 (மதுரையில் மட்டும் அமைக்கபட்ட நூல் நிலையம் பிற ஊர்களிலும் ஏற்படுத்துவது), 10 (பல மையங்களில் நிறுவப்படும் கிளைச் சங்கங்கள் உட்பட மேலே கூறிய குறிக்கோளைப் பெறுவதற்குத் தேவையானவற்றைச் செய்வது) ஆகியவை தமிழ்ச்சங்க நடவடிக்கைகளைப் பரப்புவதைநோக்கமாகக் கொண்டவை; என்றாலும் வேறு இடங்களில் நூல்நிலையம் ஏற்படுத்தப்பட்டதாகவோ அல்லது புதிய கிளைச் சங்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவோ தெரியவில்லை. ஆனாலும் சங்கத் தேர்வுகள் 1902ஆம் ஆண்டு முதல் நடத்தப் பட்டுவந்தாலும் அவைகளைப் பிரபலப்படுத்த பல இடங்களிலும் நடத்தப்பட்டன. 1906 ஆம் ஆண்டு தனித் தமிழ்த்தேர்வு 11

இடங்களிலும் 1911, 1912, ஆம் ஆண்டுகளில் பதினைந்து இடங்களிலும் குறிப்பாக இலங்கையில் கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் திருவனந்தபுரத்திலும் நடத்தப்பட்டன. இங்கு மக்கள் ஆதரவும் பரவலாக இருந்தது; சங்கத்துக்கு வருவாயும் தந்தது. இதனாலேயே இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இரண்டாவது குறிக்கோளாக அமைக்கப்பட்டது போலும். சங்கத்தின் நடவடிக்கைகளில் இன்னொரு முக்கியமான அம்சம் ஆண்டுவிழா. இது 1903 ஆம் ஆண்டு முதல் மே மாதம் 24-26 ஆகிய மூன்று நாட்களிலும் நடத்தப்பட்டு ஆராய்ச்சிக் கட்டுரைகள் படிக்ககப்பட்டு விவாதிக்கப்பட்டது. இங்கு 1910ஆம் ஆண்டு தஞ்சையில் நடத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத் தகுந்தது.

இவையெல்லாம் புலப்படுத்தும் உண்மைகள் யாவை? நிறுவனர் காலத்திலேயே கூட காலச்சூழலையும், மக்கள் ஆதரவையும் ஒட்டிக் குறிக்கோள்களின் எண்ணிக்கையிலும் அவைககளை முன்னிறுத்துவதிலும் நிருவாகத்திலும் மாற்றம் ஏற்பட்டுவிட்டன என்பதும் அவை தவிர்க்க முடியாதவை என்பதும் ஆகும்.

இந்த அமைப்புகளையும் அவைகளுக்காக நிருவாகக் குழுக்களையும் அமைத்துக் காலத்துக்கு ஏற்ற மாற்றங்களையும் செய்ததில் சங்கத்தின் தலைவரான பாண்டித்துரைத் தேவரின் பங்கு பெரியது. அவர் தலைவராக இருந்ததோடு எப்படி யெல்லாம் சங்கப்பணிகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவினார்; சங்கத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றினார் என்று பார்ப்போம்.

பாண்டித்துரைத் தேவர்

பாண்டித்துரைத் தேவர் சங்கப்பணிகள் நடைபெறத் தேவையான நிதிக்கு எவ்வளவு பணம் கொடுத்தார் என்று அறிய முடியவில்லை. ஆனாலும் தான் மதுரையில் வைத்திருந்த வெற்றுநிலத்தை (உடனே கட்டிடப்பணி துவங்க முடியாமல் முடியாமல் போனதால், அரசு சங்கத்துக்குப் பணம் கொடுத்து

கொடுத்துவிட்டு தலைமை அஞ்சலகம் கட்டிவிட்டது) கொடுத்ததோடு தான் மதுரையில் தங்குவதற்காக இருந்த சொந்த மாளிகையைச் செந்தமிழ்க் கலாசாலைக்காக அளித்து விட்டார்.

அன்றைய சேதுபதி பாஸ்கரர் அவருடைய சித்தப்பா மகன் ஆனதாலும் இரண்டுபேரும் நண்பர்களாகப் பழகியதாலும் பாஸ்கரச்சேதுபதிதமிழ்ச்சங்கத் துவக்கவிழாவில் கலந்துகொண்டு மாதம் அறுநூற்று ஐம்பது ரூபாய் சங்கத்திற்குக் கொடுப்பதாக உறுதி செய்ததோடு புதுக்கோட்டை சமஸ்தானத்தையும் சங்கத்துக்கு நிதிஉதவி அளிக்கும்படி செய்தார்.

பாண்டித்துரைத்தேவர் வேண்டுகோளுக்கு இணங்கவே திருவனந்தபுரம், கொச்சி, மைசூர், தூர்பங்கா பரோடா ஆகிய சமஸ்தான மன்னர்கள் சங்கத்துக்கு நன்கொடை அளித்தார்கள். பொதுநிறுவனத்தின் வளமை அதன் நிதிவள்மையைப் பொறுத்தது, அதை உணர்ந்து பலவழிகளிலும் பாண்டித்துரைத் தேவர் நன்கொடை பெற்றது சங்கநடவடிக்கையில் அவர் கொண்ட ஈடுபாட்டைக்காட்டும்.

செந்தமிழ்க் கல்லூரியைத் தமிழகத்தின் முதல் தமிழ்க் கல்லூரியாய் அமைத்து நல்ல அறிஞர்களை ஆசிரியர்களாக அமர்த்தித் திறம்பட நடத்தினார். தமிழ் அறிவை மாணர்கள் இடையே வளர்க்க நாடுமுழுவதும் பலஇடங்களில் தனித் தமிழ்த் தேர்வும் பள்ளி கல்லூரி மாணவர்களின் தமிழ்ப் பாடதிட்டத்தை ஒட்டிய தேர்வும் (ஆங்கில தமிழ்த் தேர்வு) நடத்தித் தமிழ்க் கல்வியில் ஆர்வத்தை நாடு முழுவதும் பரப்பினார். செந்தமிழ் இதழை மாதாமாதம் வெளிக்கொணர்ந்ததன் மூலம் தமிழ் ஆராய்ச்சி வளர வழிவகுத்தார்.

அச்சகம் அமைத்ததன் மூலம் செந்தமிழ் ஒழுங்காக வெளி யிடப்பட்டதோடு தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் – புதியநூல்கள் - இதுவரை வெளியிட்ட இருபது நூல்களில் (இவைகளில் 17ம் 19ம் முன்னைய பதிப்புகளின் தொகுப்பே; அப்படியானால் மொத்தம் 17 வெளியீடுகள் தான்) ஒன்பதும் செந்தமிழ் பிரசுரங்கள் -

அதாவது செந்தமிழில் முதலில் வெளியிடப்பட்டு பின்னர் நூறாக்கப்படுபவை 71இல் 312ம் இவர்காலத்தில் வெளியிடப் பட்டன என்றால் ஆராய்ச்சியில் அவர்காட்டிய ஊக்கம் புலப் படும்.

இங்கு அபிதான சிந்தாமணி என்ற முதல் இலக்கியக் கலைக் களஞ்சியத்தைத் தமிழ்ச்சங்கம் இவர் காலத்திலேயே வெளி இட்டது சிறப்பான பணி ஆகும். அதில் அவர் காட்டிய அக்கறை பற்றிய அந்த நூலாசிரியர் குறிப்பிடுவதாவது.

> அறிக்கைப் பத்திரிகையோ ... அறிக்கையோ பாண்டித்துரைச் சாமித்தேவர் அவர்களின் கைப்பட்டு தாமே சென்னைக்கு வந்து நான் எழுதிய நூலைக் கண்டு களித்து .. மதுரைக்கு எடுத்து சென்று அவ்விடத்தில் நாம் எழுதிய அனைத்தையும் பலரையும் கொண்டு எழுதுவித்து... அச்சிட... பொருள் உதவி செய்தனர்.

என்ற சிங்காரவேணி முதலியாரின் முகவுரை வாசகம் நல்ல நூல்களை வெளியிடுவதில் பாண்டித்துரைத்தேவர் கொண்டு இருந்த ஆர்வத்தையும் செயல்முறையையும் புலப்படுத்தும்.

இவருடைய தனிச்சிறப்பு இவரே சில நூல்களை எழுதி வெளியிட்டது ஆகும். இலக்கிய நூல்களும் (திருக்குறள்; கம்பராமாயணம் பற்றியது) பல கட்டுரைகளும் எழுதியுள்ளார். இரண்டு கட்டுரைகள் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தவை. ஒன்று, இந்திய வீரமாதர் (செந்தமிழ் தொகுதி) பற்றியது. இது இந்தியாவின் பிற பகுதியைத் தெரிந்து தமிழ் மக்களுக்கு அறிவிக்கும் கட்டுரை அவருடைய பரந்த நோக்கை வெளிப் படுத்துகிறது. இன்னொன்று: தமிழ் பழஞ்சரிதம் என்ற கட்டுரைத்தொடர் (செந்தமிழ் தொகுதிகள் 6 & 7) மொழியியல் அறிவின் அவசியத்தை வலியுறுத்துவது அவருடைய புதுமையாக்க உணர்வின் வெளிப்பாடு ஆகும்.

'நம் மொழியின் மிகப்பழைய காலத்துச் சரித்திரம் அறிய வேண்டின் நவீன சாத்திரமாகிய பாஷா தத்துவநூல் முறை அதற்குரிய கருவிகளில் சிறந்தது ஒன்றேயாம்'

என்பது அவரது வாசகம். இது தமிழ் வளர்ச்சி மட்டும் அல்லாமல் தமிழின் பழைய பெருமையை வெளிக்கொணர்ந்து வர வேண்டும் என்ற ஆர்வத்தையும் புலப்படுத்துகிறது.

தமிழ்ச்சங்கம் வெளிநாட்டாரின் - குறிப்பாக வெளிநாட்டுத் தமிழ்அறிஞர்களின் கவனத்தையும் இழுத்திருக்கிறது. 1904-5ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாட்டுத் தமிழ் அறிஞர்களும் 1906,1909 ஆண்டுகளில் இலங்கையிலிருந்தும் அறிஞர்களும் தமிழ்ச் சங்கத்துக்கு வருகை புரிந்து அதன் நடவடிக்கைகளைப் பாராட்டியுள்ளார்கள்.

1904-வது வாக்கில்-அதாவது கர்சன் வைசிராய் இருந்த காலத்து வடமொழி வாணர்களின் தூண்டுதலால் பல்கலைக் கழகங்களில் செம்மொழிகள் (Classical language) கற்பித்தால் போதுமானது; வட்டார மொழிகள் (அதாவது மாநிலமொழிகள்) கற்பிக்கவேணடியதில்லை என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. அதனால் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்க் கல்விக்கு ஆபத்து நேர்ந்ததைப் பூரணலிங்கம் பிள்ளை, வி.கோ.சூரியநாராயணசாஸ்திரி ஆகியோர் தடுக்கமுயன்றதோடு தமிழ்ச்சங்கத்திடம் தெரிவித்து கண்டனத் தீர்மானம் நிறைவேற்றும்படி செய்தார்கள். பாண்டித்துரைத்தேவர் நேரே சென்று உரியவர்களைச் சந்தித்து அந்தத் திட்டத்தைக் கைவிடும்படி செய்தார். இது தமிழ்மொழியின் கல்விப் பாதுகாப்புச்சங்கம் பாண்டித்துரைத்தேவர் மூலம் செய்த தொண்டைக் காட்டும்.

சுருக்கமாகச் சொன்னால், பாண்டித்துரைத் தேவர் தன்னுடைய செல்வாக்காலும், நிர்வாகத் திறமையாலும், தமிழ்ப் புலமையாலும் பிறதுறை அறிவாலும் தமிழ்ச் சங்கத்தையும் அதன் நிறுவனங்களையும் கட்டிக்காத்து தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பல வகையிலும் பாடுபட்டார் என்பதும் மதுரைத் தமிழ்ச் சங்க வரலாற்றிலேயே அவருடைய தலைமைக் காலம் பொற்காலம் என்பதும் மறுக்கமுடியாத உண்மை ஆகும். அதே சமயத்தில் ஒருவரைப் பற்றியோ ஒரு நிறுவனம் பற்றியோ மதிப்பிடும் போது என்னென்ன செய்தபர் செய்தது என்று பார்ப்பதைப் போலவே என்னென்ன செய்திருக்கலாம், அவர்

காலத்தில் பிறர் என்னென்ன எதிர்பார்த்தார்கள் என்று பார்ப்பதன் மூலமே முழுமதிப்பீடு செய்யமுடியும் என்ற பொது உண்மையையும் மறந்துவிடக் கூடாது எனவே செய்திருக்கக் கூடியவை என்ன என்று பார்ப்போம்.

பாண்டித்துரைத் தேவர் மொழிவளர்ச்சியில் புதுமை யாக்கத்தைக் கொள்கை அளவில் ஆதரித்தது மேலே சுட்டிக் காட்டப்பட்டது. ஆனால் தமிழ்க்கல்லூரி பாடதிட்டத்தில் புதுமையாக்கம் மேற்கொள்ளப்படவில்லை.

22–12–1903 அன்று நடந்த வித்துவக் கழகக் கூட்டத்திலே ஆறாம் தீர்மானமாக,

'சங்கப் பரிஷைக்கு வரும் பி.ஏ., எம்.ஏ., மாணவர்கட்கு இப்பொழுதுள்ள பாடங்களோடு தமிழ்மொழி வரலாறு முதலிய தமிழ்ச் சரித்திர சம்பந்தமான பாடங்களும் ஏற்படுத்த வேண்டியது என்றும் அஃது இலக்கணப் பிரிவோடு சேர்ந்திருக்க வேண்டும்' என்று நிறைவேற்றப்பட்டும் அது தமிழ்ச்சங்க பாட திட்டத் திட்டத்திலேயே பின் பற்றப்படவில்லை. ஏனென்றால் பாண்டித்துரைத்தேவர்முன் குறிப்பிட்டபடி இதற்கு மொழிநூல் அறிவு வேண்டும். இதில் யாரும் கவனம் செலுத்தவில்லை இது தமிழ்ச்சங்கத்தின் குறை மட்டும் அல்ல; தமிழ் நாட்டு அறிஞர் சமூகத்தின் குறையே ஆகும்.

சென்னைப் பல்கலைக் கழகம் 1914இல் ஒப்பிலக்கணத்துறை (Comparative Philology) என்ற துறையை ஏற்படுத்த விரும்பியது. இந்தியர்கள் யாரும் அந்தத் துறையில் பயிற்சி பெறாததால் மார்க்காலின்ஸ் என்ற ஆங்கிலேயர் மட்டும் நியமிக்கப்பட்டார் (கோவிந்தராசன், 1985:26) அவர் இரண்டு ஆண்டு மட்டுமே பணியாற்றினார். அவருடைய ஆராய்ச்சிப் போக்கில் வடமொழி பண்டிதர்கள் குறை கண்டார்கள். எனவே அவர் தொடர்ந்து பதவி வகிக்க விரும்பவில்லை. பல்கலைக் கழகமும் அந்தப் பதவியைத் தொடரவில்லை இதற்குரிய நிதி பொருளாதாரத் துறைக்கு மாற்றப்பட்டுவிட்டது. இதைப்பற்றி வி.ஐ. சுப்பிரமணியம் (1991:29) குறிப்பிடும் போது இன்றுகூட

சென்னைப் பல்கலைக்கழகம் அந்த மூன் அனுபவ அச்சத்தைக் கைவிடவில்லை என்று கூறுகிறார். ஏனென்றால் அந்தப் பல்கலைக்கழகம் மொழியியல் துறையை இன்னும் ஏற்படுத்த வில்லை. எனவே தமிழகத்தில் மொழித் தொடர்பான புதிய அறிவுத் துறைக்கு இருக்கும் எதிர்ப்பு பரவலானது எனலாம்.

இங்கு 1906ம் ஆண்டு மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கூறிச் சென்ற கருத்தும் அறிய தகுந்தது.

'அது (மதுரைத் தமிழ்ச் சங்கம்) (பாண்டித் துரைத் தேவர்) கணவானுடைய முயற்சியால் ஒருவாறு ஜீவித்து வருகிறதே அல்லாமல், நாள்தோறும் **பெருமையாலும் உபயோகத் தன்மையாலும் தழைத்தோங்கி வருகிறது என்று சொல்ல இடமில்லை.** மதுரைச்சங்கம் ஒருதமிழ் யூனிவர்சிடியாக வளர்ச்சி பெறவேண்டியதே நமதுநோக்கம் அதற்கு சயன்ஸ்பகுதி, சரித்திர ஆராய்ச்சிப் பகுதி முதலிய எத்தனையோ பகுதிகள் ஏற்பட வேண்டும்.

......தமிழ் பாஷைஆராய்ச்சி மட்டிலும் செய்தால் போதாது தமிழ் பாஷையை எல்லாவகையாலும் பெருமைபடுத்தி தமிழர் களின் அறிவுக்கு ஷ சங்கம் ஒரு மூலஸ்தானமாக விளங்குவதற் குரிய ஏற்பாடுகள் செய்யவேண்டும் (அழுத்தம் கட்டுரையாளர் இட்டது) (பாரதி தரிசனம், ப. 312)

என்பது பாரதியின் வாக்கு இதற்கு விளக்கம் தேவையில்லை என்றாலும் அவர் குறிப்பிட்டபடி மதுரைத் தமிழ்ச்சங்கம் அதனுடைய நடிவடிக்கை எல்லையைக் குறுக்கிக் கொண்ட தாலேயே பிற்காலத்தில் ஒரு பெரிய கல்வி நிறுவனமாகக்கூட வளரமுடியாமற்போய் விட்டது என்பது அறியத்தகுந்தது. இதில் வேடிக்கை என்னவென்றால் இதுபோன்ற சில குறைகளை 'ஒரு தமிழ் நண்பன்' செந்தமிழிலேயே (1913: 298) எழுதி யுள்ளதுதான். அவர் கூறுவதாவது.

'விஷயங்களைப் பற்றியும் சிறுபான்மை மத சம்பந்தங் களைப்பற்றியும் நீதி ஒழுக்கங்கள் பற்றியுமே எழுதப்பட்டு வருவ

தாகவும் இக்காலத்தில் புதிய விஷயங்களும் சாஸ்திர அபிவிருத்திக்கு ஏற்பனவும் வேண்டுமளவு எழுதப்படாமையின் படிப்பவருக்கு இன்பமும் ஊக்கமும் ஏற்படவில்லை.

என்பது கட்டுரை பொருள் பற்றிய வாசகம்.

1. இப்பத்திரிகையைச் (செந்தமிழ்) சங்கத்தார் வெளியிடுவதில் தமிழ்ப் பாஷையின் இலக்கிய இலக்கண ஆராய்ச்சியே முக்கிய கருத்தாதலின் அக்கருத்திற்கு இளைய வித்துவான்களே உயர்ந்த நடையில் எழுதுவதுதான் முறை எனக்கொண்டு (உள்ளார்கள்)...

ஆயின் இலக்கிய இலக்கணங்களைக் கசடறக் கற்றோரே அன்றிச் சாமானியராகிய மற்றோரும் ஒருவாறு படித்தறிந்து கொள்ளக்கூடிய விஷயங்களையும் அபிப்ராயங்களையும் தழுவிப் புதிய முறையில் எழுதித் தமிழை வளர்த்தல் சங்கத்தார் கடமையென்று கொண்டால் '(நல்லது)'

என்பது நடையைப் பற்றியும் நடைக்குக் காரணம் பற்றியும் எழுதியுள்ளது ஆழ்ந்த கருத்து உடையது தமிழ்ச்சங்கம் புதுமையாக்கத்துக்குப் பாடுபடாமல் செம்மையாக்கத்துக்கு (Clasicalis-ation) தன்னை ஈடுபடுத்திக்கொண்டு விட்டது என்பதை இவை தெளிவுபடுத்துகின்றன செய்த வரைக்கும் பாராட்டவேண்டியது கடமை ஆனாலும் அதன் பணியின் தன்மையை அறுதியிட செய்யத் தவறியதையும் நினைத்துப் பார்க்கவேண்டியிருக்கிறது.

பாண்டித்துரைத் தேவர் மறைவுக்கு முன்னரே சங்கத்தின் குறிக்கோள்களில் மாற்றம் ஏற்பட்டது மேலே சுட்டிக்காட்டப்பட்டது. இனி அவர் மறைவுக்குப் பிறகு ஒவ்வொரு தலைவர் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் அவர் காலத்தின் சங்கத்தின் சாதனைகளும் சுருக்கமாக விளக்கப்படும்.

பிற தலைவர்கள்

இங்கு இரண்டு பொதுப் பண்புகள் குறிப்பிடத் தகுந்தவை 1) பின்னால் சங்கத்தின் தலைமை சேதுபதிகளுக்குப் பரம்பரை பாத்தியம் போல ஆகிவிட்டது இதனால் பலர் சங்கத்தின்

நடவடிக்கைகளில் அதிக ஈடுபாடு காட்டவில்லை கடந்த எண்பது ஆண்டுகளில் இரண்டு தடவை மட்டுமே சேதுபதி அல்லாதார் - ஆனால் சேதுபதிகளுக்கு வேண்டியவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார்கள் 2) அதே சமயத்தில் தமிழக வரலாற்றில் ஏற்பட்ட இரண்டு மாற்றங்கள், i) சமூக உணர்வில் ஏற்பட்ட மாற்றம் ii) அரசியல் மாற்றம் 1947-இல் ஆங்கில ஆட்சி ஒழிந்து சுதந்திரக் குடியரசு ஏற்பட்டது. ஆகியவைகளின் தாக்கமும் கவனிக்கத் தகுந்தது.

பி. சா. சுப்பிரமணிய ஐயர்

பாண்டித்துரைத்தேவர் மறைந்தபோதுதுணைத்தலைவராக இருந்த சுப்பிரமணிய ஐயர் தலைவராகி, தான் இறக்கும் வரையில் அதாவது 24—11—1912 வரை இருந்தார்.

1911இல் சென்னைப்பல்கலைக்கழகம் வித்துவான் படிப்பு ஆரம்பித்தது. எனவே 1912இல் மதுரைத் தமிழ்ச்சங்கம் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் பல்கலைக்கழகத் தேர்வு எழுத அனுமதிக்கவேண்டும் என்று விண்ணப்பித்து அதற்காக வடமொழி, ஆங்கிலம் ஆகிய இருபாடங்களையும் கற்றுத்தர ஏற்பாடு செய்தது.

இவர் காலத்தில் செந்தமிழ் பிரசுரமாக நான்கு நூல்கள் வெளிவந்தன 11ஆம் ஆண்டுவிழா நடத்தப்பட்டது.

இராசராசேஸ்வர முத்துராமலிங்க சேதுபதி

முத்துராமலிங்க சேதுபதி 1903 - 28. சேதுபதியாக இருந்த காலம்) பாண்டித்துரைத்தேவர் இறந்த பிறகு தமிழ்ச்சங்கத்தின் மேல் வழக்கு தொடுத்தார். பலருடைய அறிவுரையின் பேரில் வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொண்டு சங்க உறுப்பினர்கள் வேண்டுகோளுக்கு இணங்கிச் சங்கத்தலைமைப் பொறுப்பை 12—12—1913 அன்று ஏற்றார். அப்படியே 1—8—1920 அன்று தலைமைப்பதவி வேண்டாம் என்று நிருவாகக்குழு எழுதிவிட்டு அவர்கள் ஏற்காதால் வாழ்நாள் இறுதிவரை (ஜீன் 1928) தொடர்ந்ததும் அவருக்குச் சங்க நடவடிக்கைகளில் முழு ஈடுபாடு இல்லை என்பதைக் காட்டிவிடுகின்றன.

எப்படியானாலும் தலைமைப் பதவி ஏற்றதற்கு இணங்க, சங்கத்துக்குக் கட்டிடம் வாங்க பத்தாயிரம்ரூபாயும் கொடுத்தார் சங்கம் நடைபெற்று வந்த கட்டிடத்தை விலைக்கு வாங்கிக் கொடுத்து சங்கம் வாடகைகொடுக்க வேண்டிய நிலை இல்லாமல் செய்தார்.

இவர் காலத்தில் நிருவாக சபை விதிமுறைகளில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன அவையாவன: i) நிருவாக சபையில் குறைந்தது ஆறு பேராவது மதுரையைச் சார்ந்தவராக இருக்கவேண்டும் (விதி - 2) ii) பொதுக் குழுவுக்குத் தலைவரையும் துணைத்தலைவரையும் தற்காலிகமோ 'அல்லது அவர்கள் ஆயுள் வரைக்குமோ நியமிக்கும் அதிகாரம் உண்டு (விதி 31அ iii) சங்கத்தின் அலுவலர்களை நியமிக்கவும் நீக்கவும் தலைவருக்கு அதிகாரம் உண்டு (விதி-23) iv) நிருவாக சபைக்கு நிருவாக சபை உறுப்பினர்களைச் சங்கப்பணிகளைக் கவனிக்கும் படி செய்தது (விதி 19) v) சங்க ஆண்டுக் கூட்டத்தை மே மாதம் 24 தேதியே அல்லது வேறு சவுகரியமான நாளிலோ நடத்தலாம் விதி-9)

முதல் திருத்தம் சங்க நடவடிக்கை மதுரையை மட்டுமே சார்ந்தது என்பதற்கு ஆதாரமாய் அமைந்துள்ளது. சில மரபுகள் மாற்றப்பட்டன.

இவருடைய பதினைந்து ஆண்டுகால தலைமைப் பொறுப்பில் சங்கப் பிரசுரங்களாக ஆறும் செந்தமிழ்ப் பிரசுரங்களாகப் பத்தொன்பதும் தான் வெளிவந்தன, பத்துத் தடவை மட்டுமே ஆண்டு விழாக்கள் கொண்டாடப்பட்டாலும் இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இரு வேறு இடங்களில் நடத்தப் பட்டது சிறப்புதான், சங்கத்தின் சார்பில் பாலர் வகுப்புகளும் (கீழ் வகுப்பு, மேல் வகுப்பு) 1920 இல் துவங்கப்பட்டன. ஆனால் பலகாலம் தொடர்ந்து நடந்ததாகத் தெரியவில்லை இருந்தாலும் சங்கம் கல்விப்பணியில் மட்டும் அக்கறைகாட்டி ஆராய்ச்சிப்பணியில் அதிக கவனம் செலுத்தவில்ல. அதனால் தான் போலும் வித்துவக்கழகம் 1915இலிருந்து வித்தியா விஷய ஆலோசனை சபை என்றும் மாற்றப்பட்டுவிட்டது. மேலே

சுட்டியபடி செந்தமிழ்க் கல்லூரி மாணவர்களும் பல்கலைக்கழகத் தேர்வு எழுதத் துவங்கிவிட்டார்கள் சிலகாலம் சங்கத் தேர்வும் பல்கலைக் கழகத்தேர்வும் எழுதினாலும் சங்கத்தேர்வு இருக்கும் போது பல்கலைக்கழகத் தேர்வு எழுதியது பல்கலைக்கழகம் சங்கத்தைவிட வெளி உலகச் செல்வாக்கு உடையதாகக் கருதப் பட்டதையே காட்டுகிறது. அதனால்தான் பல்கலைக்கழக பாடத்திட்டத்துக்கு ஏற்பபாடங்களும் மாற்றும்படி ஏற்பட்டது.

இவர் காலத்திய தமிழகச் சூழலையும் உணரவேண்டும் அது ஒருசில கொள்கைகளைக் கொடுக்கலாம்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே ஆங்கில பாதிரி மார்களும் அரசும் பிராமணர் - பிராமணர் அல்லாதார் என்ற சமூக உணர்வைத் தமிழக மக்களிடையே ஊட்டியதும், (Irschich 1986:23) அரசு அலுவலகங்களில் அளவுக்கு அதிகமான பிராமணர் இருந்ததும், படித்த பிராமணர் அல்லாதார் பிராமணர்களிடம் சில துன்பங்களை அனுபவிக்கவேண்டிய நிலை ஏற்பட்டதும் காரணமாக மொழி உணர்வும் (வட மொழிக்குத் தமிழ் குறைந்தது அல்ல; வடமொழிக்குக் கடன்பட்டதல்ல போன்றவை) அரசியல் உணர்வும் வெளிப்பட்டு இயக்கங்களைத் தோற்றுவித்தன. அதனாலேயே 1914இல் மொழித்தூய்மை இயக்கம் மறைமலையடிகளாலும் 1917இல் நீதிக்கட்சி (பிராமணர் அல்லாதாரின் அரசியல் முன்னேற்றத்துக்குப் பாடுபட துவக்கப் பட்டு சென்னை மாகாண ஆங்கிலேயர் ஆட்சியில் அமைச்சர் களாக 1920–25இல் பங்கு கொண்டது) தியாகராச செட்டியா ராலும், சுயமாரியாதைக் கட்சி (பிராமணர் அல்லாதாரின் சமூக முன்னேற்றத்துக்குப் பாடுபடுவது) 1925இல் பெரியார் ஈ. வே. ராமசாமியாலும் துவங்கப்பட்டன. இதனால் தமிழ்மொழி சமூக முக்கியத்துவம் பெற்றது. இந்த நிலையில் தலைவர் ஈடுபாடு காட்டாததால் தமிழ்ச்சங்கம் சக்தியுள்ள இயக்கமாக உருப் பெறவில்லை.

தினகரபகதூர்

முத்துராமலிங்க சேதுபதி இறந்தவுடன் அவருடைய சித்தப்பா தினகரபகதூர் 1929 ஆண்டிலிருந்து 1933ஆம் ஆண்டு

வரை(20—12—1933) தற்காலிகத் தலைவராகப் பதவி வகித்தார் இவர் காலத்தில் சங்கப்பிரசுரம் எதுவும் வெளிவரவில்லை. செந்தமிழ்ப் பிரசுரம் மட்டும் ஆறு வெளியிடப்பட்டன. இரண்டு ஆண்டு விழா (1929,1932) மட்டும் கொண்டாடப்பட்டன.

நாகநாத சேதுபதி

20—12—1933 அன்று நடந்த பொதுக்குழு கூட்டத்தில் சண்முக ராஜஸேஸ்வர நாகநாத சேதுபதி சங்கத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். ஆனால் இவர் 1928இலேயே சேதுபதியாக ஆகிவிட்டார். எனவே நான்கு ஆண்டுகளுக்குப் பிறகே தமிழ்ச் சங்கத்துக்குத் தலைவர் ஆகியிருக்கிறார். இவர் பதவி ஏற்ற அன்றே முப்பத்தொன்றாம் ஆண்டுவிழா நடைபெற்று தலைமை யும் வகித்தார். அதற்குப் பிறகு மூன்று தடவையே (1943, 1956, 1957) ஆண்டுவிழா நடைபெற்றது. இதற்கு முக்கிய காரணம் இந்தியா அரசியலில் பெரிய திருப்பம் ஏற்பட்டுவிட்டது தான் 15—8—1947 அன்றுஇந்தியா சுதந்திர நாடு ஆகி குடியரசு ஆனது இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட எல்லோருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. இவர் சுதந்திர தமிழகத்திலும் அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார். இந்த நிலையில்தான், 4—3—1947(இறப்பு) வரை தலைவராக நீடித்தார்.

இவர் தலைவராக இருந்தபோது 1951 ஆம் ஆண்டு வரையில் டி. சி. சீனிவாச ஐயங்கார் (இவர் சங்கம் ஆரம்பித்த காலத் திலேயே செயலராக இருந்தவர்) கடைசிவரை (1951 வரை) துணைத்தலைவராக இருந்து சங்கப்பணிகளைக் கவனித்துக் கொண்டு வந்தார்.

இங்கு நிருவாகக் குழுவில் இவர் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் சங்கப்பணிகள் பற்றிய இவருடைய மனப்பாங்கை புலப்படுத்துகிறது i) தலைவர் தவிர ஏனைய நிருவாகக்குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாக வரை யறுக்கப்பட்டது (விதி 3), ii)தலைவர் இல்லாதபோது துணைத் தலைவரும் இருவரும் இல்லாதபோது வந்திருக்கும் உறுப்பினர் களுக்குள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவரும் நிருவாகக்குழு கூட்டத்

துக்குத் தலைமை வகிக்கலாம் (விதி 11), iii) சங்க அலுவலர்கள் தலைவர் பொறுப்பிலிருந்து செயலர் கட்டுப்பாட்டுக்கு மாற்றப் பட்டார்கள் (விதி 17) இவை தலைவர் நேரடி ஈடுபாடு காட்ட வில்லை என்பதை உறுதி செய்கின்றன.

1933 இல் அச்சகம் விற்கப்பட்டு விட்டது. அதானல் 'செந் தமிழ்' இதழ் ஒழுங்காக வரவில்லை. சங்கம் பிரசுரம் ஒன்றும் செந்தமிழ்ப் பிரசுரம் பன்னிரண்டும் (கடைசி வெளியீடு 1952) வெளியிடப்பட்டன.

செந்தமிழ்க் கல்லூரி 1957இல் சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டது. எனவே கல்லூரி பல்கலைக் கழக விதிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது

செந்தமிழ்ப் பாண்டியர் தோன்றலும், தமிழ்ச்சங்கத் தலை வருமாகத் திகழ்ந்ததற்கு, இலங்கை ஈழநாட்டுப் புலவர் மன்றம் நாகநாத சேதுபதியைப் 'புலவர் புரவலர்' என்று பட்டம் கொடுத்து சிறப்பித்தது இதைப் பார்க்கும் போது தமிழ்ச்சங்கம் பிறரால் எவ்வாறு மதிக்கப்பட்டது என்பதை அறியலாம்.

பி. டி. ராஜன்

நாகநாத சேதுபதி 4—3—1967 அன்று இறந்த பிறகு, அப்பொழுது துணைத் தலைவராக இருந்துவந்த பி.டி. ராஜன் தலைவராகி 1971ஆம் ஆண்டுவரை செயலாற்றினார். இவர் காலத்தில் மதுரைப் பல்கலைக்கழகம் துவக்கப்பட்டதால் செந்தமிழ்க் கல்லூரியும் மதுரைப் பல்கலைக் கழகத்தோடு இணைந்தது. பல்கலைக் கழக விதிகளுக்கு ஏற்ப புலவர் பட்டக் கல்வியைக் கற்பிப்பது செந்தமிழ் ஓரியண்டல் கல்லூரி என்றும், பி.ஏ., பட்டப்படிப்பைப் போதிப்பது செந்தமிழ்க் கலைக்கல்லூரி என்றும் இரண்டாகச் செயல்பட்டன. இவர் காலத்தில் ஆண்டு விழா எதுவும் நடைபெறவில்லை. நூல் எதுவும் வெளியிடப்பட வில்லை. 'செந்தமிழ்' இதழும் காலாண்டு இதழாக மாற்றப் பட்டது.

1971இல் ஓரியண்டல் கல்லூரியை மூடிவிடுவது என்றும் கலைக் கல்லூரியைப் பெண்கள் கல்லூரியாக மாற்றுவது என்றும் நிருவாகக்குழு முடிவு செய்தது. உடனேயே மாணவர்களும் ஆசிரியர்களும் வேலை நிறுத்தம் செய்தார்கள். பொது மக்களிடையேயும் கிளர்ச்சி உண்டானது, தமிழக சட்டமன்ற மும் இதுபற்றி விவாதித்தது.

இங்கு இரண்டு கேள்விகள் எழுகின்றன. ஒன்று நிர்வாகக் குழு ஏன் இந்த முடிவுக்கு வந்தது? பொதுமக்கள் ஏன் கிளர்ச்சி செய்தார்கள் முன்னதற்கு இரண்டு கல்லூரிகளும் மாணவர் சேர்க்கை குறைவாக இருந்திருக்கவேண்டும் என்று ஊகிக்கலாம். பின்னதற்குக் காரணமாக இளங்குமரன் (1982: 130) 'சங்கத்தின் தொன் மரபைக் கட்டிக்காத்துச் செயலுறுத்த வேண்டிய கடப்பாடு சங்க உறுப்பினர்களுக்கும் சேதுபதி வேந்தர் தொடர்பு உடையவர்களுக்கும் உண்டானது' என்று குறிப்பிட்டுள்ளார். இங்கு இரண்டு உண்மைகள் சுட்டிக்காட்டத் தகுந்தது 1) சங்கத் தின் தொன் மரபைப் பாதுகாப்பது என்பது என்ன? சங்கம் தோன்றிய போது உண்டான 'செந்தமிழ்' இதழை மாத இதழாகக் கொண்டு வருவது, அச்சகம் நிறுவி பல நூல்களை வெளியிடுவது; ஆண்டுவிழா நடத்தி அறிஞர்களின் ஆராய்ச்சி விவாதத்தை நடத்துவது போன்ற நடவடிக்கைகளைக் குறிப் பிடாமல் கல்லூரியை மூடுவதைத் தடுப்பது என்பதாக மட்டுமே கொள்ளப்பட்டது. எனவே 'தொன் மரபைக் கட்டிக்காத்து செயலுறுத்துவது' என்பது முழுவதும் பொருந்தாது. 2) சேதுபதி வேந்தர் தொடர்பு உடையவர் என்பவர் யார்? அவரது மரபை-சாதியைச் சேர்ந்தவர்களா? இந்த உண்மையைச் சரியாக அறியப் பின்னால் என்ன நடந்தது என்று பார்ப்போம்.

5–7–71 அன்று நடந்தபொதுக்குழு கூட்டத்தில் இராமநாத சேதுபதி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். புது நிருவாகக் குழு அமைக்கப்பட்டது. அதில் ஆறு மறவர்கள், இரண்டு கள்ளர்கள். இரண்டு சேர்வை, ஒரு அம்பலக்கார், ஒரு நாடார் ஆகியோர் உள்ளார்கள் நாடாரைத் தவிர எல்லோரும் முக்குலத்தோர் என்ற மரபைச் சார்ந்தவர்கள். ஆனால் இது வரை இருந்த நிருவாகக் குழுக்களில் பிராமணர்கள் ஓரளவு

அதிகம் காரணப்பட்டாலும் பிறசாதியாரில் வேறுபட்ட சாதியர்கள் இருந்திருக்கிறார்கள் என்பது நிர்வாகக்குழு என்ற பகுதியில் பின்னால் விளக்கப்படும்.

இராமநாத சேதுபதி 1971இலிருந்து 1979 வரை தலைவராகப் பணியாற்றினார். இவர் காலத்தில் 'புலவர் பட்டப் படிப்பு பி.லிட். என்ற பட்டப் படிப்பாக பல்கலைக்கழகம் மாற்றியது. எனவே ஓரியண்டல் கல்லூரி என்பது சிறப்பு போய் விட்டது. இருந்தாலும் பி.லிட். பட்டப்படிப்பு ஓரியண்டல் கல்லூரி சார்பாகவும் பி.ஏ. (தமிழ்) கலைக்கல்லூரி சார்பாகவும் இன்றும் நடந்து வருகிறது.

இதுவரை நடத்தப்பட்டு வந்த தனித்தமிழ்த் தேர்வு நிறுத்தப்பட்டு விட்டது; ஏனென்றால் அரசு இந்தப்படிப்பை அரசாங்க வேலைகளுக்காக ஏற்றுக்கொள்ளவில்லை.

1976 ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக்கழக விதிகளின்படி கல்லூரிக்காக கல்லூரி ஆட்சிக்குழு ஒன்று நிருவாகக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்பட்டது. இது பழைய வித்துவ சபைக்குப் பதிலாக அமைந்தது, இதற்குத் தனித் தலைவர், செயலர், எட்டு உறுப்பினர்கள். இவர்களில் கல்லூரி முதல்வரும் ஒரு உறுப்பினர் பல்கலைக்கழக நியமன உறுப்பினரும் ஒருவர்.

இராமநாத சேதுபதி 1979இல் இறந்த பிறகு அவருடைய மனைவியார் இந்திராதேவி தலைவராக இருந்து வருகிறார்கள். இப்பொழுது தமிழில் எம்.ஏ. பட்டமும் ஆராய்ச்சி படிப்பான எம்.பில். பட்டமும் கூட தமிழ்க் கல்லூரியில் கற்பிக்கப்படுகிறது.

இப்பொழுது சங்க நிருவாகக்குழு பார்வையில் பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்படும் தேர்வும் செந்தமிழ் இதழும் உள்ளன. கல்லூரியின் நிருவாகப் பணியைக் கவனித்துக்கொள்ள மட்டுமே கல்லூரி ஆட்சிக்குழு உள்ளது; கல்லூரியின் பாடத் திட்டம், தேர்வு திட்டம் ஆகியவற்றை பல்கலைக்கழகம் கவனித்துக் கொள்கிறது.

நிருவாகக்குழு

துவக்கத்தில் நிருவாகக்குழுவில் மொத்தம் பதினொரு பேர் இருந்தார்கள். அவர்களில் தலைவர், இரண்டு செயலர், எட்டு உறுப்பினர்கள்; தலைவரைத் தவிர 4 பிராமணர், 1 பிள்ளை, 1 முதலியார் 1 முஸ்லீம், 1 நாயக்கர், 2 பேரின் சாதி தெரியவில்லை. மேலும் இவர்களில் ஏழுபேர் மதுரையையும் ஒருவர் சென்னையையும், ஒருவர் திருநெல்வேலியையும், ஒருவர் ஆந்திராவையும் (தமிழர், ஆந்திராவில் அரசு அலுவலில் இருந்தவர்) சேர்ந்தவர்கள்[3].

2—5—1911 அன்று துணைத்தலைவர் பதவி ஏற்படுத்தப்பட்டு பி. சா. சுப்பிரமணிய ஐயர் அந்தப் பதவிக்கு அமர்த்தப்பட்டார். 1914இல் உறுப்பினர் எட்டு பேராக்கி மொத்தம் குழுவில் 12பேர் ஆக்கப்பட்டார்கள். அப்பொழுது தலைவர் தவிர ஏனையவர்கள் மூன்று காலம் பதவி மட்டுமே வகிக்கலாம் என்றும் குறைந்தது ஆறு பேராவது மதுரையைச் சார்ந்தவர்களாக இருக்கவேண்டும் என்றும் பொதுக்குழு தீர்மானித்தது.

1929இல் தலைவர் தவிர 10 பேர்களே இருந்துள்ளார்கள். அவர்களில் 6 பிராமணர்கள், ஒரு பிள்ளை, ஒரு செட்டி, ஒரு முஸ்லீம், சோமசுந்தர பாரதி அப்போது துணை தலைவர் இல்லை.

1944இல் தலைவர் தவிர 11பேர் இருந்தார்கன், அவர்களில் பிராமணர் நால்வர்: நாயுடு -ஒருவர்; பிள்ளை- இருவர் முஸ்லீம்-ஒருவர், ராஜு-ஒருவர்

1954இல் 9 பேரே இருந்திருக்கிறார்கள். இவர்களில் மூன்று பிராமணர், ஒரு முஸ்லீம், இரண்டு நாயுடு, ஒரு பிள்ளை, ஒரு ராஜு, ஒரு மறவர்.

1971இல் மேலே முன்னரே குறிப்பிட்டபடி மறவர் நால்வர், கள்ளர் இருவர், அம்பலக்கார் - ஒருவர், சேர்வை - இருவர் (அதாவது முக்குலத்தோர் 10) நாடார் - ஒருவர்.

1985-86 இல் ஆறு மறவர்; இரண்டு கள்ளர்; இரண்டு சேர்வை. (அதாவது முக்குலத்தோர் 10) ஒரு செட்டியார்.

நிச்சயமாக ஐம்பதுவரை பிராமணர்கள் நிருவாகக்குழுவில் ஓரளவு அதிகம் இடம் பெற்றிருந்தார்கள். அதே சமயத்தில் எழுபது வரைக்கும் கூட பிராமணர் அல்லாதாரின் பல்வேறு சாதிக்காரர்கள் பங்கு பெற்றார்கள். எழுபதுக்குப் பிறகே இளங் குமரன் குறிப்பிட்டபடி 'சேதுபதி வேந்தர் தொடர்புடைய வர்கள்' (1982: 130) பெரும்பான்மையான இடத்தைப் பெற்றார்கள். இந்தச் சமூகவாரி பிரிவுக்கு ஏதாவது பொருள் உண்டா?

பிராமணர்கள் அதிக இடம் பெற்றதே சங்கம் மொழித் தூய்மை இயக்கத்தில் ஈடுபடாததற்கு ஒரு காரணம் ஆகுமா என்று நினைக்க வேண்டியிருக்கிறது. 'செந்தமிழ்' பதினைந்து தொகுதிகளைக் (20 முதல் 39 வரை; ஆண்டு 1921 - 37) கட்டுரை களை அட்டவணை செய்த சுப்பிரமணியன் (1982) 'செந்தமிழ்க் கட்டுரைகளில் ஆங்கில ஆட்சிக்கு ஆதரவும் வடமொழி சாயலை யும் காண முடிகிறது என்று கூறியுள்ளார். 'செந்தமிழ்' கட்டுரை களில் வடமொழிச் செல்வாக்கு அதிகம் காணப்படுவதாகவும் சங்க நிகழ்ச்சி பற்றிய குறிப்புகளில் ஆங்கிலச் சொற்கள் அப்படி அப்படியே பயன் படுத்தப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதற்குச் செந்தமிழ் ஆசிரியர்கள் மட்டும் காரணம் என்று கூற முடியாது. 'செந்தமிழ்' மூலம் சங்கத்தின் போக்கு வெளிப்படுவ தாகவே கொள்ளவேண்டும்.

வித்துவக் கழகம்

எல்லா உறுப்பினர்களின் கழகமாய் இருந்து கல்லூரிக்கு வேண்டிய பாடதிட்டம், தமிழ் வளர்ச்சிக்குப் பணிகள் பற்றிய திட்டம் ஆகியவற்றை எண்ணிய வித்துவக்கழகம் 1915 இலிருந்து எட்டுபேர் மட்டும் கொண்ட – அதுவும் சங்க நிருவாகக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவாய் அமைந்து 'கல்வி நிருவாக சபை' என்று பெயர் மாற்றப்பட்டதோடு காலந்தோறும் இன்னும் சில மாற்றங்களைப்பெற்று, இன்று 'கல்லூரி ஆட்சிக் குழு' என்று பெயர் பெற்று கல்லூரியின் நிருவாகத்தை மட்டும் மேற்பார்வையிடும் குழுவாய்ச் சுருங்கிவிட்டது.

செந்தமிழ்க் கல்லூரி

தன்னாட்சிக் கல்லூரி போல பாடதிட்டமும், செயல் திட்டமும் கொண்டு இலவச உணவு, உடை, உறையுள், நூல் முதலியவற்றைக் கொடுத்துவந்த தமிழ்க்கல்விக்காக ஏற்பட்ட முதல் கல்லூரி மாணவர் சேர்க்கை இல்லாததாலும் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டதாலும் பல்கலைக்கழகத்தோடு இணைந்த பல கல்லூரிகளில் ஒன்றாய் ஆகிவிட்டது. ஆனாலும் பழைய பல்கலைக்கழக விதிகளின்படி டிப்ளமோ படிப்புக்கு ஓரியண்டல் கல்லூரி என்றும், பட்டப்படிப்புக்குக் கலைக்கல்லூரி என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. டிப்ளமோ படிப்பு பட்டப் படிப்பு ஆன பிறகும் கலைக்கல்லூரியில் சிறப்புத்தமிழ் இளங்கலை நிலையில் போதிப்பது தனிப்பிரிவாக நிருவாக முறையில் செயல்பட்டு வந்தாலும் செயல்முறையில் இரண்டுக்கும் வித்தியாசம் இல்லாமல் ஆகிவிட்டது.

செந்தமிழ்க் கல்லூரி ஆரம்பகாலத்தில் சங்கத்தின் முதன்மை குறியீடாய் இருந்தது. மாணவர்கள் ஆதரவு இல்லாததாலும் பொருளாதார நெருக்கடியாலும் பாண்டித்துரைத் தேவர் காலத்திலேயே அதன் முதல் இடத்தை இழந்தது மேலே விளக்கப் பட்டது. பின்னர் சங்கத்தின் நிருவாகப் பொறுப்பிலிருக்கும் ஒரு கல்லூரி என்ற குறியீடாய் இருந்தது. 1971 லிருந்து தமிழ்ச் சங்கத்தின் பெயரால் சேதுபதி மரபார் நிருவகிக்கும் ஒரு கல்லூரியாக இன்று திகழ்கிறது. இருந்தும் செந்தமிழைத் தொடர்ந்து வெளியிட்டு பழைய மரபை ஓரளவாவது அவர்கள் காத்து வருகிறார்கள்.

செந்தமிழ்

'செந்தமிழ்' மாத இதழ் சங்கம் ஆரம்பித்த 15 மாதங்களிலேயே துவக்கப்பட்டுவிட்டது. இதன் முக்கிய நோக்கங்களாக முதல் இதழில் அச்சிடப்பட்டிருப்பவைகளாவன:

1. இதுவரை அச்சிடப்படாத நூல்கள் (சாசனம், சரித்திரம், இலக்கியம்) வெளியிடுவது.
2. தமிழுக்கு வேண்டுவனவாகக் கருதப்படும் வடமொழி ஆங்கில நூல்களை மொழிபெயர்ப்பது.

3. மொழி ஆராய்ச்சி, இலக்கிய ஆராய்ச்சிகளை மேற் கொள்வது.
4. வரலாறு, நீதி, ஒழுக்கம், சமயம் பற்றிய ஆராய்ச்சிகளை வழங்குவது.
5. தமிழின் அருமை, பெருமை அடங்கிய செய்திகளை வெளியிடுவது.
6. தமிழ் வளர்ச்சிக்கு வேண்டிய பிற முயற்சிகளில் ஈடு படுவது.

இந்த நோக்கில் செந்தமிழில் வெளிவந்த கட்டுரைகளைப் பாகுபடுத்திப் பார்த்து மதிப்பீடும் செய்யும் முயற்சி தனியே மேற் கொள்ளப்படவேண்டும். ஆனாலும் சுப்பிரமணியன் (1980 : XVI) i) இலக்கியம் ii) தமிழ் நாட்டு வரலாறு iii) இலக்கணம் ஆகிய மூன்று பொருள் பற்றி மட்டுமே மிகுதியான கட்டுரைகள் காணப் படுவதாகவும் அறிவியல் கட்டுரை எப்பொழுதாவது வெளியிடப் பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் தமிழ் இலக்கிய வரலாறு புராணமே வரலாறு என்பதிலிருந்து மாறுபட்டு சான்று அடிப்படையிலான வரலாற்றுச் செய்திகள் அடிப்படையில் ஆராயும் போக்கு செந்தமிழ் மூலம் ஏற்படுத்தப்பட்டது சிறப்பான அம்சம் என்று எடுத்துக்காட்டி உள்ளார். இதற்குச் சோமசுந்தர பாரதியார் 'திருவள்ளுவர் பற்றிய கட்டுரை சான்று. இலக்கண இலக்கிய ஆராய்ச்சியில் வாதங்களையும் பிரதிவாதங்களையும் செந்தமிழ் வெளியிட்டு தருக்கமுறை சிந்தனை ஏற்பட வழிவகுத்தது. காந்திமதி (1987 : 257) குறிப்பிட்டது போல 'செந்தமிழில் மிகுதியும் இலக்கிய இலக்கணம் பற்றிய கட்டுரைகளே வெளிவந்தன,

'செந்தமிழ்' இலக்கிய, இலக்கண நூல்களின் பதிப்பு வெளி வரவும் உதவியது. இதுவே, செந்தமிழ்ப் பிரசுரங்களாகப் பின்னால் தனி நூல்களாக வெளியிடப்பட்டன.

மாத இதழ் எழுபதிலிருந்து காலாண்டு இதழாக மாறி விட்டது. இன்று தமிழ் ஆராய்ச்சி பரவலாக்கப்பட்டிருந்தும் ஆய்வறிஞர்களின் கவனத்தைக் கவரும்படியாக இதழ் அமையாதது யார் குறை என்று ஆராயப்படவேண்டும்.

அச்சகம்

சங்கம் தோற்றுவித்த ஒரு ஆண்டிலேயே அச்சகம் 'தமிழ்ச் சங்க முத்திராசாலை' நிறுவப்பட்டுவிட்டது. 'செந்தமிழ்' இதழ் வெளியிடமட்டும் அல்லாமல் புதிய நூல்களை வெளியிடவும் அச்சகம் எவ்வளவு தேவையானது என்று எண்ணி நிறுவியது பாண்டித்துரைத் தேவரின் செயல்திறனைப் புலப்படுத்தும். அதற்கேற்பவே அவர்காலத்தில் பல நூல்கள் வெளியிடப்பட்டது மேலே விளக்கப்பட்டது.

தமிழ் ஆராய்ச்சி நடவடிக்கைகளின் ஈடுபாடு குறைந்ததற்கு அச்சகம் 1933இல் விற்கப்பட்டது முக்கிய சாட்சியாகும்.

சங்கப் பிரசுரங்களில் சங்கத்துக்குப் பெருமை சேர்ப்பது தமிழ்ச்சொல்லகராதி, அபிதான சிந்தாமணி, தொல்காப்பிய செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரை ஆகியவையே. ஏனையவை சிற்றிலக்கியங்களும் சிற்றிலக்கணங்களுமே. சங்கஇலக்கியச் சுவடிகள் இருந்தும் பிறர் பதிப்பிக்கக் கொடுக்கப்பட்டதே அல்லாமல் ஏன் சங்கம் அவைகளை வெளியிட முன் வரவில்லை என்று தெரியவில்லை.

நூலகம்

பாண்டியன் புத்தக சாலை பொதுமக்கள் யாவரும் பயன் படுத்திக் கொள்ளும்படியாகவே துவக்கப்பட்டது. இதுவும் சங்கத்தின் தொடக்கவிழா அன்றைக்கே ஆரம்பிக்கப்பட்ட பெருமையுடையது. தமிழ், வடமொழி நூல்களோடு ஓலைச் சுவடிகளும் சேர்த்து வைக்கப்பட்டன. பின்னர் ஆங்கில நூல்களும் சேர்க்கப்பட்டன. 1904இல் 547 பேரும், 1906இல் 9500 பேரும், 1907இல் 11025 பேரும், 1910இல் 12444 பேரும், 1911இல் 11954 பேரும், 1913இல் 17715 பேரும் படித்திருக்கிறார்கள் (காந்திமதி, 1987:233) என்றால் அது எவ்வளவு தூரம் பொது மக்களால் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது- வரவேற்கப்பட்டது என்பதை அறிந்து கொள்ளலாம்.

1929இல் சங்கக் கட்டிடத்தில் ஏற்பட்ட தீ நூலகத்தைப் பெரிய அளவில் பாதித்தது. பின்னர் நூல்களைச் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டாலும் அதன் பொதுமக்கள் அதிகம் பயன் படுத்தாத நிலை ஏற்பட்டது. ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் பயன்படும் தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுவிட்டது. கல்லூரி மாணவர்களுக்கு வேண்டிய நூல்கள் தனியே வைக்கப்பட்டன. எனவே பாண்டியன் நூலகம் 'ஓர் ஆய்வுமையமாகத் திகழ்கிறது' என்கிறார் காந்திமதி (1987:239).

மதிப்பீடு

மதிப்பீடு இங்கு உள்மதிப்பீடு, வெளிமதிப்பீடு என்று இரண்டு வகையில் நோக்கப்படுகிறது. உள்மதிப்பீடு என்பது சங்கத்தோடு தொடர்பு கொண்டிருப்பவர்கள் செய்வது. வெளிமதிப்பீடு வெளியார் வேறு வேறு கோணங்களில் செய்வது. முன்னதில் சங்கத்தோடு தொடர்பு உடையவர்கள் எல்லோரையும் ஒன்றாகவே கருதுவது; உண்மையான குறைகளுக்கும் நிறை களுக்கும் காரண கருத்தா யார்? காரணம் என்ன என்று கேட்காததே அதன் சிறப்புப்பண்பாகும். இதனால் பலசெய்திகள் வெளிக்கொணரப் படவில்லை.

மதுரைத் தமிழ்ச்சங்கம் பற்றி ஒரு நூலும் (இளங்குமரன். 1982), ஒரு முனைவர் பட்ட ஆய்வேடும் (காந்திமதி, 1987) வெளி வந்துள்ளன. இவை உள் மதிப்பீடுகளாகக் கொள்ளப்படலாம். மேலும் செந்தமிழ் இதழிலேயே சங்க நடவடிக்கைகளைச் சங்கக் குறிக்கோள்களோடு பொருத்திப் பார்த்து குறை நிறைகளை (ஒரு தமிழ் நண்பன், 1913) சுட்டிக்காட்டியிருப்பது உள்மதிப்பீடு என்றாலும் ஒரு தைரியமான விமர்சனம் ஆகும்.

இளங்குமரன் (1982) பாண்டித்துரைத் தேவரின் சிறப்புப்பணி பற்றியும் சங்கம் பற்றிப் பொதுவாகவும் தனித்தனியாகக் விளக்கி உள்ளார். மதுரைத் தமிழ்ச்சங்கம் நான்காம் தமிழ்ச்சங்கம் என்று பலர் ஏற்றுக்கொள்ளவில்லையே என்ற ஆதங்கத்தையும் வெளியிட்டுள்ளார். வளர்ச்சிப்பணிகளை வரலாற்று நோக்கில் பார்த்து மதிப்பீடு செய்யவில்லை; பலரும் உதவி செய்ய முன் வரவில்லை என்று குறைபட்டுக்கொண்டிருக்கிறாரே தவிர

சங்கம் தன்னுடைய இன்றைய நடவடிக்கைகளால் பல நல்ல குறிக்கோள்களை முன்னிறுத்தித் தமிழ் உலகத்தைக் கவரவில்லை என்று குறிப்பிடவில்லை. ஆனாலும் அவருடைய நூல் சங்கம் பற்றிய முதல் நூல் என்ற பெருமைக்குரியது.

காந்திமதி (1987) சங்கம் பற்றிய அரிய ஆவணங்களை வெளிக்கொண்டு வந்துள்ளார். அவர் மதிப்பீடு செய்யவில்லை.

'ஒரு தமிழ் நண்பன்' (1913) மாணவர்கள் ஆதரவு ஏன் இல்லை என்பது தெரியவில்லை என்றும் மாணவர்கள் ஆதரவும் செல்வந்தர்களின் துணையும் வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். பொதுவாகச் சங்கம் புதுமைச் சிந்தனைகளைக் கொள்ளாமல் பழைய மரபிலே சென்றுள்ளது என்று பல உதாரணங்களால் எடுத்துக்காட்டியுள்ளார்.

இர்ஷிக் (1986:18) தமிழ்ச் சமூகத்தில் அரசியல் உணர்வின் வரலாற்றை விளக்கும்போது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கில அரசும் பாதிரிமார்களும் தமிழ் மறுமலர்ச்சியை தூண்டிவிட, தமிழக அறிஞர்களும் மறுமலர்ச்சிக்குப் பல வகைகளில் உழைத்ததன் சின்னமாகத் தமிழ்ச் சங்கத்தின் தோற்றத்தைக் குறிப்பிட்டுள்ளார்.[4]

சிவத்தம்பி (1986:62) இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய உணர்வுக்கும் சமூக உருவாக்கத்துக்கும் உள்ள உறவை ஆராயும் போது 'தமிழ்ச்சங்கத்தின் தோற்றமும் 'செந்தமிழ்' வெளியீடும் தமிழ் இலக்கியத்தையும் வரலாற்றையும் அறிந்து கொள்ள உதவின' என்று குறிப்பிட்டுள்ளார்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் தோற்றம் தமிழர்களின் சமூக வரலாற்றின் ஒரு கூறாய் மொழி உணர்வின் வெளிப்பாடு என்ற பெருமைக்கு உரியது. ஆனால் வளர்ச்சியில் முதல் பத்தாண்டு- பாண்டித்துரைத்தேவர் காலம் வரையே உயிராற்றல் கொண்டு சங்கம் இருந்தது. அதிலும் கூட ஒரு பெரும் சமூக இயக்கமாகவோ அல்லது கல்வி நிறுவனமாகவோ ஏன் மாறவில்லை; மாறுவதற்கு தடையாக இருந்த உள்ளார்ந்த குறைகள் என்ன என்று அறிய ஒப்பியல் முறையில் ஆராயவேண்டும்.

இந்தியாவில் 1893இல் வாரணாசியில் துவக்கப்பட்ட நாகரி பிரச்சாரசபை வெற்றிகரமாக நடத்தப்பட்ட ஒரு மொழிச்சங்கம் ஆகும். அது மொழி வளர்ச்சியோடு எழுத்து வடிவத்தையும் (தேவநாகரி எழுத்து) பரப்ப எடுத்துக்கொண்டது அதன் சமூகச் சாயலைப் புலப்படுத்தி விடுகிறது. வட இந்தியாவில் ஹிந்தி, உருது என்றழைக்கப்படும் இரண்டு மொழிகளுக்கு இடையே மொழி அமைப்பில் அதிக வித்தியாசம் இல்லாமல் இருப்பதால் ஒரு மொழியை இன்னொரு மொழியார் இன்றும் புரிந்து கொள்கிறார்கள். இருந்தாலும் ஹிந்தி என்பது இந்துக்களின் மொழியாகக் கருதப்படுவதற்கு ஏற்ப, தேவநாகரி எழுத்தால் எழுதப்படவேண்டும் என்று விரும்புவதைப்போல உருது என்பது முஸ்லீம்களின் மொழியாகக் கருதப்படுவதால் அதைப் பாரசீக-அராபிக் எழுத்துகளால் எழுதப்பட வேண்டும் என்று விருப்பு கிறார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் தேவநாகரி எழுத்து அதிக புழக்கத்தில் இல்லாததால் அப்போது நாகரி எழுத்துஇந்துக்களின் மறுமலர்ச்சிக் குறியீடாகக் கருதப்பட்டது. இந்த உணர்வோடு சுதந்திர போராட்ட அரசியல் உணர்வும், புதுமையாக்க உணர்வும் (ஹிந்திமொழிச் சங்கத்தில் படைப்பிலக்கிய கர்த்தாக்கள் புது மொழிநடையையே உருவாக்கி மொழியின் பன்முக வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றார்கள்) கலந்தன. மேலும் மொழி பரந்துபட்ட பகுதியில் வழங்கியதால் தேசத்தின் ஒருமைப்பாட்டு சின்னமாய் கருதத் தகுந்ததாகி பிற மொழிக் காரர்களும் (வங்காளம், மராத்தி, குஜராத்தி) ஹிந்திமொழி வளர்ச்சியிலும் ஹிந்திமொழிச் சங்க வளர்ச்சியிலும் ஈடுபட்டு உள்ளார்கள். இவைகளால் ஹிந்தி மொழிச்சங்கம் தேசிய வளர்ச்சியோடு சம்பந்தப்படுத்தப்பட்டதை விரிவாக தாஸ்குப்தா (1980) ஆராய்ந்துள்ளார். அவரே உருதுமொழிச்சங்கம் ஏன் தீவிரமாகச் செயல்படவில்லை என்பதற்கும் சமூக, பண்பாட்டு, அரசியல் காரணங்களையும் அந்த நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்ச் சங்கத்தைப் பொறுத்தவரையில் அன்றைய சென்னை மாகாணத்தின் ஒருபகுதிக்குரிய இயக்கமாக அமைந்தது; பரந்த அளவிலான மொழி சமூக உணர்வுகளோடு கூடிய இயக்கத்தில் கலந்துகொண்டவர்கள் சங்க நடவடிக்கைகளில் ஈடுபாடு

காட்டாதது; சங்கமும் மொழிப் பழமையைப் போற்றுவதிலேயே அதிக கவனம் செலுத்தியது ஆகியவையே மதுரைத் தமிழ்ச் சங்கம் பெரிய மொழி இயக்கமாகவோ, கல்வி நிறுவனமாகவோ உருப்பெறாமல் போனதற்குக் காரணம் ஆகலாம். இங்கும் பாரதியின் வாசகம் தீர்க்க தரிசமானது; அவருடைய மதிப்பீடு சரியானது என்பதை அறியலாம்.

அடிக் குறிப்புகள்

1. முனைவர் வி. காந்திமதி அவர்கள் தன்னுடைய ஆய்வேட்டைத் தந்ததோடு என்னுடைய சில சந்தேகங்களைப் போக்கினார்கள். அவர்களுக்கு என் நன்றி உரியது.

2. பொதுவாகத் தமிழ்ச்சங்கம் பற்றிய நூலிலும், ஆய்வேட்டிலும் வரலாற்று உணர்வு குறைவாகக் காணப் படுகிறது. அதனால் சங்கச் செயல் பாட்டைப் பற்றிய சரியான பொதுமைகள் உருவாக்கப்படவில்லை. உதாரணமாக இரண்டு செய்திகள் மட்டும்சுட்டிக்காட்டப் படுகின்றன.

அ i) மதுரைச் சங்கத்தின் நிர்வாக விதிகளில் ஒன்று துணைத்தலைவர் பதிவி 25—5—1911 நடந்த உறுப்பினர்களின் ஆண்டுக் கூட்டத்தில் ஏற்படுத்தப் பட்டதாகக் கூறுகிறது. மேலும் 1908 ஆம் ஆண்டு செய்யப்பட்ட பதிவு ஆவணத்தில் (memorandum of Association) துணைத் தலைவர் காணப்படவில்லை. ஆனால் காந்திமதி (1987:40) பி. சா. சுப்பிரமணிய ஐயர் சங்கம் தொடங்கியதிலிருந்து 1911 ஆம் ஆண்டுவரை சங்கத் தலைவராக இருந்தவர் என்று கூறுவது பொருந்தாது.

ஆ ii) பி. டி. இராசன் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக செயலாற்றிய போது 1954 ஆம் ஆண்டில் நூலகக்குழு ஒன்று அமைக்கப்பெற்றது' என்பதும் (காந்திமதி,

1987 : 237) பொருந்தாது. அப்பொழுது அவர் துணைத் தலைவராக இருந்தார். அவர் தலைவரானது 1967இல்.

ii) பி. டி. இராசன் காலத்தில் சங்கம் பொன்விழாக் கண்டது என்பதும் (இளங்குமரன், 1982 : 125) பொருந்தாது. பொன்விழா கொண்டாடியது 1956 ஆம் ஆண்டு, அப்போது அவர் துணைத் தலைவரே.

இந்த இரண்டும் நாகநாத சேதுபதி தலைவராக இருந்த போது சங்கத்தின் நடவடிக்கைகள் யாரால் நடத்தப்பட்டது என்ற உண்மையைப் புலப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

3 சங்க உறுப்பினர்களின் சமுகப் பின்னணியைச் சேகரித்து அனுப்பிய முனைவர் இரா. மோகன் (தமிழியல் இணைப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்) அவர்களுக்கு என் நன்றி.

4. இர்ஷிக் (1986 : 18) மதுரை தமிழ்ச்சங்கம் 1911இல் துவக்கப்பட்டதாகக் கூறுவது தவறு. மேலும் அவர் சைவ மறுமலர்ச்சியின் ஒரு கூறாக ஏற்படுத்தப்பட்ட சைவ சித்தாந்தத்தைப் பாண்டித்துரைத் தேவர் ஆதரித்தார் என்று அவர் கூறுவதன் உள்கிடை ஆராயத் தகுந்தது.

துணை நூல்கள்

1 இளங்குமரன், இரா. 1982 மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம் 2-வது திருந்திய பதிப்பு, 1987, மதுரை.

2 ஒரு தமிழ் நண்பன், 1913 'மதுரைத் தமிழ்ச் சங்கம்' செந்தமிழ், 12. 292-315

3	சாந்திமதி, வி.	1987	'இன்றைய மதுரைத் தமிழ் சங்க வரலாறுகளும் பணிகளும்' மதுரை காமராசர் முனைவர்பட்ட ஆய்வேடு, மதுரை.
4	கோவிந்தராசன், மு.	1985	சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்க் கல்வி வளர்ச்சி, சென்னை.
5	சுப்பிரமணியம், சி. எஸ். (தொ.ஆ.)	1986	பாரதிதரிசனம்,சென்னை.
6	சுப்பிரமணியம்' வி. அய்.	1991	விளக்கின் நிழல், நாகர்கோவில்.
7	சூரிய நாராயண சாஸ்திரி, வி. கோ.	1903	தமிழ் மொழி வரலாறு 11-வது பதிப்பு, 1968, மதுரை.
8	வேங்கடசாசாமி, மயிலை சீனி.	1962	பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம். சென்னை.
9	Das Gupta	1970	**Language Conflict and National development**, Berkeley.
10	Sivathambi, K.	1986	**Literary history in Tamil**, Tanjavur.
11	Subramaniyam, F.R.	1980	**Annotated Index to Centamil**, Franz Steniverag G.BH.W. Iesladon.

பிஜின், கிரியோல் மொழி வகைகள்

கோ. சீனிவாசவர்மா
அண்ணாமலை நகர்.

வெவ்வேறு தாய்மொழிக் குழுவினர் வாணிபத்தின் பொருட்டு சந்தித்தபொழுது, மொழித் தொடர்பு ஏற்பட்டது. அங்கு கருத்துப் பரிமாற்றம் நிகழ உருவான புதிய பேச்சு வழக்கினை ஆரம்ப நிலையில் 'பிஜின்' (Pidgin) என்றும், அதுவே பின்னர் ஏதேனும் ஒரு குழுவினருக்குத் தாய்மொழி என்ற நிலையில் உயர்வு பெற்றதும் 'கிரியோல்' (Creole) என்றும் பெயர் பெற்றது என்று மொழியியலார் கருதலாயினர். உலகில் இன்று ஏறக் குறைய் 150 பிஜின், கிரியோல் மொழிகள் வழங்கிவருகின்றன. இவற்றில் பெரும்பான்மையான மொழிகள் போர்ச்சுகீஸ்' ஸ்பானிஷ், பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய ஐரோப்பிய மொழிகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். ஒரு சில புதுமொழிகள் ஆப்பிரிக்க உள்நாட்டு மொழிகளுள் தொடர்பு ஏற்பட்டதாலும் உருவாகியுள்ளன என்ற கருத்தும் நிலவுகிறது. இந்தியாவில் சோட்டா-நாக்பூர் பீடபூமியில் வழங்கும் 'நாக்புரியா' என்ற பேச்சுவழக்கு, கிரியோல் மொழியாகும் என ஸ்ரீவத்சவா கருதுகிறார்.

ஐரோப்பியர்கள் இடைக்காலத்தில் வாணிபத்தின் பொருட்டும், கிறிஸ்துவ மதத்தைப் பரப்புவதற்கும் மத்தியதரைக் கடலைக் கடந்து சென்றபொழுது ஆப்பிரிக்க மக்களுடன் தொடர்பு கொண்டனர். அப்பொழுது தோன்றிய பெயர் 'லிங்குவா பிரான்கா' (Lingua Franca) ஆகும். மத்தியதரைக் கடலோரத்தில் உள்ள நாடுகளுடன் மாலுமிகள் பரவலாகத் தொடர்பு கொண்டபொழுது, ஒருவகை பிரஞ்சு மொழியையே

பயன்படுத்தினர். அதன் காரணமாக பிரஞ்சுமொழி இணைப்பு மொழியாகக் கருதப்பட்டது. பிரஞ்சுமொழியே ஆதிக்கத்திலும், அளவிலும் பரவலாக இருந்ததால் இப்பெயர் உருவாயிற்று. பிரான்சி (Franci) என்ற பெயர் எல்லா தொடர்பு மொழிகட்கும் இந்த காலகட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒருமொழியை நாம் எவ்வளவு கற்கிறோமோ, அந்த அளவுக்கு அம்மொழியைப் பேசுகின்ற மக்களைப்பற்றியும் அறிய வேண்டும். அப்பொழுதுதான், நாம் நம்முடைய உலகைப்பற்றியும் அதில் வாழ்கின்ற மக்கள் அவர்களின் மொழிகளின் மூலம் அவர்களைப் பற்றிய சிந்தனைகள், வாழ்க்கை முறைகள் கண்ணோட்டங்கள் ஆகியவற்றை அறிய முடியும்.

மக்களிடமிருந்து, மொழியை மிக எளிதாகப் பிரிக்கமுடியாது மக்களைப்போன்றே, மொழிகளையும் மிக எளிதாக வகைப்படுத்த முடியாது. ''மொழி என்பது சமுதாயத்தில் கருத்துப்பரிமாற்றத் திற்கான ஒரு கற்பிதக் குறியீடு'' என்று மொழியியலார் கூறினாலும் அக்கருத்து 'குதிரை புல்மேயும் நான்கு கால் விலங்கு' என்று கூறுவதைப் போன்று பொருளற்ற விளக்கமாக அமையும்' பல்லாயிரக்கணக்கான பேச்சு மொழிகளுள் பிஜினையும் கிரியோலையும் மிக எளிதாக இனம் கண்டுவிடமுடியாது' அவைகள் மற்ற மொழிகளைப்போலவே, பல குழுவினரின் மொழித்தேவையை எல்லாவிதத்திலும் பூர்த்தி செய்கின்றன. இருவேறுபட்ட குழுவினரின் மொழித்தேவைகள் எப்பொழுதுமே ஒன்றாக அமைவதில்லை. அதுபோன்றே இருமொழிகளும் ஒரு மாதிரியாகவே அமைந்திருக்காது. ஒவ்வொரு மொழியும் தத்தம் வடிவில் தனிச்சிறப்புப் பெற்றதாகவே இருக்கும். ஒரு மொழியை மிக விரிவாக விளக்கினால், அதன் தனித்தன்மை நன்றாகப் புலப்படும். பிஜின், கிரியோல் மொழிகளைப் பற்றி, படிக்கப்படிக்க அவைகளைப் பற்றிய உண்மையான நிலையை நன்கு அறிந்து கொள்ளலாம். ஆரம்பத்தில் இவ்வகை மொழிகளைப் பற்றிய தவறான கருத்துக்களைப் பலர் கொண்டிருந்தபோதிலும், நுணுகி ஆராய்ந்தபின், அக்கருத்துக்கள் மாறும்.

உலகில் வாணிபத் தொடர்பால் நூற்றுக்கணக்கான வணிக தொடர்பு மொழிகள் உருவான போதிலும்கூட, அவைகள் தம் அடிப்படை வடிவங்களில் ஒற்றுமையுடையனவாகவும், மிகக் குறுகிய காலகட்டத்தில் மிகச் சிக்கலான கருத்துப் பரிமாற்றக் கருவிகளாக எவ்வாறு வெவ்வேறு மொழிகளைப் பேசுகின்ற மக்கட்கிடையில் உருவாகி வளர்ந்தன என்பது புதிராகவே இருக்கின்றது. சில சொற்களின் தோற்றங்கள் கூட புதுமையாக இருக்கின்றன. 'கிரியோல்' என்ற சொல் ரொமான்ஸ் (Romance languages) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த சொல்லாகும். அதன் பொருள் ஆரம்ப நிலையில் 'உணவு', 'வளர்த்தல்', 'குடும்பத்தைச் சார்ந்தது' என்பதாகும். பின்னர், பதினாறாம் நூற்றாண்டில் 'குடியேறிய நாட்டில் பிறந்தவன்', 'பிறஅரசின் ஆட்சிக்குட்பட்ட நாட்டில் பிறந்தவன்' என்றாயிற்று. மேலும் அது அவர்களுடைய மொழியையும் குறிக்கலாயிற்று. இதனைவிட மிகவும் சிக்கலானது. 'பிஜின்' என்ற சொல்லின் வரலாறு. பிஜின் (Pidgin) என்ற சொல்லைப்பற்றி பலர் ஆராய்ந்திருந்தும் கூட, அது எப்பொழுது எம்மொழியின் வேர்ச்சொல்லிலிருந்து தோன்றி வழக்கிற்கு வந்தது என்ற முழுவிவரம் நமக்கு இன்னும் கிடைக்கவில்லை. ஆக்ஸ்ஃபோர்டு ஆங்கில அகராதி குறிப்பிடுவது யாதெனில் சீன மக்களின் தவறான உச்சரிப்பான ஆங்கிலச்சொல் 'பிசினஸ்' (business) இன் வடிவமே Pidgin 'பிஜின்' என்பது. 1850இல் தான் முதன் முதலில் இச்சொல் வழக்கிற்கு வந்ததாகக் குறிப்பிடுவதுடன், ஆங்கிலேயர்களும், சீனர்களும் தேயிலை, பட்டு வணிகத் தொடர்பின்பொழுது, உருவானதாகக் கருதப்படுகிறது. மேலும் இரண்டு கருத்துக்கள், இச்சொல் வணிகத்துடன் தொடர்பு உடையதாகவே குறிக்கின்றன. குர்த்ஹாசன் (Kurt Hassen : 1913) ஹீப்ரு (Hebru) மொழியின் பிஜோம் (Pidjom) என்ற சொல்லிலிருந்து தோன்றியிருக்கலாம்; ஏனெனில் அது 'பண்டமாற்று' என்ற பொருளில்தான் வழங்குகிறது என்று கூறுகிறார். சார்லஸ் லேலண்டு (Charles Leland : 1876) போர்ச்சுக்கீசிய மொழியின் 'ஆக்குபசோன்'(Ocupacaon) என்றசொல், 'தொழில், வாணிபம் என்ற பொருளில் வழங்குவதால், அதிலிருந்து பசோம்' (Pac ao) 'பிஜின்' வந்திருக்கலாம் என்று கருதுகிறார். இஃது ஒலி அமைப்பில் பொருத்தமற்றதாக இருக்கிறது. எனினும் 'பிஜின்

வணிகத் தொடர்பு மொழி என்ற நிலையில் கடந்த ஐநூறு ஆண்டுகளாக வழங்கிவருகின்ற வரலாற்றை, யாரும் மறுக்க வியலாது. கிளய்நெக்கி (Kleinecke : 1959) தென் அமெரிக்காவில் உள்ள யயோ (Yayo) மொழியின் பிடியன்ஸ்(Pidiyans) 'மக்கள்' என்ற சொல்லிலிருந்து வந்திருக்கவேண்டும் என்று எண்ணுகிறார் அவர்கள் பேசிய ஆங்கிலத்தை Pidiyans English 'பிடியன் ஆங்கிலம்' என்று வெள்ளையர்கள் குறிப்பிட்டனர். 1625 இல் தென் அமெரிக்காவில் வாழ்ந்த சிவப்பிந்தியர்களை Pidiyans என்றும், அவர்கள் மீது தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்ற பொழுது அம்மக்களுடன் தொடர்பு கொண்டு, அவ்விந்தியர்கள் பேசிய ஆங்கிலத்தை இவ்வாறு குறிக்கலாயினர். இதனை உண்மை என்று ஏற்றுக் கொண்டாலும்கூட 1625லிருந்து 1850 வரை வரிவடிவ ஆதாரம் ஒன்றுமில்லாமல் போயிற்று என்ற வினாவிற்கு ஏற்ற விடை காண முடியவில்லை. போர்ச்சுகீஸ் சொல்லான 'Pequeno' பெக்குனோ - 'குழந்தை' என்ற சொல்லுடன் தொடர்புபடுத்துவர். இதற்கு ஆதாரமாக பிரெஞ்சு, டச்சு மொழிகளின் தாக்கத்திற்குள்ளாகி தோன்றிய புது மொழிகளை பெத்தித் நீக்ரே (Petit Negre), பேபி ஹாலந்து (Baby Holland)ஆகியவற்றைக் குறிப்பிடுவர்.

பெத்தித் நீக்ரோ -- 'சிறிய நீக்ரோ'

பேபிஹாலந்து 'குழந்தை ஹாலந்து'

இதற்கிணையாக, 'பாபாமலாய்', 'பேபிடாக்' என்ற வழக்குகளை மேற்கோள் காட்டுவர். மேலும், போர்ச்சுகீசியர்களே ஆப்பிரிக்கா, ஆசியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் வாணிபம் செய்த முதல் ஐரோப்பியர்களாவர். புறாவைக் குறிக்கும் பீஜியன் (Pigeon) என்ற சொல்லிலிருந்து கூட 'பிஜின்' தோன்றியிருக்கக்கூடும் என கருதுகின்றனர். ஏனெனில் புறாவின் மூலம் செய்தி அனுப்பும் வழக்கம் பண்டைக்காலத்தில் இருந்து வந்தது. புறாக்கள் மூலம் மிகக் குறைந்த அளவு செய்தியே அனுப்ப முடிந்தது. அது போன்று மிகக் குறைந்த கருத்துப் பரிமாற்றத்திற்காக வழங்கிய மொழியை புறா மொழி - Pigeon language என்று வழங்கியிருக்க கூடும். இதற்கு எடுத்துக்காட்டாக. Bush English, Baby talk, macaronic jargon a mongrel lingo', inferiority made half

articulate என்ற வழக்குகளைக் குறிப்பிடலாம். 'பிஜின்' என்ற சொல்லின் மூலத்தை முழுமையாக அறிய முடியாவிட்டாலும் கூட, அதுதொடர்புக்கு ஏற்ற ஓர் இடைப்பட்ட மொழியாக உருவானதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

வெவ்வேறு மொழிகளைக் கொண்ட இரு குழுவினருக்குள் கருத்துப்பரிமாற்றத்திற்காக உருவாகும் மொழியே 'பிஜின்' ஆரம்ப நிலைத்தொடர்பில் ஆங்கில கப்பலோட்டிகட்கும், மேற்குக்கடற்கரை ஆப்பிரிக்க நாட்டினருக்கும் அல்லது வட அமெரிக்க இராணுவவீரர்கட்கும் வியட்நாம் மக்களுக்கும் ஏற்பட்ட தொடர்புபோல, மிகக் குறைந்த அளவிலேயே, அதுவும் ஏவல் வகை வாக்கியங்களாக, தனிச்சொல் அல்லது மிகச்சிறிய சொற்றொடராக, வாக்கியங்கள் உருவாகின்றன. மேலோங்கிய குழுவினரின் மொழியிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு சொற்கள் இதற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. மிகக் குறைந்த அளவில் பயன்படும் இத்தொடர்பு மொழி ஆரம்பத்தில் பல முகபாவங்களுடனும் இணைந்தே செயல் படுகிறது. இவ்வகையான பிஜின் வழக்குகள் மேலோட்டமாக அமைந்து, வெகுவிரைவில் மறைந்தும் விடுகின்றன. இதில் இரண்டு மொழிகளின் தொடர்பு மட்டுமே அமைந்துள்ளது தொடர்பு அறுபட்டால், பிஜினும் வழக்கொழிந்து விடுகிறது. மாறாக தொடர்பு நீடித்தால் ஒரு மொழியினர், மற்றவர் மொழியைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு பெருகுகிறது. பன்மொழி வழங்கும் நாடுகளில், வேறுவகையான நிலைகள் ஏற்பட்டுள்ளன ஆரம்பத்தில் வாணிபத்திற்கு மட்டும் அல்லது இராணுவ நடவடிக்கைக்கு மட்டும் என்ற குறுகிய செயல் பாட்டிலிருந்து விலகி, நாள்தோறும் பயன்படும் இரு குழுவினரின் எல்லா நிலைகட்கும் ஏற்ற தொடர்பு மொழியாக, பொது மொழியாக உருவாகின்றது. குறுகிய எல்லைக்குள் வழங்கும் பிஜின் வழக்கிற்கும், பரந்து விரிவான பிஜின் வழக்கிற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. பேசும் மக்கள், மொழி அமைப்பு, பயன் என பல நிலைகளிலும் வேறுபாடு உண்டு.

கிரியோல் என்பது, பிஜின் வழக்கானது, ஒரு குழுவினருக்குத் தாய்மொழி என்றநிலையில் வழங்கும்பொழுது ஏற்படும் நிலை.

இது 'மொழி' என்ற உயர்வினைப்பெறுகிறது. இத்தகைய மொழிகள், பெருமளவில் மேற்கு ஆப்பிரிக்காவிற்கும், வட அமெரிக்காவிற்கும் இடையில் 'அடிமை வியாபாரம்' நடந்த பொழுது உருவாகின. பதினாறு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்ட காலத்தில் ஏறக்குறைய பத்து மிலியன் மக்கள் அடிமைகளாக விற்கப்பட்டபொழுது, அவர்கள் தம் தாய்மொழியினை விட்டுவிட்டு ஏதேனும் ஓர் ஐரோப்பிய மொழியைத் தாம் வாழ்கின்ற இடத்திற்கேற்ப கற்க வேண்டியதாயிற்று. அக்குடும்பங்களில் பிறந்த குழந்தைகள் 'பிஜின்' வழக்கினைக் கற்று, தாய்மொழியாக ஏற்றுக்கொண்டனர். அவ்வாறு பிஜின் என்ற நிலையிலிருந்து 'கிரியோல்' என்ற மொழி நிலைக்கு உயர்ந்தபொழுது, அது விரிவடைந்து. வடிவிலும் பயன்பாட்டிலும் சிறப்படைந்தது. வாழ்க்கையில் பலவித தேவைகளைப் பூர்த்தி செய்யவும், விளக்கவும் அம்மொழி பயன்பட்டபொழுது, பல புதிய உத்திகள் மூலம் புதிய புதிய சொற்கள், சொற்றொடர்கள், பொருள்கள் தோன்றலாயின, வளர்ச்சிக்கும் இடம் கொடுத்தன. மொழித்தாவல (Loan shift) மூலமே கிரியோல் உருவாகின்றது. ஆனால் பிஜின் வழக்கு நிலைபெற்று வழங்கும்பொழுது, அது வேறொரு குழுவின் தாய்மொழியுடன் கூடவே இரண்டாம் பேச்சு வழக்காகக் கற்றுக்கொள்ளப்பட்டு, துணைவழக்காக வழங்குகின்றது. எடுத்துக்காட்டாக, நைஜீரியாவின் ஒரு பகுதியிலும், பப்புவா நியூசினயாவிலும் வழங்கும் ஆங்கில அடிப்படையிலான பிஜின் வழக்குகள், அந்தந்த நாட்டில் வழங்கும் உள்நாட்டு மொழியுடன் கற்றுக்கொள்ளப்படும் புது வழக்காக இரண்டாம் மொழியாக இருக்கின்றன.

'ஆங்கில - பிஜின் வடிவம்' என்ன?

இதுவரை ஆராயப்பட்டுள்ள விரிவான பிஜின் வழக்குகளை எடுத்துக்கொண்டால், அவைகளின் பொதுத்தன்மைகளைப் பின் வருமாறு விளக்கலாம். அறுபதுக்கும் மேற்பட்ட ஆங்கில-பிஜின்கள் இப்பொழுது வழக்கில் உள்ளன. இக்கட்டுரையில் விளக்கப்படும் ஆங்கில-பிஜின், ஆப்பிரிக்க கண்டத்தின் மேற்குப்

பகுதியில் உள்ள கெமருன் நாட்டில் வழங்கும் பிஜினாகும். இதனை, இனி கெமருன் (Cameroon) என்று குறிப்பிடுவோம். இது குறிப்பிட்ட சொல்லமைப்பு முறையுடன், எளிய வாக்கிய வடிவினையும் பெற்றுள்ளது. எந்தவொரு இயற்கையான தாய் மொழியுடன் ஒப்பிட்டாலும், கெமருனின் அமைப்பு, மிக எளிதானது என்பது விளங்கும்.

பிஜின் மொழியின் ஒலியனியல், ஐரோப்பிய மொழியின் அமைப்பினை மாற்றி, உள்நாட்டு மொழியின் அமைப்பின் அடிப்படையிலேயே பெரும்பாலும் அமைந்திருக்கிறது. இதனைக் கீழ்நிலைத் தாக்கம் (Sub-stratum inference) என்ற அடிப்படையின் கீழ் வகைப் படுத்தலாம். தொடர்பு கொள்ளும் மொழிகளில், சமூகத்தாழ்வான மொழியின் ஒலியன் அமைப்பே தலைதூக்கி, வழக்கில் பெரும்பான்மை பெற்று விளங்குகிறது. நியூமெலனீசிய பிஜின் மொழி ஆங்கிலத் தொடர்பால் உருவான மொழி. இப்பிஜின் மொழியில் ஒலியன் மெலனீசியன் மொழி அடிப்படையில் அமைந்திருப்பதைக் காணலாம். ஆங்கில மொழியில் உள்ள உயிரொலிக் குணங்கள் குறைத்து மதிப்பிடப் பட்டு மெலனீசிய மொழிக்கேற்ப அமைந்துள்ளது. எடுத்துக் காட்டாக ஆங்கிலத்தில் உயிரொலியன்கள் உள்ளன.

beat / bit — i / I
fluke / book — u / U
coat / cought — o / ‘ɔ

அவை மாற்றப்பட்டு i, u, o மட்டுமே’ வழங்குகின்றன.

கெமருன்

விக்கப் — ‘எழுந்திரு’ (வி. தொ)

வீக்கப் தி பிசின் — ‘குழந்தையை எழுப்பு’ (வி செயப்படு பொருள்

இ	பின்	விக்கப்	தி	பிகின்	– அவள் குழந்தையை
i	bim	wikap	di	pikin	எழுப்பினாள்
(அவள்)		(எழுப்பினாள்)		(குழந்தை)	

(பெ. தொ. எழுவாய் வி. செ. பொ)

எதிர்மறை வாங்கியங்கள் ஏதேனும் ஒரு எதிர்மறைச் சொல்லுடனேயே காணப்படும். இம்மொழியில் நோ (no) எதிர்மறைச் சொல்லாகும். அது வினைச் சொல்லுக்கு முன்னும் வரலாம்.

கோ (go) 'போ'
நோ கோ (no go) 'போகாதே'
தெம் ஃபிட் கோ 'அவர்கள் போகலாம்'
(Dem fit go)
தெம் நோ ஃபிட் கோ 'அவர்கள் போகக்கூடாது'
(Dem no fit go)

உறுதிக்காக எதிர்மறை பெயருக்கும் வினைக்கும் முன்னர் வரலாம். ஆனால் வினைச்சொல்லிற்கு முன் எதிர்மறை வரவில்லை என்றால் அந்த வாக்கியம் இலக்கண வழுவாகக் கருதப்படுகிறது.

நோ மேன் நோ கோ கம் 'யாரும் வரமாட்டார்கள்'
(No man no go come)
நோ மேன் நோ லைக் மி நோ ஸ்மால்
(No man no like mi no small
'யாரும் என்னைக் கொஞ்சம் கூட விரும்பவில்லை'
நோ மேன் பின் கம் (இது தவறான வாக்கியம்)
இதனையே நோ மேன் நோ பின் கம்

என்று கூறினால் சரியான வாக்கியம்; 'யாரும் வரவில்லை' என்ற பொருளைத்தரும். வினைச்சொல்லின் அடிப்படை வடிவம் மட்டுமே வழங்குகிறது. காலங்காட்டும் உருபு அதனுடன் இணையவில்லை. காலவேறுபாட்டினைத்தனித்தனி சொற்களை முன்னரும் பின்னரும் பெயர்ச் சொற்களும் வேற்றுமை உருபு இல்லாமலேயே வழங்குகின்றன.

இ பின் கோ எஸ்ட்டர்டே 'அவன் நேற்று போனான்'
i bin go yesterday
இ கோ டுடே 'அவன் இன்று போகிறான்'
i go today

சம்டைம் இ நோ கோ டுமாரோ 'அவன் நாளை ஒரு
sometime i no go tomorrow வேளை போக மாட்டான்'

இ பிக் 'அவன் பெரியவன்'
i big
இ பிக் பஸ் மி 'அவன் என்னைவிட பெரியவன்'
i big pas mi
இ பிக் பஸ் வி ஆல்'அவன் நம் எல்லோரையும்
i big pas we all விட பெரியவன்'

கெமரூன் பிஜினில் மூவிடப் பிரதிப்பெயர்கள் மிக எளிமையான அமைப்பினையும், எண்ணிக்கையை குறைவான சொற்களையும் பெற்றிருக்கின்றன. ஆரம்ப நிலையில் ஆறு சொற்களையும், தற்பொழுது ஒன்பது சொற்களையும் பெற்றுள்ளது. இதனை ஆங்கில மொழியுடன் ஒப்பிட்டு நோக்கினால் எளிமை நன்கு புலப்படும்.

	ஆங்கிலம்				கெமரூன் பிஜின்			
I sg.	I	me	my	3	அ	மி	மா	3
II sg.	you	you	your	2	யு	யு	யு	1
III M.sg.	he	him	his	3	இ	கு/அம்	கு	1/2
F.sg.	she	her	her	1	இ	கு/அம்	கு	1/2
Neu.sg.	it	it	its	2	இ	கு/அம்	கு	1/2
I Pl.	we	us	our	3	வி	வி	வி	1
I.Pl.	(you	you	your	2)	வுனா	வுனா	வுனா	1
III Pl.	they	them	their	3)	தெம்	தெ/அம்	தெம்	1/2
				16/18				(9)

ஆங்கிலத்தில் 16/18 சொற்கள் அல்லது வடிவங்கள் உள்ளன என்பதுகுறிப்பிடத்தக்கது. மேலும் பெயர்ச்சொற்களுக்கு முன் வரும் இடைச்சொற்களும் எண்ணிக்கையில் குறைவே. ஒரே சொல் பலபொருளில் வழங்கி இக்குறையை ஈடுசெய்கிறது. வினைச் சொல் பல வாக்கியங்களில் வினை அடையாகவும், பெயரடைச்

சொல்லாகவும் வழங்கும். சொற்களின் மொத்த எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில், பிஜின் குறைந்த சொற்களைக் கொண்டு, எண்ணிலடங்கா பொருள்களைக் குறிக்கும்படி பயன்பட்டு வருகிறது. 'புக்' என்ற சொல் 'புத்தகம்', 'எழுது', எழுத்து', 'கடிதம்,' கல்வி' என்று 5 பொருள்களை இடத்திற்கு ஏற்றவாறு குறிக்கிறது. பல பொருள் குறித்த ஒரு சொல் வழக்கானது, ஆரம்பத்தில் மிகச் சிக்கலானதாகத் தோன்றினாலும், கெமரூன், ஒரு பேச்சு மொழியானதால், அது வழங்கும் சூழலில் உரிய பொருளை மிக எளிதில் உணர்த்தும் திறனைப் பெற்றுள்ளது. மேலும் ஒரே சொல்லை இரட்டித்து வழங்கும் உத்தியால் பயன்பாட்டின் பெருக்கம் ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக 'sun' என்ற சொல் san என்ற வடிவில் san san என வழங்கி மணலைக் குறிக்கிறது.

wash — wɔs ; wɔs wɔs = wasp 'குளவி'
bend bEn ; bEn bEn = crooked 'கெட்ட'

தொடர் நிகழ்ச்சியைக் குறிக்கவும் இரட்டிப்பு உத்தி உதவுகிறது.

பிகின்சிரை 'குழந்தை அழுகிறது'
பிசின் தி பசா சொ கிரை கிரை-குழந்தை எப்பொழுதும் அழுது கொண்டேயிருக்கிறது

மேலும் மேலும் புதுப்புதுச் சொற்களைக்கடன் வாங்காமல் முதலில் கடன் பெற்ற சொற்களையே மாற்றியமைத்து 'அமைப்பு எளிமை' என்ற உத்தி மூலம் புதுக்கருத்துக்களைத் தோற்று வீக்கின்றது.

horse = hɔs குதிரை
man hɔs = stallion ஆண்குதிரை
wuman hɔs = mare பெண் குதிரை
man pikin hɔs = foal (male) குதிரைகுட்டி (ஆண்)
wuman pikin hɔs filly குதிரைகுட்டி (பெண்)
hand = han கை
man han = (right hand) வலது கை

wuman han = (left hand) இடது கை
come = kam 'வா'
i di kam 'அவன் வருகிறான்'
i bin kam 'அவன் வந்தான்'
i bin di kan 'அவன் வந்துகொண்டிருந்தான்'
i dɔng kan 'அவன் இப்பொழுதுதான் வந்தான்
i bin dɔng di kam 'அவன் வந்து கொண்டிருந்திருக்கிறான்'

கெமரூன் பிஜின் எளிமை அமைப்புடையதால் அதனை எளிதில் கற்க முடியும். பல சூழ்நிலைகளிலும் நன்கு பயன் படுகிறது. அதனை முழுமையாக அறியாதோர் குறை கூறின போதிலும், இன்றும் அது சிறந்த ஒரு பேச்சு வழக்காக இருந்து வருகின்றது.

பிஜின் நிலை ஆங்கிலத்தை எந்த மொழிக்குடும்பத்துடனும் வகைப்படுத்த முடியாது. சொற்பட்டியல்தான் ஆங்கிலமேயன்றி சொல்லாக்கம் (Morphology) ஆங்கிலமல்ல; ஆதலால் எந்த மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்று வகைப்படுத்துவது எளிதல்ல. மொழியியலுக்கும் புறம்பாக, சமூக மற்றும் உளவியல் அடிப்படையில் பிஜின் மொழிகள் எவ்வாறு மதிப்பீடு செய்யப்படுகின்றன என்பதை அறிய வேண்டும். மொழிப்பயன் பாடு, சமுதாயத்தில் ஓர் இணைப்பானாகச் செயல்படுகிறது ஆங்கில மொழி பேசுவோரும், கிரியோல் மொழி பேசுவோரும் தொடர்பு கொள்ளும் பொழுது ஏற்படும் பிணைப்பு, நெருக்கம் கருத்துப்பரிமாற்றத்தின் அளவு ஆகியன கலாச்சாரம், பண்பாடு, ஒரு புதிய மொழியினைக் கற்கத் தூண்டும் பண்பு, அதனால் வளரும் நன்மைகள் ஆகியன அடிப்படையாக அமைகிறது.

வணிகத் தொடர்பினால் உருவான புதிய மொழிகள் நூறு ஆண்டுகட்குள் எவ்வாறு தோன்றி, வளர்ந்து, பல தொடர்ந்து வளரவும் சில வழக்கொழிந்து மறைந்தும் போயின

பெ. – பெயர், தொ. – தொடர், வி. – வினை
செ. பொ. - செயப்படு பொருள்

என்பதை மொழியியலார் கண்கூடாகக் காணமுடிகிறது. பிஜின் கிரியோல் மொழிகளின் தோற்றம், அமைப்பு, வளர்ச்சி ஆகியன, மொழியியல் மாணவர்கட்கு மிகப்பரந்த ஆய்வுக்களமாக அமையும் என்பதில் வியப்பில்லை.

துணை நூல்கள்

Robrt A. Hall, JR. 1966, **Pidgin and Creole Languages** pub. Cornell University, U.S.A.

Loroto Todd, 1984, **Modern Englishes: Pidgin and Creoles.** Pub. Basil Blachwell in Association with Andre Dentsch.

De Eamp D. 1971 "Introduction to the study of Pidgin and Creole languages" in **Pidginization and Creolizatin** Ed. by Dell Hymes. PP. 349—370

சீனிவாசவர்மா, கோ. 1980 இருமொழியம் (பக். 5—11) அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

‡ அமைப்பு மொழியியலும் மாற்றிலக்கணமும்: முறையியல் ஒப்பாய்வு

கி. அரங்கன்
தஞ்சாவூர்

இருபதாம் நூற்றாண்டில் மிக வேகமாக வளரும் அறிவியல் துறைகளுள் மொழியியலும் ஒன்றாகும். மொழியை அறிவியல் முறைகளுக்கு உட்பட்டு அணுகுவது மொழியியல் என்பது எல்லோருக்கும் தெரிந்த வரையறை. மொழியியலில் பல்வேறு சிந்தனைகளும் பல்வேறு அணுகுமுறைகளும் வளர்ந்து வந்துள்ளன. இருப்பினும் இவை அனைத்தும் அறிவியல் அணுகுமுறைகளின் பொதுமையைத் தம்மகத்தே கொண்டுள்ளன இங்கு நான் மாற்றிலக்கணத்தை மையப்படுத்தினாலும் வரலாற்று நோக்கில் பார்க்கும்போது அமைப்பு மொழியியலோடு ஒப்பிடுவது நமக்குப் பயனுள்ள அணுகு முறையாக அமையும்.

கால ஓட்டத்தில் மொழியில் ஏற்பட்ட மாற்றங்களை மட்டும் விவரிப்பது மொழியியல் என்ற நிலையை மாற்றிய பெருமை சசூரைச் சார்ந்தது. மொழியின் மாற்றங்களைப் புரிந்துகொள்ள பல்வேறு காலகட்டங்களின் மொழியின் அமைப்பை நாம் தெரிந்திருக்க வேண்டும். ஆகையால்

‡ இக்கட்டுரை முதலில் பாண்டிச்சேரியில் இயங்கும் மொழியியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம் நடத்திய சிறப்புக் கருத்தரங்கில் படிக்கப்பட்டது. விவாதத்தில் பங்கு பெற்ற நண்பர்களுக்கு நன்றி. பின்னர் இது தமிழ்ப் பல்கலைக் கழக ஆசிரியர் பேரவை சார்பாக பண்பாட்டு ஆய்வரங்கத்திலும் படிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

மொழியியல் மொழியின் அமைப்பை முதலில் விவரிக்க வேண்டும் என்ற கருத்து மொழியியலை ஒரு அறிவியலாக்கும் முயற்சியின் முதல்படி. இதற்கு அடித்தளம் இட்டவர் சசூர் என்ற மொழியியல் அறிஞர். ஒரு காலகட்டத்தின் மொழியின் அமைப்பை விவரிக்க அந்த மொழியின் வரலாற்று அடிப்படையிலான தரவுகள் தேவையில்லை.[1] சான்றாக இருபதாம் நூற்றாண்டின் தமிழ் மொழியின் அமைப்பை விவரிக்க வேண்டுமானால் பத்தொன்பதாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளின் இலக்கியங்களிலிருந்து தரவுகளை நாம் பயன்படுத்த வேண்டியதில்லை. ஒரு மொழியின் வரலாற்றை அறிந்துகொள்ள வேண்டுமென்றால் பல்வேறு காலகட்டங்களின் மொழி அமைப்பை நாம் முதலில் அறிந்திருக்க வேண்டும். ஆகையால் மொழியியல் அமைப்பை விவரிப்பது என்றால் என்ன? அதை விவரிக்க எத்தகைய தரவுகள் பரிசீலிக்கப் படுகின்றன? எவ்வித அணுகுமுறைகள் மொழி அமைப்பை விவரிக்க மேற்கொள்ளப்படுகின்றன?

அமைப்பு மொழியியல்

ஆய்வின் பின்னணி

சசூர் தன்னுடைய காலத்தில் வாழ்ந்த சமூகவியல் அறிஞர் டர்க்கைம் (Durkheim 1858-1917) என்பவரால் பெரிதும் பாதிக்கப்பட்டவர். சமூக மெய்ந்நிகழ்வுகள் (Social facts) இயற்கை மெய்ந்நிகழ்வுகளைப் போன்றவை. இயற்கை மெய்ந்நிகழ்வுகளும் சமூக மெய்ந்நிகழ்வுகளும் தனிமனிதன் மேல் ஆதிக்கம் செலுத்துகின்றன. மனிதன் தான் சமூகத்தின் உறுப்பினராக இருக்கும்பொழுது இவைகளின் ஆதிக்கத்திற்கு கட்டுப்படுவதைத் தவிர வேறுவழியில்லை. இவைகளுக்குக் கட்டுப்பட்டே அவன் நடக்கிறான். இத்தகைய சமூக மெய்ந்நிகழ்வுகள் சமுதாயம் முழுமைக்கும் பொதுவானவை. இந்நிகழ்வுகள் சமூகத்தின் ஒட்டுமொத்த நனவு (Collective consciousness.) சசூர் மொழியைச் சமூக மெய்ந்நிகழ்வுகளுள் ஒன்றாகப் பார்த்தார்: சசூரின் பார்வையில் மொழி ஆய்வு என்பது பேச்சு வழக்குச் சமுதாயத்தின் (Speech community) பொதுவான மொழிக் கூறுகளோடு சம்பந்தப்பட்டது.

மொழியை முற்றிலும் வேறுபட்ட கோணத்திலும் வித்தியாசமான கோணத்திலும் பார்க்க இது சசூருக்கு உதவியது.

மொழி தனிமனிதனின் பேச்சாக வெளிப்படுகிறது. இத்தனி மனிதர்களின் பேச்சு சமூகப் பொதுமையான மொழி (Language) என்பதன் வெளிப்பாடு. சமூகத்தின் ஒட்டுமொத்தமான மொழியின் பொதுமைகளை மொழியியல் விவரிக்க வேண்டும். நாம் கவனிக்கின்ற மொழியின் வெளிப்பாடான பேச்சு (Parole) வேறுபாடு நிறைந்தது பேச்சுநிலைதான் நம்முடைய கவனத்திற்கு (Observation) கிடைப்பது. வேறுபாடுகள் நிறைந்த பேச்சு மூலம் சமூகப் பொதுமையான மொழியின் அமைப்பை மொழியியல் விவரிக்க வேண்டும். ஒவ்வொரு ஆய்வும் கருத்தியலாக்கத்தின் (Idealization) அடிப்படையில் தன்னுடைய அறிவியலை அணுகுகிறது. மொழியியலும் இதற்கு விதிவிலக்கல்ல. மொழி மாறிக்கொண்டேயிருப்பது. ஆய்வு மேற்கொள்ளப்படும் காலகட்டத்தில் மொழி மாறாமல் இருப்பதாகக் கற்பிதம் செய்யப்படுகிறது. இதுவும் கருத்தியலாக்கத்தின் பகுதி. மொழி ஆய்வை மேற்கொள்ளும் பொழுது பேச்சுக்களுக்கு இடையிலான வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. மொழி மாறாமலும் வேறுபாடின்றியும் இருப்பதாகக் கருத்தியலாக்கம் செய்யப்படுகிறது.[2] ஆனால் இது உண்மைக்கு (Reality) புறம்பானது என்பதில் ஐயமில்லை.

இக்கருத்தியலாக்கம் அறியாமையின் விளைவல்ல. ஆய்வில் மேற்கொள்ளப்பட வேண்டிய நிர்பந்தம் இது. எல்லாவித ஆய்வுகளும் இந்நிலையை மேற்கொள்ள வேண்டியவையே. ஆய்வுகளுக்கு இடையிலான வேறுபாடு என்பது உண்மைக்கும் கருத்தியலாக்கத்திற்கும் இடையில் காணப்படும் இடைவெளிதான். இதைப் பின்வருமாறு காட்டலாம்.

கருத்தியலாக்கம் ———————————————— உண்மை

ஆய்வு$_1$ ஆய்வு$_2$ ஆய்வு$_3$ ஆய்வு$_4$ ஆய்வு$_n$

எத்தகைய பொதுமைகளை ஆய்வுகள் வெளிக்கொணருகின்றன என்பதைப் பொறுத்தது கருத்தியலர்க்கத்திற்கும் உண்மைக்கும் இடையிலான இடைவெளி. பொதுமைகளின் தன்மைக்கும் இவ்விரு நிலைகளின் இடைவெளிக்கும் ஒரு தொடர்பிருக்கிறது. மொழியியலின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஆய்வுகளும் பல்வேறு இடைவெளிகளில் நிற்கின்றன.

தனிமங்களின் உறவுநிலை

சசூராலும் அவர்வழி வந்தவர்களான சபீர், புளூம்பீல்டு, யாக்கோப்ஸன், ஹேரிஸ், ஹாக்கெட் ஆகிய அறிஞர்களாலும் வளர்க்கப்பட்ட மொழி ஆய்வை அமைப்பு மொழியியல் (Structural Linguistics) என்று குறிப்பிடுவோம். மொழியின் அமைப்பை விளக்குவது என்பது மொழியின் ஒவ்வொரு நிலையிலும் அதனுடைய தனிமங்களை (elements) கண்டு பிடிப்பதும் அவற்றிற்கு இடையிலான உறவை (relation) விவரிப்பதும் ஆகும். தனிமங்களின் உறவை எப்படி விளக்குவது? சசூர் இரு கோணங்களில் இப்பிரச்சனையை விளக்கினார். தனிமங்களை வகைப்படுத்துவது அறிவியல் நடவடிக்கைகளுள் அடிப்படையான ஒன்று. இந்நடவடிக்கை மாற்றுயீடு (Substitution) மூலம் செயல்படுத்தப்படுகிறது. இம்முறை மூலம் தனிமங்களுக்கு இடையிலாகக் காணப்படும் உறவு அடுக்கு உறவு (Paradigmatic relation) என்று நாம் கூறலாம். சான்றாக

கண்ணன்			
கண்ணனை	கண்ணன்	-	ஐ
கண்ணனால்	கண்ணன்	-	ஆல்
கண்ணனோடு	கண்ணன்	-	ஒடு
கண்ணனுக்கு	கண்ணன்	-	உக்கு
கண்ணனிடம்	கண்ணன்	-	இடம்

போன்ற எடுத்துக்காட்டுக்களை எடுத்துக்கொள்வோம். **கண்ணன்** என்ற பெயர்ச்சொல்லை அடுத்து வேற்றுமையை உணர்த்தும் உருபுகள் வருகின்றன. இவை சொல்லின் அமைப்பில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வருவதால் இவைகளுக்கிடையே ஒருவித உறவு உள்ளது. இவ்வுறவு அடுக்குநிலை (Paradigmatic)

அடிப்படையில் அமைகிறது. இரண்டாவது கோணம் உறுப்பமைவு உறவு (Syntagmatic relation). தனிமங்கள் தொடர்ந்து வரும்பொழுது தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளும் உறவை உறுப்பமைவு உறவு என்று அறிவியலார் கூறுவர். இதை மேலும் இரு வகையாகப் பாகுபாடு படுத்தலாம். முதலாவது தனிமங்களின் வரிசைமுறை (ordering). இரண்டாவது தனிமங்களின் சேர்க்கைமுறை தமிழில் பெயர், பன்மை, வேற்றுமை ஆகிய உருபன்கள் உள்ளன. இவை சொல்லை உருவாக்கும் பொழுது

பெயர் + பன்மை + வேற்றுமை

என்ற வரிசைமுறையில் வருகின்றன.

பையன் + கள் + ஐ → பையன்களை

நூல் + கள் + உக்கு → நூல்களுக்கு

அவர் + இடம் → அவரிடம்

இவை தமிழில் ஏற்புடைய சொற்கள். இவ்வரிசை முறை குலையும் பொழுது இவை ஏற்புடைய சொற்கள் அல்ல.

பையன் + ஐ + கள் →‡ பையனைகள்

நூல் + உக்கு + கள் →‡ நூலுக்குகள்

தனிமங்களின் சேர்க்கை முறையும் மொழி அமைப்பில் முக்கிய இடம் பெறுகின்றது.

லதா என்னைப் பார்த்தாள்

கமலா போனாள்

இவ்வாக்கியங்களில் உள்ள சொற்களின் சேர்க்கை ஏற்புடையவை.

‡லதா என்னைப் போனாள்

‡கமலா கடையை ஓடினாள்

இவை ஏற்புடையவை அல்ல. இவ்வாக்கியங்களில் உள்ள சேர்க்கை, விதிக்கு முரணானது. மொழியின் அமைப்பை விவரிப்பது என்பது தனிமங்களின் உறவை இவ்விரு கோணங்களிலும் விவரிப்பது.

தரவுகளின் இயல்பு

அமைப்பு மொழியியலார் சேகரிக்கும் மொழித் தரவுகள் புறவயமானவை (objective). மொழி பேசுவோர் தகவலாளியாக informant) செயல்படுகிறார். அவரிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற சொற்களும் வாக்கியங்களும் தரவுகளாக அமைகின்றன. ஒலிநிலையில் அவருடைய உச்சரிப்பு தரவாக அமைகிறது. ஆகையால் சேகரிக்கப்படும் தரவுகள் புறவயமானவையாகவும் மொழியியலார் கவனத்திற்கு நேரடியாக உட்படுபவையாகவும் உள்ளன. கூற்றுகளின் (Utterances) இலக்கணத் தன்மை மொழி பேசுவோரின் ஏற்புடைமையால் (acceptability) சோதிக்கப் படுகிறது. ஏற்புடைமை புறவயக்கவனத்திற்கு உட்பட்டது. இதுவும் தரவுகளின் பகுதியாக அமைகிறது. ஆய்வுக்குப் பயன் படுத்தப்படும் மொழித் தரவுகளும் மொழி பேசுவோரின் ஏற்புடைமையும் புறவயமானவை மட்டுமல்ல; அனுபவ பூர்வமானவை.

பேச்சாகிய செயல்திறம் (Performance) ஆய்வின் கருப்பொருளாகிறது. செயல்திறத்தின்வழி நாம் மொழித் தரவுகளைத் திரட்டுகிறோம். மொழியியல் கோட்பாடு செயல் திறத்தின் மூலம் திரட்டிய மொழித்தரவுகளை வகைப் படுத்துகிறது. இவ்வகைப்படுத்துதல் மொழியின் பல்வேறு நிலைகளின் தனிமங்களைக் கண்டுபிடிக்கும் வழிமுறைகளோடு (Discovery procedures) தொடர்புடையது. மொழியியல் கோட்பாடு மொழித்தரவுகளை அடிப்படையாகக்கொண்டு தனிமங்களைக் கண்டுபிடிக்க வழிமுறைகளை வழங்குகிறது. மொழித்தரவுகளும் அவை கிடக்கும் செயல்திறமும் அனுபவத்திற்குக் கிட்டுவன. அமைப்பு மொழியியலின் கோட்பாடு ஒலியனியல் நிலையிலும் உருபனியல் நிலையிலும் உருபொலியனியல் நிலையிலும் மொழி அமைப்பை வெற்றிகரமாக விளக்கியது. தொடரியலை விளக்குப்பொழுது அமைப்பு மொழியியலின் கோட்பாடு விமர்சனத்திற்கு உள்ளாகியது. அதனுடைய நிறைகுறை வெளிவர ஆரம்பித்தது. இதனுடைய பின்னனியில் மாற்றிலக்கணம் தோன்றியது.

மாற்றிலக்கணத்தின் தோற்றம்

வாக்கியங்களுக்கு இடையிலான தொடர்பை விவரிக்க இலக்கணம் தன்னகத்தே சில மாற்று விதிகளைக் கொண்டிருக்க வேண்டுமென்பதை நோம் சோம்ஸ்கி (Noam Chomsky) 1957 இல் தன்னுடைய தொடரியல் அமைப்புகள் (Syntactic Structures) என்ற நூலில் வலியுறுத்தினார். மொழியின் தொடரியலை விளக்கத் தொடங்கி இம்முயற்சி மொழியியலில் புரட்சிகரமான கோட்பாடாகவும் மொழியியல் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகவும் அமைந்தது. மாற்றிலக்கணம் சில கூறுகளில் அமைப்பு மொழியியலோடு ஒட்டி வருகிறது. மொழியை விவரிக்கும்பொழுது அமைப்பு மொழியியல் மேற்கொள்ளும் கருத்தியலாக்கத்திற்கும் மாற்றிலக்கணம் மொழியை விளக்கும் பொழுது மேற்கொள்ளும் கருத்தியலாக்கத்திற்கும் வேறுபாடு கிடையாது. மாற்றிலக்கணமும் சசூர் உருவாக்கிய பின்னணியில் மொழியின் அமைப்பை விளக்குகிறது. மாறிக்கொண்டிருக்கும் மொழி, ஆய்வுக்கான காலகட்டத்தில் மாறாமல் இருப்பதாக இங்கும் கருத்தியலாக்கம் செய்யப்படுகிறது. அது மட்டுமன்றி வேறுபாடுகள் அற்ற மொழியின் பொதுமையை இது விளக்குகிறது.

மொழியின் கோட்பாடு ஒருபடித்தான பேச்சுச் சமுதாயத்தில் (Homogeneous speech community) கற்பிதம் செய்யப்பட்ட பேசுவோன்கேட்போனோடு தொடர்புடையது.[3] தனிமனிதர்களுக்கு இடையிலான பேச்சு வேறுபாடோ குழுக்களுக்கு இடையிலான பேச்சு வேறுபாடோ கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. பேச்சி நிகழும் சூழல்கூட கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இவைகளையெல்லாம் புறந்தள்ளிவிட்டு மொழியில். உள்ள எண்ணிலடங்கா வாக்கியங்களின் அமைப்பைப் புரிந்துகொள்ளும் பேசுவோரின் திறமையே மொழியியலின் ஒரு கால கோட்பாட்டில் (Syuchron linguistictheory) ஆய்வுப்பொருளாக அமைகிறது.[4] அமைப்பு மொழியியலும் மாற்றிலக்கணமும் நாம் மேலே சுட்டிய கூறுகளில் ஒன்றுபடுகின்றன. இனி இவை வேறுபடும் கூறுகளை ஆராய்வோம்.

தரவுகளின் இயல்பு

அமைப்பு மொழியியல் மொழிபேசுவோரின் கூற்றுக்களையும் ஏற்புடைமையையும் தரவுகளாகக் கொள்கிறது என்று நாம் முன்பு குறிப்பிட்டோம். மாற்றிலக்கணம் மொழிபேசுவோனால் உருவாக்கப்படும் வாக்கியங்களையும் அவ்வாக்கியங்களைப் பற்றிய உள்ளுணர்வையும் (Intuition) தரவுகளாகக் கொள்கிறது நாம் வாக்கியங்களை உருவாக்கும் பொழுது அவ்வாக்கியங்களின் அமைப்பைப் பற்றிய உள்ளுணர்வு நம்மிடம் உள்ளது. சான்றாக,

கண்ணன் சீதையைக் காதலிக்கிறான்
கமலா கார்த்திக்கை வெறுக்கிறாள்
ராதா நாவல் படிக்கிறாள்

போன்ற வாக்கியங்களை எடுத்துக் கொள்வோம் இவ்வாக்கியங்கள் அமைப்பில் ஒரு பொதுவான தன்மையைக் கொண்டுள்ளவை என்பதை நாம் உணர்கிறோம். இதுபோன்றே

பழைய ஆசிரியர் மன்றம்
புதிய மாணவர் இல்லம்

போன்ற தொடர்கள் கவர்பொருள் (ambiguous) உணர்த்துவன என்பதை உணர்கிறோம். ஆங்கில மொழியை அறிந்தோர்

It is obvious that you are intelligent
that you are intelligent is obvious

இவ்விரு வாக்கியங்களும் புறஅமைப்பில் வேறுபட்டிருப்பினும் இன்னொரு நிலையில் தொடர்புடையன என்பதை உணர்கிறார்கள். புற அமைப்பில் ஒன்றாகக் காணப்படும் வாக்கியங்கள் இன்னொரு நிலையில் வெவ்வேறானவை என்பதையும் நாம் கீழே கொடுக்கப்பட்டுள்ள சான்றுகள் மூலம் உணரலாம்.

John is easy to please
John is eager to please

வாக்கியங்கள் மட்டுமன்றி வாக்கியங்களைப் பற்றிய உள்ளுணர்வும் தரவாக அமைகிறது. அமைப்பு மொழியியலில் வாக்கியங்களைப் பற்றிய ஏற்புடைமை தரவாக அமைய

மாற்றிலக்கணத்தில் வாக்கிய அமைப்புப் பற்றிய உள்ளுணர்வு தரவாக அமைகிறது.

மாற்றிலக்கணம் அனுமதிக்கும் உள்ளுணர்வு உளவியலில் கருதப்படும் உள்முகத் தேடலாக (Introspection) இருக்கும். உள்முகத் தேடல்வழி சேகரிக்கப்படும் தரவு புறவயமானதா என்பது அடிப்படையான கேள்வி. புறவயமாகக் கவனிக்கக் கூடிய ஏற்புடைமையை ஏற்பதிலும் பிரச்சனை இல்லாமல் இல்லை. வாக்கியங்கள் இலக்கணமானவையா வழுவானவையா என்பதை ஏற்புடைமை வழி கண்டறிவதில் சில சிக்கல்கள் உள்ளன. ஏற்புடைமை என்பது புறவயமாகக் கண்டறியக்கூடிய புறநடத்தைக் கூறு என்பதில் எவ்வித வாதமும் இல்லை. ஏற்புடைமை என்பது நம்பிக்கையால் சில நேரங்களில் கட்டுப் படுத்தப்படுகிறது. இதனைப் பின்வரும் சான்றால் நன்கு விளக்கலாம்.

ஹிட்லர் ஒரு ஜனநாயகவாதி
ஸ்டாலின் ஒரு சர்வாதிகாரி
முசோலின் ஒரு அகிம்சாவாதி

இவ்வாக்கியங்கள் தமிழ் பேசும் ஒருவரால் ஏற்சப்படாமல் மறுக்கப்படலாம். ஏற்புடைமையை வாக்கியத்தின் இலக்கணத் தன்மையை நிர்ணயிக்கிற கூறாக ஏற்றுக்கொண்டால் இவை வழுவான வாக்கியங்கள் என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கும். இவ்வாக்கியங்கள் ஏற்கப்படாமல் மறுக்கப்படுவதற்குரிய காரணம் வாக்கியங்களின் இலக்கணத் தன்மை அல்ல; மொழி பேசுவோரின் நம்பிக்கைக்கு மாறுபட்ட பொருளை வாக்கியங்கள் உணர்த்துவதால் இவை ஏற்கப்படாமல் மறுக்கப்படுகின்றன. ஏற்புடைமையைத் தரவாகக் கொள்ளும் பொழுது இலக்கண வாக்கியங்கள் வழுவாக்கியங்களாகக் கருதப்பட வாய்ப்புள்ளது. இதனால் மொழி அமைப்பை விவரிக்கும் இலக்கணம் இத்தகைய வாக்கியங்களைத் தரவாக்க கொள்ளாமல் போகலாம். ஆனால் மாற்றிலக்கணம் வலியுறுத்தும் உள்ளுணர்வு இவ்வாக்கியங்களைத் தரவுகளாகக் கொண்டு மொழியின் அமைப்பை விளக்கும். இங்கு மொழிபேசுவோரும் மொழியை ஆராய்வோனும் ஒருவராகி விடுகின்றனர். ஆகையால் மாற்றிலக்கணம் உள்ளுணர்வைத் தரவாகக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறது.

மொழியின் இயல்பு

மொழியின் இயல்பைப் பற்றி இவ்விரு கோட்பாட்டையும் சார்ந்த அறிஞர்கள் கொண்டுள்ள கருத்தை ஆராய்வோம். ஒவ்வொரு மொழியும் அதற்குரிய அமைப்பை உடையது. ஒரு மொழி இன்னொரு மொழியுடன் இவ்விதங்களில்தான் வேறு படும் என்று கூறிவிட முடியாது. ஆகையால் ஒரு மொழியின் அமைப்பை விவரிக்கும்பொழுது இன்னொரு மொழியின் அமைப்பை மாதிரியாகக் கொள்ளக்கூடாது என்று அமைப்பு மொழியியல் வலியுறுத்துகிறது. மொழி என்பது பழக்கங்களின் ஒழுங்குமுறை என்பார் ஹாக்கெட்.[5] பிளாக்கும் டிரேகரும் மொழி என்பது மரபுவழிப்பட்ட குரலொலிக் குறியீடுகளின் ஒழுங்குமுறை என்று வரையறுத்துள்ளார்கள்.[6] மொழிக்கு எழுதப்படுகின்றன இலக்கணம் அந்த மொழியின் இலக்கணப் பகுப்புகளையும் கூறுகளையும் கொண்டுதான் அதனுடைய அமைப்பை விவரிக்க வேண்டும். ஒவ்வொரு தலைமுறையும் முந்தைய தலைமுறையிடமிருந்து மொழியைப் பெறுகிறது மொழி சமூகத்தின் விளைபொருள்.

இருமொழிகளுக்கு இடையே ஒன்றுமைக் கூறுகள் காணப் பட்டால் அவை ஓரினத்தைச் சார்ந்த மொழிகளாக இருக்கும். ஒவ்வொரு மொழியும் அதற்குரிய அமைப்பை உடையது என்று குறிப்பிட்டிருக்கிறோம். சான்றாகத் தமிழுக்கும் கோலாமிக்கும் ஒற்றுமைக்கூறுகள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். இவை இரண்டும் திராவிட இனத்தைச் சேர்ந்த மொழிகளாதலால் ஒற்றுமைக் கூறுகள் இவற்றிடையே காணப்படுகின்றன. தமிழுக்கும் தஞ்சாவூரில் பேசப்படும் மராத்திய மொழிக்கும் ஒற்றுமைக் கூறுகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். இவற்றை விளக்குவது எப்படி? இவ்விரு மொழி பேசும் சமூகங்களுக்கும் தொடர்பு ஏற்பட்டு அதனால் ஒரு மொழியின் கூறுகள் இன்னொரு மொழிக்குச் சென்றிருக்கக் கூடிய வாய்ப்புண்டு. தஞ்சாவூரில் வாழும் மராத்தியர்கள் பேசும் மொழியில் தமிழ் மொழியின் கூறுகள் இருக்க வாய்ப்புண்டு இந்தச் சூழலில் மொழிகளுக்கு இடையிலான ஒற்றுமைக் கூறுகள்

மொழித் தொடர்பால் (Language contact) விளக்கப்பட வேண்டும்.

மாற்றிலக்கணம் மொழியை எண்ணிறந்த வாக்கியங்களைக் கொண்டது என்று வரையறுக்கிறது. இலக்கணம் என்பது விதிகளின் ஒரு ஒழுங்குமுறை. மொழியில் உள்ள எல்லா இலக்கண வாக்கியங்களையும் மாற்றிலணம் தோற்றுவிக்க வேண்டும். வழுவான வாக்கியம் எதையும் இது தோற்றுவிக்காது.7 தோற்றுவிக்கிற வாக்கியங்கள் அனைத்திற்கும் விவரமும் (Structural Description) அளிக்கப்பட வேண்டும். வாக்கியங்கள் மொழியில் எண்ணிறந்தவையாக இருப்பினும் அவற்றை உருவாக்கும் விதிகள் எண்ணிலடங்குபவை. மாற்றிலக்கணம் புற நடத்தைகளுள் ஒன்றாகிய மொழியைப் புறத்தில் விவரிக்கவில்லை, இதற்கு அடித்தளமாக உள்ள அறிதிறத்தை (competence) இது விவரிக்கிறது 8 பேசுவோரின் மொழி அறிவை இலக்கணம் விளக்க முற்படுகிறது. மொழியைப் பேசுகின்றவர்கள் புதிய புதிய சூழல்களில் புதிய புதிய வாக்கியங்களைப் புரிந்துகொள்கிறார்கள். ஆகவே மொழிக்குப் புதியனவற்றைப் படைக்கும் படைப்பாற்றல் (Creative power) இருக்கிறது. இது மொழியின் சிறப்பு அம்சம். இக்கூறு மனிதனைத் தவிர்த்த மற்றை விலங்குகள் பயன்படுத்தும் செய்திப் பரிமாற்றத்தினின்று தனித்து நிற்பது.

அமைப்பு மொழியியல் கூறுவதுபோல் மொழிகள் ஒவ்வொன்றும் வரையறுக்க இயலாத அளவிற்கு மாறுபடுவதில்லை. ஒரு மொழியின் அமைப்பை மாதிரியாகக் கொண்டு இன்னொரு மொழியை விவரிக்கக்கூடாது என்பதில் கருத்து வேறுபாடு எதுவும் இல்லை. ஆனால் அதே சமயத்தில் மொழிகள் அனைத்தும் சில கூறுகளைப் பொதுவாகக் கொண்டிருக்கின்றன என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். மொழியியல் கோட்பாடு மொழிகள் அனைத்தும் கொண்டுள்ள உலகப் பொதுமைகளை (Universals) சுட்ட வேண்டும். உலகப் பொதுவிலக்கணத்தை விவரிப்பதே மொழியியல் கோட்பாட்டின் கடமை என்று மாற்றிலக்கணம் கருதுகிறது.9 மொழிகளை ஆராயும்பொழுது நாம் இருவகைப்

பொதுமைகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும். முதல்வகை மொழிகள் அனைத்திற்கும் பொதுவானவை; இரண்டாவதுவகை குறிப்பிட்ட தனிமொழிக் குரியவை. மாற்றிலக்கணம் முதல் வகைக் கூறுகளைக் கண்டறிவதில் கவனம் செலுத்துகிறது.

மொழி ஈட்டத்தைப் (Language acquisition) நாம் இங்குக் குறிப்பிட வேண்டும். குழந்தைகள் தாங்கள் பிறந்த சமுதாயத்தின் மொழியை இயல்பாகவே பெறுகின்றன. ஐந்து வயதிற்குள் குழந்தை மொழியின் பெரும்பாலான விதிகளைக் கற்றுக்கொண்டுவிடுகிறது. தன்னைச் சுற்றியுள்ள சூழலிலிருந்து குறைபாடு உடைய தரவுகளைக்கொண்டு சிக்கலான மொழி அமைப்பு விதிகளைக் கற்றுக்கொள்கிறது. பல்வேறு மொழிகள் கற்கும் குழந்தைகளின் மொழி வளர்ச்சியை ஒப்பிடும்பொழுது சில இலக்கண நிலைகள் பொதுவாகக் காணப்படுகின்றன. இவ்வொற்றுமை தற்செயலானது அல்ல. மொழியின் பொதுக் கூறுகளைக் குழந்தைகள் ஏற்கெனவே அறிந்துள்ளன, இப்பொதுக் கூறுகளிலிருந்து தனிமொழிக் கூறுகளைத்தான் நாம் வாழும் சமூகச் சூழலில் குழந்தைகள் கற்றுக்கொள்கின்றன. மொழிகள் வரையறுக்க இயலாத விதங்களில் வேறுபடுவ தில்லை. உலகப் பொதுவிலக்கணக் கூறுகளைக் குழந்தைகள் பிறக்கும்பொழுதே அறிந்துள்ளன. வேறுமுறையில் சொன்னால் மொழிக்கும் உடலியலுக்கும் (Biclogy) தொடர்பு இருக்கிறது. மாற்றிலக்கணம் இத்தகைய ஆய்வுகளில் மொழியியலும், உளவியலும், உடலியலும் கவனம் செலுத்த வேண்டுமென்பதை வற்புறுத்தகிறது.

விவரிப்பும் விளக்கமும்

அமைப்பு மொழியியல் மொழியின் அமைப்பை விவரிக்கிறது. தகவலாளிகள் மூலம் திரட்டிய தரவுகளைக்கொண்டு மொழிக்கு இலக்கணம் உருவாக்கப்படுகிறது. தரவுகளின் மூலம் தனிமங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. நாம் முன்பு குறிப்பிட்டது போல் ஒலியனியல் நிலையை எடுத்துக்கொண்டால், ஒலியன்களை (Phonemes) கண்டுபிடிக்கிறது; உருபனியல் நிலையில் உருபன்களை (Morphemes) கண்டுபிடிக்கிறது.

மொழியியல் கோட்பாடு இத்தனிமங்களைக் கண்டுபிடிக்கும் வழிமுறைகளை (Discovery procedures) தருகிறது. மாற்றிலக்கணம் இதை மொழியியல் கோட்பாட்டின்மேல் செலுத்தும் பளுவான சுமை என்கிறது. இத்தகைய எதிர்பார்ப்பை இயற்கை அறிவியல் கோட்பாடு கூட நிறைவேற்றுவதில்லை. கண்டுபிடிக்கும் வழிமுறைகளைவிட மதிப்பீடு வழிமுறைகளை (Evaluation procedures) மொழியியல் கோட்பாடு எதிர் பார்ப்பது முறையானது.

இரண்டு இலக்கணங்கள் ஒரு குறிப்பிட்ட தரவுகளை விவரிப்பதாக வைத்துக்கொள்வோம். இவற்றில் எது சிறந்தது என்பதை மதிப்பீடு செய்வதே சிறந்தது. மரக்கிளை, மரப்பலகை, மரத்தட்டு, மரச்சாமான், ஆகிய சொற்களையும் மரம், கிளை, பலகை, தட்டு, சாமான் ஆகிய சொற்களையும் எடுத்துக்கொள்வோம். இரு இலக்கணங்களில் முதல் இலக்கணம் பின்வரும் விதிகளைக் கொண்டு சொற்களின் அமைப்பை விவரிக்கிறது.

1. ம் → க் / – க்
2. ம் → ச் / – ச்
3. ம் → த் / – த்
4. ம் → ப் / – ப்

இந்நான்கு விதிகளையும் ஒரே விதியாகச் சுருக்கக்கூடிய இன்னொரு இலக்கணமும் G_2 இருப்பதாக வைத்துக் கொள்வோம்.

1. ம் — [க், ச், த், ப்] / — [க், ச், த், ப்]

இரண்டாவது இலக்கணம் சுருக்கக் குறியீடுகள் சிலவற்றின் துணைகொண்டு இவ்விதிகளைச் சுருக்குகிறது. மற்றொரு சான்றுமூலம் இக்கருத்தை மேலும் விளக்குவோம். L_1 என்ற மொழியின் தரவுகளைப் பின்வரும் விதிகளைக்கொண்டு G_1 விளக்குவதாக வைத்துக்கொள்வோம்.

1. k → g / – g
2. c → j / – j
3. t → d / – d
4. t → d / – d
5. p → b / – b

இவ்விதிகளை G_2 ஒரே விதியாக இவற்றைப் பின்வருமாறு சுருக்க முடிகிறது என்று வைத்துக்கொள்வோம்.

1. Vl. Stop → Vd. Stop / – Vd. Stop [10]

இவ்விரு இலக்கணங்களை எவ்வாறு மதிப்பீடு செய்து ஒன்றைத் தேர்ந்தெடுப்பது? ஒன்று விதிகளின் எண்ணிக்கையை கணக்கில் கொள்வது. முதல் இலக்கணம் (G_1) நான்கு விதிகளைக் கொண்டிருக்க இரண்டாவது இலக்கணம் (G_2) ஒரே விதியில் சொற்களின் அமைப்பை விவரிக்கிறது. இரண்டாவது சான்றுககளில் (L_1) முதல் இலக்கணம் (G_1) ஐந்து விதிகளைக் கொண்டிருக்க இரண்டாவது இலக்கணம் (G_2) இவ்வைந்து விதிகளிலும் விவரிக்கப்படும் ஒலி மாற்றங்களை ஒரே விதிமூலம் விவரித்துவிடுகிறது. முதல் இலக்கணம் ஒலியன்களை விதிகளுக்குப் பயன்படுத்த இரண்டாவது இலக்கணம் ஒலியன்களின் பண்புக் கூறுகளைப் பயன்படுத்துகிறது. மேலும் இரண்டாவது இலக்கணத்தின் விதி இயல்பாக அமைந்திருக்கிறது. குரலிலா அடைப்பொலி (Voiceless stop) குரல் அடைப். பொலியாக (Voiced stop) குரல் அடைப்பொலி முன் மாறுவது இயற்கை. இதை இயல்பான முறையில் இவ்விதி விவரிக்கிறது இலக்கணத்தை மதிப்பீடு செய்யும்பொழுது இரு செய்திகள் முக்கியமானவை. ஒன்று விதிகளின் எண்ணிக்கையைக் குறைத்தல்; இரண்டு விதிகளின் இயல்பான தன்மை. இவ்விரண்டுமே மதிப்பீட்டு விதிமுறைகளின் பகுதிகளாகும் மாற்றிலக்கணம் இத்தகைய மதிப்பீட்டு முறைகளைப் பற்றி மொழியியல் கோட்பாடு ஆராய வேண்டுமென்பதை வற்புறுத்துகிறது. அமைப்பு மொழியியலும் மாற்றிலக்கணமும் மாறுபடும் இடங்களில் இதுவும் முக்கியமான ஒரு கூறாகும்.

மாற்றிலக்கணம் மொழித்தரவுகளை விவரிப்பதோடு விளக்கமும் அளிக்கவேண்டுமென்பதை வற்புறுத்துகிறது.

சான்றாகப் பின்வரும் வாக்கியங்களை எடுத்துக்கொள்வோம்.

அவர் துறைக்கு வர வேண்டும்
நீ திருமணத்திற்குப் போகக் கூடாது
அவன் தேர்வில் வெற்றி பெறலாம்

அமைப்பு மொழியியலின் இலக்கணப்படி தமிழில் வேண்டும், கூடாது போன்றவை துணை வினைகள், இவை வாக்கியத்தின் வினையை அடுத்துவரும். துணைவினைக்கு முன்பு வரும் வினை வினையெச்ச வடிவில் வரும். தமிழ் வாக்கிய அமைப்பின் விவரிப்பு இது.

தமிழில் எழுவாயும் வினையும் பால், எண், இடம் ஆகிய கூறுகளில் இயையும்.

கண்ணன் நேற்று வந்தான்
கமலா நேற்று வந்தாள்
பையன்கள் நேற்று வந்தார்கள்
கன்று நேற்று வந்தது
பசுக்கள் நேற்று வந்தன

இவற்றை மீறும் வாக்கியங்கள் வழுவானவை.

‡ கமலா நேற்று வந்தான்
‡ கண்ணன் நேற்று வந்தாள்
‡ பையன்கள் நேற்று வந்தன

தமிழைப் பொறுத்தவரைப் பெயர்கள் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்று பிரிக்கப்படுகின்றன என்றும் வினை இவற்றைக் காட்டும் விகுதிகளைப் பெற்றிருக்கும் என்றும் இலக்கணம் விவரிக்கிறது. வாக்கியத்தில் எழுவாயாகச் செயல்படும் பெயர்த்தொடருக்கும் வினையின் விகுதிக்கும் இடம், பால், எண் ஆகியவற்றைக் குறிப்பதில் ஒரு இயையு இருக்கிறது. சில வாக்கியங்கள் நாம் மேலே கூறிய செய்திக்கு முரண்படுகிறது.

அவன் வரக் கூடாது
அவள் அவனைப் பார்க்கக் கூடாது
சுக்ரீவன் வாலியை வெல்ல முடியாது
தலைவர் தொண்டர்களை அடக்க முடியாது

இத்தகைய முரணுக்கு நமக்கு விளக்கம் கிடையாது. **வேண்டு, கூடும், முடியும்** போன்ற வினைகளை வினைகளின் ஒரு துணை வகையாகக் கருதினால் இம் முரணைத் தீர்க்கலாம். மேலும் வாக்கியம் சிக்கலான அமைப்பை உடையது என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். **அவன் வர முடியாது** என்ற வாக்கியத்தின் அக அமைப்பை



இவ்வாறு காட்டலாம். S_1 என்பது ஒரு கட்டத்தில் S_0 இன் எழுவாயாகச் செயல்படுகிறது. வாக்கியம் உடன்பாடாக இருந்தால் பால், எண், இடம் காட்டும் விகுதி; எதிர்மறையாக இருக்கும்பொழுது -து விகுதி வருகிறது. உள்ளுறையும் வாக்கியம் எழுவாயாகச் செயல்படும்பொழுது விகுதி -து வரும் என்பதை இவ்விலக்கணம் விளக்குகிறது. அமைப்பு மொழியியல் தரவுகளை வகைப்படுத்தி விவரிக்கும் செயலோடு நிற்க மாற்றிலக்கணம் மொழியில் முரணாகத் தோன்றுகிற தரவுகளுக்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகிறது.

முடிவுரை

கோட்பாட்டு மொழியியல் வளர்ச்சியில் அமைப்பு மொழியியலும் மாற்றிலக்கணமும் முக்கியமாகக் குறிப்பிடக் கூடியவை. அமைப்பு மொழியியல் உளவியலில் புற நடத்தையினரின் (Behaviourists) செல்வாக்கிற்கு உள்ளானது. அறிவியல் என்ற நிலைக்கு மொழியியல் எட்டியதின் முதல்படி இது. கோட்பாட்டின் அடிப்படையில் தரவுகளைப் பிரித்து வகைப்படுத்துவது முக்கிய செயலாக இங்குக் கருதப்பட்டது. தரவும் புலனறிவுக்குக் கிட்டுவதாயும், புலனறிவால் சோதிக்கக் கூடியதாகவும் இருந்தது மற்றைய சமூக

அறிவியல்களின் தாக்கம் அமைப்பு மொழியியலில் செல்வாக்குற்றிருந்தது. தனிநபர்களின் பேச்சுகளுக்கு இடையிலான வேறுபாடுகளையோ குழுக்களுக்கு இடையிலான வேறுபாடுகளையோ ஆய்வு கவனத்தில் கொள்வதில்லை. ஆய்வினால் வெளிப்படுத்தப்படும் பொதுமைகள் பேச்சு, சமூகம் முழுமைக்கும் பொதுவானவை. ஒலியன், உருபன் போன்ற தனிமங்களின் கண்டுபிடிப்பு மொழியியல் வரலாற்றில் முக்கியமான மைல்கல். மற்ற சமூக அறிவியல்களுக்குக்கூட இக்கண்டுபிடிப்பு முன்னோடியாகவும் முன்மாதிரியாகவும் அமைந்தது. மேலும் அமைப்பு மொழியியலின் இலக்கணம் மொழியின் அமைப்பை விவரிக்கும் தன்மை கொண்டது.

இதன் தொடர்ச்சியாக வந்த மாற்றிலக்கணம்தொடரியலை விவரிக்கத் தொடங்கிய முயற்சியாக இருந்தாலும் தனிக் கோட்பாடாகவும் சிந்தனையாகவும் வளர்ந்துவிட்டது. மாற்றிலக்கணம் புறநடத்தையியலுக்கு நேர் எதிரான புலனறி உளவியலின் (Cognitive psychology)செல்வாக்கிற்கு உட்பட்டது சோம்ஸ்கி மொழியியலை கோட்பாட்டு உளவியலின் ஒரு பிரிவு என்றே குறிப்பிடுகிறார். பேசுவோனின் செயல் திறத்தை அமைப்பு மொழியியல் விவரிக்க பேசுவோனின் அறிதிறத்தை மாற்றிலக்கணம் விளக்குகிறது. பேச்சைப் புறநடத்தையாகக் கருதி அதனை அமைப்பு மொழியியல் ஆய்வுப் பொருளாக்குகிறது. மாற்றிலக்கணம் பேசுவோனின் மொழி அறிவை ஆய்வுப் பொருளாக்குகிறது உள்ளுணர்வு தரவின் வகையாகவோ பகுதியாகவோ அமைப்பு மொழியியலால் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை. ஆனால் மாற்றிலக்கணம் உள்ளுணர்வைத் தரவாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்துகிறது. அமைப்பு மொழியியல் கண்டுபிடிப்பு முறைகளில் கவனம் செலுத்த மாற்றிலக்கணம் மதிப்பீட்டு முறைகளில் கவனம் செலுத்துகிறது அமைப்பு மொழியியல் மொழியின் அமைப்பை விவரிக்க மாற்றிலக்கணம் மொழியின் அமைப்பை விளக்குகிறது மொழியியலை வரலாற்றுக் கண்கொண்டு நோக்கும்பொழுது வகைப்படுத்தி விவரிக்கும் அறிவியல் நிலையிலிருந்து விளக்க அறிவியல் நிலைக்குச் செல்வதாகத் தோன்றுகிறது.

குறிப்புகள்

1. 'The independence of synchronic linguistics is due to the notion that structure is independent of history. Saussure was not only influenced by sociology but also by economics and biology' (Piaget 1971 : 77).
2. 'Descriptive linguistics deals with the design of the language of some community at a given time, ignoring interpersonal and intergroup differences' (Hockett 1958:321).
3. 'Linguistic theory is concerned primarily with an ideal speaker-listener, in a perfectly homogeneous speech community' (Chomsky 1965:3).
4. 'If speaker can employ an ability in apprehending the structure of any sentence in the infinite set of sentences of a language without reference to information about settings and without significant variation from speaker to speaker, then that ability is the subject matter of a synchronic theory in linguistics' (Katz and Fodor 1964:484).
5. '…………complex system of habits' (Hockett 1958:137).
6. '………… system of vocal symbols' (Blooh and Traghr 1942:5).
7. '………… device that generates all of the grammatical sequences of L and none of the ungrammatical ones' (Chomsky 1957:13)
8. 'A grammar of a lnaguage purports to be a description of the ideal speaker-hearer's intrinsic competence' (Chomsky 1965:4).
9. '………… the main task of linguistic theory must be to develop an account of linguistic universals ……' (Chomsky 1965:27-28).

10. கொடுக்கப்பட்ட விதி எளிமையாக உள்ளது. ஆக்கமுறை ஒலியனியல் (Generative Phonology) இவ்விதியைப் பின் வருமாறு உருவாக்கும்.

$$\begin{Bmatrix} -\text{voc} \\ +\text{cons} \\ +\text{obs} \end{Bmatrix} \rightarrow \begin{Bmatrix} +\text{voice} \end{Bmatrix} /-] \begin{Bmatrix} -\text{voc} \\ +\text{cons} \\ +\text{obs} \\ +\text{voice} \end{Bmatrix}$$

ஒவ்வொரு விதி மூலம் மேலே குறிப்பிட்ட ஐந்து விதிகளில் விவரிக்கப்பட்ட ஒலிமாற்றங்ககளக் குறிப்பிட்டுவிடலாம்

12. வினையின் தோன்றும் பால்அறி கிளவியும்
பெயரின் தோன்றும் பால் அறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே

தொல். சொல். 11

நோக்கீடு

Bloch, B. and G.L.Trager (1965) **Outline of linguistic analysis.** Baltimore: Waverly Press.

Chomsky, N. (1957) **Syntactic Structures**. The Hague : Mouton & Co.

Chomsky, N. (1965) **Aspects of the theory of syntax.** Cambridge, Mass: MIT Press.

Hockett, C.F. (1958) **A Course in Modern Linguistics**. New York: The Macmillan Company

Katz, J. J. and J.A. Fodor (1964) **The Structure of a Semantic** theory' in (eds) J.J. Katz and J.A. Fodor. **The Structure of Language.** New Jersey, Englewood cliffs : Prentice Hall, Incy PP. 479-518. Originall.

appeared in Language, 39 : 170-210.

Piaget, J. (1971) Structuralism, London: Routledge and Kegan Paul, Translated by C. Maschler.

……… தொல்காப்பியம் சொல்லதிகாரம். சென்னை : திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், (1959).

தமிழ் இலக்கண மரபில் துணைவினைகள்

மோ. இசரயேல்
மதுரை

தமிழ் இலக்கணமரபு

தமிழ்மொழி தொன்றுதொட்டுத் தொடர்ச்சியான இலக்கண மரபினை உடையது. இலக்கிய வளம் பெற்றுள்ள மொழிகளில் நாளடைவில் இலக்கண நூற்கள் பல தோன்றுவது இயல்பே. தமிழில் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட காலத்திலிருந்தே இயற்றப்பெற்ற இலக்கண நூற்களின் செய்திகள் நயக்குக் கிடைக்கப்பெறுகின்றன. தொல் காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், முத்துவீரியம், பிரயோக விவேகம், இலக்கணவிளக்கம், இலக்கணக்கொத்து, இலக்கணச் சூறாவளி, தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், போன்ற பல இலக்கண நூற்கள் இன்று நம்மிடையே முழு அளவில் உள்ளன. இவை தவிர, தொல்காப்பியத்தின் முதனூலாகக் கருதப்படும் அகத்தியம் என்ற இலக்கண நூலின் நூற்பாக்கள் பல பிற்கால இலக்கண நூற்களின் உரைகளில் மேற்கோளாகக் காட்டப்பட்டு நமக்குக் கிடைத்துள்ளன.

சொல்வகைகளும் துணைவினைகளும்

தமிழ் மரபிலக்கண ஆசிரியர்கள் தமிழ்மொழியின சொற் களைப் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைகளாகப் பகுத்துள்ளனர். அவர்கள் வினைச்சொற்களில் முற்று, எச்சம், தெரிநிலை, குறிப்பு, ஏவல், வியங்கோள் போன்ற பாகுபாடுகளை அமைத்து விளக்கம் தந்துள்ளபோதிலும் துணைவினை என்ற வகைச் சொல்லினை அவர்கள் சுட்டிக் கூறித் தெளிவுபடுத்திக்

காட்டவில்லை. அவர்கள் சொல்நிலையிலும், தொடர்நிலையிலும் வேறுபாடு உணர்த்தும் குறைநிலையெய்திய வடிவங்களை இடைச்சொற்கள் என இடையியலில் தொகுத்துள்ளனர். இந் நிலையில் தொன்றுதொட்டே மொழிவழக்கில் இடம்பெற்றுள்ள துணைவினைகள் ஒரோ சிலவற்றை மட்டும் பெயர் சுட்டாமலே வினைச்சொற்களுடனும், பிற எல்லாவற்றையும் இடைச்சொற் களுடனும் கூறி விளக்கியிருக்கும் பான்மை உய்த்துணரத்தக்கது

இடைச்சொற்களும் துணைவினைகளும்

தொல்காப்பியர் இடைச்சொற்கள் (பெயர்வினை வழி) மருங்கிற்றோன்றும் (தொ: சொ. 15); தமக்கியல்பில, பெயரொடும் வினையொடும் நடபெற்றியலும் (தொ. சொல். 249); வேற்றுமைச்சொல்லே (தொ. சொ. 455) என்று கூறுகின்றார். நன்னூலார் "தனித்தியலின்றிப் பெயரினும் வினையினும் பின் முன் ஓரிடத்து ..... வந்தொன்றுவது இடைச்சொல்" (420) என்று கூறுகின்றார். இலக்கண விளக்கமும் (275), தொன்னூல் விளக்கமும் (130) இதே கருத்தைத்தான் வலியுறுத்துகின்றன. இலக்கண நூற்கள் மருங்கில் தோன்றும், தமக்கியல்பில, வேற்றுமைச் சொற்களாகச் செயலாற்றுவன என்று கூறுவன எல்லாம் துணைவினைகளுக்கும் ஏற்புடையன. இவ்வடிப் படையில் அவை இடைச் சொற்களாகக் கொள்ளப்பட்டிருத்தல் பொருந்துவதாகும்.

இலக்கண ஆசிரியர்கள் பல துணைவினை வடிவங்களை இடைச்சொல்லின் ஒருவகையினதாகிய அசைநிலையின்பாற் படுத்திக் காண்கின்றனர். தொல்காப்பியம் இக, இகும், சின் (தொ. சொ: 274, 275) போலும் (தொ. சொ. 278), நன்னூல் இக, ஈ (440), இகும், சின், ஒரும், போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், கின்று, நின்று (441), இலக்கணவிளக்கம் இக, ஈ, (276) இகும், சின், இட்டு, இருந்து, அன்று, ஆம், ஒரும், போலும், (277) தொன்னூல் விளக்கம் அன்று, இட்டு, இகும், இருந்து, இன்று, ஒரும், சின், போலும், போம், இக (137), சுவாமிநாதன் இக, ஈ, சின், இருந்து, இட்டு, அன்று, ஆம், போல், இகும் ஆகியவற்றையும் இடைச்சொல்லின் பாற்படும் அசைநிலைகளாகவே கொண் டுள்ளன.

துணைவினை என்ற சொல்லாட்சி முதன்முதல் பிரயோக விவேகத்தில் (விங்குப் படலம் 5) இடம் பெற்றுள்ளது. எனினும் அது அங்கு எச்ச வினையைக் குறிக்கவே பயன்பட்டுள்ளது. ஆனால் அது அப்பெயரினைப் பெற்றதும் ஓரளவு விளக்கமும் தெளிவும் பெற்றதும் கி.பி. 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் வெளி நாட்டுத் தமிழ் அறிஞர்கள் இயற்றிய இலக்கண நூற்களில்தான் என்பது இவண் குறிப்பிடத்வக்கது.

இலக்கணமரபில் இடம்பெற்றுள்ள துணைவினைகள்

இலக்கண மரபில் வேண்டும், இக, இகும், ஈ, நில், இரு, கடு, படு, ஆம், ஆக்கும், போலும், ஒரும், அன்று, கின்று போன்ற துணைவினைகள் தெளிவான வடிவில் சுட்டப்பட்டுள்ளன. மேலும் வி.பி. கிறு, கின்று, ஆநின்று, சின் போன்றவற்றினின்று சில துணைவினைகளின் அமைப்பும் வழக்கும் காண வாய்ப்பு உள்ளது.

இலக்கிய வழக்குகளும் இலக்கணமொழியும்

இலக்கண நூலார் ஒருசில துணைவினைகளை ஆங்காங்கே குறித்துள்ளனரே ஒழிய அவர்தம் இலக்கண மொழியிலும் அவர் கால இலக்கிய வழக்கிலும் ஆட்சிபெற்றுள்ள பலதுணை வினைகளைச் சுட்டிக் கூறவும் அவற்றிற்கு விளக்கம் தரவும் முற்பட்டிலர், இதற்கு அவர்கள் காலத்தில் துணைவினை பற்றிய நல்ல தெளிவு ஏற்படாமையே காரணமாகலாம். எடுத்துக் காட்டாக, வேண்டும், இகும், சின், ஈ போன்றவற்றை வினையுடன் இணைந்து வழங்குவனவாகக் கூறும் தொல்காப்பியர், அவர்தம் மொழியில் ஆட்சிபெற்றுள்ள படு, வேண்டா, வேண்டி, பெறு, கொள், கொடு, இரு, கூடா, ஆகும், பி (கேட்பிக்கும்) ஆகிய வற்றையும் சங்க இலக்கியத்தில் ஆட்சிபெற்றுள்ள ஆர், இடு, இரு, ஈ, ஐ, கூர், கொள், செல், தகு, தா, நில், படு, மரு, வா, விடு போன்றவற்றையும் எங்கும் கூறிற்றிலர்.

துணைவினையின் இயல்புகள்

இலக்கண நூற்களில் கூறப்பட்டுள்ள அன்றேல் விளக்கப் பட்டுள்ள அமைப்புகளின் அடிப்படையில் நோக்குங்கால் துணை

வினைகளின் இயல்புகள் சிலவற்றைக் காணலாம். 1. துணை வினைகள் பெரும்பாலும் குறைநிலையெய்திய வினைச்சொற்கள் 2. அவற்றின் அடிகள் ஏவலாக வழங்குவதில்லை. 3. அவை வேறு வினைகளின் பின் இணைந்து நின்று வழங்குகின்றன. 4. தாம் இணைந்து நிற்கும் வினைச்சொற்களின் பொருளில் வேறுபாடு உணர்த்துகின்றன. 5. அவை இணைந்து நிற்கும் வினையுடன் சேர்ந்து கூட்டுவினை ( ) அமைப்பை உருவாக்குகின்றன. 6. அவை கால, இடவேறுபாடு போன்ற இலக்கணக் கூறுகளை ஏற்று வருதல் உண்டு.

முழுவினையும் துணைவினையும்

முழுவினை தனித்து வழங்கும் ஆற்றல் உடையது; துணைவினை முழுவினையுடன் இணைந்து நின்று கூட்டுவினை அமைப்பில் வழங்கும். முழுவினை சொற்பொருள் உடையது துணைவினை இலக்கணப் பொருள் உணர்த்தும், அதாவது வினைவகை வேறுபாடு ( ), செயல்வகை வேறுபாடு ( ) செய்பவன் வேறுபாடு ( ) போன்றவற்றை உணர்த்தத் துணை செய்யும். முழுவினை செயல் உணர்த்தும்; துணைவினை செயலை உணர்த்துவதில்லை, ஆனால் இலக்கண வேறுபாட்டினை உணர்த்தும்.

துணைவினைகளின் பாகுபாடு

தமிழ் இலக்கண நூற்களில் கிடைக்கப்பெறும் துணை வினைகளைப் பின் வரும் முறையில் பாகுபாடு செய்து அவற்றிற்கு விளக்கம் காணலாம்.

1. வேண்டும் 2. இக, இகும், சின் (இசின்), ஈ,
3. நில் (நின்று), இரு (இருந்து), இடு (இட்டு),
4. ஆநின்று, கிறு, கின்று, 5. வி. பி. 6. படு,
7. போலும், அன்று, இன்று, ஒரும், ஆம், ஆக்கும் போம்

வேண்டும்

தொல்காப்பியர் வினையியலில்,

இதுசெயல் வேண்டும் என்னும் கிளவி
இருவயி னிலையும் பொருட் டாகும்மே
தன்பா லானும் பிறன்பா லானும் (தொ. சொ. 245)

என்று கூறுவதில் 'வேண்டும்' என்னும் வினைவகை வேறு பாட்டினை உணர்த்தும் துணைவினையைச்சுட்டிக் கூறி உள்ளார் இது விரும்புதற் பொருளில் வழங்குதலைக் காணலாம்.

எ. கா. சாத்தன் ஓதல் வேண்டும்
செய்தல் வேண்டும் (புறம், 213)
சூழ்தல் வேண்டும் (நற்.122)
ஒ. பா : தினைக்க வேண்டா (புறம்.70)

'வேண்டும்' என்னும் துணைவினை, இணைந்து வரும் 'செயல்' என்னும் வாய்பாட்டுத் தொழிற்பெயர் செய்ய/செய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்துடன் ஒத்துக்காணத் தக்கது.

பிற இலக்கண நூற்களில் இத்துணைவினை பற்றிய குறிப்பு ஒன்றும் இல்லை.

2. இக, இகும், சின் (இசின்), ஈ

இக என்பதனை முன்னிலை அசைச்சொல் எனவும், இகும், சின் ஆகியவற்றை மூவிடத்திற்கும் உரிய அசைச்சொற்கள் எனவும் இலக்கண நூற்கள் கூறுகின்றன (தொ, சொ, 274, 275; நன். 440,441 இ. வி. 276, 277 தொ. வி. 137 ; சு. நா. 56)

இக : ஆன்றிக, காண்டிக, சென்றிக (நற்,32)
இச்சான்றுகளுடன் பின்வரும் சங்க இலக்கியச்சான்றுகளையும் ஒப்பு நோக்குக சென்றீக (அகம்.124), வந்தீக (நற்.51), தணிந்தீக (கலி.16)

இச்சொற்களில் இ / என்னும் துணைவினையின் வியங்கோள் வடிவம் செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சத்துடன் இணைந்துள்ளது.

இகும்: கண்டிகும் (ஐங்.158, 194,264) - முன்னிலை
கண்டிகும் (ஐங். 121) - தன்மை
புகழ்ந்திகுதி (குறு.18) - படர்க்கை
சின் (இசின்) : பூண்டிகின் (அகம்.7) - முன்னிலை
கண்டிகின் (புறம்.22) - தன்மை

வென்றிசின் (நற்.61)
யோன்றிசின் (ஐங்.74) - படர்க்கை
அறிந்திசினோர் (குறு.17)
சென்றிசின் (நற்.394)
பெற்றிசின் (புறம்.11)

'சின்' பிறழ்பிரிப்பால் கிடைக்கப்பெற்ற வடிவமே யாகும். இவை யாவற்றிலும் இகும், சின் ஆகியன செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சத்துடன் இணைந்துள்ளமை காணத்தக்கது.

தொல்காப்பியர் எச்சவியலில்

முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே (தொ. சொ 451)

என்று கூறுவதில் சுட்டப்படும் ஈகாரம் இவண் விளக்கப் பட்ட துணைவினை இகரத்துடன் ஒப்புநோக்கத்தக்கது.

எ. டு. சென்றீ (அகம், 46), கொண்டீ (கலி.65)

நேமிநாத உரையில் (73) 'முன்னிலை முன்னர் ஈகார ஏகாரத்தின் வினைப்பகுத்துச் சொல்லும்பொழுது இடைச் சொல்லாய் நிற்கவும் பெறும்' என்று கூறி, 'சென்றீ' என ஈகார இடைச்சொல் மிக்கது என்று முடிக்கின்றது.

நன்னூல் தொல்காப்பியத்தின் 'முன்னிலை முன்னர்' என்று தொடங்கும் அதே நூற்பாவினை வினையியலில் முன்னிலை ஒருமை விகுதிகளைக் கூறும் நூற்பாவிற்கு அடுத்தாற்போல் வைத்துள்ளது. மேலும் நன்னூல் (441) இலக்கண விளக்கம் (276), சுவாமிநாதம் (56) ஆகியன ஈகாரத்தினை முன்னிலைய சைகளின் பட்டியலில் சேர்ந்துள்ளமையும் காணத்தக்கது.

ஒ. பா : ஒத்தி (புறம் 8), ஒத்தீ (புறம்.56), அறிதீ (புறம்.10)

ஈகாரம் முன்னிலைக் குறியீடாக மட்டுமன்றி, துணை வினையாகவும் மொழியில் இடம்பெற்றுள்ள மயக்கமே தொல்காப்பியர் 'முன்னிலை முன்னர்' என்னும் நூற்பாவினை எச்சவியலில் வைத்துள்ளமைக்குக் காரணமாகலாம். பின்வரும்

சான்றுகள் ஈகாரத்தின் துணைவினை வழக்கினைத் தெளிவு படுத்துகின்றன.

சென்றீ (அகம்.46), சென்றீக (அகம். 124), கேட்டீக (ஆ. கோ. 74) கரைந்தீமே (ஐங்.291), இருந்தீமோ (புறம்.319) சென்றீமோ (கலி.64), கேட்டீமின் (கலி.23), அயர்ந்அகம் (கலி.32), ஆன்றீகம் (அகம்.74), வந்தீத்தந்தார் (கலி 86).

ஈகாரமே காலப்போக்கில் இகரமாகக் குறுகியும் ஆட்சி பெற்றிருக்கலாம். எனவே, இக, இகும், இசின், ஈ ஆகியன யாவும் செயலை அன்புடன் உணர்த்தப்பயன்பட்ட துணை வினைகளாகும்.

3. நில் (நின்று), இரு (இருந்து), இடு (இட்டு)

தொல்காப்பியத்தில் இவை பற்றிய செய்தி இல்லை; எனினும்

> செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்
> அவ்வியல் திரியாது என்மனார் புலவர் (தொ. எ.240)

என்றும் நூற்பாவின் செய்தி,

வராநின்றனள் (ஐங்.397), இறவாநின்றவள் (குறள்.1157) போன்ற அமைப்புக்களுக்கு இடந்தந்து நிற்கின்றது. வீரசோழிய உரை (68) இட்டு, நின்று ஆகியவற்றையும், மூவிடத்திற்கும் பொதுவான அசைகளாகவும் நன்னூல் (441) இருந்து, இட்டு, நின்று ஆகியவற்றையும், இலக்கண விளக்கம் (68) இருந்து, இட்டு ஆகியவற்றையும், தொன்னூல் விளக்கம் (137) இருந்து, இட்டு, நின்று ஆகியவற்றையும், சுவாமிநாதம் (56) இருந்து, இட்டு ஆகியவற்றையும் கூறுகின்றமையைக் காணலாம்.

இவை செயல்வகை வேறுபாட்டினைப் புலப்படுத்தப் பயன் பட்ட துணைவினைகளாகும். பழந்தமிழில்இறப்பு இறப்பன்மை என அமைந்த இருவகைக் காலவேறுபாட்டினைக் காலப் போக்கில் பல்வகையினதாகப் பகுத்து வேறுபடுத்திக்காண இவை துணைசெய்தன எனலாம்.

பிற திராவிட மொழிகளிலும் இந்நிலையே காணமுடிகின்றது.

எ-டு.	ஓடாநின்றனன்	ஓடா - நின்றனன்
	வந்திருந்தனர்	வந்து - இருந்தனர்
	வந்திட்டான்	வந்து - இட்டான்

நில் என்பது செய்யா என்னும் வினையெச்சத்துடனும் ஏனையவை செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சத்துடன் இணைந்து நின்று வழங்குதலைக்காணலாம்.

4. ஆநின்று, கிறு, கின்று,

தொல்காப்பியர் பகுத்துக் காணாத இவ்வகையான நிகழ்கால இடைநிலைகளைப் பிற்கால இலக்கண நூலார் சுட்டியுள்ளனர். வீரசோழியம் (66, 74, 77) ஆநின்ற, நின்றான், கின்றான், கிறான் போன்றவற்றையும் நன்னூல் (143) ஆநின்று, கிறு, கின்று ஆகியவற்றையும் கூற, இலக்கண விளக்கம் (234) ஆநின்று, கின்று ஆகியவற்றிற்கு இடந்தந்து நின்கின்றது. தொன்னூல் விளக்கம்(107) ஆநின்று, கிறு, கின்று ஆகியவற்றைக் கூறுகின்றது.

ஆநின்று பிறழ்பிரிப்பால் அமைந்த இடைநிலையாகும். செய்யா நின்றான் என்பதைச் 'செய்யா' என்ற வாய்ப்பாட்டு வினையெச்சமாகவும் நில் (த் ஆன்) என்ற துணைவினையாகவும் பகுத்துக்காணலே பொருத்தமாகும். நில் என்னும் துணைவினை அடி தொடக்கத்தில் நிகழ்ச்சித் தொடர்ச்சியைக் குறித்துப் பின்னர் செயலின் தன் கால நிகழ்ச்சியைக் குறித்திருக்கலாம். செய்யாநின்றான் என்ற அமைப்பு சங்க இலக்கியத்தில் இறந்த காலத் தொடர்ச்சியைத் தான் சுட்டியது என்பது இவண் அறிதற் குரியது.

கின்று, கிறு என்பன கில் த் எனப்பிரித்தற்குரியன. தமிழ்ப் பேரகராதியின்படி 'கில்' ஆற்றல் உணர்த்தும் சொல். இது திருவாய்மொழியில் (3, 2, 6) அடிச்சொல்லாக ஆட்சி பெற்றுள்ளது. (எ. டு. கிற்பன் கில் லன்)

எ. டு.	பாடுகிறான்	பாடு - கில் - த் - ஆன்
	பாடுகிறாய்	பாடு - கில் - த் - ஆய்

இங்கெல்லாம் 'கில்' வினையைத் தற்கால நிகழ்ச்சி நிலைக்குக் கொணரும் துணைவினையாகச் செயலாற்றுகின்றது. நன்னூல் கின்று, நின்று ஆகியவற்றை அசைமொழிகளாக கொண்டிருத்தல் காண்க.

ஆநின்று, கிறு, கின்று, ஆகியவற்றைப் பகுத்துக்கண்டால் இறந்தகாலக் குறியீடு தகரம் அவற்றில் இடம்பெறுதல் தெளிவு. ஆநின்று 'செய்யா' என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத் துடனும் ஏனையவை வினையுடனும் இணைந்து நிற்றல் காண்க. சங்க இலக்கியத்தில் தா, வா போன்ற துணைவினைகள் வினை யடிகளுடன் இணைந்து அமைதல் காணலாம். எ-டு. இழிதரு (ஐங். 250) திரிதரும் (புறம். 370) காண்வர (ஐங். 518), துயல்வரு (ஐங். 72)

5. வி. பி.

தொல்காப்பியர் அம்ம கேட்பிக்கும் (தொ.சொ.276) என்ற நூற்பாவில் 'கேட்பிக்கும்' என்ற சொல்லை ஆண்டுள்ளார். இதன்கண் 'பி' என்பது பிறவினைக் குறியீடாக ஆட்சி பெற்றுள்ளது,

வீரசோழியம் (65) வி. பி. ஆகியவற்றையும் நன்னூ 138 விப்பியினையும், சுவாமிநாதம் (51) விப்பியினையும் பிறவினைக் குறியீடுகளாகச் சுட்டுகின்றன. வி. பி. ஆகியவற்றின் அமைந் துள்ள இகரம், ஈகாரம் என்ற துணைவினையின் குறுகிய வடிவமே எனக்கொள்ளுதல் இயலும். இது பிறவினை உணர்த்தும் செயற் பாட்டினை உடையது.

எ. கு. சேர்வித்தல் (பரி. 12) மறப்பித்தாய் (கலி. 50)
படர்வித்தவள் (கலி. 143) களிப்பிக்கும் (கலி. 71)
வி. பி. ஆகிய குறியீடுகள் வினையடிகளுடன் இணைந்து அமைவனவாகும்.

6. படு

தொல்காப்பியர் 'படு' என்ற துணைவினையை எங்கும் சுட்டிக் கூறிலராயினும் எழுத்தெனப்படுப (தொ. எ.1) சொல்

லெனப்படும் (தொ. சொ. 158), இடையெனப்படுப (தொ.சொ-249) போன்ற வழக்குகளில் அதனைப் பயன்படுத்தியுள்ளார். தொல்காப்பியமும் (தொ. சொ. 246), நன்னூல் (400) செயப்படு பொருளைச் செய்ததுபோலத் தொழிற்படக் கிளத்தலைத்தான் சுட்டிக் கூறுகின்றன. பிற்காலத்தின் இலக்கணக்கொத்தின் ஆசிரியர் சுவாமிநாத தேசிகர் 'செயப்பாட்டு வினையினைச் செப்புங்காலை' மரம் வெட்டப்பட்டது. செய்யப்பட்ட குன்று என்ற சான்றுகளைக் கூறி 'படுசொல்', படுபொருள்'(78) ஆகியன பற்றியும் பேசுகின்றார்.

'படு' என்னும் துணைவினை 'செய' என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத்துடன் இணைந்து அமைந்து செயப்பாட்டுப் பொருளை உணர்த்துகின்றது.

7. போலும், அன்று, இன்று, ஒரும், ஆம்

இவையாவையும் முற்றுவினைகளுடன் இணைந்து நின்று வழங்கி வெவ்வேறு இலக்கணப் பொருளை உணர்த்துகின்றன. இவற்றையும் பிற துணைவினைகளைப்போன்று அசைநிலைகள் பட்டியலில் இலக்கண நூலார் சேர்த்துள்ளனர். எனவே இவையும் துணைவினைகளாகக் கருதத்தகும் வாய்ப்பினை உடையன.

போலும் (தொ. சொ. 278), வீ. சோ. நன். 441, இ. வி 277 தொ. வி. 137, சு. நா 56)

எ.டு. மங்கலம் என்பதோ ரூருண்டு போலும்
மகிழ்ந்தினை போலும்

இவண் ஒப்பில்போலி போலும், ஐயப்பாட்டினை உணர்த்து கின்றது அன்று தொ. சொ. 282, நன். 441, இ. வி. 277 தொ. வி. 137
சு. நா. 56)

சேர்தும் அன்றே

இது உடன்பாட்டு உறுதியைப் புலப்படுத்துகின்றது.

இன்று (தொ. வி. 137)

சேர்துமின்றே

இது எதிர்மறைப் பொருள் உணர்த்துகின்றது.

ஒரும் (நன். 441, இ. வி. 277, தொ. வி. 137, சு. நா. 56)

அஞ்சுவதோரு மறனே (குறள். 366)

இது உறுதிப்பாட்டினைப் புலப்படுத்துகின்றது.

ஆம் (நன். 241, வீ. சோ. 69, இ. வி. 277, தொ. வி. 136, சு. நா. 56)

பணிபுமாம் என்னும் பெருமை (குறள் 978)

இது இயைபு-தெளிவுப் பொருளைத் தந்து நிற்கின்றது.

முடிவுரை

தமிழ் இலக்கணமரபில் துணைவினை என்ற சொல் வகையின் வெளிப்படையான விளக்கம் இடம்பெறவில்லையெனினும், அது பற்றிய குறிப்பும் புலப்பாடும் இலக்கண மரபினின்று நமக்குக் கிடைக்கின்றன. துணைவினைகள் குறைநிலையெய்திய வினைச்சொற்கள் என்பதும், அவை பெரும்பாலும் இடைச்சொற்களின் பாற்படும் அசைநிலைகளாகக் கருதப்பட்டன என்பதும், அவை பிற வினைச்சொற்களுடன் இணைந்து நடப்பன என்பதும், வினைக்கூறுகளாகிய கால இட வேறுபாடு போன்றவற்றை உணர்த்துவன என்பதும் அறியத் தக்கன.

துணை நூற்பட்டியல்

அ. இலக்கணநூற்கள்

1.	தொல்காப்பியம் சொல்லதிகாரம்,	1969	சேனாவரையர் உரை கழகப் பதிப்பு,
2.	தொல்காப்பியம் எழுத்ததிகாரம்,	1955	இளம்பூரணர் உரை கழகப்பதிப்பு,
3.	புத்தமித்திரர்,	1970	வீரசோழியம், கழக வெளியீடு
4.	குணவீரபண்டிதர்,	1964	நேமிநாதம் (உரையுடன்) கழக வெளியீடு,

5.	பவணந்திமுனிவர்		நன்னூல் (காண்டிகை உரை) கோபால கிருஷ்ணமாசசரியர் கம்பெனி, சென்னை - 5
6.	சுப்ரமணிய தீஷிதர்	1952	பிரயோக விவேகம் (உரையுடன்) வித்தியா நுபாலயந்திரசாலை
7.	வைத்தியாநதர்,	1771	இலக்கணவிளக்கம், சரசுவதிமகால் நூல். நிலையம், தஞ்சாவூர்,
8.	வீரமாமுனிவர்	1978	தொன்னூல் விளக்கம், தமிழ்ப்பதிப்பகம், சென்னை
9.	சுவாமிநாத தேசிகர்	1952	இலக்கணக் கொத்துரை வித்தியாநு பாலன யந்திரசாலை, சென்னை,
10.	சிவஞானமுனிவர்	1952	இலக்கணவிளக்கச் சூறாவளி வித்தியா நுபாலனயந்திரசாலை, சென்னை,
11.		1957	சுவாமிநாதம் அண்ணா மலைப் பல்கலைக்கழகம் அண்ணாமலைநகர்,

ஆ. பிறநூற்கள்

1.	Srinivasa Varma, G. (Edrs.)	1980	Agesthialingam S & Audiliares in Dravidian, Annamalai University, Annamalainagar
2.	Arden, A.H.,	1942	A Progressive Grammar of the Tamil Language. The Christian Literature Society

3.	Israel, M.,	1973	**The Treatment of Morphology inTolkappiyam** Madurai University, Madurai-21,
4.	இசரயேல், மோ.,	1976	**இலக்கண ஆய்வு வினைச் சொல்**, மதுரை பப்ளிஷிங்ஹவுஸ், மதுரை 1
	இசரயேல், மோ.	1977	**இடையும் உரியும்** சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை 1
6.	Lazarus, John,	1985, (1878)	**A Tamil Grammar, Pioneer Book Services,** Madras-35
7.	Manickam, V. Sp.		**A Study of Tamil verbs**, Annamalai University, Annamalainager
8.	Ramaswami Aiyar, L.V.,	1938	**The Morphology of Old Tamil verb, Anthropos, 33** pp. 747-781
9.	Subramanyam, P.S.	1971	**Dravidian Verb Morphology**, Annamalai University, Annamalainagar

தேசிகத்திரு

ஆ. கார்த்திகேயன்
தஞ்சாவூர்

சிலப்பதிகார அரங்கேற்றுகாதையில் 'தேசிகத்திரு' என்ற சொல்லாட்சி இரண்டு இடங்களிலும் 'தேசிகம்' என்ற சொல் ஓரிடத்திலும் வந்துள்ளன. அவை கீழே தரப்படுகின்றன.

''தேசிகத் திருவின் ஓசைகடை பிடித்து
தேசிகத் திருவின் ஓசை யெல்லாம்
ஆசின் றுணர்ந்த அறிவின வாகித்'' (39-32)

''பண்ணே பாணி தூக்கே முடமே
தேசிகம் என்றிவை ஆசி றுணர்ந்து'' (46, 47)

இசையாசிரியரின் அமைதியையும் தண்ணுமையோவின் அமைதியையும் கூறவந்த இளங்கோவடிகள் இவ்விருவரும் தேசகத் திருவை நுண்ணிதின் அறிந்திருந்தனர் என்று கூறுகின்றார். இவ்வரிகளுக்கு அரும்பதவுரைக்காரரும், அடியார்க்கு நல்லாரும் ஒரே விதமாக விளக்கம் தந்துள்ளனர். ''இயற்சொல், திரிசொல் திசைச்சொல், வடசொல்லென்று சொல்லப்படாநின்ற சொற்கள் இசைபூணும் படியைக் கடைப்பிடித்தென்றவாறு'' என்பது அரும்பதவுரைக்காரர் விளக்கம் (பக்கம் 62). 'தேசிகத்திருவின் ஓசை கடைப்பிடித்தென்றது-இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என்று சொல்லப்பட்ட சொற்கள் இசை பூணும் படியைக் கடைப்பிடித்தறிந்தென்றவாறு'' என்பது அடியார்க்கு நல்லார் விளக்கம் (பக்.107). அதாவது தேசிகத்திரு' என்ற சொல்லுக்கு இருவருமே 'இயற்சொல், திரிசொல், திசைச் சொல் வடசொல்' என்று பொருள் கொண்டுள்ளனர். ஆனால் அடியார்க்கு நல்லார் பொழிப்புரையில், ''தேசாந்திரங்களிற்

பாடைகளையும் அறிந்து அந்தப் பாடைகள் இசைபூணும் படியையும் அறிந்து" (பக்.99) என்று கூறுகிறார். தேசாந்திரம் என்ற சொல்லுக்கு அயல்நாடு என்று பொருள் கொண்டால் தேசாந்திர பாடைகள் என்பது அயல்நாட்டு மொழிகளைக் குறிக்கின்றது. இவ்விடத்தில் தேசிகத்திரு என்பது அயல்நாட்டு மொழிகளைக் குறிக்கின்றது. பிங்கல நிகண்டு (3677) 'தேசிங்கம்' என்ற சொல்லுக்கு 'அவ்வந்நாட்டுச்சொல்' என்று பொருள் தந்து 'திசைச்சொல்' என்ற பொருளையும் தந்துள்ளது. வடமலை நிகண்டு(005), மற்றும் நாமதீப நிகண்டு (656)ஆகிய இரண்டுமே தேசிகம் என்ற சொல்லுக்குத் திசைச்சொல் என்றே பொருள் கொண்டுள்ளது. நிகண்டுகள் தேசிகம் என்ற சொல் அழகு, பொன், காந்தி, (ஒளி) கூத்து என்ற பொருள்களிலும் பயன் படுத்தப்படுவதைக் குறிப்பிட்டுள்ளன. அவற்றைப்பற்றி நாம் இங்கு கருதவில்லை.

இவற்றைப் பின்பற்றி பொ. வெ. சோமசுந்தரனார் இதே வரிகளுக்குக் கீழ்க்கண்டவாறு பொருள் தருகிறார். "நந் தாய் மொழியாகிய செந்தமிழின் செல்வங்களாகின்ற இயற்சொல் திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நான்கு வகைப் பட்ட சொற்களினும் செந்தமிழோசையே நிகழ்வதைக் கடைப் படியாகக் கொண்டு" என்று ஓரிடத்திலும், 'தேசிகத்திரு நாட்டு மொழியாகிய செல்வம். அதன் ஓசை கடைப்பிடித்தலாவது, வடமொழி முதலிய வேற்றுமொழி வந்து விரவுங்கால் அவற்றை தமிழோசைப்படுத்து இசைத்தலை உறுதியாகக் கடைப்பிடித் தொழுகுதல்' என்று இன்னோரிடத்திலும் பொருள் தந்துள்ளார் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள தமிழ்ப் பேரகராதி 'அயல்நாட்டுச் சொல்' என்றும், அவ்வந்நாட்டுச்சொல் என்றும் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்றும், மூன்றுவித பொருள்களையும் தந்துள்ளது. இந்நிலையில் இளங்கோவடிகள் எவ்வகைச் சொற்களைக்குறிக்க 'தேசிகத்திரு' என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தினார் என்று அறியவேண்டி யிருக்கிறது.

செய்யுளீட்டச் சொற்கள்

தொல்காப்பியம் எச்சவியலில் (சூ. 1) செய்யுளீட்டச் சொற்கள் என்று சொற்களை நான்கு வகையாகப் பாகுபடுத்தி

யுள்ளார். அவை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்பனவாகும். இவற்றுள் இயற்சொல் என்பது செந்தமிழ்நாட்டு வழக்கொடு பொருந்தித் தன்னுடைய பொருள் வழுவாமல் இசைப்பதாகும். திரிசொல்லாவது ஒரு பொருள் குறித்தபலசொல், பலபொருள் குறித்த ஒருசொல் என்ற இரண்டு வகையை உடையது ஆகும். செந்தமிழ் நாட்டைச் சார்ந்த பன்னிரண்டு நிலப்பகுதியிலும் தத்தம் குறிப்பினை உடையது திசைச்சொல் என்பது தொல்காப்பியர் கருத்து. வடசொல்லாவது வடமொழிக்கு உரிய (சிறப்பு) எழுத்துக்களைத் தவிர்த்த எழுத்துக்களால் ஆன வடசொல் என்றும் (வடவெழுத்து) சிதைந்தன வந்தாலும் பொருந்துவனவற்றை ஏற்றுக் கொள்ளலாம் என்றும் விளக்கியுள்ளார். இதுபற்றி ஆய்வு செய்துள்ள சண்முகம் (1984, பக். 64-113) அவர்கள் 'இயற்சொல் என்பது எல்லா வட்டார மக்களும் உணரும்படியான நிலைமொழி வழக்கு என்றும் திசைச்சொல் என்பது நிலைமொழியின் வேறுபட்ட கிளை மொழிகளே என்றும் விளக்கியுள்ளார். இவற்றில் வடசொல் தவிர ஏனைய மூன்று வகையான சொற்களும் தமிழ்மொழிக்கே யுரியன. வடசொல் மட்டுமே தமிழ்மொழிக்குப் புதியது.

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய சொற்களைக் குறிக்க 'தேசிகத்திரு' என்ற சொல்லை இளங்கோவடிகள் ஏன் பயன்படுத்தினார் " 'செய்யுளீட்டச் சொல்' என்ற கலைச்சொல்லை ஏன் பயன்படுத்தவில்லை? இளங்கோவடிகளுக்கு இக்கலைச்சொல் தெரியாமற் போய்விட்டதா? அல்லது 'தேசிகத்திரு' என்ற சொல்லைப் புதிய பொருளில் பயன்படுத்தினாரா? இசையாசிரியனுக்கும் தண்ணுமையோனுக்கும் தாய்மொழிச் சொற்களாகிய இயற்சொல் திரிசொல், திசைச்சொல் ஆகியவற்றில் புணர்ப்புண்ட இசை வேறுபாடுகளை எல்லாம் அறிந்திருக்க வாய்ப்புண்டு. வேண்டுமானால் வட சொற்களில் புணர்ப்புண்ட இசை வேறுபாடுகளை அறிந்திருக்க வாய்ப்பில்லை. வடமொழிச் சொற்களின் உச்சரிப்பும் பிரச்சினைக்குரியதாக இருந்திருக்கும். எனவே, 'தேசிகத்திரு' என்ற சொற்பிரயோகம் நான்கு

வகையான சொற்களைக் குறிப்பதாகக் கொள்வது பொருத்த மில்லை. நன்னூற் புலவன் 'தமிழ் முழுது அறிந்த தன்மையன் ஆகி இருத்தலால் அவனுக்குத் தேசிகத்திரு தெரிந்திருக்கலாம். அதனால்தான் நன்னூற் புலவன் அமைதி வறும் இடத்தில் தேசிகத்திருவைப்பற்றிக் குறிப்பிடவில்லை. உரைக்காரர் களுக்குத் தொல்காப்பியரின் சொல்வகைப்பாடு தெரிந்திருக் கிறது. அடியார்க்கு நல்லார் திசைச்சொற்களைப்பற்றி ஆங்காங்கே குறிப்பிடுகிறார். எனவே, உரைக்காரர்கள் தேசிகத்திரு என்பது இந்நால்வகைப்பட்ட சொற்களைக் குறிப்பதாகக் கொள்ள முடியாது. 'தேசிகத்திரு' 'தேசாந்திரங் களில் பாடைகள்' என்பதைக் குறிப்பதாகக் கொண்டால் அப்பொருள் எப்படி வந்தது என்பது ஆய்வுக்குரியது.

பிராகிருத மொழியில் சொல்வகைப்பாடு

பிராகிருத மொழிச் சொற்களை அம்மொழி இலக்கண ஆசிரியர்களும் புலவர்களும் நான்கு வகையாகப் பாகுபடுத்துவர். அவை 1. தத்சமம் 2. தத்பவம் 3. தேசீச்சொற்கள் 4. தாத்வாதேசம் எனப்படும். ஒருசொல் சமஸ்கிருத மொழி யிலும், பிராகிருத மொழியிலும் வடிவத்திலும் பொருளிலும் ஒத்திருக்குமாயின் அதனைத் தத்சமம் என்று கூறுவர். கர, கோமள, ஜல, சோம, போன்ற சொற்கள் தத்சமத்திற்கு உதராணங்களாகும். சமஸ்கிருத சொற்கள் ஒலி மாற்றங்கள் அடைந்து, பொருளில் மாற்றமடையாமல், பிராகிருத மொழியில் வழங்குமாயின் அவை தத்பவங்கள் என்று அழைக்கப்படும். பிய (ப்ரிய), சவ்வ (சர்வ), ஜம (யம), உண்ஹ (உஷ்ண) போன்ற சொற்கள் தத்பவங்களாகும். தாத்வாதேசங்கள் எனப்படுபவை வினைத்திரிபுகளாகும். பொல்ல, (கத) என்ற சொல்வினைத்திரிபுக்கு எடுத்துக்காட்டாகும். நான்காவதாக வருவது சேசீச் சொற்களாகும் இவை சமஸ்கிருதத்தில் இல்லாத' சொற்கள். இச்சொற்கள் பிராகிருத கிளை மொழிகளில் இருந்தும், இந்தோ ஆரிய மொழிக்குடும்பம் அல்லாத மற்ற மொழிக்குடும்பங்களில் இருந்தும் பெறப்பட்ட சொற்கள் என்று கருதுகின்றனர்.

இத்தகைய சொல்பாகுபாடு இடைக்காலத்தில்இந்தியாவில் மிகவும் புகழ்பெற்றிருந்தது. எனவேதான் தத்சம என்பதைச் சமஸ்கிருதசம, சமாசப்த, தத்துல்ய போன்ற கலைச்சொற்களால் குறிக்கின்றனர். தத்பவ என்பதற்குச் சமஸ்கிருதபவ, சமஸ்கிருத யோனி, தஜ்ஜ, விப்ரஷ்ட போன்ற கலைச் சொற்களும், தேசீச் சொற்களைத் தேசிய சொற்கள், தேசிப் பிரசித்த சொற்கள், தேசிமத சொற்கள் என்றெல்லாம் பல்வேறு கலைச்சொற்களைப் பயன்படுத்துகின்றனர். ஒரு கலைச் சொல்லுக்குப் பல்வேறு கலைச்சொற்கள் தோன்றுவது அது பரவலாகப் பயன்படுத்தப்பட்டதையே காட்டுகிறது. எனவே இச்சொல் பாகுபாடு இளங்கோவடிகளுக்குத் தெரிந்திருக்கும். 'தேசிகத்திரு' என்ற சொல்லாட்சி தேசாந்திர பாடைகள் என்ற நிலையில் வடமொழிச்சொற்களையும், தமிழ் மொழிக்கு அண்டை மொழிகளான கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் இருந்து பெறப்பட்ட சொற்களையும் குறிக்கப் பயன்படுத்தி இருக்கலாம். அதாவது தமிழில் வழங்கிய கடன் சொற்களைக்க குறிக்கப் பயன்படுத்தினார் எனலாம். சேர நாட்டில் வாழ்ந்த இளங்கோவடிகள் காலத்திலேயே வடமொழிச் சொற்கள் தமிழில் அதிகமாக கலந்துவிட்ட நிலையையும் இது காட்டுகிறது. இதனுடைய தொடர்ச்சிதான் மலையாள மொழியின் தோற்றமும் மணிப்பிரவாளத்தின் பிறப்புமாக இருக்கலாம் மலையாள மொழிக்குக் கிடைத்துள்ள முதல் இலக்கண நூலான லீலாத்திலகமும் தேசிச் சொற்களை அம்மொழிக்கு ஏற்றாற் போல் சுத்தம், பாஷாந்திரபவா பாஷாந்தரசமா என்று மூன்று வகையாகப் பாகுபடுத்தி இருக்கிறது (செ. வை. சண்முகம், 1985, 111) இதுவும் அக்காலத்தில் தேசிச்சொற்கள் குறித்த பாகுபாடு மிகவும் பிரசித்தி பெற்றிருந்ததையே காட்டுகிறது. மேலும் பிராகிருத மொழி இலக்கியங்களில் தேசீக் சொற்கள் உயர்வாகக் கருதப் பெற்றன. தேசீச் சொற்களால் யாக்கப்பட்ட கவிதை இனிமை யாக இருக்கும் என்றும் தேசீச்சொற்களால் இயற்றப்பட்ட கவிதையே படிப்பதற்குத் தகுதிவாய்ந்தது என்றும் இலக்கிய வாதிகள் கூறுவர். இவ்வழக்கைப் பின் பற்றியே இளங்கோவடிகளும் தேசியச் சொற்களைத் திரு என்று

சிறப்பித்து 'தேசிகதிரு' என்று அழைத்தாரோ என்று நினைக்க இடமிருக்கிறது.

துணை நூற்பட்டியல்

கார்த்திகேயன், ஆ. 1985 'பிராகிருத மொழிகளும் அவற்றின் இலக்கண மரபுகளும், தமிழ்க் கலை, (3.4) தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

சண்முகம், செ. வை. 1984 சொல்லிலக்கணக் கோட்பாடு, மாரியப்பாநகர், அண்ணாமலைநகர்

சண்முகம், சே. வை. 1985, 'வீலாதிலகத்தின் மொழி உறவுக் கோட்பாடு' தமிழ்க்கலை (3,4) தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

1985 சிலப்பதிகார மூலமும் அரும் பதவுரையும் அடியார்க்கு நல்லாரும், தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சாவூர்

1977 சிலப்பதிகாரம் (புகார்காண்டம்) திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை – 4

1930 நாமதீப நிகண்டு தமிழ்ப்பல்கலைக் கழகம் (மறுபதிப்பு), தஞ்சாவூர்

1975 பிங்கலநிகண்டு திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை – 1

1983 வடமலை நிகண்டு டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம் திருவான்மியூர், சென்னை

தமிழ்நாட்டில் எழுத்தறிவுத் திட்டங்கள்

கு. அண்ணாதுரை
தஞ்சாவூர்

சோவியத் சோசலிச குடியரசுகள், பர்மா, கியூபா, வியட்நாம் நிகரகுவா, நான்சானியா, இத்தோப்பிய[1] போன்ற நாடுகள் எழுத்தறிவில் நூறு சதவிகித இலக்கினை ஏற்கனவே எட்டி விட்டன. சீனா, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேசம், நைஜீரியா, இந்தோனிசியா, பிரேசியல், எகிப்து, ஈரான் போன்ற நாடுகள் முழு எழுத்தறிவினைப் (Total Literacy) பெற மிகவும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றன.[2]

1991 மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் எழுத்தறிவு விகிதல் 52.11% ஆக உள்ளது. தமிழ்நாட்டின் எழுத்தறிவு நிலை 63.72 சதவிகிதமாகும். இது இந்தியாவில், மாநில அளவில் இரண்டாவது நிலை, இந்தியாவில் எழுத்தறிவு வளர்ச்சி 1981-இல் 234 மிலியனாக இருந்து, 1991-இல் 352 மிலியனாக அதிகரித்துள்ளது. அதே சமயத்தில் எழுத்தறிவு பெறாதவர்களின் எண்ணிக்கை 302 மிலியனிலிருந்து 324 மிலியனான வளர்ந்துள்ளது. இது கடந்த பத்து ஆண்டில் சொற்ப வளர்ச்சியாகக் குறைக்கப்பட்டுள்ளது கணக்கெடுப்புத் தரவுகளை ஆராயும் பொழுது எழுத்தறிவின்வளர்ச்சி 50 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. அதே சமயத்தில் எழுத்தறிவுபெறாதவர்களின் வளர்ச்சி

1. எழுத்தறிவு முனைப்பு இயக்க மாத இதழ், ஜுன் 1991-புதுதில்லி.
2. எழுத்தறிவு முனைப்பு இயக்க மாத இதழ், செப்டம்பர், 1991-புதுதில்லி.

7 சதவிகிதமாகவே உள்ளது. கடந்த சில கணக்கெடுப்புகளில் 9 வயதிற்குக் குறைந்த குழந்தைகள் எழுத்தறிவு பெறாதவர்களாக் கணக்கிடப்பட்டுள்ளனர். 1992 கணக்கெடுப்பில், 7 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை எழுத்தறிவு பெற்றவர்கள் பட்டியலில் கணக்கிட்டுள்ளனர்.[3]

இன்றையச் சூழலில், எழுத்தறிவுத் திட்டம், 7 வயது குழந்தைகள் முதல் கொடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தப் படுகிறது. 1951 மற்றும் 1971 கணக்கெடுப்புகளில் எழுத்தறிவு சதவிகிதம், 5 வயது முதல் உள்ளடக்கி கணக்கிடப்பட்டு உள்ளது. 1961 மற்றும் 1991 கணக்கெடுப்பில் 5 வயது முதல் எழுத்தறிவுத் திட்டம் கணக்கிடப்பட்டால் 1981-இல் எழுத்தறிவு பெற்றவர்கள் 41.42% ஆகியிருப்பார்கள். இதில் ஆண்கள் 53.45%, பெண்கள் 28.46% எழுத்தறிவின் வளர்ச்சி விகிதம் 1981-91 இல் 50% ஆக உயர்ந்துள்ளது. 7 வயது முதல் உள்ள மக்கள் தொகையில் எழுத்தறிவு உயர்வு 1981-91இல் 9.55% கடந்த பத்தாண்டு கணக்கெடுப்புகளை நுண்மையாக ஒப்பிட இயலவில்லை. மேலும் ஓரளவு ஒப்பிடுகையில், எழுத்தறிவு நிலை இந்தியாவில் ஒவ்வொரு பத்தாண்டிலும் உயந்துள்ளது என்பது தெளிவாகிறது. அதிலும் முந்தைய பத்து ஆண்டுகளை விட அடுத்த பத்தாண்டுகளில் உயர்வு இருப்பது தெரிகிறது. 1981-91ல் எழுத்தறிவு உயர்வு 8.55% உள்ளது. 1971-81ஐ காட்டிலும் இது கூடுதலாக இருக்கிறது. (6.97%). 1961-இல் எழுத்தறிவு உயர்வு 6.14%. கடந்த பத்து ஆண்டுகளில் 118.13 மிலியன் நபர்கள் எழுத்தறிவு பெற்றார்கள். அதே சமயத்தில், 21.10 மிலியன் நபர்கள் எழுத்தறிவு பெறாதவர்களாக இருக்கிறார்கள். எழுத் தறிவு பெறாதவர்களில் 5.79 மிலியன் ஆண்கள் 16.31 மிலியன் பெண்கள் ஆவர்.[4]

இந்தியாவில், எழுத்தறிவில் முதன்மை மாநிலமாகத் திகழ்வது கேரளாதான். இதன் எழுத்தறிவு விகிதம் 91.%

3. எழுத்தறிவு முனைப்பு இயக்க மாத இதழ் செப்டம்பர்' 1991–புதுதில்லி.
4. எழுத்தறிவு முனைப்பு இயக்க மாத இதழ் செப்டம்பர், 1991, புதுதில்லி.

எழுத்தறிவு நிலையில் கடைசியாக இருப்பது பீகார் மாநிலம் இதன் எழுத்தறிவு நிலை 38.54% ஆந்திரப்பிரதேசம், அருணாசல பிரதேசம், பீகார், மத்திய பிரதேசம், மேகாலயா, ஒரிஸா, ராஜஸ்தான் மற்றும் உத்தரப்பிரதேச மாநிலங்கள் எல்லாம் தேசிய எழுத்தறிவுச் சராசரிக்கும் கீழாக உள்ளன.

கேரளம் மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்கள் நூறு சதவிகித எழுத்தறிவு நிலையினை அடைந்ததைத் தொடர்ந்து, தமிழகத்தின் முதல் கட்டமாக பசும்பொன் காமராசர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் நூறு சதவிகித எழுத்தறிவுத் திட்டம், அறிவொளித்திட்டம் என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது. இரண்டாவது கட்டமாக திருநெல்வேலி கட்டபொம்மன், மதுரை, வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டங்களில் நூறு சதவிகித எழுத்தறிவுத் திட்டங்கள் (அறிவொளித் திட்டம்) மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எழுத்தறிவை வரலாற்று அடிப்படையில் அணுகினால் ஒவ்வொரு காலத்திலும் அதன் தேவை வெவ்வேறு விதமாக இருந்து வந்திருக்கிறது என்பது தெரியவருகிறது. அதனால், எழுத்தறிவு பிரச்சனையும் அல்ல; விடிவும் அல்ல என்று மேலை நாடுகள் கருதுகின்றன. அதே சமயத்தில் வளர்ச்சிப் பாதையில் பார்த்தால், மூன்றாம் தர நாடுகள், எழுத்தறிவு வளர்ச்சிக்கும் பொருளாதாரத்திற்கும் தொடர்பு இருப்பதைச் சுட்டிக்காட்டு கின்றன. எழுத்தறிவு சமுதாய வளர்ச்சிக்கே என்பதை யுனஸ் கோவும் ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே எழுத்தறிவுயின்மைக்கும் ஏழ்மைக்கும் தொடர்பு இருக்கிறது; எழுத்தறிவுயின்மைக்கும் தேக்கநிலைக்கும் தொடர்பு இருக்கிறது; வளர்கின்ற நாடுகளில் எழுத்தறிவுயின்மை, சமுதாயப் பொருளாதார வளர்ச்சியினைப் பாதிக்கிறது; எழுத்தறிவுயின்மை அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியினைப் புறக்கணிக்கிறது: என்பதனை யுனஸ்கோ நிறுவனம் வலியுறுத்திக் கூறிவருகிறது. மூன்றாம்தர நாடுகள் எழுத்தறிவை 'உலக வளர்ச்சி' யாகக் கருதுகிறது. இந்தியாவில் எழுத்திறிவு தேசிய எழுத்தறிவுத் தன்முனைப்பு இயக்கமாகக் கருதப்படுகிறது. எழுத்தறிவின் மூலமே தனிமனித வளர்ச்சிக்கு

வேண்டிய அறிவு கிடைக்கிறது. தனிமனித வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சியாகும்.

எனவே, முழு எழுத்தறிவை நோக்கி இந்தியா நடை போடுகிறது. அதற்காக மக்கள் எழுத்தறிவு இயக்கங்கள் துவக்கப் பட்டுள்ளன. கியூபா, இந்தோபியா நிகரகுவா, தான்சானியா போன்ற நாடுகளில், எழுத்தறிவு ஒரு 'முகாம் அணுகுமுறை யாகக் கையாளப்பட்டு வெற்றி பெற்றுள்ளது.

இந்தியாவில், எர்ணாகுளம் மற்றும் பாண்டிச்சேரியில் கிடைத்த அனுபவங்களும் எழுத்தறிவுக்கு 'முகாம் அணுகுமுறை' அவசியம் என்பதை உணர்த்தி உள்ளன. இம்முறையினால் பள்ளியில் குழந்தைகளின் சேர்க்கை அதிகரித்துள்ளது: குழந்தைகள் இறப்பு விகிதம் குறைந்துள்ளது; குழந்தை நலம் மற்றும் நோய் தடுப்புப் பெரிதும் பாதுகாக்கப்படுகிறது. சிறு குடும்ப நெறியைப் பின்பற்றவும் கரு வளர்ச்சி விகிதத்தை குறைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன' மேலாக, தன்னம்பிக்கை வளர்ந்து வருகிறது. 1990 அனைத் துலக எழுத்தறிவு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 'முகாம் அணுகுமுறை' யில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை. ஏற்படுத்துதல், மக்களை எழுத்தறிவுத்திட்டத்தில் ஈடுபடச் செய்தல், அடித்தளம் வரையில் செயல்முறையினை முடுக்கி விடுதல் அனைத்துலக ஒற்றுமைக் காத்தல், எழுத்தறிவு இன்மையைப் போக்குதல் போன்ற குறிக்கோள்கள் மேற் கொள்ளப்பட்டன. எனினும் இருபதாம் நூற்றாண்டு முடிவுக்குள் 'முழு எழுத்தறிவை' பெறுதலையே இம்முறை முதல் நோககமாகக் கொண்டுச் செயல்பட்டு வருகிறது. இந்தியாவில் முழு எழுத்தறிவினைப் பெறுவதற்சாக 1978-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ம் நாள் தேசிய வயதுவந்தோர் கல்வித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தில் மைய முறையே பின்பற்றப் பட்டது. முப்பது எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்கு ஓர் ஊக்குநர் என்று ஒரு மையத்தை ஏற்படுத்தி எழுத்தறிவு கொடுப்பது; இந்த முறையைப் பின் பற்றி மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம், ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம் மற்றும் தொண்டு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள்

நேரு இளைஞர் மன்றங்கள் போன்றவை அத்திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டன.

மேலும், 1986 ஆம் ஆண்டு முதல் மக்கள் செயல்முறை எழுத்தறிவுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் படித்த ஒவ்வொருவரும், எழுதப்படிக்கத் தெரியாத ஒருவருக்குக் கற்பிக்கவழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போதுஇத்திட்டத்தின் மூலம் ஒருவர் அதிகபட்சம் ஐந்து நபர்களுக்குக் கற்றுத்தர வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. மக்கள் எழுத்தறிவுத் திட்டத்தில் ஒரு நபரை எழுத்தறிவு பெற்ற நபராக்க ரூ. 50 மட்டுமே செலவிடப்படுகிறது. இது மைய முறையைக் காட்டிலும் குறைவானது என்பது தெரிய வந்துள்ளது.[5] மைய அடிப் படையிலான அணுகுமுறையில், கற்பிக்கும் ஊக்குநருக்கு மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இது ஓராண்டு காலம் நீடிக்கிறது. இம்முறையில் ஒரு நபரை எழுத்தறிவு பெற்றவராக்க ரூ. 160/- செலவிடப்படுகிறது. மக்கள் செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தில் கற்பித்தவர் தொண்டு உள்ளத்துடன் கற்பிக்கிறார். மேலும் இத்திட்டம் ஆறுமாத காலமே செயல்பட வேண்டியுள்ளது. மைய அடிப்படையிலான அணுகுமுறை மற்றும் மக்கள் செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தின் மூலமாக நடைபெற்றுத் திட்டங்கள் மூலம் பயன் பெரிதும் இருந்தபோதிலும் எந்தக் குறிப்பிட்ட பகுதியும் நூறு சதவிகித எழுத்தறிவினைப் பெற இயலவில்லை இச்சூழ்நிலையில்தான் ‘தேசிய எழுத்தறிவு முனைப்பு இயக்கம்’ 1—5—1988 அன்று ஆரம்பிக்கப்பட்டது. அதன்மூலம் குறைந்த செலவில் குறுகியக் காலத்தில் முழுமையான நூறு சதவிகித எழுத்தறிவைக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. முதல் முறை யாகப் பாரத அறிவியல் கல்விக் கழகத்திடம் இப்பொறுப்பு கொடுக்கப்பட்டது. அந்த அமைப்பின் மூலம் இந்தியாவில் 500 மாவட்டங்களில் 1990 ஆம் ஆண்டில் கலைப்பயணம் மேற்

‘5.’ எல்லோருக்கும் எழுத்தறிவு’ ‘நூறு சதவிகித எழுத்தறிவுத் திட்டம் மாநில பள்ளிசாராக் கல்விக் கருவூலம், சென்னை, அக்டோபர் 1991, வெளியீடு

கொள்ளப்பட்டது. இக்கலைப் பயணத்தின் நோக்கம் 'கல்லாமையை இல்லாமை ஆக்குவது', அதற்காக மக்களை விழிப்படையச் செய்வது, கலை நிகழ்ச்சிகள் மூலம் மக்களை ஆர்வமூட்டச் செய்வது பின்னர் எழுத்தறிவைக் கொடுப்பது ஆகும். இத்திட்டமே தமிழகத்தில் 'அறிவொளி இயக்கமாகத்' திகழ்கிறது. கேரளத்திலுள்ள எர்ணாகுளம் என்ற மாவட்டத்தில் தான் முதன் முதலில் மக்கள் எழுத்தறிவு இயக்கம் ஒன்று தோன்றி வெற்றி பெற்றது. கேரள மாநிலம் முழு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக 18 4—1991 அன்று அறிவிக்கப்பட்டது. பின்னர் 30—11—91 அன்று புதுவையில் 'முழு எழுத்தறிவு' வெற்றிவிழா கொண்டாடப்பட்டது. அவ்விழாவின், புதுவை மாநிலம் முழு எழுத்தறிவு பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1987 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ஆம் நாள் 'மக்கள் அறிவியல் இயக்கம்' அறிவியலைப்பரப்பும் பொருட்டு மேற் கொண்ட அறிவியல் கலைப் பயணம் மாபெரும் வெற்றிகண்டது. புல்லாயிரக்கணக்கில், விஞ்ஞானிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், தன் ஆர்வமுள்ள மாணவர்கள் எல்லோரும் 2500 கிலோ மீட்டர் தொலைவு நடந்து நவம்பர் திங்கள் 8ஆம் நாள் போப்பாலில் கூடினர். இந்தக் கலைப்பயணத்தின் பின்னணியில் கேரள சாஸ்திர சாகித்திய பரிசத்து முக்கிய இடம் பெறுகிறது. பாரத கல்வி அறிவியல் கலைப்பயணத்தின் வழி (Bharat Gyan Vigyan Jatha) தேசிய ஒற்றுமை மற்றும் சுயசார்புப் பெற அறிவியல் மற்றும் எழுத்தறிவை ஊட்டுவது என்று மைய நோக்கமாக்கப் பட்டது.

1990 ஆம் ஆண்டு அக்டோபர் 2 முதல் நவம்பர் 14 ஆம் நாள் வரை மேற்கொள்ளப்பட்ட 'பாரதக் கல்வி அறிவியல் கலைப்பயணம்' இந்தியாவில் 500 மாவட்டங்களில் நடத்தப் பெற்றது. இந்தக் கலைப் பயணத்தில் எழுத்தறிவின் அவசியம் பற்றி மக்களிடம் எடுத்துரைக்கப்பட்டது. நாட்டுப்புறப் பாடல்கள் மூலமும், நாடகங்கள் மூலமும் மக்களிடையே, எழுத்தறிவின் தேவை வலியுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையிலேயே, கேரளம் மற்றும் புதுவை மாநிலங்கள் 'முழு எழுத்தறிவுத் திட்டத்தில் வெற்றி பெற்றுள்ளன. இந்த

வெற்றிக்குக் காரணம்; மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விழிப் புணர்வுதான். இதுவரையில் எழுத்தறிவுத் திட்டத்திற்குக் கிடைக்காத மக்கள் ஒத்துழைப்பு இப்பொழுது கிடைத்துள்ளது.

தமிழ்நாட்டில் 'தமிழ்நாடு அறிவியல் இயக்கம்' முழு எழுத்தறிவை கொடுக்க தன் முனைப்போடு இறங்கியுள்ளது. இந்திய அரசும், தமிழக அரசும் தன்னார்வ இயக்கங்களோடு சேர்ந்துதான் முழு எழுத்தறிவைப் பெற இயலும் என்பதை உணர்ந்துள்ளன. எனவே, தமிழ்நாட்டில் முழு எழுத்தறிவை கொண்டுவர தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மற்றும் தொண்டு நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் பல்கலைக் கழகங்களுடன் இணைந்து அவை செயல்படுகின்றன. தமிழ்நாட்டில் 15 வயது முதல் 35 வயதுக்குட்பட்ட எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் இன்னும் 78 இலட்சம் நபர்கள் இருக்கிறார்கள். 1995-ம் ஆண்டிற்குள் இவர்களுக்கு எழுத்தறிவு கொடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. தொண்டர்கள் மூலம் எழுத்தறிவினைக் கொடுப்பதற்கு 'தேசீய எழுத்தறிவு முனைப்பு இயக்கம்' (National Literacy Mission) ஒரு நபருக்கு ரூ. 65/– வரை செல விட நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த செலவினத்தை 2:1 என்ற விகிதத்தில் மத்திய மாநில அரசுகள் பகிர்ந்து கொள்கின்றன.[6]

அனைத்துப் பகுதி மக்களையும் இணைத்து இதுவரை எழுத் தறிவுத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. இப்பொழுது மாவட்டத்திலுள்ள அனைத்து மக்களின் ஈடுபாட்டோடு அது நடக்கிறது. இந்தியாவில் சுமார் 50 மாவட்டங்களில் முழு எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் 'முழு எழுத்தறிவுத் திட்டம்' கன்னியாகுமரி, பசும்பொன், காமராசர், புதுக்கோட்டை, வடஆற்காடு, கட்டபொம்மன் மற்றும் மதுரை மாவட்டங்களில் செயல்படுத் தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற இத் திட்டத்திற்கு 'அறிவொளி இயக்கம்' என்று பெயர். இவ்

6. இந்து பத்திரிகை நாள் 2—11—1991
"2,000-த்திற்குள் முழு எழுத்தறிவு முடியுமா"

வியக்கத்தில் ஈடுபட்டுள்ள அறிவொளி இயக்க ஆசிரியர்களுக்கு எவ்வித ஊக்கத் தொகையும் வழங்கப்படுவதில்லை. தொண்டுள்ளம் படைத்தவர்கள் மட்டுமே இப்பொழுது பங்கு பெறுகிறார்கள். ஒவ்வொரு அறிவொளி இயக்க ஆசிரியரும் குறைந்தது பத்து கற்போர்க்கு 6 மாதங்களுக்கு எழுத்தறிவு எண்ணறிவு மற்றும் விழிப்புணர்வு பற்றி பாடம் சொல்லிக் கொடுப்பார்கள். தமிழ்நாட்டில் எழுத்தறிவின் இன்றைய நிலை 63.7%. இதில் ஆண்கள் எழுத்தறிவு நிலை 74.88% பெண்கள் எழுத்தறிவு நிலை 52.29%-இல் தமிழ்நாட்டில் எழுத்தறிவு நிலை 7% தற்போது உள்ள நிலையை ஒப்பிடுகையில் ஒரு பெரிய வளர்ச்சியாக இதைக் கருத வாய்ப்புண்டு. மேலும் 1990-இல் (அகில உலக எழுத்தறிவு ஆண்டில்) தமிழ்நாடு அறிவியல் இயக்கம், அக்டோபர் திங்கள் 2 முதல் நவம்பர் 14 ஆம் நாள் வரை நடத்திய எழுத்தறிவுக் கலைப் பயணம் மக்கள் மத்தியில் எழுத்தறிவின் தேவையை உணர்த்தியுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கச் செய்தியாகும்.

—

கூறவி வேற்றுமையின் புதைநிலை அமைப்பு - ஓர் ஆய்வு

வே. சா. அருள்ராஜ்
தஞ்சாவூர்

1. முகவுரை

எல்லா மொழிகளிலும் பெயர்ச் சொற்களுக்கும் வினைச் சொற்களுக்கும் இடையே பொருள் தொடர்பு இருப்பதைக் காணலாம். இப்பொருள் தொடர்பினைத் தமிழ் மொழியில் வேற்றுமையென அழைக்கிறோம். இப்பொருள் தொடர்பு, தமிழ் மொழியில் பெயரோடு இணைந்த ஒட்டுக்களாலும் (Suffixes) சொல்லுருபுகளாலும் (Post Positions) உணர்த்தப் படுகின்றன. பெயரோடு இணைந்த ஒட்டுக்களைக் குறிப்பாகப் பொருள் தொடர்பினை ஏற்படுத்தும் ஒட்டுக்களை வேற்றுமை உருபுகள் என்கிறோம். பெயர்களுக்குப் பிற பெயர்களோடும் வினையோடும் உள்ள தொடர்பைக் காட்டுவதே வேற்றுமையின் வேலை என்பது மலையாள மொழியின் இலக்கண ஆசிரியர் இராசராச வர்மாவின் கருத்தாகும். தொல்காப்பியர் தமிழில் எட்டு வேற்றுமைகளைக் கூறுகின்றார். இவற்றில் முதலாம் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் நீங்கலாக மற்ற ஆறு வேற்றுமைகளும் அதனதன் உருபுகளைக் கொண்டு பெயரேற்றிருப்பதைத் தொல்காப்பியச் சூத்திரம் 548-இல் கண்டுகொள்ள முடிகின்றது. முதல் வேற்றுமைக்கு உருபுகள் இல்லையென்றும் எழுவாயாகிய சொல்லின் வடிவமே முதல் வேற்றுமையாக வரும் என்றும் இலக்கண நூற்கள் எடுத்துக் கூறுகின்றன. இவ்வாறு உருபுகள் அடிப்படையிலே வேற்றுமைகள் வகைப்படுத்தப்பட்டாலும் பொருள் அடிப்படையில் வேற்றுமைகள் ஆராயப்பட வேண்டுமென்றும் தொல்காப்பியம் (சூ. 590) கூறுவதைக் காணலாம்.

'யாதனுருபு' என்னும் பதத்திற்குத் தெய்வச்சிலையாரைத் தவிர மற்ற உரையாசிரியர்கள் உரை எழுதும்போது ஒரு சொல் யாதானும் ஒரு வேற்றுமை உருபில் தோன்றினும் அச்சொல் எந்த வேற்றுமைப் பொருள்படுமோ அப்பொருளில் வேற்று மையையே கொள்ள வேண்டுமென உரை எழுதியுள்ளனர்· ஆனால் தெய்வச்சிலையாரோ 'யாதனுருபு' என்பதற்கு வேற்றுமையல்லாத உருபு எனப்பொருள் கொடுக்கின்றார். அவரது கூற்று .ஏற்றுக்கொள்வதற்கில்லை. எடுத்துக்காட்டாக

1. பாம்பு கடித்தது 2. பாம்பைக் கடித்தது
3. பாம்பும் கடித்தது 4. பாம்பே கடித்தது
5. பாம்புதான் கடித்தது

ஆகிய வாக்கியங்களில் வாக்கியம் (1)-ல் 'பாம்பு' என்னும் பெயர்ச்சொல் எழுவாயையும் வாக்கியம் (2) இல்-ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு பாம்பு என்னும் பெயர்ச் சொல்லோடு இணைத்து செயப்படுபொருள் வேற்றுமையையும் குறிப்பதைக் காணலாம். வாக்கியம் 3 முதல் 5 வரை பார்க்கும் போது -உம், -ஏ, -தான் போன்ற உருபுகள், பெயர்ச்சொல் 'பாம்பு' என்பதுடன் இணைந்தும் பொருள் நிலையில் எந்த வேறுபாட்டையும் வேற்றுமை நிலையில் எடுக்காமல் இருப்பதைக் காணமுடிகின்றது. தெய்வச்சிலையார் கூறிய கூற்றை இம் மூன்று உருபுகள் நிலையிலும் பார்த்தால் அவை வேற்றுமையை எடுக்கா நிலையையே காண்கிறோம். எனவே யாதனுருபு என்பது ஒரு வேற்றுமை உருபேயாகும் என்பது தெளிவு. எடுத்துக்காட்டாக.

6. கண்ணின் நோக்கி (நற்றிணை 23:9) இன் மூன்றாம் வேற்றுமையாகிய கருவிப் பொருளில் எடுத்தாளப் பட்டிருப் பதைக் காணமுடிகின்றது. கண்ணின் நோக்கி என்னும் வாக்கியத்தின் புதைநிலை அமைப்பைப் பொருளடிப்படையில் பார்த்தால்

7. கண்ணினால் பார்த்து என்று வரும். அதுபோன்றே கருவி வேற்றுமை உருபாகிய '-ஆன்' அதனது கருவி வேற்றுமை பொருளைத் தராமல் ஐந்தாம் வேற்றுமையாகிய இடநீக்க

வேற்றுமைப் (Ablative) பொருளிலும் ஏழாவது வேற்றுமையாகிய இடவேற்றுமை (Locative) பொருளிலும் வருவதைச் சங்க இலக்கியங்களில் காண முடிகின்றது.

8. போதல் ஒல்லாளென் நெஞ்சத் தானே
(நற்றிணை 201 : 13)
"என் நெஞ்சிலிருந்தும் விலகி ஒழிபவன் அல்லளாயிரா நின்றாள்" (இட நீக்கப்பொருள்)

9. முல்லை வேலி நல்லூரானே (புறநானூறு 144:14)
"முல்லை வேலியையுடைய நல்லூரின் கண்"
(இடப்பொருள்)

பொருளடிப்படையிலே வேற்றுமைகள் ஆராயப்படவேண்டுமென்பதற்கு மற்றுமொரு எடுத்துக்காட்டைக் காணலாம்.

10. புலி கொல் யானை

வாக்கியம் 10 இன் புதை நிலை அமைப்பை அதாவது பொருள் நிலையைக் கவனித்தால் இரண்டாம் வேற்றுமையாகிய செயப்படுபொருள் மற்றும் மூன்றாம் வேற்றுமையாகிய கருவி வேற்றுமை ஆகியவற்றில் மயங்கி வருதலை வாக்கியங்கள் 11 மற்றும் 12 இல் தெள்ளத் தெளிவாகக் காணலாம்.

11. புலியைக் கொன்ற யானை
12. புலியால் கொல்லப்பட்ட யானை

புதைநிலை வேற்றுமை அமைப்பில் கருவி வேற்றுமையின் பங்கினை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

2. கருவி வேற்றுமை

இலக்கண ஆசிரியர்கள் கருவி வேற்றுமையை ஒரு தனிப்பட்ட வேற்றுமையாகக்கொள்ளாமல் அதனை மூன்றாம் வேற்றுமையாகிய உடனிகழ்ச்சி வேற்றுமையோடு இணைத்துக் கூறியுள்ளனர். ஏன் அவ்வாறு கொண்டனர் என்பதற்குக் தெளிவான காரணம் இல்லை. தொல்காப்பியர் ஒவ்வொரு வேற்றுமைக்கும் ஒவ்வொரு உருபைக் கூறி அதன் பெயராலே அவ்வேற்றுமையை அழைப்பது உருபுகள் பல்கிப்பெருகாமல் இருக்கவே என்றாலும், ஒரு வேற்றுமைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட

உருபுகளையும் கூறுகின்றார். எடுத்துக்காட்டாக மூன்றாம் வேற்றுமைக்கு உருபாக -ஒடு என்பதனைக் கூறி பின்னர் -ஆன் உருபையும் பயன்படுத்துவதோடன்றி -ஒடுவின் மாற்று வடிவமாக ஓடுவையும் கூறுகின்றார். ஒடு உருபின் அடிப்படையில் வேற்றுமையை தொல்காப்பியர் அமைத்தாலும் உருபுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் பொருள் நிலைக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார். பொருள் நிலைக்கு முக்கியத் துவம் கொடுப்பதைத் தொல்காப்பியர் வேற்றுமை மயங்கியல் என்னும் ஒரு அதிகாரத்தையே கொடுத்திருப்பதிலிருந்து அறிந்துகொள்ள முடியும்.

நன்னூலார் மூன்றாம் வேற்றுமையின் உருபுகளாக -ஆல் -ஆன், -ஒடு மற்றும் -ஓடு ஆகியவற்றைக் கொடுத்துள்ளார். கருவி, காரணம், ஏது, நிமித்தம் ஆகிய பொருள்களில் வருவதாகவும். கூறுகின்றார். கருவி, காரணம் ஏது, நிமித்தம் என்பன வேறுபொருட் கிளவியாயும் ஒருபொருட் கிளவியாயும் வருவதால் காரண மூன்றனுள் முதற் காரணத் துணைக்காரணம் என்னுமிரண்டினையும் கருவி வேற்றுமை என்றும் ஏவுதற்கருத்தாகவும் இயற்றுதற் கருத் தாகவும் ஆகிய நிமித்த காரணமிரண்டினையும் கருத்தா வேற்றுமை என்றும் கூறுகின்றார். இரண்டாம் வேற்றுமைப் பொருளாகிய காரியத்திற்கு வேண்டும் கருவிப் பொருளைத் தருதலின் இது மூன்றாம் வேற்றுமையில் சேர்க்கப்பட்டுள்ளது எனக் கூறுகின்றார் சிவஞான முனிவர்.

3. கருவி வேற்றுமையின் வகைகள்

நன்னூலுக்கு விளக்கம் அளிக்கும்பொழுது சிவஞான முனிவர் தமது விளக்கத்தில் மூன்றுவகை கருவிகளைத் தருகின்றார். அவையாவன :

அ. அகக் கருவி எ.கா. மனத்தாவினைத்தான்

ஆ. புறக்கருவி எ.கா. வாளால் வெட்டினான்

இ. ஒற்றுமைக் கருவி எ.கா. அறிவாலறிந்தான்

கருவி வேற்றுமைப் பொருளடிப்படையில் 5 வகைகளாக வகைப் படுத்தலாம்.

அ. ஆயுதக் கருவி (Tool instrument)

ஆ. பொருள் கருவி (Material instrument)

இ. இயற்கை சக்தி கருவி (Natural Force instrument)

ஈ. ஏதுக் கருவி (Causal instrument)

உ. உடல் உறுப்புக் கருவி (Body-part instrument)

3. 1. ஆயுதக் கருவி

ஒரு செயலைச் செய்யும்போது அதற்கு உதவியாகப் பயன் படும் ஆயுதங்களை ஆயுதக் கருவி எனலாம். இது உயிரற்ற பருண்மை (Concrete) பொருளாகவே காணப்பட்டு கட்டுப் பாட்டுக்குள் அடங்கும் கருவியாகவும் விளங்கும்.

13. மாதவன் பாம்பைக் **கம்பால்** அடித்தான்
14. நம்பி பென்சிலைக் **கத்தியால்** சீவினான்
15. பார்வதி **பேனாவால்** கடிதம் எழுதினாள்

13 முதல் 15 வரையுள்ள வாக்கியங்களை எடுத்துக்கொண்டால் கம்பு கத்தி, பேனா ஆகியவை முறையே ஆயுதக் கருவியாகச் செயல்படுவதைக் காண்கிறோம்.

16. அப்பா மகனைக் கம்பால் அடித்தார் என்று கூறும் போதுகம்பு என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆயுதக் கருவியாக விளங்குகிறது. நேர்மாறாக

‡ 17. அப்பா மகனை மரத்தால் அடித்தார் என்று கூறும் போது அந்த வாக்கியம் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை. ஆனால் இயற்கை சக்தியோடு எந்த ஒரு ஆயுதக் கருவியையும் இணைக்க முடியுமென்பதை வாக்கியம் 18. இல் காணலாம்.

18. அசுரர்கள் **மந்தாரை மலையினால்** பாற்கடலைக் கடைந்தார்கள்.

வாக்கியம் 18-இல் 'மந்தாரை மலை' ஆயுதக் கருவியாக இருந்து பாற்கடலினை கடையப் பயன்பட்டதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறோம்.

பொதுவாக ஆயுதக் கருவியைத் துணைக் கருவியாகவே ஏற்றுக்கொள்வர். ஆயுதக் கருவியைப் பெயரெச்சமாக மாற்ற முடியும்.

18. அ. இராமன் சீதையைக் கம்பால் அடித்தான் என்பதை

18. ஆ. இராமன் சீதையை அடித்த கம்பு என்று மாற்றலாம்.

3. 2. பொருள் கருவி (Material Instrument)

ஒரு செயலைச்செய்ய பயன்படும் மூலப்பொருள் கருவியாகச் செயல்படுவதைக் காணலாம்.

19 குயவன் மண்ணால் குடம்செய்தான் என்னும் வாக்கியத்தில் 'மண்' உயிரற்ற பருண்மைப் பொருளாகத் தோற்றமளிக்கிறது. குடம் செய்யப்படுவதற்கு மூலப்பொருளாகத் தோற்றமளிக்கிறது. குடம் செய்யப்படுவதற்கு மூலப்பொருளாக 'மண்' காணப்படுவதால் அதனைப் பொருள் கருவி என்கிறோம். இவ்வாக்கியத்தை,

20. குயவன் மண்ணில் குடம் செய்தான் என்றும் கூறலாம்

சில வேளைகளில் ஆயுதக் கருவியாகவும் செயல்படுவதைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளால் உணர்ந்துகொள்ள முடிகிறது.

21. சிற்பி கல்லால் சிலை வடித்தான்/செய்தான்.

22. சிற்பி கல்லால் சிலை உடைத்தான்.

வாக்கியம் 21-ல் 'கல்' என்பது பொருள் கருவியாகவும் வாக்கியம் 22இல் 'கல்' ஆயுதக் கருவியாகவும் செல்படுவதை உன்னிப்பாகக் கூர்ந்து சிந்திக்கும்போது கண்டு கொள்கிறோம். பொருள் கருவியில் கருவி வேற்றுமை உருபு -ஆல் என்பதற்கு பதில்-இல் உருபைப் போட்டாலும் பொருள் வேறுபாடு தோன்றாமல் இருப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாக,

23. ஆசாரி மரத்தால் நாற்காலி செய்தான்

24. ஆசாரி மரத்தில் நாற்காலி செய்தான்.

3. 3. இயற்கை சக்தி கருவி

மனித ஆற்றலை மிஞ்சி இயற்கை சக்தி சில வேளைகளில் கருவியாகச் செயல்படுகின்றது. இது பருண்மைப் பொருளாகக் காணப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக,

25. கடவுள் வெள்ளத்தால் பட்டினத்தை அழித்தார்.

இயற்கை சக்தி கருவியில் அதன் உருபாகிய -ஆல் என்பதை நீக்கிவிட்டு 'உபயோகித்து' அல்லது 'பயன்படுத்தி' போன்ற சொற்களைப் பயன்படுத்தலாம்.

26. கடவுள் வெள்ளத்தை உபயோகித்து / பயன்படுத்தி பட்டினத்தை அழித்தார்.

3. 4. ஏதுக் கருவி

ஏதுக் கருவி என்பதும் இயற்கை சக்தி கருவி போன்ற ஒன்றாகும். இதில் உபயோகித்து என்னும் சொல்லைப் பயன் படுத்த முடியாது. சில வேளைகளில் இக்கருவி பருண்மைப் பொருளாகக் காட்சியளித்தாலும் அதனது புதைநிலை அமைப்பில் பார்க்கும்போது அது பருண்மைப்பொருளாகத் தோன்றுவதில்லை.

27. இராமன் வேதனையால் துடிதுடித்தான்
28. இராமன் சீதையால் வெட்கப்பட்டான்
29. சீதை சந்தோஷத்தால் குதித்தாள்.

வாக்கியம் 27-இல் வேதனை என்பது பருண்மைந் பொருள் இல்லை.

அதுபோன்றே வாக்கியம் 28-இல் சீதை பருண்மைப் பொருளாகக் காட்சியளித்தாலும் புதைநிலை அமைப்பில் ஏது கருவி வேற்றுமை உருபு -ஆல் ஏற்றுவருவது பருண்மையற்ற பொருளேயாகும்.

30. இராமன் சீதையின் செயல்களால் வெட்கப்பட்டான். ஏதுக்கருவி வேற்றுமையை உருபு பதிலியாகிய 'உபயோகித்து' பயன்படுத்திக் கூறுமுடியாது.

31. அவன் காலராவால் இறந்தான்

† 32. அவன் காலரா உபயோகித்து இறந்தான்.

சில வாக்கியங்களில் காணப்படும் வேற்றுமைச் சொற்கள் பல்வேறு திரிந்த நிலைகளில் உருவாகி உள்ளதைக் காணலாம் எடுத்துக்காட்டாக,

33. தீயால் வீடுகள் நாசமாயின என்னும் வாக்கியத்தில் காணப்படும் கருவி வேற்றுமை உருபு-ஆல் உண்மையிலே அது சார்ந்து நிற்கும் தீ என்னும் பதத்திற்கு உரியன அல்ல.

34. தீ பிடித்ததால் வீடுகள் நாசமாயின என்பதே வாக்கியம் 33-இல் புதைநிலை அமைப்பாகும். வாக்கியம் 33-இல் கருவி வேற்றுமை உருபு-ஆல் புற அமைப்பில் பெயர்ச்சொல் 'தீ' என்பதோடு நேரடி தொடர்புடையதாகக் காணப்படினும் புதை நிலை அமைப்பில் 'பிடித்தது' என்னும் தொழிற்பெயரோடே பொருள் தொடர்பினைக் கொண்டுள்ளது.

3.5. உடல் உறுப்புக் கருவி

உடல் உறுப்புக் கருவியை முதற்கருவி எனலாம். ஆயுதக் கருவியைத் துணைக்கருவி எனலாம். ஒரு செயல் நடை பெறுவதற்கு முதற்கருவி இன்றியமையாத ஒன்றாகும். பொது வாக உடல் உறுப்புக் கருவி அந்த வினையோடு ஒன்றியதால் வாக்கியங்கள் உருவாகும்போது உடல் உறுப்புக் கருவியைக் குறிப்பதில்லை. அது வினையிலே அடங்கிவிட்டது. துணைக் கருவியாகிய ஆயுதம் கருவியே வாக்கியங்களில் குறிப்பிடப் படுவதைக் காணலாம்.

35. இராமன் சீதையைக் கம்பால் அடித்தான் என்னும் வாக்கியத்தில் 'கை' என்பது உடல் உறுப்புக் கருவியாகும் 'அடி' என்னும் வினையைக் கூறியதும் அவ்வினையைச் செயல் படுத்த முதற் கருவியாக உடல் உறுப்பாகிய 'கை' பயன்படுகிறது.

ஆனால் அது வினையாகிய 'அடி' என்பதிலே பொதிந்திருப்பதைக் காணலாம். வாக்கியம் 35 இல் கம்பு என்பது ஆயுதக் கருவியாகும் இதுவே துணைக் கருவியாகச் செயல்படுகிறது.

இதுபோன்றே 'பார்' என்னும் வினைவந்தால் 'கண்' என்பது உடல் உறுப்புக் கருவியாகக் கொள்ளப்படும்.

4. முடிவுரை

மேற்கூறப்பட்ட 5 வகை கருவிகளும் பொருள் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் ஆயுதக். கருவியும் பொருள் கருவியும் 'உபயோகித்து பயன்படுத்தி' போன்ற சொற்களைக் கருவி வேற்றுமை உருபுவுக்குப் பதிலாக ஏற்றுப்பொருள் நிலையில் எந்த ஒரு மாற்றமும் இன்றி வருகிறது. அவ்வாறு வரும் போது அவ்வாக்கியத்தைத் தனி வாக்கியமாக ஏற்க இயலாது. அது கூட்டு வாக்கியமாகவேதான் இருக்கும் ஆயுதக் கருவியும் பொருள் கருவியும் பெயரெச்ச நிலையில் வரும். ஆனால் ஏதுக் கருவி பெயரெச்ச நிலையில் வருவதில்லை. ஆயுதக் கருவியும் பொருள் கருவியும் பருண்மை நிலையில் காணப்படும். மறறவை பருண்மை நிலையில் காணப்படினும் புதைநிலை அமைப்பில் அவை பருண்மை நிலையில்காணப்படுவது இல்லை. அதுபோன்றே சொற்களை இணைக்கும்போது அவை ஒரே தொடர்புடையவையாக இருப்பின் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் இருக்கும். ஆயுதக்கருவியும் பொருள் கருவியும் இணைந்த நிலையில் வாக்கியங்களில் வரலாம். ஆனால் ஆயுதக் கருவியோ பொருள் கருவியோ ஏதுக்கருவியோடு சேர்ப்பு நிலையில் வருவதில்லை.

சங்கத்தமிழ் உறவுமுறைச் சொற்பொருண்மை

எச். சித்திரபுத்திரன்
தஞ்சாவூர்

சொற்கள் நாம் அகராதிகளில் காண்பதுபோன்று பொருளை மட்டும் தரும் குறியீடுகள் அல்ல. சொற்கள் மொழியின்உண்மைப் பொருளை விளக்குவதுடன் அம்மொழிபேசும் மக்களின் பண்பாடு, நாகரீகம், சமூதாய அமைப்பு, பழக்கவழக்கம் ஆகியனவற்றை வெளிக்காட்டுகின்றன. சொற்கள் சமூதாயத்தால் வரையறை செய்யப்படுகின்றன. ஒரு சமூதாயத்தில் பேசப்படும் சொற்கள் அச்சமுதாயத்தின் வளர்ச்சி, வாழ்க்கைச் சூழல், வெளியுலகத் தொடர்பு என்பனவற்றைச் சார்ந்தே செயல்படுகின்றன. ஒரு சமுதாயத்தில் பயன்படுத்தப்படும் சொற்கள் மற்றொரு சமுதாயத்தில் பயன்படாமல் போகலாம். சமுதாய, பண்பாட்டுக் கூறுகளைத் தாங்கி நிற்கும் புலச் சொற்களில் உறவுமுறைச் சொற்களும் ஒன்று.

உறவுமுறை ஆய்வில் மானிடவியலார்தான் அதிக கவனம் செலுத்தியுள்ளனர். இவர்கள் உறவுமுறைப்பெயர்களை வகைப்படுத்துவதிலே அதிக கவனம் செலுத்தினர். இவ்வகையான வகைப்பாடுகள் உறவுமுறை குறித்த மானிடவியல் கொள்கைகள் அமைய அடித்தளமாக அமைந்தன. இதனால் உறவுமுறை பற்றிய ஆய்வு தனி ஓர் ஆய்வாக வளர்ச்சியுற்றது. சமூக மானிடவியல் என்பதன் வளர்ச்சியினால்தான் ஒரு நூற்றாண்டுக்குட்பட்ட இவ்வாய்வு அறிவியல் வழியிலான ஆய்வாகவும் பல்வேறு நிலைகளில் வளர்ந்துள்ளது. மற்றைய சொல்விரிவுகளைப்போல் உறவுமுறைச் சொல் தொகுதியும் சொல்விரிவுகளைப்பெற்றுள்ளன என்றும், அவற்றின் மூலம்

உறவுமுறைச்சொற்களை மேலும் பகுப்பாய்வு செய்ய இயலும் என்றும் கண்டறியப்பட்டது. இவ்வாய்வு சாதி, மற்றும் இனத் தொடர்பான ஆய்விலிருந்து விடுபட்டுத் தனி ஓர் ஆய்வாகத் தொடங்கியது மிக அண்மைக்காலத்தில்தான். இந்தியாவில் உறவுமுறை ஆய்வு வளர்ச்சியடையாது ஒரு துறையாகத்தான் இன்றளவும் உள்ளன.

இராவதி கார்வே (1953) இந்தியாவில் வழங்கி வருகின்ற உறவுமுறை அமைப்பை மொழியியல் மற்றும் பண்பாட்டு அடிப்படையில் ஆய்ந்தார், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட எமினோவின், 'Dravidian Linguistics Ethnology and Folk tales-Collected paper' என்ற நூலில் திராவிட உறவுமுறைச் சொல் பற்றிய கட்டுரை ஒன்று உள்ளது. இக்கட்டுரையில் தமிழில் வழங்கும் சில உறவுமுறைச் சொற்கள் விளக்கப்பட்டுள்ளன. தமிழ் உறவுமுறை பற்றிய செய்தி மிக்சிகன் பல்கலைக்கழக தென் மற்றும், தென்கிழக்கு ஆசியக்கல்வி நிறுவனத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள Kinship and History in South Asia என்ற நூலில் இடம்பெற்றுள்ளது. தமிழ் உறவு முறைப் பற்றிய இரண்டு கட்டுரை இந்நூலில் உள்ளன. இவற்றுள் Some aspeets of Kinship in ancient Tamil Litrature (George, Hart III) என்ற கட்டுரை குறிப்பிடத்தக்க ஒன்றாகும் இக்கட்டுரையில் ஹார்ட் சங்க இலக்கிய சமுதாய அமைப்பு நிலையில் தலைவன்-தலைவி, மற்றும் அவர் குடும்பத்தினர் இடையே காணப்படும் உறவுநிலைகளைச் சங்க இலக்கிய பாடல்கள் சிலவற்றின் மூலம் விளக்கியுள்ளார்.

திராவிட உறவுமுறைச் சொற்கள் பற்றிய விரிவான ஒரு நூல் Thomas R. Trautman அவர்களால் வெளியிடப் பெற்ற 'Dravidian kinship' என்ற நூலாகும். திராவிட மொழிகளில் பயன்படும் ஐந்து தலைமுறைக்கான சொற்கள், பெரும்பாலும் வட்டார வழக்குச் சொற்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்து நாஞ்சில் நாட்டு வேளாளர் இனத்தில் பயன்படும் உறவுமுறைச் சொற்கள் அடிப்படைச் சொற்களாகத் தெரிவு செய்யப்பட்டுத் தொடக்கநிலைத் தரவாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

தாயம்மாள் அறவாணன் (1987) அவர்களின் உறவுமுறை - ஓர் ஆய்வு என்ற நூலில் தமிழ் இலக்கியம் மற்றும் பேச்சு, வட்டார வழக்குகளில் காணப்படும் உறவுமுறைச்சொற்கள் ஆராயப்பட்டுள்ளன. மனித வாழ்வில் உறவு முறையின் வளர்ச்சி, மணஉறவு, இரத்த உறவு, தமிழ் உறவுமுறைச் சொற்களின் தனித்தன்மை ஆகியனவும் நன்கு விளக்கப் பட்டுள்ளன.

அருவி (1989) அவர்களால் வெளியிடப்பட்டுள்ள பெற்றோரைப்பற்றி' என்ற நூலில் தாய், தந்தை என்ற உறவு முறைக்குரிய சொற்கள், அவற்றின் சொற்பிறப்பு, வரலாறு ஆகியன இனமொழிச் சொற்களின் ஒப்புமையோடு நன்கு விளக்கப்பட்டுள்ளன.

1. சங்க நூற்கள் காட்டும் தமிழ்ச்சமுதாயம் அகம், புறம் என்ற இரண்டு நிலைகளில் இயங்கி வந்துள்ளது. புறவாழ்வில் சமுதாயத்திற்கு அடிப்படையான ஆனால் குடும்ப வாழ்வோடு அதிகம் தொடர்பில்லாத பல செய்திகள் இடம்பெற்றுள்ளன, அகப்பாடல்கள் தலைவன், தலைவி என்ற இருவருக்கும் இடையில் ஏற்படும் காதலை மையமாகவைத்துப் பாடப் பெற்றுள்ளன. இப்பாடல்களிலே குடும்ப உறவுபற்றிய பல செய்திகள் இடம்பெற்றுள்ளன. உறவுமுறைப்பற்றிய செய்திகள் சங்கப்பாடல்களில் நேரடியாக இடம்பெறவில்லையெனினும், தலைவன்-தலைவி ஆகியோர் இடையே தோன்றி வளரும் காதலை விளக்கும் நிலையில் உறவுமுறைப்பற்றிய பல செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. தற்காலத்தைப்போல் இல்லாமல் சங்ககாலத்தில் இரத்தவழி அடிப்படை உறவுமுறைகளும், அவற்றிற்கான சொற்களும் மட்டுமே காணக்கிடைக்கின்றன. மரபுவழி அமையும் தலைமுறையை எடுத்துக்கொண்டால் பெற்றோருக்கு முந்திய பாட்டன், பாட்டி தலைமுறை பற்றிய குறிப்பு ஒரே ஒரு இடத்தில் மட்டும் காணப்படுகிறது. கீழ் தலைமுறையை எடுத்துக்கொண்டால் குழந்தைகள் அதாவது பேசுபவரின் (Ego) கீழ் தலைமுறையான குழந்தைகள் தலைமுறை பற்றிய செய்திகளே பெரும்பாலும் காணப்படுகின்றன. அதாவது பேசுபவரின் முன்தலைமுறையான பெற்றோர் தலை முறை

(தமு+1) பற்றிய செய்திகளும், பேசுபவரின் தலைமுறை பற்றிய (தமு 0) செய்திகளும், பேசுபவரின் கீழ் ஒரு தலைமுறை (தமு-1) பற்றிய செய்திகளும் பெரும்பாலும் இடம்பெற்றுள்ளன. இத்தலைமுறையினரைக் குறிக்கவே உறவுமுறைச்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதைக்கீழ்வரும் படத்தின்மூலம் தெரிந்து கொள்ளலாம்.

பாட்டன் - பாட்டி
↑ தமு+2
பெற்றோர்
↑ தமு+1
தமு 0 → பேசுபவர் தலைமுறை ← தமு 0
↓ ↓
சகோதரர் ↓ கணவன்-மனைவி
சகோதரி தமு-1
குழந்தைகள்

பேசுபவரின் முன் பின் தலைமுறைபற்றிய உறவுகளும் அவற்றிற்குரிய சொற்களுமே சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. இந்நிலைகளுக்குரிய திருமண உறவோ, அவற்றிற்குரிய சொற்களோ இல்லை. பேசுபவர் தலைமுறையைப் பொறுத்த மட்டில் திருமணம் மற்றும் இரத்த உறவுக்கான சொற்கள் காணப்படுகின்றன.

பாட்டன் தலைமுறையைக் குறிக்கத் தனிச்சொற்கள் பயன்படுத்தப்படவில்லை. எனினும் விளக்கமுறை உறவுமுறைச் சொற்களாக தந்தை தந்தை, நுந்தைநுந்தை என்ற இரண்டு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நுந்தை தந்தைக்கிவன் தந்தைதந்தை
(புறம். 290:5)

பரிபாடலில் பாட்டி என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இச்சொல் உறவுமுறையைக் குறியாது வயதான கிழவி என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மடநடைப் பாட்டியர்த் தப்பித்தடையிறந்து
(பரி. 10:37)

பெற்றோர் உறவுமுறையைப் பொறுத்த மட்டில் தாய், தந்தை என்ற இரத்த உறவுக்கான உறவுமுறைச் சொற்களையே காண இயலுகிறது. பெற்றோரின் சகோதர, சகோதரிகளைப் பற்றிய செய்திகளையோ, அதற்குரிய சொற்களையோ காண முடியவில்லை. அதாவது இன்று நம்மிடையே வழங்கும் பெரியப்பா, சித்தப்பா, அத்தை, மாமா, என்ற உறவுமுறைகள் பற்றிய செய்தி இல்லை என்றே கூறலாம். அதாவது சங்க இலக்கிய சமுதாயத்தில் தனிக்குடும்ப வாழ்விற்குரிய அமைப்பே காணப்படுகிறது.

உறவுமுறைச் சொற்களின் மொழியமைப்பு மற்றும் சொற் பொருண்மையை நோக்கும்போது கீழ்வரும் பண்புகளைக் காண வியலும். அடிப்படையில் உறவு முறைச்சொற்களாக உள்ள சில சொற்கள் உறவுமுறைப் பொருளில் அன்றித் தொடர் புடைய பிற பொருள்களிலும் கையாளப்படுகின்றன. இதற்கு மாறாக, அடிப்படையில் உறவுமுறைச்சொல் அல்லாத சில சொற்கள் பொருள் விரிவு பெற்று உறவுமுறைப் பொருளிலும் வருகின்றன. உறவுமுறைச்சொற்களின் மொழியமைப்பைப் பொறுத்தமட்டில் இரண்டு வகையான சொற்கள் காணக் கிடைக்கின்றன. முதல்வகைச்சொற்கள் பல்வேறு உருபன்களாகப் பிரிக்க முடியாதவாறு தனிச்சொல்லாக இயங்குகின்றன. (அன்னை, அப்பா, அம்மா) இரண்டாவது வகைச்சொற்கள் தனிச்சொற்களாகவின்றி இரண்டோ அல்லது இரண்டிற்கு மேற் பட்ட சொற்களோ / உருபன்களோ இணைவதால் தோற்றம் பெறுகின்றன. அடிப்படை உறவுமுறைச்சொற்களில் முன் னொட்டாகச் சில அடைகளையோ, பெயர்களையோ, இணைப் பதன் மூலம் இவ்வகை உறவுமுறைச்சொற்கள் ஆக்கப் படுகின்றன. (அப்பா + ஆயி → அப்பாயி, அம்மா + ஆயி → அம்மாயி, பெரிய + அப்பா → பெரியப்பா) இவ்வகைச் சொற்கள் பேச்சு வழக்கிலே அதிகம் பயன்பாட்டிலுள்ளன. இரண்டாம் வகையைச் சார்ந்து ஆனால் மொழியமைப்பில் இவ்வகையிலிருந்து சிறிது மாறுபட்டு வழங்கப்பட்டுள்ள பல

உறவுமுறைச்சொற்களைச் சங்கத் தமிழில் பரவலாகக் காண இயலுகிறது. இவ்வகை உறவுமுறைச்சொற்கள் மூவிடக் குறிப்புக்களை (தன்மை, முன்னிலை, படர்க்கை) அதாவது இச்சொற்கள் ஒரு பயன்பாட்டெல்லையைக் கொண்டே செயல் படுகின்றன. இம்மூவிடப் பெயர்ச்சொற்கள் உறவுமுறைச் சொற்களின் அடையாகப் பயன்படுமிடத்துச் சில சொற்களில் வெளிப்படையாகப் பிரித்தறியும் வண்ணமும், சில சொற்களில் பிரித்தறிய முடியாத வண்ணம் மூவிடங்களைக்காட்டி உறவு முறைச்சொல்லுடன் இணைந்து இயங்குகின்றன. (ஞாய், யாய்) இச்செய்திகளை அடிப்படையாகக் கொண்டு பெற்றோரைக் குறிப்பிடப்பயன்படுத்தப்படும் உறவுமுறைச் சொற்களை ஆராய்வோம்.

சங்க நூல்களில் வழங்கப்படும் உறவுமுறைச்சொற்களை ஆராயும்முன் பிங்கல நிகண்டில் கொடுக்கப்பட்டுள்ள தாய், தந்தைக்குரிய சொற்களைக் காணலாம்.

தாதை, அத்தன், தந்தை, பிதா, ஐயன்

(பிங் 907)

எனும் ஐந்து சொற்கள் தந்தையைக் குறிக்கவும்,

அம்மை, அன்னை, ஆய், அவ்வை, தம்மனை
மோய், ஈன்றாள், தன்னை

(பிங். 912)

எனும் எட்டு சொற்கள் தாயைக் குறிக்கவும் குறிப்பிடப் பட்டுள்ளன.

1.1. சங்க இலக்கியங்களில் தந்தையைக் குறிக்கப் பின்வரும் பத்து சொற்களும்,

தந்தை : 1. எந்தை, 2. நுந்தை, 3. தந்தை,
4. தாதை, 5. அத்தன், 6. ஐ, 7. நும்முன்,
8. முதல்வன், 9. என்னை, 10. கோ.

தாயைக் குறிக்கப்பின்வரும் எட்டு சொற்களும் காணப்படுகின்றன

தாய்: 1. அன்னை, 2. ஞாய், 3. யாய், 4. அஞ்ஞை
5. அம்மா, 6. தாய், 7. ஈன்றோள் / ஈன்றாள்,
8. பயந்தோள்.

தற்காலத்தில் பேச்சு மற்றும் எழுத்து வழக்கில் பெருவழக்குப் பெற்றுள்ள அம்மா, அப்பா என்ற சொற்கள் சங்கத்தமிழில் வழக்கில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அம்ம, அம்மா எனும் சொற்கள் சங்க இலக்கியத்தில் காணப்படினும் அவை முன்னிற்பவரை ஆண், பெண் இருபாலரை விளித்துக்கூறும் நோக்கில் அசையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன (தொல். சொ. 277).

தந்தையைக் குறிக்கப் பிங்கல நிகண்டு வரிசைப்படுத்தியுள்ள சொற்களில் பிதா, ஐயன் என்ற சொற்களைத்தவிர பிற வழக்கிலுள்ளன. மேற்கண்ட சொற்களில் தந்தை, அத்தன் என்ற சொற்கள் மட்டுமே விளிச்சொற்களாகவும் பயன்படுத்தப் பட்டுள்ளன. தந்தையைக்குறிக்கும் சொற்களில் தந்தை என்ற சொல்லே அதிகமாக 66 இடங்களிலும், அதை அடுத்து எந்தை என்ற சொல்லும், (55) பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்தன் ஆறு இடங்களிலும், தாதை மூன்று இடங்களிலும் காணப்படு கின்றன. பிற சொற்கள் மிகக் குறைந்த அளவிலே வழக்கி லுள்ளன.

எந்தை, நுந்தை, தந்தை என்பவை தன்மை (எம்) முன்னிலை (நும்) படர்க்கை (தம்) என்ற மூவிடப்பெயர்களைக் குறித்தே வழங்கப்பட்டுள்ளன. இதைப் பின்வரும் எடுத்துக் காட்டுகளில் காண்போம்.

எந்தையும், நுந்தையும், எம்முறை கேளிர்
(குறு. 40:2)

என்ற பாடல் அடியில் என் தந்தையும், நும் தந்தையும், என்ன உறவினை உடையவர் என்ற பொருள் பயின்று வருகின்றது. இதைப்போல் பின்வரும் எடுத்துக்காட்டுகளில் எந்தை, நுந்தை தந்தை என்பன எம் / என் தந்தை / நும் தந்தை அவன் / அவள் தந்தை எனப்பொருள் பட்டு நிற்பதைக் காணலாம்.

எந்தை அறிதல் அஞ்சி……… (ஐங். 261:3)

எந்தை எனக்கீத்த இருவளை……… (பரி. 20:76)

எந்தையும் இல்லானாக …… (அகம். 158:17)

கண்டிசின் வாழியோ குறுமகள் நுந்தை……… (நற். 202:8)

நுந்தையும் யாயும் கூடியரோ நின்னை (ஐங். 98:4)

நுந்தை பால் உண்டிசில……… (கலி. 80:25)

யார்மகள் கொல்லிவள் தந்தை வாழியர் (நற். 8:4)

இவள் தந்தை காதலின் யார்க்கும் கொடுக்கும். (கலி. 61:113)

ஈரமில்லாத இவள் தந்தை……… (கலி. 84:8)

எந்தை, நுந்தை எனும் சொற்கள் எம், நும் எனும் மூவிடப் பன்மைப் பெயர்களைக்கொண்டு வரினும், ஒருமை பன்மை மயக்கமின்றியே பெரும்பாலான இடங்களில் வழங்கி வருகின்றன. எந்தை எனும் சொல் தந்தையைக் குறிக்க மட்டும் கையாளப் படாமல், அரசனையும், காதல் தலைவனையும் குறித்து ஏறத் தாழ 21 இடங்களில் காணப்படுகிறது. நுந்தை, தந்தை என்பவை இவ்வாறு பயன்படுத்தப்படவில்லை என்பது குறிப் பிடத்தக்கது இதைக் கீழ்வரும் எடுத்துக்காட்டுகளில் காணலாம்.

ஆசாகு எந்தை யாண்டுளங் கொல் (குறு. 325:4)

உண்கும் எந்தை நின் காண்டு வந்திசின் (புறம். 125:4)

வந்தனென் எந்தை யானே என்றும் (புறம் 135:10)

ஆசாகு எந்தை யாண்டுளங் கொல்லே (புறம். 235:16)

ஈந்தோன் எந்தை……… (புறம் 286:9)

இப்பொருள் மாற்றத்தை விளக்கவந்த உரையாசிரியர்கள், முறை குறியாது தலைமைத்தன்மை குறித்து எம்பெருமான் எனப் பொருள்பட நின்றது என்பர். இத்தகைய பயன்பாட்டைப் புறநானூற்றில் 16 இடங்களில் காணலாம்.

தலைவன், புதல்வர், அல்லது இரவலர் அரசனை/வள்ளலைப் பார்த்து எம்பெருமானே என அழைத்துப் புகழும்படியாக

அமைந்துள்ளன. இப்பாடல்கள் நற்றிணையில் ஓரிடத்தில் இச் சொல் எந்தாய் என்று தாய் புதல்வனை நோக்கி அழைப்பதாய்க் காணப்படுகிறது.

வந்தீக எந்தை என்னும்
அந்தீம் கிளவி கேட்க நாமே (நற். 221:21)

இவ்வாறாக மேற்கண்ட சான்றுகளின் மூலம் 'எந்தை' எனும் உறவுமுறைச்சொல் என் / எம் தந்தை எனப்பொருள்பட்டு நிற்க சிலவிடங்களில் தலைவி அல்லது தோழி தலைவனை நோக்கி எந்தை (எம்/என் இறைவனே/பெருமானே) என அழைப்பது போலவும், புலவர்கள் அரசர்களை நோக்கி எந்தை என்று குறிப்பிடுவது போலவும், வழங்கப்பட்டுள்ளது. தற்காலத்தில் பெரியவர்களையும், இறைவனையும், குழந்தையையும் 'அப்பா' என அழைக்கும் வழக்கத்தை இதனோடு ஒப்புநோக்குதல் சிறந்ததாகும்.

எந்தை, நுந்தை, எனும் சொற்கள் பெரும்பாலான இடங்களில் தந்தையைக் குறிப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டு உள்ளன. சிலவிடங்களில் தலைவியின் தந்தையைக் குறிப்பதற் காகவே பயன்படுத்தப்பட்டுள்ளன. சிலவிடங்களில் தலைவி மகனைப்பார்த்து உன் தந்தை எனக் குறிப்பிடுவதற்குரிய சான்றுகள் காணக்கிடைக்கின்றன.

உளமென்னா நுந்தை மாட்டெவ்வமுடிப்பார் (கலி 80:12)
நுந்தை வாய்......மாயச்சூள் தோன்றி...... (கலி. 85:26)
செம்மல் வனப்பெல்லாம் நுந்தையை, ஒப்பினும் (கலி. 85:21)
உய்வின்றி நுந்தை நல்லுணச்சாய் (கலி 80:16)
...... நுந்தையை நோவார் யார் (கலி 34:38)

இவ்வகைப் பயன்பாட்டை கலித்தொகையில் தான் அதிக இடங்களில் காணமுடிகிறது. முன்னர்க்கண்டதுபோல் நுந்தை, எந்தை, தந்தை எனும் சொற்கள் ஒரு பயன்பாட்டு எல்லையைக்

கொண்டு இயங்குகின்றன. எனினும், தந்தை எனும் சொல் என் தந்தை, உன் தந்தை என்ற பொருள்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கீழ்வரும் எடுத்துக்காட்டுகளில் காணலாம்.

நும்மொடு வருவல் என்றி எம்மொடு
பெரும் பெயர்த் தந்தை நீடுபுகழ் நெடுநகர் (நற்றி.162:7)

இப்பாடல் அடி தலைவன் தலைவியைப் பார்த்துப் பெரிய கீர்த்தியையுடைய (உன்) தந்தையினது நீண்ட புகழ் நெடிய மாளிகையின் கண்ணே ...... எனக் கூறுவதுபோல பொருள்பட்டு நிற்கிறது.

'பெரும்பெயர் நுந்தை நீடு புகழ் நெடுநகர்'

என்று கையாளப்பட்டிருப்பின் பொருள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாய் இருந்திருக்கும் மேலும்,

‡ தந்தை வித்திய மென்தினைபையச் ... (நற். 306:1)

என்ற பாடல் அடியில் தந்தை என்ற சொல் தோழியும், தலைவியும் சேர்ந்து' எம் தந்தை' என்று அழைப்பதாகப் பொருள்பட்டு நிற்பதை காண இயலும். இவ்வடி

எந்தை வித்திய மென்திணை பைய...

என அமைந்திருத்தல் வேண்டுல்.

நீ வாழியற் நின் ‡தந்தை தாய் (புறம். 137:14)

என்ற பாடலில் 'நின் தந்தை' என்ற தொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. நின் தந்தை என்பதற்குப் பதில் 'நுந்தை' என்று கையாளப்பட்டிருக்க வேண்டும். அதாவது "நீ வாழியற் நுந்தையாம்" என்று இருந்திருத்தில் வேண்டும். இப்பயன்பாடுகளை விதிவிலக்காக கொள்வதைவிட இலக்கிய வழக்கில் இப்பயன்பாட்டெல்லை நன்கு கடைபிடிக்கப்பட்டிருக்கப் பேச்சு வழக்கில் உறழ் நிலையில் இருந்ததாகக்கொண்டு பேச்சு வழக்கத்தின் தாக்கத்தால் இப்பிறழ்வு ஏற்பட்டதாகக் கொள்ளலாம்.

தந்தையைக் குறிக்கத் 'தாதை' எனும் சொல் பரிபாடலில் மூன்று இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சதுரகராதியில் தாதை என்பதற்குப் பாட்டன் என்று பொருள் கொடுக்கப் பட்டுள்ளது. இவண் குறிப்பிடத்தக்கது.

இருவர் தாதை இலங்கு பூண் மாஅல் (பரி. 1:28)
தாமரைப் பூவினுள் பிறந்தோனும் தாதையும் (பரி. 3:13)
அலர்ந்த புகழோன் தாதையாகலின் (பரி. 4: 14)

மேற்கண்ட மூன்று இடங்களிலும் கடவுளரின் தந்தையைக் குறிக்கவே இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தாதை என்ற சொல்லை பிராகிருத மொழிச் சொல்லாகக் கூறுவர். இச்சொல் இடைக்கால இலக்கியங்களில் சற்று அதிகமாக ஆளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அத்தன் உறவுமுறைச்சொல் தந்தையைக் குறிக்க 2 இடங்களில் கையாளப்பட்டுள்ளது.

அன்னையும், அத்தனும் அல்லரோ தோழி (குறு. 93:3)
அன்னையும் அத்தனும் இல்லாய் நாண (கலி. 115:8)

இச்சொல் 'அத்தத்தா' என அடுக்கி விளிப்பெயராய் கலித்தொகையில் இரண்டு இடங்களில் பயின்று வருகின்றது.

ஐய காமரு நோக்கினை அத்தத்தா என்றுநின்
தேமொழி கேட்டால்......... (கலி. 80:14)

மேற்கண்ட இரண்டு இடங்களிலும், மகன் தந்தையை அத்தத்தா என அழைப்பது போன்று காணப்படுகிறது.

அத்தன் → அத்த → அத்தத்தா

அத்தன் எனும் இச்சொல் பிற்கால இலக்கியங்களில் மூத்தோன் உயர்ந்தோன் என்ற பொருள்களிலும் கடவுளர்களைப் பொது நிலையில் குறிக்கும் வகையிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஐ, என்னை, நும்முன், முதல்வன், கோ என்ற சொற்களும் தந்தையைக் குறிக்கச் சில நூற்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் நும்முன், என்னை, என்பன நும் + முன் என் + ஐ எனப்பகுப்பாய்வு செய்யத்தக்கன. இச்சொற்கள் அடிப்படையில் உறவுமுறைச் சொற்கள் அல்ல. மொழிச் சூழலுக்கு ஏற்ப பொருள் விரிவு பெற்று உறவுமுறைப் பொருளைப் பெற்று நிற்கின்றன எனலாம்.

முதல்வன் பெரும்பெயர் முறையுளிப்பெற்ற (கலி. 75:24)

என்ற அடியில் தன் தந்தையின் பெரிய பெயரைப் பெறுமுறை யால் என்று' முதல்வன் என்பதற்குத் தந்தை என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது. இச்சொல்லின் அடிப்படைப்பொருள் முதன்மையானவன் தலைவன் / எவரினும் மேலானவன் என்பதாகும். இச்சொல் மேற்கண்ட இடத்தில் மட்டுமே தந்தை என்ற பொருளில் வந்துள்ளது.

முன் எனும் பொதுச்சொல் நும், என் என்ற முன்னிலைப் பெயருடன் இணைந்து 'தந்தையைக் குறிக்க ஓரிடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. முன், பின் என்பன முறையே அண்ணன், தம்பியைக் குறிக்கப் பிற்கால இலக்கியங்களில் பரவலாகப் பயள்படுத்தப்படுவஅ குறிப்பிடத்தக்கது.

அரும்பார் கண்ணிப்பெரும் பெயர் நும்முன் (புறம். 174:18)

வண்டு ஆர்க்கப்பட்ட கண்ணியையும், கபரிய புகழினையும் உடைய நும் முன்னோனாகிய தந்தை என்று இச்சொல்லுக்குப் பொருள் கூறப்பட்டுள்ளது.

ஐ எனும் சொல் தமிழ் நூற்களில் பல்வேறு தொடர்புடைய பொருள்களில் ஆளப்பட்டுள்ளது. தலைவன் என்ற பொருளில் 12 இடங்களில் இறைவன் என்ற பொருளில் 3 இடங்களிலும் மற்றும் வியப்பு, அழகு, மென்மை விரைவு என்ற பொருள்களிலும் காணப்படுகின்றன. தந்தை என்ற பொருளில் இச்சொல் மூன்று இடங்களில் வந்துள்ளதைக் கீழ்வரும் எடுத்துக்காட்டுகள் மூலம் காண இயலும்.

என் ஐ வாழிய பலவே பன்னிய (நற். 136:4)

அன்னையும் அமர்ந்து நோக்கினளே என்னையும் (நற். 386:3)

இவள் தன் ஐ யானை எறிந்து (புறம். 279:3)

மேற்கண்ட மூன்று எடுத்துக்காட்டுகளிலும் இச்சொல் மூன்று மொழிச்சூழலில் பயன்படுகிறது. முதல் இரண்டு எடுத்துக் காட்டுகளில் என் என்ற தன்மை இடப்பெயருடனும், இணைந்து இச்சொல் காணப்படுகிறது. எனினும், இரண்டாவது எடுத்துக் காட்டில் 'எந்தை' என்ற சொல்லைப் போல ஒரே சொல் நிலையைப் பெற்றுநிற்கின்றது. மூன்றாவது எடுத்துக்காட்டில் 'தன் என் படர்க்கைப் பெயருடன் இணைந்தும் செயல்படுகிறது. பொது நிலையில் பயன்படுத்தப்பட்ட இச்சொல்லைப் பிற சொற்களைப் போன்று பயன்பாட்டை எல்லையுடன் வழங்க வேண்டும். என்ற எண்ணத்தின் தாக்கமே இவ்வாறு பயன் படுத்தப்பட்டுள்ளமைக்கு காரணமாக அமைகிறது.

மேற்கண்ட சொற்களைத்தவிர, 'கோ' என்ற சொல்லும், தந்தையைக்குறித்து ஓரிடத்தில் வழங்கப்படுகிறது அரசன் என்ற அடிப்படைப்பொருளில் இருந்து பொருள் விரிவுபெற்றுத் தந்தையைக் குறிக்கவும், ஓரிடத்தில் பயன்படுகிறது.

……………………… நின்
கோ …………… (கலி. 16:11)

பயன்பாட்டு எல்லையுடன் வழக்கிலுள்ள எந்தை, நுந்தை என்ற சொற்களின் சொல்லமைப்பு மற்றும், வேர்ச்சொல் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன.

தாயம்மாள் அறவாணன் (1987,71) இச்சொற்களைப் பின் வருமாறு பிரித்துக் காட்டுவர்

எம் + ஐ → எந்தை

உம் + ஐ → உந்தை

நும் + ஐ → நுந்தை

தம் + ஐ → தந்தை

இவர் கூற்றுப்படி எம், உம், நும், தம் என்பன மூவிடப் பெயர்களாகும். ஐ என்பது அடிப்படையில் விளிப்பெயராகவும், பின் உறவுமுறைப் பெயராகவும் மாறியது என்பது அவர் கருத்து தந்தை என்ற சொல்லை மேலும் பகுத்து தம் + (ந்) + (த்) + ஐ எனக்காட்டுவார். நுந்தை என்ற சொல்லை நிம் > தை > நும்தை எனப்பிரித்து இச்சொல் 'தை' என்ற சொல்லின் அடியாகத் தோன்றியது என்றும் விளக்குவார் இன்னாசி.

(தாயம்மாள், 1987, 71)

'தா' எனும் வினை அடியிலிருந்து இச்சொற்கள் தோன்றின என்பார் அருளி (1989, 115).

தம் + தா → தந்தை
எம் + தா → எந்தை
நும் + தா → நுந்தை

இவர் கூற்றுப்படி 'தா' என்பது உலகிற்குத் தந்தவன் என்ற பொருளில் எம்மை உலகிற்குத்தந்தவன், நும்மை உலகிற்குத் தந்தவன் என்று பொருள்பட்டு நிற்கின்றன இச் சொற்கள்.

பாலசுந்தரம் (புள்ளிமயங்கியல், 52) தந்தை என்ற சொல் தொல்காப்பியர் காலத்திலே மூவிடத்திற்கும் உரிய பெயராய் வழங்கலாயிற்று. இவர் கருத்துப்படி தந்தை, நுந்தை, எந்தை என்ற சொற்களில் தம், நும், எம் என்பவை 'தை' என்ற முறைப் பெயரோடு புணர்ந்து ஒரு சொல்லானது.

தொல்காப்பியர் 'நுந்தை' என்ற சொல்லை ஒருசொல் தன்மைத்து எனக்கருதினார் என்பது அவரது

'குற்றியலுகர முறைப்பெயர் மருங்கின்'

ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும் (எழுத். 67)

என்ற சூத்திரத்தின் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

கால்டுவெல் (1856, 398) தந்தை என்ற சொல்லை தம்+தை எனப்பிரித்து 'தை' என்பது தந்தை என்றுபொருள்படும் என்பார்.

அவர் கருத்துப்படி 'தை' என்ற சொல் 'அத்தன்' என்ற சொல்லுடன் தொடர்புடையது. அத்தன் ஒரு பழந்திராவிட மொழிச்சொல்.

உடமைப்பொருளில் வரும் மூவிடப்பெயர்களுடன் இணைந்து தோன்றும் உறவுமுறைச் சொற்கள் தொல் திராவிட மொழிப் பண்பு என்று கூறுவார் எமினோ (1953, 123) இவ்வகை உறவு முறைச்சொற்கள் கோதா, கொலாமி, கூவி, கொண்டி, குறுக் ஆகிய மொழிகளில் காணப்படுகின்றன. இவ்வாறு மூவிடப் பெயர்களைச் சேர்த்து வழங்கும் சொற்கள் தமிழ் கிளை மொழிகள் சிலவற்றில் காணப்படுவதாகக் கூறுவார். ராஜா (1972, 128) இப்பண்புகள் தொல் திராவிட மொழியிலிருந்து வந்தவையாகக் கருத இடமுண்டு என்று கூறும் அவர் உடைமை உறவுமுறைப் பெயர்களாக வரும் உறவுமுறைச் சொற்கள் எல்லாம் உயிர் எழுத்துக்களை முதலாகக் கொண்டு வருவன என்றும் அவ்வாறுவராமல் உறவுமுறைச்சொற்கள் மெய்யெழுத்து களுடன் வந்தால் இடப்பெயரும் உறவுமுறைப்பெயரும் எம் மாற்றமும் இன்றிப்பயன்படுத்தப்படும் என்றும் விளக்குவார்.

எம்முறையில் சொற்பகுப்பாய்வு செய்யப்படினும் மூவிடப் பெயர்களைத்தாங்கி ஒரு சொல்லாகத் தோன்றும் இவை தொல் திராவிடமொழிப் பண்புக்கூறுகள் எனக்கொள்ளலாம். இப்பண்பு தாய் தந்தையரைக் குறிக்கும் சொற்களில் மட்டுமின்றி சகோதர சகோதரியைக் குறிக்கும் சில சொற்களும் சங்கத்தமிழில் விரிவு பெற்றுள்ளது. இச்சொற்களின் பயன்பாடு இடைக்காலத்தில் குறைந்து, தற்கால எழுத்து வழக்கில் முற்றிலும் வழக்கிழந் துள்ளது குறிப்பிடத்தக்கது.

எம் + தந்தை → எந்தை — என்/எங்கள்
நும் + தந்தை → நுந்தை — உன்/உங்கள் தந்தை தந்தை
தம் + (த்) (ந்)தை → தந்தை — அவன்/அவள்... தந்தை

1. 2. அன்னையைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொற்களில் ஞாய், யாய், தாய், அஞ்ஞை, அன்னை, அம்பா என்பன அடிப் படையில் உறவு முறைச்சொற்கள். ஈன்றாள் / ஈன்றோள், பயந்தோள் என்பன தாயைக் குறிக்கப் பயன்படுத்தப்படும்

பிற சொற்கள், இவற்றுள் ஞாய், யாய், தாய், என்பன பயன் பாட்டெல்லையுடையன. எந்தை, நுந்தை என்ற சொற்களைப் போன்று எளிதாகப் பிரித்தறிய இயலாத வண்ணம் தனிச்சொல் போல் தோற்றமளிக்கின்றன.

அன்னையைக் குறிக்கும் சொற்களில் அன்னை, யாய், ஞாய் என்பன அதிகமாக வழக்கிலுள்ளன. யாய் 63 இடங்களிலும், தாய் 54 இடங்களிலும் பயன்படுத்தப்பெற்றுள்ளது.

ஞாய் எனும் சொல் 'உன்தாய்' என்ற பொருளில் 3 இடங்களில் சங்கத்தமிழ் பயின்று

யாயும், **ஞாயும்** யாராகியரோ (குறு. 40 : 1)
ஞாயையும் அஞ்சுதியாயின் ... (கலி. 107 : 26)
நுந்தையும், **ஞாயும்** கடியரோ நின்னை (ஐங். 98 : 4)

என்ற அடிகளில் 'ஞாய்' என்பது உன் தாய் என்ற பொருளைத் தந்து நிற்கிறது. இச்சொல்லின் அடியாக எழுந்த ஞாயர் எனும் சொல் 3 இடங்களில் காணப்படுகிறது.

ஞாயர்பால் உண்டி சில (கலி. 85 : 28)
ஞாயர் மாட்டைப்பால் (கலி. 85:36)

யாய் பெரும்பான்மையான இடங்களில் எம் தாய் எனப்பொருள் பெற்றே நிற்கின்றது. இச்சொல் அதிகமாகத் தலைவியின் தாயைக் குறித்துப் பயன்படுத்தப்பெற்றுள்ளது. தோழி, தலைவனிடம் தலைவியை முன்னிறுத்தி எம் தாய் எனக் குறிக்கும் பாடல்களும் உள்ளன. இச்சொல் உறவுமுறையைக் குறியாது தோழி தலைவியைப் பாத்துத் தாய் + எம்பெருமாட்டி என அழைப்பது போன்று 10 பாடல்களில் ஐங்குறுநூற்றில் காணப்படுகின்றன.

யாய்

யான் **யாய்** அஞ்சுவல் எனினும் தானே (நற். 72 : 6)
வாரற்க தில்ல வருகுவள் **யாயே** (குறு. 198 : 8)
யாயும் ஆயமோடு அயரும் நீயும் (அகம். 240 : 9)
வேட்டோளே **யாயே** யாமே (ஐங். 10 : 3)
(எம்பெருமாட்டி)

தாய் என்ற உறவுமுறைச்சொல் சங்க இலக்கியத்தில் 54 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று முன்னர் கண்டோம். தலைவன், தலைவி, புதல்வன், ஆகியோரின் தாயைக் குறிக்கும் வகையிலே படர்க்கையிடத்தில் 4 இடங்களில் காணப்படுகிறது. ஓரிடத்தில் செவிலித்தாயையும், மீதமுள்ள 9 இடங்களில் பறவை, விலங்குகளின் ஈன்ற பெண்ணினத்தையும் குறிக்கப் பயன்பெற்றுள்ளது. எனவே, இச்சொல் அடிப்படை உறவுமுறைப் பொருளிலிருந்து பொருள் விரிவு பெற்றுத் தாய்க்கு இணையான செவிலியையும் குஞ்சு, குட்டிகளை ஈன்ற பறவை / விலங்கு போன்ற அஃறிணைப் பொருளுக்கும் பொருள் விரிவுபெற்றுள்ளது. இச்சொல் ஈன்ற தாயை மட்டுமே குறித்துத் தோன்றிய தென்றாலும், படிப்படியாக ஊட்டும் தாயையும், முலைத் தாயையும் செவிலித்தாயையும் குறித்து வழங்கத் தலைப்பட்டது என்ற அருளி (1989, 76) அவர்களின் கூற்று குறிப்பிடத்தக்கது.

தாய்

தன் திறம் பெறுக இவள் ஈன்ற தாயே (நற். 8:10)

மறுவரும் சிறுவன் தாயே (குறு. 45:4)

பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே (ஐங். 399:5)

செவிலி

யானும், தாயும் மடுப்பத்தேனோடு (நற்.179:5)

விலங்கு / பறவை

தாய்காண விருப்பினன்ன
சாஅய் நோக்கினனே ………………… (குறு.132)

தாயின் முட்டை போலவுட்கிடந்து … (குறு.152)

தாயம்மாள் அறவாணன் (1987, 87) தாய், யாய், ஞாய் என்ற சொற்களைப் பின்வருமாறு பிரித்துக்காட்டுவார்.

த் + ஆய் → தாய்

ஞ் + ஆய் → ஞாய்

ய் + ஆய் → யாய்

இவர் கருத்துப்படி 'ஆய்' என்ற சொல்லே தாயைக் குறிக்கும் சொல்லாகும். த், ஞ், ய் என்பன முறையே தனது, உனது, எனது என்று பொருள்பட்டும் நிற்கும் இடைச்சொற்கள்.

தந்தை என்ற சொல்லைப்போல தாய் என்ற சொல்லையும்,

தா + ஆய் எனப்பகுத்துத் 'தா' என்பது தம்மைப் பிறப்பித்து உலகிற்குத் தந்தவன் என்ற பொருளில் தா + ஆய் > தாஅய் > தாய் வளர்ந்தது என்பார் அருளி (1989,79) ஞாய் என்ற சொல்லுக்கு 'நின் தாய்' என்னும் பொருள் இதன் மூலக்கருவில் இல்லை என்றும் இச்சொல் யாய் (யா + ஆய்) என்பதின் அடியாகத் தோன்றிய மாற்று வடிவு என்றும் கருதுவார் அருளி (1989,68) என் தாய் என்னும் ஒரே பொருளடியாகத் தோன்றிய இச்சொல் காலவடத்தில் முன்னிலையைக் குறிக்கும் எனவும் கொள்வார்.

தாயைக் குறித்து வழங்கிய மிக முது தொடக்க பழஞ்சொல் ஆய், இது பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பதிவெய்தவில்லை என்றும், இச்சொல்லிலிருந்தே தாய், ஞாய், ஆய் என்பன வளர்ச்சியுற்றன என்பார்

ஆய் → தா + ஆய் → தாய்
↓
யா + ஆய் → யாய்
↓
ஞா + ஆய் → ஞாய்

கால்டுவெல் (1856,395) தாய் என்ற சொல்லை தா + ஆயி எனக்கொண்டு 'தா' என்பது தம் என்ற சொல்லின் அடியாய் எழுந்தது என்றும், 'ஆயி' என்பது 'ஆ' என்ற பழந்தமிழ் சொல் வடிவம் என்றும் விளக்கிக் காட்டுவர்.

எமினோ (1967) ஞாய் என்ற சொல்லின் அடிச்சொல் பற்றிய வெவ்வேறு கருத்துக்களைக் காட்டுவார். பர்ரோ, யாய் > ஆய் ஆகியது என்ற கருத்துக்களைக் காட்டுவார். மேலும் ஜீல் பிளாக் ஞாய் என்பதிலுள்ள 'ஞ' 'நீ' என்பதுடன் தொடர்

புடையது என்று கருதுவதாகக் கூறுவார். எமினோ கருத்துப்படி 'ஞாய்' என்பது ஒரு வேறுபட்ட சொல்லாகும்.

தாயைக் குறிக்கும் சொற்களில் மிக அதிகமாகப் பயன் படுத்தப்படும் சொல் அன்னை என்ற சொல்லாகும். இச்சொல் எந்த பயன்பாட்டு எல்லையும் கொண்டிராமல் தன்மை, பன்மை, படர்க்கை ஆகிய மூன்று விடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதைப்பின்வரும் எடுத்துக்காட்டுகளில் காணலாம்.

ஆனாது புகழும் அன்னை (புறம். 254 : 3)

அன்னை அறியின் (நின்தாய்)

(நம்தாய்) (நற். 4 : 3)

எந்தை வந்துரைத்தனன் ஆகு அன்னையும் (நற். 206 : 7)

அன்னை என்ற சொல் நீட்டம் பெற்றும், அன்னாய், என விளிப் பெயராய் சங்க நூற்களில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

அன்னை எனும் சொல் ஆய் எனும் மூலச் சொல்லிலிருந்து தோன்றியது எனப் பின்வருமாறு விளக்கிக் காட்டுவார் அருவி (ப.83)

ஆய் > அய் + ஐ > அய்யை

அய்யை > அஞ்ஞை (ய < ஞ)

அஞ்ஞை > அன்னை (ஞ > ன)

கால்டுவெல் (1856,613) அன்னை என்ற சொல்லை அன் (ன்) + ஐ எனக்கருதுவார். அன் என்பதும் என்பதன் அடியாக எழுந்தது என்றும் விளக்குவார்.

அஞ்ஞை எனும் சொல் தாயைக் குறிக்கும் சொல் இச்சொல் சங்க இலக்கியத்தில் மூன்று இடங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இம்மூன்று இடங்களிலும் தாய் தன் மகளை அன்பு மிகுதியால் விளிப்பது போன்றே காணப்படுகிறது. மூன்று இடங்களிலும் விளிப்பெயராகவே பயன்படுகிறது.

மென்றோள் அஞ்ஞை சென்ற ஆறே (அகம். 15:19)

குன்றவேயில் திரண்ட என் மென்றோள் அன்னை (குறு. 15:18)

அமர்க்கண் அஞ்ஞையை யலைத்த கையே (அகம். 145:22)

இப்பாடல் அடிகளுக்கு உரையாசிரியர்கள் அன்பு மிகுதியால் தாய் மகளை 'அஞ்ஞை' என்று அழைப்பாள் என்பர். தற்காலத்தில் பெற்றோர் குழந்தைகளை அப்பா, அம்மா, என்றும் அன்புடன் அழைப்பது ஒப்பு நோக்கத்தக்கது.

தாயைக் குறிக்கச் சங்க இலக்கியத்தில் பயன்படும் மற்றொரு சொல் 'அம்பா' ஆகும். கால்டுவெல் (1856,13) இச்சொல் ஒரு திராவிடச் சொல் எனக்காட்டுவார். இச்சொல் அம்பாவாடல் (அம்பா + ஆடல்) என்ற தொடரின் பழைப்பிரிப் பால் ஏற்பட்டதாகும் என்பார் அருளி (1989,57) அவர் கருத்துப் படி 'அம்பாவை ஆடல்' என்ற தொடரே குறுகி அம்பாவாடல் ஆனது.

அம்பாவை ஆடல் → அம்பாவையாடல் → அம்பாவாடல் → அம்பா ஆடல்

வெம்பா தாக வியலில் வரைப்பென

அம்பா வாடலினாய் தொடிக் கன்னியர் (பரி. 11.81)

என்ற அடிக்கு உரையாசிரியர் தாயொடு ஆடுதல் என அம்பா என்பதற்குத் தாய் எனக் குறிப்பிட்டுச் செல்வர் என்பது அருவியின் கருத்து. தமிழ்ப் பேரகராதி இச்சொல்லை Amb_a என்ற வடமொழிச்சொல்லின் தமிழ்ச் சொல்லாகக் கொள்ளும்.

மேற்கண்ட சொற்களைத்தவிர ஈன்றோள், ஈன்றாள், பயந்தோள் என்ற சொற்களும் தாயைக்குறிக்கச் சில நூற்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இச்சொற்கள் ஈனுதல், பயத்தல் என்ற வினைகளின் அடியாய்ப் பொருள் சிறப்புற்று நிற்பன.

தாயைக்குறிக்கும் சொற்களில் 'ஆ' அல்லது 'அ' எனும் எழுத்துக்கள் அடிச்சொல்லாக நிற்பதால் இச்சொற்கள் பெரும்

பாலும் ஒன்றிற்கு ஒன்று மூலத்திராவிட மொழியில் தொடர் புடையவனவாக இருந்திருக்க வேண்டும். மூலத்திராவிட மொழியின் மற்றொரு பண்பான உடைமை உறவுமுறையை அடியொற்றி ஞாய், யாய், தாய் என்பனவும் பிற சொற்கள் பொதுப்பொருள் அடிப்படையிலும் வளர்ந்திருக்க வேண்டும். வரலாற்று நிலையில் பெரும்பான்மையான சொற்கள் வழக்கிழந்து தற்காலத்தில் தாய், அன்னை, என்ற சொற்கள் மட்டும் எழுத்து வழக்கில் நிலைத்திருக்கின்றன. ஞாய், யாய், என்பன போன்ற உடைமை உறவுமுறைச் சொற்கள் இன்றும் பல்வேறு வட்டாரங்களில் பேச்சு வழக்காகப் பயன்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரை எழுதுவதற்குப் பல்லாற்றானும் உதவி செய்த செல்வி அ. இராதிகாதேவி, ஆய்வு மாணவர், தமிழ்ப் பல்கலைக் கழகம், அவர்களுக்கு என் நன்றி.

சொற் சுருக்கவிளக்கம்

1. அகம் - அகநாநூறு
2. எழுத் - எழுத்ததிகாரம்
3. ஐங் - ஐங்குறுநூறு
4. கலி - கலித்தொகை
5. குறு - குறுந்தொகை
6. தொல். சொல் - தொல்காப்பியம்-சொல்லதிகாரம்
7. நற் - நற்றிணை
8. பரி - பரிபாடல்
9. பிங் - பிங்கலநிகண்டு
10. புறம் - புறநானூறு

துணைநூற்கள்

அருவி, ப. 1989 பெற்றோரைப் போற்றி ...
தமிழினத் தொண்டியக்கம்,
புதுச்சேரி

தாயம்மாள் அறவாணன்	1987	உறவுமுறைகள் ஓர் ஆய்வு பாரி நிலையம், சென்னை
பாலசுந்தரம், ச	1988	தொல்காப்பியம் எழுத்ததிகாரம்
	1988	தொல்காப்பியம் சொல்லதிகாரம்
Caldwell, Robert	1856	**A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages,** (Reprint, 1956). University of Madras, Madras.
Emereau, M.B.	1967	**Dravidian Linguistics Ethnolgy** and Folk Tales, Annamalai University, Annamalainagar
George, L. Hart III	1974	**"Some Aspects of Kinship in Ancient Tamil Literature" Kinship and History in South India** (ed) Thomas R. Trautmann, Michigan papers on South and South East Asia
Kumaraswami Raja, N.	1972	**"Personal kinship terms"** Third Seminar on Dravidian Linguistics (ed) Agesthialingam, S, & Shanmugam, S.V. Annamalai University, Annamalainagar.

கிரியா அகராதி - பெயரடை வினையடைப் பதிவுகள்

பெ. மாதையன்
தஞ்சாவூர்

முன்னுரை

மொழி காலந்தோறும் பெறும் மாற்றங்களை ஆவணப் படுத்துவனவற்றுள் அகராதியும் ஒன்று. அவ்வக்கால மொழியின் இயல்பு மிறிய வடிவங்களையும் பொருள் வளர்ச்சிகளையும் அகராதிகள் பதிவு செய்கின்றன. இலக்கணச் செயற்பாட்டில் வேறுபட்டு இக்காலத் தமிழில் மிகுதியும் கையாளப்பெறுபவை பெயரடை, வினையடைச் சொற்களே ஆகும். முன் குறிப்பிட்ட வகையில் இக்காலத் தமிழுக்கென உருவாக்கப்பட்ட கிரியா அகராதி இவற்றைப் பதிவுகளாய்த் தந்துள்ளது. இப்பதிவுகளின் இயல்புகளே இக்கட்டுரையின் ஆய்வுப்பொருள்.

1. தமிழ் அகராதிகளில் பெயரடை வினையடைப்பதிவுகள்

ஒவ்வொரு மொழியிலும் அகராதி உருவாக்கத்தின் அடிப்படை நோக்கம் சொற்பொருளைத் தருவதே ஆகும். இது அகராதி உருவாக்க ஆரம்பகாலத்தேவை. நாள்கள் செல்லச்செல்ல அகராதிப் பதிவில் சொற்பொருளோடு பிற கூறுகளும் சேர்க்கப்பெற்றன. அவ்வக்கால அகராதியியல் கொள்கை வளர்ச்சிக்கும் பயன்பாட்டாளரின் தேவைக்கும் ஏற்பப் பதிவுகள் வளர்ச்சி பெற்றன. தமிழ் அகராதி வரலாற்றில் இத்தகைய வளர்ச்சிப் போக்குகளை ஓரளவு காண முடிகின்றது. ஐரோப்பியரின் வருகை தமிழ் அகராதி மரபில் புதுவகை நெறிகளைச் சேர்த்தது. சொல்லுக்குப் பொருளை மட்டுமே தருதல் என்றில்லாமல் இலக்கணக் குறிப்பு, வினைச்

சொல்விவரி, மேற்கோள், வினைகளின் வேற்றுமைத் தொடர்பு என்பன போன்ற புதுவகைப் பதிவுக்கூறுகளும் அகராதிகளில் தரப்பட்டன. இவற்றைப் போலவே பதிவு சொற்களை முறைப்படுத்தித் தருவதிலும் புதுவகைப் பதிவுகளைத் தருவதிலும் வளர்ச்சிகள் ஏற்பட்டன. வினைப்பதிவுக்கான தலைச்சொல் அமைப்பில் சீரான போக்கு இவர்களால்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. இதைப்போலவே பெயரடை வினையடைப் பதிவுகளை முதன்முதல் தந்த அகராதி இராட்லரின் தமிழ் ஆங்கில அகராதியே (1834) ஆகும். இதன் பின்னர் வின்சுலோ தமிழ் ஆங்கில அகராதியில் (1862) இப்பதிவுகளின் எண்ணிக்கை சற்றே பெருகிற்று. இவற்றை அடுத்துச் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியில் (1924-36) மிகுதியாய் இப்பதிவுகள் இடம்பெற்றன. இவ்வாறு காலந் தோறும் வளர்ந்துவந்த இப்பதிவுகளின் எண்ணிக்கை மிகுதியைத் தற்காலத் தமிழுக்கென வெளிவந்துள்ள கிரியா அகராதியில் காண முடிகின்றது. இச்சொற்களின் மொழிப் பயன்பாட்டையும் அவை இவ்வகராதியில் பதிவாய் அமைந்துள்ள நிலைமைகளையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

2. பெயரடை வினையடைச் சொற்கள்

தமிழ் மரபிலக்கணங்கள் பெயரெச்சம், வினையெச்சம் எனும் இரு இலக்கணக் கூறுகளைக் குறிப்பிடுகின்றன. பெயரடை, வினையடை என்பன இவற்றினின்றும் வேறு பட்டவை இக்கால மொழிவழக்கில் சில சொற்களின் பயன் பாட்டுச் சூழல்கள் அவற்றின் சொற்பொருள் இலக்கணப் பொருள் இரண்டையும் வேறுபடுத்திக் காட்டுகின்றன.

1. அவனை **அடித்து** என்ன பயன்
2. அவன் இதைப் பொய்யென **அடித்துப்** பேசினான்
3. ஊருக்குச் **சென்ற** பையன்
4. **சென்ற** வருட விளைச்சல் இது
5. **சென்ற** அத்தியாயம்

என்பனவற்றுள் முதலிரண்டு தொடர்களிலும் உள்ள 'அடித்து' எனும் சொல் இருவேறுபட்ட நிலையில் செயற்படுகின்றது. முதலாவது தொடரில் அடித்தல் எனும் வினைப் பொருளைத் தந்து வினையெச்சமாகவும் இரண்டாவது தொடரில் வலியுறுத்தி (அ) ஆணித்தரமாக எனும் பொருளிலும் செயற் படுகின்றது. இரணடாவது தொடரில் வரும் அடித்து எனும் அதேசொல் வேறுபட்ட பொருளைத் தருவதால் இக்கால மொழிவழக்கில் அது வினையடை எனக் குறிப்பிடப் பெறுகின்றது. எஞ்சியுள்ள பின் மூன்றாம் தொடரில் உள்ள சென்ற எனும் சொல் செல்லுதல் என்னும் வினைப்பொருளைத் தர எஞ்சிய இரண்டிலும் முறையே கடந்த, போன: முந்தைய எனும் பொருட்களைத் தருகின்றது. எனவே இவ்விரண்டும் பெயரெச்ச இயல்பினின்றும் வேறுபட்டு வருவதனால் இவை போல்வன இக்கால வழக்கில் பெயரடை எனக் குறிப்பிடப் பெறுகின்றன.

இவற்றோடு சுருங்க, திரும்ப, திரும்பவும், திருப்பவும், திருப்பி, திருப்பியும், இழுத்து, உரத்து, உரக்க, அழுத்தி என்பன போல்வனவும் மெதுவாய், மெதுவாக, விரைவாக விரைவாய், சிறிது. கொஞ்சம், சீக்கிரம், சீக்கிரமாக, சீக்கிரத்தில், தினம், தினமும், நாளும், அன்றாடம், தனியே, தள்ளி, தெரிந்தே, பாட்டுக்கு, ஒருமாதிரி, என்பன போன்றவையும் வினையடைகளாய்க் குறிப்பிடப்பெறுகின்றன. இவ்வாறே சில, பல, சிறு, சிறிய, தனிப்பட்ட, உயர்ந்த, தலையாய, தெற்கத்திய, பிந்திய, முற்றிய, நாட்பட்ட, சாதா, சிறந்த, சுய, சுத்த, சொந்த, தக்க, ஆழ்ந்த, இடம், நடமாடும், மர்ம, ஏற்ற, ஏற்புடைய, சிறந்த என்பன போன்றவை பெயரடையாகவும் வரையறுக்கப்பட்டுள்ளன. இயல்பான பெயரெச்ச வினையெச்சச் செயற்பாடுகளினின்றும் வேறுபட்டுச் செயற்படுவனவும் பொருள் நிலையில் வேறு பட்டனவும், குறிப்பிட்ட சொல்விரிவு நிலையில் குறித்த பயன் பாட்டுச் சூழலில் மட்டுமே வரும் சொற்களும் பெயரடை வினையடைச் சொற்களாய்க் கருதப்பெறுகின்றன. இத்தகைய சொற்கள் இக்கால வழக்கில் மிகுதியும் கையாளப்படுவதால் இவற்றின் பொருள் வரையறைகளை அகராதியில் தரவேண்டுவது

இன்றியமையாததாகின்றது. இதை நாம் நம் மரபிலக்கணத் தோடும் இணைத்துக் காணலாம். தொல்காப்பியர் உரியியலில் தரும் சொற்கள் சில இத்தன்மையனவாய் உள்ளன. நனி எனும் சொல் 'நனி துயர்' எனப் பெயருக்கு முன் வரும் நிலையில் 'மிக்க' எனப்பெயரடையாகவும் 'நனி வருந்தினை' என வினைக்கு முன் வருகையில் 'மிகவும்' என வினையடை யாகவும் செயற்படுகின்றது. தொல்காப்பியர் இவற்றிற்குச் சொற்பொருள் கூறி இவற்றை உரிச்சொல் எனக்குறிப் பிட்டதைப்போன்று இக்காலச் சூழலில் இவை போன்ற சொற்கள் பெயரடை வினையடைப் பதிவுகளாய் அகராதிகளில் இடம்பெறுகின்றன.

3. கிரியா அகராதியும் பெயரடை வினையடைப் பதிவுகளும்

இவ்வகராதி தற்காலத் தமிழுக்கான அகராதி என்பதால் இன்றைய தமிழில் பெருவழக்கினவாய் வரும் இச்சொற்கள் மிகுதியும் பதிவுகளாய் இடம் பெற்றுள்ளன. உரக்க, உரத்து, அடித்து, திருந்த, தள்ளி, தெரிந்தே, திரும்பி, திரும்ப, அடித்துப் பிடித்து, ஆறஅமர, ஒட்ட, எடுத்து, ஏறஇறங்க, ஏறக்குறைய, ஏறத்தாழ, ஏற்ப, ஒருக்களித்து, என்ப போன்றவையும் ஒருங்கே, நேற்று, நேற்றைக்கு, ஓரளவு, ஓரளவுக்கு, சதா, சிவமயம், சும்மா, செவ்வனே, பாட்டில், பாட்டுக்கு, நெடுக, தற்சமயத்துக்கு, துரிதகதியில், விரைவாக, விரைவில், தானாக என்பன போன்றவையும் வினையடைப் பதிவுகளாய்த் தரப்பட் டுள்ளன. இவ்வாறே அடாத, அந்தந்த, செம்மாந்த, செவ்விய, சென்ற, தக்க, சில, தடித்த, சாஸ்திரிய, அன்றைய, ஆனானப் பட்ட, ஆதர்ச, சதா, இப்படிப்பட்ட, எளிய, ஏகமனதாக, ஒன்று பட்ட ஏகோபித்த, சீரிய, தார்மீக, தென் என்பன போன்றவை பெயரடைப்பதிவுகளாக இடம்பெற்றுள்ளன. இதற்கு முன்வந்த எவ்வகராதியிலும் இல்லாத அளவிற்கு இவ்வகராதி இப் பதிவுகளை மிகுதியும் தந்திருப்பது தாய்மொழியாளர், அயன் மொழியாளர் இருவருக்குமே மிகுதியும் பயன்படவல்லது. இவற்றுடன் அதாவது, ஆகவே, ஆக, அடேயப்பா, இருந்த போதிலும், ஆகவும், என்ற, என்று, என, ஆய், ஒப்ப, கூடவே,

தலா, தொட்டு, வலு, வேறு என்பன போன்றவையும் பதிவுகளாய்த் தரப்பட்டுள்ளன. இவை இடைச்சொற்கள் எனக் குறிப்பிடப்பட்டுளளன. ஏனைய அகராதிகளில் இல்லாத அளவுக்கு இவையும் இவ்வகராதியின் மிகுந்த அளவில் தரப் பட்டுள்ளன.

இவ்வாறு இவ்வகராதியில் தரப்பட்ட இப்பதிவுகள் பல வற்றில் குறைபாடுகள் காணப்படுகின்றன. பதிவுச்சொல் தெரிவு, இலக்கணக் குறிப்பு, பொருள் எனும் மூன்று நிலை களிலும் இவற்றுடன் சில இடங்களில் மேற்கோள் தருதலிலும் இக்குறைபாடுகளைக் காணமுடிகின்றது. இவற்றுடன் இப் பெயரடை வினையடைப் பதிவுகளில் பொருட்சொற்களாய் இடம்பெற்ற சொற்கள் சிலவும் பதிவாய் இடம்பெற்ற சொற்களை ஒத்த வேறுபிற சொற்களும் ஒத்த பொருளில் வரும் எதிர்மறைச் சொற்களும் ஆய் ஈற்றுவினையடைப் பதிவுகளும் விடுபட்டுள்ளன.

3.1. பதிவின் பெயர், பெயரடை, வினையடைச்செயற்பாடு

இவ்வகராதியில் இடம்பெற்ற பெயர், பெயரடை, வினை யடைப் பதிவுச்சொற்கள் சில வேறு இலக்கணக் கூறாயும் செய் படுவனவாய் உள்ளன. பெயர் எனக் குறிப்பிடப்பட்ட சொல் வினையடையாகவும் குறிப்புவினையாகவும் செயற்படுகின்றது. இவ்வாறே பெயரடை எனப்பட்ட பதிவுச்சொல் வினையடை யாகவும் வினையடை எனத்தரப்பட்ட சொல் பெயரடையாகவும் செயற்படும் நிலையை இக்கால மொழிவழக்கில் காணலாம்.

3.1.1. பெயரின் பிற செயற்பாடு

இவ்வகராதியில் பெயர் எனக்குறிப்பிடப்பட்ட சில பதிவுகள் இவ்விலக்கணச் சூழலுக்கு அப்பாற்பட்ட நிலையில் வேறு இலக்கணச் சூழல்களிலும் செயற்படுகின்றன. பின்வரும் பதிவுச் சொற்கள் இதற்குச் சான்றாகின்றன.

பூரா பெ. முழுமை; Whole entire

ராத்திரி பூராவும் தூங்கவே இல்லை.

செய்தி அதற்குள் ஊர்பூராவும் பரவிவிட்டது.

இனிது பெ. (-ஆக, -ஆன)
மனத்துக்கு நிறைவு அல்லது மகிழ்ச்சி தருவது, sth pleasant; pleasantness.
இனிது இனிது ஏகாந்தம் இனிது / விழா நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவேறியது. உங்களுக்கு இனிதான வாழ்க்கை அமைய என் வாழ்த்துக்கள்.

கூடுதல் பெ. 2. (தற்போது இருப்பதற்கும் ஆல்லது ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கும்) மேல்; additional; extra.
கூடுதல் நிதி வழங்கப்படும் / கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படும்.

3. (அலுவலகம், பதவி ஆகியவற்றைக் குறிக்கையில்) (தேவை கருதி) மேலும் ஏற்படுத்தப்பட்டது; additional; Joint கூடுதல் நீதிமன்றம்/கூடுதல் பொதுச் செயலர்.

மேலே காட்டப்பட்டவற்றுள் பூரா எனும் சொல் பெயர்ச்சொல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. முழுமை என்பது பொருட் சொல்லாய்த் தரப்பட்டுள்ளது. இங்கு 'ராத்திரி பூராவும் தூங்கவே இல்லை', 'ஊர் பூராவும் பரவிவிட்டது' என்பன மேற் கோளாய்த் தரப்பட்டுள்ளன. இப்பதிவில் காட்டப்பட்ட 'பணம் பூராவையும் திருப்பிக் கொடு' என்பதில் மட்டுமே பெயராய் உள்ளது. முந்தைய மேற்கோள்களில் பெயராய்ச் செயற்பட வில்லை. அவ்விரண்டு மேற்கோள்களிலும் உம் எனும் இடைச் சொல் இன்றிப் பூரா என்பதைப் பொருள் மாற்றம் இன்றி ராத்திரி பூரா தூங்கவே இல்லை, 'ஊர் பூரா பரவிவிட்டது' எனப் பயன்படுத்த இயலும். இவ்விரண்டிலும் பூரா என்பது 'முழுக்க' எனும் பொருளில் வினையடையாகவே செயற்படுகின்றது. எனவே பூரா, பூராவும் எனும் இரண்டுமே வினையடை எனும் இலக்கணக் குறிப்புடன் தனிப்பதிவுகளாய்த் தரப்பட்டிருக்க வேண்டும். இதைப் போலவே பூரா என்பது பெயரடையாகவும் வரவல்லது. 'பூரா சொத்தும் அவனுக்கே சொந்தமானது' ,பூரா கணக்கையும் அவனே போட்டான்' எனப்பூரா எனும்

சொல் (அடுத்து வரும் பெயர் உம் ஏற்றுவரும்) பெயருக்கு முன் வருகையில் எல்லா அனைத்து எனப் பெயரடைப் பொருளைத் தருகின்றது. எனவே இப்பொருண்மைக்குத் தனிப்பதிவு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இங்கே நாம் சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் இப்பதிவு தரப்பட்ட தன்மையையும் எண்ணிப்பார்க்கவேண்டும்.

பூரா[1] pura, <U pura adj. Complete, Full, Whole; முழுதுமான - adv. Fully, Completely; முழுதும்

எனும் இப்பதிவில் பெயர்ப்பொருள் தரப்படாமல் முழுமையான முழுதும் எனும் பெயரடை. வினையடைப் பொருட்களே தரப்பட்டுள்ளன. ஆனால் இவ்வகராதியோ இவ்விரு பொருளையும் விடுத்துப் பெயர்ப் பொருளை மட்டுமே தந்துள்ளது.

இரண்டாவது காட்டில் இனிது எனும் சொல் பெயர் எனக்குறிப்பிடப்பட்டு 'மனதுக்கு நிறைவு அல்லது மகிழ்ச்சி தருவது' எனப்பொருள் தரப்பட்டுள்ளது. காட்டப்பட்ட மேற்கோள்களில் 'இனிதான வாழ்க்கை' எனும் தொடரில் உள்ள இனிது மட்டுமே இனிமை எனப்பொருள்பட்டு வரவல்லது. ஏகாந்தம் இனிது எனும்பொழுது இனிமையானது எனக் குறிப்பு வினையாய் உள்ளது. ஆனால் 'விழா இனிது நிறைவேறியது' எனும் தொடரில் இனிது என்பது இனிதாக என்னும் பொருளில் வினையடையாய் வருகின்றது. எனவே இது வினையடைப் பதிவாகவும் தரப்பட்டிருக்க வேண்டும்.

மூன்றாவது காட்டில் உள்ள கூடுதல் எனும் சொல் அதிகம் எனும் பொருளில் வரவல்லது. இது முதலாவது பொருளாய்த் தரப்பட்டு உரிய மேற்கோள்களும் தரப்பட்டுள்ளன. இனி எஞ்சியுள்ள 'மேல்' 'மேலும் ஏற்படுத்தப்பட்டது' எனும் பொருள்கள் சரிதானா என்பது மேலாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஒன்று. கூடுதல் எனும் சொல் இருவேறு நிலையில் மொழியில் செயற்படுகின்றது.

இவற்றின் கூடுதல் எவ்வளவு

நீ அவனுக்குக் கொடுத்ததே கூடுதல்

அவர் கூடுதல் நிதிகேட்டுக் கடிதம் எழுதினார்

என்பனவற்றுள் முதலாவது காட்டில் 'மொத்தம்' எனும் பொருளையும் இரண்டாவது காட்டில் அதிகம் எனும் பொருளையும் தருகின்றது. ஆனால் மூன்றாவது தொடரில் 'அதிகம் எனப் பெயரடைப் பொருளிலேயே நிற்கின்றது. இவ்வகராதியின் கூடுதல் எனும் பதிவில் காட்டப்பட்ட கூடுதல் நிதி, கூடுதல் பெட்டி, கூடுதல் படை எனும் மேற்கோள்களில் கூடுதல் என்பது கூடுதலான, அதிக எனும் பொருளையே தருகின்றது. இத்தொடர்களில் 'அதிக' என்பதைப் பதிவீடு செய்ய முடிகின்றது. எனவே இங்கு இச்சொல் பெயரடை எனக் குறிப்பிடப்படுவதுடன் உரிய பெயரடைப் 'பொருள்களும் தரப்படல் வேண்டும்.

இதைப்போலவே அதிகம் எனும் பதிவில் கூடுதல் எனும் பொருள் தரப்பட்டுள்ளது. That which is more என ஆங்கிலப் பொருள் தரப்பட்டுள்ளது. மேலும் 'திருமணமானபின் அதிகம் வெளியே செல்ல முடியவில்லை' எனும் மேற்கோளும் தரப் பட்டுள்ளது. இங்கு அதிகம் என்பது 'அதிகமாக' என வினையடைப்பொருளையே தருகின்றது. இதைப்போலவே கைகள் அதிகம் நடுங்கும், 'கைகள் அதிகமாக / அதிகமாய் நடுங்கும்' என்பனவும் வினையடைகளே அன்றிப் பெயரல்ல; எனவே அதிகம் எனும் சொல் கூடுதல் தரவுகளின் அடிப்படையில் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு பதிவு செம்மைப்படுத்தப்பட வேண்டும்.

இவற்றைப் போலவே பச்சை எனும் பதிவிலும் சிக்கல்கள் உண்டு. பச்சை[2] பெ. 1. வேகவைத்தல், சுடவைத்தல் போன்ற எந்தவிதத் தயாரிப்புக்கும் உள்ளாகாத நிலை; பச்சைமீன் / பச்சைத் தண்ணீர்

2. காய்ந்து போகாமல் ஈரப்பதத்துடன் இருக்கிற நிலை; பச்சைக்களிமண் / பச்சை மூங்கில்.

பச்சை[3] பெ. 1. (ஒளிவு மறைவோ நயமோ இல்லாத) வெளிப்படை; பச்சையாகக் கேட்டுவிடப் போகிறேன்

2. கலப்பற்ற தன்மை, சுத்தம்; பச்சைப்பொய் / பச்சைத் தமிழர்.

3. (பேச்சு, எழுத்து குறித்து வருகையில்) ஆபாசம்; பச்சையாகப் பேசுவான் / பச்சையாக எழுதுகிறார்கள்.

எனப் பதிவில் கொடுக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் பெயர்ப்பொருட்கள் என்றாலும் சான்றுகள் அவ்வாறு செயற் படவில்லை. அனைத்தும் அடைநிலையிலேயே உள்ளன. பச்சைமீன் என்பதில் வேகவைக்காதஎனவும் பச்சைத்தண்ணீர் என்பதில் சுடவைக்காத எனவும் பெயரடையாகவே உள்ளது. இவ்வாறே பச்சைக்களிமண் என்பதில் காயாத (அ) ஈரமான எனவும் பச்சைப்பொய் என்பதில் கலப்பற்ற எனவும் பெயரடை யாகவே நிற்கின்றது. பதிலில் காட்டப்பட்ட பொருட்களில் இச்சொல் இவர் பேசும் பொய் பச்சை, இவர் எழுத்து பச்சை, இத் தண்ணீர் பச்சை என வர வாய்ப்பில்லை. ஒருசில இடங்களில் இந்த மூங்கில் பச்சை, இது காய்ந்தது என வர வாய்ப்புண்டு. எனவே இத்தகு பயன்பாடுகளை வேறுபடுத்தி அறிந்து பதிவு திருத்தியமைக்கப்பட வேண்டும். மேலும்' 'பச்சையாகக்கேட்டுவிடப்போகிறேன்', பச்சையாகப் பேசுவான் எனும் இடங்களில் பச்சை எனும் சொல் ஆக எனும் வினை யடை விகுதி இன்றி வாராது. எனவே இங்கு ஆக ஈற்றுடன் வினையடையாகவே பதிவு தரப்பட வேண்டும். இளமையானது எனும் பொருளுக்கு மேற்கோவாய்த் தரப்பட்ட 'பச்சைக் குழந்தை' என்பதிலும் பச்சை அடையாகவே உள்ளது. 'பச்சை உடம்பு' என்பதுபோல் 'பச்சைக்குழந்தை' தனிப் பதிவாய்த் தரப்படவேண்டும்.

இச்சொல்லைப்போலவே அண்மையில், அருகாமையில் எனும் சொற்களையும் வினையடைப் பதிவுகளாகவே தருதல் வேண்டும். அண்மை, அருகாமை எனும் பெயர்ப்பதிவுகளில் அருகு, சமீபம் எனும் பொருட்களுக்கு முறையே அவர் வீடு மிக அண்மையில் இருக்கிறது', 'ஊருக்கு வெகு அருகாமையில் ஒரு சிற்றாறு ஓடுகிறது' எனும் மேற்கோள்கள் தரப்பட்டுள்ளன.

இம்மேற்கோள்களில் அருகே / அருகில் என்பனவற்றைப் பொருள் மாற்றம் இன்றிப் பயன்படுத்த இயலும். இல்விகுதி இன்றி அண்மை அருகு எனும் சொற்களைப் பயன்படுத்த இயலாது. எனவே அருகே, அருகில் என்பனவற்றைப் போல் அண்மையில், அருகாமையில் என்பனவும் வினையடைகளாய்த் தனிப்பதிவுகளாய்த் தரப்படவேண்டும்.

ஒருமாதிரி[1] பெ. (-ஆக, -ஆன)
இயல்புக்கு அல்லது வழக்கத்துக்கு மாறான முறை; நான் அந்தக் கேள்வியைக் கேட்டதும் அவர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார் / அவர் ஒரு மாதிரியான ஆள். / ஏன் ஒருமாதிரி இருக்கிறாய்.

இப்பதிவில் காட்டப்பட்ட 'ஏன் ஒருமாதிரி இருக்கிறாய்' என்பதில் உள்ள ஒரு மாதிரி என்பது ஒரு மாதிரியாக எனவே பொருள் தருகின்றது. இதைப் போலவே 'என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்' என்பதில் ஒரு மாதிரீ எனும் சொல்லைப் பதிலீடு செய்தாலும் பொருள் மாற்றம் இல்லை. இவ்வாறு ஒரு மாதிரி என்பது தனித்தும் 'ஆக' விகுதிபெற்றும் வினையடையாகச் செயற்படுதலால் இது தனிப்பதிவாய்ப் தரப்படல் வேண்டும். இதைப் போலவே 'ஒருமாதிரி' என்பது பெயரடையாகவும் வரவல்லது. 'அவன் ஒருமாதிரி ஆள்' எனும் சூழலில் ஒரு மாதிரியான எனப் பெயரடைப் பொருளையே தருகின்றது. எனவே இம்மேற்கோள்களுடன் இப்பதிவுச் சொல் இவ்வகராதிப் பதிவமைப்பு நெறிப்படி

'ஒரு மாதிரி -ஆக / ஆன வி. அ / பெ. அ.' எனத் தனிப் பதிவாய்த் தரப்படல் வேண்டும். மேலும் பெயர்ப்பதிவில் அவர் ஒருமாதிரி, அவன் ஒருமாதிரி, அது ஒரு மாதிரி எனும் மேற்கோள்களையும் காட்டி ஒருமாதிரி எனும் சொல் எழுவாய்க்கு ஏற்றவகையில் பொருள் நிலையில் ஒரு மாதிரியானவர், ஒரு மதிரியானவள், ஒருமாதிரியானது என விரியும் இயல்பையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

3.1.2. வினையடை-பெயரடைச் செயற்பாடு

இக்கால மொழிநடையில் ஒத்தவடிவச் சொற்கள் சில வினையடையாக மட்டுமன்றிப் பெயரடையாகவும் செயற்படுகின்றன. இத்தகைய சொற்கள் சில இவ்வகராதியில் வினையடைப்பொருளுடன் மட்டுமே பதிவுகளாய் அமைக்கப் பட்டுள்ளன.

கைமேல் வி. அ. சற்றும் தாமதம் இல்லாமல்; உடனடியாக;

இந்த மருந்து சாப்பிட்டதும் கைமேல் பலன் கிடைக்கும் பார் காரியத்தை முடித்ததும் கைமேல் காசு கிடைத்தது.

எனும் பதிவின் முதலாவது காட்டு மேலாய்வுக்கு உட்படுத் தப்பட வேண்டியதாய் உள்ளது. 'கைமேல் பலன் கிடைக்கும்' என்பதில் கைமேல் என்பதைப் பலன் என்பதோடும் கிடைக்கும் என்பதுடனும் 'கைமேல் பலன்' எனவும் 'கைமேல் கிடைக்கும்' எனவும் இணைக்கலாம். கைமேல் பலன் எனும் பொழுது உடனடியான பலன் எனவும் கைமேல் கிடைக்கும் எனும் பொழுது உடனடியாக எனவும் பெயரடையாகவும் வினையடையாகவும் பொருள்பட்டு வரவல்லது. எனவே இங்குப் பெயரடைப் பொருளும் தரப்பட்டிருக்க வேண்டும் (காண்க பெயரடை - வினையடைச்செயற்பாடு, ப.)

ரொம்ப வி. அ1. மிகவும்; சாப்பாட்டுக்கே ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கிறேன்.

2. நிரம்ப; சாப்பிடுவதற்கு முன் தண்ணீர் ரொம்பக் குடிக்காதே / ரொம்ப நேரம் பேசினார்.

இப்பதிவில் தரப்பட்டுள்ள 'ரொம்ப நேரம் பேசினார்' எனும் மேற்கோளில் ரொம்ப என்பது நேரம் எனும் சொல்லோடு இணைந்து நின்று அதற்கு அடையாய் நிறைய நேரம் எனப் பெயரடையாகவே பொருள்பட்டு வருகின்றது. அவர் 'ரொம்பப் பேசினார்' எனும் பொழுது மிகுதியாக என வினையடை யாகச் செயற்படுகின்றது. 'ரொம்பப் பேர் என்னிடம் விசாரித்தனர்' 'என்னிடம் ரொம்ப விசாரித்தனர்' எனும்

இரண்டு தொடரில் முதலாவதில் மிகுதியான எனப் பெயரடைப் பொருளிலும் இரண்டாவதில் மிகுதியாக என வினையடைப் பொருளிலும் 'ரொம்ப எனும் சொல் நிற்கின்றது. இவ்வகராதியில் காட்டப்பட்ட 'ரொம்பநேரம் பேசினார்' எனும் தொடரில் நிறைய, நிரம்ப எனும் இருசொல்லையும் பதிலீடு செய்ய இயலும். இவற்றுள் நிறைய என்பது இவ்வகராதியில் வினையடை, பெயரடை எனும் இரு இலக்கணக் குறிப்புகளுடனும் பதிவாய்த் தரப்பட்டுள்ளது. ஆனால் நிரம்ப எனும் சொல் வினையடை என மட்டுமே குறிப்பிடப் பட்டுள்ளது. ரொம்ப என்பதைப் போல் நிரம்ப என்பது 'நிரம்பப் பேசினார்' என வினையடையாக மட்டுமே அன்றி 'நிரம்ப நேரம் பேசினார்' 'நிரம்பப் பேரிடம் விசாரித்தான்' எனப் பெயரடையாகவும் வரும். எனவே ரொம்ப, நிரம்ப எனும் இருபதிவிலும் இப்பெயரடைப் பொருள் சேர்க்கப்பட வேண்டும்.

3.1.3. பெயரடை வினையடைச் செயற்பாடு

சில வினையடைச் சொற்களைப் போலவே ஒத்த வடிச் சொற்கள் சில பெயரடையாக மட்டுமன்றி வினையடையாகவும் செயற்படவல்லன. இதற்கு உடனடி எனும் பதிவைச் சிறந்த சான்றாய்க் காட்டலாம்.

உடனடி பெ. அ. தற்போது மிக அவசியமான;

> பணம் சேர்ப்பதே அவனுடைய உடனடிக் குறிக்கோள்
> இந்த மாத்திரை தலைவலிக்கு உடனடி நிவாரணம் தரும்.

இங்கே நாம் கைமேல் எனும் சொல்லையும் இணைத்துக் காண வேண்டும். உடனடி, கைமேல் எனும் இரு சொற்களையும் குறிப்பிட்ட சில சூழல்களில் பதிலீடு செய்ய இயலும். 'கைமேல் பலன் கிடைக்கும்' எனும் தொடரில் உடனடி என்பதைப் பதிலீடு செய்து 'உடனடி (ப்) பலன் கிடைக்கும்' எனவும் எழுதலாம். இங்கு இத்தொடரை, 'பலன் உடனடி கிடைக்கும்' எனவும் மாற்றி எழுதலாம். இங்கு உடனடி என்பது உடனடியாக

என வினையடைப் பொருளையே தருகின்றது. இதைப்போலவே உடனடி நிவாரணம் தரும் என்பதையும் உடனடியான நிவாரணம் தரும், எனவும் உடனடியாக நிவாரணம் தரும் எனவும் விரித்து எழுதலாம். எனவே உடனடி என்பதற்கு வினையடையப்பொருளும் தரப்பட வேண்டும்.

சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியின் அனுபந்தத் தொகுதியில் உடனடி என்பது திருநெல்வேலி வழக்கில் உடனே எனும் பொருளில் வினையடையாக வருவதாய்க் குறிப்பிடப் பட்டுள்ளதையும் இங்கே ஒப்பிட்டு நோக்க வேண்டும்.

3.2. இலக்கணக் குறிப்பு முரண்

இவ்வகராதியில் ஒத்த பொருளில் வரும் சொற்கள் பல வேறுபட்டநிலையில் பதிவுகளாய்த் தரப்பட்டுள்ளன. சில பதிவுகளில் ஒரு குறிப்பிட்ட சொல் பொருட் சொல்லாய்த் தரப்பட்டிருந்தாலும் அப்பொருட்சொல் பதிவாய் வருகையில் அதற்கு இலக்கணக் குறிப்பு வேறுபடத் தரப்பட்டுள்ளது. இதற்குப் பின்வருவன சிறந்த சான்றுகளாகின்றன.

அறவே	வி. அ.	முற்றிலும், முழுவதும்
முற்றிலும்	வி. அ.	முழுவதும்
எங்கணும்	வி. அ.	முழுவதும்
எங்கும்	வி. அ.	முழுவதும்
துப்புரவாக	வி. அ.	முழுவதும்

என அனைத்து வினையடைப் பதிவுகளுக்கும் முழுவதும் என்பது பொருட்சொல்லாய்த் தரப்பட்டுள்ளது. ஆனால் முழுவதும் என்பதும் முழுதும் என்பதும்

முழுவதும் பெ. (இடத்தின்) எல்லாப் பகுதியிலும்;

(காலத்தின்) விட்டுப்போகாத மொத்த அளவிலும்;
நான்கு வாரமாகப் பூட்டிக்கிடந்ததில் வீடு முழுவதும்
தூசி / இரவு முழுவதும் தூங்கவில்லை.

முழுதும் பெ. காண்க முழுவதும்

எனப் பெயர்ப்பதிவுகளாய்க் காட்டப்பட்டுள்ளன. இவ்விரு சொல்லையும் மேற்காட்டப்பட்ட 'அறவே' முதலான வினை யடைச் சொற்கள் பயன்படும் தொடர்களில் பொருள்மாற்றம் இன்றிப் பயன்படுத்த இயலும். புத்தமதம் உலகம் எங்கணும் பரவியது, வீடெங்கும் ஒரே தூசி, முழுக்க நனைந்துவிட்டேன், முற்றிலும் அழிந்துவிட்டன எனும் தொடர்களில் முழுவதும், முழுதும் எனும் சொற்கள் பதிலீடு செய்யக் கூடியவை யாதலால் இவையும் வினையடைகளே. மேலும் முழுவதும் எனும் பதிவில் 'எல்லாப் பகுதியிலும்' என வினையடைப் பொருட்களே இவ்வகராதியில் தரப்பட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது.

இவற்றைப்போலவே போல், போல எனும் இரண்டும் இடைச் சொல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் போன்று என்பது வினையடை எனச் சுட்டப்பட்டுள்ளது. இப்பதிவில் காட்டப்பட்டுள்ள 'சவுக்குப்போன்று இந்த மரமும் மணலில் நான்றாக வளரும்' எனும் மேற்கோளில் போல், போல எனும் இரண்டையும் சவுக்குப்போல் / போல எனப் பொருள் மாற்றம் இன்றிப் பயன்படுத்த இயலும். எனவே போல், போல இரண்டும் இச்சூழலில் வினையடையாகத்தானே செயற்படுகின்றன. இவ்வாறே போல், போல வரும் தொடர்களில் போன்று வர வாய்ப்புண்டா என்பதும் தரவுகளின் அடிப்படையில் ஆராயப் பட்டு இப்பதிவுகள் உரியவகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

கூடவே	இணை இ. சொ.	மேலும்
கூட	வி. அ.	மேலும்
அன்றியும்	இணை. இ. சொ.	மேலும்
தவிரவும்	இ. சொ.	மேலும்
மேலும்	வி. அ.	

இப்பதிவுகளில் கூடவே, அன்றியும் என்பன இணைப்பிடைச் சொல் எனவும் தவிரவும் என்பது இடைச்சொல் எனவும் குறிப்பிடப்பட்டு மேலும் என்பது பொருட் சொல்லாய்த் தரப்

பட்டுள்ளது. ஆனால் மேலும் என்பது தனிப்பதிவாய்த் தரப் பட்ட நிலையில் அது வினையடை எனக் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் என்பதைக் 'கூடவே' முதலான பதிவுகளில் காட்டப்பட மேற்கோள்களில் பதிலீடு செய்ய இயலுமா இயலுமாயின் அனைத்தின் இலக்கணச் செயற்பாடும் மேலாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். பதிலீடு செய்ய இயலாதெனின் மேலும் எனும் பொருட்சொல்லுக்குப் பதிலாக உரிய பொருட் சொற்களை அப்பதிவுகளில் தரல் வேண்டும்.

சுற்றி இ. சொ. (ஒருவரை, ஒருபொருளை) வட்டமாக வளைத்து; (ஓர் இடத்தை மையமாகக்கொண்டு எல்லாப்பக்கங்களிலும் **வீட்டைச் சுற்றி வேலி.**

சுற்றிலும் வி. அ. சுற்றுமுற்றும்; **வீட்டைச் சுற்றிலும் மரங்கள்.**

சுற்றிவர வி.அ. சுற்றிலும்; **வீட்டைச் சுற்றிவர முள்வேலி**

சுற்றுமுற்றும் வி. அ. நாலாபக்கமும், **சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுத் தெருவைக் கடந்தான்.**

நாலாபக்கமும் பெ. (குறிப்பிடப்படும் இடத்தைச் சுற்றி யுள்ள) எல்லாத் திசையும்; **நாலாபக்கமும் தீ எரிய ஆரம்பித்தது.**

நாலாபுறமும் பெ. காண்க நாலாபக்கமும்

மேற்காட்டிய பதிவுகளில் சுற்றி, சுற்றிலும், சுற்றிவர என்பன வற்றில் ஒரே மாதிரியாக வீட்டைச் சுற்றி / சுற்றிலும் / சுற்றிவர எனும் நிலையில் மேற்கோள்கள் தரப்பட்டிருந்தாலும் சுற்றி என்பது மட்டும் இடைச்சொல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சுற்றி, சுற்றிலும், சுற்றிவர எனும் மூன்றையும் வீட்டைச் சுற்றி/ சுற்றிலும் / சுற்றிவர வேலி போட்டனர் எனப்பொருள் வேறு பாடின்றி ஒரே சூழலில் பயன்படுத்த இயலும். எனவே சுற்றி என்பதையும் வினையடை எனக்கொள்வதே பொருத்தமானது.

சுற்றி என்பதைப் போலவே நாலாபக்கமும், நாலாபுறமும் என்பனவும் வேறுபட்ட இலக்கணச் செயற்பாட்டை உடையன. இவை இரண்டும் சுற்றுமுற்றும் என்பதைப்போலவே செயற்பட வல்லன. சுற்றுமுற்றும் எனும் பதிவில் வினையடை எனும் இலக்கணக் குறிப்பும் 'நாலாபக்கமும்' எனப் பொருளும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் நாலாபக்கமும் என்பதற்கு பெயர் என இலக்கணக் குறிப்பு தரப்பட்டுள்ளது. இதைப் போலவே நாலாபுறமும் என்பதும் பெயர் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. பொதுவாகச் சில பெயர்கள் உம் எனும் இடைச் சொல்லோடு இணைந்து வருகையில் வினையடையாகச் செயற் படும். சான்றாக எப்பொழுதும், தினமும், நாளும், முழுவதும் என்பனவற்றைக் காட்டலாம். இவ்வாறுதான் நாலாபக்கம்; நாலாபுறம் என்பன உம் ஏற்காத நிலையில் பெயராகவும் உம் ஏற்ற நிலையில் வினையடையாகவும் செயற்படுகின்றன. எனவே சுற்றிலும் என்பதைப்போல் இவையும் வினையடை எனக் குறிப் பிடப்படவேண்டும்.

வாயிலாக எனும் பதிவிற்கு வினையடை எனும் இலக்கணக் குறிப்பும் மூலம், வழியாக எனப்பொருளும் கொடுக்கப் பட்டுள்ளது. இவ்விரு பொருட்சொல்லும் பதிவாய்த் தரப்பட்ட நிலையில் அவற்றிற்கு இடைச்சொல் என் இலக்கணக் குறிப்பு தரப்பட்டுள்ளது. இம்மூன்று சொல்லையும் 'தொலைபேசி' வாயிலாக / வழியாக / மூலம் தொடர்பு கொள்ளலாம்' எனப் பொருள் மாற்றமின்றிப் பயன்படுத்தலாம். எனவே மூன்றும் ஒரே இலக்கணச் செயற்பாட்டினவே. எனவே இவற்றின் இலக்கணச் செயற்பாடு மேலாய்வுக்கு உட்படுத்தப்பட்டு சீர் செய்யப்படவேண்டும். மேலும் வழியாக எனும் பதிவில் 'வேற்றுமை உருபு இன் என்பதன் பின்' எனும் குறிப்பு தரப் பட்டுள்ளது. ஆனால் இது கட்டாயம் இல்லை. 'ஜன்னல் வழியாகக் காற்று வீசியது' எனவும் வரலாம் இது உருபுடன் 'ஜன்னலின் வழியாக' என வரவேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

பிறிது, வேறு எனும் இரண்டில் வேறு, மரபிலக்கணங்களில் இருதிணைக்கும் பொதுவாய்வரும் குறிப்பு வினையாய்க் குறிப்

பிடப்பட்டுள்ளது. இது அவன் வேறு, அவள்வேறு, அவர்வேறு, அதுவேறு, அவைவேறு என வரவல்லது. ஆனால் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி இதைப்பெயர் எனக் குறிப்பிடுகின்றது. இவ்வகராதியோ இச்சொல்லை இடைச்சொல் எனக் குறிப்பிடுகின்றது. இச்சொல்லும் விரிவான தரவுகளின் அடிப்படையில் மேலாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியதே. பிறிது என்பது இவ்வகராதியின் பெயர் எனச் சுட்டப்பட்டிருப்பதுடன் வேறு என்பது பொருட்சொல்லாய்க் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒத்த பொருட்சொற்களுக்கு இவ்வாறு முரண்படப் பொருள் தருவது பொருந்தாது. இவையும் சீர்மை செய்யப்பட வேண்டியனவே. பிறிது என்பதை வேறு வரும் எல்லா மொழிச் சூழல்களிலும் பயன்படுத்த இயலாது. வேறோர் மொழி, பிறிதோர் மொழி என ஒரு குறிப்பிட்ட சூழல்களின் பதிலீடு செய்ய இயலும். இது வேறு ஊர்; அதுவேறு ஊர் என்பதுபோல் வரும் இடங்களில் பிறிது என்பதைப் பயன்படுத்த இயலாது. மேலும், வேறு என்பது 'ஊடல்வேறு சண்டைவேறு' எனும் இடத்தில் வேறானது எனக் குறிப்பு வினையாயும் 'இதைத்தவிர வேறு வழியில்லை' எனும் தொடரில் 'பிறிதோர்' எனவும் வேறு மாநிலத்தவர் எனும் சூழலில் 'பிற' எனவும் பெயரடையாய்ச் செயற்படுவதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். எனவே இக்கால மொழிவழக்கில் இவை செயற்படும் சூழல்கள் அடிப்படையில் இப்பதிவுகளைச் சீர்செய்ய வேண்டும்.

3.3. தவறான இலக்கணக் குறிப்பு

சில சொற்களின் பயன்பாட்டுச் சூழல் தவறாய்ப் புரிந்து கொள்ளப்பட்ட சூழலில் அச்சொற்களுக்குப் பிழையாய் இலக்கணக் குறிப்பு கொடுக்கப்பட்டுவிட்டது.

1. மெத்த பெ. அ. மிக; greatly, much.
   மெத்தப்படித்தவர் / மெத்த மகிழ்ச்சி அடைகிறேன்

2. நீடு வி. அ. நீடூழி; long time.
   நீங்கள் நீடு வாழ வாழ்த்துகிறேன்.
   நீடூழி வி. அ. (வாழ்த்தும்போது) பல்லாண்டு;

(live) long; for ages.

மணமக்கள் இருவரும் நீடுழி வாழ வாழ்த்துகிறேன்.

முதலாவது பதிவில் 'மெத்த' என்பதற்கு மிக எனும் பொருளும் பெயரடை எனும் இலக்கணக் குறிப்பும் தரப்பட்டுள்ளது. மிக என்பது வினையடையே. மெத்த எனும் பதிவில் காட்டப் பட்ட மேற்கோள்களில் மிக என்பதைப் பதிலீடு செய்ய இயலும். எனவே மெத்த என்பதும் வினையடையே. ஆங்கிலப் பொருளும் அவ்வாறே கொடுக்கப்பட்டுள்ளது. மெத்த என்பது வடிவில் ஒத்த, படித்த என்பன போன்றுள்ளமையால் மெத்த என்பதற்கு வடிவம் நோக்கித் தவறாய் இலக்கணக் குறிப்பு தரப்பட்டுவிட்டது போலும். மேலும் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன் என்பதில் மெத்த என்பது மகிழ்ச்சி எனும் பெயரோடு சேர்க்கப்பட்டுவிட்டதுபோலும். ஆனால் மகிழ்ச்சி என்பது அடைகிறேன் என்பதோடு இணைந்து 'மகிழ்ச்சி அடைகிறேன்' என நின்று மகிழ்கிறேன் எனும் பொருளையே தருகின்றது. மேலும் 'மெத்தப்படிப்பு' எனப்பெயரேற்று வாராமல் 'மெத்தப் படித்தவர்' எனவினையாலணையும் பெயரேற்றே வந்துள்ளதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இனி இரண்டாவது காட்டில் உள்ள நீடு, நீடுழி எனும் இரண்டும் 'பல்லாண்டு' எனப் பெயர்ப் பொருளில் வருகின்றன. வாழ்த்துப் பொருளில் வரும் சூழலில் மட்டும் இவ்விரு சொல்லும் பயன்படுகின்றன. இவற்றின் பொருட் சொல்லான 'பல்லாண்டு' என்பதும் இத்தகைய சூழல்களில் வாழ்த்துப் பொருளில் பயன்படுத்தப்படும். இவை மூன்றுமே பல ஆண்டு காலம் எனப் பெயர்ப் பொருளை மட்டுமே தருதலால் அவை பெயர் எனவே குறிப்பிடப்பட வேண்டும்.

3.4. பொருட்குறைபாடு

சில பதிவுகளில் பொருட்சொல்லாய்த் தரப்பட்ட சொற்கள் சில பதிவுச் சொல்லின் பொருளோடும் இலக்கணச் செயற் பாட்டோடும் முரண்பட்டனவாய் உள்ளன. சில பதிவுகளில் பொருட்சொல் பொருந்தாமலும் சில இடங்களில் தரப்பட்ட இலக்கணக் குறிப்பு ஒத்துப்போகாமலும் உள்ளது.

3.4.1. பொருந்தா பொருட்சொற்கள்

சில பதிவுகளில் பொருளாய்த் தரப்பட்ட ஒருபொருட்பல சொற்களை அப்பதிவுகளில் காட்டப்பட்ட மேற்கோள்களில் பதிலீடு செய்ய இயலவில்லை. பின்வரும் பதிவுகள் இதற்குச் சான்று.

அனைத்து பெ. அ. மொத்த; அனைத்து இந்தியப் பல்கலைக்கழக ஆசிரியர்/அனைத்துக்கட்சிக் கூட்டம்.

அனைத்தும் பெ. மொத்தம்; வாகனங்கள் அனைத்தும் வேறு சாலைகளில் திருப்பிவிடப்பட்டன/ மாடுகள் அனைத்தும் மேயப்போய்விட்டன.

தனிப்பட்ட வி. அ. சொந்தமாக: அழைப்பிதழோடு தனிப்பட்ட ஒரு கடிதமும் எழுதியிருந்தார்.

மேற்காட்டிய பதிவுகளில் தரப்பட்டுள்ள மொத்த, மொத்தம், சொந்தமாக எனும் பொருட் சொற்களை அவற்றின் மேற்கோள்களில் பதிலீடு செய்ய இயலவில்லை. எல்லா இடங்களிலும் இவ்வாறு பதிலீடு செய்யும்படி பொருள் தருவது சாத்தியமில்லை என்றாலும் இவ்விடங்களில் அது சாத்தியமே. அனைத்து எனும் சொல் வரும் இடங்களில் அகில, எல்லா எனும் சொற்களை அகில இந்திய, எல்லாக்கட்சிகளும் எனப் பயன்படுத்த இயலும். இவ்வாறே அனைத்தும் வரும் இடங்களில் 'எல்லாம்' எனும் சொல்லையே பயன்படுத்தலாம்; மொத்தம் என்பதை இங்குப் பொருளாய்ச் சுட்ட இயலாது. இங்கு எல்லாம் என்பதே பொருட்சொல்லாய்த் தரப்படவேண்டும். மேலும், அனைத்தும் எனும் பதிவில் 'அனைத்தையும்' எனும் சொல்லை மேற்கோளாய்த் தந்திருப்பது பொருத்தமில்லை. 'போட்ட திட்டங்கள் அனைத்தும் நிறைவேறின' என மேற்கோள் தரப்பட்டிருக்கவேண்டும். இவற்றுடன் தனிப்பட எனும் பதிவில் கொடுக்கப்பட்ட 'சொந்தமாக' எனும் பொருள் பொருந்துமா என்பதும் ஆய்வுக்கு உட்பட்டது.

3.4.2. இலக்கணக் குறிப்பும் பொருட்சொல் முரணும்

ஒருசில பதிவுகளில் கொடுக்கப்பட்ட இலக்கணக் குறிப்பு, பொருள் எனும் இரண்டுமே முரண்பாடு உடையனவாய்ப் பதிவுச் சொல்லோடு பொருந்தாமல் உள்ளன.

சர்வ பெ. அ. 1. அனைத்து; எல்லாம்; சர்வ மதத்தினரும் கலந்து கொண்டனர். 2. மிகுந்த; மிகவும்; இரவில் சர்வ ஜாக்கிரதையாக நடக்க வேண்டும் 3. முற்றிலும்; பயிர்கள் சர்வ நாசம் அடைந்தன / சர்வ முட்டாள்.

புனர் பெ. அ. மறுபடியும், மறு

மிச்சம் வி. அ. நிறைய; உங்களைப் பார்த்து மிச்சம் நாளாச்சே

பரம பெ. அ. மிகவும் என்னும் பொருளிலும் 'மிகுந்த அளவிலான' என்னும் பொருளிலும் வழங்கும் அடைமொழி.
பரம ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது / பரம திருப்தியாக இருந்தது / பரம ஏழை.

மா பெ. அ. மிகவும்; மாபெரும் ஊர்வலம்

இவற்றில் சர்வ எனும் பதிவுச்சொல் பெயரடை எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் எல்லாம், மிகவும், முற்றிலும் என்பன பொருட் சொற்களாய்த் தரப்பட்டுள்ளன. இவற்றில் எல்லாம் என்பது பெயர்; ஏனைய இரண்டும் வினையடை. எனவே இப் பொருட் சொற்கள் எல்லா, மிகுதியான, முழு எனத்தரப்படல் வேண்டும். இதைப்போலவே பரம, மா என்பனவற்றின் மிகவும் எனப்பொருள் கொடுத்திருப்பதும் பொருந்தாது. காரணம் மிகவும் என்பது வினையடை. பெயரடைச் சொற்களையே பொருட்சொற்களாய் இங்குத் தருதல் வேண்டும். சர்வ என்பதை அடுத்து, ஆக, ஆன ஏற்ற பெயர்கள் சர்வ ஜாக்கிரதையாக இரு, சர்வ ஜாக்கிரதையான நடவடிக்கை என வருகையில் 'மிகவும்' எனும் வினையடை பொருளில் வருமா என்பதும் ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டிய செய்தி. மாநகர் என்பதில்

'மா' என்பது பெரிய எனப்பொருட்பட்டுப் பெயரடையாகவே வருகின்றது. இது அடைக்கு அடையாக மாபெரும் என வரும் போது 'மிகப்பெரிய' எனப் பொருள்பட்டுவரும். ஆனால் மா என்பது தனித்து அடையாகவந்து 'மிக' எனப் பொருள்பட்டு வராது. எனவே 'மாபெரும்' என்பதையே இங்குப்பதிவுச் சொல்லாய்த் தருவது நல்லது.

புனர் என்பதில் மறுபடியும் என வினையடைப் பொருளைத் தந்திருப்பது ஏற்புடையதல்ல. இங்கு மறு எனும் பொருளே போதுமானது. மிச்சம் எனும் பதிவு வினையடைப் பதிவாய்க் குறிப்பிடப்பட்டுள்ளது. மிச்சம் பெரிய வீடு என்பதில் மிச்சம் மிக எனும் பொருள் தருகின்றது. இது முதற் பொருளாய்த் தரப்பட்டுள்ளது. ஆனால் 'நிறைய' என்பது இரண்டாம் பொருளாய்த் தரப்பட்டுள்ளது. நிறைய எனும் சொல் வினையடையாகவும் பெயரடையாகவும் வரவல்லது. இருந்த போதிலும் இங்குக் காட்டப்பட்ட மேற்கோளில் மிச்சம் என்பது பெயரடைப் பொருளிலேயே வருவதாய்த் தோன்றுகின்றது. 'உங்களைப் பார்த்து மிச்சம் நாளாச்சே' எனும் தொடரில் மிச்சம் என்பதை நாள் என்பதுடன் கூட்ட அது மிகுதியான நாள் எனப் பெயரடையாய் இருப்பது புலனாகின்றது. இது இலங்கைத் வழக்கு என்பதால் கூடுதலான தரவுகளுடன் மேலாய்வுக்கு உட்படுத்தப்படவேண்டும்.

3.5. ஆக, ஆன ஈற்றுப் பதிவுகள்

ஆக, ஆன எனும் விகுதிகளை ஏற்று வினையடையாகவும் பெயரடையாகவும் வரும் சொற்கள் பின்வரும் ஐந்து நிலைகளில் இவ்வகராதியில் பதிவுகளாய்த் தரப்பட்டுள்ளன.

1. ஆசை பெ. (-ஆக, -ஆன)
2. சீக்கிரம் /-ஆகி வி.அ.
3. குருட்டாம்போக்கு -ஆக -இல்/ஆன வி.அ./பெ.அ.
4. படிப்படியாக/படிப்படியான வி. அ. /பெ.அ.
5. ஆணித்தரம் ஆக/-ஆன வி.அ. / பெ.அ.

எனும் இப்பதிவமைப்புக் குறிப்புகள் 'அகராதியைப் பயன்படுத்த உதவும் குறிப்புகள்' எனும் பகுதியில் தரப்பட்டுள்ளன.

பெயராகவே செயற்படும் சொற்கள் (அழகு, அழகாக, அழகான என வருபவை) முதலாம் வகைப்படிப் பெயர் எனும் இலக்கணக் குறிப்புடன் பதிவுகளாய்த் தரப்பட்டுள்ளன. இனி ஆக, ஆன விகுதிகளுடன் இணைந்தே வருவன நான்கா நிலையில் பதிவுகளாய் அமைக்கப்பட்டுள்ளன. மூன்றாம் ஐந்தாம் நிலையில் வருவனவற்றுள் சில ஐயப்பாடுகளும் சிக்கல்களும் உண்டு. இவ்விரண்டையும் (சீக்கிரம் /-ஆக எனும் பதிவைப் போல்) ஒன்றாய்க் கருதுவதா வேறு வகையில் கருதுவதா எனும் ஐயம் ஏற்படுகின்றது.

'சில சொற்கள் -ஆக ஏற்காத நிலையிலும் -ஆக ஏற்ற நிலையிலும் வினையடையாக வரும். இவை பின்வருமாறு தரப் பட்டிருக்கும்' எனும் குறிப்புடன் சீக்கிரம்/சீக்கிரமாக வந்தான் எனும் இரண்டும் வினையடையே. இங்கு ஐயப்பாடில்லை/ இனி அடுத்த நிலையில் '-ஆக, -ஆன வடிவங்களோடு சேர்ந்தே வரும்' சிலசொற்கள் அரிதாகத் தனித்தும் வரக்கூடும் இவை பின்வருமாறு தரப்பட்டிருக்கும், ஆணித்தரம் -ஆக/-ஆன வி.அ. பெ.அ.' எனும் குறிப்பும் தரப்பட்டுள்ளது. இதன்படி சீக்கிரம் என்பது போல் ஆணித்தரம் என்பது தனித்துவர வாய்ப்புண்டா உண்டெனில் அதற்கான சான்றைப் பதிவில் தந்திருக்கலாமே. அவ்வாறு தனித்து வரும்போது அது பெயரா, பெயரடையா, எனும் ஐயப்பாடும் எழுகின்றது.

'சில சொற்கள் -ஆக என்பதற்கு இணையாக -இல் உருபு ஏற்று வினையடையாக வரும். இம்மாதிரியான சொற்கள் பின்வருமாறு தரப்பட்டிருக்கும். குருட்டாம்போக்கு -ஆக, -இல்/ ஆன' எனும் விளக்கமும் தரப்பட்டுள்ளது. இதன்படிக்-கொண்டால் குருட்டாம்போக்கு என்பதை ஆணித்தரம் எனும் பதிவைப்போல் கொள்வதா வேண்டாவா எனும் ஐயம் எழுகின்றது. ஆணித்தரம் என்பதைப்போல் குருட்டாம் போக்கு என்பதும் மொழியில் தனித்துவரும் நிலையினது எனக் கருதப்பட வேண்டுமா.

குருட்டாம்போக்கு எனும் சொல் 'அவனுடைய போக்குக் குருட்டாம்போக்கு' எனவும் 'உன்னுடைய குருட்டாம்போக்கால் நேர்ந்த சிக்கல் இது' எனவும் தனித்துப் பெயராய்ச் செயற்பட வாய்ப்புண்டு, இதைப்போலவே 'ஆணித்தரம் வாய்ந்த பேச்சு' என ஆணித்தரம் தனித்துவரும் வாய்ப்பு உண்டெனில் அதுவும் அங்குப் பெயர்தானே. எனவே, சான்றாய்க்காட்டப்பட்ட இவ்விரண்டுக்குமே மேலாய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் பயன்பாட்டாளர் குறிப்பிலும் தெளிவாய்க் குறிப்பிடப்பட வேண்டும்

ஆணித்தரம் எனும் பதிவுக்குக் கொடுக்கப்பட்ட விளக்கத்தை அடிப்படையாய்க்கொண்டு பார்க்கின்ற பொழுது அமுக்கம் -ஆக/, -ஆன, அழுத்தம் திருத்தம் -ஆக/-ஆன, கமுக்கம் - ஆக/-ஆன கணிசம் -ஆக/—ஆன, காரசாரம்-ஆக/-ஆன, சோதனாபூர்வம்-ஆக/ஆன, சோதனைப்பூர்வம்-ஆக/-ஆன, தர்க்கரீதி-ஆக/-இல்/-ஆன, மேலோட்டம்-ஆக/-ஆன எனும் பதிவுகளையும் அவ்வாறே கொள்ளவேண்டும். இக்குறிப்பின்படி இவையும் ஆணித்தரம் என்பதுபோல் தனித்து வரக்கூடும் என்பதே பொருள்.

மேற்காட்டியவற்றுள் சில மொழியில் தனித்து வரும் வாய்ப்பின, அமுக்கம், அழுத்தம் திருத்தம், காரசாரம் எனும் மூன்றும் 'அமுக்கம் அதிகமாய் இருக்கிறது' 'அழுத்தம் திருத்தமில்லாமல் பேசுகிறார்', 'காரசாரம் இல்லாத சமையல்/பேச்சு' எனத் தனித்து வரும். இச்சூழல்களின் இவை பெயர்களே அன்றி வேறில்லை. எனவே இவை அடிப்படைப் பொருளில் வருகையில் காரசாரம் பெ. (—ஆக, ஆன) எனவும் பொருள் வேறுபாட்டுடன் ஆக, ஆன என்றே வருகையில் காரசாரமாக/காரசாரமான எனவும் தனித்தனிப் பதிவுகளாய்த் தரப்படல் வேண்டும்.

இவைதவிர எஞ்சியுள்ள கமுக்கம், கணிசம், சோதனாபூர்வம், சோதனைப்பூர்வம், தர்க்கரீதி, மேலோட்டம் என்பன தனித்துவர வாய்ப்பே இல்லை. சோதனாபூர்வம், சோதனைப்பூர்வம் எனும் இரண்டும் மகர ஈறு கெட்டுப் பெயரடையாய் வரவல்லன. காரசாரம் என்பதும் காரசாரவிவாதம் எனப்

பெயரடையாய் வரவல்லது. எஞ்சியவை அவ்வாறும் வாரா. தர்க்கரீதி என்பது குருட்டாம்போக்கு என்பதைப்போல் இது தனித்து வருவது இல்லை. எனவே இப்பதிவுகள் அனைத்துமே ஆக, ஆன விகுதி சேர்ந்த நிலையிலேயே பதிவுச் சொற்களாய்த் தரப்படல் வேண்டும்.

இத்தகைய சொற்களின் பதிவமைப்பில் வேறுசில சிக்கல்களும் உண்டு. சான்றாக விடாப்பிடி எனும் சொல் விடாப்பிடியாக வி. அ. எனப் பதிவாய் அமைக்கப்பட்டுள்ளது. இச்சொல் ஆன ஏற்றும் பெயரடையாக விடாப்பிடியான ஆள்/போக்கு என வரவும் வாய்ப்புண்டு. இதைப்போல் நேருக்கு நேர் எனும் சொல் வினையடைப்பதிவாய்த் தரப்பபட்டுள்ளது. இச்சொல் ஆக, ஆன ஏற்று வினையடையாகவும் பெயரடையாகவும் வரவாய்ப்புண்டு. எனவே இதற்கு சொற்கள் மட்டுமே நேருக்கு நேர்-ஆக/ஆன வி. அ. /பெ.அ. எனும் நிலையில் பதிவுகளாய் அமைக்கத்தக்கன.

'பூர்வம்' எனும் சொல் சேர்ந்த மனப்பூர்வம் எனும் சொல் மனப்பூர்வமாக/மனப்பூர்வமான எனப் பதிவாய்த் தரப்பட்டிருக்கச் சோதனாபூர்வம், சோதனைப்பூர்வம் என்பன சோதனாபூர்வம் -ஆக/-ஆன என வேறுபடப் பதிவாய்த் தரப்பட்டுள்ளன. இவை மகர ஈறுகெட்டு மனப்பூர்வ நம்பிக்கை சோதனாபூர்வ நடவடிக்கை எனப் பெயரடையாய் வர வாய்ப்புண்டு. எனும் இவ்வாறு வேறுபட அமைந்தமைக்கான காரணம் சரிவர விளக்கப்படவில்லை.

3.6. இடைச்சொல்லா பெயரடை/வினையடையா

வினையடியாகப் பிறந்த சொற்களாக இருந்தபோதிலும் சில சொற்கள் இவ்வகராதியில் இடைச்சொல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் இவற்றை ஒத்த வேறுசில சொற்களோ பெயரடை, வினையடை, எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

- ஆர்ந்த இ.சொ. நிறைந்த; சார்ந்த போன்ற பொருளை உணர்த்தும் ஒரு பெயரடை-விகுதி; மனமார்ந்தநன்றி / அறிவார்ந்த செயல்.

- ஆர இ. சொ. சில உடல் உறுப்புச் சொற்களுடன் அல்லது மனம், நெஞ்சம் முதலிய சொற்களுடன் இணைந்து 'நிறைவு, அமைதி இன்பம் அடையும்படி' என்னும் பொருள் உணர்த்தும் விகுதி, வயிறாரச் சாப்பிட்டான்/மனதாரப் பாராட்டினார்.

- கூடிய இ. சொ. (ஒன்றோடு) இணைந்திருக்கிற; சேர்ந்த; சாலையோடு கூடிய பாலம் / விளக்கோடு கூடிய மின் விசிறி.

- கொல்லி இ. சொ. 'குறிப்பிடப்படுவதை அழிக்கக்கூடியது' 'கொல்லக்கூடியது', 'விஷம் போன்றவற்றை முறியடிக்கக கூடியது' என்ற பொருளில் பயன்படுத்தப்படுவது; நாசினி பூச்சிக்கொல்லி / களைக்கொல்லி.

மேற்காட்டிய சொற்கள் அனைத்தும் வினையடியாகக் பிறந்தவையே. ஆர்ந்த, கூடிய என்பன இரண்டு பெயரெச்ச வடிவிலும் ஆர செயவென் எச்ச வடிவிலும் கொல்லி என்பது 'கொல்லும் இயல்பினது' எனும் பொருளில் பெயர்நிலையிலும் உள்ளன. இவை பிற சொற்களுடன் சேர்ந்து வருகின்றன. என்பதால் இடைச் சொல் எனக் குறிப்பிடப்பட்டுவிட்டன. ஆர் எனும் வினை இக்கால வழக்கில் இல்லை. இவ்விணையடியாய்ப் பிறந்த ஆர்ந்த, ஆர எனும் சொற்கள் மட்டுமே வழக்கில் உள்ளன. என்றாலும் இவை அவ்வினையின் அடிப்படை பொருளில் மாற்றம் இன்றிச் செயற்படுகின்றன. இவற்றை இடைச் சொற்களாய்க் கொள்வது எவ்வாறு பொருந்தும். இவற்றை ஒத்த சொற்கள் சில இவ்வகராதியிலேயே பெயரடை வினையடை எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. அளவிறந்த என்பது போன்ற சொற்களில் வரும் இறந்த என்பது பெயரடை எனவும் பேசவொட்டாமல், கிடைக்கவொட்டாமல் என்பன போன்ற வற்றில் வரும் ஒட்டாமல் என்பது வினையடை எனவும் பதிவு களாய்த் தரப்பட்டுள்ளன. இவ்வாறே மணிக்கணக்காக நாள் கணக்கில் என வரும் கணக்கா, கணக்கில் என்பனவும் வினை யடைகள் எனவே குறிப்பிடப்பட்டுள்ளன. இவை அனைத்துமே ஆர்ந்த, ஆரஎன்பனவற்றைப் போல் பிறசொற்களோடு சேர்ந்தே வந்த போதிலும் இவை மட்டும் பெயரடை வினையடை எனக்

கருதப்பட்டதேன். ஆர்ந்த, ஆர என்பனவற்றையும் பெயரடை, வினையடை எனவே கொள்ளலாமே. எனவே இத்தகு பதிவுகளில் ஒருமித்த போக்கை கைக்கொள்வது நல்லது.

இவற்றைப்போலவே குழந்தைத்தனம் என்பது போன்ற சொற்களில்வரும் தனம் இடைச்சொல் எனச் சுட்டப் பட்டுள்ளது. ஆனால் இதைப்போல பிற சொற்களுடன் இணைந்தேவரும் பூர்வம் என்பதும் மயம் என்பதும் பெயர் எனக்கருதப்பட்டுள்ளன. இவையும் தனம் என்பதைப்போல் இடைச்சொல் என்றல்லவா குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். எனவே இவை போன்று பிற சொற்களுடன் இணைந்தே வருவன பற்றிய மொழிச் செயற்பாடு மேலாய்வுக்கு உட்படுத் படவேண்டும்.

3.7. பெயர், பெயரடைப் பதிவுகளும் ஒத்தமேற்கோளும்

பெயர், பெயரடைப் பதிவுகள் சிலவற்றில் வேறுபட மேற் கோள்கள் தரப்படாமல், ஒத்த மேற்கோள்கள் தரப்பட்டுள்ளன. உள் எனும் பெயர்ப்பதிவில் 'உள்ளுக்கு மருந்து சாப்பிடு' எனப்பொருந்தா மேற்கோள் தரப்பட்டுள்ளது. உள்ளுக்கு' எனும் பதிவுக்குத் தரவேண்டிய இம்மேற்கோளைத் தவிர்த்து 'உடலின் உள் உறுப்புகள் பாதிக்கப்படும்' எனத் தருதல் வேண்டும். இவ்வாறே அன்று எனும் பெயர்ப்பதிவில் அன்று எனும் வினையடைப்பதிவில் தரப்பட்ட 'தீபாவளி அன்று நல்ல மழைபெய்தது' என்பதைப்போன்ற, நீ கல்லூரிக்குச் செல்லாத அன்று இந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது. எனும் ஒத்த மேற்கோள் தரப்பட்டுள்ளது. இவ்விரண்டிடத்தும் அன்று என்பது 'அந்தநாளில்' என வினையடைப் பொருளிலேயே நிற்கின்றது, எனவே பெயர்ப்பதில் அன்றிலிருந்து அதனுடன் நான் பேசுவ தில்லை' என்பதைப் போன்ற மேற்கோள் தரலாம். இதைப் போலவே தொடர் எனும் விளைப்பதிவில் நீடித்தல் எனும் பொருளுக்கு 'தொடர்ந்து பெய்த மழையால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது' எனத் தொடர்ந்து எனும் வினையடைச் சொல்மேற்கோளாய்த் தரப்பட்டுள்ளது. இத்தொடர்ந்து எனும் சொல் இங்குத் தொடர்ச்சியாக எனவே பொருள் தருகின்றது

எனவே 'தொடர்ந்து' எனும் வினையடைச் சொல்லைத் தவிர்த்து' மழை தொடர்ந்ததால் போக்குவரத்து பாதிக்கப் பட்டது' என்பதுபோல் வினைப்பதிவிற்கு வேறு மேற்கோள் தருதல் வேண்டும்.

இவ்வாறு பலபட வருகின்ற பெயர், பெயரடை வினையடை, இடைச் சொற் பதிவுகளை எல்லாம் இலக்கணச் குறிப்பு, பொருள், மேற்கோள் எனும் மூன்று நிலையிலும் ஒப்பிட்டு நோக்கி ஆங்காங்கே காணுகின்ற குறை பாடுகளை எல்லாம் தவிர்த்துத் திருந்திய பதிப்பாய்த் கொணர ஆவன செய்ய வேண்டுவது அவசியம்.

4. முடிவுரை

இதுவரை எடுத்துக்காட்டப்பட்ட செய்திகளை எல்லாம் அடிப்படையாய்க் கொண்டு பார்க்கின்றபொழுது இவற்றுள் நேர்ந்துவிட்ட குறைபாடுகளை, தவிர்க்க இயலாத நிலையால் ஏற்பட்டவை எனவும் அகராதிக்கலைஞர்களின் கவனக்குறை வால் நேர்ந்தவை எனவும் இரண்டாய்ப் பாகுபடுத்தலாம். தவிர்க்க இயலாதவை எனும் சூழலில் சரியான இலக்கண வரையறைக்கு உட்படுத்தப்படாத சில இடைச் சொற்பதிவு, களையும் இலங்கை வழக்கில் உள்ள சில பெயரடை, வினையடைப் பதிவுகளையும் குறிப்பிடலாம்.

இத்தகைய குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கான சில வழி முறைகளை இனிக் கைக்கொள்வது அவசியம். பெயரடை, வினையடைகளுக்கான இலக்கண வரையறை இதுவரை உருவாக்கப்படவில்லை. அதைப்போலவே இக்கால மொழி வழக்கில் உள்ள இடைச்சொற்களுக்கான வரையறைகளும் உருவாக்கப்படவில்லை. இச்சூழலில் இவ்வகராதி உருவாக்கக் குழுவே புதுவதாய் இவ்வரையறைகளை அவ்வப்போது ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயத் தேவைக்கு ஆட்பட்டுப் போனது. இதனால் இதில் குறைபாடுகள் நேர்வது இயல்பே. எனவே இனி வளமான தரவுகளை அடிப்படையாய்க் கொண்டு அறிஞர் குழுவின் பரிந்துரையுடன் இச்சொற்களுக்கான

இலக்கண வரையறை செய்யப்படவேண்டும். இவ்விலக்கண வரையறைகள் இச்சொற்களின் மொழிச் செயற்பாட்டை நன்கறிந்து குறைபாடில்லா பதிவுகளை அமைக்கப்பெரிதும் துணைசெய்யும்.

ஒவ்வொரு அகராதிக் கலைஞரும் தத்தமக்குரிய மொழித் திறன் அடிப்படையில் இத்தகைய மொழிப் பயன்பாடுகளை விளங்கிக்கொள்வர். அத்தகைய புரிபாடுகளில் தேர்ந்த குறை பாடுகளும் இத்தகைய பதிவுச் சிக்கல்களுக்குக் காரணம். எனவே ஒருவர் எழுதிய பதிவு பலராலும் மீண்டும் பார்வையிடப்பட வேண்டும். பதிவில் எழும் சிக்கல்கள் அகராதி உருவாக்கக் குழுவின் ஒட்டுமொத்த ஆலோசனைக்கும் உட்படுத்தப்பட வேண்டும்.

அகராதி உருவாக்கச் சூழல்களில் முன்வந்த அகராதிகளும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். சிக்கல் வாய்ந்த இலக்கணச் செயற்பாடுடைய சொற்கள் அவ்வகராதிகளில் பதிவாய்த்தரப் பட்ட சூழல்களையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

அகராதிப் பதிவுகள் எழுதப்படும் நிலையில் ஒருபொருட் பலசொற்களும் பதிவுக்கான பொருட்செற்களும் பதிவுகளாய் இடம்பெறுகையில் அவை ஒத்த இலக்கணக் குறிப்புடனும் பொருளுடனும் பதிவுகளாய்த் தரப்பட்டுள்ளனவா என்பதை அவ்வப்போது சோதித்து அறிதல் அவசியம். 'பிறிது' பெயர் எனவும் 'வேறு' இடைச்சொல் எனவும் குறிப்பிடப்பட்டிருந் தாலும் பிறிது என்பதற்கு வேறு என்பது பொருட் சொல்லாய்த் தரப்பட்டுள்ளது. எனவே பிறிது என்பதைப் போல் வேறு என்பதும் பெயராய்ச் செயற்பட வாய்புளதா என்பதை அறியவும் இத்தகைய சொற்களைக் கூடுதலான தரவுகளின் அடிப்படையில் மேலும் ஆராயவும் இது பெரிதும் வழிவகுக்கும். மேலும் பெயரடைப்பதிவுகளில் 'மிகவும்' என்பது போன்ற வினையடைப் பொருட்களைத் தருதலைத் தவிர்க்கவும் இது துணைபுரியும்.

அகராதிக்கென வரையறுத்துக் கொள்ளப்பட்ட தரவுகள் முழுமையான மொழிச்சான்றுகள் அல்ல. குறிப்பாகத் தற்காலத் தமிழுக்கான தரவு எல்லைகளை மீறிய மொழிச்செயற்பாடுகள் மிகுதியும் உண்டு. நாம் தெரிவு செய்துகொண்ட தரவுகளில் இல்லாத ஒன்று; அகராதிக்கலைஞர்களின் மொழித்திறனில் இல்லாத ஒன்று அத்தரவு எல்லைக்கு அப்பாலும், பிறரின் மொழித்திறனிலும் இருக்க மிகுதியும் வாய்ப்புண்டு. எனவே தற்கால அகராதி உருவாக்க நிலையில் தரவு எல்லைகளை மீறிய நிலையிலும் தாய்மொழியாளரின் மொழித்திறன், மொழிப்பயன்பாட்டு நிலையிலும் தரவுகள் சேகரிக்கப்பட்டுச் சோதித்தறியப்பட வேண்டும்.

இக்கட்டுரை சில திருத்தங்களோடு வெளிவந்த கிரியா அகராதியின் மறுபதிப்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

தமிழில் சொல்லாக்கம்

ச. இராசேந்திரன்
தஞ்சாவூர்

தமிழில் சொல்லாக்கத்தைப் பற்றிய சுருக்கமான ஒரு வருணனை தருவதே இக்கட்டுரையின் நோக்கம். இக்கட்டுரை முக்கியமாக வகைப்பாட்டியலை அடிப்படையாகக் கொண்டு தமிழில் உள்ள சொல்லாக்கம் வகைகளைக் கூறுவதாக இருப்பினும், தர்க்க ரீதியான விளக்கங்களும் அடிக்குறிப்புகளும் தரப்பட்டுள்ளன. பொதுவாகச் சொல்லாக்கத்தைப் பின் வருமாறு பகுக்கலாம்[1]. 1) கூட்டாக்கம், 2) முன்னொட்டாக்கம், 3) பின்னொட்டாக்கம், 4) மாற்றம், 5) பின்வடிவாக்கம், 6) கத்தரிப் பாக்கம், 7) கலப்பாக்கம் 8) தலைப்பெழுத்தனாக்கம், 9) சொல் உருவாக்கம்.

1 கூட்டாக்கம்

கூட்டாக்கங்களை மரபிலக்கணப்படி தொனையாக்கம் எனக் கூறலாம் பொதுவாக கூட்டாக்கங்களை அவை வாக்கியத்தில் பங்குபெறும் செயற்பாடு அடிப்படையில் பெயர்கள், விளைகள், பெயரடைகள், வினையடைகள் என்று வகைப் படுத்தலாம். கூட்டுகளின் உள்வகைபாடுகள் பலவழிகளில் செய்யப்படுகின்றன: 1) கூட்டுகளை உருவாக்கப் பயன்படுத்தப் படும் சொற்களின் வடிவ வகுப்புகளின் அடிப்படையில், 2) பொருண்மை வகுப்புகள் அடிப்படையில் 3) கூட்டுகளாக வரும் சொற்களை இணைப்பவைகளாகக் கருதப்படும் சூழ்நிலை இயக்கிகளில் அடிப்படையில் 4) ஆழ்நிலை தொடரியல் செயற்பாடு அடிப்படையில், 5) உருபஒலியனியல் அடிப்படையில், மற்றும் பிற வழிகளீல். மேற்சொன்ன ஏதாவது ஒருவழியில் கூட்டாக்கங்கள் வகைப்படுத்தப்பட்டுத் தரப்படலாம். தமிழில் பெரும்பான்மையான கூட்டாக்கங்களும் பெயர்களாகும்

அதற்கு அடுத்தபடியாக வினைகள் அமையும். இரண்டிற்கு அதிகமான சொற்களை கொண்ட கூட்டாக்கங்களை ஈரிணையான கூட்டாக்கங்களாகப் பகுப்பாய்வு செய்யலாம்.

1.1. கூட்டுப்பெயர்கள்[2]

1.1.1. பெயர் பெயர்

இது பெரு அளவிலான கூட்டாக்கங்களின் உள்வகைபாடாக அமையும். பல மாதிரியான பொருண்மை உறவுகள் மற்றும் வேறுபட்ட தொடரியல் அமைப்பொழுங்குகளை இந்த வகைப் பாட்டில் காணலாம். இவ்வாக்கியங்களைப் பொருண்மை உறவுகள் மற்றும் உருபன்-தொடரியல் அளவீடு அடிப்படையில் வகைபாடு செய்யலாம்.

1.1.1 1. உள்வட்டக் கூட்டுகள்

ஒரு கூட்டு அதன் தலைப்புச் சொல்லின் உள்ளடங்குச் சொல்லாக வருவது உள்வட்டக் கூட்டாகும். எடுத்துக்காட்டாக மாம்பழம் என்பது பழம் என்பதில் அடங்குவதால் அது ஓர் உள்வட்டக் கூட்டாகும். உள்வட்டக்கூட்டுகள் இரண்டு பொதுப் பெயர்களின் கூட்டாகவோ அல்லது ஒரு சிறப்புப் பெயர் மற்றும் பொதுப்பெயர் இவற்றின் கூட்டாகவோ அமையலாம்.

1.1.1.1.1. பொதுப்பெயர் பொதுப்பெயர்

இவ்வாக்கம் கூட்டாக்கங்கள் எல்லாவற்றிலும் வினை வாக்கம் மிகுந்ததாகக் காணப்படுகிறது. இந்தச் சொல்லாக்கம் செய்தித்தாள்கள், காலவாரியான இதழ்கள், அகராதிகள் போன்றவற்றில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன. கூட்டாக வரும் சொற்களுக்கிடையே உள்ள உறவுகள் பலவித மாக அமையும். பின்வரும் எடுத்துக்காட்டுக்களிலிருந்து இதை உணரலாம். (எ. கா. திரைப்படம், பகல்கனவு, மனசாட்சி, வீரப்பதக்கம், இதயநோய், தீப்பெட்டி, சமாதானப், பேச்சு பெரியஇடத்துப்பெண், குற்றவாளிக்கூண்டு, புகார் கடிதம்,

பயணச்சீட்டு, தலைமையகம், இராணுவவீரர், மரணச் செய்தி, சாதிக்கலவரம், கள்ளக்காதலன் கால்பந்து, கழிவன்ற)

1.1.1.1.2 சிறப்புப் பெயர் பொதுப்பெயர்

இந்த வகையில் அமையும் கூட்டுகளில் வரும் சொற்களுக் கிடையேயும் பலவிதமான உறவுகள் காணப்படும். பின்வரும் எடுத்துக்காட்டுகள் இதை உணர்த்தும். எ.கா. **ராஜீவ்நகர், காந்திவழி, அண்ணாநடை.**

1.1.1.2. நேரியையபுக் கூட்டுகள்

இந்த வகையான கூட்டாக்கம் வினைவாக்கம் உள்ளதாகும். நேரியைபுக் கூட்டு அதை உருவாக்கும் இருசொற்களுக்கும் பொருளடங்குச் சொல்லாக அமையும். எடுத்துக்காட்டாக பெண் டாக்டர் என்ற கூட்டு பெண் என்பதன் பொருளடங்குச் சொல்லாகவும் வரும். அதாவது பெண்டாக்டர் என்பதை ஒரு வகை பெண் என்றும் ஒருவகை டாக்டர் என்றும் குறிப்பிடலாம்

1.1.1.3. உம்மைத்தொகைக் கூட்டுகள்

இது அவ்வளவு வினைவாக்கம் உள்ளதல்ல. இருப்பினும் இத்தகைய கூட்டுகள் ஆங்காங்கே வினைவாக்கம் பெறுகிறது. இதில் வரும் ஆக்கச்சொற்களில் எது தலையானது என்று கூற இயலாது. மற்றும் இக்கூட்டு அதை உருவாக்கும் சொற்கள் இரண்டிற்குமே பொருளடங்குச் சொல்லாக வருவதில்லை. எ.கா. **செடிகொடிகள், புல்பூண்டுகள், ஆடுமாடுகள், மேசைநாற்காலிகள், ஏற்றஇறக்கம், வளைவுகுழிவு.**

1.1.1.4. வெளிவட்டக் கூட்டுகள்

இந்த வகையான கூட்டுகள் அவற்றில் அடங்கியுள்ள சொற்களால் பெறப்படாத ஒரு பொருண்மைத் தலைப்பின் பொருளடங்குச் சொல்லாக வரும். எடுத்துக்காட்டாக 'முட்டாள்' எனப்பொருள்படும் **மரமண்டை** என்ற கூட்டை

மண்டை என்ற தலைச்சொல்லின் பொருளடங்குச் சொல்லாகக் கூற இயலாது. இம்மாதிரியான வெளிவட்டக் கூட்டுகள் வினைவாக்கம் உள்ளனவல்ல. எ.கா. கால்நடை பள்ளிக்கூடம், வேலைப்பாடு.

1.1.2 வினை பெயர் பெயர்

வினையடி பெயர் கூட்டுகளை மரபிலக்கணங்கள் வினைத் தொகைகள் என்று கூறும்; வினையடியில் கால உருபுகள் தொக்கி வந்து அவை வினைத் தொகையாகின்றன என்று கொள்ளும். வினையடியை வினைப்பெயராகக் கொள்வாரும் உளர். செயற் பாடு அடிப்படையில் தலைப்புப் பெயர்களின் முன்வரும் வினையடிகளை பெயரடைகளாகக் கொள்ள இடமுண்டு, தற்காலத் தமிழில் இது வினைவாக்கம் உள்ளது. இக்கூட்டுகளில். தலைப்பாக வரும் பெயர்கள் முதல்வரும் வினையடிகளுக்கு எழுவாய் உறவிலோ செயப்படுபொருள் உறவிலோ அல்லது பிற உறவிலோ வரும். (எ. கா. சுடுசோறு, சுற்றறிக்கை, ஆடுசதை. ஊறுகாய், தொற்றுநோய், தொடுஉணர்வு, சுடுதண்ணீர், வெட்டுக்கத்தி) மேற்சொன்ன கூட்டுகள் உள்வட்டக் கூட்டுகளாகும். திருப்புமுனை என்பதை வெளி வட்டக் கூட்டுக்கு எடுத்துக்காட்டாய் கூறலாம். பகுத்தறிவு என்ற கூட்டை வினையெச்சத்துடன் பெயர் சேர்ந்து வரும் கூட்டுப் பெயருக்குச் சான்றாய்க் கூறலாம்.

1.1.3. பெயர் வினை பெயர்

பெயரும் வினையும் சேர்ந்து பெயராக அமையும் கூட்டுகள் தமிழில் வினைவாக்கம் பெறவில்லை என்று சொல்வதே பொருத்தமானதாய்த் தோன்றுகிறது. கால்கட்டு, தாலிகட்டு என்பனவற்றில் வரும் கூட்டு என்ற அலைப்புச் சொல்லை வினையாகவும் வினையடிப் பெயராகவும் கொள்ளலாம்.

1.1.4. வினை வினை பெயர்

வினையடியும் வினையடியும் சேர்ந்து பெயாய் அமைவதும் தமிழில் வினைவாக்கம் பெறவில்லை. அடிபிடி, இழுவலி,

இழுபறி என்ற சுட்டுப்பெயர்களை வினை வினை என்ற கூட்டுக்கு உதாரணங்களாக் கூறலாம் என்றாலும் அடி, பிடி, இழு, பறி என்பனவற்றை தத்தம் வினைகளின் பெயராக் கங்களாகக் கொள்ளவும் இடமுண்டு.

எடுத்துக்காட்டு என்ற கூட்டை வினையெச்சத்துடன் வினையடி சேர்ந்து வரும் கூட்டுப்பெயருக்குச் சான்றாகக் கூறலாம்.

1.1.5, பெயரடை பெயர் பெயர்

நன்கொடை, பெரும்பாம்பு, கருங்குருவி, சிறுசேமிப்பு போன்ற கூட்டுகள் நன்மை கொடை, பெருமை பாம்பு, கருமை குருவி சிறுமை சேமிப்பு என்று மரபிலக்கணப்படி விரித்துப் பண்புப்பெயர் பெயர் தொகையாக கொள்ளலாம். நன், பெரும், கரும், சிறு என்பனவற்றை பெயரடைகளாகக் கொண்டு மேற் சொன்ன கூட்டுகளை பெயரடை பெயர் என்ற கூட்டாக் கமாகக் கருதுவது சிறப்பாகத் தெரிகிறது. (இதைப்பற்றிய விளக்கம் பெயரடையாக்கம் என்ற தலைப்பின் கீழ் தரப் பட்டுள்ளது.) வானம் பார்த்த பூமி, சின்னவீடு, மறுமணம், புனரமைப்பு, புன்சிரிப்பு என்பனவற்றை பெயரடை பெயர் என்ற கூட்டாக்கத்தின் மாதிரி எடுத்துக்காட்டுகளாகத் தயக்க மின்றிக் கூறலாம். பெயரடை பெயர் என்ற கூட்டாக்கத்தில் விளையும் பொருள் தலைப்புச் சொல்லில் உள்ளடங்கும். பொருளைத் தருவதோடு தலைப்புப் பெயரின் ஒருவகையாகவும் பொருள்மாற்றம் பெறுவதால் இத்தகைய ஆக்கங்களை கூட்டாக்கங்களாகக் கொள்வது பொருத்தமாயிருக்கும்.

1 1 5. இடைச்சொல் பெயர் பெயர்

மரபிலக்கணங்கள் இடைச்சொற்கள் என்று கூறும் பின்னுருபுகளான பின், முன் என்பன பெயர்களின் முன்வந்து கூட்டுப் பெயர்களாக ஆக்கம் பெறுவதும் உண்டு. (எ.கா) முந்தாணை, முன்னுரை, முன்னேற்றம், பின்னுரை பின்னேற்றம், பின் குறிப்பு). இல்வேற்றுமை, குவேற்றுமை என்பனவற்றை இதற்கு மாதிரி எடுத்துக்காட்டுகாளக் கொள்ளலாம். முன்,

பின் என்பனவற்றை பெயர்களாகக் கொள்ள வழியுண்டு; இவற்றை வேர்ச்சொற்களாகக் கொள்ளலாம் என்ற விளக்கம் பின்னால் தரப்பட்டுள்ளது.

1.1.6. வினையடை பெயர் பெயர்

அமைப்பொழுங்கு கட்டுத்திட்டத்தின்படி முன்னேற்றம், பின்னேற்றம் என்பனவற்றில் வரும் முன், பின் என்ற சொற்களை வினையடைகளாகக் கொள்ளவும் இடம் உண்டு. முன்னர் கூறிய கூட்டாக்கத்திற்கும் இதற்கும் வேற்றுமை யொன்றுமில்லை.

1.1 7. தொடர்க்கூட்டுகள்

ஒரு தொடரே கூட்டாக்கத்தில் சம்மந்தப்படும் தொடர்க் கூட்டுகளின் கீழ் பலவகைப்பட்ட கூட்டுகள் வரும். சில சமயங்களில் இப்படிப்பட்ட ஆக்கங்களை உண்மையிலேயே, கட்டுகளாகக் கருதலாமா. அல்லது தொடர் அமைப்பின் அகராதிச் சொல் வடிவமாகக் கருதலாமா என்ற ஐயம் எழுவதுண்டு இந்த வகுப்பில் படும் கூட்டுக்களை உள்வட்டக்கூட்டு வெளிவட்டக்கூட்டு, உம்மைக்கூட்டு என வேறுபடுத்தலாம்.

உள்வட்டத் தொடர் கூட்டில் படும், தறபோது வினை வாக்கமில்லாத, சில கூட்டுகளின் தலைப்புச் சொல்லிற்கு முன் வரும் சொல்லோடு சேர்ந்துவரும் உருபை பகுப்பாய்வு செய்து பெறலாம். (எ. கா. பாறாங்கல் பாறை ஆம்கல், கூழாங்கல் கூழ் ஆம் கல்). சில கூட்டுகள் வேற்றுமையுருபு தொகாதன வாய் அமையும். (எ.கா. பழிக்குப்பழி, வட்டிக்குவட்டி, ஆயிரத்தில் ஒருவன்) உள்வட்டத் தொடர் கூட்டுகளில் மிகச் சாதாரணமான விளைவாக்கமுள்ள, கூட்டுகள், ஒரு தலைப்புச் சொல்லும் அதன் முன்னர் ஒரு தொடரோ வாக்கியமோ வருவதாய் அமையும். (எ.கா. முடிசூடா மன்னன், கண்டதும் காதல், பழம்நழுவிப் பாலில் விழும், எதிர் பார்ப்பு, ஊதினால் பறந்துவிடும் உடம்பு, போனால் போகட்டும் போடா, மனம், தொட்ட தெல்லாம் துலங்கும்கை).

உம்மைத் தொடர்கூட்டுகள் உம் என்ற உருபை வெளிப் படையாகக் கொண்டு உம்மைத் தொகைக் கூட்டுகளிலிருந்து வேறுபடுகின்றன. இவைகளை ஒரு கூட்டாக்கமாகவும் தொடர் நிலைத் தொடராகவும் காணலாம். (எ. கா. **நகமும் சதையும், பாலும் தண்ணீரும், நீரும் நெருப்பும்**).

வெளிவட்டத் தொடர் கூட்டுகள் பலதரப்பட்டவையாகும். (எ. கா. **தொட்டால்வாடி, தொட்டால் சுருங்கி, வெளுத்த தெல்லாம் பால், வெட்டொன்று துண்டிரண்டு**).

இரட்டைக் கூட்டுப் பெயர்கள்

பெயர்கள் இரட்டித்து வந்து கூட்டும் பெயர்களாக வருவது வினைவாக்க மானதாகும். இந்த இரட்டிப்பிலும் ஒருவித அமைப்பொழுங்கைக் காணலாம். (எ. கா. **அரிசிகிரிசி, மேஜை கீஜை, புலிகிலி, பாம்புகீம்பு, சம்பளம்கிம்பளம்**).

1. 2. கூட்டுவினைகள்[3]

1 2.1. பெயர் வினை வினை

தமிழில் பல பெயர்ச் சொற்கள் சில பொது வினைகளுடன் (வினைவாக்கிகளுடன்) சேர்ந்து வினையாக்கம் பெறுகின்றன. இத்தகைய ஆக்கம் வினைவாக்கம் மிகுந்ததாகும். அடை (எ. கா. நாசமடை), அடி (எ. கா. வெள்ளையடி). அளி (எ. கா. பரிசளி). ஆகு (எ. கா. பாழாகு), ஆக்கு (எ. கா. வீணாக்கு), ஆடு (எ. கா. போராடு), ஆற்று (எ. கா. பணியாற்று) இடு (எ. கா. கட்டளையிடு,) உறு (எ. கா. நோயுறு), உறுத்து (எ கா. பயமுறுத்து) ஊட்டு (எ. கா. ஊக்கமூட்டு,) செய் (எ. கா. விசாரணை செய்), சொல் (எ. கா. கோள்சொல்), படு (எ. கா. பாடுபடு), படுத்து (எ. கா. உற்சாகப்படுத்து), பண்ணு (எ. கா. தயார் பண்ணு), பார் (எ. கா. வைத்தியம்பார்), பூரி (எ. கா. வருகைபுரி,) போடு (எ. கா. மனுப்போடு), போ (எ.கா. சோரம்போ) விடு (எ.கா. மூச்சுவிடு), போன்ற வினைகள்

வினையாக்கிகளாகச் செயல்புரிகின்றன. கூட்டுவினைகளையும் உள்வட்டக்கூட்டுகள் (எ. கா. ஒப்பெடு, முயற்சிசெய், வெளி வட்டக் கூட்டுகள் (எ. கா. மொட்டையடி, 'ஏழையாக்கு', தலையிடு 'குறுக்கிடு') எனப் பிரிக்கலாம்.

1.2.2. வினை வினை வினை

இத்தகைய கூட்டு வினைகள் தமிழில் தாராளமாய் உள்ளன. இக்கூட்டு வினைகளின் முதல் வினைப்பகுதிகள் வினையடியாகவோ (எ. கா. ஒப்புக்கொள், பறிகொடு), கால எச்சவினைப் பகுதியாகவோ (எ. கா. சொல்லிக்கொடு, கண்டு பிடி), வினைஎச்சப் பகுதியாகவோ (எ. கா. ஆறப்போடு, சாகடி) அமையலாம். வினையடி வினைக்கூட்டுகள் மிகக்குறைவே அவற்றில் வரும் வினையடிகளைத் தொழில் பெயர்களாகக் கொள்ளவும் இடமுண்டு. கால எச்சவினை வினை மற்றும் எச்சவினை வினை கூட்டுகள் பல உள்ளன. வினை வினை கூட்டுகள் உள்வட்டமாகவோ (எ. கா. பிடித்துக்கொடு, தூக்கியெறி), வெளிவட்டமாகவோ (கூட்டிக்கொடு 'மணம், செய்வி', தட்டிக்கேள் 'கண்டி') அமையலாம்.

1.2.3. பெயரடை வினையடை வினை வினை

புன்னகை, புன்சிரி, புனரமை, எதிரொலி என்ற கூட்டு வினைகளை பெயரடை வினை கூட்டுகள் என்று வடிவ அடிப் படையில் கருத இடமிருந்தாலும் செயற்பாடு அடிப்படையில் வினையடை வினை என்றும் கொள்ளலாம் இத்தகைய கூட்டு வினைகள் தமிழில் மிகக் குறைவு.

1.2.4. இடைச்சொல் வினை வினை

முன்னர் கூட்டுப் பெயர்களின் கீழ் கண்டதுபோல் பின்னேறு, முன்னேறு, வெளியேறு என்ற கூட்டுவினைகளை இடைச்சொல், வினை என்றோ, பெயர்ச்சொல் வினை என்றோ வினையடை வினை என்றோ பின்உருபு வினை என்றோ அல்லது எல்லா வற்றிற்கும் பொதுவாக வேர்ச்சொல் வினை என்றோ கொள்ளலாம்.

1.3. கூட்டுப் பெயரடைகள்

கூட்டுப் பெயரடைகள் பல்வேறுபட்ட அமைப்பொழுங்கு மூலம் பெறலாம் என்றாலும் இக்கூட்டுக்களை கூட்டுப் பெயரடைகளாகக்கொள்ளலாமா என்ற ஐயம் எழ இடமுண்டு.

1.3.1. பெயர் பெயரடை பெயரடை

இது பரவலான கூட்டுப்பெயரடைகளின் வகையாகும். இதில் வேறுபடுத்த தக்கதான பல பொருண்மை உள்வகைகள் உண்டு. கிளிப்பச்சை (வர்ணம்), இலைப்பச்சை (சேலை), இரத்தச் சிவப்பு (ரோஜா) வடிவ அடிப்படையில் மேற்சொன்ன எடுத்துக் காட்டுகளை பெயர் பெயர் பெயரடை என்று கொள்ளலாம்.

1 2.3. பெயரடை பெயரடை பெயரடை

இந்த வகையான கூட்டுகளை நேரியயைபுக் கூட்டுகள் (எ. கா. குருட்டு ஊமை செவிட்டு ஊமை) மற்றும் உள்வட்டக் கூட்டுகள் (எ.கா. கருநீலம், இளஞ்சிவப்பு, பச்சிளம்) என இரண்டு பொருண்மை வகுப்புகளாகப் பிரிக்கலாம். இவற்றில் நேரியயைபுக் கூட்டுகள் உள்வட்டக் கூட்டுக்களைக் காட்டிலும் அரிதாகவே உள்ளன. பெரும்பாலான பெயரடை பெயரடை கூட்டுகள் உள்வட்டக் கூட்டுகளாகத்தான் அமைகின்றன.

1.3.3. பெயர் பெயர் பெயரடை

இத்தகைய கூட்டுகள் செயற்பாட்டால் பெயரடையாக வந்தாலும் இவற்றின் இரண்டாவது அல்லது தலைப்புச்சொல் பெயரடையல்ல. இக்கூட்டுகள் வெளிவட்டக் கூட்டுகளாக அமையும். பெரும்பாலும் இவற்றைப் பெயரடை எனக் குறிப் பிடுவது தவறானதாக அமையலாம். ஏனென்றால் இத்தகைய கூட்டுப் பெயரடை மற்றொரு பெயரின் பெயரடையாக வருவது என்பது மூன்று பெயர்கள் சேர்ந்து கூட்டாக வருவதை ஒக்கும் இம்மாதிரியான அடையாக வரும் கூட்டுகள் அவற்றின். உறுப்புகளாக வரும் சொற்களிலிருந்து தன்னிச்சையாக நிறுவப் பெற்று அகராதி நிலைபேறாக்கம் பெறுகின்றன என்பது இதற்கு

எதிரான வாதமாகும். இத்தகைய கூட்டுப் பெயரடைகளில் சில அடையாக மட்டுந்தான் பயன்படுத்தப்படுகின்றன. மற்றும் சில கூட்டுக்கள் அடையில்லாத கூட்டுப்பெயர்களிலிருந்து வேறு பட்ட உள்ளர்த்தம் உடையனவாக அமைகின்றன. பின்வரும் கூட்டுப் பெயரடைகள் இந்த வகுப்பில் படும் சிக்கல்களைத் தெளிவுபடுத்தும்: வாயாடிப் (பெண்), தெருப்பொறுக்கிப் (பயல்), பொன்மனச் (செம்மல்) திரைமறைவு (கூட்டம்), அட்டைக்கத்தி (வீரன்), கிளிமூக்கு (மாங்காய்),

1.3.4. வினை பெயர் பெயரடை

இத்தகைய கூட்டுகள் வெளிவட்டக் கூட்டுகளாக அமையும். இந்த வகுப்பில்படும் கூட்டுகளும் முந்தைய வகுப்பைப் போன்று பின்வரும் பெரின் முன்னர் பெயரடையாகத்தான் செயல் படுகின்றன. (எ. கா. தூங்குமுஞ்சி (வாத்தியார்), வெட்டுகத்தி (மீசை), அழுமுஞ்சிப் (பயல்):

1.3.5. பெயரடை பெயர் பெயரடை

இக்கூட்டுப் பெயரடைகளும் வெளிவட்டக் கூட்டுகளாகும். இவற்றில் பெரும்பாலானவை அடையாக பயன்படுகையில் மாத்திரமே பெயரடையாக வருகின்றன. அல்லாவிடில், பெயராகத்தான் செயல்படுகின்றன. (எ. கா. கருங்கல் (மனசு), பசும்பொன் (உள்ளம்), செஞ்சோறு (கடன்),

1.3.6. இடைச்சொல் பெயர் பெயரடை

இந்த வகையான கூட்டுக்களில் இடைச்சொற்கள் அல்லது வேர்ச்சொற்கள் பெயரைத் தொடர்ந்து வந்து மற்றொரு பெயரின் அடையாக அமையும். (எ. கா. முன்னேற்றப் (பாதை), வெளியுலகச் (செய்தி), பிற்போக்கு (வாதி), முன்னாள் (அமைச்சர்). இத்தகைய கூட்டுகளும் வெளிவட்டக் கூட்டு களாகவே வரும்.

1.3.7. பெயர் வினை பெயரடை

இவைகளும் வெளிவட்டக் கூட்டுகளாகவே வரும். (எ.கா குடுமிப்பிடி (சண்டை), கல்எறி (தூரம்), கூப்பிடு (தூரம்)

1.3.8. வினை வினை பெயரடை

அடிபிடி (சண்டை), தட்டுமுட்டு (சாமான்), எடுபிடி (வேலை), இவற்றை இக்கூட்டுப் பெயரடைகளுக்கு எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம்.

1.3.9 பெயரடை/ வினையடை வினை பெயரடை

திருநிறை (செல்வி), புன்னகை (மன்னன்), போன்ற கூட்டுப்பெயரடைகளை இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

1.4. கூட்டு வினையடைகள்

ஒரு கூட்டுப்பெயரின் முன் வினையடைப். பின்னொட்டுகள் ஆல், ஒடு, இல் போன்றவை சேரும்போது கூட்டு வினையாக்கம் நடைபெறும். (எ.கா. உறுதுணையாக, படுவேகமாக, ஏற்ற இறக்கத்தோடு, கருவிரக்கத்தோடு, அசுரவேகத்தில்)

இவை தவிர இசைக்காக அடுக்கி அல்லது இரட்டித்துவரும் கூட்டு வினையடைகளும் உண்டு. அவை பலவிதமான அமைப் பொழுங்கில் வரும். (எ.கா. ஆறஅமர, போயும் போயும், வரவர, பேச்சோடு பேச்சாக, தெள்ளத்தெளிவாக, ஏடா கூடமாக, விறுவிறுப்பாக, தாறுமாறாக, கலகலவென்று

2. முன்னொட்டாக்கம்

தமிழில் முன்னொட்டுகள் இல்லையென்றே கூறலாம். சமஸ்கிருத மொழியிலிருந்து கடன் வாங்கப்பெற்ற சில சொற்களில் முன்னொட்டுகள் காணப்படும்' (எ.கா. அ சுத்தம் அசுத்தம், அ.சாதாரணம் அசாதாரணம்.) அ- என்ற எதிர்மறை பொருளாக்கம் தரும் முன்னொட்டு தமிழில் விளைவாக்க ஒட்டாகப் பயன்படுத்தப்படவில்லை.

3. பின்னொட்டாக்கம்

தமிழில் பின்னொட்டாக்கம் பரவலாகக் காணப்படும் சொல்லாக்க முறையாகும். பல பின்னொட்டுகள் தமிழில் பயன்

படுத்தப்படுகின்றன. இங்கு சொல்லாக்கத்தால் பெறப்படும் சொற்களின் வடிவ வகுப்பு அடிப்படையில் பின்னொட்டாக்கம் வகைப்படுத்தப்பட்டு தரப்பட்டுள்ளன.

3.1. பெயராக்கம்[4]

3.1.1. பெயரிலிருந்து பெயர்கள்

தமிழ் பின்ஒட்டுக்களை அவற்றின் தன்மை கருதி இரண்டு வகையாகப் பிரிக்கலாம். எடுத்துக்காட்டாக சமையல்காரர் என்ற சொல்வில் வரும் காரர் என்ற சொல் ஒரு ஒட்டுவடிவம் என்ற காரணத்தால் ஒட்டு என்று கொண்டாலும், இவ்வொட்டு **காரணம்** போன்ற கட்டற்ற வடிவத்துடன் தொடர்புடைய ஒரு வடிவாகக் கொள்ள இடமிருப்பதாலும் இது பொருண்மை அடிப்படையில் ஒருபொருள் வடிவமாக (இலக்கண வடிவத்திற்கு மாறான) இருப்பதால் இதையும் இதுபோன்றவற்றையும் பிற ஒட்டுக்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது வருணனைக்கு உகந்ததாகப்படுகின்றது. இவற்றை நாம் பேரொட்டுகள் என்று குறிப்பிடுகிறோம்.

3.1.1.1. உயர்திணைப் பெயராக்கம்

-காரன், -ஆளன், -ஈனன், -சீலன், -சந்தன், -வந்தன் என்பன ஆண்பால் ஒருமை பேரொட்டுகளாகவும், -காரி, -ஆட்டி, -வகை, வதி என்பன பெண்பால் ஒருமை பேரொட்டுகளாகவும், -ஆள், -அளி, -சாலி, -வாதி, -மாணி, -மான், -தாரி, -ஏறி என்பன ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவான பேரொட்டுகளாகவும், -காரர், -ஆளர், -ஈவர், -சிலர், வந்தர் என்பன உயர்ஒருமை பேரொட்டுகளாகவும் பெயர்களோடு இணைந்து பெயராக்கம் செய்கின்றன. மேற்சொன்ன பேரொட்டுகளை ஒரே இனத்தைச் சார்ந்த மூன்றுவகை பேரொட்டுகளாகப் பிரிக்கலாம்: 1) ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூன்று திரிபுகள் பெறும் ஓரினப் பேரொட்டுகள், 2) ஆண்பால், பலர்பால் என இரு திரிபுகள் பெறும் ஓரின ஒட்டுகள், 3) திரிபு பெறா ஓரினப் பேரொட்டுகள்.

கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகள் மேற்சொன்ன செய்திகளைத் தெளிவுபடுத்தும்:

எ. கா.

வேலைக்காரன்	வேலைக்காரி	வேலைக்காரர்	-
பேச்சாளன்	-	பேச்சாளர்	-
மணவாளன்	மணவாட்டி	மணவாளர்	-
மதிஈனன்	-	மதிஈனர்	-
சத்தியசீலன்	-	சத்தியசீலர்	-
சத்தியசந்தன்	-	சத்தியசந்தர்	-
தனவந்தன்	-	தனவந்தர்	-
சத்தியவந்தன்	சத்தியவதி சத்தியவதை	சத்தியவந்தர்	-
-	-	-	சமையலாள்
-	-	-	நோயாளி
-	-	-	புத்திசாலி
-	-	-	சமயவாதி
-	-	-	நீதிமான்
-	-	-	பட்டதாரி
-	-	-	சோம்பேரி

ஆளி, வாதி, காரி, ஏறி என்பவை ஆளு, வாதி, தரி, ஏறு, என்ற வினைகளில் இ-ஒட்டாக்கங்களாகும். (பார்க்க: பருப் பொருளாக்கம்)

பேரொட்டுகள் அல்லாத பிற ஒட்டுகளும் உயர்திணைப் பெயர்களை ஆக்கவல்லன. -அன், -ஆன், ஒன் என்பன ஆண்பால் ஒருமைக்கும் -ஆள், -அள், -அத்தி, -ஆச்சி, ஆத்தி, -த்தி, -ச்சி, -இ, -ஐ என்பன பெண்பால் ஒருமைக்கும் -அர், -ஆர், -ஓர் என்பன உயர் ஒருமைக்கும் ஒட்டுகளாக வந்து பெயர்களோடு வந்து பெயராககம் செய்கின்றன. இவ்வொட்டுகள் இணைக்கப் பெறும் பெயர் பகுதிகளை முழுச்சொல் வேர்ச்சொல் என்று

இருவகைகளாகப் பிரிக்க வேண்டியதிருக்கிறது. அரசு என்ற முழுச்சொல்லுடன் திணை-இடம் எண்-பால் ஒட்டுகள் சேர்ந்து அரசன், அரசி, அரசர் எனப் பெயராக்கம் செய்ததாய்க் கொள்ளலாம். ஆனால் புலவன், புலவர், புலமை என்ற சொற்களை புலம், 'அறிவு' என்ற சொல்லோடு தொடர்புபடுத்தி புலம் ஆன் புலவன், புலம் ஆர் புலவர், புலம் ஐ புலமை எனப் பெயராக்கம் செய்ய வேண்டுமா, அல்லது புலவன், புலவர், புலமை புலம் என்ற நான்கு சொற்களையும் புல என்ற வேர்ச் சொல்லிலிருந்து பின்னொட்டாக்கத்தால்பெற வேண்டுமா என்பது விவாதத்திற்குரியது. இதுபோலவே கணவன் கணவர் என்ற சொற்களை கண என்ற வழக்கிலில்லாத வேர்ச்சொல்லி லிருந்து பின்னொட்டாக்கத்தால் பெற வேண்டுமா அல்லது அவற்றை ஓர் உருபன் சொற்களாகக் கொள்வதா என்பது தீர்மானிக்கப்படவேண்டிய ஒன்று. மேற்கண்ட எல்லா சொற்களும் அகராதிச் சொற்களாகக் கருதாது திணை-இடம்-எண்-பால் அடைகளாகப் படுத்தப்பட்ட ஓர் உருபன் சொற்களாகக் கொள்ளலாம். இப்படிச் செய்வதால் ஓர் வேர்ச்சொல்லிலிருந்து பெறப்பெற்ற பல ஆக்கச் சொற்களை பொருண்மை அடிப்படையில் தொடர்புபடுத்த இயலாது போகும்.

மேற்சொன்ன ஆக்கங்களின் பகுதிகளை ஆண்பால், பெண் பால், பலர்பால் என்ற மூன்று திரிபுகளை ஏற்கும் பகுதி களாகவும், ஆண்பால், பெண்பால் என்ற இரண்டையும் ஏற்கும் பகுதிகளாகவும் ஆண்பால், பெண்பால் என்ற இரண்டையும் ஏற்கும் பகுதிகளாகவும், ஆண்பால் மாத்திரம் ஏற்கும் பகுதிகளாகவும் பெண்பால் மாத்திரம் ஏற்கும் பகுதிகளாகவும் கீழ்வருமாறு பிரித்து பகுப்பு செய்யலாம்.

தலைவன்	: தலைவி	: தலைவர்	(-அன் : -இ : -அர்)
குறவன்	: குறத்தி	: குறவர்	(-அன் : -த்தி : -அர்)
இடையன்	: இடைச்சி	: இடையர்	(-அன் : -ச்சி : அர்)
செம்படவன்	: செம்படத்தி	: செம்படவர்	(-அன் : -அத்தி : -அர்)
தமிழன்	: தமிழச்சி	: தமிழர்	(-அன் : -அச்சி : -அர்,
ஆசிரியன்	: ஆசிரியை	: ஆசிரியர்	(-அன் : -ஐ : -அர்)

புலவர்	: -	: புலவர்	(-அன் : - : -அர்)
கலைஞன்	: -	: கலைஞர்	(-ஞன் : - : -ஞர்)
-	: மனைவி	: -	(- : -ஐ : - -)
கிராமத்தான்	: கிராமத்தாள்	: கிராமத்தார்	(-அன் :-அள் :-ஆர்)
வண்ணான்	: வண்ணாத்தி	: வண்ணார்	(ஆன் :-ஆத்தி : -ஆர்)
பிரான்	: பிராட்டி	: -	(-ஆன் : ஆட்டி : -)
மச்சான்	: மச்சாள்	: -	(-ஆள் : -ஆள் : -)

மேற்கண்ட ஒட்டுகள் தவிர -இ என்ற ஒட்டு சில பெயர் களுடன் சேர்ந்து உயர்திணைப் பெயர்களை ஆக்கவல்லன. இவ்வொட்டு ஆண்பால் பெண்பால் வேறுபாட்டை காட்டாத ஒட்டாகும். (எ.கா. பாவம் இ பாலி, விவசாயம் இ விவசாயி, உபகாரம் இ உபகாரி).

3.1 2. வினையிலிருந்து பெயர்கள்

இது மிகப் பொதுவாகவும் பரவலாகவும் காணப்படும் சொல்லாக்க வகையாகும். இதில் பலவிதி அமைப் பொழுங்குகளைக் காணலாம்.

3 1.2 1. தொழிற் பெயராக்கம்

-தல், -த்தல் என்ற ஒட்டுகள் துணைநிலை வருகை முறையில் வினைப் பகுதிகளோடு இணைந்து தொழிற் பெயராக்கம் செய்கின்றன. (எ. கா. நில் தல் நிற்றல், அழி தல் அழிதல், கெடு த்தல் கெடுத்தல்,) தொழிற் பெயராக்கம் பின் வரும் வினையடிப் பெயராக்கத்திலிருந்து பொருண்மை அடிப் படையிலும் செயற்பாடு அடிப்படையிலும் வேறுபடுகின்றன (பார்க்க : பரம்சிவம், '71)

3.1 2 2 வினையடிப் பெயராக்கம்

3.1.2.2.1. -கை, -க்கை என்ற ஒட்டுகள் பெரும்பாலான வினையடிகளுடன் துணைநிலை வருகை முறையில் வினைப் பகுதிகளோடு இணைந்து தொழிற்பெயராக்கம் செய்கின்றன.

(எ. கா. செய் ஐக செய்கை, வாழ் க்கை வாழ்க்கை.)

3. 1. 2. 2. 2. -ஆ, -ப்பு, -க்கு, என்ற ஒட்டுகள் துணைநிலை வருகை முறையில் ஒரு பிரிவு வினையடிகளோடு இணைந்து பெயராக்கம் செய்கின்றன. (எ. கா. வாழ் வு வாழ்வு, படி ப்பு படிப்பு, போ க்கு போக்கு.) -கு, -க, -டு, -து, -று என்று முடியும் சில வினையடிகளில் வல்வினமெய் மிகுந்து பெயராக்கம் செய்வதும் மேற்சொன்ன பின்னொட்டாக்கத்தோடு துணை நிலை துருகை முறையில் அமைவதாய் கொள்ளலாம். (எ. கா. ஒழுகு ஒழுக்கு, பேசு பேச்சு, திருடு திருட்டு, எழுது எழுத்து, கூறு கூற்று.) -டு, -று, என்று முடியும் சில வினையடிகளில் இறுதியசைக்கு முந்திய அசையின் உயிர்க்குறில் நெடிலாக்கம் பெற்று பெயராக்கம் பெறுவதையும் மேற்சொன்ன ஆக்கங்களோடு துணைநிலை வருகை முறையில் அமைவதாகக் கொள்ளலாம். (எ. கா. கெடு கேடு, வழிபடு வழிபாடு, சாப்பிடு சாப்பாடு, பெறு பேறு.

3.1. 2. 2. 3. -ஆல், -க்கல், -ச்சல், -ச்சு, -ச்சி, -சி, -வி, -இ என்பன துணைநிலை வருகை முறையில் வந்து ஒரு பிரிவைச் சார்ந்த வினையடிகளைப் பெயராக்கம் செய்கின்றன. (எ.கா ஆடு அல் ஆடல், கொடு க்கல் கொடுக்கல், அலை ச்சல் அலைச்சல், முடிச்சு முடிச்சு, மற தி மறதி, வளர் ச்சி, வளர்ச்சி, ஆள் சி ஆட்சி, கல் வி கல்வி, வெகுள் ஐ வெகுளி.)

3. 1. 2. 2. 4. -ஐ, -வை, -மை என்பன துணைநிலை வருகை முறையில் வந்து வினையடிப் பெயர்களை ஆக்கம் செய்கின்றன. (எ. கா. நட ஐ நடை, கொல் ஐ கொலை, பார் வை பார்வை, போறு மை பொறுமை.)

3. 1. 2. 2. 5. -அம், -த்ம்,. -த்தம், -த்தை என்பன துணை நிலை வருகை முறையில் வந்து வினையடிப் பெயராக்கம் செய்கின்றன. (எ. கா. அஞ்சி அம் அச்சம், தூங்கு அம் தூக்கம், படி த்தம் படித்தம், நட த்தை நடத்தை)

3 1 2 2 6. பருப்பொருளாக்கம்

நுண்பொருள் தரும் வினையடிகளிலிருந்து பெயராக்கம் வழி நுண்பொருளாக்கம் மட்டுமன்றி பருப்பொருளாக்கமும் நடைபெறுகின்றது முன்னர் குறிப்பிட்ட வினையடிப் பெயராக்கங்களில் தரப்பட்ட எடுத்துக்காட்டுகளிலிருந்து வேறுபட்ட பொருள்கள் தரும் நுண் பொருளாக்கங்களை அறியமுடியும். ஒரு சில வினையடிப் பருப்பொருளாக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

-இ என்ற ஒட்டு வினையடிகளுடன் சேர்ந்து கருத்தா மற்றும் கருவியாக்கம் செய்கின்றன. இவ்வாக்கம் வினைவாக்கம் நிறைந்ததாய் உள்ளது. (எ. கா. தூக்கு இ தூக்கி, (பாரந்தூக்கி), பெருக்கு இ பெருக்கி (ஒலிபெருக்கி), நொண்டு இ நொண்டி (கால் நொண்டி), போக்கு இ போக்கி (புகைபோக்கி), ஓட்டு (காரோட்டி), ஏறு இ ஏறி (பனையேறி)

-ஞர், -அர் என்ற ஒட்டுகள் உயர்திணைக் கருத்தா வாக்கத்திற்காக ஒருசில வினையடிகளுடன் பயன்படுத்தப் பட்டன. தற்காலத் தமிழில் -ஞர் என்ற ஒட்டு விளைவாக்கம் பெற்றுள்ளது. எ.கா. திருடு அர் திருடர், அறி ஞர் அறிஞர், ஓட்டு நர் ஓட்டுநர், நடத்து நர் நடத்துநர்.

-அல், -தல், -வை, -க்கை, -அம் போன்ற ஒட்டுகள் சில வினைகளோடு சேர்ந்து தத்தம் வினையோடு தொடர்புடைய கருத்தா, கருவி மற்றும் செயப்படுபொருள் ஆக்கம் செய்கின்றன. (எ. கா. வறு அல் வறுவல்) வறு தல் வற்றல், துவை அல் துவையல், படு க்கை படுக்கை, பறவை பறவை, பழ அம் பழம், சாப்பிடு சாப்பாடு, பூட்டு பூட்டு, பூ பூ, மலர், கனி கனி, விதை விதை.)

3 1 2 3. காலங்காட்டும் வினைப் பகுதிகளிலிருந்து வினைப்பெயர்கள்

-தல், -த்தல் தொழிற்பெயர் ஒட்டுக்கிணையான -அது காலங்காட்டும் ஒட்டுகள் அடங்கிய வினைப் பகுதிகளோடு

சேர்ந்து பெயராக்கம் செய்கின்றது. இது வினைவாக்கம் மிகுந்ததாய் காணப்படுகிறது. (எ.கா.படித்த அது படித்தது படிக்கிற் அது படிக்கிறது, படிப்பது, வருவ் அது வருவது

3.1.2.4. தெரிநிலைப் பெயரெச்சம் பகுதிகளிலிருந்து வினையாலணையும் பெயர்கள்

இடம்-எண்-பால் குறிக்கும் கலவை ஒட்டுகள் குறைவினை தவிர்த்து கால ஒட்டுகள் அடங்கிய பிற எல்லா பெயரெச்சப் பகுதிகளுடன் சேர்ந்து வினையாலணையும் பெயராக்கம் செய்யும். வந்த அன் வந்தவன், படித்த அன் படித்தவன், கண்ட அன் கண்டவன், கொடுத்த அது கொடுத்தது

வினையாலணையும் பெயர்கள் தத்தம் வினைகளுடன் வேறுபட்ட செயற்பாடு உறவுகள் கொண்டிருக்கும். எடுத்துக் காட்டாக கண்டவன் என்பது காண் என்ற வினையுடன் எழுவாய் உறவோ செயற்படுபொருள் உறவோ கொண்டிருக் கலாம். கொடுத்தது என்பது கொடு என்ற வினையோடு எழுவாய் உறவோ, செயப்படுபொருள் உறவோ, கொடை உறவோ கொண்டிருக்கலாம்.

3.1.3. பெயரடையிலிருந்து பெயர்

திணை-இடம்-எண்-பால் குறிக்கும் கலவை ஒட்டுகள் (ஐம்பால் விகுதிகள்) பெயரடைகளுடன் சேர்ந்து பெயராக்கம் செய்யும் (எ. கா. பெரிய அன் பெரியவன், நல்ல அன் நல்லவன், அழகான அன் அழகானவன் மானமுள்ள அன் மானமுள்ளவன்.)

3.1.4. வேர்ச் சொற்களிலிருந்து பெயர்கள்

மரபிலக்கணத்தார் நிறப்பண்பு, சுவைப்பண்பு, வடிவப் பண்பு, அளவுப்பண்பு என நால்வகைப் பண்புப் பெயர்களைக் குறிப்பிட்டு பண்புப் பெயர்களையும் அவற்றின் விகுதிகளையும் பின்வருமாறு தந்துள்ளனர்: நன்மை : மை, தொல்லை : ஐ' மாட்சி : சி, மாண்பு : பு, மழவு : உ, நன்கு : கு, நன்றி : றி, நன்று : று, நலம் : அம், திட்டம் : பம்

பண்புப்பெயர் விகுதிகள் வரும் பகுதிகள் எந்தச் சொல் வகுப்பைச் சார்ந்தவை என்பது தெளிவாக இல்லை. நாம் நன், தொல், மாட், மாண், முழு, நன், நல், திட் என்பவைகளைப் பண்புப் பெயராக்கப் பகுதிகளாகக் கொள்ளலாம். இப்பகுதிகள் பெயர், வினை, இடை, உரி என்ற மரப்பிலக்கணச்சொல் வகுப்புகளுள் எந்த வகுப்பைச் சார்ந்தன என்பதில் ஐயப்பாடு வருகின்றது. இவை பலவகைச் சொல்லாக்கங்களுக்குப் பகுதிகளாக வருவதால் நாம் இவற்றை வேர்ச் சொற்கள் என்று குறிப்பிடுகிறோம். இவ்வித மேற்கண்ட பண்புப் பெயர்களைப் பகுக்க இயலாத ஓர் உருபன் சொற்களாக எடுப்பதில் தடையேதுமில்லை. ஏனென்றால் அவைகள் அகராதிச் சொற்களாக நிலையாக்கம் பெற்றுவிட்டன. எனவே மேற் சொன்ன பண்புப் பெயர் விகுதிகளை ஒட்டுகளாகப் பகுதி களிலிருந்து பிரித்துப் பார்ப்பது தேவையில்லாதது போலிருந் தாலும் சொற்களின் பொருள் தொடர்புகளைச் சொல்லாக் கங்கள் மூலம் தொடர்புபடுத்திக் காட்டுவது சிறந்ததாகத் தோன்றுகின்றது. பின்வரும் எடுத்துக்காட்டுகள் இதை நமக்கு தெளிவாக்கும்.

	ஓர்	ஒருவன்		மூன்	மூன்று
	ஒரு	ஒருத்தி		முன்	முன்னூறு
ஓர்	ஒன்	ஒருவர்	மு	மூ	மூவர்
	ஒற்	ஒன்று			மூவாயிரம்
	ஒவ்	ஒற்றை			மும்மை
		ஒவ்வொரு			முப்பது
					முத்தமிழ்
		நன்று			
		நன்றி			
		நன்கு		பேர்	
		நன்மை		பெரு	பெருமை
	நன்	நன்னன்		பெரி	பெரியோர்

நன்/நல் நல்லது நல்லோர் நலம் நல்ல நற்றமிழ்

பேர் பெரிய பெரியர் பெரியவன்

மரபிலக்கணப்படி நற்றமிழ் என்பதை நன்மை தமிழ் என்றும், பெரியர் என்பதை பெருமை ஆர் என்றும் முத்தமிழ் என்பதை மூன்று தமிழ் என்றும் பிரிக்கலாம். சந்திவிதிகளின்படி நன்மை என்பது நல் என்றும் பெருமை என்பது பெரி என்றும் மூன்று என்பது மு என்றும் திரிந்ததாகக் கொள்ள வேண்டும். இவ்வாறு கொள்வது நன்/நல், பேர், மு போன்ற வேர்ச் சொற்களிலிருந்து (வடிவ அடிப்படையில்) அல்லது பெயரடைச் சொற்களிலிருந்து (செயற்பாடு அடிப்படையில்) வேறு ஆக்கச் சொற்கள் பெறுவதை மறைப்பதையொக்கும்.

இதுபோலவே முன், பின் என்பதையும் வேர்ச்சொற்கள் அல்லது பெயரடைச் சொற்களாகக் கொண்டு பின்வரும் சொல்லாக்கங்களை விளக்கலாம்.

முன்

முன்/முற்

முன்பு
முன்னால்
முன்னர்
முன்னால்
முன்னோர்
முன்னவன்
முன்னவன்
முன்னம் (கால்)
முன்னாள்

	முற்	முற்பகல்
		முற்றம்
		பின்பு
		பின்னால்
		பின்னர்
	பின்	பின்னில்
		பின்னோர்
		பின்னவன்
பின்/பிற்		பின்னம் (கால்)
		பிற்பகல்
	பிற்	பிற்காலம்
		பிறகு

இதுபோலவே வடதிசை, தென்திசை, கீழ்திசை, மேல்திசை. வடகிழக்கு, தென்கிழக்கு, வடமேற்கு, தென்மேற்கு என்ற கூட்டுப்பெயர்களையும் (திசைப் பெயர்களையும்) வட, தென், கீழ், மேல் என்ற வேர்ச்சொற்களுடன் திசைப்பெயர்கள் சேர்ந்து கூட்டாக்கம் பெற்றதால் கூறலாம். அவ்வாறுகூறுகையில், வட, தென், கீழ், மேல் என்ற வேர்ச்சொற்களுடன் கு என்ற ஒட்டு சேர்ந்து வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என பெயராக்கம் பெற்றதாய்க் கொள்ளலாம். இவ்வாறல்லாமல் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்ற முழுச் சொற்களிலிருந்து வடக்கு திசை வடதிசை, தெற்குதிசை தென்திசை, கிழக்குதிசை கீழ்திசை, மேற்கு திசை மேல்திசை, வடக்கு கிழக்கு வடகிழக்கு, தெற்கு கிழக்கு தென்கிழக்கு, வடக்கு மேற்கு வடமேற்கு, தெற்கு மேற்கு தென்மேற்கு என கூட்டுப்பெயராக்கங்கள் நடைபெற்ற தாய்க் கொண்டால்

> 'திசையொடு திசையும் பிறவும் சேரின்
>
> நிலையீற் (று) உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
>
> நகரம் லகரமாத் திரிதலும் ஆம்பிற'

நன்னூல் சூத்திரம் தரவேண்டியதிருக்கும்.

3.2. வினையாக்கம்

3.2.1. பெயர்கள்

பெயர்களிலிருந்தான பின்னொட்டாக்க வினையாக்கம் வினைவாக்கமானதல்ல. சமஸ்கிருத மொழியிலிருந்து கடன் வாங்கப் பெற்ற சில பெயர்கள் -இ உருபு பெற்று வினை யாக்கம் அடைகின்றன. எ. கா. விசார (ணை) இ விசாரி. ஆரம்ப (ம்) இ ஆரம்பி, ஜீரணம்) இ ஜீரணி, பாவ (ம்) இ பாவி.

தற்கால ஜனரஞ்சக இசை யாசிரியர்கள் பெயர்களை வினைகளாக மிகச்சிறிய அளவில் பயன்படுத்தத் தொடங்கியுள்ளார்கள். அவைகள் பொதுமக்களிடையே பயன்படுத்தப் படாமையால் வழக்கிழந்து விடுகின்றன. எ. கா. உயிர் உயிரி 'உணர் பெறு', பெயரி பெயரி 'பெயர் கூறு' நகைச்சுவை நகைச்சுவை 'நகைச்சுவை கூறு', ஆபரணம் ஆபரணி 'ஆபரணங்கள் அணிவி'.

வினைகளிலிருந்து

பிறவினைகள்[5] தன்வினைகளிலிருந்து ஒட்டுக்களைப் பெற்றோ ஒலியன் மாற்றம் பெற்றோ அல்லது தம்மைத் தொடர்ந்துவரும் கால இடைநிலை ஒட்டுக்களை வேறாகத் தேர்ந்தெடுத்தோ ஆக்கம் பெறுகின்றன. ஒட்டுப்பெறா பிறவினையாக்கங்களையும்' 'என்ற ஆழ்நிலை ஒட்டால்' ஏற்பட்ட மாற்றங்களாகக் கொள்ளலாம். (எ. கா. ஆகு ஆக்கு, அடங்கு அடக்கு, சேர் சேர்).

பிறவினை ஒட்டுக்களான -பி, -வி, -கு, -சு, -டு, -து, -பு, -று என்பன ஒரு பிரிவு தன் வினைகளுடன் சேர்ந்து பிறவினை யாக்கம் செய்கின்றன. (எ. கா. உண் பி எண்பி, செய் வி செய்வி, போ கு போக்கி, பாய் சு பாய்ச்சு, உருள் டு உருட்டு, காண் டு காட்டு, நட து நடத்து, எழு பு எழுப்பு, அகல் று அகற்று.)

ஒரு பிரிவு தன்வினைகளின் ஈற்று வல்லின மெய் இரட்டித்து பிறவினையாக்கம் பெறுகின்றன. (எ. கா. ஆகு ஆக்கு, ஓடு ஓட்டு மாறு மாற்று)

ஒரு பிரிவு தன் வினைகளின் ஈற்று அயல் மெல்லின மெய் வல்லின மெய்யாகத் திரிந்து பிறவினையாக்கம் பெறுகின்றன. (எ.கா. திருந்து திருத்து, அடங்கு, அடக்கு, திரும்பு திருப்பு.)

ஒரு பிரிவு தன்வினைகள் தம்மைத் தொடர்ந்துவரும் கால இடைநிலை ஒட்டுக்களை வேறாகத் தேர்ந்தெடுத்து பிறவினையாக்கம் பெறுகின்றன. (எ.கா. சேர்ந்தான் சேர்த்தான் சேர்க்கிறான், சேர்வான் சேர்ப்பான்.)

3.3. பெயரடையாக்கம்

பெயரடைகளைத் தமிழில் ஒரு சொல்வகையாக ஏற்றுக் கொள்வதில் பல தமிழ் இலக்கண வல்லுனர்களுக்குத் தயக்கம் இருக்கிறது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். இருப்பினும் கோதண்டராமன் (1989) போன்றோர் தற்காலத் தமிழுக்குச் சொல்வகை அல்லது இலக்கணக் கூறுகள் வகுக்கையில் பெயரடைகளையும் ஒரு சொல் வகையாகக் குறிப்பிடுகின்றனர். தற்காலத் தமிழுக்குப் பெயரடை மறுக்க இயலாது சொல் வகையாகும்.

3.3.1. வேர்ச்சொற்களிலிருந்து

வேர்ச்சொற்களிலிருந்து பெயர்கள் என்ற பகுதியில் வேர்ச் சொற்கள் பல பெயரடைகளாகப் பயன்படுத்தப்படுவதை நாம் கண்டோம். (எ.கா. நன்கொடை, இன்றமிழ், சிற்றூர், பழஞ் செருப்பு.) இத்தகைய நன், இன், சிற், பழம் என்ற வேர்ச்சொல் வடிவ பெயரடைகளை மூன்று வகையாக ஆயலாம்.

1) அவற்றை நல்ல, இனிய, சிறிய, பழைய என்ற முழுவடிவம் பெயரடைகளின் மாற்றுருவாக (சுருங்கிய உருவாக) கொள்ளலாம். 2) நன்மை, இனிமை, சிறுமை, பழமை என்ற பண்புப் பெயர்களின் தொகை வடிவமாகவோ மாற்றுவடிவ மாகவோ அல்லது சுருங்கிய வடிவமாகவோக் கொள்ளலாம். 3) நன், இன், சிற, பழம் என்று வேர்ச்சொல் வடிவப் பெயரடைகளாகக் கொள்ளலாம். மூன்றாவது கருத்தைத்தான் நாம் தெரிவு செய்தோம். அதன்படி நல்ல, இனிய, சிறிய,

பழைய என்ற பெயரடைகலள நல், இன், சிற், பழம் என்பதிலிருந்து -அ (இய -ஐய) என்ற பெயரடை ஒட்டைச் சேர்த்து ஆக்கப்பெற்ற பெயரடைகளாகக் கொள்ளலாம். சுடு (எ.கா. சுடுசோறு), குளிர் (எ. கா. குளிர் காற்று), ஊறு (எ.கா. ஊறுகாய்) என்ற வேர்வினைகளும் (வினைத் தொகைகளும். பெயரடைகளாக வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

3.3.2 பெயர்களிலிருந்து

-ஆன (ஆகு என்ற வினையின் பெயரெச்ச வடிவம்) மற்றும் உள்ள (உண்டு என்ற வினையின் பெயரெச்ச வடிவம்) என்ற பேரொட்டுகள் பெயர்களுடன் சேர்ந்து பெயரடையாக்கம் செய்கின்றன. (எ.கா. அழகு ஆன அழகான, அழகு, உள்ள அழகுள்ள, சத்து ஆன சத்தான, சத்து உள்ள சத்துள்ள.)

-ஆம், -ஆவது என்ற பேரொட்டுகள் எண்ணுப் பெயரொட்டுக்களுடன் சேர்ந்து பெயரடையாக்கம் செய்யும். (எ. கா. ஒன்றாம், ஒன்றாவது, இரண்டாம், இரண்டாவது).

3.3.3. வினைகளிலிருந்து

கால ஒட்டுகள் அடங்கிய வினைப்பகுதிகள் -அ என்ற பெயரெச்ச ஒட்டு பெற்று பெயரடையாக்கம் பெறுகின்றன. (எ. கா. போன (வாரம்), கெட்ட (பையன்), அடுத்த (வீடு), போகும் (இடம்).

3. 4. வினையடையாக்கம்

வினையடையாக்கங்களை வினைவிலா ஆக்கம், வினைவாக்கம் என இரு வகையாகப் பிரித்து வருணனை செய்வது நல்லதாகத் தோன்றுகிறது.

3. 4. 1. வினைவிலா ஆக்கம்

திரிபு பெற்ற மற்றும் திரிபு பெறாத பெயர்களும், வினைகளும் வினைகளாகச் சொல்லாக்கம் பெறுகின்றன. இவ்வாக்கங்கள் விளைவாக்க மில்லாததாலும் இவ்வாக்கச்

சொற்கள் வினையடைகளாக அகராதி நிலைபேறாக்கம் பெற்று விட்டமையாலும் நாம் இவற்றை இயற்சொற்களாகக் கருத வேண்டி இருக்கிறது.

3.4.1.1. மெல்ல, நன்கு, மீண்டும், இனியும், இன்னும், அடிக்கடி, மறுபடியும் போன்ற வினையடைகளை முறையே மெல் அ (வினை எச்சவொட்டு), நன் கு, மீண்டு உம் (வினை எச்சம் உம்), இனி உம், இன் உம், அடிக்கு அடி, மறுபடி உம் என்று பிரித்துக் சொல்லாக்கங்களை விவரிக்க முடியும் என்றாலும், இவ்வாக்கங்கள் வினைவாக்கமில்லாததாலும், இவ்வாக்கச் சொற்கள் அகராதி நிலைபேறாக்கம் பெற்றுவிட்டதாலும் இவற்றை ஆக்கச் சொற்களாகக் கருதாது இயற்சொற்களாகக் கருதுவதே சிறந்தது. இவைதவிர கீழ்வரும் ஆக்கச் சொற்களையும் இதே காரணத்திற்காக பிரிக்கத் தேவை யில்லாத இயற்கைச் சொற்களாகக் கருதுவதே சிறந்தது

3. 4 1.2. பெயர்களிலிருந்து

முன், பின், மேல், வெளி, உள், எதிர், இடை, நடு போன்ற வேர்ப்பெயர்ச் சொற்கள் -ஏ என்ற உருபேற்று பின்னே, மேலே, வெளியே, உள்ளே, எதிரே, இடையே, நடுவே என வினை யடைகளாகச் சொல்லாக்கம் பெறுகின்றன. மேலும், வெளி எதிர், இடை, நடு என்பன இல் - வேற்றுமையுருபு ஏற்று எதிரில், இடையில், நடுவில் எனவும், முன், பின் என்பன - ஆல் உருபேற்று முன்னால், பின்னால் எனவும் வினையடைகளாகச் சொல்லாக்கம் பெறுகின்றன.

கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்ற திசைப் பெயர்கள் -ஏ என்ற உருபேற்று கிழக்கே, மேற்கே, வடக்கே என வினையடைகளாகச் செயற்படாக்கம் பெறுகின்றன.

3. 4. 1. 3. வினைகளிலிருந்து

சில வினைகளின் வினையெச்ச வடிவங்கள் வினையடை களாகச் செயற்படாக்கம் பெறுகின்றன. (எ. கா. பார்த்து

(பார் த்து) 'எச்சரிக்கையாக', பிந்தி (பிந்து இ),'பின்னே', முந்தி (முந்து இ), 'முன்னே', விரைந்து (விரை ந்து 'விரைவாக').

3. 4. 1. 4. சுட்டு மற்றும் வினை அடிகளிலிருந்து

அ, இ என்ற சுட்டு அடிகளும், எ என்ற வினாவடிவும் படி, போது, பொழுது என்ற பெயர்களுடன் சேர்ந்து அப்படி, இப்படி, எப்படி, அப்போது, இப்போது, எப்போது, அப்பொழுது இப்பொழுது எப்பொழுது என வினையடையாக்கம் செய்கின்றன. மேற்சொன்ன பெயர்களின் கூட்டத்தில், ஆறு, விதம் என்பனவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

மேற்சொன்ன சுட்டு மற்றும் வினா அடிகள் -ங்கு என்னும் இட உருபுடனும் -ன்று என்னும் கால உருபுடனும் சேர்ந்து ஆங்கு, இங்கு, எங்கு எனவும் அன்று, இன்று, என்று எனவும் வினைய்டை சொல்லாக்கம் பெறுகின்றன.

3. 4. 2. வினைவாக்கம் பெயரிலிருந்து

ஆக, ஆய் (ஆகு என்ற வினையின் வினையெச்ச வடிவங்கள்) என்ற பெயரொட்டுகள் பெயர்களுடன் சேர்ந்து வினையடையாக்கம் செய்வது வினைவாக்கமானதாகும். எ. கா. அழகு ஆக் அழகாக, அழகு ஆய் அழகாய், இனிமை ஆக இனிமையாக, இனிமை ஆய் இனிமையாய்.

4. மாற்றம்

ஒரு சொல் வடிவ வகுப்பு எந்த்வித வடிவ் மாற்றமும் அடையாமல் வேறு ஒரு சொல் வடிவ வகுப்பாக ஆக்கம் அடைவது மாற்றமாகும். இந்த சொல்லாக்கத்தை ஒட்டாக் கங்களிலிருந்து வேறுபடுத்த வேண்டுமா என்பதில் ஐயம் உள்ளது. மாற்றத்தையும் ஒருவித ஒட்டாக்கமாகக் கருத இடமுண்டு. மாற்றத்தை பூஜிய ஒட்டாக்கம் என்றும் கூறலாம்,

சில வேர்ச்சொற்கள் பெயர்களாகவும், பின்னிலை சொல்லுருபுகளாகவும் (எ. கா. பின், முன், வெளி, உள்), பல பெயர்கள் எந்தவித ஒட்டையும் பெறாது பெயரடைகளாகவும்

(எ. கா. ஆண் (குழந்தை), மரப் (பெட்டி), பச்சைப் (புடவை), இரண்டு (பெட்டிகள்), வினையடைகளாகவும், (எ. கா. நன்கு (படித்தான்), ஆறுமணி (நேரம்) (தூங்கினான்), சில வினைகள் எந்தவித ஒட்டையும் பெறாது பெயர்களாகவும் (எ. கா. அடி. உதை, பிடி), வினைஎச்ச வடிவங்கள்வினையடைகளாகவும் (எ. கா. பிந்தி, முந்தி, விரைந்து) மாற்றம் பெறுவதைப் பார்த்தோம். பல இடங்களில் இத்தகைய மாற்றம் எளிதாகவும் முறையானதாகவும் இருப்பதால் இம்மாற்றங்களைச் சொல் லாக்கம் என்பதற்குப் பதிலாக தொடரியல் அடிப்படையிலான செயற்பாடு மாற்றம் எனக் கூறலாம்.

தமிழில் எல்லாச் சொற்களையும் பெயர், வினை என்ற இரு சொல்வடிவ வகுப்புகளில் அடக்கிவிடலாம் என்பர். சிலர் ஒரு படி மேல் சென்று எல்லா தமிழ்ச் சொற்களும் பெயர்களே என்று வாதிடுவர். இச்செய்திகள் இங்கு நினைவு கூரத்தக்கவை.

5. பின்னாக்கம்

சமஸ்கிருதத்திலிருந்து கடன்வாங்கப் பட்ட சில பெயர்களிலிருந்து வினைகள் ஆக்கம் பெறுவதை ஒருவித பின்னாக்கம் எனக் கூறலாம். (எ. கா. விசாரணை (பெ) விசாரி, (பி), போதனை (பெ) போதி (வி), விசாரணை போதனை என்பன விசார, போத எனப் பின்னாக்கம் பெற்று -இ என்ற வினையாக்கி மூலம் வினையாக்கம் பெற்றன எனக் கொள்ளலாம். மரபிலக்கணத்தார் கருத்தை ஏற்றுக் கொண்டால் ஓர், இரு என்பன ஒன்று, இரண்டு என்பதிலிருந்து பின்னாக்கத்தால் (சந்தியால் -ன்று, -ண்டு என்பன கெட்டு) விளைந்ததாயும் நல், பெரு என்பன நன்மை, பெருமை என்பதி லிருந்து பின்னாக்கத்தால் (சந்தியால் மை கெட்டு) விளைந்த தாயும் கொள்ளலாம். இத்தகைய ஆக்கங்களைப் பின்னாக்கங் களாகக் கொள்ளலாகாது என்று நாம் முன்னர் பார்த்தோம் (3.1 4.).

6 கத்தரிப்பாக்கம்

ஒரு அகராதிச் சொல் (தனி அல்லது கலப்பு) குறுகி அதே சமயம் அதன் பொருண்மையும் வடிவ வகுப்பும் மாறாது வருவது கத்தரிப்பாக்கமாகும். (எ.கா.) தமிழில் மாதிரிக் கத்தரிப் பாக்கங்கள் இல்லையென்றாலும் எளிமை கருதிய பல எளிமை யாக்கங்களைக் காணலாம். (எ.கா. ஆட்சியாளர் ஆட்சியர் முதலமைச்சர் முதல்வர், செயலாளர், செயலர், உயிரினங்கள் உயிரிகள் வெப்ப அளவு கருவி வெப்ப அளவி) இடச் சிறப்புப் பெயர்கள் ஒருவித கத்தரிப்பாக்கம் பெறுகின்றன. (எ. கா. புதுக்கோட்டை புதுகை, புதுச்சேரி புதுவை, திருநெல்வேலி நெல்லை, கோயம்புத்தூர் கோவை, தஞ்சாவூர் தஞ்சை,) பின்னாக்கத்தையும் ஒருவித கத்தரிப்பாக்கமாகக்கொள்ளலாம்.

7. கலப்பாக்கம்

ஒரு சொல்லின் ஒரு பாகமும் மற்றொரு சொல்லின் ஒரு பாகமும் சேர்ந்து ஒரே சொல்லாக ஆக்கம் பெறுவது கலப் பாக்கமாகும். (எ. கா.) தமிழில் இத்தகைய கலப்பாக்கம் இல்லை. ஆனால் ஆங்கிலம் அல்லது சமஸ்கிருதச் சொல்லும் தமிழ்ச் சொல்லும் அல்லது விகுதியும் சேர்ந்து ஆக்கம்பெறும் கடன் கலப்புகள் தமிழில் காணப்படுகின்றன. (எ.கா. ரயில் நிலையம், போலிஸ் ஆர் போலிசார், பிரதம் ஆர் பிரதமர்.)

8. தலைப்பெழுத்தனாக்கம்

ஒருதலைப்பு அல்லது தொடரில் வரும் சொற்களின் முதல் (தலைப்பு) எழுத்துக்களைக் கொண்டு ஆக்கப்பெறும் சொல்லைத் தலைப்பெழுத்தன் என்பர். (எ. கா. திராவிட முன்னேற்றக் கழகம் தி.மு.க., ஐக்கிய நாடுகள் ஐ.நா. கிறிஸ்து பிறந்த பின் கி. பி.) ஆங்கிலத் தலைப்பெழுத்தன்கள் தமிழிலும் பயன்படுத்தப்படுகின்றன. (எ.கா. யுனஸ்கோ, டி. வி., கி. மீ., கி. கி.)

9. சொல் உருவாக்கம்

எந்தவித உருபனியல், ஒலியனியல் அல்லது எழுத்தியல் காரணமும் இல்லாமல் சொற்களை உருவாக்குதல் சொல் உருவாக்கங்களாகும். ஆங்கிலச் சொல் என்பது இத்தகைய சொல் உருவாக்கமாகும். இத்தகைய சொல் உருவாக்கம் தமிழில் இல்லை எனலாம்.

முடிவுரை

தமிழில் சொல்லாக்கங்களில் மிகவும் பரவலானவை கூட்டாக்கங்களும் பின்னொட்டாக்கங்களுமாகும். பல புதிய சொற்கள் கூட்டாக்கங்களால் பெறப்படுகின்றன. பெயர் பெயர் கூட்டாக்கம் விளைவாக்கம் மிகுந்ததாகும். புதிய வினைகள் பெயர் வினை என்ற கூட்டாக்கத்தால் பெறப்படுகின்றன. பல நுண்மைப் பெயராக்கங்களுக்கு வினையடிகள் காரணமாகின்றன. ஆரனோப் (1976:35) சொல்லாக்க விதிகளெல்லாம் விருப்பு விதிகள் என்பார். சொல்லாக்கத்திற்குப் பதிலாக ஒரு வருணனையைப் பயன்படுத்தலாம். (எ. கா. மூதாட்டி முதுமை அடைந்த பெண்). பெயர்களைப் பொறுத்தமட்டில் பல இடங்களில் சொல்லாக்கம் நிகழாவிடினும் பெயர்த் தொடர்கள் பெயர் நிலையாக்கம் பெறுகின்றன. எ. கா. புதுப்பெண் நல்லநாள், கெட்டபெண்), ஒரு அகராதிச்சொல் வரலாற்று அடிப்படையில் எந்தச் சொல்லாக்கமும் நிகழாமல் உருவாகலாம் என்ற உண்மையும், சொல்லாக்கத்தைத் தவிர்க்கலாம் என்ற உண்மையும் சொல்லாக்கம் பற்றி ஆராயும்போது மறக்கலாகாது (லோரிபோ, 1983 241).

அடிக்குறிப்புகள்

1. லோரிபோ (1983:201-240) ஆங்கில மொழியில் சொல்லாக்கம் பற்றி கூறுகையில் அம்மொழியின் சொல்லாக்கங்களை ஆறுவகையாகப் பகுத்துக் கத்தரிப்பாக்கம், கலப்பாக்கம், தலைப்பெழுத்தனாக்கம் என்பவைகளை நிர்ணயிக்க இயலாத வடிவாக்கங்களின் கீழ் அடக்குகிறார்.

2. விஜயவேணுகோபால், (1979) தன் ஆய்வு நூலில் ஆக்க முறை மாற்றிலக்கணச் சட்டக்கோட்பாடு அடிப்படையில் தமிழ்க் கூட்டுப்பெயர்களை ஆய்ந்துள்ளார். அவர் கூட்டுப் பெயர்கள் எல்லாவற்றையும் அவற்றின் அகநிலை அமைப்பாய் அவர் கருதும் வாக்கியங்களிலிருந்து மாற்றிலக்கண விதிகள் மூலம் தருவிக்கிறார். அவரது அன்றைய கண்ணோட்டத்தை நாம் இன்று அப்படியே ஏற்றுக்கொள்ள இயலாது என்பதை ஆக்கமுறை மாற்றிலக்கணத்தில் இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்களை அறிபவர்கள் நன்கு உணர்வர். தமிழ் கூட்டுப் பெயர்கள் பற்றிய ஒரு சுருக்கமான ஆய்வு விளக்கம் சுப்பையா (1984) தந்துள்ளார்.

3. கூட்டு வினைகள் பற்றிய ஒரு சுருக்கமான ஆய்வு விளக்கம் சுப்பையா (1982) தந்துள்ளார்.

4. சண்முகம் பிள்ளை (1991) பெயராக்கம் பற்றிய ஒரு ஆய்வுச் சுருக்கம் தந்துள்ளார்.

5. வினையடிப்பெயர் பற்றிய ஒரு ஆய்வுச்சுருக்கம் சுப்பையா (1983) தந்துள்ளார்.

6. தன்வினை பிறவினை கோட்பாட்டைத் தெளிவுபடுத்தி கோதண்டராமன் (1977) எழுதியுள்ளார். சித்திரபுத்திரன் (1982) மற்றும் அகஸ்தியலிங்கம் (1982:106-127) ஆகியோர் தன்வினையிலிருந்து பிறவினை பெறும் ஆக்கம் குறித்து உருபனியல் விளக்கம் தந்துள்ளார்கள்.

7. ரேணுகாதேவி (1987) அமைப்பு அடிப்படையில் வினையடைகளின் வகைகள், பொருண்மை அடிப்படையில் வினையடையின் வகைகள் இவற்றை அட்டவணைப் படுத்தித் தந்துள்ளார்.

பலபொருள் ஒருசொல்

வ. குருநாதன்
தஞ்சாவூர்

உலகமொழிகள் பலவற்றிலும் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு பொருளை உணர்த்துகின்ற பொதுத்தன்மைக்கு மேல், ஒவ்வொரு சொல்லே பலப்பல பொருள்களை உணர்த்தி வரும் பான்மைகளைப் பரவலாகப் பார்க்கலாம். தமிழிலும் அவ்வகையான பலபொருள் ஒருசொல் பலவுள. சூடாமணி போன்ற நிகண்டுகளின் ஒருசொல் பல்பொருட் பெயர்த் தொகுதிகள் இவ்வகைச் சொற்களைத் தொகுத்துத் தருகின்றன. இவை சொற்றொடர்களில் அமையும்போது எவ்வாறு பொருள் வேறுபாடுகளைப் புலப்படுத்தி ஒருபொருளை உண்ர்த்துகின்றன என்பதையும் இவை பற்றிய இலக்கண விளக்கங்களையும் இந்தக் கட்டுரையில் எடுத்துக் காணலாம்.

சொற்களும் பொருள்களும்

தமிழிலுள்ள பலபொருள் ஒருசொற்கள் உயர்திணை அஃறிணை, ஆண்பால் பெண்பால் எனவரும் வேறு பாடுகளோடே பறவைகள், விலங்குகள், பயிர்கள், போன்ற பல வேறுபாடுகளையும் கொண்டு வருகின்றன. காட்டாகச் சில சொற்களைக் காணலாம்.

மா – 1. திருமகள் - தெய்வம் - உயர்திணை
2. மாமரம் - பயிரினம்
3. குதிரை - விலங்கினம்
4. வண்டு - பறவையினம்
(2–4: அஃறிணை)

வேங்கை - 1. வேங்கை மரம் – பயிரினம்
2. வேங்கைப்புலி - விலங்கினம்

மக்கள் - 1. ஆடவர் - ஆண்பால்
2. பெண்டிர் – பெண்பால்
3. மாந்தர் -
4. பிள்ளைகள் - } பலர்பால் } உயர்திணை

பெற்றம் - 1. காளை - ஆண்பால்
2. பசு - பெண்பால் } அஃறிணை

காளை- 1. ஆடவன் - உயர்திணை
2. எருது - அஃறிணை

வஞ்சி 1. வஞ்சிக்கொடி – பயிரினம்
2. வஞ்சிப்போர் – பண்பாடு
3. வஞ்சிமாநகர் - இடப்பெயர்
4. வஞ்சிப்பா - பாடற்பெயர் } அஃறிணை
5. பெண் - உயர்திணை

கோடி – 1. நூறு இலக்கம் - எண்ணுப்பெயர்
2. மூலை
3. கடைசி } இடப்பெயர்
4. புத்தாடை - உடைப்பெயர்

திங்கள் – 1. சந்திரன் – கோள்பெயர்
2. மாதம்
3. கிழமை } காலப்பெயர்

இன்னும் இவைபோல் எண்ணற்ற பலபொருள் ஒரு சொற்களை பலவகைகளில் பகுத்துக் காணலாம். இனி, இவற்றின் பொருள்வேறுபாடுகள் சொற்றொடர்களில் எவ்வாறு புலப்படுத்தப் படுகின்றன என்பதை ஒருசில எடுத்துக்காட்டுக்களால் உணரலாம்.

மா காய்த்தது
வேங்கை பூத்தது } மரங்கள்

மா ஓடியது
வேங்கை பாய்ந்தது } விலங்குகள்

மா பறந்தது - வண்டு

மா அருளினள் - திருமகள்

மக்கள் போர்புரிந்தனர் - ஆடவர்

மக்கள் பூச்சூடினர் - பெண்டிர்

பெற்றம் ஏர் உழுதது - காளை

பெற்றம் பால்கறந்தது - பசு

இவற்றுள் பொருள்களை வேறுபடுத்துகின்ற சிறப்புவினைகளை ஏற்பதனால் இப்பலபொருள் ஒருசொற்கள் பொதுமை நீங்கி ஒவ்வொரு பொருளை உணர்த்துகின்றன.

பொருள் வேறுபாடு

மாவும் மருதும் ஓங்கின
வேங்கையும் விளாவும் நெருங்கின } மரங்கள்

மாவும் யானையும் மாண்டன
வேங்கையும் கரடியும் வீழ்ந்தன } விலங்குகள்

இப்பொதுப் பெயர்கள் தம்மொடு கூடிய இனத்தினால் சிறப்புப் பெயர்களாயின.

மாமலி தோப்பு - மாமரம்

மாமலி சேனை - குதிரை

இப்பலபொருள் ஒருசொல் சார்புச் சொல்லால் பொதுமை விட்டு ஒருபொருளை உணர்த்தியது.

மா நின்ற தோட்டம் - மாமரம்

மா நின்ற கொட்டில் - குதிரை

இருக்கும் இடங்களால் இங்கே மா வென்பது மரத்தையும் விலங்கையும் பிரித்துக் காட்டியது.

இந்த மா வயிரம்
இந்த மா வெளிறு } மாமரம்

இந்த மா அரசனுடையது
இந்த மா அமைச்சனுடையது } குதிரை

என்பதுபோல் பொருள்களை வேறுபடுத்திக் காட்டும் பெயர்களாலும்

இது தேமா இது புளிமா	} மாமரம்		இது அரபு மா இது பந்தய மா	} குதிரை

என்றவாறு பொருள்களை வேறுபடுத்தி விளக்கும் அடைகளாலும் பலபொருள் ஒருசொற்கள் ஒருபொருளை உணர்த்தும்.

பொருள் பொதுமை

இனி, பலபொருள் ஒருசொற்கள் ஒருபொருட்குரிய சிறப்பு வினை கொள்ளாமல் பலபொருட்கும் ஏற்புடைய பொது வினையைக் கொள்ளுங்கால் குறித்த பொருளின் வேறு பாட்டினைப் புலப்படுத்தாமல் கேட்போர்க்கும் விளங்கா தொழியும். காட்டாக,

மா சாய்ந்தது

வேங்கை வீழ்ந்தது

எனப் பொதுவினைகளால் கூறும்போது, சாய்ந்த மாவும் விழ்ந்த வேங்கையும் மரங்களோ விலங்குகளோ என்று வேறுபட விளங்க வில்லை. எனவே இவ்வாறு பொதுவினை கொள்ளும்போது அப் பலபொருள் ஒரு சொல்லின் குறித்தபொருள் விளங்குமாறு,

மாமரம் சாய்ந்தது — மரம்

பாய்மா சாய்ந்தது — குதிரை

வேங்கைமரம் வீழ்ந்தது — மரம்

வேங்கைப்புலி வீழ்ந்தது — புலி

என்பதுபோல் வெளியிட்டுக் கூறவேண்டும்.

இலக்கண விளக்கங்கள்

இனி, பலபொருள் ஒரு சொற்களைப் பற்றிய இலக்கண விளக்கங்களை எடுத்துக்காணலாம்.

பலபொருள் ஒருசொல் தான் கொண்டுமுடியும் வேறுபடு வினைகளாகிய சிறப்புவினைச் சொற்களாலும் கூடிவரும் இனச்

சொற்களாலும், சார்ந்துவரும் சார்புச் சொற்களாலும் ஒரு பொருளை பிரித்துணர்த்துமெனக் கூறுகின்றது தொல்காப்பியம் (சொல். நூ. 53) இங்கு, வேறுபடுத்தும் வினைகளோடே ஒன்றென முடித்தலென்னும் உத்திக்கொண்டு வேறுபடுத்தும் பெயர்களையும் சேர்க்கின்றது சேனாவரையம். இடவேறு பாட்டையும் எடுத்துக்கொள்கிறது நன்னூல் (நூ.300).

மற்று, பலபொருள் ஒருசொல் பலபொருளுக்குரிய பொது வினையைக் கொள்ளுங்கால் பொருள் வேறுபாட்டினைப் புலப் படுத்தமாட்டாதாகையால், அப்போது குறித்த பொருளை வெளிபடக் கிளத்தல் வேண்டும் என்பது தொல்காப்பியம் நன்னூல் இரண்டிற்கும் ஏற்புடையதே (தொல். சொல். நூ.54, நன். நூ. 390).

தொல்காப்பியக் கலக்கம்

இந்த இலக்கண விளக்கங்களைத் தொல்காப்பியம் ஒன்பது அடிகளில், சேனாவரையத்தின்படி மூன்று நூற்பாக்களில் பேசு கின்றது. இளம்பூரணம் முதலிய ஏனைய உரைகளின்படி அவ் வொன்பது அடிகளே நான்கு நூற்பாக்களாகின்றன.

> வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
> வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல்லென்று
> ஆயிரு வகைய பலபொருள் ஒருசொல்.
> அவற்றுள்,
>
> வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
> வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்
> தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே.
> ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்
> வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல்
> நினையுங் காலைக் கிளந்தாங்கு இயலும்
>
> (தொல். சொல். 52, 53, 54, சேனா)

இவற்றுள் முதல்நூற்பா பலபொருள் ஒருசொல்லை வினை வேறுபாடொன்றையே கொண்டு இருவகையாகப் பகுக்கின்றது.

இனவேறுபாடும் சார்புவேறுபாடும் இருப்பினும் வினைவேறு பாடே சிறப்புடைமையின் அதனால் இவ்விரு வகைகளுக்கும் பெயர் கொடுத்தார் என்பது உரையாசிரியர்களின் விளக்கம். ஆயினும், இரண்டாவது நூற்பாவின்படி இனத்தினாலும் சார்பினாலும் வேறுபடும் பலபொருள் ஒருசொற்களுக்கு அவற்றினால் பெயர் கொடுக்க வேண்டுவதே முறையாயிருக்கவும் அத்தொடர்களில் வேறுபாட்டையே குறிக்காத வினையைக் கொண்டு, 'வினைவேறுபடூஉம் பலபொருள் ஒருசொல்' எனப் பெயர்கொடுப்பது' முறையாயில்லை. இவ்விடத்தே நச்சினார்க் கினியர் ஓர் அமைதி கூறுவார். 'இனமும் சார்பும் பின்வரும் வினையொடு கூடியல்லது பொருள் முடியாமையின் அவையும் வினைவேறுபட்டனவேயாம்' என்பது அவர் கூறும் அமைதி. ஆயினும் அஃது அமையாது. பொருள்வேறுபாடு பற்றிய வகைமைக்கு முடிபைக் காரணமாக்குதல் பொருந்தாது. எனவே இவ்வகைமை முறையாயில்லை என்பதோடு முரணாகவு முள்ளது. பலபொருள் ஒருசொல் ஒன்றே வேறுபடு வினையாகிய சிறப்பு வினையினால் பொருள் வேறுபட்டுப் பிரிந்தும் ஒன்று வினையாகிய பொதுவினையினால் பொருள் வேறுபடாமல் ஒன்றியும் தோன்றுகின்ற நிலையில், அப்பலபொருள் ஒருசொல் ஒன்றையே இருவேறு வகையாகப் பகுப்பது எவ்வாறு பொருந்தும்? இப்பகுப்பினால் வினைவேறுபடும் பலபொருள் ஒருசொல் ஒருதனி வகைபோலவும் வினைவேறுபடாப் பல பொருள் ஒருசொல் மற்றொரு தனிவகை போலவுமன்றோ படுகின்றது? 'ஆயிரு வகைய பலபொருள் ஒருசொல்' என்ற அடி இதனை அழுத்தமாக அறைகின்றதே இல்லாத வகைமைக்கு இந்த அழுத்தம் ஏற்குமா?

வேண்டாத நூற்பா

இவ்வாறு பொருத்தமில்லாத பொருளமைதியுடைய இம் முதல் நூற்பா இன்றியமையாத ஒன்றாகவுமில்லை. சேனாவரையர் காலத்திலேயே இது வேண்டாத நூற்பாவாகக் கருதப்பட்ட குறிப்பினை அவருரையில் காண்கிறோம். ஆயினும் அவர் இதனை வேண்டுகின்ற ஒன்றாக விளக்குவதுதான் வியப்பினையளிக்கிறது.

"இலக்கணச் சூத்திரங்களே அமையும்; இச்சூத்திரம் வேண்டா பிறவெனின், இருவகையவென்றும் வரையறை அவற்றால் பெறப்படாமையாலும், வகுத்துப் பின்னும் இலக்கணம் கூறியவழிப் பொருள் இனிது விளங்குதலானும் இச்சூத்திரம் வேண்டுமென்பது" (தொல். சொல். 52, சேனா. உரை).

இதுவே, இந்நூற்பா வேண்டுமென்பதற்குச் சேனாவரையர் கூறும் காரணவிளக்கம். பலபொருள் ஒருசொல் இருவகையென்ற வரையறை கூறுகின்ற காரணத்தால் இந்நூற்பா வேண்டும் என்றால், அவ்வகைமை சரியானதாய் இருக்க வேண்டும் ஆயினும் வகைமையே சரியில்லை. இதனை, 'ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும் வினைவேறுபடா அப்பலபொருள் ஒருசொல்' எனவரும் அடுத்த நூற்பாவிற்கு அவரே கூறும் விளக்கவுரையினால் உணரலாம். ஆக, வகைமையே சரியில்லாத போது, வரையறையோ அதற்கொரு நூற்பாவோ வேண்டா வென்பது தானே விளங்கும்.

இடைச்செருகு நூற்பா

இனி, தொல்காப்பியத்தின் முதல் உரையாகிய இளம் பூரணத்தில் இந்நூற்பா இல்லாத குறிப்பும் காணப்படுகின்றது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இளம்பூரணத்தை ஏட்டுச் சுவடிகளோடே ஆராய்ந்து பதிப்பித்த அடிகளாசிரியர் பதிப்பில்,

"இச்சூத்திரத்திற்கு உரையில்லை, இலக்கமுமில்லை. மேலவற்றுள் வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல் என்னும் சூத்திரமுமில்லை. அதற்குப் பதவுரை எழுதியிருக்கிறது".

என்ற குறிப்பு, புலிசை (திருப்பாதிரிப் புலியூர்) ஞானியார் மடத்து ஏட்டில் காணப்படுவதாக வரைந்துள்ளார். அச்சுப் புத்தகங்களில் இவ்வொரு நூற்பாவிற்கே ஈருரைகள் காணப்படுகின்றன. அவற்றுள் முதலுரை நச்சினார்க்சினார்க் கினியருரையாகவே உள்ளது. இரண்டாவதுரை சேனா வரையருரையுடன் ஒருவாறு ஒத்துள்ளது. இதனையுணர்ந்த

அடிகளாசிரியர் புலிசையேட்டுக் குறிப்பினையும் சேனாவரையர் இந்நூற்பாவை வேண்டுமெனக் குறிப்பதனையும் நோக்கி,

"இந்நூற்பா வேண்டா நூற்பாவாகக் கருதப்பட்டு வந்ததென்ற உண்மை புலனாகிறது. அதனால், இந்நூற்பா தொல்காப்பியர் இயற்றிய நூற்பா அன்றுபோலும்"

என்று முடிபுகூறுகின்றார். இம்முடிபே அமைவுடையதாகத் தோன்றுகிறது. இதனால் இந்நூற்பாவை இடைச்செருகு நூற்பா எனக் கருதவேண்டியுள்ளது.

ஐயத்திற்குரிய ஓரடி

இனி, அடுத்த நூற்பாவிள்ள, 'வினைவேறுபடூஉம் பல பொருள் ஒருசொல்' என்ற முதலடியும் பின்வரும் அடியோடே முரண்படுவதைக் காணலாம். அந்நூற்பாவில் வினைவேறு படும் பலபொருள் ஒருசொல் தான் கொண்டு முடியும் வேறுபடு வினையாகிய சிறப்புவினையினால் பொருள்வேறு பாட்டினைப் புலப்படுத்துமென்பது பொருந்துவதே. ஆயின், அவ்வாறு வினையினால் வேறுபடும் பலபொருள் ஒருசொல் பின்னும் இனத்தினாலும் சார்பினாலும் பொருளை வேறு படுத்துமென்பது, அந்நூற்பாவிற்குள்ளேயே அமைந்த இலக்கண மாறுபாடாம். ஆகவே, அந்த முதலடியும் ஐயத்திற்குரியதாகத் தோன்றுகிறது.

தடுமாறும் ஓரடி

அடுத்து, 'ஒன்றுவினை மருங்கின் ஒன்றித்தோன்றும்' என்ற நூற்பாவடியே தனியொரு நூற்பாவாக இளம்பூரணர் முதலியோர் உரைகளில் காணப்பட, அதனை அடுத்த நூற்பாவின் முதலடியாகச் சேனாவரையர் சேர்த்துக் கொண்டுள்ளார். அவ்வாறு சேர்த்துக் கொண்டதற்குக் காரணம் கூறும் அவர்,

"வினைவேறுபடாப் பலபொருள் ஒருசொல் என
வேறுநிற்பன இல்லை;
வேறுபடுவினை முதலாயினவற்றான் வேறுபடுவனதாமே
பொதுவினை

கொண்டவழி வினைவேறுபடாப் பலபொருள்
ஒருசொல்லாம் என்பது
அறிவித்தற்கு, 'ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்'
என்றார்'
(தொல். சொல். நூ. 54, சேனா. உரை).

எனவுரைப்பர். உரைத்தபின் இளம்பூரணரின் பிரித்துரையைச் சுட்டிக்காட்டி, அங்ஙனம் பிரிப்பின் ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றுதலும் வினைவேறுபடும் பலபொருள் ஒரு சொல்லுக்கே இலக்கணமாய் அதனோடு மாறுகொள்ளுமென்றும் சிறப்பு வினையினால் வேறுபடுவனதாமே பொதுவினை கொள்ளும்போது வினைவேறு படாதனவாமென்பது அதனால் பெறப்படா தொழிகின்றதென்றும் தெளிவுற மறுத்துரைப்பார்.

சேனாவரையருக்குப் பின்வந்த நச்சினார்க்கினியர்' இளம்பூரணரையே அடியொற்றித் தனிநூற்பாவாக்கி உரைப்ப தோடு. சேர்த்துப் பொருள்கூறும் சேனாவரையரின் உரைவினை எடுத்துக்காட்டி, அவ்வாறு உரைப்பின் வினைவேறுபடாப் பல பொருள் ஒருசொல் என வேறோர் சொல்லின்றி, ஆயிரு வகைய' என்பனோடு மாறுபடுமென மறுத்தும் உரைக்கின்றார். ஆயின், வினைவேறுபடாப் பலபொருள் ஒருசொல்லென வேறோர் சொல்லில்லை என்பதே சேனாவரையர்க்குக் கருத்தாகலின், நச்சினார்க்கினியரின் மறுப்பு முன்னவர் மறுப்புக்கு முற்றும் மறுப்பாகவில்லை. இருவர் கருத்துக்கும் தடையாயிருப்பது, ஆயிரு வகைய பலபொருள் ஒருசொல்'' என்ற சிக்கலுக்குரிய வகைமையிலக்கணமே. ஆகலின், அது சிதைந்தொழிந்தால்,

ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்
வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல்

என நூற்பாவடிகள் நேர்பட இணையும்.

தனிப்பட்டாய் தடுமாற்றம்

இனி, ஒன்றுவினை மருங்கின் ஒன்றித்தோன்றும்' என்னும் நூற்பாவடியைத் தனியொரு நூற்பாவாக நிறுத்தும்போது, சேனாவரையர் மறுப்பதுபோல் அது முன்னை நூற்பாவிற்கு

முரணானது மட்டுமின்றிப் பின்னை நூற்பாவோடும் போட்டியிடுகின்றது. அன்றியும் அதனைத் தனிநூற்பாக நிறுத்தும் இளம்பூரணர் நச்சினார்க்கினியர் இருவர் உரைகளுமே ஒன்றுக்கொன்று எதிராகின்றன. ஒன்றுவினையென்பதைப் பொதுவினையெனக் கொள்வதில் ஒற்றுமைப்படுகின்ற இருவருள், இளம்பூரணர் அப்பொதுவினையை ஏற்கும்போது பல பொருள் ஒருசொல் பகுதியுணரா மல் (வேறுபடாமல்) தோன்றுமென்று கூற, நச்சினார்க்கினியர் வேறுபட நிற்றலும் வழக்கினகத்தே உண்டென்று கூறுவர். இதில் இன்னுமொரு வியப்பு இருவருமே 'மா வீழ்ந்தது' என்ற ஒரே எடுத்துக்காட்டினைக் காட்டுகின்றனர். 'மா வீழ்ந்தது என்றவிடத்து இன்ன மா என்பது உணர்த்தலாகாது பொதுவாய் நிற்கும்' என்பது இளம்பூரணம்; 'மா வீழ்ந்தது என்பது வீழ்தல் வினை எல்லா வற்றிற்கும் பொதுவேனும் இவ்விடத்து இக்காலத்து இவன் சொல்லுகின்றது இம்மாவினை என ஒன்றினை உணர்த்தி நின்றவாறு காண்க' என்பது நச்சினார்க்கினியம்.

இவற்றுள் பின்னதன்படி பார்த்தால் வினைவேறுபடும் பலபொருள் ஒருசொல், வேறுபடு வினையாகிய சிறப்புவினை கொண்டபோதும், ஒன்றுவினையாகிய பொதுவினை கொண்டபோதும் ஒரு பொருளை வேறுபடுத்திக் காட்டுமென்று ஆகிறது. ஆயின், அது வினையால் பொருளை வேறுபடுத்திக் காட்டாத-வினைவேறுபடாத-பலபொருள் ஒருசொல் என்பதொன்று இல்லையென்றாகி, 'வினைவேறு படாஅப் பல பொருள் ஒருசொல், நினையுங் காலைக் கிளந்தாங்கு இயலும்' (55) என்ற நூற்பாவும் வேண்டாததாகிவிடும், மற்று, அந்நூற்பாவின் கீழே நச்சினார்க்கினியர், 'வினையான் வேறுபடாத பல பொருள் ஒருசொல் ஆராயுங்காலத்து, இன்னது இதுவெனக் கிளக்கப்பட்டு, அவ்வாராய்ச்சி உடையவிடத்து நடக்கும்' என வுரைத்து "கன்று நீருட்டுக என்றவழிக் கேட்டான் இன்னகன்று என்பது அறிய வராதவழி 'ஆன்கன்று, பூங்கன்று' என்று கிளந்தே சொல்லுக" என எடுத்துக்காட்டுவர்.

எனின், இதுவே மா வீழ்ந்தது என்பதற்கும் ஏற்குமாதலால் அதனையும் இன்ன மா என்பது அறியவராதவழி மாமரம்

வீழ்ந்தது, பரிமா வீழ்ந்தது எனக்கிளந்தே சொல்லவேண்டிவரும் வருதலால் அதனோடு இதற்கு வேறுபாடில்லை, எனவே, 'ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்' என்ற அடியை வினைவேறுப்படாப் பலபொருள் ஒருசொல்லுக்கு அடையாக வன்றித் தனிநூற்பாவாகக் கொள்ளுதல் கூடாது.

இடைச்செருகு வரலாறு

ஆக, பலபொருள் ஒருசொல் பற்றிய இலக்கண விளக்கம் மாறுகொளக் கூறல், மிகைபடக் கூறல் ஆகிய சிதைவுகளோடே தொல்காப்பியத்தில் இப்போது காணப்படுகின்றது ஆயின் தொல்காப்பியரே இவ்வாறுதான் இலக்கணம் வகுத்தார் என்று எண்ணுதற்கில்லை. மேலே கண்டவாறு தொல்காப்பியர் இயற்றாத நூற்பாவும் நூறபாவடிகளும் இடைச்செருகல்களாக இங்கே ஏற்றிக் கூறப்பட்டுள்ளன எனக் காணலாம். அவையும் இளம்பூரணர் காலத்திற்குப் பிறகே ஏற்றப்பட்டிருத்தல் வேண்டும். இளம்பூரண ஏடுகள் சிலவற்றில், குறிப்பிட்ட நூற்பாவிற்கு உரையும் எண்ணும் இல்லாதது கொண்டு இதனையுணரலாம். அவ்வேடுகளில் அந்நூற்பாவிற்கு மட்டும் முதலில் யாரோ செருகிவிட, பின்வந்தோர் அதற்கு இளம்பூரணரின் உரையின்மையால் ஏடுகளில் தத்தம் உரைகளைத் தனித்தனியே எழுதிச்சேர்த்திருக்க வாய்ப்புண்டு. இவ்வாறு ஒரு நூற்பாவின் உரையே ஏட்டிற்கு ஏடு மாறுபட்டு முடிவில் ஈருரைகள் பதிப்பிற்கு வந்திருக்கும் எனக் கருதலாம்.

தொல்காப்பிய இளம்பூரணத்தையே பெரிதும் ஏற்று வழிநூல் வகுத்த நன்னூலார் பலபொருள் ஒருசொல் பற்றிய இலக்கணத்தைத் திட்பநுட்பம் சிறந்த ஒரே நூற்பாவில் செறித்துக் கூறியுள்ளார்.

வினைசார்பு இனம் இடம் மேவி விளங்காப்

பலபொருள் ஒருசொல் பணிப்பர் சிறப்பெடுத்தே (நன். 290)

எனவரும் இவ்விலக்கணத்தில் பலபொருள் ஒருசொல்லுக்கு வேண்டாத வகைமையேதும் விதிக்கப்படவில்லை என்பது கொண்டும் தொல்காப்பிய இளம்பூரணம் வரையிலும்

அவ்வாறான வகைமை இருந்திருக்க வாய்ப்பில்லை என்று முடிக்கலாம்.

பார்வை நூல்கள்

1. தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணம்- அடிகளாசிரியர் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு.
2. தொல், சொல். சேனாவரையம்
3. தொல், சொல்: நச்சினார்க்கினியம்
4. நன்னூல்
5. சூடாமணி நிகண்டு

உரையாடல் கூறுகளும் உரையாடல் திறனும்

ந. நடராசபிள்ளை
மைசூர்

தமிழை இரண்டாம் மொழியாகப் பயிலுகிறவர்கள் பெற வேண்டிய அடிப்படை மொழித் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவை மட்டும் அவர்கள் மொழிச்சூழலில் தமிழைப் பயன்படுத்தப் போதுமானதல்ல. பயில்நர் ஒருவர் தம் கருத்துக்களைக் கோர்வையாகச் சொல்கின்ற எழுதுகின்ற பரிமாற்றத் திறனையே நாம் கருத்துப் பரிமாற்றத்திறன் என்கிறோம். அடிப்படை மொழித்திறன்களின் வளர்ச்சியே இந்த உயர் திறனுக்குப் படியாகிறது. வெளியிடும் திறன்களான பேசுதல் எழுதுதல் ஆகிய இரண்டில் பேசுதல் திறனுக்கு மிக முக்கியமான இடம் இருக்கின்றது. இப்பேசுதல் திறனின் முழு வளர்ச்சியே கருத்துப் பரிமாற்றத்திறன் ஆகும். இக்கருத்துத் பரிமாற்றத்திறனின் ஒரு பகுதியே உரையாடல் திறன். இதன் காரணமாகவே மொழியைக் கற்றுக்கொண்டு பயன்படுத்துவதற்கு இலக்கணத்திறன் மட்டும் போதாது. கருத்துப் பரிமாற்றத் திறனும் தேவை என்கிறோம். இக்கருத்துப் பரிமாற்றத்திறனின் வளர்ச்சி இரண்டாம் மொழியாகக் கற்கின்ற தமிழில் உரையாகும் ஆற்றலைச் சார்ந்திருப்பதால் அவ்வுரையாடல் திறனுக்குத் தேவையான உரையாடல் கூறுகள் என்னென்ன என்பதையும் அவற்றில் பண்பாட்டுக் கூறுகளாக வருகின்றவை பெறுகின்ற இடம் என்ன என்பதையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

வயது, பால், வட்டாரம் / சொந்த ஊர், பணிபுரியும் துறை, சிறப்புத் தகுதிகள், சமுதாயத்திலிருக்கும் செல்வாக்கு,

மொழித்திறன் போன்ற அகக் கூறுகள் உரையாடலில் ஈடுபடுகிறவர்களின் 'தனிமனிதக் கூறுகள்' ஆகும். இக் கூறுகளின் அடிப்படையிலேயே உரையாடல் நடை மாற்றம் அடைகிறது. இவ்வாறே, வேறுசில புறக்கூறுகளும் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. பயில்நர்களுக்கு இவ்வறிவு கொடுக்கப் படாததன் காரணமாகவே அல்லது கொடுக்கப்பட்ட அவ்வறிவு போதாதன் காரணமாகவே பெரும்பாலான இடங்களில் / சூழல்களில் அவர்களின் உரையாடல் குறைபாடுகள் உடையதாகிறது – குறைபாடுகள் உடையதாக அமைந் திருக்கின்றது. இரண்டாவதாக, உரையாடல் திறன் என்பது அடிப்படை மொழித்திறன்களுக்கும் மேலான ஓர் உயர் திறனாகும். இந்த உயர்திறனிலும் அறிவு பெறுகிறவர்களால் தான் உரையாடலில் சிறப்பாகப் பங்கேற்க முடியும். மூன்றாவதாக, நாவல், சிறுகதை, நாடகம் போன்றவற்றில் நடக்கின்ற உரையாடலைப் புரிந்து கொள்வதில் கூட அவர்களுக்கு இன்னல் தோன்றுகிறது. இந்த இன்னல்களுக்குக் காரணங்களாக அமைபவை மொழிக் கூறுகள் மட்டுமல்ல; சமுதாய / பண்பாட்டுக் கூறுகளுமாகும். இலக்கிய நயம் பாராட்டுவதற்கும் உயர்வதற்கும் நான்கு அடிப்படை மொழித் திறன்களையும் தாண்டிய உயர்திறனான இலக்கியச் சுவை உணர்திறன் எவ்வாறு தேவைப்படுகின்றதோ அவ்வாறே உரையாடல்களைப் புரிந்து கொள்வதற்கும் அதில் ஈடுபடுவதற்கும் உரையாடல் திறன் தேவைப்படுகிறது. இத்திறனை வளர்ப்பதற்குப் பண்பாட்டுக் கூறுகள் சிலவும் தேவையாகின்றன.

1. பின்புலம்: இடமும் நேரமும்

நாடகங்களில் காட்சி தொடங்கும்முன் தரப்படுகின்ற காலம்–இடம் என்பன போன்றே சிறுகதை, நாவல்களில் இடமும் நேரமும் பின்புலமாகின்றன.

பேச்சு நடத்தை பெரும்பாலும் நேரத்தை அடிப்படையாகக் கொண்டு மாறுபடுகின்றது. விடிகாலை, காலை, முற்பகல், பகல், பிற்பகல், மாலை, அந்தி, இரவு, நள்ளிரவு போன்ற

காலக்கூறுகள் இங்குச் சுட்டிக்காட்டப்படுகின்றன. இதோடு சாப்பிடும்போது, வேலைசெய்யும் போது, பேசும்போது எனக் செயல் நடக்கும் நேரத்தின் அடிப்படையிலும் பிரிக்கலாம்.

இவற்றையே இலக்கியத்தில் பார்க்கும்போது பாடல் களுக்குத் தரப்படுகின்ற திணை-துறை ஆகியவற்றோடு ஒப்பிடலாம். திணையின் மூன்று பொருள்களாகிய முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்றும் மூன்றையும் அவற்றின் பிரிவுகளான முறையே, காலமும் இடமும், சூழலில் இருக்கும் பொருள்கள், ஒழுக்கக் (கூடலும் கூடல் நிமித்தமும், இருத்தலும் இருத்தல் நிமித்தமும், ஊடலும் ஊடல் நிமித்தமும், இரங்கலும் இரங்கல் நிமித்தமும், பிரிதலும் பிரிதல் நிமித்தமும், போன்றவற்றால் மொழிப்பயன்பாடு வேறுபடுவதைப்போல, இங்கு உரையாடலும் வேறுபடுவதைக் காணலாம்.

நேரமும் நேரம் தொடர்பான மொழிக் கூறுகளும் மொழிக்கு மொழி வேறுபடுகின்றன. இவ்வேறுபாட்டால் (இலக்கணத்தில் கால வேறுபாடு) பயில்நரின் திறன் வேறுபடுகின்றது. அவற்றைக் கற்பிப்பது பண்பாட்டின் அடிப்படையிலேயே அமைய வேண்டியதாகிறது. உரையாடலில் இக்கூறுகள் மிகச் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன.

'படி, என்ற வினைச்சொல்லை எடுத்துக்காட்டாகக் கொள்வோம். அவன் படித்தான், அவன் படிக்கிறான், அவன் படிப்பான், அவன் படித்துவிட்டான், அவன் படித்து முடித்தான், அவன் படித்து முடித்துவிட்டான், அவன் படித்துவிடுவான், அவன் படித்துக்கொண்டிருக்கிறான், படித்துக்கொண்டிருந்தான், படித்துக்கொண்டிருப்பான், அவன் படித்திருக்கிறான், படித் திருந்தான், படித்திருப்பான், அவன் படித்தது உண்டு. படித்து விட்ருப்பான், படித்துக் கொண்டிருந்திருப்பான், படித்துக் கொண்டிருந்துவிட்டான். போன்ற வாக்கியங்களை எடுத்துக் கொள்வோம். இவைகளில் வரும் துணை வினைகளான கொண்டிரு, இரு, விடு என்பனவற்றைப் பயன்படுத்துவதில் தமிழை இரண்டாம் மொழியாகப் பயிலும் மாணவர்கள் பெரிதும் இடர்ப்படுவதைக் காணலாம். 'அவன் வந்துவிட்டானே,

என்பதற்கு 'அவன் வந்தானே, என்றும்; 'அவன் வந்து கொண்டிருக்கிறான்' என்பதற்கு 'அவன் வருகிறான்' என்றும் 'நேற்று அவன் வந்திருக்கிறான்' என்பதற்கு 'நேற்று அவன் வந்தான்' என்றும் நேரத்தைக் காட்டுவதற்கான துணை வினைகளைப் பயன்படுத்தாமல் இறந்தகாலத்தை அல்லது நிகழ்காலத்தைப் பயன்படுத்துவதற்குக் காரணம் என்ன மொழிக்கூறுகளில் தவறு எனக் கூறுவதைவிட உரையாடல் திறனில் ஏற்பட்ட தவறு / பிழை என்றே குறிப்பிட விரும்புகின்றோம். இவை வெறும் மொழிக் கூறுகளால் வெளிப்படையாகக் காட்டப்பட வேண்டியவை என்று கூறாமல் கருத்துப் பரிமாற்றத் திறனின் பல்வேறு கூறுகளால் வெளியுணர்த்தப் படவேண்டியவை எனக் கூறுகிறோம்.

நேரத்தைப்போன்றே உரையாடல் நடைபெறுகின்ற இடமும் முக்கியமான கூறு ஆகும். கல்வித்துறையை எடுத்துக் கொள்வோம். வகுப்பில் பேசுகிற பேச்சும் வகுப்புக்கு வெளியே நடக்கிற பேச்சும் வேறுபடுகின்றன. இங்குப் பேச்சு வழக்கு எழுத்து வழக்கு என்றும் இரண்டு வழக்குகளின் பயன் பாட்டைக் கூறலாம்.

தன்வீடு, நண்பர்களின்வீடு, வகுப்பு, மேடை, வானொலி மற்றும் அலுவலகத்தில் நண்பர்களோடு, பெரியவர்களோடு, சிறியவர்களோடு என உரையாடல் நடக்கின்ற இடத்தைப் பொறுத்து வீட்டுக் கிளைமொழி, வட்டார / சமுதாயக் கிளைமொழி, பேச்சுத்தமிழ், எழுத்துத்தமிழ், பொதுப் பேச்சுத் தமிழ் எனப் பலவிதமான மொழிக் கூறுகளை உரையாடலில் காண்கிறோம். அவற்றோடு இடத்திற்கு ஏற்ப வேறுபல பண்பாட்டுக் கூறுகளும் வேறுபடுகின்றன. நாவல்களில் வருகின்ற உரையாடல் பகுதிகளை ஆராய்ந்து பார்த்தால் இவை புலப்படும். இடத்திற்கு இடம் மாறுபடுகின்ற உரையாடலில் சொற்கள், வாக்கிய அமைப்புகள், கிளைமொழிக் கூறுகள், போன்றவற்றையும் தாண்டிய சமுதாய மொழியியல் கூறுகள்: ஒருவரை விளிப்பது, வாக்கியத்தை முடிப்பது, வாக்கிய இசை, பணிவு, சொல்தேர்வு எனப்பலவற்றிலும் வேறுபாடுகளைச்

காணலாம். உட்கார், அமர், குந்து, இரு, என்னும் வினைகளை எடுத்துக்கொண்டால் இவ்வேறுபாடுகள் எளிதில் விளங்கும்,

இங்கு, பாலகுமாரனின் இரும்புக் குதிரை (1984, வானதிபதிப்பகம், சென்னை) என்னும் நாவலிலிருந்து உரையாடல் பகுதிகள் எடுத்துக் காட்டுகளாகக் கொடுக்கப் பட்டுள்ளன. பாடங்களில் வருகின்ற உரையாடல்களும் இவற்றிற்கு விதிவிலக்கல்ல. ஆயினும் அவை பெரும்பாலும் படியமைப்பு செய்யப்பட்டிருப்பதால் இயற்கையான சமுதாய மொழியியல் / பண்பாட்டுக் கூறுகளில் குறைபாடுடையனவாக அல்லது இக் கூறுகள் இல்லாதனவாக அமைந்துள்ளன. இனி நாவலின் உரையாடல்.........

(1) "......" யாரு சொன்னது"

"டிங்கர் ஷாப்புல"

"சாராயம் வாங்கிக் குடுத்தியா?"

"சாப்பிட்டுட்டுத்தான் வரேன். எங்க வச்சிருக்கே? கூரைமேலேயா, உள்ளியா?"

"பூமியிலே பொதைச்சு வச்சிருக்கேன். வாங்கற வனாட்டமா பேசற நீ".

"நான் வாங்காத .... அடிச்ச வண்டியிதா? கழட்டினதா

"மிலிட்டரி வண்டி ... உனக்கு கட்டாது. கிளம்பு .."

"அடாவடியா இருக்கே. பாத்துசொல்லு"

"வேறே கடை பாருப்பா ...பேஜார் பண்ணாதே! (பக் 6 &7) இதுகடையில் நடக்கிற உரையாடல்

(2) பொய். என்பேர்ல கோவம்தான். கோவத்துலதானே உம்மென்று தட்டெதிர்க்க உட்கார்ந்திருக்கிறது".

"ஒரு கோபமுமில்லை ... தாரிணி"

"ஒரு குரல் கூப்டா குழந்தையை வந்து வாங்கிக்க மாடேனா?"

"தப்புத்தான் என்னவே. யோசனை"

"கதை கவிதை எழுதுங்கோ, வேண்டாம்னா சொன்னேன் கொஞ்சம் ஒட்டுதயா அதுகள் கிட்டெ இருக்கணு மோன்னோ? காத்தாலே போய் ராத்திரி வரேள். ஏங்கிப் போறதுகள்.

ஆசையாப் பேசட்டுமேன்றுதான் கொடுத்தேன்''. (பக். 43)
(3) ''மத்தியானமே ரிப்போர்ட்டு ஆயிடும் ராவுத்தர் போய்ச் சொல்லிடுவாரு ஒருதபா ஊருக்குப் போயிட்டு வரக் கூட முடியாது''

''அம்மா கிழவிகிட்டப்போய் என்னா பண்ணப்போறே! அது வவுத்துலே அடிச்சிக்கினு அளுவும். சொல்லாதவுட்ரு''. (பக். 30). எடுத்துக்காட்டாக, மூன்று உரையாடல்களின் பகுதிகளைமட்டும் கொடுத்திருக்கிறோம். இடத்திற்குத் தகுந்தவாறு பேச்சு வேறுபட்டதைக் காணலாம்.

2. பேச எடுத்துக்கொள்கிற நேரம்

உடையாடலின் போது ஒருவர் பேசுவதற்கு எடுத்துக் கொள்கிற நேரமும் அவருடைய திறனைப் பொறுத்தே அமைகின்றது. உம், ஆம், ஆமாம், ஆங்ஆங், சரி, இல்லை, சரிதான், அப்படியா, உம்உம், ஹூம் ஹிூம், என ஒருசில சொற்களையோ உணர்ச்சிக் குறிப்பொலிகளையோ பயன் படுத்தும் நபரையும் உரையாடலில் விடாமல் நீண்ட சொற்பொழிவாற்றும் நபரையும் இங்கு இரு துருவங்களாகக் கணக்கிடலாம்.

(4) ''துட்டு வேணாமா?''
''துட்டா?''
....
''ஆமாங்க''
''துட்டு வேணாமா?''
''வேணும்'' (பக்ம். 184)

(5) ''ஹ .... அந்தப்பாட்டு............''
(பக். 233, 14 வரிகள் உள்ள உரையாடல் பகுதி)

(6) ''உங்க கோரிக்கைக்கு ...... முடியும்''
(பக். 249. 22 வரிகள்)

இம்மூன்று உரையாடல்களுமே சூழலின், விவாதங்களின் அறிவின் அடிப்படையில் மாறியிருக்கின்றன. இந்த உரையாடல்

கூறுகளையும் கற்றுத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. சிறிய வாக்கியப்பகுதிகளே சொற்களே-பொருள் தருவனவாக அமைதல், நீண்ட விளக்கமான வாக்கியங்களைத் தருதல் என்னும் இரு வகைகளிலும் உரையாடல் நடைபெறுகின்றது. உரையாடலில் பங்குகொண்டு நீண்ட நேரம் பேசுகிறவர்களை ',வளவள', 'வழவழ', 'கொழ கொழ' என்று கூறுவதற்கும் 'ஊமைக்கோட்டான்' 'பேசாமடந்தை' 'பேசுவதற்கே காசு கேட்பான்' என்று கூறுவதற்கும் காரணம் என்ன? அவர்களின் பேச்சில் சொல், தேர்வு, சொற்சிக்கனம், சுருங்கக் கூறுதல் போன்ற கூறுகள் இல்லாததாகக் கூறலாம்; சொற் பஞ்சமும் திறன் இல்லாததை இரண்டாம் வகைக்குக் காரணமாகக் கூறலாம். இவற்றைக் கருத்துப் பரிமாற்றத்திறனின் ஒரு பகுதியாகக் கொள்ளலாம். நம் பழம்பெரும் இலக்கணங்கள் கூறுகின்ற 10 குற்றங்களும் 32 உத்திகளும் கருத்துப்பரிமாற்றத் திறனுக்கானவை என எடுத்துக்கொண்டு அவற்றையும் இங்கு உரையாடல் கூறுகளாகக் கூறலாம்.

உரையாடலில் ஒருவர் பேசும்போது அவரின் வாக்கியத்தின் கடைச்சி சொல்லைக் கூடவே சொல்லுதல், வந்து வந்து என்னும் சொல்லைச் சொல்லுதல் போன்றவையும், உரையாடற் கூறுகளாகும். 'வந்து, வந்து' போன்ற ஊன்றுகோல் சொற்களைப் பயன்படுத்துவது தவறு எனினும் உரையாடலின் போது மற்றொருவர் கூறவதைப் புரிந்து கொள்வதற்கு இந்த அறிவு தேவைப்படுகிறது. பேசும்போதே தாம் செய்கின்ற பிழைகளைத் திருத்திக்கொள்ளும் முறை அதாவது, ஆக, அப்படி யென்றால், என்னவென்றால், ஆகவே, அதனால், அதனால்தான், போன்ற வாக்கிய இணைப்புச் சொற்களைப் பயன்படுத்துதல் போன்றவையும் உரையாடலில் ஒருவர் எடுத்துக்கொள்கிற நேரத்தைக் கணிக்கும் கூறுகளாகும்.

பேசும்போது ஆண்களைவிட பெண்கள் கூடுதல் நேரம் உரையாடலில் ஈடுபடுகிறார்கள் என்பது ஒரு பொதுக் கருத்தாகும். ஆய்வுக்குரியதுமாகும்.

3. உரையாடுபவர்களின் எண்ணிக்கை

உரையாடலில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை ஓர் உரையாடல் கூறு ஆகும். இதன் அடிப்படையில் மொழிக் கூறுகளும் பண்பாட்டுக் கூறுகளும் வேறுபடுகின்றன.

இருவர் அல்லது மூவர் உரையாடும்போது எடுத்துக் கொள்கிற சொற்களும் வாக்கிய அமைப்புகளும் கூடுதல் நபர்கள் இருக்கின்ற இடத்தில் வேறுபடுவதைக் காணலாம். இதற்கு இருவருக்கிடையேயுள்ள நெருக்கம் / இடைவெளி ஒரு கூறாக அமைவது காரணமாகும். உடல் மொழிக்கும் இதில் கூடுதல் பங்கு இருக்கின்றது.

இரண்டாவதாக, விளிக்கப் பயன்படும் அப்பா, அம்மா, போன்ற சொற்களும் உரையாடலின்போது நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்ன சொல்கிறீர்கள், உங்கள் கருத்து என்ன? என்ற வகையில் உரையாடலில் அடுத்தவரையும் ஈடுபடுத்தும் கூறு கூடுதல் நபர்கள் உரையாடும்போது இல்லாமல் போகலாம்.

4. உள்ளடக்கம்

உரையாடலின் உள்ளடக்கம் என்ற கூறில் சூழல், பொருள், வகை என்னும் மூன்று உட்பிரிவுகள் உள்ளன.

4.1. சூழல்

ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நடக்கின்ற தனி உரையாடல், கற்பித்த பிறகு நடக்கின்ற உரையாடல், சாப்பாட்டில்போது / சாப்பிட்ட பிறகு நடக்கின்ற உரையாடல் விருந்தின்போது நடக்கின்ற உரையாடல் எனப்பல்விதமாகச் சூழலின் அடிப்படையில் உரையாடலை வகைப்படுத்தலாம். இங்கும் உரையாடல் கூறுகள் வேறுபடுகின்றன.

இரும்புக்குதிரை நாவலின் கதைத்தலைவனான விசு தன் மனைவியுடன் சக தொழிலாளர்களுடன், நாராயணசாமியுடன், அவர் மகள் காயத்திரியுடன் என ஒவ்வொருவருடனும்

ஒவ்வொரு வகையிலும் பேசுவதற்கும் அதன் உள்ளடக்கம் வேறுபடுவதற்கும் சூழலே காரணமாகிறது.

உரையாடல் கூறுகளில் பலவற்றை எல்லா இடங்களிலும் பயன்படுத்த முடியாது என்பதைப் போன்றே எல்லாச் சூழல்களிலும் ஒரே மாதிரியாகப் பேசவும் முடியாது "அவர் ஒரு மாதிரியாகப் பேசுகிறார்'', இடமறிந்து பேசத் தெரியவில்லையே'' என்று பேசப்படுவதற்கு இவ்வேறுபாட்டை உணராமையையே காரணமாகக் கூறலாம். சூழல் எல்லா மொழிகளுக்கும் பொதுவாக அமைகின்றது என்று கூறினாலும் பங்கேற்பவர்களின் அடிப்படையில் சூழலின் தாக்கம் வேறுபடுகின்றது. குழாயடி உரையாடலையும் விரிவுரையின் போது நடக்கின்ற உரையாடலையும் சூழல் சார்ந்த உரையாடல்களின் இரு துருவங்களாகக் கொள்ளலாம்.

இந்தக் கூறின் அடிப்படையிலேயே சூழல்மொழி, சூழல் மொழி கற்பிக்கும் முறைமை போன்ற பல தொடர்புடைய ஆய்வு முறைகளும் பயிற்றுப் பாடங்களும் பயிற்று முறைகளும் எழுந்தன. அஞ்சலகத்தில், புகைவண்டி நிலையத்தில், அலுவலகத்தில் வகுப்பில், பேருந்து நிலையத்தில், வங்கியில் எனப் பல சூழல்களில் மொழிப்பயனின் வேறுபாடுகளையும் பண்பாட்டுக் கூறின் வேறுபாடுகளையும் காணலாம்.

கோருதல், வேண்டுதல், உரைத்தல், விளக்குதல், எடுத்துக் கூறுதல், அறிவித்தல், கூறுதல், சொல்லுதல், பேசுதல் போன்ற வேறுபாடுகளையும் சூழலில் காணலாம்.

(7) "அடித்தவனே வருடிக்கொடுத்தால்?''
"வாட் டுயூ மீன் காயத்ரி''
……… ………
"நிச்சயமாய்''
"நிச்சயம்''
"ஆல் த பெஸ்ட் விஸ்வநாதன்'' (பக். 271)

(8) "விஸ்வநாதன் என்ன லயஸன் ஆபீசர்நீ. லாரி ஸ்டிரைக் பற்றி அங்கு போகும்வரை தெரியாது என்று சொல்கிற நீ என்ன விதமான லயஸன்

ஆபீஸர் ...... இடியட்......
விஸ்வநாதன் லிசன் டூ மி,
என்ன செய்வாயோ எது செய்வாயோ
சரக்கு இறக்கிய இரண்டு நாளுக்குள்
நம் இடத்துக்கு வந்தாக வேண்டும்". (பக். 253)

(9) "ஏண்டா மாலை போடமாட்டியா?"
"ஐயோ ... அதுக்கு சொல்லலை,
மாலைக்கு என்னா? ...... கொண்டாந்து
குமிச்சுருவம்".
"அடி சக்கை ...... எப்படா, சாவான்னு
பாத்துக்கிட்டிருங்க ......" (பக். 260)

சூழலில் மொழிப்பயன்பாடு இம்மூன்று உரையாடல் பகுதிகளிலிருந்தும் விளங்கியிருக்கும்.

4.2. பொருள்

பொருளை அடிப்படையாகக் கொள்ளும்போது மொழிக் கூறுகளும் உரையாடல் கூறுகளும் வேறுபட்டு வளம் சேர்க்கின்றன. துறைகளின் அடிப்படையில் பார்க்கும்போது துறைவழக்கைப் பயன்படுத்துகிற திறன் மொழித்திறனோடு தொடர்புடையது. ஆயின் இங்குப் பண்பாட்டுக் கூறுகளையே உரையாடல் திறனின் ஒரு பகுதியாக ஆராய்கிறோம்.

உரையாடும்போது - அறிவியலைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது பேசுபவர் திடீரெனத் திரைப்படத்தைப் பற்றிப்பேசும்போது பொருள் வேறுபடுகின்றது. ஆனால் இவ்வாறு பொருள் மாறுபடும்போது மாறுகின்ற பண்பாட்டுக் கூறுகள் என்னென்ன என்பதே இங்கு ஆய்வுக்குரியது. காதலைப் பற்றிப் பேசும்போது சமயத்தையும் அதில் சேர்க்க வேண்டிய சூழலில் - பொருள் மாறுபாட்டால் - சொற்கள் மட்டுமல்ல வேறுசில கட்டுப்பாடுகளையும் கவனிக்க வேண்டியதாகிறது. காதலின் போது "மனம் திறந்து" உரையாடியதைப் போலச் சமயம் பற்றி உரையாடும்போது சிலவேளைகளில் மூடி மறைக்க வேண்டியது நேரிடலாம்.

பொருளைப் பொறுத்தவரையில் உரையாடுகின்ற இருவருக்கும் அந்தப் பொருள் பற்றிய அறிவு தேவையாகிறது. அதன் அடிப்படையிலேயே உரையாடல் வெற்றி/தோல்வி அடைகிறது. மறுத்தல், ஒட்டிப்பேசுதல், வெட்டிப்பேசுதல், ஒப்புக்கொள்ளுதல், விலக்கிப் பேசுதல், மறைத்துப் பேசுதல், வெளிப்படையாகப் பேசுதல் போன்ற பல கூறுகளும் வேறுபட்டால் விவாதத்திற்கு வழிவகுக்கலாம். எடுத்துக் காட்டாக,

(10) ''எந்தப் பாட்டு, சினிமா பாட்டா?''
''எல்லாப் பாட்டும்தான்''.
''மை காட், தடலடியாப் பேசறேளே''
''நோ. என் அபிப்பிராயம். பாட்டு
போலியாகத் தெரியறது எனக்கு.
அதுவும் சினிமாப்பாட்டு ரொம்பவும் போலி.''
... .
''இதுலே என்ன போலி. இட்ஸ் எ குட் சாங்''
... .
''ஒரு கவிதை எப்படி இருக்கணும்' னு சொல்றீங்க?''
''இதென்ன இண்டர்வ்யூவா?''
''பரவாயில்லை. தெரிஞ்சுக்கத்தான்
கேக்கறேன். சொல்லுங்க. கவிதை எப்படி இருக்கணும்?'',
''மரத்து நிழல் மாதிரி. கூழாங்கல் சூடு மாதிரி.
நீளமான தலைமுடியை எண்ணெய் தடவிச் சீவுகிற சத்தம்
மாதிரி. ஒரு அமைதியோடெ இருக்கணும்.''
''நாற்று நடும் பெண்களின் பாட்டுக்களில் மட்டும்தான் சேறு
பட்டிருக்கவில்லை'' (பக். 228-30)

கேள்விகளுக்குப் பதில் தருகின்ற உத்திகளிலும் விளக்கங்களிலும் எத்தனை வேறுபாடு! பொருள் வரையறைக்குள் உரையாடுதல், உரையாடலைத் தொடங்குதல், பேசித் தொடர்தல், இன்னொரு பொருளுக்குத் தாவுதல் போன்றவை முக்கியமானவையாகும்.

ஒருபொருளைப் பற்றி உரையாடிக் கொண்டிருக்கும்போது தொடரமுடியாமலோ வேண்டுமென்றோ இன்னொரு பொருளுக்குத் தாவமுடியாமலும் 'அப்புறம்' 'அப்புறம்' எனக்கேட்டு மௌனத்திலும் புன்னகையிலும் முடிந்து உரையாடல் தோல்வி அடைவதையும் காண்கிறோம்.

"அதுசரி", இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?" மறக்கிறதுக்கு முன்னாலே சொல்லிவிடுகிறேன், ஒரு நிமிடம், இதோடு சேர்ந்து இதன் தொடர்பாக இன்னொன்று, அது மட்டுமல்ல, போன்றவை பொருளை மாற்றி உரையாடலில் ஈடுபடுவதற்குத் தேவையாகின்றன. அடுத்த பொருளுக்குத் தாவும்போது கூட தொடர்புடையபொருள் வேறுபொருள் என இருவேறு வகைகளாகப் பிரிக்கலாம்.

முன்னர் எடுத்துக்காட்டாகத் தந்த (10) உரையாடலில் கதைத் தலைவன் விசுவும் காயத்திரியும் 'கவிதை' என்ற பொருள் பற்றி உரையாடி அதன் போக்குகளை அலசும்போது பொருள் அங்கும் இங்கும் தாவுவதைக் காணலாம். அதே நேரத்தில் அவற்றின் கீழ் ஒரு நூல் இழையோடுவதையும் காண முடிகிறது. சினிமா பற்றிய உரையாடல் பாடலுக்குத் தாவும் போது

(11) "ஓ! நீங்க ஆர்ட் ஃபிலிம் பார்க்கிற டைப்பா? ஆனா அதுலேயும் ஒரு நல்ல பாட்டு இருக்கு" ......

... ...

"கவியரங்கம் எல்லாமே இங்கே ஒரே பளபளாதான்"

"கவிதை கூடவா?"

"பாரதியார் படிச்சிருக்கேளா?"

....

"வேறே என்னெல்லாம் படிச்சிருக்கீங்க?"

"உங்க வயசுக்கு இப்படித் தீர்மானமாய் பேசறது சரியா?

(பக். 227-31)

இவ்வாறு தாவித் தாவிப் போகின்ற உரையாடல் சண்டையில் முடிகிறது. பொருள் பற்றிய அறிவும் அதன் தொடர்பான உரையாடல் கூறுகளும் மிகவும் தேவையாகின்றன.

பொருள் அடிப்படையிலேயே பேச்சு வழக்கு எழுத்து வழக்குகளைப் பயன்படுத்துவதும் மாறுபடுகின்றது. இங்குப் பொருளோடு இடமும் முக்கியப் பங்கு வகிக்கின்றது. உரையாடலின்போது (1) முக்கியத்துவத்தைக் காட்டுவது போல (2) தன் ஆர்வத்தைக்காட்டுவதுபோல (3) பொருள் பெற்றிருக்கும் இடத்தைப் பற்றி (4) பழைய கருத்துக்களைப் புதியனவற்றோடு தொடர்பு படுத்தி (5) சிறப்பியல்புகளை எடுத்துக்காட்டி (6) பழைய ஆய்வுகளுக்குப் புதிய எடுத்துக்காட்டுகள் தந்து (7) கதையாசிரியரின் திறனை எடுத்துக்காட்டி (8) பொருளைக் காட்டியிருக்கும் விதம் பற்றி (9) கேள்வி எழுப்பி (10) பதிலளித்து எனப் பலவிதங்களிலும் உரையாடலில் பொருள் பங்கு பெறுவதைக் காணலாம்.

5. தொடர்புகள்

உரையாடலில் ஈடுபடுகின்றவர்களின் தகுதியை / செல்வாக்கை / வயதை அடிப்படையாகக்கொண்ட தொடர்பும் ஓர் உரையாடல் கூறாகும். இதையும் உணர்ந்து உரையாடலில் ஈடுபடவேண்டும். எடுத்துக்காட்டாக,

(1) தன்னைவிட உயர்ந்த தாழ்ந்த தகுதி/இடம் பெற்றிருப்பவரோடு (2) தன்குச் சமமான/நிகரானவரோடு (3) வாடிக்கையாளரோடு (4) அமைச்சரோடு (5) ஆசிரியரோடு (6) பெற்றோரோடு (7) உறவினரோடு (8) வேலைக்காரனோடு எனப்பலவிதமான

சமுதாயத் தொடர்புடையவர்களோடு உரையாடும்போது மனத்திலிருத்திக் கொள்ளவேண்டியவை; பெண்களைச் சுட்டிப் பேசும்போது அவள்-அவர்-அவர்கள் என்ற வேறுபாட்டு உணர்வு; சிலருடைய கருத்துகளை மறுத்துப் பேசமுடியாத நிலை, மதித்துப் பேசாமலிருக்கிற நிலை எனப்பலவிதமான நிலைகளையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

6. செயற்பாடுகள்

உரையாடலின்போது எதற்காக நாம் பேசுகிறோம் என்பதை அடிப்படையாகக்கொண்டும் உரையாடல் கூறுகள் வேறுபடும். சான்றாக, செய்தி தெரிவித்தல்/சேகரித்தல், அறிக்கையிடுதல், திருத்துதல், கேட்டல், ஒப்புதல்/மறுத்தல் ஆராய்தல், மறுப்பு தெரிவித்தல், ஏற்றுக்கொள்ளுதல், மகிழ்ச்சியைத் தெரிவித்தல், விருப்பத்தை/வெறுப்பைத் தெரிவித்தல், ஆர்வம் காட்டுதல், மன்னித்தல் மன்னிப்பு கேட்டல், கேட்கத் தூண்டுதல், அழைத்தல், அறிவுறுத்தல், வாழ்த்துக் கூறுதல், வணக்கம் கூறுதல், அறிமுகப்படுத்துதல், விடைபெறுதல் எனப்பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். இவற்றின் அடிப்படையிலும் உரையாடல் கூறுகள் வேறுபடுகின்றன.

இதுவரை பார்த்த பல கூறுகளையும் உள்ளடக்கிய அறிவே உரையாடல் திறனாகும். கருத்துப்பரிமாற்றத்திறனின் ஒரு பகுதியான இந்த உரையாடல் திறன் அடிப்படை மொழித் திறனான பேசுதல் திறனிலிருந்து வேறுபட்டது என்பதையும் உரையாடல் திறனுக்கு என சில உரையாடல் கூறுகள் இருக்கின்றன என்றும் அவற்றை பயில்நருக்குக் கற்றுக் கொடுத்தாலொழிய உரையாடல் திறன் வளராது என்பதையும் இக்கட்டுரையில் பயிற்றுப்பாடங்களும் பயிற்சிகளும் அமைக்கப் படவேண்டியது காலத்தின் தேவையாகும்.

உறவுமுறை அமைப்பு மொழிக் குடும்பமும்

முனைவர். இராபர்ட் சத்திய சோசப்
தஞ்சாவூர்

உறவுமுறை அமைப்பு பெரும்பாலும் மொழிக்குடும்ப அமைப்பைப் பின்பற்றிக் காணப்படுவதாக அய்ராவதி கர்வே (1965) கூறியுள்ளார். அதாவது திராவிட மொழி பேசுபவர்கள் திராவிட உறவுமுறை அமைப்பை உடையவர்காளாகக் காணப்படுவார்கள். அதுபோன்று இந்தோ ஆரிய மொழி பேசுபவர்கள் இந்தோ ஆரிய உறவுமுறை அமைப்பை உடையவர்களாகக் காணப்படுவார்கள். ஆனால் ஒரு சில பழங்குடியினரிடையேயும் ஏனைய சாதியினரிடையேயும் காணப்படும் மொழி, உறவுமுறை அமைப்பு மற்றும் உறவுமுறைச் சொற்களைப் பார்க்கும்போது மேற்கூறிய கருத்திலிருந்து வேறுபாடு காணப்படுகிறது. அத்தகைய வேறுபாட்டையும் அதற்கான காரணங்களையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு மொழியில் காணப்படும் ஏனைய சொற்களைவிட உறவுமுறைச் சொற்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. திருமண முறை, குடும்ப அமைப்பின் தன்மை மற்றும் குடிவழிப்பட்டியலை ஆராய்ந்து முடிவு செய்தல் ஆகியவை உறவுமுறைச் சொற்களின் ஆழமான பொருளை அறிந்து கொள்வதற்கு உதவியாகக் காணப்படுகிறது. உறவுமுறைச் சொல் ஒருவரைக் குறிப்பிடுவது மட்டுமின்றி குறிப்பிட்ட சமுதாயத்தில் அச்சொல்லால் அழைக்கப் படுவதின் பொருள் என்ன என்பதையும் வெளிப்படுத்துகிறது. எனவே உறவுமுறைச் சொற்கள் உறவுமுறை அமைப்பையும் அது

இயங்குகிற முறையையும் பிரதிபலிக்கின்றன எனவும் கூறலாம் உறவுமுறைச் சொல்லமைப்புக்கும் சமூக ஒழுங்கிற்கும் நேருக்குநேர் தொடர்பு இல்லாவிட்டாலும் அவை ஒன்றோடொன்று தொடர்புடையவை. சான்றாக உறவுமுறைச் சொற்கள் அச்சமூதாயத்தின் திருமண முறையைப் பிரதி பலிப்பதைக் காணலாம். எனவே ஒரு மொழியில் காணப்படும் உறவுமுறைச் சொற்களை ஆராயும்போது அது எப்படிப்பட்ட சமூக அடிப்படையில் பயன்படுத்தப்படுகிறது என்பதை முதலில். தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

ஒரு மொழியில் பிறமொழித்தாக்கம் ஏற்படும்போது ஏனைய சொற்களில் ஏற்படும் மாறுதல்களைப் போன்று உறவுமுறைச் சொற்களில் விரைவாக மாறுதல் ஏற்படுவதில்லை. குறிப்பாக முதல்நிலை உறவினர்களாகக் குறிப்பிடும் சொற்களில் மாறுதல்கள் ஏற்படுவதில்லை. எனவே ஒரு மொழி ஆய்வுக்கு அம்மொழியில் காணப்படும் உறவுமுறைச் சொற்கள் மிகவும் துணையாக அமைகின்றன. ஒரு சமுதாயத்தில் பிற மக்களோடுள்ள தொடர்பாலும் கல்வி வளர்ச்சியாலும் ஏற்படும் கலாச்சார, பண்பாட்டு மாற்றங்களிலும் உறவுமுறை அமைப்பில் மாறுதல்கள் குறைவாகவே ஏற்படுகின்றன. ஆனால் ஏனைய மக்களின் பண்பாட்டுத்தாக்கம் அதிகமாக ஏற்பட்டு திருமணமுறை போன்ற முக்கிய கூறுகளில் மாறுதல் ஏற்படும் போது உறவுமுறைச் சொற்களிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன. எனவே ஒரு மொழி அல்லது பண்பாடு ஆகியவற்றின் ஆய்வில் உறவுமுறைச் சொற்கள் மற்றும் உறவுமுறை அமைப்பு மிக முக்கிய இடத்தை வகிக்கிறது.

உறவுமுறை அமைப்பு

உலகின் அனைத்து உறவுமுறை அமைப்புகளும் இரண்டு கூறுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. ஒன்று சில உறவினர்களை ஒரே வகையினராக்கி அவர்களை ஒரே சொல்லால் குறிப்பிடுவது. இன்னொன்று சில உறவினர்களைத் தனிமைப்படுத்தித் தனித்தனிச் சொற்களால் குறிப்பிடுவது.

இவ்விதிமுறைகளின் அடிப்படையில் முர்டாக் (1949) உலகில் காணப்படும் உறவுமுறைகளை ஆறுவகையாகப் பிரிக்கின்றார். அவையாவன:

1. ஹவாயன் முறை (Hawaiian System)
2. சூடானிய முறை (Sudanese system)
3. எஸ்கிமோ முறை (Eskimo System)
4. இரோகுவாய்ஸ் முறை (Iroquois system)
5. குரோ முறை (Crow system)
6. ஓமகா முறை (Omaba system)

ஹவாயன் முறை

இம்முறையில் ஒருவரின் பெற்றோரின் பிள்ளைகளையும் பெற்றோரின் சகோதரர் மற்றும் சகோதரிகளின் பிள்ளைகளையும் ஒரு பிரிவின்கீழ் வகைப்படுத்துகின்றனர். இவர்கள் அனைவரும் ஒரே உறவைக்குறிப்பிடும் ஒரேசொல்லால் அழைக்கப்படுகின்றனர். ஆனால் இவர்கள் பாலின் அடிப்படையில் வேறுபடுத்தப்படுகிறார்கள். தலைமுறை வேறுபாட்டைக் குறிக்கும் சொற்களும் உள்ளன. எனவே ஒரு தலைமுறையைச் சேர்ந்த ஆண்கள் எல்லோரும் ஒரே சொல்லால் குறிப்பிடப் படுகின்றனர். அதேப்போன்று ஒரு தலைமுறையைச் சேர்ந்த பெண்கள் எல்லோரும் ஒரேசொல்லால் குறிப்பிடப்படுகின்றனர்.

இத்தகைய உறவுமுறை அமைப்பானது பசிபிக் கடற்பகுதித் தீவுகளில் வாழும் மக்களிடையே மிகுதியாகக் காணப்படுகிறது.

சூடானிய முறை

சூடானிய முறை மேற்கூறிய முறைக்கு மாறானது. அதாவது பேசுநரின் பெற்றோரின் சகோதரர் மற்றும் சகோதரிகளின் பிள்ளைகள் ஒருவருக்கொருவர் வேறுபடுத்தப்படுவதோடு அவருடைய உடன் பிறப்புகளிலிருந்தும் வேறுபடுத்தப்பட்டு வெவ்வேறு சொற்களால் குறிப்பிடப்படுகின்றனர். இத்தகைய உறவுமுறையில் எந்தவொரு உறவினரும் வேறொரு உறவினரோடு வகைப்படுத்தும் சொல்லால் குறிப்பிடப்படுவதில்லை.

இவ்வகை உறவுமுறை அமைப்பு ஆப்பிரிக்காவில் சூடான், எத்தியோப்பிய மற்றும் அதைச் சுற்றிய பகுதிகளிலும் காணப்படுகிறது. முற்காலத்தில் இத்தகைய உறவுமுறை ஐரோப்பியர்களிடம் காணப்பட்டதாகவும் பிற்காலத்தில் ஏற்பட்ட சமூகப் பண்பாட்டு மாறுதல்களினால் அவர்களிடையே எஸ்கியோ உறவுமுறை அமைப்பு ஏற்பட்டது எனவும் மானிடவியலார் குறிப்பிடுகின்றனர்.

எஸ்கியோ முறை

எஸ்கியோ முறையில் பேசுநரின் பெற்றோரின் எல்லா சகோதரர் மற்றும் சகோதரிகளின் பிள்ளைகள் ஒன்றாக வகைப்படுத்தப்படுகின்றனர். ஆனால் அவருடைய சகோதர சகோதரிகளிடமிருந்து வேறுபடுத்தப்படுகின்றனர். சான்றாக ஐரோப்பிய சமுதாயத்தில் ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகள் அனைவரும் 'கசின்' என்ற சொல்லின்கீழ் வகைப்படுத்தப் படுவதையும் அச்சொல்லில் பால் புறக்கணிக்கப்படுவதையும் கூறலாம்.

இத்தகைய உறவுமுறை அமைப்பு ஆங்கிலேயர், அமெரிக்கர், எஸ்கிமோக்கள் மற்றும் பெரும்பாலான ஐரோப்பிய சமுதாயத்தினரிடமும் காணப்படுகிறது.

இரோகுவாய்ஸ் முறை:

இம்முறையில் பேசுநரின் பெற்றோருடன் பிறந்த ஒத்த பாலினரின் மக்கள் அதாவது தகப்பனின் சகோதரனின் பிள்ளைகள் மற்றும் தாயின் சகோதரியின் பிள்ளைகள் ஆகியோரும் உடன்' பிறப்புக்களும் ஒரு உறவுமுறைப் பிரிவினராக வகைப்படுத்தப்படுகின்றனர். பெற்றோருடன் பிறந்த எதிர்பாலினரின் மக்கள் அதாவது தகப்பனின் சகோதரியின் பிள்ளைகள் மற்றும் தாயின் சகோதரனின் பிள்ளைகள் ஆகியோர் ஒரே உறவுமுறைப் பிரிவினராக வகைப்படுத்தப்படுகின்றனர். மேற்கூறிய இரு உறவுமுறைப் பிரிவினர்களும் திருமணம் செய்துகொள்ளும் முறையைக் கொண்டவர்களாகும்.

தமிழர்களின் உறவுமுறை இவ்வகையைச் சேர்ந்த தாகும். அதோடு திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த பெரும்பாலானோரிடையேயும் இம்முறை காணப்படுகிறது. அதோடு இத்தகைய உறவுமுறை தென்னிந்தியா, இலங்கை, பிஜித்தீவுகள், ஆப்பிரிக்கா, அமெரிக்காவின் சில பகுதிகள் முதலான பல பகுதிகளிலும் காணப்படுகிறது.

குரோ முறை

குரோமுறையில் பேசுநரின் தகப்பனின் சகோதரர்களின் பிள்ளைகள், தாயின் சகோதரிகளின் பிள்ளைகள் மற்றும் அவருடைய சகோதர சகோதரிகள் ஆகியோர் ஒரு பிரிவினராக வகைப்படுத்தப்படுகின்றனர். பேசுநரின் தகப்பனின் சகோதரிகளின் பிள்ளைகள் மற்றும் தாயின் சகோதரர்களின் பிள்ளைகள் மேற்கூறிய பிரிவிலிருந்து தனித்தனியாக வேறுபடுத்தப்படுகிறார்கள். இங்கு பேசுநரின் தகப்பனின் சகோதரியின் பிள்ளைகள் அவருடைய தாயின் சகோதரனின் பிள்ளைகளிடமிருந்து வேறுபடுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

இம்முறையில் தகப்பன், தகப்பனின் சகோதரர், தகப்பனின் சகோதரியின் மகன், அம்மகனின் சகோதரியின் மகன் ஆகிய அனைவரும் ஒரே சொல்லால் குறிப்பிடப்படுகின்றனர். இங்கு தலைமுறை வேறுபாடு புறக்கணிக்கப்படுவதைக் காணலாம். இதேப்போன்று தகப்பனின் சகோதரி, அவளுடைய மகள் அம்மகளின் மகள் ஆகிய அனைவரும் ஒரே சொல்லால், குறிப்பிடப்படுகின்றனர்.

குரோமுறை வட அமெரிக்காவில் வாழும் குரோ இந்தியர் களிடையே காணப்படுகிறது.

ஓமகா முறை

ஓமகா முறையில் பேசுநரின் தகப்பனின் சகோதரனின் பிள்ளைகளும் தாயின் சகோதரியின் பிள்ளைகளும் அவருடைய உடன்பிறப்புக்களோடு ஒருதனிப்பிரிவில் சேர்க்கப்படுகிறார்கள். தாயின் சகோதரனின் பிள்ளைகள், தாய், தாயின் சகோதரி, தாயின் சகோதரன் ஆகியோர் ஒரு வேறுபட்ட பிரிவில்

சேர்க்கப்படுகிறார்கள். அதோடு பேசுநரின் தகப்பனின் சகோதரியின் பிள்ளைகள் மற்றும் சகோதரியின் பிள்ளைகள் ஆகியோர் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே சொல்லால் குறிப்பிடுகின்றனர்.

ஒமகா முறையானது ஒமகா என்னும் அமெரிக்க இந்தியப் பழங்குடியினரிடம் காணப்படுகிறது.

மேற்கூறிய அனைத்து உறவுமுறை அமைப்புகளும் சேர்த்தல் மற்றும் பிரித்தல் விதிமுறைகளையே பயன்படுத்துகின்றன. அதோடு பால்வேறுபாடு தலைமுறை வேறுபாடு போன்ற பல பொதுத் தன்மைகள் இருப்பதைக் காணலாம். உறவுமுறை அமைப்புக்களிடையே காணப்படும் இத்தகைய பொதுத் தன்மைகளைப் போன்று மொழிக்குடும்பங்களிடையேயும் பல பொதுத் தன்மைகள் காணப்படுகின்றன.

பொதுவாக ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் ஒரே விதமான உறவுமுறை அமைப்பை உடையவர்களாக இருப்பார்கள் என்ற கருத்து அறிஞர்களிடையே காணப்படுகிறது. அதாவது திராவிட மொழி பேசும் அனைவரும் இரோகுவாய்ஸ் முறையைச் சேர்ந்த திராவிட உறவுமுறை அமைப்பை உடையவர்களாக இருப்பார்கள் என்பதாகும். பக்தவத்சல பாரதி (1990:446) கிரோ குவாய்ஸ் முறையை விளக்கும்போது இம்முறை திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த அனவைருக்கும் பொருந்தும் எனக் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்து திருந்தி மொழிகளைப் பொறுத்தவரையில் ஓரளவு பொருத்தமாகக் காணப்படுகிறது. ஆனால் இந்தியப் பழங்குடி மொழிகளை எடுத்துக்கொண்டால் வேறுபாடுகள் காணப் படுகின்றன. திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருசில பழங்குடியினரிடையே உறவாய்ன் உறவுமுறை அமைப்பு காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். முகர்ஜி (1981:29) பீகார் மாநிலத்தில் வாழும் ஒரயன் என்ற பழங்குடியினரிடையே உறவாயன் முறை காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இப்பழங்குடியினரின் மொழி திராவிட மற்றும் ஆஸ்ட்ரோ ஏசியாட்டிக் மொழிக்குடும்பங்களைச் சேர்ந்ததாகும். அதேப்

போன்று தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் கடலூர் தாலுகாவின் மேற்குப் பகுதிகளிலும் கேரளாவின் வயநாட்டுப் பகுதியிலும் வாழும் முள்ளுக் குறும்பர்களிடையேயும் உறவாயன் முறை காணப்படுகிறது. இவர்களின் மொழி தென் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததாகும். முகர்ஜி (1981:29) ஆய்வுக்காக எடுத்துக்கொண்ட 39 இந்திய பழங்குடியினரிடையே காணப்படும் உறவுமுறை அமைப்பையும் மொழிக்குடும்பங்களையும் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் காணலாம்.

இந்தியப் பழங்குடியினரின் உறவுமுறை அமைப்பும் மொழிக்குடும்பமும்

பழங்குடியினரின் பெயர்	உறவு முறை	மொழிக் குடும்பம்	வாழும் பகுதி	எண்	விழுக்காடு
பூமிஜ், பிர்குர், கோ, சந்தால்	உறவாயன் முறை	ஆஸ்ட்ரோ ஏசியாட்டிக்	பீகார்		
போண்டோ	,,	,,	ஒரிசா		
கொல்	,,	,,	மத்திய பிரேதசம்		
சவுன்சாரி, தரு	,,	இந்தோ ஆரியன்	உத்திர பிரேதசம்		
சிரோ	,,	,,	பீகார்		
புய்யா	,,	,,	ஒரிசா		
ரியங்	,,	திபத்தோ பர்மன்	திரிபுரா		
புரும்	,,	,,	மணிப்பூர்		
லேகர்	,,	,,	மிசோரம்		
ஓரயன்	,,	திராவிட மொழி	பீகார்	14	35.89

கந்த	இவரோடு வாய்ஸ்முறை	திராவிட மொழி	ஒரிசா		
பூமியா, பைகா, கமர்	,,	இந்தோ-ஆரியன்	மத்திய பிரதேசம்		
மரியா கோண்ட்டு	,,	திராவிடமொழி	,,		
செஞ்சு, சில்ரெட்டி	,,	,,	ஆந்திரா		
கோத்தா, தோடா	,,	,,	தமிழ்நாடு		
காரோ	,,	திபத்தோபர்மன்	மேகாலயா		
ரபா	,,	,,	மேற்கு வங்கம்		
பினர், காசி	,,	ஆஸ்ட்ரோ-ஏசியாட்டிக்	மேகாலயா		
காணிக்காரர், மலப் பண்டாரம், முதவன், ஊராளி	,,	திராவிடமொழி	கேரளா	17	43.68
அந்தமானியர்	எஸ்கியோமுறை	வகைப்படுத்தப் படவில்லை	அந்தமான் தீவுகள்		
டிமாசா கச்சரி	,,	திபத்தோபர்மன்	ஆசாம்	2	5.12
அங்காமிநாகா, ஹோநாகா, ரெங்கமாநாகா, சிமாநாகா	ஓமாகாமுறை	திபத்தோபர்மன்	நாகாலாந்து		
லுஷை	,,	,,	மிசோரம்		
தடோ-குகி	,,	,,	மணிப்பூர்	6	15.38

இவ்வட்டவணை முகர்ஜி (1981)-இல் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் தாயரிக்கப்பட்டது.

அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் பார்க்கும்போது பெரும்பான்மையான இந்தியப் பழங்குடியினரும் இரோகுவாய்ஸ் மற்றும் உறவாயன் உறவுமுறை அமைப்பைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

இரோகுவாய்ஸ் முறையில் பெரும்பாலோர் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டாலும், இந்தோ-ஆரியன், திபத்தோ-பர்மன், ஆஸ்ட்ரோ-ஏசியாட்டிக் ஆகிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் காணப்படுகின்றனர். அதேப்போன்று உறவாயன் முறையில் ஆஸ்ட்ரோ-ஏசியாட்டிக், இந்தோ-ஆரியன், திபத்தோ-பர்மன், திராவிடன் ஆகிய நான்கு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். இங்கு ஒரே மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த வெவ்வேறு பிரிவினர் வெவ்வேறு உறவுமுறை அமைப்புகளை உடையவர்களாக இருப்பதைக் காணலாம். சான்றாக திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் இரோகுவாய்ஸ் முறையையும் ஒருசில பிரிவினர் உறவாயன் முறையை உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். அதேப்போன்று இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் சில பிரிவினர் உறவாயன் முறையை உடையவர்களாகவும் சில பிரிவினர் இரோகுவாய்ஸ் முறையை உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். திபத்தோ-பர்மன் மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலோர் ஓமகா முறையை உடையவர்களாகவும் ஒருசிலர் உறவாயன் முறையை உடையவர்களாகவும் இன்னும் சிலர் இரோகுவாய்ஸ் முறையை உடையவர்களாகவும் ஒரு பிரிவினர் எஸ்கியோ முறையை உடையவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இங்கு ஒரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த அனைத்துப் பிரிவினரும் ஒரே விதமான உறவுமுறையை உடையவர்களாக இருப்பதில்லை என்பது தெளிவாகிறது. ஆனால் ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த வெவ்வேறு பிரிவினர்களில் பெரும்பாலானோர் குறிப்பிட்ட ஒரு உறவுமுறை அமைப்பை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். சான்றாகத் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலானோர் இரோகுவாய்ஸ உறவுமுறையையும், இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலானோர் உறவாயன் முறையையும், திபத்தோ-பர்மன் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலோனோர் ஓமாகா முறையையும்

உடையவர்களாக உள்ளனர். இவ்வாறு ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த வெவ்வேறு பிரிவினர்களில் ஒருசில பிரிவினர் மட்டும் வேறு உறவுமுறை அமைப்புகளை உடையவர்களாகக் காணப்படுவது பிறமொழி மற்றும் பண்பாட்டுத் தாக்கத்தால் ஏற்பட்ட மாறுதல்களாகவும் இருக்கலாம். சான்றாக டிராட்மன் (1981) திராவிட உறவு முறையை விளக்கும்போது இந்தியாவின் மத்திய பகுதியில் வாழும் மக்களின் உறவுமுறையையும் விளக்கியுள்ளார் அதாவது' இரு மொழிகளின் கலப்பால் 'கிரியோல்' உருவாகுவது போல் இந்தியாவின் மத்திய பகுதியில் வாழும் மக்களின் உறவுமுறை திராவிட மற்றும் இந்தோ ஆரிய உறவுமுறை அமைப்பு மற்றும் உறவுமுறைச் சொற்களின் கலப்பால் தோன்றிய உறவுமுறையென குறிப்பிட்டுள்ளார். மேலும் சூரியநாராயணா (1987) திராவிட உறவுமுறையின் தாக்கத்தால் ஆந்திராவில் வாழும் முண்டாரி மொழி பேசும் சவுரா பழங்குடியினரின் உறவுமுறையில் குறிப்பாக திருமண முறை மற்றும் உறவுமுறைச் சொற்களில் ஏற்பட்டுவரும் மாறுதல்களை விளக்கியுள்ளார்.

முகர்ஜி (1981) இல் ஆய்வுக்கா எடுத்துக்கொண்ட 39 பழங்குடியினரின் தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்திலும் கேரளாவில் வயநாட்டுப் பகுதியிலும் வாழும் முள்ளுக் குறும்பர்கள் சேர்க்கப்படவில்லை. இவர்களிடையே உறவாய முறை காணப்படுகிறது. தமிழ் மற்றும் மலையாள மொழிகளோடு நெருங்கியத் தொடர்புடைய ஒரு தென்திராவிட மொழியாகும். தென்திராவிட மொழி பேசுபவர்களாகவும், தென்திராவிட மொழி பேசப்படும் பகுதியில் வாழ்பவர்களாகவும் காணப்படும் முள்ளுக்குறும்பர்களிடையே உறவாயன் முறை காணப்படுவது ருறிப்பிடத்தக்கதாகும். நிலவியல் அடிப்படையில் பார்க்கும்போதும் உறவாயன் முறையுடைய ஏனைய பழங்குடியினரோடு முள்ளுக்குறும்பர்களுக்கு தொடர்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை. நீலகிரி மாவட்டத்தில் வாழும் ஏனைய பழங்குடியினராகிய பெட்டக் குறும்பா, தேனுக்குறும்பா, தோடா, கோத்தா, பணியா, இருளா ஆகிய

பழங்குடியினர் இரோகுவாய்ஸ் உறவுமுறையை உடையவர்களாகும். இவர்களின் மொழிகளும் தென்திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவைகளாகும்.

முள்ளுக் குறும்பர்கள் பெற்றோருடன் பிறந்த எதிர் பாலினரின் மக்களை மணந்துகொள்ளும் முறையை முற்றிலுமாக தவிர்க்கின்றனர். அவர்கள் அதிக வட இந்திய உறவுமுறைக் கூறுகளை உடையவர்களாகக் காணப் படுகின்றனர். இவர்கள் வாழும் பாடி அல்லது கிராமம் என்பது விரிவடைந்த தந்தைக் கால்வழியினர் வாழும் பகுதியாகும். எனவே கிராமம் அல்லது பாடி என்பது ஒரு புறமாணக் குழுவாகும். வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் போது உறவினர்கள் கண்டிப்பாக தவிர்க்கப்படுகின்றனர். குறிப்பாக இரத்த உறவினர் மண உறவினராவதில்லை. அதோடு சகோதரர்களைக் குறிப்பிடும் சொற்கள் ஒன்றுவிட்ட சகோதரர்களையும் அதே தலைமுறையைச் சேர்ந்த மாமன் முறை உறவினர்களையும் ஒன்றாக இணைக்கிறது. இதனால் திராவிட உறவுமுறையின் மிக முக்கிய கூறாகிய சகோதர உறவு மாமன் முறை உறவு என்ற பாகுபாடு புறக்கணிக்கப்படுகிறது. இந்த மொழியில் காணப்படுவது போன்று ஒன்றுவிட்ட சகோதரர்களையும் அதே தலைமுறையிலுள்ள மாமன்முறை உறவினர்களையும் சகோதரர்களாகக் கருதுகின்றனர். இரத்த உறவினர்களிடையே காணப்படும் வயது வேறுபாட்டைத்தவிர ஏனைய கூறுகள் இந்தோ ஆரிய உறவுமுறை அமைப்பை ஒத்ததாக உள்ளது. இத்தகைய விதிமுறைகளானது முள்ளுக் குறும்பர்களின் உறவுமுறையைத் திராவிட உறவுமுறை எனக் கருதுவதற்குத் தடையாகக் காணப்படுகின்றன.

முள்ளுக் குறும்பர்களின் மொழியில் பல பழந்தமிழ் கூறுகள் காணப்படுகின்றன.[1] ஆனால் உறவுமுறைச் சொற்களை எடுத்துக்கொண்டால் தமிழ் மற்றும் மலையாள மொழிகளில் காணப்படாத பல உறவுச் சொற்கள் காணப்படுகின்றன[2]. இது முள்ளுக் குறும்ப மொழியின் தனித்தன்மையைக் காட்டுகிறது. பிற்காலத்தில் மலையாள மொழி பேசும் மக்களோடு ஏற்பட்ட தொடர்பாலும் மலையாள மொழிபேசும் மக்களின்

ஆதிக்கத்தாலும் முள்ளுக் குறும்பர்களின் மொழி, பண்பாடு ஆகியவற்றில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.[3]

முள்ளுக்குறும்ப உறவுமுறைச் சொற்களின் பொதுவான அமைப்பைப் பார்க்கும்போது திராவிட உறவுமுறையின் குணாதிசயங்களை உடையதாக உள்ளன. அதாவது இரண்டாவது முன், பின் தலைமுறைகளில் உறவினர்களைப் பாகுபடுத்துவது திராவிட உறவுமுறை அமைப்பிற்கு ஒத்ததாக உள்ளது. ஆனால் ஒருவர் வாழும் அதே தலைமுறையைச் சேர்ந்த உறவினர்களை வகைப்படுத்துவதில் திராவிட உறவுமுறையின் விதிமுறைகளிலிருந்து தெளிவாக வேறு படுகின்றனர். அதோடு சில மண உறவினர்களைக் குறிப்பிடுவதற்கு முள்ளுக்குறும்பர்களிடையே தனிச் சொற்கள் காணப்படுகின்றன. சான்றாக மனைவியின் தகப்பன் மற்றும் கணவனின் தகப்பன் ஆகியோரை அம்மெமுத்தன் என்றும் மனைவியின் தாய் ஆகியோரை அம்மாயிமுத்தி என்றும் குறிப்பிடுகின்றனர். இச்சொற்கள் இரத்த உறவினர்களைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுவதில்லை. மேலும் பெரியோளு 'மூத்த சகோதரனின் மனைவி' செறியோளு 'இளைய சதோரனின் மனைவி பெரியவன் செரியவன் போன்ற சில சொற்களும் மண உறவினர்களைக் குறிப்பிடும் சொற்களாகும். திராவிட உறவுமுறையில் மனைவியின் சகோதரனின் மனைவி மற்றும் கணவனின் சகோதரியின் கணவன் ஆகியோர் சகோதர சகோதரிகளைக் குறிப்பிடும் சொற்களால் குறிப்பிடப்படுவதுண்டு. ஆனால் முள்ளுக் குறும்பர்கள் அத்தகைய உறவினர்களை மேலே குறிப்பிட்டுள்ள மண உறவுச் சொற்களாலே குறிப்பிடுகின்றனர்.

முன்னர் குறிப்பிட்டுள்ள வண்ணம் முர்டாக் (1949) மற்றும் பல அறிஞர்கள் உலகளவில் காணப்படும் உறவுமுறைகளைப் பாகுபடுத்துவது பல்வேறு சமுதாயங்களில் ஒன்றுவிட்ட சகோதர சகோதரி,ளை வகைப்படுத்தும் விதிமுறைகளின் அடிப்படை யிலாகும். இந்நிலையில் முள்ளுக்குறும்பர்களின் உறவுமுறையை திராவிட உறவுமுறை எனக் கூற இயலாது.

டிரவுட்மேன் (1981:160) முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படும் உறவுமுறைச் சொற்களின் குணாதிசயங்களின் அடிப்படையில் முற்காலத்தில் இவர்களிடையே மாமன் முறைத் திருமண முறை நிலவியிருக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு அவர் குறிப்பிடுவதற்கு அவர் எடுத்துக்கொண்ட ஆதாரங்களில் சிலவற்றைக் கீழே காணலாம்.

(1) இந்தோ ஆரிய உறவுமுறையைப்போல் அல்லாமல் முதல் முன் பின் தலைமுறைகளில் உறவினர்கள் இணையும் முறையானது தெளிவாகத் திராவிட உறவு முறைக்கு ஒத்ததாக உள்ளது.

(2) இந்தோ ஆரிய உறவுமுறையைப்போல் அல்லாமல் முள்ளுக் குறும்பர்கள் அங்கீகரிக்காத மாமன் முறைத் திருமணமுறைக்கும் உறவுமுறைச் சொல்லமைப்பு இடமளிப்பதைக் காணலாம்.

(3) ஒருவரின் பிள்ளைகளின் மனைவியின் அல்லது கணவனின் பெற்றோர்களில் தன்னுடைய பாலுக்கு எதிர்பாலில் உள்ளவர் அவருக்கு இணையானவராகவும் அவருடைய உடன்பிறப்பு நிலையில் வகைப்படுத்தப்படுகின்றனர். அவ்வாறு ஒருவரை யொருவர் ஆங்ஙளா / பெங்ஙளா என்று குறிப்பிடும் இணையானது அத்தகைய எதிர்பார்ப்பினை நிறைவு செய்கிறது. இதுபோன்ற இணைச் சொற்களாகிய அளியன் 'மனைவியின் சகோதரன், சகோதரியின் கணவன்' நாது 'கணவனின் மூத்த சகோதரி' என்பவை திராவிட உறவுமுறையின் கருதுகோளை ஆதரிக்கின்றன.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களில் முதன் முன் பின் தலைமுறையில் உறவினர்கள் இணையும் முறையானது திராவிட உறவுமுறைக்கு உத்ந்தாகவே உள்ளது. முள்ளுக்குறும்பர்கள் அங்கீசரிக்காத மாமன் முறைத் திருமண முறைக்கும் உறவுமுறைச் சொல்லமைப்பு இடமளிப்பதாகக் குறிப்பிட்டு

அதற்குச் சான்றாக ஆங்ஙளா / பெங்ஙளா, அளியன் போன்ற சொற்களைக் கொடுத்துள்ளார். இச்சொற்கள் முள்ளுக் குறும்பர்கள் வாழும் பகுதியில் பேசப்படும் மலையாள மொழியிலும் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். முன்னர் குறிப்பிட்டுள்ள வண்ணம் மலையாள மொழியின் தாக்கத்தால் முள்ளுக்குறும்பர்களின் மொழியில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. மலையாளமொழியின் தாக்கத்தால் முள்ளுக்குறும்பர்களின் உறவுமுறைச் சொற்களிலும் குறிப்பாக மண உறவுச் சொற்களில் இருப்பதைக் காணமுடிகிறது. அதோடு முள்ளுக்குறும்பர்களிடையே குடிவழிப்பட்டியல் மூலம் சுமார் ஐந்து தலைமுறைகளிலுள்ள தரவுகள் சேகரிக்கப்பட்டன. அவற்றில் மாமன்முறைத் திருமணம் நடந்ததாகவோ அல்லது அதற்கான சான்றுகளோ கிடைக்கவில்லை.

எனவே முள்ளுக்குறும்பர்களின் உறவுமுறையானது சில தனித்தன்மைகளை உடையதாகக் காணப்படுகிறது. இவர்களின் மொழி தென்திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததாகக் காணப்பட்டாலும் இவர்களின் உறவுமுறையானது திராவிட உறவுமுறை அமைப்பிலிருந்து தெளிவாக வேறுபடுகிறது. இவ்வாறு முள்ளுக்குறும்பர்களின் உறவுமுறையானது வரலாற்று அடிப்படையிலான சில விளக்கங்களுக்கு ஒரு அறைகூவலாகக் காணப்படுகிறது.

எங்கல்ஸ் (1984:30) குறிப்பிடும்போது உறவாயன் முறையானது மிகப்பழமையான குடும்ப அமைப்பு எனக் குறிப்பிட்டுள்ளனர். முகர்ஜி (1981) இந்தியாவில் உறவாயன் முறையை உடைய 14 பழங்குடிப்பிரிவினர் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். திராவிட மொழிபேசும் முள்ளுக்குறும்பர் பழங்குடியினரிடையேயும் ஒரு மிகப்பழமையான உறவுமுறை அமைப்பு காணப்படுகிறது.

இந்தியாவில் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் மொழி மற்றும் உறவுமுறை அமைப்பில் ஏற்பட்டுவரும் மாறுதல்கள் குறிப்பிடத்தக்கதாகும். பிறமொழித் தாக்கத்தால்

சில பழங்குடி மக்களின் உறவுமுறைச் சொற்களில் சுமார் ஐம்பது விழுக்காட்டிற்கும் அதிகமான பிறமொழிச் சொற்கள் காணப்படுகின்றன. இருந்திய மொழியிலும் அம்மொழி பேசும் மக்களின் உறவுமுறையிலும் ஏற்பட்டுவரும் மாறுதல்களைவிட பழங்குடிமக்களின் மொழியிலும் உறவுமுறையிலும் பிறமொழி மற்றும் பண்பாட்டுத் தாக்கத்தால் ஏற்பட்டுவரும் மாறுதல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. சான்றாக கீழ்க்கண்டவற்றைக் கூறாலம்.

(1) அய்ராவதிகர்வே (1965) இந்தியாவின் வடமொழிப் பகுதியில் வாழும் நாகரிக முதிர்ச்சிபெற்ற பழங்குடியினராகிய திராவிட மொழிபேசும் ஓரயன் மற்றும் கோண்ட் ஆகியோரின் உறவுமுறைச் சொற்களில் ஐம்பது விழுக்காட்டிற்கும் அதிகமான சமஸ்கிருத மொழிச் சொற்கள் இருப்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

(2) சூரியநாராயணா (1987) ஆந்திர மாநிலத்தில் வாழும் உறவாயய் முறையை உடைய முண்டாரி மொழி பேசும் சவுரா பழங்குடி மக்களின் உறவுமுறை அமைப்பில், திராவிட உறவுமுறை அமைப்பின் முக்கியக் கூறாகிய மாமன்முறைத் திருமணத்தின் தாக்கத்தையும் அவன் விளைவால் உறவுமுறைச் சொற்களில் ஏற்பட்டுவரும் மாறுதல்களையும் குறிப்பிட்டுள்ளார்.

(3) டிராட்மன் (1981) இந்தோ-ஆரிய சமுதாயத்தைச் சேர்ந்த மாரத்திய மக்களின் உலவுமுறையானது பொருண்மையில் திராவிட உறவுமுறையையும் பின்பற்றி வருவதைக் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பாலும் உறவுமுறை அமைப்பு மொழிக்குடும்ப அமைப்பைப் பின்பற்றியதாகவே காணப்படுகின்றது. ஆனால் சில நிலைகளில் குறிப்பாகச் சில பழங்குடியினரிடையே உறவு முறை அமைப்பு மொழிக்குடும்ப அமைப்பிலிருந்து வேறுபடுவதைக் காண முடிகிறது. இதற்கு முக்கிய காரணம்

பிறமொழி மற்றும் பண்பாட்டு தாக்கத்தால் பழங்குடியினரின் மொழியிலும் உறவுமுறையிலும் ஏற்பட்டுவரும் மாறுதல் களேயாகும். அவ்வாறு மொழியிலும் உறவுமுறையிலும் ஏற்படும் மாறுதல்கள் சீராக அமைவதில்லை. சில சூழ்நிலைகளில் மொழித்தாக்கம் அதிகமாகவும் பண்பாட்டுத்தாக்கம் குறைவாகவும் ஏற்படுவதுண்டு. அதேப்போன்று சில நிலைகளில் பண்பாட்டுத்தாக்கம் அதிகமாகவும் மொழித்தாக்கம் குறைவாகவும் காணப்படும். இதனால் மொழி, பண்பாடு ஆகியவற்றில் தனித்தன்மையுடைய ஒரு பழங்குடியினரிடத்தில் ஒரு குறிப்பிட்ட மொழியின் தாக்கம் அதிகமாகவும் பண்பாட்டுத் தாக்கம் குறைவாகவும் ஏற்படும்போது, அப்பழங்குடியினரின் உறவுமுறை அமைப்பும் மொழிக்குடும்பமும் வேறுபடும் நிலை ஏற்படுகிறது.

1. தமிழ் இலக்கியங்களில் காணப்படும் மணவாளன், மணவாட்டு, (நாலாயிர திவ்விய பிரபந்தம் 672–4, 520-2) செண்டு (குறுந்தொகை 117-2, 401–3) ஆகிய சொற்களும் அங்காடி 'சந்தை நேஞ்ஞுவ்' ஏர், முடி 'மலை உச்சி' போன்ற பல சொற்கள் முள்ளுக்குறும்பர் மொழியில் காணப்படுகின்றன.

2. சான்றாக மோப்பமுத்தன் 'தகப்பனின் தகப்பன்' தட்டப்பன் 'தகப்பனின், தகப்பனின் இளைய சகோதரன் முத்தப்பன் 'தகப்பன் மற்றும் தாயின் தகப்பன்' அச்சி 'மூத்த சகோதரி' அம்பன் 'இளைய சகோதரன்' குறுமன் 'கணவன்' குறாமட்டி 'மனைவி போன்ற சொற்களைக் கூறலாம்.

3. விளக்கங்களுக்கு பார்வை இராபர்ட் சத்திய சோசப், 1982, (முனைவர் பட்ட ஆய்வேடு)

துணைநூற்பட்டியல்

Engels, 1948 **The Origin of the Family property and the State**, Progress, Publishes, Moscow.

Karve, Iravati,	1965	**Kinship Organization in India** Asia Publishing House, Bombay.
Bhaktavatchala Bharathi,	1990	**Panpa:ttu Manitaviyal** Maniva: sakar Pathippakam, Madras.
Mukherjee Bhabananda,	1981	**Structure and Kinship in Trihal India.** Minerva Associates, Calcutta.
Robert Sathya Joseph, D.	1982	**"Descriptive Study of Mullu-kurumba"**, Unpublished Ph. D thesis, Annamalai University, Annamalainagar.
	1986	**"Kurumbarkalin Uravumurai"** Report submitted to Tamil University, Thanjavur.
	1987	**"Dravidian Kinship and Kashmir Kinship** Tamilkalai, Tamil-6, Kalai, 1,2 -
Suryanarayana, M.	1987	**"Impact of Dravidian marriage Practices on a Mundari Speaking Saora kinship Terminology"** paper presented in the National Seminar on Ethnolinguistics among Tribes) Tribal Research Centre, Tamil University, Ooty.
Trantmann Thomas, R.	1981	**Dravidian kinship,** Cambridge University, Press, Cambridge.

பழந்தமிழில் தான் பதிலிடுபெயர்

எம். சுசீலா
தஞ்சாவூர்

1. தான், தாம் பதிலிடுபெயர்கள்

தமிழ்மொழி நான், நாம், நாங்கள் ஆகிய தன்மைப் பதிலிடு பெயர்களையும், நீ, நீர், நீங்கள் ஆகிய முன்னிலைப் பதிலிடுபெயர்களையும் அவன், அவள், அவர், அவர்கள், அது, அவை ஆகிய படர்க்கைப் பதிலிடுபெயர்களுடன் தான், தாம் ஆகிய இரு பதிலிடு பெயர்களையும் கொண்டுள்ளது: இவ்விரண்டும் வாக்கியத்தில் முன்னரே குறிப்பிடப்பட்ட பெயர்களையும் படர்க்கைப் பதிலிடு பெயர்களையும் சுட்டி நிற்பவை. இவை தன்மைப் பதிலிடுபெயர்களையும், முன்னிலைப் பதிலிடுபெயர்களையும் சுட்டுவதில்லை. எடுத்துக்காட்டாக,

அவன், தான் மறுநாள் வருவதாகச் சொன்னான் என்ற வாக்கியத்தில் தான் அவனைச் சுட்டி நிற்கின்றது.

†நீ தான் மறுநாள் வருவதாகச் சொன்னாய்.

†நான் தான் மறுநாள் வருவதாகச் சொன்னேன்.

என்றெல்லாம் தான் தன்மை, முன்னிலைப் பதிலிடுபெயர்களைச் சுட்டி வர இயலாது.

தமிழ்மொழியின் தான் என்ற பதிலிடு பெயர் நான்கு வகைச் செயற்பாடுகளைக் கொண்டுள்ளது.

1. படர்க்கைப் பெயரை அழுத்தம் (கொடுத்துக் கூறுவதற்கு) இப் பதிலிடுபெயர் பயன்படுகிறது.

கண்ணன் தானே வயலை உழுது முடித்தான் என்ற வாக்கியத்தில் கண்ணன் ஒருவனாகவே வயலை உழுது முடித்தான் என்ற அழுத்தத்தைத்தான் பதிலிடுபெயர் தருகிறது.

2. தலைமை வாக்கியத்தில் வரும் பெயர் துணைநிலை வாக்கியத்திலும் வரும் நிலையில் பெயருக்குப் பதில் தான் இட்டுக் கூறப்படுகிறது

கண்ணன் தான் சாப்பிட்டுவிட்டதாகக் கூறினான்.

3. படர்க்கைப் பெயர்களும் பதிலிடுபெயர்களும் வரும் தற்சுட்டு வாக்கியங்களில் தற்சுட்டுப் பதிலிடுபெயராகவும் தான் பயன்படுகிறது.

அவன் தன்னை நொந்துகொண்டான்

4. இரு தனித்தனி வாக்கியங்களை உம் இடைச்சொல் கொண்டு இணைக்கையில் இரண்டாவது வாக்கிய எழுவாய் தான் பதிலிடுபெயர் கொண்டு வரக் காணலாம்.

ராமன் வனத்துக்குச் சென்றான்
சீதை தானும் அவனோடு வனத்துக்குச் சென்றாள்.

தன்மை, முன்னிலைப் பதிலிடுபெயர்கள் வரும் வாக்கியங்களில் அவற்றைக் குறிக்க ஒரே வகையான பதிலிடுபெயர்களே வர, படர்க்கைப் பதிலிடுபெயர்களைக் குறிக்க இருவகையான பதிலிடுபெயர்களைத் தமிழ்மொழி கொண்டுள்ளது,

நான் என்னுடைய நண்பனைப் பார்த்தேன்

அவனுடைய
அவன் நண்பனைப் பார்த்தான்
தன்னுடைய

இவ்வாறு அவன், தான் ஆகிய இரு சொற்களும் படர்க்கைப் பெயர்களைச் சுட்டுவனவாக வரினும், தான் பதிலிடுபெயர் படர்க்கைப் பெயர்களும், படர்க்கைப் பதிலிடுபெயர்களும்

எழுவாயாக வரும்போது மட்டுமே அவற்றைக் குறிக்கும் இயல்புடையது.

†அவனைத் தன்னுடைய நண்பன் பார்த்தான்
†அவனோடு தன் நண்பன் சென்றான்

என்றெல்லாம் கூற இயலாது. இத்தகைய வாக்கியங்களில் அவன் என்ற பதிலிடுபெயரே வரக் காண்கிறோம்.

அவனை அவனுடைய நண்பன் பார்த்தான்
அவனோடு அவனுடைய நண்பன் சென்றான்.

தான் பதிலிடுபெயர் துணைநிலை வாக்கியத்தில் இருந்து அது குறிக்கும்பெயர் தலைமைவாக்கியத்தில் இருப்பினும் அதனைச் சுட்டி வரக் கூடியது. எடுத்துக்காட்டாக,

கண்ணன் தன் தங்கையைப் படிக்கச் செய்தான் என்ற வாக்கியம்,

1. கண்ணன் செய்தான்
2. கண்ணனின் தங்கை படித்தாள்

என்ற இரு வாக்கியங்களைக் கொண்டது. துணைநிலை வாக்கியத்தில் உள்ள பெயரின் இடத்தில் தன் பதிலிடுபெயர் இடம் பெறுகிறது. இப்பதிலிடுபெயர் சுட்டும் பெயர் எழுவாயாக இருத்தல் மட்டுமே இன்றியமையாதது. கீழ்வரும் வாக்கியம்

கமலா தன் தங்கையைக் கண்டித்ததைக் கண்ணன் அறிந்தான் இரு பொருள் தருவது.

1. அ. கண்ணன் அறிந்தான்
   ஆ. கமலா கமலாவின் தங்கையைக் கண்டித்தாள்
2. அ. கண்ணன் அறிந்தான்
   ஆ. கமலா கண்ணனின் தங்கையைக் கண்டித்தாள்

முதல் வாக்கியத்தில் இப்பதிலிடுபெயர் குறிக்கும் பெயர் அதே துணைநிலை வாக்கிய எழுவாயாகவும், இரண்டாவது

வாக்கியத்தில் இப்பெயர் தலைமை வாக்கிய எழுவாயாகவும் இருக்கக் காணலாம்.

ஆயினும் தலைமை வாக்கியத்தில் தன்மை, முன்னிலை எழுவாய்கள் வரின் தான் பதிலிடுபெயர் துணைநிலை வாக்கிய எழுவாய் படர்க்கையாக இருப்பினும் சுட்டுவதில்லை.

நான் தன் தங்கையைக் கண்டித்ததைக் கண்ணன் அறிந்தான் என்று கூற இயலாது.

மேலும் தற்சுட்டாக வாக்கியங்களில் தான் பதிலிடுபெயர் தற்சுட்டாக்க வாக்கியத்தின் எழுவாயை மட்டுமே சுட்டக் கூடியதாகக் கட்டுப் படுத்தப்படுவதையும் காண்கிறோம்.

கண்ணன் தன்னை சிறையில் அடைத்துக் கொண்டதை சீதா விரும்பவில்லை. இங்கு தன்னை என்பது கண்ணனை மட்டுமே குறிக்கக்கூடியது.

இப்பதிலிடுபெயர் எழுவாயை மட்டுமே குறிக்கக்கூடியதாக இருப்பினும் உணர்வு வாக்கியங்களில் -ஐ வேற்றுமைப் பெயர்களையும் சுட்டக்கூடியது.

தன் தந்தை இறந்த செய்தி அவனை வருத்தியது.

இதுபோன்றே கு வேற்றுமை எழுவாய்களையும் இது சுட்டக்கூடியது.

அவனுக்கு தன் தங்கையைப் பிடிக்கும்

அவனுக்கு தன் தாய்மொழி தெரியாது

அவனுக்கு தன் தங்கை மீது கொள்ளை அன்பு.

2. பழந்தமிழில் தான், தாம் பதிலிடுபெயர்கள்

இனிப் பழந்தமிழ் இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் இப்பதிலிடுபெயரின் தன்மையைக் காணலாம்.

2.1. தற்சுட்டாக்கம்

பழந்தமிழ் நூல்களில் பதினான்கு இடங்களில் இப்பதிலிடு பெயர் தற்சுட்டுப் பதிலிடுபெயராக வந்துள்ளது. (ஐங் 68-4, புறம் 2(6-7, 274-4, குறள் 56, 209, 237, 250, 305, 439, 474, 878, 883, 974, 1009). பழந்தமிழில் தற்சுட்டாக்கத் துணை வினையான கொள் காணப்படாத நிலையில் இதுவே தற்சுட்டாக்கத்தைக் குறிக்கிறது எனலாம்.

கடுமான் றோன்ற எனடுமா னஞ்சி
தன்னறி யழன்கொல்............ புறம் 206.6-7

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் குறள் 56

தன்னைத்தான் காக்கின் சினம் காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம் குறள் 305

ஐங்குறு நூற்றில் ஒரு இடத்தில் இத் தற்சுட்டுப் பதிலிடு பெயர் தன்மைப் பதிலிடுபெயரைச் சுட்டி நிற்பதைக் காண்கிறோம்.

பேனா னோறின் பெண்டே
யான்ற னடக்கவுந் தானடங் கலனே ஐங் 68.3.4

பழந்தமிழ் நூல்களில் தற்சுட்டாக்கம் மிக அரிதாகக் காணப்படுகின்ற நிலையில் பழந்தமிழில் இத் தற்சுட்டுப் பதிலிடுபெயரின் உண்மையான நிலையை அறுதியிடுவது கடினமாக உள்ளது.

2.2. பெயருக்கு அழுத்தம்

.... தானே
தனக்கமைந் தன்றிவள் மாமை கவினே ஐங் 103.3.4

யாரு மில்லைத் தானே கள்வன் குறு 25.1

இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் மாநிலம்
உடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவலர் புறம் 363.1.3
நின்முகந் தான்பெறி னல்லது கொன்னே
மருந்து பிறிதியாது மில்லேல் திருந்திழாய் கலி 60.20.21
சாவதுதான் வாழ்வென்று தானம் பலசெய்து
சிலம்பு 29.6.3

மாதவ ருறைவிட மொரீ இமணி மேகலை
தானே தமியனிங் கெய்திய துரையென மணி 4.103–104

2.3. அழுத்தம் இன்றி

பாய்பரி நெடுந்தேர் கொண்கனொடு
தான்வந் தன்றென் மாமைக் கவினே ஐங். 134.2.3
…………………செவ்வி வேனில்
வந்தன் றம்ம தானே அகம் 277.18.19
தானென் விழந்ததில் வழுங்க லூரே நற். 36.8
தான்வந் தன்றே தனிதரு தண்கார் குறு 65.3
மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே புறம் 165.1.2
அளியன் றானே முதுவா யிரவலன் பத்து 1.284
………………… வயங்குநீர்ச் சோர்ப்பனை
……………………………………
……………………………………
தானூர்க் கிளைவ் வூசலை வந்தே கலி 131. 43-46
தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான் குறள் 206
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத்தான்றன்
அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
சிலம்பு 20.54–55

மாலிதை மணிபல் லவத்திடை விழ்த்துத்
தாங்கிய தொருநாட் டானாங் கிழிந்தனன்
மணி 14.81-82

24. துணைநிலை வாக்கிய எழுவாய்

முற்றான் கண்ட ஞான்றினும்
பிற்பெரி தளிக்குந்தன் பண்பினானே அகம் 178.21-22
சேயிறா எறிந்த சிறுவெண் காக்கை
....
தான்வீழ் பெடைக்குப் பயிரிடூஉச் சுரக்கும் நற். 31.2-4
தான் துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றெண்ணுதல் முகனே
குறு. 167.4-6
முணங்குநிமிர் வயமான் முழுவலி யொருத்தல்
....
தான்வேண்டு மருங்கின் வேட்டெழுந் தாங்கு
புறம். 52.2-4
வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி பத்து. 9.5-6
.... நீரவன்
தாழ்வுழி யுய்யாது தான்வேண்டு மாறுப்ப பரி. 11.109-110
முன்னத்திற் காட்டுத் லல்லது தானுற்ற
நோயுரைக் கல்லான் பெயருமன் பன்னாணாம்
கலி. 37.4-5
விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று குறள். 82
மாதர்தா னுற்ற வான்றுயர் செப்பி சிலம்பு. 15.65

வங்கம் போகும் வாணிகர் தம்முடன்

தங்கா வேட்கையிற் றானுஞ் செல்வுழி மணி. 16. 11-12

2.5. பரஸ்பரப் பதிலிடுபெயர்

தன்மைப் பதிலிடுபெயரான தாம் பரஸ்பரப் பதிலிடு பெயராக ஏழு இடங்களில் (புறம். 1, கலி. 3, மணி.3 வரக் காண்கிறோம்.

இருசுடர் தம்முள் நோக்கி பொருசுடர்

புன்கண் மாலை மலைமறைந் தாங்கு புறம்.65.7-8

ஓரோஒகை தம்முள் தழீஇ யொரோ ஒகை

ஒன்றன் கூ றடை யுடுப்பவரே யாயினும் கலி. 18.9-10

விலங்குந் தம்முள் வெரூஉம்பகை நீக்கி மணி. 10-63

2.6. எழுவாய் அல்லாத பெயரைச் சுட்டுதல்

இப்பதிலிடுபெயர் எழுவாய்ப்பெயரை மட்டுமே சுட்டும் இயல்புடையது என முன்னரே கண்டோம். எனினும் பழந்தமிழ் இலக்கியங்களில் இருபது இடங்களில் இப் பதிலிடுபெயர் பிற வேற்றுமைப் பெயர்களைச் சுட்டிவரக் காண்கிறோம்.

(அகம். 314-13, புறம். 367-5, 262-6, 387-14, கலி. 147.46, பத்து. 3 127, குறள். 63, 68, 105, 190, 293, 305, 319, 603, 608, 630, 756, சிலம்பு. 15-126, 29-4-1, மணி 23-17)

இந்நிலை வாராராயின் தந்நிலை

எவன்கொல்........................ அகம். 314 13-14

நாகத் தன்ன பாகார் மண்டிலம்

தமவே யாயினுந் தம்மொடு செல்லா புறம். 367.1-2

மிகப்பொலியர் தன் சேவடியத்தையென்று புறம். 387.14

நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு

தாங்கரு மரபிற் றன்னுந் தந்தை

வான்பொரு நெடுவரை வளனும் பாடி

முன்னாட் சென்றனமாக................. பத்து. 3 126-129

தன்னெஞ் சொருவற் கினைவித்தல் யாவர்க்கு
மன்னவோ காம நின்னம்பு கலி. 147.46-47

மடிமை குடிமக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும் குறள் 608

உறுபொருளும் உல்குபொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள் குறள் 756

மாதரி சேணிம் மடந்தைதன் கணவன்
தானதயைக் கேட்கிற் றன்குல வாணர்
அரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவர்
சிலம்பு 15.125-129

தற்பயந்ததாட் இல்லைத் தன்னைப் புறங்காத்த
எற்பயந் தாட்கு மெனக்குமோர் சொல்லில்லை
சிலம்பு 29.4.1 2

தன்மண் காத்தன்று பிறர்மண் கொண்டன்
றென்னெனப் படுமோ நின்மகன் மடிந்தது
மணி 23. 17-18

2.7. தலைமை வாக்கியத்தில் தான் பதிலிடுபெயர்

துணைநிலை வாக்கியத்தில் உள்ள தலைமைப்பெயுரைச் சுட்டுவதாக தலைமை வாக்கியத்தில் இப்பதிலீடுபெயர்கள் வருவதில்லை.

குழந்தை, தாயை மறந்தாலும் தாய் தன்னை மறப்பதில்லை என்பது தவறான தொடர். ஆயினும், ஐங்குறுநூற்றில் ஒரு இடத்திலும் கலித்தொகையில் ஒரு இடத்திலும் இவ்வாறு வரக் காண்கிறோம்.

.... கொடிச்சி
தானெம் அருளா ளாயினும்
யாந்தன் னுள்ளுபு மறந்தறி யேமே ஐங் 298.24

உண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
அடற்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானுந்
தன்னை யறியாது சென்றேன்.................. கலி 51.6-9

28. சேய்மைத் துணைநிலை வாக்கியங்களில் தான் பதிலிடுபெயர்

கலப்பு வாக்கியங்களில் இப் பதிலிடுபெயர் அடுத்துள்ள வாக்கியத்தில் உள்ள தலைமைப்பெயரையே சுட்டுமேயன்றி சேய்மையில் உள்ள ஒரு பெயரைச் சுட்டுவதில்லை. எடுத்துக்காட்டாக,

குழந்தை தன்னை மறந்துவிட்டான் என்று கமலா நினைத்தாள் என்ற வாக்கியத்தில் பதிலிடுபெயர் கமலாவைச் சுட்டுகிறது. ஆனால்

குழந்தை தன்னை மறந்துவிட்டான் என்று சீதா சொன்னதைக் கமலா நம்பவில்லை

என்ற வாக்கியத்தில் தன் பதிலிடுபெயர் கமலாவைச் சுட்டுவதில்லை. ஆயினும் பழந்தமிழ் இலக்கியங்களில் நற்றிணையில் ஒரு இடத்தில் இவ்வகை வாக்கியத்தைக் காண முடிகிறது.

.... குற்றநாடன்,
அடைதருந் தோறும் அருமைதனக் குரைப்ப
நப்புணர் வில்லா நயனி லோர் நட்பு
அன்ன வாகுக எண்ணான் நற். 165.5-8

5.9. தன்மை, முன்னிலைப் பதிலிடுபெயர்கள் தவிர்ப் பின்மை

துணைநிலை வாக்கியங்களில் தன்மை, முன்னிலைப் பதிலிடுபெயர்கள் எழுவாயாக வரின் தான் பதிலிடு பெயர்கள் படர்க்கைப் பெயர்களைக் கூட சுட்டி வருவதில்லை.

நான் தன்னோடு வருவதைக் கண்ணன், விரும்பவில்லை என்று வருவதில்லை. பழந்தமிழ் இலக்கியங்களில் இவ் விதி காணப்படுவதில்லை.

நீயுந் தாயை யிவற்கென யான்றற்
கரைய வந்து விரைவனள் கவை இ அகம் 16.13-14

நீதற் பிழைத்தமை யறிந்து
கலுழ்ந்த கண்ணளெம் அணங்கன் னாளே
அகம் 366 15-16

நாந்த முண்மையீ னுளமே……………… நற். 226.4

யான் தன் மொழிதலின்………………… நற். 204.7

யான்தற் கடவின் யாங்கா வதுகொல் குறு 276.6

யான்தனக் குரைத்தனெ னாக குறு 265.7

யாந்தற் றொழுதனம் வினவ……………… புறம் 144.8

எனநாம்
தன்மலை பாட நயவந்து கேட்டருளி கலி 40. 30-31

2.10. கு வேற்றுமைப்பெயர் எழுவாய்கள

ஒருசில வினைகளில் கு வேற்றுமைப் பெயர்களே எழுவாயாக வருதலையும் இவற்றைத் தான் பதிலிடுபெயர் சுட்டி வருதலையும் காணலாம்.

அவனுக்குத் தன் தங்கையைப் பிடிக்கும். இத்தகைய கு வேற்றுமை எழுவாய்களைப் பழந்தமிழ் இலக்கியங்களில் ஆறு இடங்களில் காண்கிறோம்.

(அகம் 200. 6, குறள் 64, 68, 190, 244, 273)

ஒருநாள் உறைந்திசி னோர்க்கும் வழிநான்
தம் பதி மறக்கும் பண்பின் எம்பதி அகம் 200. 5-6

அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ் குறள் 64

2.11. அயல்கூற்றில் தான் பதிலிடுபெயர்

நேர்க்கூற்றில் வரும் தன்மை, முன்னிலைப் பதிலிடுபெயர்கள் அயல்கூற்றில் தான் பதிலிடுபெயராக மாறுவதையும் பழந்தமிழ் இலக்கியங்களில் ஆறு இடங்களில் காண முடிகிறது.

.... தானே தரிக்கென வவரவி
உடன்பெய் தோரே யழல்வேட்டு.......... பரி.5.40-41

தாம்வந்தார் தம்பா லவரொடு தம்மை
வருகென்றார் யார்கொலோ ஈங்கு கலி. 85.30-31

அன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணிநிர் விக்கினா னென்றோனா கலி. 51.12.13

ஏஎ யிஃதொத்த னானிலன் தன்னொடு
மேவேமென் பாரையும் மேவினன் கைப்பற்றும்
கலி.62.1-2

ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம் தம்மை
நீடுவாழ் கென்பாக்கு அறிந்து குறள்.1312

.... வேற்றொருவன்
நீணோக்கங் கண்டு நிறைமதி வாண்முகத்தைத்
தானோர் குரக்குமுக மாகென்று போன
கொழுநன் வரவே குரக்குமுக நீத்த
பழுமணி யல்குற் பூம்பாவை...... சிலம்பு.21.19-23

2.12. வேறு வாக்கியத்தில் தலைமைப்பெயர்

தான் பதிலிடுபெயர் ஒரே வாக்கியத்தில் உள்ள படக்கைப் பெயர்களையே சுட்டக்கூடியது.

கண்ணன் வந்தான். தான் என் நண்பன்

என்று கூறுதல் இயலாது. ஆயினும் பழந்தமிழ் இலக்கியங்களிஸ் மூன்று இடங்களில் இத்தகைய எடுத்துக்காட்டுகளைக் காண்கிறோம்.

............................மனையோள்
எம்மொடு புலக்கு மென்ப
....
....
....
யாந்தன், பகையே மல்லேம் சேர்ந்தோர்
திருநுதல் பசப்ப நீங்கும்
கொழுநனுஞ் சாலுந்தன் னுடனுறை பகையே
அகம். 186.13-2^{0}

..................பூங்கட் பேதை
தானறிந் தன்றோ விலளே......
.................................என்
உள்ளம் பின்னுந் தன்னுழை யதுவே குறு. 142.2-5
யான்தன் னறிவல் தானறி யலளே குறு. 337.5

2.13. உணர்வு வாக்கியங்கள்

உணர்வு வாக்கியங்களில் தான் பதிலிடுபெயர் எழுவாய் அல்லாத பெயர்களையும் சுட்டக்கூடியது.

தன் தந்தை இறந்த செய்தி ராமனுக்குத் துயரத்தை அளித்தது போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகள். ஆனால் இத்தகைய வாக்கியங்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப் படுவதில்லை.

மேலே கண்டவண்ணம் பழந்தமிழில் தான் பதிலிடுபெயர் பலவேறு வகைகளில் வந்திருப்பினும் இவற்றின் வரவு எண்ணிக்கை குறைந்த அளவிலேயே உள்ளது. படர்க்கை எழுவாய்ப் பெயர்களைச் சுட்டுவனவாகவே ஐந்நூறுக்கும் அதிக மான இடங்களில் இப்பதிலிடு பெயர் வந்துள்ளது.

செங்காற் பல்லி தன்துணை பயிரும் குறு. 16.4

............................களிறுதன்
தூங்குநடைக் குழவி துயல்புறங் காப்ப அகம் 168.9-10

போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுக்கள். பழந்தமிழில் இப் பதிலிடு பெயர் வந்துள்ள தன்மையைக் கீழ்வரும் பட்டியல் காட்டும்.

	1	2	3	4	5	6	7	8	9
பதி	—	—	—	—	—	—	—	—	8
ஐங்	—	1	1	—	—	—	—	—	24
அகம்	—	1	—	—	9	1	—	1	59
நற்	—	—	—	1	8	—	—	—	33
குறு	—	—	—	—	2	—	—	1	27
புறம்	1	3	—	—	5	—	—	—	63
பத்து	—	1	—	—	—	—	—	—	17
பரி	—	—	—	—	—	1	1	—	15
கலி	3	1	1	—	2	3	3	—	102
குறள்	—	12	—	—	—	1	1	—	53
சிலம்பு	—	2	—	—	—	—	—	—	55
மணி	3	1	—	—	—	—	—	—	60

1. பரஸ்பரப் பதிலிடுபெயர்
2. எழுவாய் அல்லாத பெயரைச் சுட்டுதல்
3. தலைமை வாக்கியத்தில் தான் பதிலிடுபெயர்
4. செய்மைத் துணைநிலை வாக்கியங்களில் தான் பதிலிடு பெயர்.
5. தன்மை, முன்னிலைப் பதிலிடுபெயர்கள் தவிர்ப்பின்மை
6. கு. வேற்றுமைப் பெயர் எழுவாய்கள்
7. அயல்கூற்றில் தான் பதிலிடுபெயர்
8. வேறு வாக்கியத்தில் தலைமைப்பெயர்
9. படர்க்கை எழுவாயைச் சுட்டுதல்

தொல்காப்பியம் காட்டும் அடிமைநிலை

நா. ஈசுவரபிள்ளை
தஞ்சாவூர்

மக்களின் உள்ளக் கருத்துக்களை வெளிப்படுத்த உதவும் முதன்மைக் கருவியாகத் திகழும் மொழியானது, அது வழங்கும், சமுதாயத்தில் நிலவும் பல்வேறு பொருளாதார அடித்தளங்களின் வரலாற்றுப் பேராகவும், உற்பத்தி நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாகவும் திகழ்கின்றது. இதனால் மொழியானது, உற்பத்தியில் ஏற்படும் மாற்றங்ஙளை உடனடியாகவும், நேரடியாகவும் தெரிவிக்கின்றது எனக் கருதுவர் (J. V. Stalin, Mavxim and tbe problem of Linguistics, P.Q.) ஒரு மொழியின் இலக்கணமானது அம் மொழியைப் பேசும் மக்கள் கூட்டத்தின் உளவியல் கூறுகளை - அது சிந்திக்கும் முறைமையினை உள்ளடக்கியதாகவும் திகழ்கின்றது என்ற சிந்தனையும் காணப்பெறுகின்றது (கா. சிவத்தம்பி, இலக்கணமும் ,சமூக உறவுகளும். பக். 23). இவ்வடிப்படையில் தொன்மைத் தமிழ் இலக்கண நூலாகவும், பண்டைத் தமிழ்ச் சமுதாயம் பற்றி அறிய முயல்வோர்க்குக் கருத்துக் கருவூலமாகவும் விளங்கும் தொல்காப்பியத்தில் இடம் பெறும் அடிமை நிலைக்குரிய சூழல்களையும், அடிமைநிலை பற்றிய சிந்தனைகளையும் இவண் காணலாம்.

அடிமை நிலை- விளக்கம்

உலகச் சமுதாயங்களில் நிலவிய அடிமை நிலையையும் அடிமைநிலை குறித்து அளிக்கப்பெறும் விளக்கங்களையும் நோக்கும்போது, பல்வேறு சமுதாய, பொருளாதார, சமய, அரசியல் காரணங்களால் குறிப்பிட்ட சிலர் மேட்டுக் குடியினரை

அண்டி, அவர்களிடும் ஏவல்களைக் கேட்டுத் தொண்டுசெய்யும் நிலையை அடிமைநிலை என்றும், அத்தகைய நிலைக்-குள்ளாவோர் அடிமைகள் என்றும் பொதுவாகக் கருத முடிகின்றது.

அடிமைநிலைக்குரிய சூழல்கள்

உலகச் சமுதாயங்களில் அடிமைநிலை தோன்றியமைக்கும், வளர்ச்சியுற்றமைக்கும் பல்வேறு சூழல்கள் காணப்பெற்றன. அவற்றுட்சில தொல்காப்பியம் காட்டும் சமுதாயத்தில் இடம் பெற்றிருந்தன என எண்ண இடம் உள்ளது.

சமூக அமைப்புமாற்றம்

சமூக வரலாற்றறிஞர்கள் உலகச் சமுதாயங்கள் அனைத்திலும் அடிமைநிலையின் தோற்றத்தை இனக்குழுச் சமுதாய அமைப்பின் சிதைவிலும், நாகரிகச் சமுதாய அமைப்பின் தோற்றத்திலுமே காணமுடிகின்றது எனக் கருதுகின்றனர். தொல்காப்பியம் காட்டும் சமூதாயம இனக்குழு அமைப்பு சிதைவுற்று, நாகரிகச் சமுதாய அமைப்பு மலர்கின்ற காலக் கட்டத்திலிருந்தது எனக் கருதமுடிகின்றது.

மிகத்தொல் காலத்தில் திராவிடமொழிகளில் சிந்திய மொழியில் உள்ளதைப் போல் எல்லாச் சொற்களும் ஒரே வகையாகக் - அதாவது அஃறிணையாகக்-கருதப் பெற்ற நிலை காணப்பட்டது (மு. வரதராசன், மொழிநூல், ப. 124) என்றும் தமிழ் முதலிய திராவிடமொழிகளில் பெயர்ச்சொற்கள் திணை, பால் பாகுபாடற்ற நிலையிலிருந்து இருதிணை, ஐம்பாற் பகுப்புக் களைப் படிப்படியாகப் பெற்றன (ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் வரலாற்றிலக்கணம், ப. 135) என்றும் மொழி வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர். இந்நிலை இனக்குழு வாழ்க்கை முறையைச் சுட்டுகின்றது எனலாம்.

தொல்காப்பியர் மக்கட் பிறப்பை - மக்கட்சுட்டை - உயர் திணையாகவும் அவரல்லாத பிறவற்றை அஃறிணையாகவும் வகைப்படுத்துகின்றார் (தொல். கிளவி. 1) மேலும், அவர்

'என்மனார்' எனக் குறிப்பிடுமாற்றால் அவர் காலத்திற்கு முன்பும்கூட இந்நிலை உள்ளது என்று எண்ணத் தோன்றுகின்றது. எனவே அக்காலச் சமுதாயம் இனக்குழு வாழ்க்கைமுறை சிதைவுற்ற நிலையில்-அதாவது நாகரிகச் சமுதாயம் தோற்றம் பெறும் நிலையில்-காணப்பட்டது எனக்கருதலாம்.

இனக்குழு வாழ்க்கைமுறையில் தெய்வம் பற்றிய எண்ணங்கள் வலுப்பெறவில்லை என்றும் கருதுவர். இயற்கையோடு இயற்கையாக இயைந்து வாழ்ந்த மக்கள் மரம், குன்று, நதி, காற்று, மழை, இடி போன்றனவற்றையே தெய்வங்களாகக் கருதி வழிபட்டனர். மக்களிடையே நிலவிய நம்பிக்கைகளும், சடங்குகளும் இனக்குழு மக்களின் சமயமாக விளங்கின. இனக்குழு அமைப்பின் சிதைவில் எழுந்த சமுதாய அமைப்பிலேயே கடவுளர்கள் இடம்பெற்றனர். தொல் காப்பியத்தில் உயர்திணை மருங்கிப் பால்பிரிந்து இசைப்பன இவையிவை எனக் கூறுமிடத்தில் "தெய்வம் சுட்டிய உயர்நிலைக் கிளவி"யும் இடம்பெறுகின்றமை இனக்குழுச் சமுதாய அமைப்பு சிதைவுற்ற நிலையில் எழுந்த நாகரிகச் சமுதாய அமைப்பு இடம்பெற்றமையைக் காட்டுகின்றது எனலாம்.

எந்த ஒரு சமூக அமைப்பு சிதைவுற்றாலும் அதன் எச்சங்கள் சமுதாயத்தில் இடம்பெறுமாற்றையும் அறியலாம். இக்கருத் திற்கிணங்கத் தொல்காப்பியமும் இனக்குழுச் சமுதாய அமைப்பின் சில கூறுகளையும் சுட்டக் காணலாம். மக்களையே உலகின் இன்றியமையாத தொகுதியாகக் கருதுதல் இனக்குழு வாழ்க்கையின் சிறப்புக் கூறுகளுள் ஒன்றாகும். தொல்காப்பியம மக்கட் சுட்டையே உயர்திணையாகக் கூறுவதன் மூலமும், ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியின் பின்னரே தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியைக் கூறுவதன் மூலமும் தொல் காப்பியர் மக்களையே சமுதாயத்தின் சிறப்புமிக்க தொகுதி யாகக் கருதியுள்ளார் என்பதை அறியலாம். ஆனால், நாகரிகச் சமுதாய அமைப்பு நன்கு வளர்ச்சியுற்ற காலக்கட்டத்தில் தோன்றிய நன்னூல் உயர்திணையுள் மக்கள் தேவர், நரகர் ஆகிய மூவரையும் இணைத்தே கூறுகின்றமை இவண் எண்ணு தற்குரியதாகும்.

தொல்காப்பியம் காட்டும் இனக்குழுச் சமுதாய அமைப்பிலிருந்து, நாகரிகச் சமுதாய அமைப்புக்குச் சமூகம் மாறுகின்ற சமூகமாற்றத்தைப் புலப்படுத்துவனவாய் இவை அமைகின்றன.

சமுதாயத் தரப்பிரிவுகள் (Social Stratifications)

சில சமுதாய, பொருளாதாரக் காரணிகளால் சமுதாயத்திலுள்ள மக்களை உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் எனத் தரப்படுத்துவதைச் சமுதாயத் தரப்பிரிவுகள் எனலாம். இச்சமுதாயத் தரப்பிரிவில் தாழ்நிலையில் வாழ்பவர்கள் சிற்சில நிலைகளில் இயலாமை நிலைகளை அடைவதன் காரணமாக, உயர்நிலையிலுள்ளவர்களைச் சார்ந்து வாழும் நிலை உருவாகும்போது அடிமைநிலை தோற்றம்கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. எனவே, அடிமைநிலைக்குரிய சூழல்களில் சமுதாயத்தரப் பிரிவுகளும் அமைகின்றன. சமுதாயத்தில் இச்சமுதாயத்தரப் பிரிவுகள் இடம் பெற்றுள்ளன எனக் கூறுதற்குரிய குறிப்புக்கள் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன.

உயர்சொற்கிளவி

சமுதாயத்தில் நிலவிய உறவு வேறுபாடுகளை (differentiations of Social relations) சொற்கிளவி சுட்டி நிற்பதாகக் கருதுவர் (கா. சிவத்தம்பி, பக். 41) மனிதனின் ஆளுமைக்கேற்ப மொழியின் அமைப்பு மாறுபடும் என்பதற்கு உயற்சொற்கிளவியைச் சான்றாகக் கூறுவர். உயற்சொற்கிளவி முடியாட்சி நிலவிய காலத்தில் அரசனின் மதிப்பையும் மரியாதையையும் உணர்ந்து, அவனைச் சுட்டப்பயன்படுத்தப்பட்டது என்றும், காலப்போக்கில் அது ஆளுவோரையும் சமுதாயத்தில் உயர் நிலையிலுள்ளவரையும் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது என்றும் வரலாற்று நோக்கில் விளக்கம் அளிக்கப்பெறும். (சு. சக்திவேல், மானிட மொழியியல், மொழியியல், தொகுதி. 3, ப. 142). ஆனால், இவ்வுயர்சொற்கிளவி திராவிடமொழிகளில் தொடக்கத்தில் காணப்பெறவில்லை என்பது கருதத்தக்கது ஆகும். (மு. வரதராசன், மொழிநூல், அடிக்குறிப்பு, ப. 133).

தொல்காப்பியர் பால்வழு அமைதியைக் குறிப்பிடும்போது ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியையும் சுட்டுகின்றார். (தொல். கிளவி.27). இது வழக்கின்கண் உயர்த்துக்கூறும் நெறியே தவிர இலக்கண முறைமையால் செல்லும் நெறி அல்ல என்பதையும் வெளிப்படுத்துகின்றார். எனவே, சமுதாயத்தில் மக்கள் பெற்றிருந்த அந்தஸ்தின் (status) அடிப்படையிலும் உயர்வு, தாழ்வு கருதும் நிலை காணப்பெற்றது என எண்ண முடிகின்றது.

ஏவல்-வியங்கோள் வினைஅமைப்பு

உற்பத்தி முறைகளும், உழைப்பு முறைகளும் ஊதிய முறைகளும் மாறும் மாற்றங்களுக்கேற்ப வினைச் சொற்களின் வடிவங்கள் மாறுதல் இயல்பெனலாம். சமூக மாற்றங்களைப் பொறுத்தவரையில் உலகச் சமுதாயங்களுடன் ஒப்பிடும்போது இந்தியாவில்-குறிப்பாகத் தமிழ்நாட்டில்-மிகக் குறைந்த அளவிலேயே நடைபெற்றுள்ளன எனலாம். அக்குறைந்த அளவு சமூக மாற்றத்திலும் புவியியல் அடிப்படையில் சில பகுதிகளில் வேகமான வளர்ச்சியும் சில பகுதிகளில் மெதுவான வளர்ச்சியும் காணப்பெற்றன. இச்சமனற்ற வளர்ச்சியால் (uneven development) தொழில், உழைப்பு, செயல்வகை இவற்றைக் குறிப்பிடும் வினையமைப்புக்களில் பெரும் மாற்றங்கள் நிகழவில்லை. எனினும் ஆட்சி, அதிகாரம் தொடர்பான மாற்றங்கள் இயல்பான போக்கில் நிகழ்ந்துள்ளன. இம்மாற்றங்கட்கேற்ப அவற்றை வெளிப்படுத்தும் வினையமைப்புக்களும் மாற்றம் கொண்டுள்ளமையை மொழிவரலாற்றறிஞர்கள் குறிப்பர் (ஆ. வேலுப்பிள்ளை ப. 205), இவ்வகை வினையமைப்பாக ஏவல்-வியங்கோள் கருதப்பெறுகின்றன. வா, போ என்னும் சொற்களிலுள்ள ஏவற்கடுமையை நீக்கி வேண்டுகோளாக ஏவும் போது அவை வியங்கோள் ஆயின (மு. வரதராசன், ப. 292) ஏவல் வாழ்க்கை நெருங்கிய உறவு உள்ளவர்களிடத்துப் பயன்படுத்தலாம், எனினும், தாழ்நிலையிலுள்ளவர்களை ஆணையிடுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. இக்காரணம் பற்றியே ஏவல்வினையானது, மரியாதையற்ற ஏவலுக்கும் இலக்கணம் ஏற்பு அளித்துள்ளமையைச் சுட்டுகின்றது எனக்

கருதுவர். (பா. சிவத்தம்பி, ப.55) இவ்வினை அமைப்புக்கள் சமுதாயத்தில் சிலர் தாழ்நிலையில் வாழ்ந்துள்ளமையையும் காட்டுவனவாகக் கொள்ளலாம்.

நால்வகைப் பாகுபாடுகள்

தொல்காப்பியர் காலச் சமுதாயத்தில் மக்சப் திணைகளின் - நிலங்களின் - அடிப்படையில் பாகுபடுத்தல் பெற்றமை தெரியவருகின்றது. இப்பாகுபாட்டை வைத்துக் கொண்டு அக்கால மக்களிடையே இப்பாகுபாடுகள் மட்டுமே காணப்பட்டன எனக் கொள்ள முடியாது. இவை அவர் காலத்து இலக்கியங்களில் இடம்பெற்ற இலக்கிய மரபை எண்ணிச் சிந்திக்கப்பெற்றனவே தவிரச் சமுதாயம் முழுமையும் எண்ணிச் சிந்திக்கப்பெற்றனவன்று என்பது எண்ணத்தக்கதாகும். (ப. அருணாசலம், தொல்காப்பியர், ப. 184). இக்கருத்தை நிறுவும்வகையில் தொல்காப்பியத்தில் நால்வகைப் பாகுபாடு களும் இடம்பெறுகின்றன.

பிரிவுபற்றிக்கூறும் தொல்காப்பிய நூற்பாக்கள் மூலம் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைப் பாகுபாடுகள் பற்றி அறியமுடிகின்றது. (தொல். அகத். 27-36). இவர்கள் நில அடிப்படையிலான மக்களினும் வேறுபட்ட, வளர்ச்சியடைந்த சமுதாயத்தில் இடம்பெற்றவர்கள் என்றே, கருதத் தோன்றுகின்றது. மேலும், இவர்கள் உயர்ந்தோர், மேலோர், எனோர், நால்வர், மன்னர் வேந்தல் எனச் சுட்டப்பெறுகின்றனர். இந்நூற்பாக்களுக்கு உரையெழுதிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர் இருவரும் குறிப்பிட்ட சில சொற்களை விளக்கும்போது வேறுபட்டுள்ளனரே தவிர, இவை நால்வருணமுறையின் விளைவாக எழுந்தவை என்பதில் இவர்களிடையே கருத்து வேறுபாடுகள் இல்லை என்பதை அறியமுடிகின்றது.

இவ்வுரையாசிரியர்களின் கருத்தை நிறுவும் வகையில் தொல்காப்பியத்தில் வேறுசில நூற்பாக்களும் காணப் படுகின்றன. கற்பிலக்கணம் கூறும்போது மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம் கீழோர்க்கும் உண்டு என்கின்றார் (தொல்.

கற்பு.3). இவண் சுட்டப்பெறும் "மேலோர்" என்பதற்கு அந்தணர், அரசர், வணிகர் என்றும், "கீழோர்" என்பதற்கு வேளாண்மாந்தர் என்றுமே இருவரும் விளக்கம்தருகின்றனர்.

மரபியலிலும் இந்நால்வகைப் பாகுபாடுகள் தெளிவாகவே சுட்டப் பெறுகின்றன (தொல். மரபு. 71-85)

இவற்றால் தொல்காப்பியம் காட்டும் சமுதாயத்தில் நில அடிப்படையிலான பாகுபாடுகள் தவிர அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பாகுபாடுகளும் இடம்பெற்றமை புலனாகும். இந்நால்வகை மரபினரைப் பற்றிப் பேசும் மரபியல் நூற்பாக்கள் இடைச்செருகல், பிற்சேர்க்கை எனக் கருதுவாரும் உளர் (Ilakkuvanar Tolkappiyam. in English with Critical studies, p. 279) வெள்ளைவாரணன், தொல்காப்பியம், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 16, 299-300) இதற்கு மாறாக வருணதருமத்துடனும் வைதீக உணர்வுடனும் வளர்ந்துவந்த சமுதாயத்தையே தொல்காப்பியம் எதிரொலிப்பதாகத் தோன்றுகிறது என்றும் (ப. அருணாசலம், ப. 200), மரபியலை முழுமையாகப் பயிலும்போது தொல்காப்பியர் மரபு குறித்துச் சொன்னவற்றுள் இவை தனிப்பட்டவை அல்ல என்றும் முடிவுக்கே வரமுடிகிறது என்றும் (சு. சக்திவேல், மானிட மொழியியல், மொழியியல், தொகுதி 3, ப. 144) கருதுவாரும் உளர். பொதுவாகப் பாக்கும்போது இந்நால்வகைப் பாகுபாடுகள் மரபியலில் மட்டுமன்றிக் கற்பியலிலும், அகத்திணையியலிலும் பேசப்பெறுவதால், அவண்பேசிய நால்வகை மக்களின் மரபு பற்றி மரபியலில் பேசுகிறார் என எண்ணலாம். மேலும், தொல்காப்பியர் அவர்களை உயர்ந்தோர்-இழிந்தோர், மேலோர்-கீழோர் எனவும் கூறுகின்றார். (தொல். பொருள். 31,33,36, கற்பு.3, மரபு. 85). இவற்றால் தொல்காப்பியம் காட்டும் சமுதாயத்தில் மக்களிடையே உயர்ந்தோர்-இழிந்தோர் மேலோர்-கீழோர் என்று பாகுபடுத்தப்பட்ட தரப்பிரிவுகள் காணப்பெற்றன எனச் கருதமுடிகின்றது.

எனவே, அடிமைநிலைக்குரிய சூழல்களில் சில தொல்காப்பியம் காட்டும் சமுதாயத்தில் காணப்பெற்றன எனலாம். இவ்வடிப்படையில் தொல்காப்பியம் காட்டும் அடிமை நிலை பற்றிக் காண்போம்.

அடிமை-சொல்லாட்சி

ஒரு மொழியில் இடம்பெறும் சொற்கள் அம்மொழி பேசும் மக்களின் பண்பாட்டை விளக்குவன ஆகும். தொல்காப்பியர் சில சொற்கள் உணர்திணைப் பெயராயினும் அவை அஃறிணை முடிபுகளை ஏற்கும் என்ற கருத்தை விளக்கும் நூற்பாவில் அடிமை என்ற சொல்லையும் சுட்டுகின்றார் (தொல். கிளவி. 57), "குடிமை முதலாக விறற் சொல் ஈறாகச் சொல்லப்பட்ட அப்பதினெட்டும் உள்பட அவை போல்வன பிறவும் அவற்றொடு பொருந்தித் தொக்கு சொல்லுவான் குறிப்பொடு படுத்து உயர்திணைப் பொருளை உரைப்படும் சொற்களையெல்லாம் உயர்திணை இருபாற் கண்ணும் பொருளை உணர்த்தி நின்ற வழிபோல் அஃறிணை முடிபையே கொள்ளும்" என உரையெழுதும் நச்சினார்க்கினியர் "அடிமை புகுத்திவிடும்" என இலக்கியச் சான்றும் தருகின்றார். இதனால் தொல்காப்பியர் காலத்தில் 'அடிமை' என்ற சொல் வழக்கில் காணப்பட்டது எனக் கருதுவதுடன் தொல்காப்பியர், சமுதாயத்தில் அடிமைகள் வளர்ந்து வந்த ஒரு காலநிலையை அல்லது ஒரு சிந்தனையையே எதிரொலிக்கின்றார். (ப. அருணாசலம், தொல்காப்பியர், ப. 196) என எண்ணவும் தோன்றுகின்றது.

அடியோர் வினைவலர்

கைக்கிளை, பெருந்திணைக்குரிய தலைமக்கள் யாவர் எனக் குறிப்பிடும் தொல்காப்பியர் அடியோர்களையும் வினைவலர் களையும் தலைமக்களாகக்கொண்டு செய்யுள் இயற்றுதல் கைக்கிளை, பெருந்திணைக்கண் நீக்கப்படமாட்டாது என்கிறார் (தொல். அகத். 23) இவண் அடியோர், வினைவலர் என்போர் சுட்டப்பெறுகின்றனர்.

இந்நூற்பாவுக்கு உரையெழுதும் நச்சினார்க்கினியர் 'அடியோர்' என்பதற்குப் பிறர்க்குக் குற்றேவல் செய்வோர் என்றும், வினைவலர் என்பதற்குப் பிறர் ஏவிய தொழில்களைச் செய்தல் வல்லோர் என்றும் பொருள் கூறுகின்றார். கலித் தொகைப் பாடல்களை இலக்கியச் சான்றுகளாகவும் தருகின்றார். "கோன் அடி தொட்டேன்", (கலித். 64) கோயில் என்றமையால் இவர்கள் குற்றேவல் மாக்களாயிற்று எனவும், தீய காமம் இழிந்தோர்க்குரிமையின் அடியோர் தலைவராக வந்த கைக்கினை (கலித். 62) எனவும் எமரேவலான் யாம் செய்வதன்றி யாங்கள் ஏவ நின் நெஞ்சம் இழிதொழில்கள் செய்கின்றவில்லை என்றலின் வினைவல பாங்கினாளாய தலைவி கூற்றாயிற்று (கலித். 108) எனவும், தாழ்த்துப் போதற்குத் தலைமையின்றிக் கடிதிற் போகவேண்டும் என்றமையானும் நல்லோறும் நாகும் போல் நாமும் கூடப்போகல் வேண்டும் என்றமையாலும் தலைவன் வினைவல பாங்கனாயிற்று (கலித். 113) எனவும் அடியோர், வினைவலர் தலைவராக வந்த கைக்கிளை, பெருந்திணைப் பாடல்களைச் சான்றுகளாகக் காட்டுகின்றார். மேலும், இக்கூறிய இருதிறத் தாரும் தமக்கு உரியர் அன்மையான் அறம், மொருள், இன்பம் வழாமை நிகழ்த்துதல் அவர்க்கு அரிது என்பது பற்றி இவற்றை அகப்புறம் என்றும் விளக்குகின்றார். நச்சினார்க்கியனிரின் இவ்வுரை விளக்கத்தால் சமுதாயத்தில் அடியோர், வினைவலர் என்போர் வாழ்ந்துள்ளமையும் இவர்கள் "தமக்குரியர் அன்மையான்" என்றமையால் உரிமையற்ற நிலையில், பிறர் உடைமைப் பொருள்போல் வாழ்ந்துள்ளமையும் புலனாகும்.

இளம்பூரணர் 'அடியோர்' என்பதற்கு அடித்தொழில் செய்வார் எனவும், 'வினைவலர்' என்பதற்கு வினைசெய்வார் எனவும் பொருள் தருகின்றார். மேலும், இவர்கள் அகத் அகத்திணைக்கு உரியர் ஆகாமைக்கும் காரணம் கூறுகின்றார். திணையாவன அறத்தின் வழாமலும் பொருளின் வழாமலு இன்பத்தின் வழாமலும் இயலல் வேண்டும். அவையெல்லாம் பிறர்க்குக் குற்றேவல் செய்வோர்க்குச் ரெய்தல் அரிதாகலானும் அவர் நாணுக்குறைபாடு உடையர் ஆகலானும் இன்பம் இனிது

நடத்துவார் பிறர் ஏவல் செய்யாதார் ஆகலானும் இவர் புறப் பொருட்கு உரியர் ஆயினர் என்கின்றார். இவ்விளக்கங்களால் அடியோர், வினைவலர் என்போர் பிறர்க்குக் குற்றேவல் செய்வோர் என்பதும், இவர்கள் அறம், பொருள், இன்பம் ஆகியனவற்றின் வழாமல் இயற்றும் ஆற்றலற்றர்கள் என்பதும் புலனாகின்றன.

மேலும், அடியோர் தமக்கென உரிமையுடையோர் அல்லர் ஆகலானும் வினைவலர் தமக்கென உரிமையுடையோர் ஆயினும் தத்தம் தொழிலாற் கிடைக்கும் சிறு ஊதியத்தைக் கொண்டு எளிய வாழ்க்கை நடத்துவோர் ஆகலானும் இவ்விருதிறத்தாரும் மலரினும் மெல்லிய காமத்தின் இயல்பு அறிந்து இன்பத்துறையில் நெறிபட ஒழுகும் வாய்ப்புகள் பெற்றிலர் ஆகலானும் இவர்தம் அகவொழுக்கங்களைக் கைக்கிளை, பெருந்திணைகளிற் சேர்த்துக் கூறினார். (மு. அருணாசலம்பிள்ளை, தொல்காப்பியம், அகத்திணையியல், உரைவளம், ப. 284) எனவும், அடியோராவர் தமக்கென நிலையான பொருளோ தொழிலோ இன்றிச் செல்வரிடத்து அங்கேயே உண்டுடுத்தோ நாட்கூலி பெற்றோ அச்செல்வர் தொழிலுக்கு அடிப்படையாக இருப்பவர் என்றும், கிளைகளைத் தாங்கும் அடிமரம் போன்று நின்று அச்செல்வர் தொழிலை முடிப்பவர் என்றும் வினைவலர் என்போர் ஆண்டுக் கூலியாகச் செல்வரிடத்து அமர்ந்து தொழில் செய்வோர் என்றும் இவ்வடியோர், வினைவலர் இருவரும் தமக்குரியர் அன்மையால் இவரிடம் கைக்கிளைப் பெருந்திணை ஒழுக்கங்கள் நிகழினும் குற்றமில்லை (குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், ப. 101) எனவும் உரையாசிரியர்களால் விளக்கங்கள் தரப்பெறுகின்றன. இவற்றால் அடியோர், வினைவலர் என்போர் தமக்குரியர் அல்லர் என்பதும், பொருளாதாரத் தாழ்நிலையால் பிறரை அண்டித் தொழில் செய்யும் நிலையில் வாழ்ந்தவர்கள் என்பதும், அவர்கள் இயலாமை நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தவர்கள் என்பதும் புலனாகின்றன.

தொல்காப்பியர் காலத்துத் தமிழ் மக்களின் வாழ்க்கையைப் பிற்காலச் சூழல்களைக்கொண்டும், பிற்காலத்தில் வாழ்ந்த

உரையாசிரியர்களின் கருத்துக்களைக் கொண்டும் வரையறுத்தல் இயலாது. எனினும், தொல்காப்பியர் சுட்டிய அடியோர், வினைவலர் என்போர்க்கு இலக்கியச் சான்றுகள் காட்டப் படுகின்றமையாலும், தொல்காப்பியரே இவர்களைக் கைக்கிளை, பெருந்திணைக்குரியவர்களாக வகுத்துக் காட்டுகின்றமையாலும் அக்காலச் சமுதாயத்தில் பொருளாதார, சமுதாய ஏற்றத் தாழ்வுகளினால் தாழ்நிலை அடைந்து மேட்டுக்குடியினரைச் சார்ந்து, ஏவல் கேட்டு இயலாமையுடன் வாழ்ந்த அடியோர்களும், அவர்களைவிடச் சிறிது மேம்பட்ட நிலையில் வினைவலர்களும் வாழ்ந்துள்ளனர் எனக் கருதத் தோன்றுகின்றது.

ஏவல் மரபின் ஏனோர்

கைக்கிளை, பெருந்திணைக்குத் தலைவராதற்குரியோராக ஏவல் மரபின் ஏனோரும் உரியர் என்கின்றார். (தொல். அகத். 24). பிறரை ஏவிக்கொள்ளும் தொழில் தமக்கு உளதாகிய தன்மையுடைய அந்தனர், அரசர், வணிகரும் அம் மூவரையும்போல் பிறரை ஏவிக்கொள்ளும் தன்மையராகிய குறுநில மன்னரும் அரசராற் சிறப்புப் பெற்றோரும் நால்வகை வருணம் என்று எண்ணிய வகையால் ஒழிந்து நின்ற வேளாளரும் உரிப்பொருள் தலைவராதற்குரியர் என நச்சினார்க்கினியரும், மேற் சொல்லப்பட்ட அடியோரும் வினைவலரும் ஏவுதல் மரபுடைய ஏனோரும் கைக்கிளை, பெருந்திணைக்குரியர் அவர் அவரும் உரியராகிய நிலைமை அத்தன்மையராகலான் என இளம்பூரணரும் விளக்கங்கள் அளிக்கின்றனர்.

இவர்கள் யாவர் என்பதில் கருத்துவேறுபாடுகள் இருப்பினும், பிறரை ஏவிக்கொள்ளும் மரபினர்களும், அவர்களுடைய ஏவலுக்குக் கட்டுப்பட்டுத் தொண்டு செய்யும், நிலையில் சிலரும் சமுதாயத்தில் வாழ்ந்துள்ளனர் எனக் கருதமுடிகின்றது.

முடிபுகள்

1. தொல்காப்பியம் காட்டும் சமுதாயம் இனக்குழு அமைப்பு சிதைவுற்று, நாகரிகச் சமுதாய அமைப்பு தோன்றும் காலக்கட்டத்தில் காணப்பெற்றது

2. தொல்காப்பியம் காட்டும் உயர்சொற்கிளவி, ஏவல்- வியங்கோள் என்பனவற்றின் மூலம் சமுதாயத்தில் மக்களிடையே தரப்பிரிவுகள் காணப்பெற்றன எனக்கருதமுடிகிறது.

3. சமுதாயமக்கள் நிலத்தின் அடிப்படையிலும் நால்வகைப் பாகுபாட்டின் அடிப்படையிலும் பாகுபடுத்தப்பெற்றிருந்தமை புலனாகின்றது.

4. நால்வகைப் பாகுபாட்டில் அடிப்படையில் மக்களிடையே உயர்ந்தோர் இழிந்தோர் என்று வேறுபாடுகள் காணப்பெற்றன.

5. தொல்காப்பியத்துள் இடம்பெறும் அடிமை குறித்த சொல்லாட்சிகள் சமுதாயத்தில் நிலவிய அடிமைநிலை பற்றிய சிந்தனையின் வெளிப்பாடுகள் எனலாம்.

6. அக்காலத்தில் அடியோர், வினைவலர் என்போர் வாழ்ந்துள்ளனர் எனக் கருதலாம்.

7. உரையாசிரியர் தரும் விளக்கங்களால் இவர்கள் தமக்கு உரிமையற்றவர்கள்: பொருளாதார, சமுதாய நிலைகளில் தாழ்நிலையுற்றவர்கள் மேட்டுக் குடியினரைச் சார்ந்து தொண்டு செய்தவர்கள், இயலாமையுடன் வாழ்ந்தவர்கள் என்பன புலனாகின்றன.

8. பிறரை ஏவிக்கொள்ளும் மரபுடைய மேட்டுக் குடியினரும், அவர்க்குத் தொண்டுசெய்யும் நிலையினரும் வாழ்ந்துள்ளனர் என எண்ண இடமுள்ளது.

இவற்றால் தொல்காப்பியம் காட்டும் சமுதாயத்தில் பொருளாதார, சமுதாய உயர்நிலை வகித்த மேட்டுக் குடியினரும், அவர்களை அண்டி வாழும் அடியோர்களும் வினைவலர்களும் வாழ்ந்துள்ளமை புலனாகின்றது.

கருத்தோட்டத்தில் நடையியற் கூறுகளின் பங்கு

அ. ஆலிஸ்
திருச்சி.

எந்த ஒரு இலக்கிய வகையாயினும் சரி, அல்லது பேச்சுச் செயலாயினும் சரி தான் கூற வந்த கருத்தைச் சரிவர படிப்போருக்கு அல்லது கேட்போருக்குப் புலப்படுத்தினால்தான் அவ்விலக்கியத்தின் அல்லது பேச்சின் நோக்கம் நிறைவேறுகிறது எனலாம். ஒரு இலக்கியத்தின் மூலமோ அல்லது ஒரு பேச்சுச் செயலின் மூலமோ படைப்பாளி அல்லது பேசுவோர் என்ன சொல்ல வருகிறார் என்றே புரியவில்லை என்றால் அவ்விலக்கியத்தாலோ அல்லது பேச்சுச் செயலினாலோ எவ்வித பயனுமில்லை. இலக்கியப் படைப்பாளியோ, மேடைப் பேச்சாளனோ யாராயிருந்தாலும் தான் கூற எடுத்துக்கொண்ட கருத்தைப் புலப்படுத்துவதற்கெனச் சில வழி முறைகளைக் கையாளுதல் கருத்தை எளிதில் புலப்படுத்துகிறது. அவ்வழி முறைகளைக் 'கருத்துப் புலப்பாட்டு முறை' எனலாம். கருத்துப் புலப்பாட்டுக்கெனக் கையாளப்படும் உத்திகள் படைப்பின் ஆரம்பத்தில், இடைப்பகுதியில், இறுதியில் என்று பரவலாக அமைந்தாலும் கருத்துப் புலப்பாடு என்பது ஒட்டு மொத்தமாகப் படைப்பின் முழுமையிலும் தொடர்ச்சியாக அமைதல் வேண்டும். படைப்பின் முழுமையிலும் தொடர்ச்சி யாகக் கருத்து சிறப்புற புலப்படுத்தப்பட்டுக் கொண்டே போகும்போதுதான் அப்படைப்பின் கருத்தோட்டம் இயல்பானதாக அமைகிறது. பொதுவாக கூற வரும் கருத்தை மெல்ல மெல்ல கேட்போனுக்குப் புலப்படுத்தி இறுதிவரை வளர்த்துச் சென்று கருத்தின் மீதியையும் இறுதியில் தெரிவித்து படைப்பு நிறைவுறுகிறது. எனவே கருத்துப்புலப்பாடு படைப்பிலக்கியத்தின் ஏதாவது சில பகுதிகளில் மட்டும்

சிறப்பாக அமைதல் அவ்விலக்கியக் கருத்துப் புலப்பாட்டிற்கு நன்மை பயப்பதல்ல. இலக்கியத்தின் முழுமையிலும் தொடர்ச்சியாக அமைந்தால்தான் அவ்விலக்கியத்தின் கருத்தோட்டம் சிறக்கும்.

தொல்காப்பியர் செய்யுளியலில் செய்யுளின் உறுப்புக்களை வகைப்படுத்திக் கூறுகிறார். அவற்றுள் நோக்கு என்ற உறுப்புப் பற்றி,

'மாத்திரை முதலா வடிநிலை காறும்
நோக்குதற் காரண நோக்கெனப் படுமே'[1]

என்று கூறுகிறார். இதற்குப் பேராசிரியர் ஓரடிக் கண்ணேயன்றியும் செய்யுள் வந்த அடி[2] எத்துணையாயினும் அவை முடிகாறும் மறித்து நோக்கிப் பயன் கொள்ளுதல் என்று விளக்கம் கூறுகிறார். பாடலின் முதலடியிலிருந்து இறுதிவரை பாடலை ஒருசேர நோக்கி அவற்றிலிருந்து பெறும் பயன்பாட்டையே இவர்கள் கூற்றுகள் வலியுறுத்துகின்றன. எவ்விலக்கிய வகையாயினும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது முதலடியிலிருந்து இறுதிவரை அமையும் கருத்தோட்டம் எவ்வாறு அமைகிறது என்பது புலப்படும். கவிதையை முழுமையாகவும் பகுதிகளாகவும் நினைத்துப் பார்த்து அதன் கருத்து வளர்ச்சியைக் கணிக்க முடியும்.[3] லூபோமிர் டோலிஸெல் உரைநடைப் புனைக்கதை அமைப்பினைக் கணிக்கும்போது "அப்பகுதியின் கட்டமைப்பின் முக்கியத் தன்மை அப்பகுதியின்கூறுகள் அந்தநேர தொடர்ச்சியில் அமைந்திருக்கும் அமைப்பே"[4] என்று வளர்ச்சியின் வரிசை அமைப்பினை விளக்குகிறார். ஒரு இலக்கியப் படைப்பில் அதன் பகுதிகளிடையே ஒரு வித தொடர்பை அல்லது இணைப்பை ஏற்படுத்தும் குறியீடுகள் உள்ளன. அக்குறியீடுகள் ஒரே மாதிரியான திசையில் தொடர்ந்து கருத்தைச் செலுத்தும் அல்லது திசை மாற்றிச் செலுத்தும் என்று ஈஸ்ட்மென் கூறும் கருத்து கருத்தோட்டத்தில் அவ்விலக்கியப் பகுதிகளின் இணைப்பில் (Coherence) முக்கியப் பங்கு வகிக்கும் கூறுகளைப் பற்றி விளக்குகிறது. இலக்கியக் கட்டமைப்பின் இன்றியமையா இடம்பெறும் கருத்

தோட்டத்திற்குத் தனி ஒரு படைப்பாளியின் கருத்துப் புலப்பாட்டு முறையான நடையும் நடையியற் கூறுகளும் சிறப்பாக எங்ஙனம் உதவி புரிகின்றன என்பதனை இக்கட்டுரை ஆய்கிறது.

கவிஞனது நடையும் அவனது அனுபவமும் பின்னிப் பிணைந்து ஒன்று என்ற கருத்தை ஈஸ்ட்மேனும் நடை என்பது கவிஞனது தனித்தன்மைகளின் பிரதிபலிப்பு என்ற கருத்தை மிடில்டன் மர்ரே[7] ரிஃபட்டரே[8] வார்பர்க்,[9] என்க்விஸ்ட்,[10] ஹட்சன்[11] முதலானோரும், கவிஞன் சொல்லும் முறையாகிய உணர்த்தும் பாங்கு என்ற கருத்தை வார்ப்ர்க்கும்[12], பொதுப் பயன்பாட்டு முறையிலிருந்து பிறழ்ந்த கருத்து வெளிப்பாட்டு முறை என்ற கருத்தை ஸ்பிட்சரும்[13] கூறுகின்றனர். இலக்கியப் படைப்பாளி தான் எடுத்துக்கொண்ட கருத்தைத் தன் அனுபவம் தோன்ற தனக்கேயுரிய முறையில் வெளிப்படுத்தும் பாங்கும் அத்தகைய வெளிப்பாட்டு முறைக்கு உதவும் மொழிக் கூறுகளும் நடையினைக் கணிக்க உதவும் எனலாம். எனவே இலக்கியப் படைப்பாளியின் அனுபவம் தனக்கேயுரிய முறையில் வெளிப்படுத்தும் பாங்கு, எழுத்து, சொல், தொடர் போன்ற வெளிப்பாட்டு முறைக்கு உதவும் மொழிக் கூறுகள் முதலியன இலக்கியப் படைப்பாளி. கருத்தோட்டத்தில் கருத்துப் புலப்பாட்டிற்த எவ்வாறு உதவுகின்றன என்பதை இக்கட்டுரை காண முயலுகிறது. மேலும் கருத்தோட்டத்தில் நடைக்கூறுகள், இலக்கிய வடிவத்திற்கேற்ப மாறுபடுகிறதா என்பதையும் இக்கட்டுரை ஆராய்கிறது. மரபுக்கவிதை, புதுக்கவிதை, சிறுகதை, நாவல் முதலிய இலக்கியங்களில் கருத்தோட்டம் இங்கே ஆராயப்படுகிறது.

1. மரபுக் கவிதையில் கருத்தோட்டம்

மரபுக் கவிதைக்குக் காட்டாகச் சங்க இலக்கிய அகநானூற்றுப் பாடல்களும், புறநானூற்றுப் பாடல்களும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இக்கவிதைகளில் கருத்தோட்டம்,

1. கவிஞன் கருத்தைச் சொல்லும் பாங்கு
2. தொடரமைப்பு
3. சொல்லாட்சி

முதலிய நடைக்கூறுகளால் பாதிக்கப்படுகிறது.

1. சொல்லும் பாங்கும்

சங்க அக இலக்கியத்தில் பாடலினை முதலிலிருந்து இறுதிவரை படிக்கும்போது எளிமையான கருத்தோட்டம், எளிமையான கருத்தோட்டத்திலிருந்து சற்று மாறுபட்ட அமைப்பு ஆகிய இருவகைக் கருத்தோட்டத்தினைக் காண முடிகிறது.

சங்க இலக்கியத்தில் ஒரு பாடலில் கருத்துப்புலப்பாட்டுப் பகுதியும் மெருகூட்டப்பட்ட பகுதியும் மாறி மாறி அமைந்து பாடல் அமைகிறது. கருத்துப்புலப்பாட்டுப் பகுதி பாடலின் பல பகுதிகளில் தொடர்ச்சியின்றி இடம்பெறுவதைவிட ஒரே இடத்தில் அமைந்திருப்பது அப்பகுதி உணர்த்தும் கருத்தினை எளிதில் உணர வழிவகுக்கிறது. அகநானூற்றுப் பாடல் 182–இல் பாடலின் முதல் எட்டு வரிகளில் தலைவனது நாட்டு வர்ணனை கூறப்படுகிறது. நாட்டு வர்ணனையின் இறுதியில் நாட என்று விளிக்கப்பட்டு தலைவன் இரவில் வருதலும் அதனால் தலைவி அழுதலும் அதன் காரணமாக பகலில் வருமாறு வேண்டுதலும் கூறப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து தலைவன் வரவேண்டிய இடவர்ணனையாகிய மெருகூட்டப்பட்ட பகுதி அமைந்து ‘சாரலானே’ என்ற கருத்துப் புலப்பாட்டுப்பகுதியுடன் பாடல் முடிகிறது. தலைவனிடம் கூறப்படும் கருத்துக்கள் மிகுதியான கருத்துக்கள் ஏறக்குறைய பாடலின் நடுப்பகுதியில் ஒரே இடத்தில் கூறப்பட்டுள்ள முறை படிப்போருக்கு அக்கருத்தை எளிதில் விளங்கிக் கொள்ளவழி வகுக்கிறது. புறநானூற்றில் பாடல் பன்னிரெண்டிலும் இவ்வமைப்பைக் காணலாம்.

ஒரே ஒரு மெருகூட்டப்பட்ட பகுதி மட்டும் பாடலில் இடம் பெற்றாலும் பாடலின் கருத்தோட்டம் எளிமையாகிறது. பாடலின் முதற் பகுதியில் தலைவன் சென்ற பாலை வர்ணனையாகிய மெருகூட்டப்பட்ட பகுதி 6 வரிகளில் அமைய பாடலின் மூன்றாம் பகுதியில் மீண்டும் தலைவியின் நிலை பற்றி உரைக்க பாடல் முடியும் அமைப்பில் பாடலில் மெரு கூட்டப்பட்ட பகுதி குறைவதனால் ஒரு தெளிவான கருத்தோட்டத்தைக் காண முடிகிறது.

பாடலின் முதற்பகுதி மெருகூட்டப்பட்ட பகுதியாகவும் பிற்பகுதி கருத்துப் புலப்பாட்டுப் பகுதியாகவும் உள்ள அமைப்புக்களில் பாடலைப் படிக்கும்போது கருத்து எளிமையுடையதாகிறது.

இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட கருத்துப் புலப்பாட்டுபகுதி அல்லது மெருகூட்டப்பட்ட பகுதி அமையினும் சில பாடல்களில் எளிமையான கருத்தோட்டத்தினை உணர முடிகிறது. இதற்குக் காரணம் சொல்லும் கருத்துக்களை நேரடியாகக் கூறுதலே ஆகும். 131-ஆம் பாடலில்,

.... "கோதை
இவளினுந் சிறந்தன்று ஈதல் நமக்கென
வெருவரு தகுதி காணம் நம்மொடு
வருக என்னுதி யாயின்
வாரேன் நெஞ்சம் வாய்க்கதின் வினையே''

என்ற பாடலடிகளில் கூறவரும் கருத்து எந்தவித குறிப்புமின்றி நேரடியாகவே கூறப்படுதல் எளிமையான கருத்தோட்டத் தினைத் தருகிறது. புறநானூற்றில் ஏழாவது பாடலிலும் இவ்வமைப்பைக் காணலாம்.

2. தொடரமைப்பு:

1. பாடலின் கருத்தோட்டத்தில் தொடரமைப்பும் முக்கிய பங்கு வகித்து கருத்து வளர்ச்சிக்கு உதவுவதோடு படிப்போன் கருத்தை புரிந்து கொள்ளவும் உதவுகிறது. மேற்கூறிய பாடல்

131-இல் தொடரமைப்பின் தெளிவு எளிமையான கருத் தோட்டத்தினை நல்குகின்றது.

2. கருத்துப்புலப்பாட்டுப் பகுதி அதிகமிருப்பினும் சில பாடல்களில் பாடற்கருத்தோட்டத்தில் ஒரு எளிமையை உணர முடிகிறது. வன்புறை எதிரழிந்து தலைவி கூற்று நிகழ்த்தும் பாடல்களில் தலைவன் செயல் (பிரிவு) தன்நிலை (அவர்) போன்ற கருத்துக்கூறுகள் சிறு சிறு தொடர்களாகக் கூறப்பட்டிருப்பதால் எளிய கருத்தோட்டமுடையதாகிறது.

3. ஒரே தொடரில் பாடற் கருத்து முழுமையும் புலப் படுமாயின் கருத்தோட்டம் எளிமையுடையதாகிறது. 'இன்ன பெறுகுவை விறலி இந்த மன்னனைப் பாடினை செலினே' (புறம். 105), 'இந்த மலை இத்தகையது' (புறம் 128), இவ்வாறு இங்கு வந்தது இதற்காக (புறம் 372) என்பது போன்ற அமைப்பு களில் பாடலின் தொடரமைப்பின் காரணமாக எளிமையான கருத்தோட்டம் அமைகிறது.

4. பொதுவாக சங்க அகப்பாடல்களில் கூறவரும் கருத்தை அதாவது கருத்துப் புலப்பாட்டுப் பகுதியைப் பாடலின் இறுதி வரை வளர்த்துச் சென்று முடிக்கும் முறை காணப்படுகிறது. இடையில் பெரிய விளக்கங்கள் இடம்பெறினும் கூறவரும் கருத்தை வளர்த்து இறுதியில் கொண்டு சென்று புலவர்கள் முடிப்பது கேட்போரது ஆர்வத்தை வளர்ப்பதாக அமைகின்றது. 'பகற் குறியும் இரவுக்குறியும்' என்ற சூழலில் தலைவி தூதுவிடும் பாடலாகிய 170-இல்முதல் மூன்று வரிகள் தனக்குத் தூது செல்வதற்கு யாரும் இல்லை என்ற நிலையையும் 7-வது வரியில் தூது யாரிடம்' (தலைவனிடம்) செல்ல வேண்டும் என்பதும் 8-ஆவது வரியில் தூது செல்லப் போகின்றவர் யார், அதாவது பாடலில் கேட்போர் யார் (அலவன்) என்பதும் படிப்படியாகக் கூறப்படுகின்றன. இறுதி மூன்று வரிகளில் தான் தூது சொல்லப் படவேண்டிய கருத்து கூறப்படுகிறது, பாடலின் முதற்பகுதி கூற்று நிகழ்த்துவது தலைவி என்று குறிப்பாகக் காட்டினாலும் (தலைவனிடம் தூது அனுப்புவதால்) இம்மூன்று வரிகள்தான் கூற்று நிகழ்த்துபவரையும் அவர்களது காதல் ஒழுக்கத்தையும்

தலைவி நிலையையும் புலப்படுத்துகின்றன. ஆர்வத்தைத் தூண்டும் இவ்வமைப்பு புறப்பாடல்களில் பெரிதும் பின்பற்றப் படுவதில்லை. புறம்-51-ஆம் பாடலில் 'நீர்மிகிற் சிறையுமில்லை', தீ மிகின் மன்னுயிர் நிழற்று நிழலுமில்லை; வளிமிகின் வலியுமில்லை; வழுதி கொண்டி வேண்டுவனாயிற் கொள்கெனக் கொடுத்த மன்னர் நடுக்கற்றனரே அளியரோ அளியர வனளிழந் தோரே, ஒருபகல் வாழ்க்கைக் குலமருவோரே' என்பது பாடற் கருத்து. இங்கு ஒவ்வொரு தொடரும் முடியும் அமைப்பினால் பாடற் கருத்தோட்டம் எளிமையுடையதாக இருப்பினும் ஆர்வம் வளர்க்கப்பட்டு கருத்து இறுதிவரை விடு விக்கப்படாமல் ஒவ்வொரு தொடர் முடியும் போதும் ஒரு கருத்து விடுவிக்கப்படுவதனால் ஆர்வ நிலையை வளர்த்துச் செல்லுதல் என்னும் போக்கு இல்லாமல் படிப்போரின் கவனம் குறைகிறது. கருத்தோட்டத்தினிடையே ஆர்வநிலையற்ற இவ்வமைப்பிற்குக் காரணம் அவ்வப்போது முடியும் தொடரமைப்பே எனலாம்.

5. சில பாடல்கள் எளிமையான கருத்தோட்டத்தில் (வரிசை முறையில்) அமையும் போக்கு இன்றிச் சற்று மாறுபட்ட அமைப்புடைய பாடல்களாக விளங்குகின்றன. 'சிக்கலான கருத்தோட்டம்' என்று சொல்லுமளவிற்கு இவ்வமைப்பு இல்லை யாயினும் கருத்தோட்டத்தில் ஒரு எளிமையற்ற போக்கினை இப்பாடல்களில் காணமுடிகிறது. தொடரமைப்பே இவ்வகைக் கருத்தோட்டத்திற்கு ஒரு காரணமாக அமைகிறது. அகப்பாடல் 398-ல். தலைவி தலைவன் நாட்டிலிருந்து வரும் ஆற்றிடம் கூற்று நிகழ்த்துகிறாள். தலைவி இவ்வாறு புலந்து கொள்வாள் என்று ஆறு நினைத்து வருகிறது என்பது பாடலின் முதற் கருத்துப் புலப்பாட்டுப் பகுதி. தலைவனைப்பற்றி ஆற்றிடம் குறை கூறுதல் இரண்டாவது கருத்துப் புலப்பாட்டுப் பகுதி. ஆற்றைத் தன் தந்தையின் நாட்டில் தங்கிச் செல்லுமாறு வேண்டுதல் மூன்றாவது கருத்துப் புலப்பாட்டுப் பகுதி. இவ்வாறு மூன்று பகுதிகளாக அமையும் கருத்துப் புலப்பாட்டிற்கு இடையில் மெருகூட்டப்பட்ட பகுதிகளும் அமைகின்றன. தலைவி இவ்வாறு புலப்பாள் என்று ஆறு நினைத்தல் தலைவி கூற்றிலேயே அமைதல் கூற்று நிகழ்த்துவோரைப் புரிந்து கொள்ளச் சற்று

இடர்படுத்துகிறது. பாடல் முழுவதுமே தனி வாக்கியங்களாக இல்லாமல் அஞ்சி, போர்த்து. ஒடுங்கி, செலுத்தி என்று பல வினையெச்சங்கள் அடங்கிய கலவை வாக்கிய அமைப்பு முறையும் காணப்படுகிறது. இப்பாடலுக்கான தொடர்தெரிவே எளிமை யினின்று சற்றுமாறுபட்ட கருத்தோட்டத்தைத் தருகிறது.

3. சொல்லாட்சி:

சில கவிதைகளில் அசைச் சொற்களைக் கையாளுதல் கருத்-தோட்டத்திற்குத் தடையாக அமைந்து வருகிறது. அகம் பாடல் 176 இல், பரத்தையைப் பற்றிக் கூறும் பகுதிக்கும், கூற்று நிகழ்த்துவோர் கூறும் தனது நிலைக்கும் இடையே 'போலும்' என்ற அசைச்சொல் வருதல் பாடலில் கருத்தினை எளிதில் விளங்கிக் கொள்ளத் தடையாகிறது- 2. பாடல் 138-இல் வேலன் வெறியாடியது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆடினார் என்பதற்கு எழுவாய் இல்லை. குறிப்பிட்ட சொல் இல்லாத இவ்வமைப்பு காரணமாக கருத்துத் தொடர்ச்சியில் குறைபாடு நேரிடுகிறது. 3. பாடல் 11-இல், 'கழிந்தனராயின்' என்ற சொல்லின் விளைவாக தலைவன் பிரிவு நிகழ்ந்து விட்டதா இல்லையா என்பது அய்யமாகவே உள்ளது. பிரியும் முன் நிகழும் பாடலைப் போலக் கருத்து தோற்றமளிக்கிறது. பிரிந்தபின் கூற்று நிகழ்த்தும் பாடல் எனத் தோன்றுவதில்லை. சொல் பொருளைத் தெளிவாக உணர்த்தாமை (கருத்துத் தெளிவின்மை) கூறுவோரது கருத்தைத் தெளிவாக தெரிவிப் பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

2. புதுக்கவிதையில் கருத்தோட்டம்

புதுக்கவிதையின் கருத்தோட்டத்தினைக் கணிப்பதற்கு மு. மேத்தாவின் 'அவர்கள் வருகிறார்கள்' என்ற ஒரு கவிதை மட்டும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இக்கவிதை வேலையில்லாப் பட்டதாரிகளின் நிலையைச் சித்தரிக்கிறது. இக்கவிதையின் தொடக்கத்தில் வேலையில்லா பட்டதாரிகளின் இயல்பு, நிலை இரண்டும் மாறி மாறி கூறப்பட பாடல் தொடங்குகிறது. அதைத் தொடர்ந்து அவர்களது நிலை வெவ்வேறு வகையாகக் கூறப்படுகிறது. இறுதியில் எதிர்

காலத்தில் அவர்கள் இயல்பு எவ்வாறு மாறும் என்று கூறப்பட பாடல் முடிகிறது. இக்கருத்தின் வளர்ச்சி கவிதையில் பின்வரும் கூறுகளால் அமைகிறது.

1. கூற வரும் கருத்திற்கு அழுத்தம் கொடுத்தல்
2. சில கூறுகளைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தல்
3. சில குறிப்பிட்ட சொற்களைப் பயன்படுத்தி கருத்தை விளக்குதல்

1. வேலை இல்லாப் பட்டதாரி இளைஞர்களின் நிலையைக் கூறி அவர்கள் புரட்சி செய்யும் நாள் தூரத்தில் இல்லை என்று கூறுவதே இக்கவிதையில் ஆசிரியரின் நோக்கம். 2) வேலை இல்லாப் பட்டதாரி இளைஞர்களின் பள்ளிப் பருவ நிலையும் தற்போதைய முரண்பட்ட நிலையும் 3) சமுதாயத்தில் இப்போது அவர்கள் புழுவைப்போல் நெகிழ்தல் 4) இப்போதைய நம்பிக்கையற்ற தோற்றமும் அவர்களது இருண்ட வாழ்வும் 5) பிறர் பார்வையில் அவர்கள் தூசியாகப் படுதலும் அந்த நேரத்தில் அவர்களின் உணர்வும். 6) அவர்களது வேதனை 7) அவர்கள் மிகச்சொற்ப வேலை மட்டுமே கேட்டு நிற்றல், 8) வேலை இல்லா பட்டதாரி இளைஞர்களின் துக்கத்தில் இந்தியா பங்கு கொள்ளாமை, 9) தேர்தல் காலத்தில் வாக்காளர் பட்டியலில் இருப்பதால் அக்காலத்தில் மட்டுமே அவர்கள் வாழ்தல், 10) இந்தியாவில் 'வேலை காலி இல்லை' என்ற வாசகம் அதிகமாகக் காணப்படல், 11) இப்பட்டதாரிகள் அயராது வேலை தேடுதல், 12) அவர்கள் கலந்து கொண்ட நேர்முகப் பேட்டியின் எண்ணிக்கை, 13) வேலைக்காண நியமன ஆணையை எதிர்பார்த்து நிற்றல், 14) உழைக்கத் தயாராகவும் ஆனால் எங்கே உழைப்பது எனத் தெரியாமல் நிற்றல், 15) தம்வீட்டார் பார்வையில் அவர்கள் அந்நியர்களாதல், 16) தெரிந்தவர்கள் என்ன வேலை செய்கிறீர்கள் என்று கேட்டால் நெளிய வேண்டிய நிலை, 17) இரவு உறக்கம் வராத அவர்கள் நிலை, 18) வேலைக்குப் போகின்றவர்களுக்குச் சும்மா இருத்தலின் உள்ள சுகமும் இவர்களுக்குச் சும்மா இருத்தலில் உள்ள சோகமும், 19) படித்த கல்வி பயனற்ற நிலை

முதலிய வெவ்வேறு வகைகளில் வேலையில்லா இளைஞர்களின் வருத்தத்திற்குரிய நிலை என்ற ஒரேகருத்து மீண்டும் மீண்டும் இதே வரிசை முறையில் அடுத்தடுத்து கூறப்படும்போது கவிஞர் அக்கருத்திற்குக் கொடுக்கவரும் முக்கியத்துவம் வெளிப்படுவதால் அக்கருத்து மேலும் மேலும் அழுத்தம் பெறுகிறது.

புறப்பாடல்களில் மன்னது குறிப்பிட்ட இயல்பு மட்டுமே அடுத்தடுத்து கூறப்படும்போது கருத்தை இறுதிவரை வளர்த்துச் சென்று ஆர்வத்தை வளர்க்கும் முறை இன்மையால் அடுத்தடுத்து இதே மாதிரி கருத்துதான் தெரிவிக்கப்படும்' என்ற ஒரு எதிர்பார்ப்பை நல்கி ஆர்வத்தைக் குறைப்பதுபோல் இங்கும் அடுத்தடுத்து 'இதே கருத்துதான் கூறப்படும்' என்ற ஒரு எதிர்பார்ப்பைத் தந்து விடுவதால் ஆர்வம் குறைந்து விடுகிறது. இருப்பினும் வாசகர் மனதில் வேலையற்ற பட்டதாரி இளைஞர்களின் நிலை அடுத்தடுத்து எவ்வெவ் வகையில் கூறப்படப்போகிறது என்று எதிர்பார்ப்பை வேண்டுமானால் உருவாக்குகிறது எனலாம். இவ்விளைஞர்களின் நிலை பரிதாபத்திற்குரியது'' என்ற கருத்தே திரும்பத் திரும்ப கூறப்படும்போது ஒரு வகையில் அக்கருத்து அழுத்தம் பெற்று கவிஞரின் நோக்கம் நிறைவேறி காணப்படும் ஒரு அமைப்பாகும்.

2. இப் புதுக்கவிதையில் வேலையில்லாப் பட்டதாரி இளைஞர்களின் நிலையை விளக்கிக் காட்ட முயலும் கவிஞர் அக்கருத்தைத் திரும்பத் திரும்பக் கூறி அக்கருத்தை Content அழுத்தம் பெறச்செய்வதோடு கவிதையின் வடிவமைப்பில் form சில கூறுகளைத் திரும்பத் திரும்ப வரச் செய்வதன் மூலம் அக்கருத்தை வலியுறுத்துகிறார்.

1. 'தான்', இல்லை' முதலிய சொற்கள் திரும்பத் திரும்ப வரல்
2 உடன்பாட்டு வினைமுற்று திரும்பத் திரும்ப வரல்
3. கலவை வாக்கியத்தை திரும்பத்திரும்பப் பயன் படுத்துதல்

முதலியன இப்புது கவிதையின் வடிவத்தை நிர்ணயிக்கின்றன.

'தான் என்ற சொல் இக்கவிதையில் 12 இடங்களில் வந்து' இளைஞர்களின் பரிதாப நிலையைப் படிப்போனுக்கு உணர்த்தி அவர்கள் மீது ஒரு பரிதாப உணர்வை அவனுக்கு தோற்றுவிக்கிறது. கவிதையின் இறுதிப் பகுதியாக வேலையில்லாப் பட்டதாரிகள் புரட்சி செய்யும் நாள் தூரத்தில் இல்லை என்ற கருத்தைக் கூறும் நடையில் 'தான்' எனற சொல் அனுதாப உணர்வைத் தவிர்க்கும் நோக்கில் முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 'இதைத்தான் தாங்க முடியவில்லை, 'இன்னதைத்தான் கேட்கிறார்கள்' '(இருமுறை), 'இப்படி இருந்தவர்கள்' தான்', 'வேதனை இங்கு தான் இருக்கிறது'. 'இவர்கள் வாழ்வது இதில் மட்டும் தான்', 'இந்தியாவில் காணப்படுவது இவை மட்டும்தான்' 'இவைதான் அவர்கள் ஆலயங்கள்', 'இது தெரிகிறது', இவர்களுக்குத்தான் இப்படி இருப்பது சுகம், இது கூட இப்படித்தான் கருதப்படும்' என்ற பொருட்பட திரும்பத் திரும்ப 'தான்' என்ற சொல் கூறப்படுகிறது உடன்பாட்டுவினைமுற்றும் அவர்கள் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் 'இருக்கிறார்கள்' still life என்ற உணர்வைத் தோற்றுவிக்கிறது 'அவர்கள் இவ்வளவு பெரிய சலுகைகளைக் கேட்கவில்லை', இதைத்தான் கேட்கிறார்கள் என்ற கருத்தை தோற்றுவிக்க 'தான்' என்ற சொல்லைப் போலவே 'இல்லை' என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகிறது.

கவிதையின் வடிவத்தில் ஒவ்வொரு கருத்தையும் தனித்தனியே கூறுவதற்குக் கலவைவாக்கியம் பெரிதும் உதவுகிறது. அதுவே மீண்டும் மீண்டும் இடம் பெறுவது ஒரே மாதிரியான கவிதை ஓட்டத்தைப் படிப்போனின் மனதில் தோற்றுவிக்கிறது.

சான்று

பள்ளிகளிலும் கல்லூரியிலும்
புறாக்களைப்போலச்
சிறகடித்தவர்கள் தான்
சமுதாய வீதிகள்
இப்போது

புழுவைப் போல
நெளிந்து கொண்டிருக்கிறார்கள் (ப. 47)
பதவி என்கிற
சிம்மாசனங்களுக்காக
அவர்கள் சிரசாசனம் செய்யவில்லை
வேலை என்கிற
ஊன்றுகோல் கேட்டுத்தான்
ஓலமிடுகிறார்கள் (ப. 50)

3. சில எதிர்ச் சொற்களைப் பயன்படுத்தி கருத்தோட்டத்தின் சொல்லும் கருத்துக்கு வலு கொடுக்கும் முறையும் காணப்படுகிறது.

சான்று

தன்வீட்டுச் சாப்பாடு கூட
அவர்களை
தர்மச் சாப்பாடு போல்
சங்கடப்படுகிறது. (ப. 54)

என்ற வரிகளில் தன்வீட்டுச் சாப்பாடு தர்மச்சாப்பாடு என்ற முரண்பட்ட பொருளில் வந்து வேலை இல்லா பட்டதாரி இளைஞர்களின் நிலை என்ற கருத்தை மேலும் வலுப்பெறச் செய்கிறது.

பொருளைப் புரியவைக்க ஒரே சொல்லை இருமுறை பயன்படுத்தும் முறையும் காணப்படுகிறது.

வேலைக்குப்
போய்க் கொண்டிருப்பவர்களுக்குத் தான்
சும்மா இருப்பதே
சுகம்
வேலை யில்லாமல்
தவிப்பவர்களுக்கோ
சும்மா இருப்பதே
சோகம். (ப. 55)

என்று 'சும்மா' என்ற சொல்லை இரு வேறு சூழல்களுக்குப் பொருத்திக் காட்டிக் கவிஞர் கூறவரும் கருத்தை வலுப் பெறச் செய்யும் முறையும் காணப்படுகிறது.

3. சிறுகதையில் கருத்தோட்டம்:

சிறுகதையில் காணப்படும் கருத்தோட்டத்தினைக் கவனிப்பதற்கு ஜெயகாந்தனின் 'ஒரு பிடி சோறு' என்ற சிறுகதையை இங்கே காண்போம். "கவிதையல்லாத உரைநடை இலக்கியங்களில் உணர்ச்சி மொழி கையாளப்படுகிறது; ஆனால் பொதுவாக நல்ல இலக்கியம் என்பது குறிப்பு மொழியை கையாள்வது என்று கருதப்படுகிறது" [41] என்பர். உணர்ச்சி மொழியாக இருப்பதால் கவிதை மொழியிலிருந்து வேறுபட்டு அப்படியே பேச்சு மொழியில் உள்ளபடியே பாத்திரங்கள் பேசுவதாக எழுதும் முறை புனைகதையில் காணப்படுகிறது.

சேரிப்பகுதியில் வாழும் ராசாத்தி என்ற பெண் தன் ஒரே மகனுடன் கணவன் இல்லாமல் தனித்து வாழும் பெண். வேலைக் கிடைக்கும்போது வேலையும் வேலை கிடைக்காத சமயத்தில் வறுமைச் சூழல் காரணமாக விபச்சாரத்தையும் தொழிலாகக் கொண்டு வாழ்பவர்கள் அச் சேரிமக்கள். இவள் மகன் சிறுவன். அவன் பக்கத்து வீட்டு மாரியாயி தன் கணவனுக்கென்று வைத்திருந்த சோற்றினைத் திருடித் தின்றுவிட அது தெரிந்து ராசாத்தி அவனை அடிக்க மாரியாயிக்கும் ராசாத்திக்கும் வாய்ச்சண்டை வலுப்பெற மகன் ஓடி விடுகிறான். சிறிது நேரம் கழித்து மூன்று நாளாய்ச் சாப்பிடாததன் காரணமாக வயிற்று வலியினால் ராசாத்தி துடிக்க வேலைக்கு அவசரமாகச் செல்லும் மாரியாயி அரிசி கொடுத்து கஞ்சி காய்ச்சிக் குடிக்கச் சொல்லிக் கொடுத்து விட்டுப் போக மிகுந்த சிரமத்திற்கிடையில் ராசாத்தி கஞ்சியைக் காய்ச்சி முடித்து குடிக்கப் போகும் நேரத்தில் மகன் வந்து தனக்குத் தருமாறு பிடுங்கி கஞ்சி கொட்டிவிட அவன் அதை ஒரு கை அள்ளிக் கொண்டு ஓடிவிடுகிறான். அப்போது வயிற்றுவலி அதிகமாகி உயிரற்ற குழந்தையைப் பிரசவித்து இறக்கும் தறுவாய்க்கு வந்து விடுகிறாள் ராசாத்தி. தன் மகனை ஒருபிடி சோற்றுக்கு அடித்துவிட்டோமே என்று வருந்தி

இறக்கிறாள் ராசாத்தி. தன் தாய் இறந்து விட்டதைக் கண்ட சிறுவன் அதே நாளில் தன் தாயை நினைத்து தனியே வருந்திக் கொண்டிருக்கும் போது பக்கத்து வீட்டு மாரியாயி சாப்பிடச் சொல்லி சோறு தர ஒருபிடி சோற்றைப் பார்த்து தாயை நினைத்து அடைத்துவைத்திருந்த துக்கம் பீறிட வாய்விட்டழுகிறான். இதுவே கதை.

இக் கதையோட்டத்திற்கு ஜெயகாந்தனின் நடையில் காணப்படும் பின்வரும் கூறுகள் சிறப்புச் செய்கின்றன.

1. விவரிப்பு நடை மூலம் செயல்களையும் உரையாடல் களையும் விவரித்தல்
2. வினா விடை முறையில் (விவரிப்பு நடையினூடே) பல கருத்துக்களைக் கூறிச் செல்லல்.

'ஒரு குறிப்பிட்ட பின்னனி அல்லது நிகழ்ச்சியைச் சித்தரிக்க விளக்க நடை பயன்படுகிறது;............விவரிப்பு நடை தொடர் நிகழ்ச்சியைச் சித்திரிக்கப் பயன்படுகிறது'' [51] என்பார் ஜெ. நீதிவாணன், இக்கதையின் ஆரம்பத்தில் மண்ணாங்கட்டி என்ற சிறுவனை விவரிப்பு நடையில் அறிமுகப்படுத்தும் ஆசிரியர் தொடர்ந்து

> ''இப்பொழுது மண்ணாங்கட்டிக்கு ஏகக்குஷி ஏன் தெரியுமா? அடுத்த அடுப்பிலிருந்து சோற்றைத் திருடித் தின்ற எக்களிப்புதான்!''

என்று இதே போன்ற வினாவிடையுடன் கூடிய விவரிப்பு நடையில் கொண்டு செல்கிறார். வாசகனின் மனதில் தோன்றும் அய்யங்களைக் கேள்வியாக உருவாக்கி ஆர்வத்தை வளர்த்து அதற்கு ஆசிரியரே பதிலையும் சொல்லிச் செல்லும்போது மெல்ல கருத்து வளர்ச்சி பெறுகிறது. தொடர்ச்சியாக பல வினாக்களும் விடையும் வர வர பாத்திரத்தின் இயல்பு, நிலை குறித்து கருத்து வளர்ச்சியடைகிறது. மாரியாயி, ராசாத்தி இருவரின் வாக்குவாதம் விவரிப்பு நடையில் கூறப்பட அப்பாத்திரங்களின் வாழ்க்கையினை எப்படிப்பட்டது என்ற கருத்து விடுபடுகிறது. அடுத்து இவர்கள் வாழ்க்கைக்கும் கூ

வேலைக்கும் விபச்சாரத்திற்கும் உள்ள தொடர்பு ஆசிரியர் கூற்றாகக் குறுக்கிட மீண்டும் அதே விவரிப்பு நடையில் ராசாத்தியின் வயிற்றுவலி கூறப்பட மாரியாயி உதவுதல் காட்டப்படுகிறது. தன்னிடம் இருக்கும் அரிசியைக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கமுடியாத நிலையை லாரி நிறைய வெறவு வந்து நிற்பதையும் தான் சம்பாதிக்கப் போக வேண்டிய கட்டாயத்தையும் மாரியாயி கூறி,

"அரிசி இருக்கா? என்று தலையை நிமிர்த்தி எழுந்து
உட்கார்ந்து கொண்டாள் ராசாத்தி
"இருக்கு... ஒன்னால கஞ்சி காச்சிக்க முடியுமா?
ஓ! அதெல்லாம் முடியும்...... சீக்கிரம் கொண்டா!"

என்று வினா விடையுடன் கூடிய விவரிப்பு நடை தொடர்கிறது. இத்தகைய வினாவிடை அமைப்பில் காணப்படும் செய்தி விடுவிப்பும் விவரிப்பு நடையில் காணப்படும் பாத்திர உணர்ச்சி வேகமும் கதை வளர்ச்சியும் பாத்திர இயல்பையும் ஒரே நேரத்தில் வெளிப்படுத்தி கருத்தோட்டத்திற்கு வழி செய்கிறது. அரிசி இருக்கா? என்ற அவளது கேள்வியில் வேகமே (குறைந்த சொற்களில் கருத்து வெளிப்பாடு 'வறுமை' என்ற கருவை ஆழமாகப் புலப்படுத்தி வருவதால் கருத்தோட்டம் மேலும் சிறப்புறுகிறது. அவள் வாங்கினாளா என்ற ஆர்வத்தைப் படிப்போலின் மனதில் தூண்டி மேலும் வாசிக்கச் செய்கிறது. ஜெயகாந்தனின் இக்கதையில் விவரிப்புநடை செயலை விவரித்து பாத்திரங்களின் இயல்பை விளக்கிக் கதையை வளர்த்துச் செல்கிறது. கருத்துக்கள் ஒன்றன்பின் ஒன்றாக மெல்ல மெல்ல விடுபடுகின்றன.

4. நாவலில் கருத்தோட்டம்

நாவலின் கருத்தோட்டத்தைக் கணிப்பதற்கு இராஜம் கிருஷ்ணனின் 'புதிய சிறகுகள்' என்ற நாவல் இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

கணவன் வேறொரு பெண்ணை மனந்து கொண்டதன் விளைவாகத் தனித்து நின்று தன் ஒரே மகனை வளர்த்த

அபிராமி டீச்சர் தன் மகனை அளவுக்கு மீறி நம்பியதால் அவனிடம் தீயகுணங்கள் வளர்ந்து கொண்டிருப்பதை ஆரம்ப காலத்தில் அறியாமல் போய் விடுகிறாள். பின்னர் அறிய வரும்போது அதிர்ந்து போய் அவனுக்குத் திருமணம் செய்து வைக்க அப்பொழுதும் அவன் திருந்தாமல் போகவே வருந்துகிறாள் மகனை மணந்த சுஜா என்ற தன் மருமகள் அப்பிரச்சனையைத் தன்னைப்போல் அணுகி மேலும் மேலும் வருந்திக் கொண்டிருக்காமல் அறிவுடனும் விவேகத்துடனும் அணுகி அவனை விட்டு விலகி தன் ஒரே மகளுடன் அதன் விளைவான சமுதாயப் பிரச்சனைகளைத் துணிந்து எதிர்த்து நிற்கும் முறைகண்டு வியக்கிறாள். தன் மகனின் சற்றும் மாற்றிக் கொள்ளவே முயலாத தன்மைகளையும் தன் மருமகளின் அன்பையும் கண்டு தானும் தன் மருமகளைப் போலவே மகனைச் சார்ந்து நிற்கும் கொள்கையினின்று விலகுகிறாள். இதுவே கதை.

1. இந்நாவலின் தொடக்கத்தில் குறிப்பு, ஆர்வநிலை உத்தி என்ற இரண்டு உத்திகள் கையாளப்பட படிபோனின் கவனம் கதைக்குள் ஈர்க்கப் படுகிறது. கோவிலில் சாமி கும்பிடவரும் அபிராமி டீச்சர் பூஜை முடிந்ததும் குருக்கள் அம்மனின் அலங்கார ஆபரணங்களை வில்லைச் சேவகரிடம் ஒப்படைக்கும் நோக்கில் இயந்திர வேகத்தில் கழற்ற அம்மனின் திருமாங்கல்யமும் அதே வேகத்தில் கழற்றப்படுவதைக் கண்டு அதிர்வது முன் குறிப்பாக அமைகிறது. கோவிலில் அவளைச் சந்திக்கும் இருவர் மூலம் அவளது நிலை ஓரளவு விளக்கப் படுகிறது. அவளது பிள்ளை பற்றிக் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சட்டென்று அவளது பதில்களும் அதைத் தவிர்த்து அவள் நடத்தலும் 'ஏன்' என்று படிப்போன் மனதில் ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைகிறது.

2. மகனை வளர்த்தல், அவன் கெட்டுப்போதல், அவனுக்குப் பெண்பார்த்தல், திருமணம் நடத்தல், திருமணமாகி இரண்டு வருடமாகியும் அவன் மேலும் திருந்தாமல் இருத்தல், அபிராமி கோவிலுக்கு வரல் என்ற வரிசை முறையில்

(linear structure) கதையைக் கொண்டு செல்லாமல் ஆரம்ப இயலில் மட்டும் கோவிலில் நின்று கொண்டு மன ஓட்டத்தில் முன்னர் நடந்ததை நினைத்துப் பார்ப்பதாகக்காட்டும் நிரையல் வைப்பு முறை (Non linear structure) கதையின் ஓட்டத்தில் ஒரு வித ஆர்வத்தை தூண்டும் உத்தியாகப் பயன்படுகிறது. ஆசிரியரின் கதை சொல்லும் முறைத் தெரிவையே இது காட்டுகிறது.

3. ஆணைச் சார்ந்து பெண் வாழ்தல் தவிர்க்கப்படுதல் ஆணுக்கும் பெண்ணுக்கும் குடும்ப வாழ்க்கையில் சம உரிமைகளை அளிக்கும் என்ற கருத்தைக் கூறவரும் ஆசிரியர் பல்வேறு துணைக்கருத்துக்களை விளக்க முற்படுகிறார். அத்துணைக் கருத்துக்கள் படத்தில் சிறு கோடுகளுக்கிடையில் காட்டப்பட்டுள்ளன. இத்துணைக் கருத்துக்கள் கதையில் திரும்பத் திரும்ப இடம் பெறுகின்றன. எனவே, இத்துணைக் கருத்துக்களைச் சித்திரிக்கும் சம்பவங்கள் பலவும் மீண்டும் மீண்டும் காட்டப்படுகின்றன.

புள்ளிக் கோடுகளுக்கிடையே காட்டப்பட்டுள்ள துணைக் கருத்துக்களை விளக்க பல சம்பவங்கள் மீண்டும் மீண்டும் காட்டப்பட அவ்வப் பாத்திரங்களின் இயல்பு; செயல்களும், பாத்திர இயல்பில் மாற்றம் ஏற்பட்டு அதனால் அவர்கள் அனுபவ முதிர்ச்சி அடைதலும் காட்டப்பட கதை நிறைவு பெறுகிறது. சான்றாக அபிராமி டீச்சர் மகன் மீது அன்பு வைக்கும் செயல்களும், அவன் ஒன்றுக்கும் மசியாமல் மீண்டும் மீண்டும் மோசமான செயல்களையே செய்வதும் முதற் பகுதியிலும் இரண்டாம் பகுதியிலும் திரும்பத் திரும்ப இடம் பெறும் சம்பவங்களாக அமைகின்றன. இவ்வாறு சம்பவங்கள் மீண்டும் மீண்டும் இடம் பெறுதல் கதையோட்டத்தில் எவ்வித சலிப்பையும் தராமல் ஆசிரியர் கூறவரும் கருத்திற்கு அழுத்தம் தந்து அக்கருத்தை மேலும் வலியுறுத்துகிறது எனலாம்.

கதை

முதற்பகுதி	இரண்டாம் பகுதி	மூன்றாம்பகுதி
(தன் மகன் மீது அதிக நம்பிக்கை வைத்தல், அவன் குணம் கெடுதல்)	(திருமணத்திற்கு பின்னரும் திருந்தாமல் மேலும் மேலும் மகன் மோசமடைதல், மருமகள் அவனைவிட்டு விலகுதல்)	(தன் மகனின் குணத்தையும் மருமகளின் குணத்தையும் ஒப்பிட்டு தன் மகனை விட்டு விலகுதல்)
1. புருஷன் துணை இல்லாமல் ஆண் பிள்ளையைத் தாய் மட்டும் வளர்த்தல் அவனை மோசமான குணமுள்ளவனாக்குகிறது என்பது சமுதாயத்தினரின் எண்ணம்.	5. சமுதாயத்தினர் எதற்கும் ஆணைக் குற்றம் சாட்டாமல் பெண்ணையே குற்றம் சாட்டுகின்றனர்.	7. கலாச்சாரம் சிறக்க துணை நிற்பது பெண் மட்டும் தான் என்று சமுதாயத்தினர் கூறுவது பொருந்தாது.
2. பெண்ணுக்குக் கல்வியறிவு மட்டும் போதாது; உலகியல் அறிவும் தேவை.	6. கணவனைத் திருத்துகிறேன் என்ற பெயரில் சாகும்வரை திருந்தவே முயலாத இயல்புடைய ஆடவனைத் திருத்த முயற்சித்து நொந்து அழுவதை தவிட அவனை விட்டு விலகி அதன் விளைவான சமுதாய பிரச்சனைகளைத் துணிச்சலுடன் எதிர்நோக்குவது இளைய தலைமுறையினரின் அணுகுமுறை.	
3. தெய்வத்தின் செயலால் நடக்கின்றன திருமணங்கள் என்பதெல்லாம் திருமண வாழ்வு தோல்வியடையும் போது சற்றும் பொருந்துவதாய் இல்லை.		
4. எந்தவித பிரச்சனைகளையும் உரக்கச் சப்தம் போட்டு வெளிப்படுத்திப் (பிறருக்குக் கேட்டாலும் பரவாயில்லை என) பேசித் திருத்த முடியாத போலி கௌரவம் நடுத்தர வர்க்கத்தினரிடையே தடையாக அமைகிறது. இதன் விளைவாக முந்திய தலை முறையினர் பலர் மகனைத் திருத்தத் தவறிவிடுகின்றனர்.		

4. ஆசிரியரின் சமுதாயக் கண்ணோட்டம் பற்றிய கருத்துகளும் கதையில் இடம்பெறும் எதிர்நிலை பாத்திரத்தின் இயல்பும், மருமகளாக இருந்து தன் எண்ணத்தில் மகளாக மாறும் மருமகள் இயல்பும் கதையின் மையப் பாத்திரமாகிய அபிராமி டீச்சரின் எண்ண ஓட்டத்தில் இடையிடையே அமைகின்றன. அபிராமி டீச்சரின் எண்ண ஓட்டத்தில் பின்னோக்கு உத்தியில் அமையும் நிகழ்ச்சிகளும் விவரிப்பு நடையில் அமைகின்றன. விளக்கநடை மிகச் சில இடங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு கதையின் கருத்திலேயே அதிகம் கவனம் செலுத்தி தலைமைப் பாத்திரமாகிய அபிராமி டீச்சரின் மன உணர்வினையும் அவள் வாழ்வில் நடக்கும் பிற சம்பவங்களையும் பிற பாத்திரங்களின் இயல்புகளையும் வரிசையாகக் கலந்து கலந்து வெளிப்படுத்திக்கொண்டே செல்லும் விவரிப்பு நடையே இந்நாவலில் அதிகம் கையாளப் பட்டுள்ளது. எண்ண ஓட்டம் இடை இடையே கலந்து வரும் விவரிப்பு நடை கதையை வளர்த்துச் செல்லுகிறது.

5. தகுந்த இடத்தில் தகுந்த சொற்களைப் பயன்படுத்துதல் கவிதையில் மட்டுமல்லால் உரைநரை இலக்கியத்திலும் பயன் படுத்தப்பட்டு பொருளைப் புரிய வைத்து கருத்தோட்டத்திற்கு வழி வகுக்கம் முறை இந்நாவலின் காணப்படுகிறது. சான்றாக 'போக்கிரி அரச குமாரனாக' சுத்தமா தொடச்சிட்டேன், நாம அனாவசியமா சகிச்சதை என்பவை முறையே அபிராமி டீச்சரின் மகன் இயல்பு, மருமகள் தன் கணவனை மறந்து விட்டதை குறிப்பிடுதல், அபிராமி டீச்சர் தன் தலைமுறையினர் தேவையில்லாமல் பொறுத்துக் கொண்ட செயல் முதலியவற்றைக் குறிக்க இடம் பெறுகின்றன. இதோபோல் ஆங்காங்கு பொருத்தமான தொடர்களும் பொருளைப் புரிய வைக்கின்றன.

6. முந்திய தலைமுறை, இந்தத் தலைமுறை இரண்டும் ஒரே பிரச்சனையை அணுகும் முறை அபிராமியின் மன ஓட்டத்திலும் அபிராமியின் மகன் தன் தாயிடம் தன் மனைவியைப் பற்றிக் குறை கூறுமிடத்திலும் தன் அணுகுமுறை

குறித்து விளக்கும் மருமகள் கூற்றிலும் கூறப்படுகிறது. இத்தகைய அமைப்பு அட்டவணை போட்டுக் காட்டுவது போல இருகால வேறுபாடுகளையும் விளக்கிக் காட்டி பேசும் பாத்திரத்தின் மன இயல்பை விளக்குவதோடு கருத்தையும் வலியுறுத்தி விளக்குகிறது. ஏற்கனவே நாவலில் கூறப்பட்ட ஒன்றை மீண்டும் தொகுத்து காட்டுவது போல இவ் ஒப்பீட்டுநடை அமைகிறது எனலாம்.

முடிவுகள்

1. சங்க இலக்கியத்தில் சொல்லும்முறை, சொல்லாட்சி, தொடரமைப்பு முதலியன கருத்தோட்டத்தில் எளிமையான கருத்தோட்டம் எளிமையான கருத்தோட்டத்தினின்று சற்று மாறுபட்ட அமைப்பு என்ற இருவகைக் கருத்தோட்டத்தினைத் தருகிறது. ஒரே கருத்தை இறுதிவரை வளர்த்துச் செல்லுதல். அகப்பாடல்களிலும் அவ்வப்போது ஒவ்வொரு தொடர் மூலமாக ஒவ்வொரு கருத்தையும் சொல்லுதல் புறப்பாடல்களிலும் காணப்படுகிறது.

2. புதுக்கவிதையில் ஒரே கருத்தை வெவ்வேறு வகைகளில் மீண்டும் மீண்டும் தரல் கருத்தோட்டத்தில் இன்ன கருத்துதான் அடுத்தடுத்து தரப்படும் என்ற எதிர்பார்ப்பைப் படிப்போனுக்குத் தந்து விடுதல் பொதுவாகக் காணப்படுகிறது. கவிதையின் இறுதியில் ஏற்கனவே கூறிவந்த கருத்து தொடர்பான வேறு ஒரு கருத்து கூறப்பட பாடல் முடிகிறது. இது கருத்தோட்டத்தில் கருத்துவளர்ச்சியாக அமைகிறது. சில குறிப்பிட்ட சொல், தொடர்களைப் பயன்படுத்துதல், சில குறிப்பிட்ட சொற்களைப் பயன்படுத்தி கருத்தை விளக்குதல் முதலியன இம்முறைக்கு உதவுகின்றன.

3. விவரிப்பு நடை மூலம் செயல்களையும் உரையாடல் களையும் விவரித்தல் சிறுகதையில் கருத்தோட்டத்திற்கு உதவுகிறது. வினா-விடை முறையை அடிக்கடி விவரிப்பு நடையினூடே கையாளுதல் ஆசிரியரின் தனிப்பட்ட நடைக்

கூறுகளில் ஒன்றாக அமைகிறது. இது கருத்தோட்டத்தில் பாத்திரங்களின் நிலையும் இயல்பையும் சுட்டுவதாக அமைகிறது.

4. புதினத்தில் ஆரம்பத்தில் முன்குறிப்பு கதையின் கருத்தை ஓரளவு அறிவிக்கிறது. கதை வரிசையின் முறையில் வைப்புமுறை ஆர்வநிலை உத்தியாக அமைகிறது. ஒரு கருத்து பல்வேறு துணைக்கருத்துக்கள் திரும்பத் திரும்ப கையாளப் படுவதன் மூலம் அத்துணைக்கருத்துக்கள் தொடர்பான சம்பவங்கள் மூலமும் சித்திரிக்கப்படுகின்றன. இவ்வகை நடை கூறவரும் கருத்தை அழுத்தம் பெறச் செய்கிறது. பாத்திரத்தின் எண்ண ஓட்டம் பாத்திரத்தின் மன உணர்வை மட்டுமின்றி பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து கதை வளர்ச்சிக்கு உதவுகிறது. தகுந்த சொற்கள், தொடர்கள் முதலியவற்றைத் தகுந்த இடத்தில் கையாளுதலும் கருத்தோட்டத்தில் கருத்தினைச் சரியாகப் புரியவைக்க உதவுகின்றன. ஏற்கனவே கூறியதற்கு மேலும் ஒரு விளக்கமாகவும் தொகுப்பு போலவும் கூற ஒப்பீட்டு நடை உதவுகிறது.

5. கவிதையில் சிறியவடிவத்தில் கருத்து தெரிவிக்கப் படுவதால் கவிதையில் கருத்து இடம்பெறும் இடத்தால் கருத்தோட்டம் நிர்ணயிக்கப்படுகிறது. புனைகதை இலக்கியத்தில் அதைவிட வடிவம் பெரிதாதலால் விவரிப்பு நடை மிகுதியும் பயன்படுகிறது. சிறுகதையை விட புதினத்தில் விரிவாக்கத்திற்கு அதிக இடமிருந்தாலும் விளக்கநடை சிறுபான்மையாகப் பட்டு விவரிப்பு நடையிலேயே எண்ண ஓட்டமும் சம்பவச் சித்திரிப்பும் அதிகமாகிக் கொள்ளப்படுகின்றன.

அடிக்குறிப்புகள்

1. பேராசிரியம், (1972) தொல்காப்பியம் பொருளதிகாரம், ப. 279

2. மேலது

3. Winifred nowottny, **The language poets use**, p.74

4. Lubomir Dolezel, **Literary Style: A Symposium**, p.95

5. Ridmard M. Eastman, **Style**, p.77

6. **Ibid**, p.4

7. T. Middleton murry, **The problem of style**, 9.7

8. Riffaterre, Scientific stylistics, David lodge, **Language of Fiction**.

9. J. Warburg, Appropriate choice, Dabid Lodge, Op. cit. p.61

10. Enkvist, linguistics and style, ஜெ. நீதிவாணன் நடையியல்

11. Illudson, "An Introduction to the stuby of Literature. கேரளப் பல்கலைக்கழகம் தமிழ்த்துறை மாணவர் மன்ற வெளியீடு

12. J. Warburg, oppropriate choice, David lodge,

13. Spitzer, The title Essay in linguistics and Literary History, Ibid, p.55

14. David Lodge, op. cct. p.37

15. ஜெ. நீதிவாணன் நடையியல், ப.68

வரலாற்றுமுறைத் தமிழ்ப் பேரகராதிக்குப் பின்புலப் பணிகள்

க. பாலசுப்பிரமணியன்
அண்ணாமலைநகர்

முன்னுரை

அகராதிகள் கால அடிப்படையில் ஒரு கால அகராதிகள் (Synchronic dictionaries) காலமுறை அகராதிகள் diahronic dictionaries) என இருவகைப்படும். ஒரு கால அகராதிகள் ஒரு மொழியின் வளர்ச்சி நிலைகளில் ஒன்றின் சொற்கோவையை விளக்குபவை ஒரு குறிபபிட்ட காலத்தின் மொழி நிலையை விளக்குபவை. ஒரு கால அகராதிகள் தற்கால (Contemporary) அகராதிகளாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை (Zgusta, 1971: 202) ஒரு மொழியின் இன்றைய நிலையையோ முந்தைய நிலைகளில் ஒன்றையோ விளக்குவன. சங்கத்தமிழ் அகராதியும் ஒருகால அகராதியே இடைக்காலத்தில் மொழியிய லாரால் நிறுவப்பட்ட ஒரு காலப்பகுதியில் வழங்கிய நூல்களுக்குத் தொடுக்கப்பட்ட அகராதியும் ஒரு கால அகராதியே. ஒரு கால அகராதிகள் அக்குறிப்பிட்ட கால நிலையில் ஒரு மொழியின் சொற்கோவையின் வடிவு, பொருள், அமைதி போன்ற செய்திகளை அவற்றின் முந்தைய நிலை பற்றிய கவலையின்றி விளக்குவன. சொற்கள் அவற்றின் வடிவு, இலக்கணப் பொருள் ஆகியவற்றில் அடைந்துள்ள மாற்றங்கள் பற்றி விளக்குவதில்லை. ஆனால் கால முறை அகராதிகள் சொற்களின் முந்தைய நிலை வளர்ச்சி, மாற்றம் இவை பற்றிப் பேசுபவை. கால முறை அகராதிகளும் இருவகைப்படும், சொற் பிறப்பியல் அகராதிகள் (etymological dictionaries) வரலாற்று அகராதிகள் (historical dictionaries) என் சொற் பிறப்பியல் அகராதிகளால் சொற்களின்

தோற்றம், வளர்ச்சி, மாற்றம் ஆகியவற்றை வரலாற்றுக் காலம் வரலாற்றுக்கு முந்திய காலம (Pre historic times) இரண்டையும் ஆய்ந்து விளக்குபவை. இவற்றிலும் இரண்டு வகை உண்டு. ஒரு மொழியின் சொற்களின் பிறப்பை மட்டும் ஆராய்பவை ஒருவகை. ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த இன மொழிகளை (Cognate languages) ஒப்பிட்டு ஆராயும் ஒப்பியல் அகாரதிகளும் (Comparative dictionaries) சொற் பிறப்பியல் அகராதிகள் என வழங்கப்படுகின்றன. பேராசிரியர்கள் பரோ எமனோவின் திராவிடச் சொற் பிறப்பியல் அகராதி (Dravidian Etmyological Dictionary) ஓர் ஒப்பியல் அகராதியே. வரலாற்று அகராதிகள் (historical dictionaries) ஒரு மொழியின் வரலாற்றுக் காலத்தில், அதாவது எழுத்துச் சான்றுகள் கிடைத்துள்ள காலப்பகுதியில் அம் மொழியின் சொற்கள் அடைந்துள்ள வடிவ, பொருள் மாற்றங் களைச் சான்றாதாரங்களுடன் விளக்குபவை. பன்னிரெண்டு பகுதிகளுடனும் பின்னிணைப்புடன் வந்துள்ள ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி (1884-1928-1993) வரலாற்று அகராதிக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். வரலாற்று அகராதி, வரலாற்று முறை அகராதி (dictionary, on historical principle) என்றும் கலைநிலை அகராதி (academic dictionary) என்றும் வழங்கப்படுகிறது. (ஒ. தோ. Merkin 1983)

வரலாற்று அகராதி நீண்ட எழுத்துச் சான்றமைந்த வரலாற்றினைக் கொண்ட ஒரு தேசிய மொழிக்குத் தொடுக்கப்படும் முழுமையான அகராதியாகும். இவ்வகராதியின் நோக்கம் ஒரு மொழியின் ஒவ்வொரு சொல்லையும் அதன் முதல் தோற்றத்திலிருந்து இன்றைய வழக்குவரை அடைந்துள்ள வளர்ச்சி மாற்றங்களை, இலக்கியங்கள் மற்றைய சான்றாதாரங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, கால முறைப்படித் தொடுக்கப்பட்ட மேற்கோள்களின் மூலம் விளக்குவதாகும். அவ்வாறு விளக்கும் பொழுது, அது

1. ஒவ்வொரு சொல்லும் வெவ்வேறு காலங்கள், வெவ்வேறு இடங்கள், வெவ்வேறு இலக்கியவகைகளில் வழங்கியமை

2. சொல்லின் பொருள், பயன்பாடு, வடிவம், எழுத்து முறை (spelling) ஆகியவற்றில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள்
3. சொல் வழங்கும் மரபுத்தொடர்கள் (idioms) வரன் முறைத் தொடர்கள் (habitual collocations)
4. சொல்லின் இனவழிப்பிறப்பு (comparative etymology) தனிமொழி ஆக்கம் (internal derivations)
5. அதன் சொல்லின், தொடரியல் இலக்கணக் கூறுகள்
6. அதன் நடையியல், புள்ளியியல் இயல்புகள்

ஆகியவற்றிற்குரிய சான்றுகளைத் தரும் (Merkin, 1983:123)' இதே கருத்தை ஜேம்சு மரே (Jamesmurray) ஆக்ஸ் போர்டு ஆங்கிலப் பேரகராதிக்கு (1848) எழுதிய முன்னுரையில் பின் வருமாறு விளக்குகிறார். இவ்வகராதியின் நோக்கம்(1) ஒவ்வொரு சொல்லைப்பற்றியும் அது எப்பொழுது, எப்படி, எவ்வடிவில், எப்பொருளில் ஆங்கிலச் சொல்லாயிற்று; என்று தொடங்கி அது வடிவிலும் பொருளிலும் அடைந்துள்ள மாற்றங்கள் யாவை; அச்சொல்லின் பயன்பாடுகளில் எவை காலப் போக்கில் வழக்கொழிந்தன, எவை இன்றளவும் நின்று நிலவுகின்றன; புதிய பயன்பாடுகள் எவ்வெவை தோன்றி உள்ளன; அவை எப்பொழுது தோன்றின என்பனவற்றைக் கூட்டுதல்; (2)இச்செய்திகளை ஒரு சொல்லின் மூதல் வழக்கில் இருந்து இன்றைய வழக்கு அல்லது காலத்தால் மிகப் பிந்திய வழக்கு வரை வரிசைப்படுத்தப்பட்ட மேற்கோள்கள் மூலம் விளக்குதல்; (3) ஒவ்வொரு சொல்லின் சொற்பிறப்பு வரலாற்றையும் விளக்குதல்''

மேலே காட்டப்பட்ட இவ்வகை நோக்கங்களை உட்கொண்ட வரலாற்று முறைத் தமிழ்ப் பேரகராதி தொடுக்கப் பின்புல ஆய்வுப் பணிகள் பல செய்யப்படவேண்டும். அப்பின்புலப் பணிகள் செய்யப்பட்ட பின் அத்தகு அகராதி தொடுக்கப் பெற்றாலே அவ்வகராதி சிறப்புற அமையும். இக்கட்டுரை

வரலாற்று அகராதியின் மேற்தரப்பட்ட பல்வகைக் கூறுகள் ஒவ்வொன்றிற்கும் தேவையான பின்புலப் பணிகள் அவற்றின் இன்றியமையாமை ஆகியவற்றை விளக்கும்.

1. சொற்களின் கால முறை வழக்கு

வரலாற்று முறை அகராதியின் முதன்மையான பணி ஒரு சொல் வெவ்வேறு காலங்களில் வழங்கியமையைச் சான்றாதாரங்களுடன் நிறுவுதல். இதனை நிறுவ இரண்டு பின்புலப் பணிகள் செய்யப்பட வேண்டும்: (1) சொற்கள் வழங்கிய பல்வகை எழுத்துச் சான்றுகள், கல்வெட்டுகள், இலக்கியங்கள், உரைகள் ஆகிய அனைத்திற்கும் சொல்லடைவுகள் தயாரித்தல் (2) இவ்வெழுத்துச் சான்றுகளின் காலத்தை அகச் சான்றுகள், புறச்சான்றுகளின் அடிப்படையில் உறுதி செய்து வரிசைப் படுத்துதல். இவ்விரு பணிகளும் தமிழுக்கு ஓரளவு நிறைவேற்றப் பட்டுள்ளன எனினும் முற்றிலுமாக நிறைவேற்றப்படவில்லை. அண்ணாமலை, கேரளப் பல்கலைக்கழகங்களின் முதுகலை, டாக்டர் பட்ட ஆய்வாளர்கள் சொல்லடைவுகள் பல தொடுத்துள்ளனர். அவற்றில் பெரும்பான்மையன நூல்வடிவு பெறவில்லை. நூல்வடிவில் வந்தவை பல குறையுடையனவாய் உள்ளன. சென்னை மரே ராஜம் அவர்களின் வரலாற்று முறை அகராதித்திட்டம் பதினான்காம் நூற்றாண்டு வரை உள்ள எழுத்துச் சான்றுகளுக்குக் கல்வெட்டுகள், உரை நூல்கள் உட்பட சொல்லடைவு தயாரித்துள்ளது. அது நன்கு பயன்படுத்தப் படவேண்டும். நூல்களின் கால ஆராயச்சியில் பேராசிரியர்கள் வையாபுரிப் பிள்ளை, கா. சுப்பிரமணியப் பிள்ளை, சோமசுந்தர பாரதியார் போன்றோர் இலக்கியங்களின் காலத்தை நிறுவ முயன்று பெரிதும் வெற்றி பெற்றுள்ளனர். எனினும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. இவ்வாய்வு சில காலமாகத் தேக்கமடைந்துள்ளது. இது மீண்டும் தொடரப் பெற்று அறிவியல் முறைப்படியான முடிவுகள் கண்டறியப்பட வேண்டும்.

2. சொற்களின் பொருள், பயன்பாடு ஆகியவற்றின் வரலாறு

சொற்கள் வெவ்வேறு காலங்களில் தந்த பொருள்களையும் அவற்றின் பயன்பாட்டு வேறுபாட்டையும் உறுதி செய்வதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும். பழைய நூல்களில் வழங்கும் சொற்களின் பொருள்களை அறிய இந்நூல்களுக்கு எழுதப்பட்ட உரைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வுரைகள், பெரும்பாலும் காலத்தால் மூலநூல்களுக்குப் பெரிதும் பிற்பட்டவையாதலால் பொருள்களைப் பிழை உணர வாய்ப்பு உண்டு. உரைநூல்கள் இன்றியமையாதவை எனினும் அவற்றை முற்றிலும் பின்பற்றாமல், அவற்றைத் துணையாக மட்டும் கொண்டு சொற்கள், மூலநூல்களில் வழங்கும் சூழல்களை நன்கு ஆராய்ந்து பொருள்களை உறுதி செய்ய வேண்டும். அதற்கு அச்சொற்கள் வழங்கும் தொடர்கள் அனைத்தும் ஒப்பு நோக்கப்பட வேண்டும். இப்பணியைச் செய்ய மேற்கூறப்பட்ட (1) சொல்லடைவுகளுடன் தொடரடைகளும் (concordances) தொகுக்கப்படவேண்டும். ஒரு காலப் பகுதி நூல்களில் ஒரு சொல் வழங்கும் தொடர்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டு, ஒப்புநோக்கப்பட்டு பொருள் உறுதி செய்யப்படவேண்டும். சொல் இன்று வழங்கும் பொருள் அடிப்படையில் பழம் பொருளை வரையறுக்கும் பிழை தவிர்க்கப்பட வேண்டும். பசுமை, பச்சை என்ற நிறப்பெயர்கள் இன்று ஆங்கிலச்சொல் greenக்கு இணையாக இலை போன்றவற்றின் நிறத்தைக் குறிக்கின்றன. மஞ்சள் ஆங்கில yellowக்கு இணையான. ஆனால் பழந்தமிழில் பசுமை பச்சை, மஞ்சள் ஆகிய இருநிறங்களையும் உட்கொண்டு வழங்கியது. பசும்பொன் பசுமஞ்சள், பைங்கால் நாரை போன்ற தொடர்கள் பாசிலை போன்ற தொடர்

1. சொற்களின் பொருள் மொழி முழுவதுமான ஒழுங்கமைவுக்கு (System) உரியது; பயன்பாடு அச்சொல் பல்வகைச் சூழல்களில் பிறசொற்களுடன் இணைந்து வழங்கும் பொழுது தோன்றும் வேறுபாடுகள், கட்டுப்பாடுகள் ஆகியவற்றைக் குறிக்கும்.

களுடன் இணைந்து வழங்கியமை இதனைக் காட்டும்பழந்தமிழில் காமம் என்ற சொல் உயரிய பொருளில் இன்றைய காதல் என்ற சொல்லுக்கு இணையாக வழங்கியது. காதல் அன்பு என்ற பொதுப்பொருளில் வழங்கியது. ''மலரிலும் மெல்லியது காமம்'' என்ற திருக்குறள் தொடரும் காதலன் என்ற சொல் யானைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டதும். இதனை விளக்கும். காமம். என்ற சொல்லுக்கு இன்று வழங்கும் 'முறையற்ற பாலுணர்வு' என்ற பொருளை திருக்குறள், தொல்காப்பியம் போன்றவற்றில் வழங்கும் சொற்களுக்குக் கொடுத்தல் பிழையானதாகும். இத்தகு பிழைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

சில சமயங்களில் ஒரு சொல்லின் பொருள் அது வழங்கும் சூழலால் மட்டும் உணர்ந்துகொள்ள முடியாமல் அச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ள நூல் முழுவதன் கருத்தையும் நன்கு ஆராய்வதன் மூலமே உணரத்தக்கதாக இருக்கும் எடுத்துக் காட்டாக செய்யுள் என்ற சொல்லுக்குத் தொல்காப்பியர் காலப் பொருளும், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை போன்ற நூல்கள் தோன்றிய பின் அது குறிக்கும் பிற்காலப் பொருளும் வேறுவேறானவை. தொல்காப்பியச் செய்யுள் எழுத்து, மாத்திரை, அசை, சீர், அடி போன்ற வடிவுறுப்புகளுடன் திணை, கைகோள், கேட்போர், களன், பயன் போன்ற பொருள் உறுப்புகளையும், வண்ணம், அழகு, விருந்து, இயைபு போன்ற வடிவும் பொருளும் குறிந்த உறுப்புகளையும் கொண்டு வருவது (தொல்-பொருள்-310)பிற்கால யாப்பு நூல்களால் குறிக்கப்படும் செய்யுள் எழுத்து, அடி, தொடை போன்ற வடிவுறுப்புகளையே அடிப்படையாகக் கொண்டது. எனவே தொல்காப்பியச் செய்யுள் பிற்காலச் செய்யுளின் பொருளிலிருந்து வேறுபட்டது. என்பது புலனாகும். தொல்காப்பியர் ''அடிவகை இல்லாத'' ஆறு செய்யுள்களில் ஒன்றாக உரையையும் கூறுவது (தொல்.

2. இன்றும் தெலுங்கு மொழியில் பச்ச என்ற சொல் பச்சையையும் மஞ்சளினையும் குறிக்க வழங்கப்படுகிறது. வேறுபாடு பசுபச்ச 'மஞ்சள்' ஆகுபச்ச 'இலைப்பச்சை' எனசுட்டப்படுகிறது.

பொருள்.466'467)இவ்வேறுபாட்டை உறுதி செய்கிறது எனவே, பாட்டைக் குறித்து, ஆங்கிலத்தின் poetry ,verse என்றசொற்களுடன்ஒப்பிடத்தக்க பிற்காலம் செய்யுள் வேறு;வழக்கிலிருந்து அதாவது பேச்சிலிருந்து வேறுபட்டு பாட்டும் உரையுமாய் அமைந்து செய்யப்பட்ட, இயற்றப்பட்ட கருத்தமைதியுடைய அனைத்தையும் குறித்து ஆங்கில (Composition) என்ற சொல்லுக்கு இணையான தொல்காப்பியச் செய்யுள் வேறு. இப் பொருள் தொல்காப்பியத்தில் செய்யுள் என்ற சொல்வழங்கும் தொடர்களை ஒப்புநோக்குவதால் மட்டும் அறிய இயலாதது தொல்காப்பியப் பொருளதிகாரச் செய்யுளியல் முழுவதையும் நன்கு படித்து வரலாற்று உணர்வுடன் உணர்ந்து கொள்வதன் மூலம் புலனாவது. இவ்வாறே சொல்லின் பயன்பாடுகளும் அவற்றின் வரையறைகளும் உறுதி செய்யப்படவேண்டும்.

3. சொற்களின் வடிவு, எழுத்து முறை (Spelling) வரலாறு

சொற்களின் வடிவு (form) எனக் குறிப்பிடப்படுவது அவற்றின் ஒலிவடிவம் அல்லது ஒலியின் வடிவம் ஆகும். எழுத்து முறை அது எழுத்து வடிவில் எழுதப்பட்ட முறை, தமிழ் ஒலி/ஒலியின் வடிவிற்கும் எழுத்து முறைக்கும் உள்ள வேறுபாடு ஆங்கிலம் போன்ற மொழிகளை நோக்கக் குறைவு என்றாலும் வேறுபாடுகள் உள்ளன. வல்லிறை இடையிரை இவற்றிற்கு இடையே வேறுபாடு பெரும்பாலான தமிழ்க்கிளை மொழிகள் இடையே மறைந்த பின்னும் எழுத்து முறை வேறுபாடு உள்ளது. b ,d, ḍ, g போன்ற ஒலிப்புடை வல்லொலிகள் (voiced stops) பல கிளை மொழிகளில் ஒலியன் நிலை எழுதிய பின்னும் எழுத்து முறை பெறவில்லை.[3] இத்தகு வேறுபாடுகள் பழைய எழுத்துச் சான்றுகளிலும் உள்ளன. மேலும் நமக்குக் கிடைத்திருக்கும் பழைய எழுத்துச் சான்றுகளில் கல்வெட்டுகள் தவிர மற்றைய ஏட்டுச்சுவடிகள், நூல்கள் இயற்றப்பட்ட காலத்திற்கு உரியவை அல்ல. மிகப் பிற்காலத்தவை. எனவே, அச்சுவடிகள் காட்டும்

3. பாவம் (bavam) என்ற சொல்லை முதலெழுத்து வடிவில் பெரியதாக அச்சிடும் முறை இங்கு உட்கொள்ளத் தக்கது.

வடிவங்கள்கள் பழந்தமிழ் நூல்கள் எழுதப்பட்ட காலத்தின் எழுத்து முறையைக் காட்டாமல் ஏடுகள் எழுதப்பட்ட பிற்கால எழுத்து முறையையே காட்டுவன. இதற்கு மேல், ஒரே நூலின் வெவ்வேறு ஏட்டுச் சுவடிப்படிகளுக்கிடையே காணப்படும் பாட வேறுபாடுகள் மேலும் தெளிவின்மையை உண்டாக்குகின்றன. இத்தகைய எழுத்துச் சான்றுகளை ஒப்புநோக்கி சொற்கள், இவை வழங்கிய காலத்தில் கொண்டிருந்த வடிவத்தைத் துணையாகக் கண்டறிவதற்குப் பல்வகை ஆய்வுகள் நிகழ்த்தப் பெறவேண்டும். அவ்வாய்வுகளின் அடிப்படையில் நூல்களுக்குச் சிறந்த பதிப்புகள் வெளிவர வேண்டும்.

இன்று நமக்கு கிடைத்திருக்கும் பழந் தமிழ் நூல்களின் சொல் வடிவங்கள், அவை தோன்றிய கால வடிவங்கள் அல்ல; மாறுபட்ட பிற்கால வடிவங்கள் என்பதை ஓர் எடுத்துக்காட்டு மூலம் அறியலாம்.

தொல்காப்பிய எழுத்ததிகாரம் மொழிமரபில் மொழியீற்றில் வரும் எழுத்துக்கள் ஆராயப்படும்பொழுது

"உ ஊகாரம் நவவொடு நவிலா"

(தொல்-எழுத்து-74)

என்ற நூற்பா வருகின்றது. இதன் நேர்பொருள், "உகர ஊகாரங்கள் நகரத்தோடும் வகரத்தோடும் இணைந்து மொழியீற்றில் வரமாட்டா" என்பதுதாகும், ஆனால், இவ்விதிக்கு மாறாக கதவு, துறவு, குவவு, புணர்வு போன்ற சொற்கள் வருவதை உணர்ந்த உரையாசிரியர் அவற்றை உரையில் அடக்கிக்காட்டுவர். இச்சொற்கள் மாத்திரமன்றி தொல்காப்பிய நூற்பாக்களிலேயே வுகர இறுதிச் சொற்கள் வருகின்றன.

"செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்"

—தொல்-சொல்-28.1

"கதழ்வும் துனைவும் விரைவின் பொருள்"

—தொல்-சொல்-309

"அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்"

—தொல்.சொல்.316

"கவவு அகத்திடுமே"

—தொல்.சொல்.351

"கவர்வு விருப்பாகும்"

—தொல்.சொல்.356

இந்நூற்பாக்களில் **செலவு, வரவு, கதழ்வு, துனைவு, விரைவு, அதிர்வு, கவவு, கவர்வு** போன்றச் சொற்கள். வுகர இறுதிச் சொற்கள். இவை மொழிமரபு விதிக்கு முரணாக வருவன[4]. மேலும், இவ்வகர உகர ஈற்றுச் சொற்கள் முற்றியலுகரமாக இருந்தும் குற்றியலுகர ஈற்று மொழிகள் போல உயிர் வரும் பொழுது கெட்டுப் புணர்கின்றன. (கவவு+அகத்திடும்-- கவவக திடும்; செலவு +இன் — செலவின்)இத்தகு உகரவிற்றுச் சொற்களை ஆராய்ந்த பேராசிரியர் ந. குமாரசாமிராஜா(1974) தன் "குற்றியலுகரமா முற்றியலுகரமா" என்ற கட்டுரையில் அவை குற்றியலுகர ஈற்றுச் சொற்கள் என நிறுவுகிறார் இவற்றையெல்லாம் உட்கொண்டு நோக்கும் பொழுது,மேல் வந்த வகரவுகர ஈற்றுச் சொற்கள் தொல்காப்பியர் காலத்தில் வகரவுகர ஈற்றுச் சொற்களாக இருந்திருக்க வேண்டும். இரண்டு உயிரெழுத்துக்களிடையே வரும் வகரம் வகரமாக மாறுவது பிற்கால ஒலிமாற்றம் பின் வந்த ஏடுபெயர்த்தெழுதுவோர் அவர் கால வழக்குபடி வகரத்தை வகரமாக மாற்றி எழுதின ராதல் வேண்டும். இவ்வாறு கொண்டால் தொல்காப்பியத்தில் வரும் சொற்கள் அவர் நூற்பாவிற்கு மாறாக வரா. இம்முடி பிற்குத் துணையாக தொல்காப்பியத்தின் இன்று கிடைத்துள்ள படிகளில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் வரும் வுகர ஈற்றுச் சொற்களும் வுகர ஈற்றுக் சொற்கள் சில

4. பி. சா. சுப்பிரமணியசாஸ்திரியார் தன் எழுத்ததிகாரக் குறிப்பில் இவற்றை அடக்கு வதற்காக மொழி மரபு நூற்பா விற்கு, 'உகரம் நகரத்தோடும், ஊகாரம் வகரத்தோடும்வரா" என நிரல் நிறையாகப் பொருள் கொள்வார்.

வுகர ஈற்றுடன் பாட வேறுபாடுகளைக் கொணடிருப்பதும் அமைகின்றன.

1. "உருவுருவாகி அகரமொழியிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவு திரிந்துயிர்த்தலும்
"உருபுருபாகி அகரமொடுயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருபுதிரிந்துயிர்த்தலும்
—தொல்.எழுத்து.17.2,3

2. உருவென மொழியினும்"
"உருபென மொழியினும்" —தொல்.சொல்.24.1

3. "கவர்வு விருப்பாகும்"
கவர்பு விருப்பாகும்" —தொல்.சொல்.356.

இவ்வடிப்படையில் செலவு, வரவு, கவவு போன்ற சொற்கள் செலபு, வரபு, கவபு போன்ற வடிவங்களையே தொல்காப்பியர் காலத்தில் கொண்டிருந்திருக்க வேண்டும் என முடிவு செய்ய வேண்டும்.

வல்லின நகரம் அடைப்பொலிகளான (stops) மற்ற வல்லெழுத்துக்களோடு சேர்க்கப்பட்டிருப்பதும், புணர்ச்சியில் அது அடையும் மாற்றங்களும் (ஆறு-ஆற்று) வரலாற்றுப் போக்கில் அது தகரமாக மாறுவதும் (காற்று-காத்து) அது ஆங்கில -t- ஐ ஒத்த நுனிநாவும் முன் அண்ணமும்(alovelarridge) இணையப் பிறக்கும் (ஒ. நோ. தொல்.எழுத்து.94)அடைப் பொலியாகப் பழந்தமிழில் வழங்கியிருக்க வேண்டும் என்பது தெளிவாகும். ஆனால் இன்றைய தமிழில் நகர ரகர வேறுபாடு காட்டப்பெறும் கன்னியாகுமரித் தமிழில் கூட அது வருடொலியாகவே (trill) ஒலிக்கப்படுகிறது. இவ்வடிப்படையில் அகராதிகளில் எழுத்துப்பெயர்க்கப்படும் பொழுது உரோமன் r என்ற குறியீடு கொடுக்கப்பட்டு எழுதப்படுகிறது. அவ்வாறு

5. கன்னியாகுமரி தென்விளவங் கோட்டுக் கிளை மொழியில் இன்னும் இரட்டித்த நகரம் அடைப்பொலியாக வழங்குகிறது.

எழுதப்படாமல் பழந்தமிழ் சொற்கள் அடைப்பொலிக்குரிய எழுத்தான t கொடுத்து அகராதிகளில் எழுதப்பட்டு அதன் பழைய ஒலியன் வடிவம் காட்டப் பெறல் வேண்டும். தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் (1965) தன் தமிழ்மொழி வரலாற்றில் அவ்வாறு எழுதுவதைக் காணலாம் வரலாற்றில் நிகழ்ந்துள்ள வடிவமாற்றங்களை உணர்ந்துகொள்ள எவ்வாறு எழுதுதல் இன்றியமையாததாகும். அகப்புறச் சான்றுகளின் மூலம் எக்காலத்தில் அடைப்பொலி றகரம் வருடொலியாக மாறிற்று என நிறுவி அதற்குப்பின் வரும் நூல்களில் வரும் றகரத்திற்கு r என்ற குறியீட்டைப் பயன்படுத்தல் வேண்டும்.

சொற்களின் வடிவு வரலாற்றை ஆராயும் பொழுது கருத்தில் கொள்ள வேண்டிய இன்னொன்று, தமிழ் பேச்சு மொழியும் எழுத்து மொழியும் வேறுபட்டு நிற்கும் இரட்டை வழக்கு (diglossia) உடைய மொழிகளில் ஒன்று என்பது தொல் காப்பியரும் வழக்கையும் செய்யுளையும் வேறுபடுத்தி செய்யுளுக்கே உரியவை என விதிகள் கூறுவதை நாம் அறிவோம் (தொல்.சொல்.192) செய்யுள் என்ற சொல் தொல்காப்பியர் காலத்தில் உரை நடையை உள்ளடக்கிறது என்பதை மேலே (2) பார்த்தோம். இவ்வடிப்படையில் வழக்கு என்பது பேச்சைக் குறித்ததாவும் செய்யுள் எழுத்து மொழியை முறையான நடையில் (formal style) இயற்றப்பட்டவற்றைக் குறித்ததாகவும் கொள்வது பொருத்தமாகும். தொல்காப்பியர் கூறும் உறழ்ச்சி விதிகள் பலவற்றிற்குப் பழந்தமிழ் இலக்கியச் சான்றுகள் இல்லாமை அவை வழக்கிற்கு மட்டும் உரியனவோ என எண்ண வைக்கின்றன. தொல்காப்பியர், லகரம் வல்லெழுத்தின் முன் அல்வழியில் இயல்பாயும், வல்லெழுத்தாய்த்திரியும் ஆய்தமாயும் வரும் எனக் கூறுகிறார் (தொல்.எழுத்து.368,369) ஆனால் சங்க இலக்கியங்களில் ஆய்தமாகத்திரியும் பஃறேர், பஃறுளி போன்ற வடிவங்கள் வருகின்றனவே தவிர இயல்பாயும் வல்லெழுத்தாய்த்திரிந்தும் வரும் வடிவங்கள் இல்லை. ஆனால், இவ்வாறு இலக்கணத்தில் கூறப்பட்ட வடிவங்களைத் தவிர மற்ற கால இலக்கியச் சொற்களுக்கு அக்கால வழக்கு வடிவங்களாகக் கண்டறியவாய்ப்பில்லை. இங்கு கல்வெட்டுக்

களில் வரும் கொடு, குடு போன்ற மாற்று வடிவங்கள் அக்கால வழக்கு வடிவங்களாக் கொள்ளலாம். இவை தவிர வழக்கு வடிவங்களை அறிய வேறு சான்றுகள் இல்லை.

4. மரபுத்தொடர்கள் வரன் முறைத்தொடர்கள்

மரபுத்தொடர்கள் (idiomatic phrase) தொடர்களின் முழுப் பொருளை உறுப்பாய் வரும் சொற்களின் பொருளிலிருந்து கண்டறிய இயலாத முற்றீர் 'கடல்' கையறுதல் 'வருந்துதல்' போன்றவை. வரன்முறைத் தொடர்கள் (habitual collcations) சொல்தேர், தொல்களிறு, பல்தேர், கல்லாக்கடுவன் போன்ற பொருள் விளங்கினும் பெரும்பாலும் இணைந்தே வழங்கும் தொடர்கள் தொடர் அடைவுகளை நன்கு ஆராய்ந்து காலந் தோறும் வரும் இவ்விருவகைத் தொடர்களையும் கண்டறிந்து அகராதியில் தரவேண்டும். இவற்றிடையே நிகழும் மாற்றங் களையும் கண்டறிய வேண்டும். இத்தொடர்கள் பற்றிய ஆய்வுகளும் நிகழ்த்தப் பெற வேண்டும். இத்தகு சொற்களின் தொடர் உறவு (syntagmatic relations) ஆய்வு இன்றைய மொழிக்குக் கூட அரிதாகவே செய்யப்படுகிறது. பெரும்பாலும் (சொற்களை வேறுபடுத்திக் காட்டும் வேறுபாட்டுறவு paradigmatic relations) ஆய்வே நடைபெறுகிறது. இம்முறை நீக்கப்பட வேண்டும்.

5. சொல்லியல் தொடரியல் இலக்கணக் கூறுகள் வரலாறு

விளக்க முறை அகராதிகளில் (discriptive dictionaries) சிறந்த அகராதிகள் சொற்களின் சொல்லியல் தொடரியல் இலக்கணக் குறிப்புகள் மூலமும் அகராதிக்கு கொடுக்கப்படும் முன்னுரை மூலமும் விளக்குகின்றன. சொல்வகைகளின் பொது இலக்கணக் கூறுகள் முன்னுரையில் விளக்கப்பட்டு சொற்களின் தனிக் கூறுகள் அகராதிப் பதிவுகளிலேயே விளக்கப்பெறும். பொதுக்கூறுகளை விளக்கும் குறியீடுகளும் (grammatical abbreviations) பதிவுகளில் கொடுக்கப்படும் .இவ்வாறு காட்டப்படும் இலக்கணச் செய்தி களின் ஆழத்தின் அடிப்படையில் அகராதியின் தன்மையும் சிறப்பும் மாறுபடுகின்றன. பெயர், வினை போன்ற சொல்

வகைகளைமாத்திரம் குறிப்பீடும் அகராதிகள் உள்ளன. ஆனால் பெயர்களின் வேற்றுமை தேர்வுவினைகளின் கால,பால்,எண்,இட வேறுபாடுகள் பற்றிய செய்திகள், வினைகள் ஏற்கும் வேற்றுமைப் பொருள்கள் பற்றிய செய்திகள்(இங்கே செயப்படு பொருள் குன்றியவினை, செயப்படு பொருள் குன்றாவினை வேறுபாடு மட்டும் அன்றி, மற்ற வேற்றுமைப் பொருள் ஏற்றலும் கூட) கூறப்படும் அகராதி இலக்கண அடிப்படையில் ஆழமுள்ளதாகக் கருதப்படும். இக்கண்ணோட்டத்தில் வரலாற்று முறை அகராதியிலும் சொற்களின் இலக்கணக் கூறுகள் அடைந்துள்ள மாற்றங்கள் காட்டப்பட வேண்டும். மொழியின் பொருள் வடிவ வரலாறு மட்டுமன்றி இலக்கண வரலாற்றை அறியவும் வரலாற்று அகராதி துணைபுரிதல் வேண்டும். இதற்குப் பின்புலப் பணியாக, பழைய எழுத்துச் சான்றுகளுக்கு ஒவ்வொரு காலத்திற்கும் விரிவான விளக்க இலக்கணங்கள் எழுதப்பட வேண்டும். தொல்காப்பியம், குகைக் கல்வெட்டுகள் தொடங்கித் தற்காலம் வரை இலக்கணங்கள் எழுதப்பட வேண்டும். பழந்தமிழ் நூல்கள், கல்வெட்டுகள் சிலவற்றிற்கு அண்ணாமலை, கேரளப்பல்கலைக் கழக ஆய்வாளர்கள் இலக்கணம் எழுதி உள்ளனர் எனினும் அவை முழுமையானவை அல்ல. பெரும் பாலும் எழுத்தியல் (phonology) சொல்லியல் (morphology) இலக்கணமே எழுதப்பட்டுள்ளது. தொடரியல் பகுதி (syntax) குறைவாகவே எழுதப்பட்டுள்ளது. இக்குறையை நீக்கித் தொடரியலையும் உட்கொண்டு விளக்கஇலக்கணங்கள் எழுதப்பட வேண்டும். இவ்விலக்கணங்கள் எழுதும்பொழுது கருத்தில் கொள்ளப்பட வேண்டியது ஒன்று உண்டு. இன்றைய மொழியியல் ஆய்வு முறையில் அமைப்பு முறை (structural approach), மாற்றிலக்கணமுறை (Transformational Generative approach), வேற்றுமை இலக்கணமுறை (casegrammar approach) போன்ற வற்றுள் ஏதோ ஒன்றைத்தான் பின்பற்றி இலக்கணம் எழுதப்பட வேண்டும் என்றில்லாமல், மொழியின் இலக்கணச் செய்திகள் அனைத்தையும் வெளிக்கொண்ரும் வகையில், அனைத்து முறையின் சிறப்புக் கூறுகளையும் கொண்டு, அவற்றின் சிறப்புப் படிச் சட்டங்களை(technical formats) நீக்கி ஒரு பொது முறை யினைப் (eclecfic approach) பின்பற்றி பொதுக்கல்வி

பயின்றோர்க்கும் பயன்படும் வகையில் இலக்கணம் எழுதப்பட வேண்டும். இவ்வாறு எழுதப்பட்ட இலக்கணங்களின் அடிப்படையில் சொற்களுக்கு இலக்கணக் கூறுகள் அகராதியில் கொடுக்கப்பட வேண்டும் ஒவ்வோர் இலக்கண வேறுபாட்டிற்கும் சான்றாக மேற்கோள்கள் சேகரித்துக் கொடுக்கப்பட வேண்டும்

இவ்வாறு வரலாற்று முறைத் தமிழ் அகராதித் தொகுப்பிற்குப் பின்புலப் பணியாக பழந்தமிழ் தொடங்கிப் பல கால இலக்கியங்களுக்கு இலக்கணம் எழுதப்படும் பொழுது தமிழுக்குச் சிறப்பாக உரிய குறிப்பு வினையின் வரலாறு சிறப்பாக ஆராயப்பட வேண்டும். இன்று வெளிவந்துள்ள அகராதிகளில் குறிப்பு வினைக்கு உரிய இடம் கொடுக்கப்பட வில்லை. பழந்தமிழில் குறிப்பு வினைகள் ஒரு தனிச் சொல் வகையாகப் பெரிதும் பயன்பட்டு எல்லா எண், பால், இடங்களுக்கும் விகற்பம் பெற்றும் பெயரெச்ச, வினையெச்சங் களாகவும் வழங்கிய நிலையிலிருந்து சிறிது சிறிதாக வழக்கொழிந்தன. இன்று **நல்ல, பெரிய, இனிய** போன்ற சில பெயரடைகளாக மட்டும் வழங்குகின்றன. இன்றைய தமிழுக்குக் குறிப்பு வினை என்ற ஒரு சொல் வகை தேவையில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு தெளிவாக விளங்கும் வகையில் குறிப்பு வினைகள் ஆராயப்பட வேண்டும்.

6. நடையியல் கூறுகள்

ஒரே காலத்தில் தோன்றிய வெவ்வேறு இலக்கிய வகைகள் நடையில் வேறுபடுகின்றனவா என்றும் ஒரே ஆசிரியரின் வேறு வேறு நூல்கள் நடை வேறுபாடு காட்டுகின்றனவா என்றும் ஆராய்ந்து அந்நடை வேறுபாடுகள் சொற்களால் எவ்வாறு வெளியிடப்படுகின்றன என்பதை அறிந்து அச்சொற்களின் சிறப்புக் கூறுகள் வெளியிடப்படுவது குறிப்பிடப் படவேண்டும். எடுத்துக்காட்டாக மாணிக்க வாசகரது பக்தி இலக்கியமாகிய திருவாசகமும் அகப்பொருள் இலக்கியமாகிய திருக்கோவை யாகும் நடை வேறுபாடு காட்டுகின்றன. இந்நடை வேறுபாடு சொற்களின் கூறாக சொல்தேர்வு, சொல் வடிவு மூலம் வெளிப் படுகிறதா என்று காண வேண்டும்.

7. புள்ளியியல் கூறுகள்

எழுத்துச் சான்றுகளின் சொற்களின் வருகை எண்ணிக்கை (frequency count) ஆராயப்பட்டு அகராதியில் கொடுக்கப்படுதல் பல்வகை ஆய்வுகளுக்குப் பயன், தருவதாகும். பழைய சொற்கள் பழைய பொருள்கள் வழக்கொழிதல், புதுச்சொற்கள் புதுப் பொருள்கள் நிலைபேறு அடைதல் (stabilization) ஆகியவற்றை அறிய வருகை எண்ணிக்கை பெரிதும் உதவும். இதற்குச் சொல் வடிவம் மட்டும் அன்றிப் பல்பொருள் சொற்களின் எவ்வெப் பொருள்கள் பெரிதும் வழங்குகின்றன எவ்வெப்பொருள்களின் வழக்கு காலப் போக்கில் குறைகிறது என்பதும் கண்டறியப்பட வேண்டும், கணிப்பொறியை அகராதித் தொகுப்புக்குப் பயன் படுத்துதல் இவ்வாய்வினை எளிமைப்படுத்தும்.

8. சொற்களின் பிறப்பாக்கம்

சொற்பிறப்பில் செய்திகள் வரலாற்று அகராதியில் கொடுக்கப் படவேண்டியதில்லை, இது இவ்வகராதிக்கு முக்கியமான கூறுஅல்ல, அதனை விடுவதன் மூலம் வரலாற்று அகராதி தொகுப்பதால் ஆகும் காலத்தைச் சிறிது குறைக்கலாம் என்ற ஒருகருத்து நிலவுகின்றது (ஒ. நோ. Merkin, 1983:13) சொல் பிறப்பியல் செய்தி எழுத்துச் சான்றுகள் இல்லாத வரலாற்றுக்கு முந்தைய காலத்தை அடிப்படையாகக் கொண்டதானதால் வரலாற்றுக் காலத்து எழுத்துச்சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட அகராதியில் கொடுக்கப்பட வேண்டும் என்பது பொருத்தமானதே. இவ்வாறன்றி பிறப்பாக்கம் கொடுக்கப்பட வேண்டும் என்று கருதினால் தமிழ்ச் சொற்களில் இனச்சொற் களுக்கு மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட மூல திராவிட மொழி வடிவம் கண்டறிந்து கொடுக்கப்பட வேண்டும். பிறமொழிகளி லிருந்து வந்த கடன் சொற்கள் அம்மொழிச் சொற்களுடன் தொடர்புபடுத்தப் பெற்று அவ்வரலாறு கொடுக்கப்பட வேண்டும். இதற்கு இது வரை நிகழ்ந்துள்ள ஒப்பியல் வரலாற்று மொழியியல் ஆய்வு முடிவுகளைப் பயன்படுத்துவதுடன் தேக்க நிலை அடைந்துள்ள தமிழ் வரலாற்று மொழியியல் ஒப்பியல் மொழியியல் ஆய்வுகள் தொடரப்பட வேண்டும்.

9. வரலாற்றுமுறை அகராதி ஆக்கத்தில் புதிய கண்ணோட்டம்

இதுவரை மரபுதழுவிய வரலாற்றுமுறை அகராதி தமிழுக்குத் தொகுப்பதற்குரிய பின்புலப்பணிகள் ஆராயப் பட்டன. இப்பகுதியில் வரலாற்றுமுறை அகராதி பற்றிய கொள்கையில் நிகழ்ந்துள்ள மாற்றமும் அவ்வடிப்படையில் தமிழுக்குச் செய்யப்படவேண்டிய பணிகளும் ஆராயப்படும்.

சிறப்புமிக்க ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக வரலாற்றுமுறைப் பேரகராதி வெளியீடு முடிவடையுமுன்பே 1919ல் பேராசிரியர் கிரெய்சி (Craise) லண்டனில் மொழி வரலாற்றுக் கழகத்தில் (Philological Society) படித்த "புதிய அகராதித் திட்டங்கள்" என்ற கட்டுரையில் ஆங்கிலத்திற்கு அதன் வரலாற்றின் தெளிவான காலப்பகுதிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு முழுமையான வரலாற்றுமுறை அகராதி தொகுப்பு அக்காலப்பகுதிகள் ஒவ்வொன்றின் மொழிஅமைப்பையும் வரலாற்றையும் ஆக்ஸ் போர்டு பேரகராதியைவிடத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டும் என்று கூறினார். இக்கருத்தே பின்னர் காலப்பகுதி அகராதிகள் (Period Dictionaries) தோன்றுவதற்கு அடிப்படை யாய் அமைந்தது. கிரெய்சியின் கொள்கையை லண்டன் மொழி வரலாற்றுக் கழகமும் அமெரிக்காவின் தற்கால மொழிகள் கழகமும் (Modern Languages Association) ஏற்றுக்கொண்டன அதன் பின் பழைய ஆங்கில அகராதி (Dictionary of Good English=DOE), இடைக்கால ஆங்கில அகராதி (Middle English Dictionary=NDE), முன் தற்கால ஆங்கில அகராதி (Early Modern English Dictionary=MED), பழைய ஸ்காட்சு மொழி அகராதி (Dictionary of Gloder Scottish Tongue = DOST) போன்ற காலப்பகுதி அகராதித் திட்டங்கள் துவங்கப் பெற்று பகுதி பகுதியாக வெளிவந்து கொண்டுள்ளன. (ஓ.நோ. Aitkan, 1987)

காலப்பகுதி அகராதிக் கொள்கை இன்றைய மொழியியற் கொள்கை அடிப்படையில் நோக்கும்பொழுது சிறப்புடையதென தோன்றுகிறது. மொழி ஓர் ஒழுங்கமைவிற்குட்பட்டது. (Systamatic) அதன் வளர்ச்சி மாற்றங்களும் அவ்வொழுங்கமைவு

களில் மாற்றங்களாக நிகழ்கின்றன என்பது நிறுவப்பட்ட உண்மை. எடுத்துக்காட்டாகப் பழந்தமிழில் வண்ணப் பொருட்களம் (The semantic field of Colour) **செம்மை, பசுமை, கருமை, நீலம்,** என்ற மூன்று சொற்களால் குறிக்கப் பட்ட பொழுது **பசுமையுள்** பச்சை மஞ்சளும், **கருமை / நீலத்துள்** ஊதாவும் **செம்மையுள்,** சிவப்பு, அதன் வேறுபாடுகள், பழுப்பு ஆகியவையும் அடங்கி ஓர் ஒழுங்கமைவாக விளங்கின. இன்றைய தமிழில் **மஞ்சள், நீலம், ஊதா, பழுப்பு** போன்ற நிறப்பெயர்கள் சேர்க்கையால் வண்ணக்களப் பொருட்பகுதி (Semantic Space) பிரிபட்டு அதன் ஒழுங்கமைவு மாறுபட்டு விட்டது. இவ்வாறு ஒவ்வொரு பொருட்களமும் காலப் போக்கில் ஒழுங்கமைவு நிலையில் மாற்றம் அடைகின்றது. மொழியை இவ்வாறு ஒழுங்கமைவாகப் பார்ப்பதனாலேயே வேறுபட்ட ஒழுங்கமைவுகளைக் காட்டும். மொழிவரலாற்றுக் காலப்பகுதிகளை பழந்தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத் தமிழ் என்றும் அவற்றிலுள்ளும் முற்பழந்தமிழ், இடைப்பழந் தமிழ், பிற்பழந்தமிழ் போன்றனவாகவும் வரலாற்று மொழி யியலாரால் பகுக்கப்படுகின்றன. இத்தகைய வரலாற்று மொழியியல் ஆய்வின் அடிப்படையிலான தமிழ்க்காலப்பகுதிகள் ஒவ்வொன்றிற்கும் தனி வரலாற்றுமுறை அகராதிகள் தொகுப் பதும், பின் அவற்றை ஒப்புநோக்கி மொழிவரலாற்றையும் சொற்களின் வரலாற்றையும் அறுதி செய்வதும் பயனுடையதாக அமையும்.

அகராதியில், ஒரு பயன்பாட்டு மொழியியல் (Applied linguistics) பகுதியாகையால் செயல்முறை வசதி, இடர்பாடுகளும் திட்டங்களை உருவாக்குவதில் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இவ்வடிப்படையில் அனைத்துக் காலப்பகுதிகளுக்கு மான வரலாற்று அகராதி தொடுக்க ஆகும். நீண்டகாலம் பொருட்செலவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டால் சிறிய காலப்பகுதி அகராதிகளைத் திட்டமிட்டுத் தொகுத்துப், பின் அவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று முறை அகராதி தொகுப்பது பயனுடையதாகும். பேரகராதிகள் தொகுக்கப்படும் பொழுது அவை திட்டமிட்ட

காலத்தைவிடப் பல மடங்கு காலத்தை எடுத்துக் கொள்ளும் பொழுது அரசாலும், பொதுமக்களாலும் குறை கூறப்படுவதற்கு இட மேற்படுகிறது. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி தொகுக்க 25 ஆண்டுகளுக்கு மேல் ஆன பொழுது அதைக் குறை கூறி மக்கள் வரிப்பணம் பாழ் செய்யப்படுவதாக செய்தித்தாள்கள் கேலிப்படங்கள் வெளியிட்டன. நம் நாட்டில் அகராதித் தொகுப்பில் ஈடுபட்டிருப்போர் தவிர மற்றையோர் அது நீண்ட காலப் பணி என்பதை உணர்வதில்லை. எனவே, இந்தக் குறைகளைத் தவிர்க்கவும் குறைந்த கால அளவில் வெளியிடப்படும் காலப்பகுதி அகராதிகள் தொகுப்பது நன்மை தருவதாகும்.

காலப்பகுதி வரலாற்று அகராதிகள் தமிழுக்குத் தொகுப்பது என முடிவெடுக்கப்பட்டால் தமிழ் வரலாற்றுக் காலப் பகுப்பும் அதற்குரிய வகையில் மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும். இவ்வாறு செய்யும் பொழுது மொழியமைப்புக் கண்ணோட்டத் துடன், மொழி வரலாற்று முடிவுகளுக்கு மாறுபடாமல், அகராதித் தொகுப்பு வசதியைக் கருத்தில் கொண்டு காலப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும். எடுத்துக்காட்டாக, பழந்தமிழ், முற்பழந்தமிழ், இடைபழந்தமிழ், பிற்பழந்தமிழ் என மூவகையாகப் பகுக்கப்பட்டாலும் இக்காலப்பகுதி முழுமைக்கும் உரிய எழுத்துச் சான்றுகள் குறைவானவை ஆகையால்பழந்தமிழ் முழுமைக்கும் ஒரு காலப் பகுதி அகராதித் தொகுக்கப் பெற்று அதனுள் வரலாற்று மாற்றங்கள் காட்டப்படலாம். ஆனால் இடைக்காலத் தமிழ் 6/7 ஆம் நூற்றாண்டு தொடங்கி 18-ஆம் நூற்றாண்டு வரை உள்ள ஒரு நீண்ட காலப்பகுதியை உட்கொள் வதாலும் இக்காலப் பகுதியின் எழுத்துச்சான்றுகள் எண்ணிக் கையிலும் அளவிலும் பெரியவையாகையாலும் இப்பகுதி மொழி அமைப்பு அடிப்படையில் மீண்டும் பகுக்கப்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட அகராதிகள் தொகுக்கப்படுவது நல்லது இக்காலப் பகுதியில் நடையியல் கண்ணோட்டத்தில் கல்வெட்டுத் தமிழ் நலாயிரதிவ்யப் பிரபந்தங்களுக்கு எழுதப்பட்ட மணிப்பிரவாள நடையிலமைந்த உரைகளும் தனி அகராதிகளாகத் தொகுக்கப் படலாம். 18-ஆம் நூற்றாண்டிலிருந்து தற்காலத் தமிழ் தொடங்குவதாகக் கொள்ளப் பெறினும் அறிவியல்கல்வி, ஆட்சி

மொழி வழக்கு, இதழியல் வளர்ச்சி, திரைப்பட, வானொலி வளர்ச்சி இவற்றால் 20-ஆம் நூற்றாண்டில் 40-களிலிருந்து மொழிவளர்ச்சி வேகம் மிகுந்துள்ளதால் அதற்கு முற்பட்ட பகுதியை தற்காலத் தமிழின் முற்பகுதியாகவும் (Early Modern Tamil) அதற்குப் பின் இன்று வரை ஒரு காலப்பகுதியாகவும் பிரித்து அகராதிகள் தொகுக்கப்படலாம். இவை அனைத்தும் ஆராயச்சியின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டியவை. காலப்பகுப்பு ஆய்வு வரலாற்று அகராதித் தொகுப்பிற்குரிய பின்புலப் பணிகளுள் தலையாயதாகும்.

10. முடிவுரை

மேற்கூறப்பட்ட பின்புலப் பணிகள் அனைத்தும் ஓர் அகராதித் திட்டத்துறையினராலோ, ஒரு மொழியியல் துறையினராலோ, செய்யப்படக் கூடியவை அல்ல. தமிழகப் பல்கலைக் கழகங்களின் மொழித் துறைகள், மொழியியல் துறைகள், அகராதியியல், தொகுப்பியல் துறைகள் ஒருங்கிணைந்து திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். மேலும் பல்கலைக் கழகங்களில் புதிய அகராதியியல் துறைகளும் அகராதித்திட்டங்களும் துவக்கப் பட வேண்டும். இத்தகு ஒருங்கிணைந்த முயற்சியின் மூலமே தமிழுக்குத் தலை சிறந்த ஒரு வரலாற்று அகராதி தொகுக்கும் பணி நிறைவேற முடியும்.

மேற்கோள் நூல்கள், கட்டுரைகள்

குமாரசாமி ராஜா ந. 1974 "குற்றியலுகரமா? முற்றிய லுகரமா" **இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் - 1,** பதிப்பகம் ச. சத்தியலிங்கம், க. பாலசுப்பிர மணியன், அண்ணாமலைநகர்.

Aitkan, A.J. 1987 "The Period Dictionaries" in Robart Burchfield, Ed. **Studies in Lexicography**, Oxford p. p. 94-116.

Meenakshisundaram T. P. 1965 **History of Tamil Language.** Deccen College, Poona.

Merkin, R. 1983 "The historical / academic dictionary" in **Lexicography: Principles and Practice** sd. R. R. K. Hartmann, Academic Press Inc. p.p. 123-134.

Murre J. A. H. Oxford English Dictionary 1884-1928/1933.

Zgusta, L. 1971 **Mannual of Lexicography,** Mouton and Co, The Hague

மொழிவளர்ச்சியும் சுவடி பதிப்பித்தலும் - இலக்கணச் சூடாமணி

சா. கிருட்டினமூர்த்தி
தஞ்சாவூர்.

ஒரு மொழியின்கண் உள்ள இலக்கிய இலக்கணங்கள் அம் மொழியின் வளர்ச்சியைக் கணிக்கும் அளவு கோல்களுள் ஒருவகை ஆகும். புதிய இலக்கிய வகைகளின் வரவுகளையும், அவற்றிற்கு உரிய இலக்கண வரையறைகளையும் வெளிப்படுத்துதல் சுவடி பதிப்பித்தலால் கிடைக்கப்பெறும் பெரும்பயன் எனலாம். முன்னைய காலந்தொட்டு இன்றுவரை எழுந்துள்ள பல்வேறு படைப்புகளும் அவ்வக்கால எழுதுபொருள் சாதனங்கள் வழி வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளன. இவற்றைப் பலரும் அறியும் வண்ணமும், பயன்கொள்ளும் வகையிலும் வெளிக்கொணர்வது மொழிவளர்ச்சிக்குரிய அடிப்படைப் பணியாகும்.

மொழியின் வளர்ச்சி என்பது பல காரணிகளைக் கொண்டு அமைவது. இன்று மொழி வளர்ந்துவிட்ட நிலையில், பல்வேறு தகவல் தொடர்புகளும், செய்தி பரிமாற்றச் சாதனங்களும் பலவாறாகப் பல்கியுள்ளன. இதனால் இன்றைய மொழி வளர்ச்சி என்பது மொழிச்சீர்மை கருதிய வளர்ச்சியாகவே அமைந்துவிடுகிறது. மொழி ஆர்வலர்களும் மொழியியல் அறிஞர்களும் அம் மொழிச்சீர்மையைக் கருத்தில் கொண்டு அதற்குரிய திட்டங்களை வகுத்துரைக்கின்றனர். ஆனால் இன்றைக்கு நானூறு ஆண்டுகளுக்குமுன் மொழியின் வளர்ச்சி என்பது வரையறுக்கப்பட்டதாகத்தான் இருந்தது. இதற்குரிய இன்றியமையாத காரணம் வெளியீட்டுச் சாதனக் குறைவேயாகும்.

அச்சு இயந்திரம்

கி. பி. 16-ஆம் நூற்றாண்டளவில் அச்சியந்திரங்கள் அறிமுகப் படுத்தப்பட்டாலும், 19-ஆம் நூற்றாண்டளவில்தான் தமிழகத்தில் முறையான பதிப்பு வேலைகளுக்கு அவை பயன் படுத்தப்பெற்றன. 1835 ஆம் ஆண்டில்தான் நம் நாட்டவரும் அச்சியந்திர சாலைகள் வைக்கலாம் என்னும் சட்டம் ஏற்பட்ட பிறகுதான் அவற்றை நிறுவ ஆரம்பித்தனர். இதற்குப் பிறகே ஓலைச்சுவடிகளாக இருந்த பல தமிழ்நூல்கள் அச்சுப் புத்தகங்களாக வெளிவரத் தொடங்கின. "19 ஆம் நூற்றாண்டிலே பழைய ஏட்டுச்சுவடிகள் அச்சுப்புத்தகமாகப் பதிப்பிக்கப்பட்டமையாலேயே பல தமிழ்நூல்கள் அழிந்து போகாமல் உயிர் பெற்றுள்ளன. சுதேசிகள் தம்தம் நூல்களை அச்சிடுவதற்கு இன்னும் ஒரு நூற்றாண்டு தாமதப் பட்டிருக்கு மானால் இப்போது கிடைத்துள்ள பழைய நூல்களிலே பல நூல்கள் மறைந்துபோயிருக்கும் என்பதில் சற்றும் ஐயமில்லை" என்பார் (மயிலை சீனி. வேங்கடசாமி, ப. 153). பழைய சுவடிகளை வெளியிடவேண்டும் என்ற ஒரு மாபெரும் இயக்கத்திற்கு அச்சு இயந்திரம் உறுதுணையாகவும் உயிர் நாடியாகவும் இருந்தது என்றால் அது மிகையாகாது. 1835 ஆம் ஆண்டு 3-ஆம் நாள் கவர்னரால் கொண்டுவரப்பட்ட பதிப்புச் சட்டம் சுவடிகளை அச்சேற்றுவதற்குரிய ஓர் ஒழுங்கு முறையை வரையறுத்துக் காட்டியுள்ளது.

> "கம்பெனியாருடைய தேசங்களுக்குள்ளே மேற் சொன்ன 1835 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குப்பிறகு அச்சுப் பதிபபிக்கப்பட்ட எல்லாப் புஸ்தகமும் காகிதமும் அச்சுப் போடுகிறவனுடைய பெயரையும் பிரசித்தம் பண்ணுகிறவனுடைய பெயரையும் அச்சுப் போட்டுப் பிரசித்தம் பண்ணுகிற இடத்தையும் அதன்மேல் தெரியும் படிக்கு அச்சுப் போட்டிருக்கவேண்டும். இந்த விதிக்கொத்தபடிக்கில்லாமல் வேறே விதமாக யாதொரு புஸ்தகத்தை

கடிதாசியை எவனாவது அச்சுப்போட்டதாய் அல்லது பிரசித்தம்

பண்ணின தாய் ருசுவானால் 5000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அபராதத்தினாலேயும் தெண்டிக்கப்படுவானென்று விதிக்கப்பட்டிருக்கிறது"

(மயிலை சீனி. வேங்கடசாமி, ப. 63)

என்னும் இச்சட்டம் முறையான பதிப்புவேலையை ஊக்குவித்து இதனால் பல இலக்கண இலக்கிய நூல்கள் அழிந்துபடாமல் அச்சேற்றப்பட்டன. சுவடிப்பதிப்பில் பலர் ஈடுபடலாயினர். முத்துசாமிப்பிள்ளை, புதுவை நயனப்பமுதலியார், தாண்டவராய முதலியார், இராமச்சந்திர கவிராயர், முகவை இராமானுச கவிராயர், கொட்டையூர் சிவக்கொழுந்துதேசிகர், திருத்தணிகை விசாகப் பெருமாளையர், களத்தூர் வேதகிரி முதலியார், ஆறுமுக நாவலர், மகாவித்துவான் மயிலை சண்முகம்பிள்ளை, தில்லையம்பூர் சந்திரசேகர கவிராச பண்டிதர், வீராசாமி செட்டியார், ராவ்பகதூர் சி. வை. தமோதரம்பிள்ளை போன்றோர் அத்தகு பதிப்பாசிரியர்களாவர். இப்பதிப் பாசிரியர்களின் வரலாற்றில் குறிக்கத்தக்கவராய் டாக்டர் உ. வே. சாமிநாதஐயர் பிறகு இடம்பெற்றார்.

பதிப்பாசிரியர்கள், பலரும் அப்பொழுது சுவடிப்பதிப்புப் பணியை மேற்கொண்டும், பலநூல்கள் அவர்களால் பதிப்பிக்கப் பெறாமல் உள்ளன. என்பது வருந்தத் தக்கதேயாகும். 1889ல் இலக்கணவிளக்கத்தை அச்சிற் பதிப்பித்த சி. வை. தாமோதரம் பிள்ளை, '18 ஆம் நூற்றாண்டில் இயற்றப் பெற்ற அந்நூல் 19 ஆம் நூற்றாண்டில் கிடைப்பது அரிதாயிற்று,' என்பதைத் தம் முகவுரையுள் குறிப்பிட்டுள்ளார். "இலக்கணவிளக்கம் அச்சின் வாய்த்தோற்றாமையாற் கற்போர்க்குக் கிடைத்தற்கரிதாகி, அதனாற் அடையற்பாலதாம் பயனை உலகம் பெறாமற் போகத்தக்கதாய் விட்டது. இதனை உணர்ந்தே அடியேன் அதனை அச்சிட்டுப் பிரசுரம் செய்யத் தலைப்பட்டேன்" என்பது அம் முகவுரை.

இதனால் ஓலைச்சுவடிகளைப் பதிப்பித்து வெளியிடுதல் மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்பது பெறப்படும். இவ்வகையில் அச்சுஇயந்திரத்தின் பணி குறிப்பிடத்தக்கவகையில்

இடம்பெற்றுள்ளது என்பது வெளிப்படை. ஒரு சுவடியைப் பல பிரதிகள் எழுதிப் பலருக்கும் பயன்படும் வண்ணம் செய்வது ஒருவாற்றான் பதிப்பு வேலையாக நிகழ்ந்தது என்றாலும் தொழில் நோக்கத்தில் அஃது இயலாததொன்றாகவே கருதப் பட்டு வந்தது. எனவேதான் சைனர்கள் தங்கள் திருமண நிகழ்ச்சிகளில் 'சாஸ்திரதானம்' என்னும் ஒரு வகைத் தானத்தை மேற்கொண்டிருந்தனர். அதனால்தான் அச்சியந்திரம் அறிமுகமான காலத்தில் ஓலைச் சுவடியின் மதிப்பு அச்சு நூலின் மதிப்பைவிட மிகுதியாகவே இருந்தது. "வீரமாமுனிவர் இயற்றிய சதுரகராதி என்னும் நூலை 1835 ஆம் ஆண்டிற்கு முன்பு ஓலைச்சுவடிப் பிரதியை 10 பவுன் (ஏறக்குறைய 150 ரூபாய்) கொடுத்து வாங்கியதாகப் பெர்சிவல் ஐயர் தம்மிடம் கூறியதாகவும் அதே சதுரகராதி ஆச்சுப் புத்தகமாக வெளிவந்தபோது பிரதி ஒன்றுக்கு $2\frac{1}{2}$ ஷில்லிங்கு (ஏறக்குறைய 2 ரூபாய்)க்குக் கிடைத்ததாகவும் 1865-ஆம் ஆண்டில் மர்தாக்கு என்பவர் எழுதியிருக்கிறார்" என்று குறிப்பிடுவது மேற்கருத்தை விளக்குவதாகும்.

பதிப்பித்தல்-ஓர் அர்ப்பணிப்பு

சுவடிகளில் அருமையும் பெருமையும் கருதி அவற்றைப் பார்த்தால் இரண்டுவகை அடிப்படை நோக்கங்களை அடைவ தாக முன்னையோர் கருதினர். அவை,

1. அழிந்து கொண்டிருக்கும் நிலையிலிருந்து சுவடிகளைக் காப்பாற்றுதல்.

2. அரிய சுவடிகளைப் பதிப்பிப்பதன் மூலம் மொழி வளர்ச்சிக்குத் தொண்டுசெய்தல.

இவ்விரு காரணங்களால் தம் வாழ்நாள் முழுமையும் அதற்காகச் செலவிட்டோர், பலர்; சொல்லொணாச் இன்னலுக்குள்ளாகி யோர் மிகப்பலர். அவர்களின் மாறா ஆர்வம் தமிழ்நூல்கள் உயிர் பெறக்காரணமாகியது. "இளமை முதல் தமிழ்த் தொண்டிால பொழுதுபோக்கிவரும் எனக்குச் சில வருஷங்களாக உள்ள முதுமைத் தளர்ச்சியால் நான்எண்ணியவற்றை எண்ணிய படியே என்னாற் செய்ய இயலவிலலை. ஆயினும் சுவையுள்ள

தமிழ்நூல்கள் வெளிவர வேண்டும் என்றும் ஆவல் மட்டும் இருந்து வருகிறது'' என்ற உ வே. சாவின் கருத்து இங்கு நோக்கத் தக்கது (முகவுரை குமரகுருபரசுவாமிகள்பிரபந்தத்திரட்டு(1961). நூல் பதிப்பாசிரியர் மொழிக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவராக இருக்க வேண்டும். பொருளை (நிதி) நோக்காது பணிக்காகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு உழைப்பதால் அத்தகையோர் உண்மையிலேயே இன்றியமையாதவராகக் கருதத்தக்கவராகிறார்.

> "The truly important men were the school teacher, the newspaper -editor, the doctor, the clergy men. These people were supposed to have made a sacrifice beacuse they cared more to serve their professions, and what they meant than for money''
>
> (John Hall Wheelock, 1950 p.163)

என்ற கருத்து, பத்திரிகைப் பதிப்பாசிரியரை உள்ளடக்கியதாக இருப்பினும் சுவடிப்பதிப்பாசிரியருக்கும் பொருந்தும் என்று கூறலாம். இத்தகு அரிய பணியின் காரணமாகப் பதிப்பிக்கப் பெற்ற பல நூல்கள் இன்று மொழியின் வளத்தைப் பறைசாற்று வனவாக அமைந்துள்ளன.

புதியனவற்றைப் பதிப்பித்தல்

சுவடிகளைத் தேடித் தொகுத்துப் பாதுகாப்பதன் மூலமும் புதிய நூல்களின் வரவு மொழிக்குக் கிடைக்கக்கூடும். இதுவரை வெழிவந்துள்ள நூல்களன்றியும் வெளிவராத புதிய நூல்கள் கிடைப்பின் அது மொழிவளர்ச்சிக்கு உகந்ததாக அமையும். இக்காலத்தில் மட்டுமன்றி அப்பொதும் புதிய நூல்களைத் தேடி அலைந்த இவர்களின் செயல் போற்றுதற் குரியதாக அமைவதைக் சாணலாம். குறிப்பாக, தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச்சுவடித்துறைபில் இது காறும் தொகுக்கப் பெற்றுள்ள முவாபிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்ச் சுவடிகளில் நூற்றுக்கு மேற்பட்டவை. இவை பதிப்பிக்கப் பெறின் அது மொழியின் பன்னலத்திற்கும் ஆக்கந்தருவவாக அமையும்.

மீண்டும்பதிப்பித்தல்

முன்னையோர்களால் பதிப்பிக்கப் பெற்றவற்றை மீண்டும் சுவடிகளைக் கொண்டு ஆய்வு செய்து அவற்றைப் பதிப்பித்தலும் மொழிவளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். இப்பணியும் பலரால் இன்றும் மேற்கொள்ளப் பெற்று வருகிறது. இதனால் பதிப்பித்தலின் செம்மையும் சீர்மையும் கிடைக்கக்கூடும். பிழையாகக் கொண்ட பாடங்கள், அப்பாடங்களைப் புதிய சொல் வரவுகளாக ஏற்றுக் கொண்டமை போன்ற கூறுகள் மறுபதிப்பு களால் திருத்தமடையும்.

''மிகைபடு பொருளை நகைபடு புன்சொலில்
தந்திடை மடுத்த கந்திதன் பிழைப்பும்
எழுதினர் பிழைப்பும் எழுத்துரு வொக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்
ஒருங்குடன் கிடந்த ஒவ்வாப் பாடம்
திருந்திய காட்சியோர் செவிமுதல் வெதுப்பலில்''

(பெருந். 1549)

என்றாற்போலப் பொருந்தாப் பாடங்களைக் களைந்து மீண்டும் பதிப்பித்தல் மொழியின் பல வளர்ச்சிக்கும் வழி வகுப்பதாக அமையும்.

எனவே, இவ்விரு நிலைககலும் நடைபெறுகிற சுவடிப்பதிப்புப் பணிகள் மொழியின் ஆக்கத்திற்கு இன்றியமையாதனவாக அமைகின்றன என்பதை நன்கறியலாம். இவ்வகையில் இலக்கண சூடாமணி என்றும் யாப்பிலக்கண நூலின் பதிப்புப் பணி மொழிவளவிற்குப் பயன் தருவதாக அமைகின்றது என்பது இவண் ஆயத்தக்கதாகும்.

இலக்கண சூடாமணி

இலக்கணச் சூடாமணியைப் பதிப்பிக்கும் பணியை நான் மேற்கொண்ட நிலையில், அதனுடைய சிறப்பியல்புகளையும். மொழிக்கு எந்தவளவிற்கு அவை பயன்படுகின்றன என்பதையும் என்னால்நோக்கியுணர முடிந்தது. இந்நூல் தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச் சுவடி நிலையில் இருக்கிறது. இந்நூலின் வேறுபடிகள்

சென்னை டாக்டர் உ.வே.சா நூலகத்திலும், பேரூர்ச் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியிலும் இருந்தன. 58 வெண்பாக்களைக் கொண்ட இந்நூல் யாப்பிலக்கணத்தையும் பிரபந்தவிலக்கணத்தையும் கூறுகின்ற நூலாக மூலமும் உரையுமாக அமைந்துள்ளது. உறுப்பியல், பாவியல், பாவினவியல் பிரபந்தவியல், ஒழிபியல் என ஐந்தியல்களாகப் பிரிக்கப் பெற்று இலக்கணம் கூறப்பெற்றுள்ளது. இந்நூலின் காலம் 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி எனக் கருத இடமுண்டு. இதன் நூலாசிரியர் பாலபாரதி என்ற குறிப்பு இதனுள் காணப்படுகின்றது. யாப்பருங்கலக் காரிகைக்குப் பிறகு யாப்பிலக்கணத்தைக் கூறும் நூலாக இஃது அமைந்துள்ளது. தொன்னூல் விளக்கத்தைப் போலப் பிரபந்தவில்க்கணத்தைச் சேர்த்து இந்நூல் கூறுகின்றது.

இந்நூலில் காணப்பெறும் பல்வேறு சிறப்புக்கூறுகளும் பயன் படுவனவாக அமையினும் ஓரிரு கூறுகள் மட்டும் இவண் நோக்கத்தக்கனவாகும்.

வண்ணம்

இந்நூலுள் வண்ணத்திற்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது. வண்ணத்தின் இலக்கணத்தைப் பிற நூல்கள் கூறாத நிலையில் இந்நூல் கூறியுள்ளமை போற்றத்தக்கதாகவுள்ளது. இந்நூற்றாண்டின் முற்பகுதியில் மறைந்த வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள்தாம் வண்ணத்திற்குரிய விரிவான இலக்கணத்தை 'வண்ணத்தியல்பு' என்னும் நூலில் கூறியுள்ளார். இலக்கண சூடாமணியுள் உலா, மடல், தூது, பரணி, பிள்ளைத் தமிழ் வண்ணம், சிந்து ஆகியவற்றிற்கு இலக்கணங்கள் கூறப் பெற்றுள்ளன. வண்ணத்திற்கு இந்நூலாசிரியர் கூறிய இலக்கணம் சுருங்கிய வடிவிலும் தெளிந்த நிலையிலும் காணப்படுகின்றது.

எட்டுக் கலையாய் இடையிட் டெதுகையாய்க்
கட்டுக் கலைக்குமுக் கண்ணியாய் - திட்டத்தில்
தொங்கலும் எட்டாய்த் தொடைமூன்று நான் காறாய்ப்
பங்குபெறும் வண்ணப் பரப்பு (இலக். சூ. 44)

வல்லினத்தின் மெல்லினத்தின் வாயந்த இடையினத்தின்
சொல்லினத்துக் கேய்ந்ததொரு சொற்றொடுத்து
- நல்லினத்தின்
எந்தப்பா வேனும் எழுத்தளவின் எய்துவது
சந்தப்பா என்னத் தகும் (இலக். சூ. 45)

இவ்வெண்பாக்களின் கருத்தை விளக்கியுரைக்கும் நிலையில்தான் தண்டபாணி சுவாமிகளின் நூல் அமைந்துள்ளது.

பரணி

இதைப்போன்றே சிந்திற்கும், பரணிக்கும் உரிய இலக்கணங்களும் கூறப்பட்டுள்ளன. பரணி என்னும் பிரபந்தம் பாடுதற்குரிய யாப்பு வகையைக் கூறுவதில் ஏனைய இலக்கண நூல்களை விட வரையறுத்துக் கூறுகின்ற தன்மையை இதனுள் காணமுடிகின்றது.

"மூவசைச் சீரின் முறைபிறழா தெய்தியும்
மேவியதோர் நாற்சீரின் மேற்பட்டும் - பாவினத்தின்
ஈரடித் தாழிசையாய் எய்துமின் சந்தமுடன்
ஓரடிபோல் ஈரடியும் ஒத்து"
(இலக். சூ. 42)

இவ்வெண்பாவில் கூறப்பட்ட இலக்கணத்தை விடவும் இதன் உரையுள் அமைந்த செய்திகள் இவ்விலக்கணத்தைத் தெளிவு படுந்தும் நோக்கத்தில் அமைந்துள்ளன. "ஈரசைச்சீரானும் மூவசைச்சீரானும் நாற்சீரடி முதலாக எண்சீரடி உயிர்த் தொடைச்சொல் அடுத்தும் இன்சந்தமுடன் கூடியும் இரண்டடித்தாழிசை என்று பெயரிட்டு வழங்கப்படும்" என்பது அவ்வுரை.

சதுக்கம்

பிற இலக்கண நூல்களுள் கூறப்பெறாத ஒருசீரடியான் வரும் யாப்பு வகை ஒன்று இந்நூலுள் கூறப்பட்டுள்ளது; இதற்கு சதுக்கம் என்று பெயர். பாக்களுடைய சீர்வரையறைக் கூறுமிடத்து ஒரு சீரடியான் வரும் அடிவகையாகிய இச்சதுக்கம் என்பதை இந்நூல் கூறுகின்றது.

"ஒருசீ ரடிசதுக்கம் ஓரிரு - முச்சீர்
வருசீ ரடிவஞ்சி மற்ற - தொருநான்கு

சீரகவல் வெள்ளை சிறந்தகலி என்றறிஞர்
ஊரறியச் சொன்னார் உகந்து''

(இலக். சூ. 15)

உரையுள் இதன் இலக்கணம் வகைப்படுத்திக் காட்டப் பெற்றுள்ளது. ஈரசையான் வந்த சதுக்கம், மூவசையான் வந்த சதுக்கம் என்று காட்டப் பெறும் இவ்வகைகளோடு இவற்றிற்கு எடுத்துக்காட்டுகளும் இதனுள்சாட்டப்பெற்றுள்ளன. சுருங்கிய வடிவுடையதாகிய இவ்வியாப்புவகைக்குரிய இலக்கிய வகைகளை இந்நூல் சுட்டவில்லையானாலும் இவ்வகையிலும் கவிதை புனையப்பெறலாம் என்ற புதிய நோக்கத்தை இந்நூல் எடுத்துக்கூறுவதாகக் கொள்ளலாம்.

இன்றைய யாப்பு வளர்ச்சியை நோக்கும்பொழுது சுருங்கிய வடிவில் உணர்வைச் செறித்துக்கூறும் நெறியைக் கவிஞர்கள் மேற்கொண்டுள்ளனர் என்பது புலனாகும். இத்தகைய நெறிக்கு மிகுதியான சீரமைப்புகள் பொருந்தாதனவாகும். இன்றைய புதுக்கவிதையாளர்களுள் பெரும்பான்மையோர் ஒருசீரடிகளால் அமைந்த கவிதைகளையே நிரம்பவும் இயற்றுகின்றனர். இத்தகு புதுக்கவிதை நெறிக்கு இலக்கண சூடாமணியாசிரியர் கூறிய 'சதுக்கம்' என்னும் யாப்பை இலக்கணமாகக் கூறலாமா என்பது ஆய்விற்குரியதே.

சிறப்புமோனைகள்

இலக்கணத்தை எளிமைப்படுத்தும் உத்திகளுள் வகைப் படுத்துதல் என்பது குறிப்பிடத்தக்கதாகும். சிறப்புமோனைகள் என இதனுள் கூறப்பட்டுள்ள வகைகள் வேறெந்த நூலிலும் கூறப்படாதவை. முன்னைய இலக்கண நூல்களெல்லாம் நாற்சீரடிப்பாவிற்குரிய மோனைகளையே கூறியுள்ளன. ஆனால் இந்நூல் ஐஞ்சீரடியினும் மிகுந்த சீரடிகளைக் கொண்ட பாவிற்கும் மோனைகளைக் கூறியுள்ளது. நாற்சீரடிப்பாவுக்கும் **பொழிப்புமோனையும்**, ஐஞ்சீரடிக்குக் **கடைமோனையும்**, அறுசீர்முதல் பதின்சீரடிக்கு **இடைமோனையும்**, பதினொரு சீர்முதல் பதினாறு சீரளவும் **வழிமோனையும்** சிறப்பு மோனைகளாகும்.

"நாற்சீரடிபொழிப்பு நன்றேஐஞ் சீர்க்கடையாம்
மேற்சீ ரடிகணடு வீறெய்தும் - வாச்சதொரு
பன்னிருபன் னான்கு பதினாறு சந்தமுதல்
துன்னுவழி மோனையெனச் சொல்"

(இலக். சூ 12)

எனமேற்கருத்தை விளக்கும் இவ்வெண்பாயாப்பிலக்கணத்திற்குச் சிறப்பூட்டுவதாக அமைகின்றது.

காரிகையில் திருத்தமா?

பாவின் இனங்களை ஒவ்வோர் இலக்கணத்திலும் தத்தம் நிலையில் வேறுபடக் கூறிச் செல்கின்றன. தாழிசை, துறை விருத்தம் என்று இனம் கூறப்படும் முறைவைப்பு நூல்களுள் மாறி அமைந்துள்ளதைக் காணவியலும். ஆயினும் காரிகையில் வெண்பாவிற்கு மட்டும் விருத்தம் தாழிசை துறை என்ற முறையிலும் ஏனையவற்றிற்குத் தாழிசை, துறை, விருத்தம் என்ற முறையிலும் பாவினம் கூறப்பட்டுள்ளது.

"முன்றடி யானும் முடிந்தடி தோறும் முடிவிடத்துத்
தான்றனிச் சொற்பெறும் தண்டா விருத்தம்
வெண்டாழிசையே
மூன்றடி யாய்வெள்ளை போன்றிறும் மூன்றிழி பேழுயர்வாய்
ஆன்றடி தாம்சில அந்தம் குறைந்தினும் வெண்டுறையே.

என்பது யாப்பருங்கலக்காரிகை (27)

இலக்கணச் சூடாமணி, பாவிற்குரிய இனங்களைத் தாழிசை, துறை, விருத்தம் என்ற முறைவைப்பிலேயே கூறுகின்றது. இதனுள் வெண்பாவின் இனம் சுட்டும் நூற்பாவின் கருத்தை விளக்கும் மேற்கோளாக ஒரு காரிகை இடம் பெற்றுள்ளது.

"மூன்றடி யாய்வெள்ளை போன்றிறும் தாழிசை
மூன்றிழிபேழ்
ஆன்றடி தாம் சில அந்த தடிகள் அவைகுறைந்து

தோன்றும் துறைவெள்ளை தள்ளா விருத்தம் தனிச்சொல் வந்து
மூன்றடி யானும் முடியும் முடிவொரு நான்கினுமே"
(இலக், சூ.32 மேற்)

என்னும் இம் மேற்கோள் யாப்பருங்கலக்காரிகைச் செய்யுளைப் போல அமைந்துள்ளது. யாப்பருங்கலக்காரிகைச் செய்யுள், இலக்கணம் சுட்டும் நெறிக்கு மாறாகவும் தாழிசை துறை, விருத்தம் என்ற முறைவைப்பிற்கேற்ப இலக்கணச் சூடாமணியின் மேற்கோள்பாடலும் உள்ளதைக் காணவியலும். எனவே வெண்பாவின் இனங்களைக்கூறும் போது மட்டும் முறைவைப்பு மாறிக் காணப்படும் அக்காரிகை திருத்தம் பெற வேண்டும் என்று கொள்ளலாம். இலக்கணச்சூடாமணியின் மேற்கோள் பாடல் போன்று அது மாற்றியமைக்கப்பெறின் யாப்பருங்கலக் காரிகையின் இலக்கணம் கூறும் நெறி ஒழுங்குடையதாக அமையலாம். யாப்பிலக்கணப் பயிற்சி மிகுந்திருந்ததால் யாப்பருங்கலக் காரிகைச் சுவடிகளுள் இம்முறையில் அக்காரிகை அமைந்துள்ளதா என்பது அறியப் பட வேண்டிய வொன்றாகும். வெண்பாவின் இனம் சுட்டுதலில் மட்டும் முறைவைப்பு மாறியுள்ள யாப்பருங்கலக்காரிகைச் செய்யுள், திருத்தம் பெற வேண்டுவதற்கு இலக்கணச்சூடாமணிச் செய்யுள் காரணியாக அமைந்துள்ள தன்மை குறிப்பிடத்தக்கதாகும்.

இவை போன்று சிந்து, சவலை போன்ற பாவகைகளுக்கு இலக்கணம் கூறுவதன் மூலமும், வேறுபல இலக்கணச் சிறப்பியல் புகளைத் தருவதன் மூலமும் இந்நூல் யாப்பிலக்கண வரலாற்றிற்கு ஒரு புதிய வரவாக அமைகின்றது. இது போன்ற அரிய சுவடிகள் பதிப்பிக்கப்பெறுவதால் மொழி பல நிலைகளிலும் வளர்ச்சி பெறும் என்பதில் ஐயமில்லை.

மேற்கோள் நூல்கள்

சாமிநாதையர் உ.வே. (பதி.), 1961 குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு
ஸ்ரீ காசி மடம்,
திருப்பணந்தாள்

மயிலை. சீனி. வேங்கடசாமி,	1962	**19ஆம் நூற்றாண்டின் தமிழிலக்கியம்** அழகப்பா புத்தக நிலையம், திருச்சி,
தண்டபாணி சுவாமிகள்,	1976	**வண்ணத்தியல்பு** பேரூராதீனம், பேரூர்
சு. சாமிஐயா (பதி.)		**யாப்பருங்கலக் காரிகை,** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.
மு. இராகவையங்கார்,	1935-1938	**பெருந்தொகை,** தமிழ்ச்சங்க முத்திரா சாலை, மதுரை,
சா. கிருட்டினமூர்த்தி,		**ஒருசீரடி சதுக்கம்,** தமிழ்ப் பொழில், கரந்தைத் தமிழ்ச்சங்க வெளியீடு.
John Hall Wheelock(ed),	1950	**Editor to Author** The Universal Library, New York.

குறள் மொழி

வே. தயாளன் & வ. ஜெயா
கோயம்புத்தூர்.

முன்னுரை

ஒவ்வொரு இலக்கியத்திற்கும் சில தனிப் பண்புகள் உண்டு; குறிக்கோள்கள் உண்டு; அமைப்புமுறை உண்டு; பொருளடக்கம் உண்டு; மொழி நடை உண்டு; சமுதாயப் பங்கும் பணியும் உண்டு. இவற்றையெல்லாம் முறைப்படுத்தி ஒருங்கிணைத்தும் ஆழ்நிலை ஆய்விற்கு உட்படுத்த இயலும். அவ்வாறு ஆய்வு மேற்கொண்டு இலக்கியத்தின் தனித்தன்மைகளையும் அது சமுயாத்தில் பெற்று விளங்கும் இடத்தினையும் தெளிவுபடுத்த முடியும். அவ்வாறு தெளிவுபடுத்துவது இலக்கிய வளர்ச்சிப் போக்கிற்கும் அதில் சொல்லப்படும் கருத்து வெளிப்பாட்டிற்கும் பெரிதும் துணை நிற்கும் தனித்தன்மைகளுள் மொழி நடையும் கருத்தமைவும் சிறப்பிடம் பெறுகின்றன. சுருங்கக் கூறல், அவ்வாறு கூறுவதற்காக மேற்கொள்ளப்படும் சொல்லாட்சி, செறிவாக எடுத்துக் கூறல், சமுதாயப் பின்னணியை ஒட்டிய கருத்துக்களை வெளிப் படுத்துதல், கருத்துப் பரிமாற்றம் சிறப்பாகவும் ஆற்றல் மிக்க வகையிலும் அமையும் முறையில்'மிகைக் கூறுகளைத் தவிர்த்தல் வெளிப்படையான, நிறைவான மற்றும் ஆற்றல் மிக்க உரைக் கோவையினை அமைத்தல் போன்ற நடை உத்திகள்(stylistic techniques) மேற்குறிப்பிட்டவாறு ஓர் இலக்கியத்தின் மொழி அமைப்பையும் மொழிப் பயன்பாட்டையும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி விளக்குவதற்குத் தேவையானவையாகும்.

திருக்குறள் பொதுமைக் கருத்துக்களை, அதுவும் குறிப்பாக நாடு, சமயம், மொழி போன்றவற்றையெல்லாம் கடந்து நிற்கும் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் பண்பு

பெற்றும், பரவலாக ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்துக்களை உணர்த்தும் வகையில் செவ்விலக்கியமாக அமைக்கப்பட்டுள்ளது என்ற கருத்து சமுதாய முக்கியத்துவமும் ஏற்பும் பெற்றது. மிகக் குறைந்த அளவு சொற்களையும் அவற்றின் பல்வேறு அமைப்பு களையும் **கவிதைக் கோவையில்** (poetical discourse) பயன் படுத்தி, நிறைவான கருத்துப் பரிமாற்றத்திற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படை, குறளில் சொல்லப் பட்டுள்ள கருத்துக்கள் சமுதாயத்தின் அன்றாட அக மற்றும் புற வாழ்வில் காணப்படும் இயல்பான கருத்துக்களே என்பதும் பரவலாக சொல்லப்படும் ஏற்கப்படும் கருத்துக்களேயாகும். இவற்றையெல்லாம் குறளின் சிறப்புக்களாக விளங்கும்போது, நமக்கு ஆய்வு அடிப்படை, அணுகுமுறை, வரைவறை போன்றவை தேவைப்படுகின்றன. அந்த வகையில் **மொழி** என்று இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள சொல்லாட்சியானது குறள் வழி வெளிப்படும் சமுதாயக் கருத்துக்களை அதன் அமைப்பில் இடம் பெற்று விளங்கும் மொழிக் கூறுகளோடு தொடர்புபடுத்தி, அதன் மூலம் அறியப்படும் வரன்முறை சார் மொழி சமுதாயக் கோட்பாடாக எடுத்தாளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆய்வின் இன்றியமையாமை

ஒரு நாட்டில் -சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்வுகளுக்குச் சிறப்பிடம் கொடுத்தும் மெருகூட்டியும் ஓர் வடிவத்தைத் தருவது இலக்கியமாகும். பல்வேறு வாழ்வில் நிகழ்வுகள் வடிவமைப்பு பெறுவதற்கு உறு துணையாக இருப்பது மொழியாகும். இத்தகு நிகழ்வுகளை மொழிவழி வெளிப்படுத்தும் நிலையில் கருத்துப் புலப்பாடு ஏற்படுகிறது. அதாவது, மொழி ஒரு நிலையில் வடிவம் கொடுக்கிறது; மற்றொரு நிலையில் கருத்துப் புலப்பாட்டுக்கு வழி வகுக்கிறது. இலக்கியம் வடிவம் பெறுகிறது; அதன் மூலம் சமுதாயத்தில் பரவலாக்கம் பெறுகிறது. சமுதாய நிகழ்வுகள் மொழிவழி வடிவம் பெறுகின்றன; இலக்கிய வழி கருத்துப் புலப்பாட்டுக் கோட்பாடுகளாகவும் நெறிமுறைகளாகவும் செயல்படுகின்றன. ஆகவே, **மொழி- சமுதாயம் - இலக்கணம் கருத்துப்- புலபாடு** என்பவை ஒன்றைச் சார்ந்து ஒன்று

அமைந்திருப்பதும் ஒன்றின் இயக்கம் மற்றவற்றால் கட்டுப் படுத்தப்பட்டிருப்பதும் இயல்பானதாகிறது. இதனால் இவை நான்கினையும் ஆய்வு நிலையில் தனித்து விளக்குவது என்பதும் நோக்குவது என்பதும் சரியானதல்ல.

இக்கருத்தின் அடிப்படையில் குறள் இலக்கியம் எத்தனையோ வாழ்வியல் கருத்துக்களைப் பால் மற்றும் அதிகார அடிப்படையில் வடிவமைத்து, அன்றாடச் சமுதாயப் பணிகளையும், செயல் முறைகளையும் தெளிவுபடுத்தும் பொருண்மையைக் கொண்டு விளங்குவதை நன்கு அறிய முடிகிறது. இவற்றின் வடிவம் குறிப்பிட்ட சில சொல்லமைப்பு களைக் கொண்டிருப்பதோடு, அவற்றின் பயன்பாட்டில் செறிவு நன்னிறைவு, வெளிப்படைப் பொருண்மை விளக்கம் போன்றவற்றையும் பெற்றிருப்பதைக் காண்கிறோம். ஆகவே, இதனடிப்படையில் குறளாய்வு மேற்கொள்ள வேண்டியது தேவையாகிறது; இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. இக்கருத்தைக் குறிக்கோளாளகக்கொண்டு இச்சிறு ஆய்வுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

குறள்மொழி

குறள்மொழி என்ற இவ்வாய்வுத் தலைப்பு மொழியைப் பற்றி எடுத்து விளக்கினாலும், அம்மொழியின் அமைப்பும் பயன்பாடும் சமுதாயத்தோடும் வாழ்வியல் அமைப்போடும் ஒருங்கிணைப்பையும் விளக்கத்தையும் செம்மையாக எடுத்துக் காட்டுவதற்குத் தேவையான சில உத்திகளை வெளிப்படுத்து வதாகவும் அமைந்துள்ளது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

குறள்மொழி விளக்கம்

கு. மொ

விளக்கம்

1. குறட் பொருண்மை (சமுதாயம்)	2. பயன்பாடு (சொல் / சொல்லமைப்பு பிற ஆட்சி)	3. மொழியமைப்பு (நடை-விளக்கம்)

இப்பாகுபாட்டில் இடம் பெற்றுள்ள ஒவ்வொன்றும் தொடர் சங்கிலி போல் இணைக்கப்பட்டவை, இதில் ஒன்றை விட்டு மற்றொன்றை விளக்குவது சரியாக அமையாது; பொருத்தமாக இராது, ஆகவே ஒன்றையொன்று சார்ந்துள்ள நிலையைச் சில தொடர்புகளின் மூலமே எடுத்துக்காட்ட வேண்டும்.

1. பொருண்மை விளக்கம் - சமுதாய மற்றும் வாழ்வியல் அடிப்படையில்

சமுதாயத்தின் புற - அக அமைப்புகள், அதன் இயக்கம், பங்கு - பணி, சிறப்பு போன்றவை பல்வேறு பொருண்மைக் கூறுகளின் கீழும் பல்வேறு கோட்பாடுகளின் அடிப்படையிலும் விளக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, அறம், பொருள், இன்பம் போன்ற பரந்த நிலையிலான பொருண்மைப் பாகுபாட்டின் கீழ் அதிகாரங்கள் அமைக்கப்பட்டுள்ளதையும், விருந்தோம்பல், பண்புடைமை, கள்ளுண்ணாமை, கொல்லாமை, கல்வி, கேள்வி, நாடு, அமைச்சு, அரசு, ஈகை, இல்வாழ்க்கை போன்ற வாழ்வியல் மற்றும் சமுதாயக் கோட்பாடுகளின் அடிப்படையில் குறள்கள் அமைக்கப்பட்டுள்ளதையும் குறிப்பிடலாம் இவற்றுள் அக மற்றும் புறக்கோட்பாடுகள் என்ற இரண்டுமே இடம் பெற்றுள்ளன. குறளில் ஒவ்வொரு பாலின் கீழும் சொல்லப் பட்டுள்ள அதிகாரங்கள் இவ்வகைக் கோட்பாடுகளையும் வாழ்வியல் கூறுகளையும் உட்படுத்தி சமுதாயத்திற்கு நல்லது, கெட்டது; பெருமை, சிறுமை உயர்வு, தாழ்வு போன்றவற்றை எடுத்துக்காட்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகையக் கோட்பாடுகளையும் கூறுகளையும் எடுத்துக்காட்டுவதற்குத் திருவள்ளுவர் கையாண்டுள்ள மொழிநடை கருத்துச் செறிவிற்கும் எளிமைக்கும் இடம்தந்துள்ளதோடு சுருங்கக்கூறி விளங்க வைக்கும் திறனையும் கொண்டுள்ளது வெளிப்படை. இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள மொழிநடையில் சில இலக்கணக் கூறுகள் மற்றும் இலக்கண முறைகள் பெருமளவில் இடம் பெற்றுள்ளதைக் காண முடிகிறது. இதற்குக் காரணம் குறளின் நோக்கமும் அதில் இடம் பெற்றுள்ள பொருண்மையுமே

ஆகுமென்றால் அது மிகையாகாது. எடுத்துக்காட்டாக கோட்பாடுகளானவை சமுதாயம் பின்பற்றுவதற்காக அறவுரைகளாக, நீதிகளாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன இவற்றைச் செய்வது நன்றன்று; இவை தீமையென ஒதுக்கப்பட வேண்டும்; இவற்றைப் புறக்கணிக்க வேண்டும்; இவற்றைப் பின்பற்ற வேண்டும் என்ற கருத்துக், களைச் சொல்லுமிடத்து சில இலக்கண அமைப்புகளும் முறைகளுமே இவற்றைச் சொல்வதற்கு ஏற்றவையாக அமையும்; இவ்வகையில் ஒரு மொழியின் அமைப்பில் காணப்படும் ஏவல், வியங்கோள், வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயர், தொழில் பெயர் பண்புப் பெயர், உம்மைப்பெயர் போன்றவையெல்லாம் ஏற்றவை. குறளில் அமைந்துள்ள அமைப்புகளில் சிலவற்றை இங்கு எடுத்துக்காட்டுகளாகத் தரப் பட்டுள்ளன.

எதிர்மறை- எதிரிடைச் சொல் அமைப்பு

''செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்''

எதிர்மறை

செய்வார்
செய்கலாதார்

எதிரிடைச் சொற்கள்

பெரியர்
சிறியர்

மையப் பொருண்மை

செயற்கரிய (செயல்)

தொடர்பு

பெரியர் ←→ செயற்கரிய ←→ செய்வார்
(வி. செய்) (மை. பொ.) (செயல்)

சிறியர் ←→ செயற்கரிய ←→ செய்கலாதார்
(வி. செ.) (மை. பொ.) (செயல்)

அமைப்பு

பெரியர் செய்வார்

>[செயற்கரிய]<

சிறியர் செய்கலாதார்

குறைந்தளவு அடிச்சொற் பயன்பாடு

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்"

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுகபற்று விடற்கு"

பயன்படுத்தப்பட்டுள்ள அடிச்சொற்கள்

தீ அஞ்சு
பய

பற்று விடு
அறு

மையப் பொருண்மை தீமை

செயல் { பயத்தல், அஞ்சுதல் }

தீமை ←– தீய —→ அஞ்சுதல்
↓
பயத்தல்

மையப் பொருண்மை பற்று

செயல் { பற்றுதல், விடுதல், அறுத்தல் }

சுட்டு அ

பற்றுதல் ←— பற்று —→ விடுதல்
அறுத்தல்

இது போன்ற அடிச்சொற் பயன்பாடு,

i) மொழியாற்றலை வெளிப்படுத்துகிறது.

ii) நினைவாற்றலை அதிகப்படுத்துகிறது

iii) கருத்துப் புலப்பாட்டில் எளிமையைப் புகுத்துகிறது

iv) மொழியின் பொருண்மை வளத்தை வெளிப்படுத்துகிறது

அடுக்கி வரல் அமைப்பு

"இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை"

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று'

பொருண்மை

1. அளவு கடந்த கோபம் உடையவர்கள் செத்தவர்களுக்குச் சமமானவர்கள். கோபத்தை விட்டவர்கள் சாவைக் கடந்தவருக்குச் சமமானவர்கள்.

2. பொய்யாமை என்ற அறத்தை உண்மையிலேயே போற்றி வாழ முடிந்தால் மற்ற அறங்களைச் செய்யாமல் இருந்தாலும் நல்லதே.

அடுக்குச் சொற்கள்

இறந்தார் இறந்தார்

துறந்தார் துறந்தார்

மையப் பொருண்மை கூறு

இறந்தார் இறந்தார்

> [சினம்] <

துறந்தார் துறந்தார்

செயல் { துறத்தல்
இறத்தல் }

அடுக்குச் சொற்கள்

பொய்யாமை பொய்யாமை

செய்யாமை செய்யாமை

மையப் பொருண்மைக் கூறு

பொய்யாமை பொய்யாமை

> [அறம்] <

செய்யாமை செய்யாமை

செயல் { ஆற்றுதல்
செய்தல்
போற்றி வாழ்தல் }

நிபந்தனை அமைப்பு

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு (பா. 127)

நிபந்தனை

யாகாவர் ஆயினும் ←→ நாகாக்க ←→ காவாக்கால்
(வி.செ.) (மை.பொ.) (நி.ப.)

சோகாப்பர் ←→ சொல்லிழுக்குப் பட்டு
(செயல்) (பி.வி.)

மையப் பொருண்மைக்கூறு

ஒருவர் — யா — சொல்லிழுக்கு — நா < காத்தல் / காவாமை
| ↓
(செ.பொ.) (துன்பம்)

வி.செ. → வினை செய்வோன்
மை.பொ. → மையப் பொருண்மை
நிப. → நிபந்தனை
பி வி. → பின் விளைவு
செ. பொ. → செயப்படுபொருள்

இவற்றைப் பயன்படுத்துவதால் முதலாவதாக மொழி அமைப்பு நிறைவானதாகவும் வெளிப்படையானதாகவும் அமைந்துவிடுகிறது. இரண்டாவதாக அத்தகைய அமைப்புகளின் வாயிலாக வெளிபிடப்படும் கருத்து தெளிவாக சமுதாயத்திற்குச் சென்று சேர்கிறது. ஆகவே சமுதாயம் இவற்றை எளிதிலே பெறவும் அதன்வழி வாழ்வியல் நெறிகளை முறையாகப் பின் பற்றவும் வழி ஏற்படும் என நம்பலாம்.

வாழ்வியல்கூறு—மனித நேயம்

''பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பைத் தரும்'' (குறள்)

இக்குறள்வழி மனிதநேயம் என்ற வாழ்வியல் கூறு வெளிப்படுத்த படுகிறது ஒரு மனிதன் மற்றொரு மனிதனின் இன்பம்-துன்பம் ஆகியவற்றில் பங்கு கொள்ளாமல் இருந்தால் அம்மனிதனின் வாழ்க்கை நிறைவு பெறாது என்ற உட்கருத்தை இக்குறள் மூலம் வள்ளுவர் எடுத்துக் காட்டியுள்ளார். இக்குறள் எல்லாக் காலத்திற்கும் பொதுமையாக அமைந்திருப்பதை நம்மால் உணர முடிகிறது. இன்றையச் சூழலில் மனித நேயம் மறைந்து கொண்டு வருகிறது. ஒவ்வொருவரும் தான், நான், என் குடும்பம் என்ற தன்னிறைவிலேயே வாழத் தலைபடுகின்றனர். நாம், நாங்கள் நமது என்ற எண்ணம் இன்றைய. காலத்தில் மறைந்து கொண்டு வருவதைக் காண முடிகிறது. மனித நேயம் போற்றப்படாமல் இருப்பது இடும்பைதரக் கூடியது என்றும் சுட்டிக்காட்டுகிறார்.

அற்றாங்கு

இரா. கோதண்டராமன்
புதுச்சேரி

பழந்தமிழில் அற்று ஆங்கு என்னும் இரண்டு கிளவிகளும் ஒப்புமைப் பொருண்மையைக் குறிப்பனவாகி, முறையே முற்று வாக்கியங்களிலும் எச்ச வாக்கியங்களிலும் பயின்று வழங்கு கின்றன. இத்தகைய வழக்குப் பயிற்சினைப் பின்வரும் எடுத்துக் காட்டுக்களில் காணலாம்.

1. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று (குறள் 332)

2. அழிவில் முயலுல் ஆர்வ மாக்கள்
வழிபடு தைய்வம் கட்கண் டாஅங்கு
அலமரல் வருத்தம் தீர யாழநின்
நலமென் பணைத்தோள் எய்தினம்.....(நற்றிணை.9.1-4)

அற்று, ஆங்கு இரண்டனுள் முந்தியது பெரும்பாலும் செய்து வாய்பாட்டு வினைகளையடுத்தும், சிறுபான்மை பெயர்நிலைக் கிளவிகளையடுத்தும் நிகழற்பாலதாகும். இந்த இரண்டு நிலை யினையும் மேலே முதல் எடுத்துக்காட்டில் காணலாம். அற்று என்னும் இடைச்சொல்லானது பெயர்நிலைக்கிளவிகளையடுத்து நிகழும் போக்கினை மேலும் சில எடுத்துக்காட்டுக்களில் கீழே காணலாம்.

3. புலிதுஞ்சு வியன்புலத் தற்றே
வலிதுஞ்சு தடக்கை யவனுடை நாடே (புறம்.54.13&14)

4 வான்கண் அற்றவன் மலையே வானத்து
மீன்கள் அற்றதன் சுனையே (புறம். 109.9& 10)

5. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார் வாய்சொல் (குறள். 415)

ஒப்புமைப்பொருண்மை குறித்த ஆங்கென்கிளவி பெயர்நிலைக் கிளவியினையடுத்து நிகழும் நிலையினைப் பழந்தமிழில் பொதுவாகக் காணமுடியவில்லை. இக்கிளவியானது பெரும்பாலும் செய்து வாய்பாட்டு வினைகளையடுத்தும் சிறுபான்மை செய்யாவாய்பாடு வினையடுத்தும் நிகழ்கின்றது. செய்யா வாய்பாட்டினையடுத்து நிகழும் நிலையினைப் பின்வரும் எருத்துக் காட்டில் காணலாம்.

6. கடல்வயிற் குழீஇய வண்ணலங் கொண்மூ
நீரின்று பெயரா வாங்குத் தேரொடு
ஒளிறுமருப் பேந்திய செம்மற்
களிறின்று பெயரல பரிசிலர் கடும்பே
(புறம்.205.10-14)

ஆங்கென் கிளவி ஒப்புமைப் பொருண்மையைக் குறிக்காத நிலையும் பழந்தமிழில் காணப்படுகின்றது. இதுபற்றிப் பின்னர்ப் பேசப்படும்.

அற்றென் கிளவிக்குரிய நிலைக்களன்களுள் பெயர்நிலைக் கிளவியும் ஒன்று என முன்னர்க் குறிக்கப் பெற்றது. இந்த நிலை ஆனது சிலசமயங்களில் புதைநிலை அமைப்புடன் பொருந்துவது இல்லை. இதனை விளக்குவதற்குமுன் மேலே முதல் எடுத்துக் காட்டில் அமைந்த குறட்பாவுக்குப் பரிமேலழகர் வரையும் உரை கருதற்பாலதாகும்.

7. ஒருவன் மாட்டுப் பெரிய செல்வம் வருதல் கூத்தாடுதல் செய்கின்ற அரங்கின்கட் காண்போர் குழாம் வந்தாற் போலும்; அதனது போக்கும் அக்கூத்தாட்டு முடிந்தவழி அக்குழாம் போயினாற் போலும்.

இந்த உரைக்குறிப்பானது கூத்தாட்டு அவைக்குழாத்தற்றே பெருஞ்செல்வம் என்ற வாக்கிய அமைப்பினைப் பின்வரும் வாக்கிய அமைப்பின் சுருக்கமாகக் கொள்ள வகை செய்கின்றது.

8. பெருஞ்செல்வம் கூத்தாட்டவையின்கண் மக்கள் குழுவாகத் திரண்டற்று. எனவே பெயர்நிலைக் கிளவியை யடுத்தும் அற்றென் கிளவி நிகழவல்லது என்ற கூற்று எல்லா நிலையிலும் ஏற்புடையதாக இருக்க முடியாது. கூத்தாட்டவைக் குழாத்தற்றே பெருஞ்செல்வம் என்ற வாக்கிய அமைப்பி,(8)-இல் உள்ள வாக்கிய அமைப்பின் ஒடுக்கமாதலால் இங்கே அற்றென் கிளவியைப் பெயர்நிலைக்கிளவியையடுத்து நிகழ்வதாகக் கொள்ள முடியாது.

ஒப்புமை குறித்த அற்றென் கிளவி போன்றது/ போல்வது/ போலும் என்பதனோடும், ஆங்கென் கிளவி போல்/போல/போன்று என்பதனோடும் சிதறிய வழக்கில்(Complementary Distribution) நிகழ்வனவாகும். இந்த நிகழ்ச்சியினைப் பின்வரும் வாய்பாட்டுத் தொடர்கள் மூலம் தெளிவு படுத்திக்கொள்ளலாம்.

9. (அ) செய்தற்று (< செய்து + அற்று)
(ஆ) செய்தது போன்றது/போல்வது/போலும்
10. (அ) செய்தாங்கு (< செய்து + ஆங்கு)
(ஆ) செய்தது போல்/போல/போன்று

அற்றும், ஆங்கும் செய்து வாய்பாட்டு வினைகளையடுத்தும், போல் வினைகள் செய்தது வாய்பாட்டு வினைகளையடுத்தும் நிகழ்பாலன என்பது (9), (10) இல் நிகழும் தொடரமைப்புக்கள் மூலம் தெளிவாகின்றது.

செய்தற்று, செய்தாங்கு ஆகிய இரண்டு வாய்பாட்டுத் தொடர்களும் ஒப்புமை குறித்தனவேனும், இரண்டும் வாக்கியத்தில் இருவேறு தொடரனியற் சூழல்களில் (Syntactic Contexts) அமைகின்றன. செய்தற்று வாய்பாட்டுத் தொடர்கள் பயனிலைச் செயற்பாட்டினவாயும், செய்தாங்கு வாய்பாட்டுத் தொடர்கள் வினையடைச் செயற்பாட்டினவாயும் நிகழும் நிலையே மொழியில் காணப்படுகின்றது. இதனின்றும் அற்று, ஆங்கு இரண்டும் சிதறிய வழக்கினவாய்க் கொள்ளத் தக்கனவாகின்றன. சற்று விளக்கமாகச் சொல்லவேண்டுமானால், அற்று வினையடைச் செயற்பாட்டில் (Adverbial Function)

நிகழ்கையில் ஆங்கு என்றும், ஆங்கு பயனிலைச் செயற்பாட்டில் நிகழ்கையில் அற்று என்றும் அமைவனவாகக் கொள்ளப்படும், இதனின்றும் அற்றும், ஆங்கும் ஒருசேரக் கருதத்தக்கவை என்பது புலனாகின்றது மேலும் இவ்விரண்டும் ஒப்புமை குறித்த போல் என்னும் வினையுடன் சிதறிய வழக்கில் பொருந்துவதால் அடிப்படையில் இவை வினையின் தன்மையனவாயும் கொள்ளத்தக்கனவாகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு அற்று, ஆங்கு, போல் ஆகிய மூன்றும் குறிப்பிட்ட ஓர் வினைக் குடும்பத்துக்கு உரியவை என்று துணியலாம். ஆனால் இக்குறிப்பிட்ட வினைக் குடும்பம் ஒப்புமைப் பொருண்மை குறித்த வினைக்குடும்பமாக இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் ஆங்கென் கிளவியும், போலென் கிளவியும் ஒப்புமை குறியாமலும் நிகழவல்லன. இதனை இக்கட்டுரையின் போக்கில் அறியலாம்.

அற்றும், ஆங்கும் ஒப்புமைப் போலியுடன் பொருந்துவனவாகலின், இவை வினையின் தன்மையனவாய்க் கொள்ளற்பாலன என்று மேலே துணியப்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு மேற்படி கிளவிகள் அடிப்படையில் எத்தகைய வினைக்குடும்பத்தைச் சார்ந்தவை என்பதை அறிந்து கொள்வது அவசியமாகின்றது. இதுதொடர்பான சிந்தனையைப் போலென் கிளவியைப் பின்புலமாகக் கொண்டு தொடங்கலாம். போலென் கிளவி ஒப்பில் போலியாகவும் நிகழவல்லது என்பதைப் பின்வரும் பழந்தமிழ் மற்றும் இக்காலத்தமிழ் எடுத்துக் காட்டுக்கள் உணர்த்தும்.

11. நின்யான் பிழைத்தது நோவாய் எனினும்,
நீ பிழைத்தாய்போல் நனிநா ணினையே
(புறம். 43.16 & 17)

12. அமைச்சர் நேற்று இங்கு வந்தாற்போல் கேள்விப் பட்டேன்.

இவ்விரண்டு எடுத்துக்காட்டுக்களிலும் போலென் கிளவி எச்சவாக்கியங்களில் நிகழ்கின்றது. இவ்வாறின்றி போல் மற்றும் போலும் ஆகிய இரண்டும் முற்றுவாக்கியங்களில் ஒப்புமை

குறியாமல் நிகழ்வதைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் காணலாம்.

13. (அ) பல்லில் ஓடுகை எந்திப் பலிதிரி
செல்வர் + போல் திருநாகேச் சுரவரே
(அப்பர் தேவாரம். 5. 52. 1)

(ஆ) தவழு மதிசேர் சடையாற்கு இடம் + போல்
உகரும் திரைவாய் ஒற்றி யூரே
(சுந்தரர் தேவாரம். 91.3)

(இ) கருந்தண் கடலும் மலையும் உலகும்
அருந்தும் அடிகள் அமரும் ஊர் + போல்
பெருந்தண் முல்லைப் பிள்ளை யோடி
குருந்தம் தவழும் கூட லூரே
(நாலாயிரம். 1364)

14. (அ) நெய்கனி குறும்பூழ் காயமாக
ஆர்பதம் பெறுக தோழி அத்தை
பெருங்கல் நாடன் வரைந்தென அவனெதிர்
நன்றோ மகனே என்றனென்
நன்றே + போலும் என்றுரைத் தோனே
(குறுந்தொகை. 389)

(ஆ) வட்டிகைப் பூங்கொடி வந்து தோன்றி
இறுதியில் இன்பம் எமக்கீங் குரைத்தாற்
றெறுதிர் + போலும் பேணிய பொருள் எனும்
(சிலம்பு. 11. 121-123)

(இ) நலிவிலா உலக மெய்தல் நல்லதே + போலும்
என்றான் (சீ. சி. 2727)

(ஈ) அடிமூன்றில் இவ்வுலகம் அன்றளந்தாய் + போலும்
(நாலாயிரம். 3288)

(உ) ஊரும் அரவம் உடையார் வாழும் ஊர் + போலும்
பாரின் மிகையார் பாடல் ஓவாப் பாசூரே
(சம்பந்தர் தேவாரம் 160. 60. 1)

மேலே (13), (14)-இல் உள்ள எடுத்துக்காட்டுக்களில் போல், போலும் ஆகிய இரண்டும் பயனிலையாகச் செயற்படும் உறுப்புக்களையடுத்து நிகழ்வது சிந்தனைக்குரியதாகும்.

பயனிலையாகச் செயற்படும் உறுப்பினையடுத்து நிகழ்வது ஒன்று இலக்கண உருபனாகவோ அன்று உள்வினை (Copula + Verb) யாகவோதான் இருக்கமுடியும். இங்கே (15), (14)-இல் நிகழும் போல், போலும் ஆகியவை ஒப்பில் போலியாகலானும், இலக்கண உருபன்களாகக் கொள்ளப்படுவதற்கு வாய்ப்பு இன்மையானும், பயனிலை உறுப்புக்களையடுத்து நிகழும் இவை உள்வினைகளாகக் கொள்ளத்தக்கனவாகின்றன. போலென் கிளவி ஒப்புமைப் பொருண்மையைக் குறிப்பதைக் கருத்தில் கொண்டு, உள்வினயையாகிய போலென் கிளவியானது இலக்கணப் பொருண்மையை மேற்கொண்டு இலக்கன உருபனாசச் செயல் படுகின்றது என்று துணியலாம். இதனை அரண் செய்வது போல் ஒப்புடைப் போலி நிகழும் சில வாக்கிய அமைப்புக்களை விரிக்கும் போது . மேற்படி கிளவியானது பயனிலையாகச் செயற்படும் உறுப்பினையடுத்தே நிகழ்வதைக் காணலாம் இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் வாயிலாகப் புலப்படுத்தலாம்.

15. முருகன் ராமனைப் போல் பாடினான்-

16. முருகன் ராமன் பாடியதைப் போல் பாடினான்.

இவ்விரண்டும் ஒரே பொருண்மையினவாகும். இவற்றுள் பிந்தியது முந்தியதன் விரிவாகும். விரிவமைப்பாகிய (16)-இப் போலென் கிளவி பாடியது என்னிப் பொதுவினைப் பயனிலையை அடுத்து. நிகழ்வதைக் காணலாம்!

போலென் கிளவி ஒப்பில் போலியாகவும், ஒப்புமைப் போலியாகவும் நிகழும் தன்மையானது, ஒப்புமைப் பொருண்மையைக் குறிக்கும் அற்றும் ஆங்கும் அடிப்படையில் உள்வினைகளாகக் கொள்ளத்தக்கவை என்ற கருதுகோளுக்கு வழிவகுக்கின்றது. ஒப்புடைப் போலியைப் போன்றே இந்த இரண்டு இடைச்சொற்களும் பயனிலை உறுப்பினையடுத்தே நிகழ்வதால் இவற்றை உள்வினைகளாகக் கொள்ளும் நமது கருதுகோள் மேலும் வலுப்படுகின்றது. இக்கருதுகோளானது அற்று, ஆந்த, போல் ஆகியவற்றை உள்வினைக் குடும்பத்தைச் சேர்ந்தவையாகக் கொள்ள வகை செய்கின்றது.

உள்வினைகள் பலவாதல் போல அவற்றின்முன் பயனிலையாகச் செயற்படும் வினைகளும் பல்வேறு வாய்பாட்டினவாய் அமைதல் தவிர்க்கமுடியாததாகின்றது. போலென் கிளவியின் முன் நிகழும் வினைப்பயனிலைகளும், அற்று மற்றும் ஆங்கு ஆகியவற்றின் முன் நிகழும் வினைப் பயனிலைகளும் ஒரே வாய்பாட்டினவாய் அமைவதில்லை. அற்றும் ஆங்கும் முன்னர்க் குறிப்பிட்டது போல் செய்து வாய்பாட்டு வினைகளையடுத்து நிகழவல்லவை. இவற்றுள் ஆங்கென் கிளவி செய்பு வாய்பாட்டு வினைகளையடுத்தும் நிகழவல்லது.[2] இதனின்றும் தமிழ் வாக்கிய அமைப்புக்களின் வரலாறு பற்றிய ஆய்வில் செய்து, செய்பு ஆகிய இரண்டு வாய்பாட்டு வினைப்பயனிலைகளும் பொதுவினைகள் (Impersonal Verbs) ஆகும். இத்தகைய நிகழ்ச்சியானது தமிழில் சிறப்பு வினைகளின் (Personal Verbs) தோற்றம் வரலாற்று நிலையில் பிந்தியது என்பவை உணர்த்துவதாக உள்ளது. தொல்காப்பியம் பொதுவினைகள் பயனிலையாகச் செயல்படும் நிலையைப்பற்றி யாண்டும் பேசவில்லை. இதனின்றும் செய்தற்று, செய்தாங்கு வாய்பாட்டுத் தொடர்கள்[3] பழந்தமிழில் பயின்று வழங்கிய போதிலும் அவை பழந்தமிழுக்கு உரிய தொடர்கள் அல்லவென்பதும், பழந்தமிழுக்கு முந்தைய மொழியில் நடை முறையில் வழங்கிய தொடர்கள் என்பதும், பழமையைப் போற்றும் வகையில் தன்காலத்தில் வழக்கற்றுப்போன மேற்படி வாய்பாட்டுத் தொடர்களைப் பழந்தமிழானது பொன்னேபோல் போற்றிப் பயன்படுத்திக்கொண்டது என்பதும் தெளிவாகின்றது. மலையாளம் ஒன்றைத்தவிர ஏனைய திராவிட மொழிகளில் பெரும்பாலும் சிறப்பு வினைகளை பயனிலைச் செயற்பாட்டில் அமையும் நிலை காணப்படுகின்றது. மேலே தமிழில் காணப் படுவதுபோல் பிற திராவிடமொழிகளிலும் பொதுவினைகள் பயினிலையாகச் செயல்படுவதைக் குறிக்கும் அகச்சான்றுகள் கிடைக்குமாயின்[4] முன்திராவிடம் (Pre Dravidian) பொது வினைகளைப் பயனிலையாகக் கொண்டு செயல்பட்டனவென்றும். சிறப்பு வினைகளின் தோற்றம் திராவிடமொழிகளின் வரலாற்றில் பிந்திய நிலையினதென்றும் துணியலாம். தமிழில் முற்று வினைகள் உள்வினைகளாகக் கொள்ளத்தக்கவை என்ற

கருதுகோள் (பார்க்க: Kothandaraman. R, 1984) இத்துணிபினை மேலும் வலுவுள்ளதாக்குகின்றது.

இனி அற்று, ஆங்கு ஆகியவற்றைப்பற்றிச் சற்று விரிவாகச் சிந்திக்கலாம். இந்த வகையில் முதலில் அற்றென் கிளவியைக் கருத்தில் கொள்ளலாம்.

செய்தற்று வாய்பாட்டுத் தொடர்களில் நிகழும் அற்றென் கிளவியானது தெலுங்கில் அட்டு எனத் திரிந்து அனி (= என்று) என்பதனோடு சிதறிய வழக்கில் அமையும் நிலை காணப் படுகின்றது. பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் இந்த நிலையைக் காணலாம்.

17. (அ) மீரு அக்கட வச்சினட்டு வாடு செப்பினாடு
'நீங்கள் அங்கே வந்தாற்போல் அவன் சொன்னான்'

(ஆ) மீரு அக்கட வச்சினாரு அனி வாடு செப்பினாடு
'நீங்கள் அங்கே வந்தீர்கள் என்று அவன் சொன்னான்'

18. (அ) ராமுடே தானி செப்பினட்டு தெலுஸ்துந்தி
'ராமனே அதைச் சொன்னாற்போல் தெரிகின்றது'

(ஆ) ராமுடே தானி செப்பினாடு அனி தெலுஸ்துந்தி
'ராமனே அதைச் சொன்னான் என்று தெரிகிறது'

19. (அ) மீரு நின்ன அக்கட லேன்னட்டு ராமுடு செப்பினாடு
'நீங்கள் நேற்று அங்கே இல்லை என்றாற்போல்[5] ராமன் சொன்னான்'

(ஆ) மீரு நின்ன அக்கட லேது/லேரு அனி ராமுடு செப்பினாடு
'நீங்கள் நேற்று அங்கே இல்லையென்று ராமன் சொன்னான்'

இந்த எடுத்துக்காட்டுக்களில் அட்டு (< அற்று,) அனி இரண்டும் சிதறிய வழக்கில் நிகழ்வதாலும், அனி என்னும் உறுப்பு பயனிலையாக நிகழும் உறுப்பினையடுத்து நிகழ்வதாலும்

மேற்படி உறுப்புக்கள் இரண்டும் உள்வினைகளாகக் கொள்ளத் தக்கவையாகின்றன. தமிழில் அற்று' முற்று வாக்கியங்களில் மட்டுமே செய்து வாய்பாட்டுப் பயனிலைகளையும், பெயர்ப் பயனிலைகளையும் அடுத்து நிகழ்கின்றது.[6] ஆனால் தெலுங்கில் அற்றின் திரிபாகிய அட்டு எச்சவாக்கியங்களில் மட்டுமே நிகழ்வதாகின்றது. இந்த எச்சவாக்கியங்கள் கோப்புத் தொடரன்களாக (Complement Clauses) அமைவது குறிப்பிடத் தக்கதாகும். தமிழில் போல், தெலுங்கில் அட்டு ஒப்புமை குறிக்கும் கடப்பாடில்லை.[7] இந்த நிலையினை மேலேயுள்ள தெலுங்கு எடுத்துக்காட்டுக்களில் காணலாம்.

செய்தற்று வாய்பாட்டுப் பயனிலைத் தொடர்களில் ஒப்புமை குறித்து நிற்கும் அற்று என்பதானது வல்லொலி வடிவமாகும். இதற்கு இனமான மெல்லொலி வடிவம் அன்று என்பதாகும்.[8] இந்த மெல்லொலி வடிவமானது தமிழில் பயனிலையாகச் செயற்படும் உறுப்பினையடுத்து நிகழும் நிலையைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளில் காணலாம்.

20. காதலற் காண்கிலேன் கலங்கிநோய் கைமிகும்
ஊதுலை தோற்க வுயிர்க்கும்என் நெஞ்சன்றே[9]
(சிலம்பு .18. 12&13)

21. சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா விறைவன்கை வேலன்றே
பாரிரும் பெளவத்தின் உள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே
(சிலம்பு. 24. 8)

22. தேவாதி தேவனவன் சேவடி சேர்துமன்றே[10]
(சீ. சி. கடவுள் வாழ்த்து)

23. வல்லனவும் அமைத்து ஆங்கெழு நாளிடைச்
செல்வதொர் மாயயில் செய்தனன் அன்றே
(சீ. சி. 235.3&4)

24. தம்பெரு மானடி சார்ந்தனள் அன்றே
(சீவசிகந்தாமணி. 221. 4)

25. கின்னரரும் மெய்ம்மறந்து சோர்ந்தார் அன்றே
(சீ. சி. 647. 4)

26. பாடுடை மயிலந் தோகை பைபய வீழ்ந்த தன்றே
(சீ. சி. 300.4)

27. கூவிய துருவம் கொண்டோர் தெய்வதம் குறுகிற் றன்றே
(சீ. சி. 314.4)

இந்த எடுத்துக்காட்டுக்களில் நிகழும் அற்றென் கிளவி வழக்கற்றுப் போயினும் அதன் நிகழ்ச்சியானது பயனிலையாகச் செயற்படும் உறுப்பினையடுத்து அமைவதால் அடிப்படையில் அது உள்வினையாகச் கொள்ளத்தக்கதாகின்றது.[11] உரை ஆசிரியர்கள் இதனை வெற்றுறுப்பாகவே கொள்கின்றனர். காரணம், நடைமுறையில் இதன் வினைத்தன்மை செயலிழந்து போனதேயாகும். ஆயினும் பயனிலையாகச் செயல்படும் உறுப்பினையடுத்தே அற்றென் சிளவியின் நிகழ்ச்சி போற்றப் படுவதால் இது உள்வினைக் குடும்பத்தில் வைத்தெண்ணத்தக்க தாகின்றது. அன்றென் கிளவிக்கும் அற்றென் கிளவிக்கும் இடையில் உள்ள குறிப்பிடத்தக்க இரண்டு வேறுபாடுகள் முந்தியது பிந்தியதைப் போல் ஒப்புமைப்பொருண்மையை உணர்த்துவதில்லை; இரண்டும் பெயர்ப்பயனிலைகளையடுத்து நிகழுமாயினும் வினைப்பயனிலையைப் பொறுத்தவரை அன்றென் கிளவி சிறப்பு வினையடுத்தும், அற்றென்கிளவி செய்து வாய்பாட்டுப் பொதுவினைகளையடுத்தும் நிகழ்வனவாகின்றன.

அற்றென்கிளவி ஒப்புமைப் பொருண்மையைத் தவிர பிற பொருண்மைகளைக் குறிக்கும் நிலை பழந்தமிழில் காணப்பட வில்லை. இந்த வகையில் ஆங்கென்கிளவி அற்றென் கிளவியின் என்றும் வேறுபடுவதுடன் வினைத்தன்மையற்ற கிளவிகளை அடுத்தும் நிகழத்தக்கதாகின்றது. இதனைப் பின்வரும் எடுத்துக் காட்டுக்களில் காணலாம்.

28. நின்னாங்கு வரூஉமென் நெஞ்சினை
என்னாங்கு வாராது ஓம்பினை கொண்மே
(கலித்தொகை 23. 18&19)

இவ்வெடுத்துக்காட்டில் ஆங்கென் கிளவியானது பெயர்நிலைக் கிளவியை அடுத்து நிகழ்வதைக் காணலாம். இங்கே நின்னாங்கு, என்னாங்கு என்னும் தொடர்கள் நின்னோடு (=நின்னிடம்) என்னோடு (=என்னிடம்) ஆகியவற்றோடு முறையே பொருந்தி ஆங்கென் கிளவி இடப்பொருண்மையை உணர்த்துவதாகின்றன.

29. இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்
வளமை விழைத்க்க துண்டோ

(கலித்தொகை 18.7&8)

30. இன்றோர்க்கு என்னாது என்னோடும் சூழாது
ஏல்லாங்கு வாழ்த்தும் என்னாது
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே

(புறம்163. 5-7)

இந்த இரண்டு எடுத்துக்காட்டுக்களிலும் ஓராங்கு வல்லாங்கு ஆகியவை முறையே ஒன்றாக, வன்மையாக என்பவற்றுடன் பொருந்தி ஆங்கென் கிளவியும் ஆகவென் கிளவியும் ஒருதிறத்தன வாகின்றன.

31. வேறுபட் டாங்கே கலுழ்தி யகப்படின்
மாறுபட் டாங்கே மயங்குதி......

(கலித்தொகை 91. 19 & 20)

இவ்விரண்டு அடிகளுக்கும் நச்சினார்கினியர் பின்வருமாறு உரை வகுக்கிறார்:

"யான் நின்னோடு வேறுபட்ட அப்பொழுதே நெஞ்சு கலங்குவை;
யான் வேறுபடாமல் நின்கையிலே அகப்படுவேனாயின் அக்கலக்கத்தை மாறுபட்ட பொழுதே என்னை யிகழ்ந்து பரத்தையர்பாற் சேறற்கு மனம் மயங்குவை"

நச்சினார்க்கினியரின் இந்த உரைக்குறிப்பைக் கருத்தில் கொண்டால், (31)-இல் நிகழும் வேறுபட்டாங்கு, மாறுபட்டாங்கு

ஆகிய தொடர்கள் முறையே வேறுபட்ட பொழுது/ வேறுபட்ட வுடன், மாறுபட்டபொழுது / மாறுபட்டவுடன் ஆகிய தொடர் களுடன் பொருந்தி ஆங்கென் கிளவி காலப்பொருண்மையை உணர்த்துவதாகின்றது.

ஆங்கென் கிளவி பொதுநிலைக்கிளவியாக நிகழும் போக்கினைப் பின்வரும் எடுத்துக் காட்டில் காணலாம்.

32. பொற்றேர்ச் செழியன் மதுரை மாநகர்க்கு
உற்றதும் எல்லாம் ஒழிவின் றுணர்ந்தாங்கு
என்பதிப் பெயர்ந்தேன். (சிலம்பு. 27. 84-86)

இந்த எடுத்துக்காட்டில் நிகழும் உணர்ந்தாங்கு என்னும் தொடர் உணர்ந்தேனாய் / உணர்ந்தேனாகி என்பதுடன் பொருந்தி ஆங்கென் கிளவியும் ஆய் அல்லது ஆகி என்னும் கிளவியும் ஒருதிறத்தனவாகின்றன. பழந்தமிழில் சிறப்புவினை ஆய் / ஆகி என்ற அமைப்பில் நிகழும் தொடர்கள் பொதுவாகச் செய்து வாய்பாட்டு வினைகளுடன் பொருந்துவன வாகின்றன. பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் மூலம் இதனை உணரலாம்,

33. தொடுகழன் மன்னற்குத் தொலைந்தன ராகி
(சிலம்பு. 6. 9)

34. மாதரி தன்னுடன் மடந்தையை யிருத்துதற்கு
ஏதம் இன்றென எண்ணின ளாகி
(சிலம்பு. 15. 123 & 124)

இந்த எடுத்துக்காட்டுக்களில் நிகழும் தொலைந்தனராகி, எண்ணினளாகி ஆகிய தொடர்கள் முறையே தொலைந்து எண்ணி ஆகிய செய்து வாய்பாட்டு வினையெச்சங்களுடன் பொருந்தி நிற்கின்றன. இவ்வாறே பெரும்பாலான செய்தாங்கு வாய்பாட்டுத் தொடர்களும் செய்து வாய்பாட்டு வினை யெச்சங்களுடன் பொருந்தும் நிலை காணப்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு, ஆங்கென் கிளவியை உள்வினைக் கிளவியின் வினையெச்ச வடிவமாகிய ஆய் என்பதன் மாற்றுருபாகத் துணியலாம். இதன் மூலம் ஆங்கென் கிளவி

அடிப்படையில் உள்வினையென்பது மேலும் உறுதியாகின்றது. உள்வினைகள் இலக்கணப் பொருண்மையை மேற்கொண்டு இலக்கண உருபன்களாகவும் செயல்படத்தக்கவையாதலின் உள்வினையாகிய ஆங்கென் கிளவி மேலே சில எடுத்துக் காட்டுக்களில் இலக்கண உருபனாகச் செயல்படுவதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால் (32)-இல் உள்ளது போன்ற அமைப்புக்களில் ஆங்கென் கிளவியானது பொதுநிலைக் கிளவியாய் அமைந்து உள்வினைத் தன்மையைப் போற்றுவ தாகவே கொள்ளத் தோன்றுகிறது.

அற்றென் கிளவிக்கு நேரான மெல்லொலி வடிவம் அன்று என அமைவதுபோல் ஆங்கென்கிளவிக்கு நேரான வல்லொலி வடிவம் ஆக்கு என்று அமையும், ஆக்கு என்றோர் உள்வினை தமிழில் இல்லையாயினும் இதனடியாகத் தோன்றி, பேச்சுத் தமிழில் பரவலாக வழங்கும் ஆக்கும் என்பதனை ஆங்கென் கிளவிக்கு நேரான வல்லொலி வடிவமாகக் கொள்ளலாம். இவ்வடிவமானது உள்வினைப் பொருண்மையையிழந்து அறுதிப் பொருண்மையை உணர்த்தும் நிலையே தமிழில் காணப் படுகின்றது. இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் தெளிவு படுத்தும்.

35. அது சேவலாக்கும்
36. முருகன் நேற்று வந்தானாக்கும்.

இவ்விரண்டு எடுத்துக்காட்டுக்களிலும் ஆக்கும் பயனிலையாகச் செயற்படும் உறுப்புக்களையடுத்து நிகழ்ந்து அடிப்படையில் உள்வினையாகும் தகுதியைப் பெறுகின்றது. வாக்கியத்தில் பயனிலை உறுப்பைத்தவிர ஏனைய இலக்கணச் செயற்பாட்டில் அமைந்த உறுப்புக்களையடுத்தும் ஆக்கும் நிகழவல்லது என்பதைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் காணலாம்.

37. முருகனாக்கும் நேற்று வந்தது
38. முருகன் நேற்றாக்கும் வந்தது.

இவ்விரண்டு எடுத்துக்காட்டுக்களிலும் ஆக்கும் என்னும் உள்வினை அறுதிப்பொருண்மையதாகி, சிறப்பு வினையாகிய

வந்தான் என்னும் பயனிலையை வந்தது என்னும் பொது வினையாக மாற்றியமைக்கின்றது. இவ்வாறு மாற்றியமைக்கும் ஆற்றல் அறுதிப்பொருண்மைத் தழுவிய உள்வினைக்கு மட்டுமே உண்டு. மலையாளத்தில் இந்தநிலை தெளிவாகக் காணப்படுகின்றது. இம்மொழியில் ஆணு என்பது உள்வினை யாகும். எ-டு. அவன் ராமனாணு 'அவன் ராமனாவான்' இந்த உள்வினையானது வினைப்பயனிலையை அடுத்து நிகழ்வதில்லை. ஆனால் அறுதிப்பொருண்மையை மேற்கொண்டு பயனிலை நீங்க ஏனைய இலக்கண உறுப்புக்களையடுத்து நிகழும்போது பயனிலை வினையின் வடிவமைப்பை மாற்றிவிடுகின்றது. அதனைக் கீழே (40), (41)-இல் உள்ள எடுத்துக்காட்டுக்கள் வாயிலாக அறியலாம்.

39. ராமன் இந்நலெ வந்து 'இராமன் நேற்று வந்தான்'

40. ராமனாணு இந்நலெ வந்நது 'இராமனாக்கும் நேற்று வந்தது'

41. ராமன் இந்நலெயாணு வந்நது 'இராமன் நேற்றாக்கும் வந்தது'

மலையாளத்தில் உள்வினையானது அறுதிப்பொருண்மையை உணர்த்தும் இலக்கண உருபனாகச் செயல்படும் நிலையானது, தமிழில் அறுதிப்பொருண்மையை உணர்த்தும் ஆங்கும் என்னும் இலக்கண உருபனை உள்வினையாகக் கொள்ள வகை செய்கின்றது. இதனின்றும், ஆங்கும் என்பதற்கு நேரான மெல்லொலி வடிவமாகிய ஆங்கென் கிளவியும் உள்வினையாகக் கொள்ளத்தகும் பெற்றியதாகின்றது.

அற்று மற்றும் ஆங்கு ஆகிய கிளவிகளின் மீது அமைந்த இந்த ஆய்வானது இக்கிளவிகளை உள்வினைக்குடும்பத்துக்கு உரியனவாகக் கொள்கின்றது; செய்து மற்றும் செய்பு வாய்பாட்டுப் பொதுவினைக்கு பயனிலையாகச் செயல்படும் வாக்கிய அமைப்புக்களை மீட்டுருவாக்கம் செய்யத் துணை புரிகின்றது; மொத்தத்தில் தமிழ்ப்பயனிலைகளின் வரலாற்று அமைப்பினை அறிந்துகொள்ள இத்தகைய ஆய்வு ஓர் தோற்றுவாயாக அமைகின்றது.

அடிக்குறிப்புகள்

1. முருகன் ராமன் பாடியதைப் போல் பாடினான் என்ற இந்த வாக்கிய அமைப்பில் உள்ள பாடியதைப் போல் என்ற தொடரில் நிகழும் ஐயென் கிளவி வேற்றுமை உருபாகக்கொள்ளத்தக்கதன்று. இதுபற்றி வேறொரு தனி ஆய்வில் விரிவாகச் சிந்திக்கப்படும்.

2. செய்பு வாய்பாட்டு வினைகளையடுத்து ஆங்கென் கிளவியின் நிகழ்ச்சி பெருவழக்கினதன்று. தவிரவும் இவ்வாய் பாட்டு வினைகளையடுத்து நிகழ்கையில் ஆங்கென் கிளவி ஒப்புமைப் பொருண்மையை உணர்த்தும் நிலை பழந்தமிழில் காணப்படவில்லை. இந்த வகையில் பின்வரும் எடுத்துக் காட்டுக்கள் கருத்தில் கொள்ளத்தக்கனவாகும்.

(அ) வையத்துள் விழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (குறள் 50)

(ஆ) போழ்துள்ளார் துறந்தார்கட் புரிவாடும் கொள்கையைச்
சூழ்பாங்கே கடரிழாய் கரப்பென்மன் ...
(கலித்தொகை 29. 14 & 15)

பழந்தமிழில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்படும் இத்தகைய எடுத்துக்காட்டுக்களில் ஆங்கென் கிளவி ஒப்புமைக் கிளவியை உணர்த்த வில்லையாயினும் மேற்படி கிளவியானது அடிப்படையில் உள்வினையாகலின் இதன்முன் நிகழும் செய்யு வாய்பாட்டு வினைகள் பயனிலைச் செயற்பாட்டினவாகவே கொள்ளப்படும்

3. இத்தொடர்களுடன் செய்தென வாய்பாட்டுத் தொடர்களையும் சேர்த்துக் கொள்ளலாம். பழந்தமிழில் மிகுதியாகப் பயின்று வழங்கும் செய்தென்

வாய்பாட்டுத் தொடர்கள் செய்ததுபோல், செய்ததால் ஆகிய வாய்பாட்டுத் தொடர்களின் பொருண்மையுடன் பொருந்துவனவாகும். பின்வரும் எடுத்துக் காட்டுக்களைக் கருத்தில் கொள்ளவும்.

(அ) விரைமலர் ஏந்தி விசும்பூ டிழிந்து
பொருவறு பூங்கொடி பூமியிற் பொலிந்தென
வந்து தோன்றிய மணிமே கலாதெய்வம்
(மணிமேகலை 10. 3—5)

(ஆ) தொடியோர் மடிந்தெனத் துறைபுலம் பின்றே
(நற்றிணை 49.2)

இவ்வெடுத்துக்காட்டுக்களில் நிகழும்பொலிந்தென, மடிந்தென ஆகிய செய்தென வாய்பாட்டுத் தொடர்கள் முறையே பொலிந்ததுபோல், மடிந்ததால் ஆகிய தொடர் களின் பொருண்மையுடன் பொருந்துவனவாகும் செய்தெனவாய்பாட்டுத் தொடர்களில் நிகழும் என வென்கிற ஒப்புமைப் பொருண்மையையும் உணர்த்து வதாகலின் அற்று, ஆங்கு, போல் ஆகியவற்றைப் போன்றே இக்கிளவியும் உள்வினையாகக் கொள்ளத் தக்கதாகின்றது. மேலேயுள்ள இரண்டு எடுத்துக்காட்டுக் களிலும் எனவென்கிற ஒப்புமை'ஏது ஆகிய இலக்கணப் பொருண்மைகளை மேற்கொண்டு உள்வினைத்தன்மையை இழந்து இலக்கண உருபனாகச் செயல்படுகின்றது.

4. கிடைத்தற்கு வாய்ப்பு உள்ளது. இந்த வகையில் கோதண்டராமனில் (1984) காணப்படும் பெயரெச்ச வினைகள்பற்றிய ஆய்வு கருத்தில் கொள்ளத்தக்க தாகும்.

5. லேன்னட்டு என்ற தெலுங்குத் தொடருக்கு நேரான தொடர் தமிழில் காணப்படவில்லை.

6. அற்றென்கிளவி பெயர்ப்பயனிலைகளையடுத்தும் நிகழ வல்லது என்பதைப் புறநிலை அமைப்பின் மீது அமைந்த நிகழ்ச்சியைக் கொண்டு மட்டுமே சொல்ல முடியாது.

7. இது தெளிபுபடுத்தப்படவேண்டிய ஒன்றாகும்.

8. வல்லொலி வடிவத்துக்கு இனமானமெல்லொலி வடிவமும், மெல்லொலி வடிவத்துக்கு இனமான வல்லொலி வடிவமும் திராவிடமொழிகளில் காணப்படுகின்றன. எ-டு: நட்பு - நண்பு (இரண்டும் தமிழில்); வெற்றி-வென்றி (இரண்டும் தமிழில்); சுட்டு (தமிழ்) - சுண்டு (மலையாளம்).

9. இவ்வெடுத்துக்காட்டில் நிகழும் அன்றென் கிளவியை அசை நிலைக் கிளவியாகக் கொள்வார் அரும்பதவுரைகாரர் (சிலம்பு. உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு 1944)

10. நச்சினார்க்கினியர் அன்றே என்பதனை அன்று+ஏ என்ற அமைப்பினதாகக் கொண்டு அன்றென் கிளவியை அசையென்றும், ஏகாரம் ஈற்றசையென்றும் குறிப்பர்.

11. அன்றென் கிளவியைப் போன்றே ஆல், ஒரும் ஆகியவையும் பழந்தமிழில் வழக்கற்றுப்போன நிலையில் பயனிலையாகச் செயல்படும் உறுப்புக்களையடுத்து அசை நிலைக்கிளவியாக நிகழ்கின்றன. இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் காண்லாம்.

(அ) ...இளையோற்கு, இரண்டு எழுந் தனவாற் பகையே
(புறம். 96. 2 & 3)

(ஆ) அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா (குறள் 366)

நச்சினார்க்கினியர் ஆல், ஒரும் ஆகியவற்றை இடைச் சொற்களாகக் கொள்வார் (தொல். சொல். 298. பவானந்தாகழக வெளியீடு 1941). இவை பயனிலையாகச் செயல்படும் உறுப்பினையடுத்து நிகழ்வதால் அடிப்படையில் உள்வினைகளாகக் கொள்ளத் தக்கவையாகின்றன. நடைமுறைத் தமிழில் இவை அசைநிலைக்

கிளவிகளாகக் கொள்ளப்படுவதால் உள்வினையானது தன்பொருண்மையை இழந்து அல்லது தன்பொருண்மை மறக்கப்பட்டு வெற்றுறுப் பாகவும் நிலைகுலையும் தன்மையது என்பது பெறப்படுகின்றது.

சுருக்க விளக்கம்

குறள் = திருக்குறள்

சிலம்பு = சிலப்பதிகாரம்

சீ. சி. = சீவகசிந்தாமணி

சொல் = சொல்லதிகாரம்

தொல் = தொல்காப்பியம்

நாலாயிரம் = நாலாயிரத்திவ்யப்பிரபந்தம்

புறம் = புறநானூறு

கருவி நூல்கள்

கலித்தொகை
(நச்சினார்க்கினியர் உரை)
காசி விசுவநாதன் செட்டியார் பதிப்பு 1637

குறுந்தொகை
உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு 1937

சிலப்பதிகாரம்
உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு 1944

சீவகசிந்தாமணி
(நச்சினார்க்கினியர் உரை)
உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு

திருக்குறள்
(பரிமேலகழர் உரை)
கழக வெளியீடு

தேவாரம்
அப்பர் (அடங்கல் முறை)
மயிலை இளமுருகனார் பதிப்பு 1950

தேவாரம்
சம்பந்தர்
தருமபுரி ஆதீன வெளியீடு
தேவாரம்
சுந்தரர் (அடங்கல்முறை)
மயிலை இளமுருகனார் பதிப்பு 1950

தொல்காப்பியம்
சொல்லதிகாரம்
(நச்சினார்க்கினியர்உரை)
பவானந்தர் கழக வெளியீடு 1941

நற்றிணை
(அ. நாராயணசாமி
ஐயர் உரை), கழக வெளியீடு 1952

நாலாயிரத்திவ்யப்பிரபந்தம்
கி. வேங்கடசாமி ரெட்டியார் பதிப்பு 1981
திருவேங்கடத்தான் திருமன்ற வெளியீடு

புறநானூறு
உ. வே. சாமிநாதய்யர்
பதிப்பு 1935

மணிமேகலை
காசிவிசுவநாதன்
செட்டியார் பதிப்பு 1946

Kothandaraman R
1984 Relative Clause
and Participial Nouns: A New per
adjective. I JDL Vol. XIII. Part. I.

மொழிப் புதுமையாக்கத்தில் அகராதியின் பங்கு

இ. அண்ணாமலை
மைசூர்

புதிய தமிழ் என்று சொல்லும்போது புதிய காலத்தில் வழங்கும் தமிழ் என்று பலரும் பொருள்கொள்ளுவார்கள். புதிய காலம் என்னும் போது புதிய வாழ்க்கை மதிப்பீடுகளைக் கொண்டகாலம் என்றே பொருள்கொள்ளவேண்டும். இந்தப் புதிய மதிப்பீடுகளை வெளியிடும் தமிழையே புதிய தமிழ் என்று சொல்லவேண்டும். புதிய மதிப்பீடுகள் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடிப்படையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களினால் பிறப்பவை. வாழ்க்கை நோக்கிலும் நுகர்விலும் ஏற்பட்டுவரும் மாற்றங்களால் பண்பாட்டு மாற்றங்கள் விளைகின்றன. சமூகத்தின் அமைப்பு முறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களினாலும் புதிய மதிப்பீடுகள் பிறக்கின்றன. தமிழ்ச் சமூகத்தில் ஜாதி, சமயம், விவசாயம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த வாழ்வுநெறி முறையே வர்க்கம், அரசியல், தொழிலியல் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்ததாக மாறும்போது, புதிய மதிப்பீடுகள் பிறக்கின்றன. இவற்றையெல்லாம் உள் வாங்கி மொழி மாறுதல் அடைகிறது. சமூக வளர்ச்சியில் ஆட்சி அலுவலகங்கள், நீதிமன்றங்கள், தகவல் பரப்புச் சாதனங்கள் என்று புதிய அமைப்புகள் உருவாகும் போது அவற்றின் தேவைகளை நிறைவேற்ற மொழி மாறுதல் அடைகின்றது.

அகத்தூண்டுதலாலும் புறத்தூண்டுதலாலும் சமூகத்தில் ஏற்படும் புதிய போக்குகளாலும் மொழி மாறுதல் அடைகிறது. புதிய தமிழில் இரண்டு புதிய சமூகப் போக்குகளின் தாக்கம்

இருக்கிறது எனலாம். முதலாவது, தற்காலத்தில் வளர்ந்துள்ள சமூகமாற்றத்தால் வந்த இலக்கிய வளர்ச்சி. வட்டார இலக்கியத்தின் சிறப்பு அம்சம் வட்டாரத்துக்கே உரித்தான இருத்தலனுபங்களை தமிழ்ச்சமூகத்தின் பொது அனுபவமாக்கு வதாகும். பேச்சு மொழியில் மட்டுமே வெளிப்படுத்தப்பட்டு வந்த இந்த வட்டாரக்கலாச்சார அனுபவங்கள் எழுத்து தமிழின் மூலம் பொதுமைப்படுத்தப்படுகின்றன. தமிழ்ச் சமூகத்தின் அனுபவ அடிப்படை விரிவடைகிறது. இரண்டாவது, அறிவியல் வளர்ச்சி. தற்காலத்தில் அறிவுநிலை ஒருமொழிச் சமூகத்தைக் கடந்து உலகம் தழுவியதாக இருக்கிறது. இந்த உலகளாவிய அறிவின் அடிப்படையில் பலஅறிவுத் துறைகளின் கருத்துகளும் பிரச்சனைகளும் எழுதப்படுகின்றன. அளவில், பரந்த தன்மையில் வேறான இந்தப் புதிய அறிவு வெளியீட்டுக்கு ஈடுகொடுக்கிறது புதிய தமிழ். இவ்வாறு புதிய தமிழ் இரண்டு வகைகளில் குறுகிய வட்டத்திலிருந்து வெளிவந்திருக்கிறது, தன் பரப்பை விரிவாக்கியிருக்கிறது. இவை இரண்டும் புதிய தமிழின் உள்ளடக்கத்தில் விரிவை ஏற்படுத்தி அதன் மூலம் மொழியின் பொருளிலும் வடிவத்திலும் புதிய பொருள்கள், புதிய சொற்கள், புதிய தொடர்கள், புதிய வெளியீட்டு வடிவங்கள் என்ற முறையில் - மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன.

மேலே சொன்னவை தமிழின் உள்ளடக்கத்தில் மாற்றம் ஏற்படுத்திய சமூகப் போக்குகள். சில சமூக மாற்றங்களின் விளைவாக தமிமை வெளிப்படுத்தும் சாதனங்களில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. செய்தித்தாள்கள், இதழ்கள் போன்ற தகவல் தொடர்புச் சாதனங்கள் தோன்றியிருக்கின்றன. தமிழின் பரப்பு விரியும் போது அதன் தனி நிலையைப் பாதுகாக்க வேண்டும் என்ற தற்காப்பு உணர்வு ஒரு சமூகப் போக்காக உருவாகிறது. இந்த இரண்டு சமூகப்போக்குகளும் புதிய தமிழின் வடிவத்தில் நேரடியான மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. முதலாவது, புதிய இலக்கிய வாதிகளாலும் பத்திரிக்கையாளர்களாலும் கொண்டுவரப் பட்ட எளிமையாக்கம். இது மொழியைப் புரிந்து கொள்தலை

அதிகமாக்க ஏற்படும் மாற்றம். இது பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் உள்ள இடைவெளியைக் குறைத்தல், சொல்லின் வடிவ வேறுபாடுகளைத்தவிர்த்து அதன் வடிவச் சிதைவைக் குறைத்தல் என்ற இரண்டு முறைகளில் செய்யப் படுகிறது. இடைவெளியைக் குறைப்பது சொல்வடிவத்தை மட்டும் (Spelling) விட்டுவிட்டு, உருபியல், தொடரியல், பொருளியல் முதலிய மற்ற எல்லா இலக்கண நிலைகளிலும் நடக்கிறது. 'படிக்கும்போது', 'படிப்பவர்கள்', 'படிப்பிற்கு' போன்ற எழுத்து வழக்கு வடிவங்களோடு 'படிக்கிறபோது', 'படிக்கிறவர்கள்', 'படிப்புக்கு' என்ற பேச்சுவழக்கு வடிவங்கள் பரவலாக எழுதப்படுகின்றன. 'அவன் கோபங்கொண்டான்', அவன்கோபமடைந்தான்' என்ற எழுத்து வழக்குக்கே உரிய தொடர்களோடு 'அவன் கோபப்பட்டான்', 'அவன்கோபித்துக் கொண்டான்', 'அவனுக்கு கோபம் வந்தது', என்ற பேச்சு வழக்குத் தொடர்கள் பெருவழக்காகி வருகின்றன. சொல்வடிவத்தைச் சிதைக்காமல் இருக்க, சந்தி நீக்கி, 'கோபம் கொண்டான்', 'கோபம் அடைந்தான்' என்றும் 'மரம்தான்' 'பல்பொடி' என்றும் எழுதும் வழக்கம் மிகுதியாகி வருகிறது இவற்றில் பல்பொடிபோன்ற எடுத்துக்காட்டுகள் பேச்சு மொழியின் உச்சரிப்போடு ஒத்துப்போனாலும் 'மரம்தான் போன்ற எடுத்துக்காட்டுகள் உச்சரிப்பிலிருந்து வேறுபடுகின்றன இதனால்தான் இடைவெளியைக குறைப்பதையும் சொல்சிதைவைக் குறைப்பதையும் வேறுவேறு போக்குகளாக கொள்ள வேண்டும். நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்துவதும் மொழியைப் புரிந்துகொள்வதை அதிகப்படுத்துகிறது; எனவே அதுவும் எளிமையாக்கத்தின் ஒரு அம்சமே.

இரண்டாவது, தமிழ்ப் புலவர்களால் கொண்டுவரப்பட்ட தூய்மையாக்கம். இது மொழியை இனத்தின் அடையாளமாகத் தனிமைப்படுத்தம் நோக்கத்தில் பிறந்தது. இது பிறமொழிச் சொற்களையும் கொச்சைச் சொற்களையும் எழுத்து மொழியி லிருந்து. விலக்குகிறது மேலே உள்ள எடுத்துக் காட்டுத் தொடர் களில் 'கோபம்' என்பதற்குப் பதில் 'சினம்' என்ற சொல் ஏற்ற தாகக் கொள்ளப்படும். இது சொல்லை மட்டும் மாற்றுவதல்ல. சொல்மாற்றத்தால் சில சொடர்களைப் பயன்படுத்தமுடியாமல்

போகலாம். 'அவன் சினப்பட்டான்', 'அவனுக்குச் சினம் வந்தது' என்பன வழக்கற்றவை; அல்லது வழக்குக் குறைவானவை. பழைய இலக்கியச் சொற்களை அல்லது புதிதாக உருவாக்கில் நீண்ட சொற்களை வழக்கில் உள்ள சொற்களுக்குப் பதிலாகத் தூய்மை கருதிப்பயன்படுத்தும் போது மொழியைப் புரிந்து கொள்ளுதல் குறையலாம். அப்போது எளிமையாக்கத்துக்கும் தூய்மையாக்கத்துக்கும் முரண் ஏற்படுகிறது. மொழியின் பரப்பு விரிவதன் விளைவாக புதிய தமிழுக்கு வரும் வட்டாரச் சொற்களையும் வழக்குகளையும் அயல்மொழிச் சொற்களையும் தொடர்களையும் தூய்மையாக்கம் மறுக்கவோ மறிக்கவோ முனையும் போது மொழியில் முரண் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட முரண்களின ஊடாட்டத்தின் விளைவுதான் புதியதமிழை இறுதியில் நிர்ணயிக்கிறது.

எந்த மொழியிலும் புதுமையாக்கத்தை மூன்று கூறுகளின் அடிப்படையில் விளக்கலாம். எந்தச் சமூகத்துக்கும் எந்த மொழிக்கும் பொருந்தும் இந்தப் பொதுக்கூறுகளின் அடிப்படையில் புதுமையாக்கத்தை விளக்கும்போது புதுமையாக்கத்துக்கும் (modernisation) மேனாட்டாகத்துக்கும் (westernisation) உள்ளவேறுபாடுவிளங்கும். தமிழ்புதுமையடைய வேண்டும் என்று சொல்லும்போது ஆங்கிலம்போல் ஆகவேண்டும் என்று பொருளல்ல; அதாவது ஆங்கிலத்தை மாதிரியாகக் கொண்டு அதில் உள்ள கூறுகளையெல்லாம் தமிழுக்குக் கொண்டு வரவேண்டும் என்று பொருளல்ல. புதுமை யாக்கத்தின் விளைவாக, சில மொழிக்கூறுகளில் ஆங்கிலமும் புதிய காலத்தின் மொழி என்பதால், தமிழ் ஆங்கிலத்தின் அருகில் வரலாம். இதனால் ஆங்கிலத்துக்கும் தமிழுக்கும் இடையே மொழிபெயர்ப்புத் தன்மை அதிகமாகலாம். இது இரண்டு மொழிகளும் மேற்கொண்ட புதுமையாக்கத்தின் பொதுக் கூறுகளின் விளைவேயன்றித் தமிழ் ஆங்கிலத்தின் கூறுகளை ஏற்றுக்கொண்டதன் விளைவு அல்ல. அதாவது, புதியதமிழ் ஆங்கிலத்தின் போலி அல்ல, புதியகாலத்தின் தேவைகளின் வெளிப்பாடு.

புதுமையாக்கத்தின் பொதுமையான மூன்று கூறுகளில் முதலாவது தொழில் நுட்பத்திறனை மொழிக்குக் கொண்டு வருவது. இடத்தையும் காலத்தையும் கடந்த மொழிப் பரிமாற்றத்துக்கும், மொழிப்பரிமாற்றத்தின் வேகத்தையும் எட்டலையும் (reach) அதிகப்படுத்துவதற்கும், மொழியின் உள்ள அடக்கத்தைப் பெருமளவில் சேமித்துவைப்பதற்கும் நொடியில் திரும்ப எடுத்து பயன்படுத்துவதற்கும் எழுத்துமுறை, அச்சு, தட்டச்சு, தொலையச்சு, கணிப்பொறி முதலிய தொழில் நுட்பச் சாதனங்கள் துணைபுரிகின்றன. இந்தச் சாதனங்கள் மொழியின் வளத்தை (resource) முழுமையாகவும் திறமையாகவும் பயன்படுத்த வாய்ப்பு அளிக்கின்றன. தொழில் நுட்பம் இயற்கை வளப் பயன்பாட்டை அதிகப்படுத்துவதைப் போலவே மொழிவளப்பயன்பாட்டையும் அதிகப்படுத்துகிறது. புதிய காலத்தின் அடிப்படையான இன்றியமையாத தேவை இது

புதுமையாக்கத்தில் இரண்டாவது கூறு மொழிவளத்தை விரிவுபடுத்துவது. இது புதிய சொற்கள், புதியநடைகள், புதிய வெளிப்பாட்டு வடிவங்கள் ஆகியவற்றைத் தோற்றுவிப்பதன் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இவைமொழிக்குப் பன்னிலையைத் (heterogenity) தருகின்றன. தமிழில் அறிவியல் கலைச்சொற்கள், சட்டக்கலைச் சொற்கள் என்றும் இதழியல் நடை, நிர்வாக மொழி நடை என்றும் சிறுகதை வடிவம், விளம்பர வடிவம் என்றும் புதிய மொழிநிலைகள் தோன்றி யிருக்கின்றன. இவற்றின் தோற்றத்தால் மொழியின் அமைப்பிலும் இலக்கணத்திலும் மாறுதல்கள் ஏற்பட்டு இருக்கின்றன. கலைச் சொற்களில் புதிய ஒலியன்களும் மெய்மயக் கங்களும், புதிய நடைகளில் புதிய தொடர்களும், புதிய வடிவங்களில் புதிய தருக்க அமைப்புகளும் தொடர் அமைப்புகளும் (rhetorics) தோன்றியிருக்கின்றன.

புதுமையாக்கத்தின் மூன்றாவது கூறு புதிய சமூக மதிப்பீடுகளை வெளியிடும் வகையில் அமையும் மொழிப்பொருள் அமைப்பு (semantic structure) மாறுதல்கள் மேலே குறிப்பாகச் சொன்னது போல, புதிய தமிழ்ச் சமூகத்தில் மதிப்பீட்டு மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இதன் விளைவாக ‘நாவிதன்’, ‘வண்ணான்’

என்று பிறந்த குலத்தின் அடிப்படையில் உள்ள பெயர்கள 'முடித்திருத்துவோர்' 'சலவைத்தொழிலாளி' என்று ஏற்ற தொழிலின் அடிப்படையில் மாறிவருகின்றன. 'கணக்குப்பிள்ளை' என்ற சொல்பழைய மரபுக்கடைகளின் தொடர்பாகவும் கணக்கர் என்ற சொல் புதிய வணிக நிலையங்களின் தொடர் பாகவும் பயன்படுத்தப்பட்டு மரபும் புதுமையும் வேறுபடுத்தப்படுகின்றன, இதேபோல் உழவு, நெசவு, போன்ற மரபுத்தொழில்களின் கலைச்சொற்களுக்கு இணையாக இவற்றைப்பற்றிய கல்வித் துறைகளில் புதியகலைச்சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. 'மின்னல்' போன்ற இயற்கை ஆற்றலைக் குறிக்கும் சொற்களிலிருந்து மனிதனின் கண்டுபிடிப்புகளைக் குறிக்க 'மின்சாரம்', 'மின்னலை' போன்ற சொற்கள் பிறந்திருக்கின்றன.

மொழியின் புதுமையாக்கம் சமூகப்போக்குகளால் நடை பெறுவதைப்பார்த்தோம். இந்த ஆக்கச் செயல்விரைவுபடுவதும்—சிலசமயங்களில் துவங்குவதும் கூட இலக்கியவாதி. அரசியல்வாதி முதலியோரில் சிலருடைய தனிப்பட்ட செல்வாக்கினால் - அவர்களுடைய சமூக நிலைப்பாட்டால் - நடைபெறலாம். மக்கள் ஒன்று சேர்ந்து போராடும் இயக்கங்களாலும் ஏற்படலாம். இவை தவிர திட்டமிட்ட புதுமையாக்கமும் நடைபெறுகிறது. இது பெரும்பாலும் அரசாங்கத்தால் அல்லது அரசாங்கத்தின் உதவியோடு சிலர் கூடி முடிவெடுத்து நடை பெறுகிறது. வளர்ந்துவரும் நாடுகளில் புதுமையாக்கம் இவ்வாறு திட்டமிடப்படுகிறது. (வளர்ந்துவரும் நாடுகளில் புதுமையாக்கம். இவ்வாறு திட்டமிடப்படுகிறது.) புதுமை யாக்கத்தின் வேகத்தை அதிகமாக்கவும் அது செல்லும் திசையை நிர்ணயிக்கவும் திட்டமிடுதல் உதவுகிறது. திட்டமிடுதல் அதிகாரத்தில் உள்ளவர்களால் செய்யப்படுவதால் அவர்கள் செய்யும் புதுமையாக்கம் அவர்களுடைய சமூகமதிப்பீடுகளையே பிரதிபலிக்கும். மேலும்,புதுமையாக்கம் மேலிருந்து வருவதால் மொழியோடு ஒட்டாமல் தனித்து நிற்கும் நிலையும் ஏற்படலாம் இந்திய மொழிகளில் உருவாக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான அறிவியல், தொழில்நுட்ப, சட்டக் கலைச்சொற்கள் அந்தத் துறைகளைச் சார்ந்தவர்களால் பயன்படுத்தப்படாமல் அகராதிகளிலேயே முடங்கியிருக்கின்றன, அல்லது பாடப் புத்தகங்களோடு நின்று விடுகின்றன. ஒருமொழிபேசுவோரின்

சமூக, பண்பாட்டுத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் புதுமையாக்கம் நடைமுறைக்கு வந்தால் அது மொழியில் ஆழ்ந்த மாறுதல்களை ஏற்படுத்தும். இல்லையென்றால், மேல் பூச்சான ஒப்பனை வேலையாகவே இருக்கும். ஒரு நாட்டில் சமூகத்தின் உள்ளார்ந்த பொருளாதாரவளர்ச்சி இல்லாமல் புதுமைக்கூறுகள் அயல்நாடுகளின் உதவியால் வந்திறங்கலாம் என்று பொருளியலாளர்கள் கூறுகிறார்கள். இத்தகைய புதுமை ஆக்கம் வேரற்ற மரம்போன்றது; சமூகத்தோடு ஒட்டாதது திட்டமிட்ட புதுமையாக்கத்தில் மொழியில் இது நடக்க வாய்ப்பு இருக்கிறது. மேலே சொன்ன குழுக்கள் உருவாக்கும் கலைச் சொற்கள் இந்த வகையைச் சார்ந்தவை. இப்படி மொழிக்கு வரும் கூறுகள் மொழி வளப்பமாகலாம்; ஆனால் மொழிவளர்ச்சி ஆகாது.

மேலே புதிய தமிழில் சில கூறுகளையும் அவற்றைத் தோற்று விக்கும் காரணிகளாக சமூகப் போக்குளையும் பார்த்தோம். இந்தச் சமூகப் போக்குகள் மொழிமாற்றத்தைப் பற்றிய மற்றொரு முக்கியமான தன்மையைக் காட்டுகின்றன. எழுத்து தமிழைக் கையாளுவோர் தமிழறிஞர்கள் மட்டுமல்லாமல் தமிழ்ப் படைப்பாளிகள், மக்கள் தொடர்புச் சாதனங்கள், அறிவியல் ஆளர்கள் என்று விரிந்திருக்கின்றனர். இவர்களும் தமிழின் தன்மையை வரையறுக்கிறார்கள். எனவே புதிய தமிழின் இயல்பு பல்வேறு வாழ்க்கைப்பின்னனியும், நோக்கங்களும் கல்வித் தகுதியும் பயிற்சியும் கொண்டவர்களால் வரையறுக்கப்படுகிறது

புதிய தமிழை உருவாக்குவதில் இவ்வாறு புதிய சமூகப் போக்குகளும் காரணர்களும் ஊடாடும்போது, அதனுடைய ஒப்புக் கொள்ளப்பட்ட விதிமுறைகள் (norms) என்ன என்ற கேள்வி எழுகிறது. பழைய இலக்கண நூல்கள் புதிய விதி முறைகளுக்குப் பொருந்தி வரவில்லை. புதிய இலக்கண நூல்களும் தோன்றவில்லை. பழைய விதிகள் புறக்கணிக்கப் படாமலும் புதிய விதிகள் நிலைபெறாமலும் இருக்கின்ற நிலை உள்ளது. பழைய விதிகள் முற்றிலும் தள்ளப்படாமலும் புதிய விதிகள் முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்படாமலும் ஒரு சமூகம் இயங்குகின்ற நிலையைச் சமூகவியாளர்கள் மயக்க

நிலை (anomic) என்பார்கள். புதியதமிழைப்பொருத்தவரை இத்தகைய மயக்கநிலை இருக்கிறது எனலாம்.

புதிய விதிமுறைகள் பற்றிப் பேசும் போது தமிழைப் பொறுத்தவரை இந்தியத் தமிழுக்கும் இலங்கைத் தமிழுக்கும் ஒரே விதிமுறைகள் உள்ளனவா என்ற கேள்வி பிறக்கிறது. பேச்சுத் தமிழில் இரண்டுக்கும் விதிமுறைகள் வேறு என்பது தெரிந்த ஒன்று எழுத்துத் தமிழில் இரண்டுக்கும் விதிமுறைகள் ஒன்றே என்பது பரவலான நம்பிக்கை. திட்டமிட்ட மொழி மாற்றத்தில் குறிப்பாகக் கலைச்சொல்லாக்கத்தில் இரண்டு நாடுகளிலும் வெவ்வேறு போக்குகள் தெரிகின்றன. இரண்டு நாட்டுத் தமிழ் மக்களுடைய சமூக மதிப்பீடுகளும் சமூகப் போக்குகளும் ஒன்றாக இருந்தால் விதிமுறைகள் ஒன்றாக இருக்கும். இதை முடிவு செய்ய ஆய்வு தேவை. ஆய்வுதான் புதிய தமிழ் இரண்டா அல்லது இரண்டு வகைகள் கொண்ட ஒரு புதிய தமிழா என்று முடிவு செய்ய வேண்டும். இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை வளர்ப்பதிலும் குறைப்பதிலும் அகராதி பெரும்பங்குவகிக்கும்.

புதிய தமிழின் கூறுகளை நிலைப்படுத்த, புதிய விதி முறைகளை வகுக்கச் சில சாதனங்கள் தேவை. சில சமூகங்களில் மொழியாசிரியர்கள் இந்தச் சாதனங்களாக விளங்குகிறார்கள், சில சமூகங்களில் மொழியாசிரியர்கள் இந்தச் சாதனங்களாக விளங்குகிறார்கள், சில சமூகங்களில் மொழிக்கழகங்கள் இந்தப் பணியைச் செய்கின்றன, சில சமூகங்களில் மேற்கோள் நூல்கள் (reference book) இந்தப் பணியைச் செய்கின்றது. தமிழைப் பொறுத்தவரையில் ஆசிரியர்களும் கழகங்களும் பழமையின் மாறாத் தன்மையிலும் அதிகாரவழியிலும் நம்பிக்கை வைத்திருப்பதால், புதிய விதிமுறைகளைக் கொண்டுவர, மயக்க நிலையைக் குறைக்க மேற்கோள் நூல்கள் தேவைப்படுகின்றன. மேற்கோள் நூல்களில் புதிய இலக்கண நூல்கள், அகராதிகள் மொழிப்பயன்பாட்டுக்கையேடுகள் முதலியன முக்கியமானவை. புதிய தமிழுக்கு இவை தேவை. இவை இக்காலத் தமிழின் தரவுத் தொகுப்பின் அடிப்படையில் அமையவேண்டும்.

புதிய மேற்கோள் நூல்கள் புதிய தமிழை வரையறுப்பதற்கும் விதிப்படுத்துவதற்கும் வருவதில் நன்மைகள் இருக்கின்றன. நூல்கள் எல்லோருக்கும் பொதுவானவை; அவற்றில் உள்ள செய்திகளை விரும்பிய நேரத்தில் தெரிந்து கொள்வதற்கு எல்லோருக்கும் சுதந்திரம் உண்டு. ஆசிரியர்களோ தங்களிடம் வருபவர்களையோ தாங்கள் தரும் செய்திகளையோ தங்கள் விருப்பப்படி கட்டுப்படுத்த முடியும். விதிமுறைகளைப் பற்றிய கருத்துகளில் அவர்களுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளின் செல்வாக்கு இருக்கலாம். அகராதி முதலான மேற்கோள் நூல்கள், இன்று எழுதப்படும் தமிழ் நூல்களை வகைப்படுத்தித் தொகுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும் போது அவற்றுக்குச் சமூகப் பிரதிநிதித்துவமும் அதன் மூலம் சமூக ஏற்பும் கிடைக்கிறது. இம்முறையில் அகராதி தரும் செய்திகள் அதைத் தொகுத்தவரின் அல்லது அதை வெளியிட்டவரின் கருத்தாக அல்லாமல் சமூகமதிப்பீடுகளைப் பிரதிபலிக்கும் கருத்தாக அமைகிறது.

அண்மையில் வெளியிடப்பட்டுள்ள க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி இந்த முறையில் தற்காலத்தமிழின் தரவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. தற்கால எழுத்துக் களிலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் பொருளைத் தற்காலப் பயன்பாட்டின் அடிப்படையில் வரையறுத்திருப்பதன் மூலம் இது தற்காலத் தமிழை வரையறுக்கிறது. பழஞ்சொற்களையும் கொச்சைச் சொற்களையும் நீக்கிச் செய்த சொல் இந்த தெரிவு வரையறுப்பை உறுதி செய்கிறது. அருகிவரும் சொல், பெருகி வரும் சொல், உயர்சொல், இலங்கைச் சொல் என்று சொற்களுக்கு வழக்குக் குறிப்புத்தந்திருப்பது புதிய தமிழின் இயங்கு சக்தியைக் காட்டுகிறது. ஒவ்வொரு சொல்லுக்கும் தந்துள்ள பொருள் பகுப்பும் பொருள்வரையறையும் தற்காலத் தமிழின் பொருள் விரிவையும் பொருள் மாற்றத்தையும் காட்டுகின்றன. இவை தமிழின் புதுமையாக்கக் கூறுகளை வெளிப்படுத்துகின்றனவா என்று ஆராய்வது இக்காலத் தமிழ்மேலே சொன்னபொருளில் புதிய தமிழா என்று காட்ட உதவும்.

இந்த அகராதி புதிய தமிழின் விதிமுறைகளை மறைமுகமாக சுட்டிக் காட்டுகிறது. சொற்களில் ஒன்றுக்கு மேற்பட்ட வடிவங்கள் இருக்கும் போது ஒன்றின் கீழ் மட்டுமே பொருள் வரையறை தந்து புதிய தமிழில் அதன் சமூக ஏற்பைச் சுட்டி விதிமுறை செய்கிறது. இதே போல் சில சொற்கள் இந்தத் துறைகளில், இந்த இலக்கண அமைப்புகளில் மட்டும் வழங்கும் என்று துறை இலக்கண வழக்குக் குறிப்புகள் தந்து மொழிப் பயன்பாட்டின் விதிமுறைக்கு வழி வகுக்கிறது. இருத்தலியல், பெண்ணுரிமை போன்ற புதிய காலக்கருத்துச் சொற்களுக்கு விரிந்த துல்லியமான பொருள் தந்து அவற்றின் பொருளை நிலைப்படுத்தகிறது. இவ்வாறு தமிழில் புதுமையாக்கம் நடந்திருக்கிறதா என்று பார்க்கவும், வந்திருக்கிற புதுமைக் கூறுகளை நிலைப்படுத்தவும் இந்த அகராதி உதவுகிறது. புதிய தமிழின் விதிமுறைச் சாதனமாகவிளங்கவும் தகுதி பெற்றிருக்கிறது.

விதிமுறைப் பணியை அகராதிசரிவரச் செய்ய வேண்டுமானால், அகராதியைப் பயன்படுத்தும் பழக்கம் தமிழர்களிடையே வரவேண்டும். சொல்லின் வடிவத்தைப் பற்றியோ, பொருளைப்பற்றியோ, பயன்பாட்டைப் பற்றியோ சந்தேகம் வரும்போது பெற்றோர்களும் ஆசிரியர்களும் தாங்களே விடையைத் தராமல் பிள்ளைகளை அகராதியைப் பார்க்கத்தூண்ட வேண்டும். வீட்டுக்கு ஒரு பஞ்சாங்கம் இருப்பது போல் வீட்டுக்கு ஒரு அகராதி இருக்க வேண்டும்; நாள் பார்ப்பது போல் சொல் பார்ப்பதும் பண்பாட்டுப் பழக்கமாக வேண்டும். இந்தப் பழக்கம் புதிய காலத்தின் பழக்கம். புதிய சமூக மதிப்பீட்டின் நடைமுறை வெளிப்பாடு. ஆகவே, அது தமிழ்ச் சமூகம் புதிய சமூகம் ஆவதன் அடையாளம். புதிய மொழிமட்டுமல்லாமல் புதிய மொழிப் பழக்கங்களும் புதிய சமூகத்தின் தேவைகள். புதிய தமிழ்ச் சமூகத்தின் இந்தத் தேவைகளைத் தமிழ் எந்த அளவு நிறைவு செய்கிறது என்பது அதன் எதிர்காலத்தை முடிவு செய்யும்.

'யாதன் உருபில் கூறிற்று ஆயினும்'

ஆ. கோ. நடராசன்
அண்ணாமலைநகர்

1. புதிய பாதை

தொல்காப்பிய உரையாசிரியர் அனைவரிலும் தெய்வச்சிலையார் துணிவு மிக்குடையவர் என்பது அவர்தம் உரையில் பல இடங்களில் வெளிப்படுகின்றது. தாம் கூறுகின்ற கூற்று பிற உரையாசிரியர்கட்கு முரண்பட்டதெனத் தெரிந்தும் தன் புரட்சி நோக்கால் இவர் மாறுபட்டுத்தான் காணப்படுகின்றார். மொழி ஆராய்ச்சியில் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய பல புதிய கோட்பாடுகள் புரட்சிவழிப் பட்டதாகும். இம்மொழிக் கோட்பாடுகளின் வளர்ச்சியினால் தோன்றியதுதான் மொழி இயல் எனும் தனித் துறையுமாகும். இப்படி வளர்ந்துவிட்ட மொழியியற் கோட்பாடுகளின் உள்ளீடுகளும், உள்ளுணர்வுகளும் (insights) தெய்வச்சிலையாரின் உரைகளில் வெளிப்படுவதைக் காணும்போது நமக்குப் பெருமிதம் ஏற்படுகின்றது. தமிழ் மொழியின் இலக்கணத் தெளிவு மட்டுமல்லாது வடமொழி இலக்கணமும் அறிந்திருந்த உரையாசிரியர்களுள் இவர் தலை சிறந்தவராகக் காணப்படுகின்றார், மொழியியல் அடிப்படை என்றால் உலக மொழிகள் அனைத்துக்கும் பொருந்தும் மொழிக் கோட்பாடு(Universal Grammar) காண்பது' என்பதாகும். தெய்வச் சிலையாரின் உரையில் இப்பொதுநமக் கோட்பாடுகளும் நிறம்பிக் கிடக்கின்றன. இதனால்தான் இவரால் புது விளக்கங்களும் புது அமைப்பும் கொண்ட உரையைத் தர முடிந்தது எனலாம். நூற்பா இட மாற்றங்களும் தொல்காப்பியத்தை அரண் செய்யும் வகையில் இடம் பெறுவதால் மொழியில் நோக்கில் இவரது உரை புதிய பாதையை நமக்குக் காட்டுகிறது எனத் தெளியலாம்.

1.1 யாதனுருபு

'யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள் சென் மருங்கில் வேற்றுமை சாரும்'

—தொல்.சொல். 102

எனும் தொல்காப்பிய வேற்றுமை மயங்கியல் சூத்திரத்திற்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் அனைவரும் வேற்றுமை உருபு தம்முள் மயங்கும் உருபு மயக்கம் என்ற நிலையில் நின்று உரை செய்துள்ளனர். இக்கருத்தையே இன்றைக்கும் (மொழிக் கோட்பாடுகளும் இலக்கண ஆய்வும் வளர்ந்து விட்ட நவீன காலமாகிய இன்றைக்கும்) பலர் தம் தொல்காப்பிய உரையில் வெளிக்காட்டுகின்றனர்.

ஆனால், தெய்வச்சிலையார் மட்டும் வேற்றுமை உருபு அல்லாத நிலையில் நின்று வேற்றுமை உருபு தம்முள் மயங்குதல் இன்றி பிற உருபோடு மயங்கும் எனப் புதுமை படைத்துள்ளார். முற்றிலும் முரணான இரு வேறுபட்ட இவ்வுரைகளை மொழி இயல் நோக்கில் ஆராய்ந்தால் தெய்வச்சிலையாரின் உரை எவ்வாறு மூல ஆசிரியரை அரண் செய்கிறது என்பதையும் வேற்றுமை இலக்கணத்தை அணுக வேண்டிய முறை எது என்பதையும் நம்மால் தெளிய முடியும்.

1.2 வேற்றுமை நிலைகள்

வேற்றுமை என்பது ஒரு தொடரில் வரும் பெயருக்கும் வினைக்கும் உள்ள உறவு அல்லது ஒரு பெயருக்கும் மற்றுமொரு பெயருக்கும் உள்ள தொடர்பு பற்றியது என்பது நாம் முன்பே அறிந்த விளக்கமாகும். இவ்வேற்றுமை எவவாறு எதைக் கொண்டு வெளிப்படுத்தப்படுகிறது என்பது ஒரு நிலை. இதைப் புறநிலை (Surface level) வேற்றுமை என்கிறோம். இப்புற நிலை வேற்றுமையினால் ஒரு தொடரில் வரும் பெயர்ச் சொற்கட்கும் முடியும் வினைச் சொற்கும் உள்ள உறவு அல்லது தொடர்பு பொருண்மை அடிப்படையில் காண்பது இரண்டாவது நிலை. இந்த இரண்டாவது நிலையை புதை

நிலை (Deep level) வேற்றுமை என்கிறோம். இந்தப் புதை நிலை வேற்றுமைக்கு உட்படாத சில வேற்றுமைப் பொருட்கள் (Case meanings) பெயர் பெயர் உறவைக் காட்டுவதாகும். இது மூன்றாவது நிலை. இப்படி வேற்றுமையை மூன்று நிலைகளில் நின்று ஆராய வேண்டியுள்ளது. புதைநிலை வேற்றுமைகள் பெரும்பாலும் வினைச் சொற்களால் நிறுவப்படுவதால்தான் ஓர் உருபுக்கு இதன் பொருள் இது என நிர்ணயிக்க முடிய வில்லை. இதனால் தோன்றிய மயங்கங்கள்தான் உருபு மயக்கம், பொருள் மயக்கம் என இரண்டு மயக்கங்கள்; இவற்றைப் பற்றியதுதான் வேற்றுமை மயங்கியல் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. இருந்தாலும் புறநிலை வேற்றுமை (Surface case) என்பது வேற்றுமை உருபுகள் மட்டும்தானா? அல்லது அவை ஏற்கும் பெயரும் சேர்ந்ததா? இவை இரண்டு மல்லாது வேறு ஏதேனும் (வினை எச்சங்கள் போன்றவையும்) இதில் அடங்குமா? போன்ற வினாக்களுக்கும் பதில் காண்பதில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதை என்ன என்று சிந்திக்காமலேயே 'வேற்றுமை உருபு' என்றால் வேற்றுமை உருபுகள் மட்டுமே என்று வாளா இருந்துவிட்டால்; தெய்வச்சிலையார் என்ன கூறுகின்றார் என்பது நமக்குப் புரியாது. அவருடைய உள்ளுணர்வு அல்லது உள்ளீடு என்ன என்பதையும் நம்மால் உணர முடியாது. மூல ஆசிரியரை எவ்வாறு அரண் செய்துள்ளார்; பிற உரையாசிரியரோடு எப்படி முரண் கொண்டுள்ளார் என்பதும் விளங்காது. எனவே, யாதன் உருபு என்றால் என்ன என்பதை விளக்கும் முன் புற நிலை, புதைநிலை, வேற்றுமைகளையும் வேற்றுமைப் பொருட்களையும் பற்றித் தெளிவாக விவரித்து பிறர் கருத்துக்கள் தெய்வச்சிலையாரின் கருத்துக்கு இரண்டாந்தரம் ஆனவை என்பதை நிறுவிச் செல்ல ஆசைப்படுகிறேன்.

1.2.1 புறநிலை வேற்றுமை.

ஒரு தொடரில் புறநிலையில் காணப்படும், அதே நேரத்தில் பெயர்ச் சொற்கட்கும் வினைச் சொற்கட்கும் இடையில் அமையும் தொடரியல் உறவுகளை வெளிக்காட்டப் பயன்படுத்தப்படும் உருபுகளையோ அல்லது சொற்களையோ

அல்லது பிறச் சொல்வடிவங்களையோ நாம் புறநிலை வேற்றுமை என்கிறோம்.[1] தமிழில், எழுவாய், (nominative) செயப்படுபொருள் (accusative), கருவி (Instru mental), கொடை (Dative), கிழமை (Genitive) உடநிகழ்ச்சி (Sociative), இடம் (Locative) நீக்கம் (Ablative) ஆகிய புற நிலை, வேற்றுமைகள் உள்ளன. இப்புறநிலை வேற்றுமைகள் ஒட்டுக்கள் குறிப்பாக பின்னொட்டுக்கள் (Suffixes) அதாவது வேற்றுமை உருபுகள் (Case suffixes) சொல்லுருபுகள் (Postpositions) போன்ற வற்றால் குறிக்கப் படுகின்றன. தொல்காப்பிய வேற்றுமையியல் இப்புறநிலை வேற்றுமையை

அவைதாம்
பெயர், ஐ ஒடு கு
இன், அது, கண், விளி என்னும் ஈற்ற
தொல்- சொல் 63

என விளக்குகிறது. எனவே, தொல்காப்பியரின் கருத்துப் படி புறநிலை வேற்றுமை என்பது வெறும் வேற்றுமை உருபுகள் மட்டுமல்லாது பெயர்ச் சொல்லும் ஆகும் என்பது பெறப்படுகிறது. ஆகவே புறநிலை வேற்றுமை என்றால் 1. வேற்றுமை உருபுகள் 2. சொல்லுருபுகள் 3. பெயர்ச் சொற்கள் என மூன்று வடிவங்களில் அமைவது பெறப்படுகிறது. இலக்கணக்கொத்து ஆசிரியர்

உருபு, வேறு உருபு, சொல்லுருபு என்ன
வேற்றுமை உருபு மூன்றென வியம்புவர்
-இ. கொ. 16

என்று புறநிலை வேற்றுமையை விளக்குவது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

1. "Surfaue cases or grammatical cases which are associated with logico communicative positions of the senteuce aud which are semantically indefinable", (Fillmore, 1966),

இதைப் பொருத்தவரையில் இன்றைக்கும் சரி அன்றைக்கும் சரி; கருத்து வேறுபாடு கிடையாது. ஒரு தொடரில் வெளிப்படையாகத் தோன்றும் (அல்லது புறநிலையில் தோன்றும்) பெயர், உருபு, சொல்லுருபு போன்றவையே புறநிலை வடிவங்களாகும்.[1]

இப்புறநிலை வேற்றுமையைக் கீழ்க்காணுமாறு பிரித்து நோக்கி ஆராயலாம்.

புறநிலை வேற்றுமை உருபு

பெயர்	வேற்றுமை உருபு	சொல்லுருபு
பெயர்ப் பெயர்	0-சூனிய உருபு	பற்றி, போல
வினைப்பெயர்	ஐ. ஆல், கு,	மாதிரி, விட
வினையாலணையும்	அது, அ	நோக்கி, சூழ்ந்து
பெயர், தொழிற்பெயர்	ஒடு, இல்,	கொண்டு, தவிர
(மேலும் வினையெச்சத்	போன்றவை	காட்டிலும்,
தால் தருவிக்கப்படும்		வேண்டி, ஆக
வி. அ. பெயர்கள்)		மேல், கீழ், முன்
போன்றவை		பின், நடுவில்
		உள்ளே, முதல்
		வரை, இருந்து

புறநிலையில் காணப்படும் இவ்வுருபுகள் தவிர சில வினையெச்ச வடிவங்களிலிருந்தும் புறநிலை வேற்றுமைகள் வெளிப்படுகின்றன. இதைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளால் அறியலாம்.

'மாடு முட்டி கை ஒடிந்தது'
'மழை பெய்து குளம் நிறைந்தது'

1. Surface structure is a syntactic representation of a sentence that comes closest to how the sentence is actually pronounced (David Crystal, 1989:431).

போன்ற தொடர்களில் வரும் வினையெச்சங்களாகிய முட்டி, பெய்து இரண்டுமே தன்னுள் காரணவேற்றுமையைக் (Causative case) கொண்டுள்ளன. இத்தொடர்களைப் பின் வருமாறு மாற்றி எழுதினால் பொருள் மாறாமல் வருவதைக் காணலாம்.

'மாடு முட்டியதால் கை ஒடிந்தது'
'மழை பெய்ததால் குளம் நிறைந்தது''

இம்மாற்றுத் தொடர்களில் முட்டி, பெய்து எனும் வினையெச்சங்களுக்குப் பதிலாக முட்டியதால் பெய்ததால் எனும் வேற்றுமைச் சொற்கள் இடம் பெற்று அதே காரண வேற்றுமைப் பொருளோடு வருவதைக் காணலாம். இவ்வினையெச்சங்கள் தொடரின் புதைநிலை அமைப்பில் எவ்வாறு தருவிக்கப் படுகின்றன என்று பார்க்க வேண்டியது அவசியமாகிறது. அதாவது முட்டி, பெய்து ஆகிய இரு வினையெச்சங்களும் முதலில் முட்டியது, பெய்தது என வினையாலணையும் பெயர்களாக (Participiol nouns) தருவிக்கப் படுகின்றன. அவற்றோடு காரண வேற்றுமைப் பொருளுக்கான 'ஆல்' உருபு இரண்டாவது படிநிலையில் சேர்க்கப்படுகிறது. இப்படிச் சில படிநிலைகளில் நாம் புதைநிலைத் தொடரைப் (deep Structnre of a Sentence) பெறுகிறோம். இங்கே நாம் முக்கியமாக அறியவேண்டியது என்னவென்றால் பெயர் என்ற பிரிவின் கீழ் பல்விதப் பெயர்களை மட்டும் நோக்காமல் வினையெச்ச வடிவங்களையும் கொள்ள வேண்டியுள்ளது.

இதே போன்று செயவென் வாய்பாட்டு வினையெச்சங்களும் குறிவேற்றுமைப் பொருளோடு (Purposive Case) காணப் படுகின்றன. உதாரணமாக

அவன் சாப்பிட வந்தான்
அவள் பாட வந்தாள்

போன்ற தொடர்களில் வரும் சாப்பிட, பாட எனும் வினையெச் சங்கள் மேல் உதாரணங்களில் காரண வேற்றுமை தருவிக்கப் பட்டது போலவே குறிவேற்றுமையும் தருவிக்கப்படுகிறது.

எனலாம். அதாவது **சாப்பிட** என்பது **சாப்பிடுவது** எனவும் **பாட** என்பது **பாடுவது** எனவும் வினைப் பெயர்களாக மாற்றப் பட்டு அதனோடு நான்காம் வேற்றுமை உருபைப் பெய்து **சாப்பிடுவதற்கு, பாடுவதற்கு** என தருவிக்கப் படுகின்றன. இதை மேலும் மாற்றியெழுதத் தலைப்பட்டால்

அவன் சாப்பிட வந்தான்
அவன் சாப்பிடுவதற்கு வந்தான்
அவன் சாப்பிடுவதற்கு + ஆக வந்தான்
அவன் சாப்பிடுவதற்கு + ஆக + வேண்டி வந்தான்

என்று விரித்து எழுதமுடிகிறது. எனவே வினையெச்சங்களும் வேற்றுமைப் பொருளோடு வருவது இவற்றால் புலனாகின்றது. மேலும், இவ்வினையெச்சங்கள் பெயர்களாகவும், அப்பெயர்கள் சூனிய உருபு (Zero morker) ஏற்ற பெயர்களாகவும் விளங்கு கின்றன. எனவே, புறநிலை வேற்றுமையைக் காட்டும் உருபுகளைப் பெயர், வேற்றுமை உருபு, சொல்லுருபு, வினையெச்ச நிலை உருபு எனப்பாகுபாடு செய்யலாம். இதனால புறநிலை வேற்றுமையைப் பின்வருமாறு திருத்தி வகைப்பாடு செய்யலாம்.

புறநிலை வேற்றுமை வடிவம்

பெயர் வடிவம்	வே. உருபு வடிவம்	சொல் வடிவம்	வினையெச்ச வடிவம்
பெயர்பெயர்	சூனிய உருபு	பற்றி,	செய்து,
வினைப் பெயர்	ஐ, ஆல், கு, அது,	போலமாதரி, விட	செய வாய்பாட்டு
வி. அ. பெயர்	ஓடு, இல்	கொண்டு, நோக்கி	வடிவங்கள்
தொழிற் பெயர் முதலியவை	போன்றவை	வேண்டி, ஆக போன்றவை	போன்றவை.

1.2.2. புதை நிலை வேற்றுமை

ஒரு தொடரில் வருகின்ற வினைச் சொல்லுக்கும் பெயர்ச் சொற்களுக்கும் இடையிலான உறவே புதைநிலை வேற்றுமை ஆகும்! எடுத்துக் காட்டாக

'முருகன் வள்ளிக்குப் பணம் கொடுத்தான்'

எனும் தொடரில் 'கொடு' என்ற வினைச் சொல்லினுக்கும் **வள்ளிக்கு** என்ற வேற்றுமைச் சொல்லுக்கும் உள்ள தொடர்பு கொடைப் பயன் (Benefactive Goal) ஆகும். இதைப் புதைநிலல வேற்றுமை என்பர்.

1.2.2.1 மரபிலக்கணம்

இப்புதைநிலை வேற்றுமைகளை நமது மரபிலக்கணங்கள் விளக்குகின்றன. தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில்

வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலங் கருவி யென்றா
வின்னதற் கிதுபய னாக வென்று
மன்ன மரபி னிரண்டொடுந் தொகைஇ
யாயெட் டென்ப தொழின் முத னிலையே

-தொல். சொல். 108

என்று புதைநிலை வேற்றுமைகள் கூறப்படுவதைக் காணலாம். இச்சூத்திரத்தில் வருகின்ற 'தொழின் முதனிலை' என்ற சொல் 'புதைநிலை வேற்றுமை' என்ற பொருளில் கையாளப் பட்டுள்ளதாகக் கூறுவார் பாலசுப்பிரமணியன் (1978:24). இச்சூத்திரத்தில் வருகின்ற **வினை(யே)** என்ற சொல் தொழிலைக் குறிப்பதாக வாதிடுவார் தெய்வச்சிலையார். இங்கு வினை என்பது செயலைக் (action) குறிக்கும் அல்லது தொழிலைக் குறிக்கும் பாங்கிலேயே கையாளப் பட்டுள்ளது. எனவே, வினைச் சொல்லை அடிப்படையாக வைத்துதான் புதைநிலை வேற்றுமைகள் விளக்கப்படுகின்றன என்பதை மரபிலக்கண வழிநின்றும் நிறுவலாம். தொல்காப்பியச் சூத்திரத்தை மேலும் ஆராய்ந்தால் புதைநிலை வேற்றுமைகள் எட்டு என்பதும் அதன் பெயர்களும் நமக்கு வெளிப்படுகின்றன.

1.2.2.2. தொழில் முதல்நிலை

தொல்காப்பியக் கூற்றுப்படி, வினை (Action), செய்வது (that which acts-Agent)) செயப்படுபொருள் (the thing which is acted upon object), நிலம் (Place-Locative) காலம் (time or Temporal), கருவி (Instrument-Instrumental) இன்னதற்கு (that which is for-Benefactive or Goal) இது பயனாக (the result of - Resultative) ஆகிய எட்டு தொழின் முதனிலைகள் அல்லது புதைநிலை வேற்றுமைகள் ஆராயப்படுகின்றன.

இன்றைய மொழியியல், வேற்றுமை இலக்கணவாதிகள் (Case Grammarians) இது போன்ற அடிப்படையில்தான் புதை நிலை வேற்றுமைகளைக் கூறுகின்றனர். அவர்கள் வினைமுதல் (Agent) கருவி, கொடை (Dative) இயல்பு (Factitive) இடம் (Locative) செயப்படுபொருள் (Objective) ஆகியவற்றை புதை நிலை வேற்றுமைகளாகக் கூறுகின்றனர் (Fillmore, 1978: 24-25). இவற்றுள் வினைமுதல் அல்லது கருத்தா என்பது உயிருள்ள உயர்திணை அல்லது அஃறிணையாக மட்டுமே அமையும் என்றும் வினை அல்லது தொழிலால் அது அடையாளம் காட்டப்படும் என்றும் விவரிக்கப்படும்.[1]

கருவி வேற்றுமை உயிரற்ற பொருளின் இயக்கம் அல்லது தாக்கம் ஒரு தொழிலில் ஈடுபடுவதால் உண்டாவது. இதுவும் வினைச் சொல்லால் சுட்டப்படுவதுதான்.[2] இதே போன்று கொடைப் பொருளும் வினைச் சொல்லால் உணர்த்தப் படுகிறது. உயிருள்ள பெயரோடு வரும் போதுதான்

---

1. Agentive (A); the case of the tipically animate perceived instigator of the action identified by the verb. (Fillmore, 1968:24)

2. Instrumental (I): The case of the inanimate force or object causally involved in the action or state identified by the verb. ibid.

வினையோடு தொடர்பு கொள்கிறது.[1] இயல்பு வேற்றுமை (Factitiue) வினைச்சொல்லால் ஒரு பொருளின் தன்மையைச் சுட்டி நிற்கிறது.[2] இடவேற்றுமை வினை/செயல் நடக்கும் இடம் பற்றியது.[3] செயப்படுபொருள் வேற்றுமை வினையின் தாக்கம் நேரிடையாக எப்பொருள் மீது ஏற்படுகிறது என் பதைச் சுட்டி நிற்கிறது.[4] எனவே, ஒரு தொடரில் வருகின்ற பெயர்ச் சொற்களுக்கும் வினைச் சொல்லுக்கும் இடையே தோன்றும் உறவே புதைநிலை வேற்றுமைக்கு அடிப்படை யாகிறது என்பதை அறியலாம்.

இதனால்தான், இளம்பூரணர் தம் உரையில் புதைநிலை வேற்றுமை பற்றிய மேற்கூறிய சூத்திரத்தை விளக்கும்போது

''இச்சூத்திரத்தை என்னுதலிற்றோ வெனின்
வினைச்சொல் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.''

என்று கூறுகின்றார். வினைச்சொல்லுக்கும் புதைநிலை வேற்றுமைக்கும் உள்ள தொடர்பு அவர் உள்ளுணர்வில் காணப்படுகின்றது. சில விசைச் சொற்கள் சில வேற்றுமை உரு போடு இயைபு (concord) கொள்வதில்லை. எடுத்துக்காட்டாக

1. Dative (D): the case of the animate being affected by the state or action identified by the verb. ibid
2. Factitive (F): the case of the object or being resulting from the action or state identified by the verb or understood as a part of the meaning of the verb
3. Locative (L): the case which identifies the location or spacial orientation of the state or action identified by vevb.
4. objective (O): the semantically most neutral case, the case of any thing representable by a noun whose role in the action or state identified by the verb is identified by the semantic interpretation of the verb itself.....................ibid.

நான் அவனுக்குப் பணம் கொடுத்தேன்

நான் அவனிடம் பணம் கொடுத்தேன்

இத்தொடர்களில் வரும் **கொடு** எனும் வினைச்சொல் குகர வேற்றுமை உருபுடனும் இடம் எனும் வேற்றுமை உருபுடனும் இயைபு கொண்டு வருகிறது. எனவே இலக்கணப் பிழை தோன்றவில்லை. ஆனால் பின்வரும் தொடர்களில்

‡நான் அவனுக்கு உதவினேன்

நான் அவனிடம் உதவினேன்

உதவு எனும் வினைச்சொல் குகரவேற்றுமையோடு மட்டுமே இயைபு கொள்கிறது இடம் எனும் இடப்பொருள் உருபோடு இயைபு கொள்ளவில்லை. காரணம், **உதவு** என்ற வினை ஒரு தொழில் வினை (action verb). இது இட வேற்றுமையை எடுக்காது அல்லது இயைபு கொள்ளாது. **கொடு** எனும் வினை கொடுத்தல், பெறுதல் தன்மைகளையுடைய வினை (Transfer acquisition verb). இப்படி வேற்றுமையின் அடிப்படையில் வினைச் சொற்களைப் பாகுபாடு செய்வாரும் உள்ளனர் (Mccoy, 1967; vasu, 1988:39-80).

1.2.3 வேற்றுமைப்பொருள்

இப்புதைநிலை வேற்றுமைக்கு உட்படாத அல்லது காண்பதற்கு ஏற்பில்லாத பெயர் - பெயர் உறவுகளைப் பற்றிக் கூறுவது வேற்றுமைப் பொருள் எனலாம். காட்டாக

'கடலில் ஆளுயரத்திற்கு அலை எழும்பியது'

எனும் தொடரில் **அலை** என்ற பெயர்ச் சொல்லுக்கும் **ஆளுயரத்திற்கு** என்ற வேற்றுமைச் சொல்லுக்கும் இடையேதான்

---

1. The link between the predicate verb and the nominal part of a sentence is the prime factor of semantic representation (Vasu, 1988:81)

உறவு காணப்படுகிறது. புதைநிலை வேற்றுமையில் கண்டது போல் வினைச் சொல்லாகிய எழும்பியது என்ற சொல்லுக்கும் ஆளுயரத்துக்கு என்ற வேற்றுமைச் சொல்லுக்கும் இடையே உறவு காண்பதில்லை. ஏனெனில் இதைக் கடலில் அலை எழுந்தது என்று கூறும் போது அலைக்கும் எழுந்தது என்ற வினைக்கும் தொடர்பு காண முடிகிறது. அந்த அலையை விவரிக்கும் போதுதான் ஆள் உயரத்துக்கு அலை எனக்காண்கிறோம். எனவே இது பெயர் - பெயர் உறவு இதையே வேற்றுமைப் பொருள் என்பர் (Vasu, 1988:82-83)

1.2.4 வேற்றுமை மயக்கம்

ஒரு வேற்றுமை உருபுக்கு (Surface Case) ஒன்றுக்கு மேற்பட்ட புதைநிலை வேற்றுமைப் பொருள்கள் வருவதும்; ஒரு புதைநிலை வேற்றுமைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வேற்றுமை உருபுகள் வருவதும் என இரண்டு நிலைகளில். வேற்றுமை மயக்கம் பேசப்படுகிறது.[1] மேலும், உருபு மட்டுமல்லாது ஒரு பெயர்ச் சொல்லுக்குப் பதிலாக மற்றொரு பெயர்ச்சொல் வருவதையும் (ஆகு பெயரையும்) தொல்காப்பியர் வேற்றுமை மயங்கியலில் பேசுவதால் வேற்றுமை மயக்கம் உருபு, மாற்றுருபு, சொல்லுருபு, பெயர் (வினையெச்சத்தால்

1. Any Single Surface Structure marker may be the exponent of more than one deep Case aud Conversely many deep Structure Cases may be expressed by more than one Surface structure markers. This may be diagrammatically explained as follows.

Surface case	deep case 1 deep case 2 deep case n
Deep case	surface case—1 surface case—2 surface case—n

(Vasu, 1988:2)

உண்டாகும் பெயர்) அனைத்தையும் உள்ளடக்கிய ஒன்றாகவே கொள்ளப் படவேண்டும். இதே கருத்தை இலக்கணக் கொத்து ஆசிரியர்

ஓர் உருபிற்கே பலபொருள் வருதலும்
ஒரு பொருட்கே பல உருபுகள் வருதலும்
என இரண்டாகும் வேற்றுமை இயல்பே

இ. கொ. 23.

என அற்றை நாளில் தெளிவுபடுத்தியுள்ளது போற்றுதற் குரியதாகும்.

இவ்வேற்றுமை மயக்கம் 'உருபு மயக்கம்' என்றும் 'பொருள் மயக்கம்' என்றும் இருவகை மயக்கங்களாக அமைகின்றது. இங்கே முக்கியமாக ஆராயப்பெற வேண்டியது. இம்மயக்கங்கள் எதனால் தோன்றுகின்றன என்பதே ஆகும். இதை விளக்குவதற்காகதான் தொல்காப்பியர் எந்த உருபில் எந்த வேற்றுமையைக் கூறினால் என்ன? பொருள் செல் மருங்கில் போற்றி உணரச் சொல்கிறார். பொருள் என்பது வேற்றுமை உருபுகளால் மட்டும் அமைவதில்லை. வினைச் சொல்லாலும் பெயர்ச் சொல்லின் தனமை (Inherent lexical feature of noun) யாலும் அமையக் கூடியதாகும். இதனால்தான் தொல்காப்பியர் புதைநிலை வேற்றுமை பற்றிப் பேசும் போது 'வினையே செய்வது' எனத் தொடங்குகிறார் (தொல். சொல். 108). ஏனென்றால் பெயர்ச்சொல்லின் தன்மையைவிட வினைச்சொல் தான் வேற்றுமைப் பொருளைத் தெளிவுபடத் தரவல்லது. எனவே உருபைப் பற்றிக் கவலைப் படாமல் பொருள் எப்படி அமைகிறதோ அப்படி உணரவேண்டும். அந்த உருபுக்கு அப்பொருளை ஏற்றி அறியவேண்டும் என்ற எண்ணத்தில் தொல்காப்பியர் 'யாதனுருபில் கூறிற்று ஆயினும் பொருள் செல் மருங்கில் போற்றல் வேண்டும்' எனக் கூறுகின்றார்.

2. உரையாசிரியர்கள்

தொல்காப்பிய உரையாசிரியர்களுள் தெய்வச்சிலையாரைத் தவிர அனைவரும் வேற்றுமை உருபுகள் தம்முள் மயங்கும்போது

பொருள் அடிப்படையில் வேற்றுமையை அறியவேண்டும் என்றே விளக்குகின்றனர். ஆனால் தெய்வச்சிலையார் மட்டும் வேற்றுமை உருபுகள் என்ற எல்லையைத் தாண்டி 'பிற உருபோடு மயங்கும்' எனக் கூறுகின்றார்.

2.1 இளம்பூரணர்:

பெரும்பாலும் இளம் பூரணரின் கருத்தைத்தான் பிற உரையாசிரியர்களும் கடைப்பிடிப்பது வழக்கம். இந்தச் சூத்திர உரையிலும் இதையே, காண முடிகிறது. இளம்பூரணர் உருபுகள் தமக்குரிய பொருளன்றி பிற உருபுகளின் பொருளையும் குறிக்கும் தன்மையுடையது என்ற அடிப்படையில் உரை செய்கின்றார். அதனால்தான்

> "............... உருபுகள் ஒரோவழித் தத்தம் பொருண்மை யின்றியும் மயங்குதற்குரிய"

எனக் கூறுகின்றார். மேலும் இவர் உருபு எனக் கூறுகின்றாரே அன்றி வேற்றுமை உருபு அல்லது அவை அல்லாத உருபு என வெளிப்படையாக விளக்கவில்லை. ஆனாலும் இவர் தரும் எடுத்துக்காட்டு வேற்றுமை உருபுகள் தம்முள் மயங்கும் எடுத்துக் காட்டாகவே அமைகிறது.[1]

2.2 சேனாவரையர்

சேனாவரையர் வெளிப்படையாக வேற்றுமை உருபு தம்முள் மயங்கும் மயக்கமாகவே இதைக் கூறுகின்றார். இவர்

> "உருபு தன் பொருளிற்றீர்ந்து பிறவுருபின் பொருட்டாயும் நிற்கும் என உருபு மயக்கம் கூறியவாறாயிற்று"

---

1. "கிளையரி நாணற் கிழங்கு மணற்கீன்ற
   முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்
   அகம் 21.2

   என்னும் பாட்டினுள் மணற்கீன்ற என நான்காவதன் உருபு வந்ததேனும் மணலுள் ஈன்ற என ஏழாவதன் உருபே கொள்க."

என உருபு மயக்கத்தையும் பொருள் மயக்கத்தையும் உறழ்ந்து நோக்குகின்றார்.

சேனாவரையரைப் பொருத்த வரையில் இளம்பூரணரைவிட சற்று விரிவான உரை தந்து செல்வது தெரிகிறது. இவர் உருபு மயக்கம், பொருள் மயக்கம் ஆகிய இரண்டையும் முறையே ஒரு தொடரின் இலக்கண உறவு(grammatical function) செயற்பாட்டு அல்லது பொருண்மை உறவு (functional relation) என இரண்டு அடிப்படையில் மயக்கம் தோன்றும் எனக் கூறுகின்றார். இந்த இரண்டு வகையில் பொருண்மை உறவில் தோன்றும் மயக்க மாகவே இவர் வாதிடுகின்றார். இவர் உரை

> "ஒரு தொடர் யாதானும் ஓர் வேற்றுமையது உருபு கொடுத்துச் சொல்லப்பட்டதாயினும், அவ்வுருபு தன் பொருளான் அத்தொடர்ப் பொருள் செல்லாத வழிப் பொருள் செல்லும் பக்கத்து வேற்றுமையைச் சாரும்"

என்று அமைவதிலிருந்து இதை அறியலாம். இவரது இவ்வுரை தொல்காப்பியத்தை அரண் செய்வதாகவே உள்ளது என்றாலும் 'யாதன் உருபு' என்பதைப் பொருத்தவரையில் இவரும் வேற்றுமை உருபு மட்டுமே என்பதுபோல் இவருடைய உரை விளங்குகிறது.

2.3 நச்சினார்க்கினியர்

நச்சினார்க்கினியர் உரை இளம்பூரணர் சேனவரையர் உரைகளையே பின்பற்றினாலும் ஏனிந்த நூற்பாவை தொல்காப்பியர் படைத்தார் என்ற கேள்வியை எழுப்பி பதில் காண முயன்றுள்ளது. வேற்றுமை மயங்கியலுள் கூறப் படுவன எல்லாமே உருபு அல்லது பொருள் மயக்கங்கள்தானே யாதன் உருபில் கூறிற்று ஆயினும் பொருள் செல் மருங்கில் வேற்றுமை சார்வது பற்றிய இயல்தானே போன்ற ஐயங்கள் இவர் எண்ணத்தில் தோன்றவே தொல்காப்பியத்தை அரண் செய்யும் விதத்தில் இவர்

"முற்கூறிய எல்லாந் தம்முன் இயைபுடைய பொருள் மயக்கமே கூறிற்று என்று உணர்க"

என உரை வகுத்துள்ளார். இவர் வேற்றுமை மயக்கத்தை இயைபுடைய வேற்றுமைப் பொருள் மயக்கம் என்றும் இயைபில்லா வேற்றுமைப் பொருள் மயக்கம் என்றும் இரண்டு வகைகளாகக் கொண்டு; 'பொருள் செல் மருங்கில் வேற்றுமை சாரும்' என்பதை இயைபு இல்லாத வேற்றுமை மயக்கமாகவும் வேற்றுமை மயங்கியலுள் கூறிய பிற நூற்பாக்கள் யாவும் இயைபுடைய வேற்றுமை மயக்கமாகவும் கொள்கிறார்.

மயக்கமென்றாலே ஏதாவதொரு இயைபு இருந்தால்தான் தோன்றும் எனலாம். இயைபு இல்லை என்றால் அவை இருவேறு பொருளில்தான் கொள்ளப்படும். எனவேதான் இளம்பூரணர் 'நாணற் கிழங்கு மணற்கீன்ற' என்ற காட்டினைக் கூறி

"'மணற்கீன்ற' என நான்காவதன் உருபு வந்தேனும், மணலுள் ஈன்ற என ஏழாவதன் உருபே கொள்க, அதற்கேற்ற பொருட்டாகலின்."

என விளக்கமும் தருகின்றார்.

ஓர் உருபுக்கு இயல்பான வேற்றுமைப் பொருளும், அவையன்றி இயைபினால் தோன்றும் வேற்றுமைப் பொருளும் ஆக இருவகை பொருள் ஏற்படுமாயின் அதை உருபு மயக்கம் எனச் சுட்டுவார். சேனாவரையர்

"உருபு தன் பொருளிற்றீர்ந்து பிறவுருபின் பொருட்டாயும் நிற்கும் என உருபு மயக்கம் கூறியவாறாயிற்று."

என்று உரை செய்துள்ளார். 'அரசர்கட் சார்ந்தான்' என்ற உதாரணம் 'அரசரைச் சார்ந்தான்' எனும் இரண்டாவதன் பொருளில் கொள்ளப்படுவதோடு, 'அரசன் கண் சார்ந்தான்' எனும் இடப்பொருளிலும் இயைபுடையதாக வருகிறது. ஆனால் நச்சினார்க்கினியரின் இயைபில்லாத வேற்றுமை மயக்கம் எனும் வாதம் அத்துணை பொருத்தமுடையதல்ல.

2.4 கல்லாடரும் - ஒருவரும்

பிற உரையாசிரியர்கள் கூறிய கருத்துக்களையே இவர்களும் வெளியிட்டுள்ளனர். கல்லாடர் மயக்கம் வேண்டியவாறெல்லாம் வரப்பெறாது என்றும் அது 'வழக்குள் வழியதம் முடிபு' என்றும் கூறி அமைகின்றார்.

2.5. தெய்வச்சிலையார்

இந்த நூற்பாவுக்கு உரைகண்ட பிற உரையாசிரியர் களிலிருந்து தெய்வச்சிலையார் முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் நின்று உரை வகுத்துள்ளார். இதுவே தொல்காப்பியத்தை முழுதும் உணர்ந்து அரண் செய்யும் உரையாக அமைகிறது. இவர், வேற்றுமை இலக்கணத்திற்கான (புறநிலை, புதைநிலை, வேற்றுமைப்பொருள்) அடிப்படைகளை புரிந்து உரை செய்வதனால் இவரது உரை தொல்காப்பியத்தை நமக்குத் தெளிவாக விளக்குகிறது.

2 5 1. உருபும் வடிவும்

தெய்வச்சிலையார் 'உருபு' எனும் சொல்லை 'வடிவு' என்ற சொல்லோடு ஒப்புமைப் படுத்துகின்றார். உருபின் பயன் அவை வேற்றுமைகளை வெளியிடும் நிலையே ஆகும். இந்த உருபுகட்கு வடிவங்கள் உண்டு. அதாவது இவை இடைச்சொல் (Inflexion) வடிவிலோ அல்லது சொல்லுருபு (Postposition, noun, infinite verb etc.)எனும் வடிவிலோ அல்லது சூனிய உருபு (Zero marker) வடிவிலோ வேற்றுருபு (one sign used in the sense of another sign) தொடர்களில் வெளிப்பட்டு வேற்றுமைப் பொருளைஅடையாளம் காட்டுகின்றன. இந்த அடிப்படையை நன்கு உணர்ந்த காரணத்தால்தான் தெய்வச்சிலையார் 'யாதன் உருபு' என்பதை வேற்றுமை உருபு என்ற எல்லையிலிருந்து வெளிப்பட்டு புறநிலை வேற்றுமையை வெளிக்காட்டும் புறநிலை வேற்றுமை 'வடிவம்' என்று உரை எழுதுகின்றார். இங்கு வடிவம் என்பது பெயர், சொல்லுருபு வினையெச்ச வடிவம் போன்ற அனைத்தையும் குறிக்கும் விதத்தில் அமைகின்றது. எனவேதான் தெய்வச்சிலையார்

"வேற்றுமையுருபு தம்முள் மயங்குதலின்றிப் பிற உருபோடு மயங்கும் என்பது உணர்த்துதல் நுதலிற்று"

என்று கூறுகின்றார். மேலும், 'வேற்றுமையல்லாத உருபு' எனும் இவருடைய வாதம் வினையெச்ச வடிவமாகிய உருபு எனும் பொருளில் கையாளப்பட்டுள்ளது எனலாம்.

"யாதனுருபு என்பது வேற்றுமையல்லாத உருபு. உருபு எனினும் வடிவு எனினும் ஒக்கும், 'அம்மூவுருபின தோன்றலாறே' (சொல்-பெயர்-9) என வடிவிற்குப் பெராகி பிறாண்டும் வந்தது"

எனும் இவர் உரை இதை மேலும் தெளிவு படுத்துகிறது,

இவை மட்டுமல்லாது இவரது எடுத்துக் காட்டுகளும் இதையே நிறுவுவனவாக அமைந்துள்ளன. வானின் றுலகம் வழங்கி வருதலான் எனவும், 'மருந் துண்டு நோய் தீர்ந்தது.' எனவும் இவரது காட்டுக்கள் அமைந்துள்ளன இவற்றை 'மழை பெய்தலால் உலகம் வழங்கி வருதல் என்றும் 'மருந்து உண்டலால் நோய் தீர்ந்தது' என்றும் நாம் பொருள் உணர்கிறோம். இங்கு 'உண்டு' 'பெய்து' ஆகிய இரு வினையெச்சங்களே அல்லது வினையெச்ச வடிவங்களே அல்லது வினையெச்ச வேற்றுமை உருபுகளே நமக்குக் காரணவேற்றுமையைத் (causative case) தருகின்றன. எனவே 'யாதன் உருபு, எனும் கருத்து வேற்றுமை உருபு என்பதன் எல்லையைத் தாண்டி மொழிப் பயன்பாட்டை ஆய்ந்து கூறுவதால் தொல்காப்பியத்தை மிகவும் அரண் செய்கிறது எனலாம்.

இதனால்தான் சுப்பிரமணிய சாஸ்திரியார்

"உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் இம்மூவர் பொருளைக் கொள்ளின் இச்சூத்திரப்பொருள் 'அன்ன பிறவும்' என்ற சூத்திரத்தாற் பெறப்பட்டமையின்

இச்சூத்திரம் வேண்டா. தெய்வச்சிலையார் கூறிய பொருளைக் கொள்ளின் இச்சூத்திரம் 'சொல்லுருபு முதலிய வேற்றுமைப் பொருளில் வரும் சொற்களை உணர்த்திற்று' என்று கூறலாம்''

என வாதிடுகின்றார்.

அருள்ராஜ் (1991:99) தெய்வச்சிலையாரின் உரையை மேலோட்டமாகக் கண்டதனால் இடைச்சொற்கள் எவையும் வேற்றுமைப் பொருள் மயக்கத்தில் இடம்பெறாது என்பதற்கு பல உதாரணங்கள் காட்டி நிறுவுவார். இவர் வேற்றுமை யல்லாதன என்றவுடன் பிற இடைச் சொற்களைத்தான் குறிப்பிடுகிறார் என்று சான்றாதாரங்களைக் கொண்டு நிறுவாமல் தெய்வச்சிலையார் கூறியது குற்றம் என்று கூறுவது மொழியியல் அறிந்தவர்க்கும் தொல்காப்பிய முணர்ந்தவர்க்கும் ஏற்புடைய தன்று. இவருடைய மனதில் தொல்காப்பியரின் இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச்சொல்லே' எனும் கருத்து மேலிட்டதால் பிற இடைச்சொற்களாகிய உருபுகளை (Inflexions) யாதன் உருபு என எண்ணித் தடுமாறியுள்ளார் என்பது தெரிகிறது.

வேற்றுமை மயங்கியல், இரண்டாம் வேற்றுமை எவ்வெவ் வேற்றுமையோடு மயங்கும் என்றும் மூன்றாம்வேற்றுமை எவ்வெவ் வேற்றுமையோடு மயங்கும் என்றும் நான்காம் வேற்றுமை எவ்வெவ் வேற்றுமையோடு மயங்கும் என்றும் ஐந்து, ஆறு, ஏழு ஆகிய வேற்றுமைகளும் எவ்வெவ் வேற்றுமைகளோடு மயங்கும் என்றும் விரிவாகச் சொல்கின்றது. இப்படிச் சொல்லி விட்டு உருபு மயக்கம் பொருள் மயக்கம் இரண்டையும் விளக்கி விட்டு தொல்காப்பியர் மீண்டும் அதே கருத்தை இச் சூத்திரத்திலும் கூறுவதாகக் கொண்டால் கூறியது கூறும் பிழையாகத்தான் அமையும்.

2.5.2. ஆராய்ச்சிக்கு அடிகோள்

தொல்காப்பிய நூற்பாக்கள் ஆராப ஆராய புதுப்புது மொழிக் கோட்பாடுகளை தந்துகொண்டே இருக்கும்

தன்மையையுடையன. அதேபோல் தெய்வச்சிலையாரின் உரையும் படிக்கப் படிக்க புதுத் தெளிவையும் ஆராய்ச்சி மனப்பாங்கையும் வளர்க்கும் சிறப்புடையது. உருபு என்பதை 'வடிவம்' என்ற அடிப்படையில் நோக்க வேண்டும் என்று தெய்வச்சிலையார் கூறியதாலும், அதற்கு வினையெச்சங்கள் அடங்கிய எடுத்துக்காட்டுகளைக் கொடுத்திருப்பதாலும் இவர் உரை நம்மை மேலும் சிந்திக்க அல்லது ஆராய்ச்சியில் இறங்கச் செய்கிறது. செயவென் வினையெச்சமும், செய்து வினையெச்சமும் முறையே குறிவேற்றுமையையும் காரணவேற்றுமையையும் தன் புதை நிலையில் கொண்டுள்ளது போல் பிற வினையெச்ச வாய்பாடுகளும் எதையோ தன்னுள் கொண்டுஇருக்கலாம் என்ற உள்ளுணர்வைத் தூண்டும் வகையில் அமைகிறது. இது வரலாற்று முறை மொழியியல் ஆய்வில் தமிழ் மொழியின் மாற்றங்களைக் கண்டறியத் தூண்டுவதாகும்.

பார்வை நூல்கள்

தொல்காப்பியம் - உரைவளம், சொல்லதிகாரம், வேற்றுமை மயங்கியல், பதிப்பாசிரியர் ஆ. சிவலிங்கனார், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

அருள்ராஜ், வே. சா. 1991 'கருவி வேற்றுமையின் புதை நிலை அமைப்பு - 'ஓர் ஆய்வு' மொழியியல் தொகுதி 13, 14 அண்ணாமலை நகர்.

Crystal David, 1989 The Cambridge *Encyclopedia of Language*, Cambridge University press Cambridge.

Fillmore, C. 1968 'Case for Case' *Universal in Lienguistic Theory* (eds.) Bach & R. T. Horms, Holt.

Vasu, R. 1988 *Case System in Modern Tamil*, Ph. D., Thesis, Annamalai University.

கல்வி - ஆட்சித்துறைகளில் தமிழ்ப் பயன்பாடு
(சமுதாய மொழியியல் நோக்கில்)

கி. கருணாகரன்
கோயம்புத்தூர்

முன்னுரை

அறிவுச் சுரங்கத்திற்கான நுழைவாயில் கல்வி 'education is the gateway to knowledge' என்று குறிப்பிடப்படுகிறது. பல்துறை அறிவு பெறுவதற்கு மொழி ஒரு மூலமாக - கருவியாக அமைந்துள்ளது. இத்தகைய மூலம் ஆற்றல் மிக்கதாகவும் அனைவருக்கும் ஏற்புடையதாகவும் அமைந்தால்தான் அதன் வாயிலாகப் பெறப்படும் அறிவின் துணைகொண்டு சமுதாய மேம்பாட்டினைப் பெற்றிட உரிய வாய்ப்புகள் ஏற்படும் சமுதாயம் மேம்படும் நிலையில், அச்சமுதாயம் சார்ந்துள்ள நாடு வளம்பெறும்; வாழ்வு பெறும்.

செவி வழியாக அறிவினைப் பெறமுடியும் என்றாலும் முறை சார்ந்த கல்விச்சூழலில் எழுத்து மொழி மூலம் பெறும் அறிவும் கல்வியும் மிகவும் இன்றியமையாததாகக் கருதப் படுகிறது. தாய்மொழிக் கல்வி பெறுதல் பிற மொழிக் கல்வி பெறுதல் போன்றவை இன்றைய நிலையில் நம் கல்விக் களத்தில் இருந்து வருபவை. இவை அனைத்துமே ஒருசேரப் பின்பற்றப் படலாம்; பின்பற்றப்படாமலும் இருக்கலாம். தாய்மொழியைக் கற்பவர்கள் பிறமொழி கற்காமலும் இருக்கலாம். ஆனால், பிறமொழி அறிந்தவர்கள் பிறமொழியின் மூலமும் கல்வி அறிவு பெறலாம்; தாய்மொழி மூலமும் கல்வி அறிவு பெறலாம். இவற்றில் ஏதேனும் ஒன்றிற்கு அல்லது பிறவற்றிற்கு வாய்ப்புக்கள் இல்லாமலும் இருக்கலாம். ஒருமொழிப் பயன்

பாட்டுச் சூழலில், மொழிப் பயன்பாட்டில் சிக்கல்கள் ஏதும் இல்லை. ஆனால், இன்றையச் சூழலில் ஒரு மொழிப் பயன் பாடு என்பது பெரும்பாலும் நடைமுறையில் இல்லை என்றே சொல்லலாம். ஒரு குறிப்பிட்ட புவியியல் சூழலில் இயற்கைத் தடைகளால் பிரிக்கப்பட்டு, பிறரோடு அதிகத் தொடர் பில்லாமல் வாழும் சமுதாய பிரிவிரைத் தவிர மற்றையோர் ஒருமொழியாளராக இருப்பதில்லை. காரணம், ஏதேனும் ஒரு சூழலில் இவர்கள் பிறமொழியைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு-முறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். அதுவும் குறிப்பாக நகர்ப்புறங்களிலும், தொழில் இடங்களிலும் இத்தகையச் சூழல் பெருமளவு வழக்கில் இருந்துவருவது கண்கூடு. இருமொழி மற்றும் பல்மொழி வழக்குநிலை நடை-முறையில் இருந்துவரும் சூழலில் மொழிப் பயன்பாட்டில், ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் ஈடுபடுத்தப்படுமென்பது இயல்பானது. அதிலும், குறிப்பாக கல்வி, ஆட்சி, தகவல் தொடர்பு போன்ற துறைகளில் இருமொழி மற்றும் பன்மொழிப் பயன்பாடு சட்டத்திற்கு உட்படுத்தப் பட்டு வழக்கில் இருந்து வருவதைக் காணலாம். தாய்மொழியில் தன்னிறைவு, கருத்துப் புலப்பாட்டுத்திறன் போன்றவை எதிர் பார்த்த அளவற்று இல்லாத நிலையில் பிறமொழிகளை நாடவேண்டிய கட்டாயமும், சில நேரங்களில் தோன்றி விடுகிறது.

இன்றையச் சூழலில் வளர்ந்துவரும் நாடுகளில், அதுவும் குறிப்பாக, பன்மொழி வழக்குள்ள வளரும் நாடுகளில் மொழிப் பயன்பாட்டிலே பல்வேறு பிர்ச்சினைகள் தோன்றிவருகின்றன இப்பிரச்சினைகள் மொழிக்கற்பித்தலிலேயும், மொழிவழிக். கற்பித்தலிலேயும் அதிகமாகத் தோன்றுகின்றன. இதனையடுத்து முக்கியமான சமுதாயப் பணிகளான ஆட்சித் துறை, தகவல் தொடர்புத்துறை ஆகியவற்றில் இவை சிக்கல் வாய்ந்தவையாக அமைந்துள்ளன. ஆகவே, இது போன்ற மொழிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியது மொழி வளர்ச்சிக்கு மட்டுமல்லாது சமுதாய வளர்ச்சிக்கும், இன்னும் சொல்லப்போனால் நாட்டு வளர்ச்சிக்கும் தேவையானது

பலமொழி வழக்குச் சூழலில் இடம்பெறும் மொழிகளைத் தேவைக்கு ஏற்பவும், நடைமுறையில் பின்பற்றப்படும் மொழிக் கொள்கைகளுக்கு ஏற்பவும் வளப்படுத்த வேண்டும். அவை வளப்படுத்தப்பட்டு மொழிப் பயன்பாட்டில் ஈடுபடுத்தப்படும் பொழுதே அவற்றின் மூலம் சமுதாயப்பயன் ஏற்படும். எனவே, சமுதாயப் பயன் கருதி மொழிகளை வளர்ப்பதும் அதற்காகத் திட்டமிடுவதும் இன்றியமையாததாகும்.

கல்வித்துறையில் மொழி: தமிழ்

நீண்ட நெடிய இலக்கண, இலக்கிய மற்றும் பயன்பாட்டுப் பாரம்பரியத்தைத் தமிழ்மொழி பெற்றிருப்பது நாம் அறிந்த ஒன்று என்றாலும், பல்வேறு தாக்கங்களால் தமிழின் பயன்பாடு குறைந்து வந்துள்ளதை வரலாறு நமக்குக் காட்டுகிறது. பயன் பாட்டில் இடம்பெறாத நிலையில் மொழியின் வளர்ச்சிப் பாதையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களும் புதுமைகளும் நிகழ வாய்ப்பில்லை. இன்றையப் புதுமையாக்கம் பல தரப்பட்டுள்ளது. அறிவு துறைகளிலும், ஆட்சித்துறையிலும், தகவல் தொடர்புத் துறையிலும், அறிவியல் துறையிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களில், புதுமைகளும் ஏராளம். இவற்றால் தமிழ்ச் சமுதாயம் பயன் படுத்தும் மொழிவழக்குகளிலும் மாற்றங்களும், புதுமைகளும் தோன்றலாயின. இதற்கு அடிப்படைக் காரணம், சமுதாயத் தேவையேயாகும். கல்வித்துறையில் தமிழ் ஒரு மொழியாகக் கற்பிக்கப்படுகிறது. கற்பிக்கும் பயிற்று மொழியாகவும் சில நிலைகளில் பயன்படுத்தப்படுகிறது. என்றாலும் பல்வேறு சமுதாய மொழியியல் காரணங்களாலும் மனப்பான்மை களாலும், அதனுடைய பயன்பாடு குறைந்த அளவிலேயே இருந்து வருகிறது. குறிப்பாக, உயர் கல்வியில் இத்தகைய மொழிப் பயன்பாடு சூழல் பெருமளவில் இருந்து வருவதைக் காண்கிறோம். இதனால், தமிழ்வழி பயன்பாட்டிற்கு ஏற்ற பணிகள் பரந்த அளவில் நடைபெற வாய்ப்புக்கள் குறைகின்றன. பின்பற்றப்படும் மொழிக் கொள்கைகளினால் மொழி கற்பித்தல், மொழிவழிக் கற்பித்தல் போன்றவற்றில் பிரச்சினைகள் எழுகின்றன.

தாய்மொழி மூலம் பல்துறை அறிவைப் பெறுவது எளிதானது, ஆற்றல்மிக்கது; அவசியமானது என்றெல்லாம் குறிப்பிடப்பட்டாலும், நிரூபிக்கப்பட்டாலும் ஒருவர் பெறும் கல்வியின் பயன் என்ற ஒன்றினைக் குறிக்கோளாக வைத்து நோக்கும்போது, அதற்குரிய சிறப்பு ஏற்படாமல் போய்விடுகிறது. இந்நிலைதான் இன்று பல்வேறு பன்மொழி வழக்கு நாடுகளில் இருந்துவருகிறது. இந்திய நாடும் இதற்கு விதிவழக்கன்று; தமிழ்நாடும் விதிவழக்கன்று, தமிழ் மொழியும் விதிவழக்கன்று.

இன்றையச் சூழலில் தமிழ்வழிக் கல்வியை வலியுறுத்தும் நிலையில் சில நெறிமுறைகளைப் பின்பற்றி வருகிறோம். அவற்றுள் சில;

1. கலைச்சொல்லாக்கம்
2. மொழிபெயர்ப்பு
3. புதியநூல் உருவாக்கம்
4. பல்துறை அறிவைப் பெறுவதில் ஈடுபாடு

மற்றும் புத்தொளிப் பயிற்சி போன்றவை. இவற்றோடு கல்வித் துறையின் பல நிலைகளின் ஒருங்கிணைப்பு என்பதும் மிகவும் இன்றியமையாததாகும்.

ஆகவே, கல்வித்துறையில் தமிழ் என்ற நிலையில் 'அறிவியல் தமிழ்' என்பதும் அதனை உருவாக்குவது பற்றிய நெறிமுறைகளும் சிறப்பிடம் பெறுகின்றன. இன்றையச் சமுதாய வளர்ச்சிக்கு அறிவியல் பல்லாற்றாலும் தேவைப் படுகிறது. இத்தேவையை முன்னுறுத்தி நம் கல்விச் சூழலிலும் நாம் அறிவியலுக்குக் குறிப்பிடத்தக்க இடத்தினைக் கொடுத்து வருகிறோம். எடுத்துக்காட்டாக அறிவியல் கற்பித்தல், அறிவியல் ஆய்வு, அறிவியல் முறைசார் ஆய்வு, அறிவியல் பரவலாக்கம், அறிவியல் சூழல் போன்றவற்றை முறையாக ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். இம் முயற்சிகளை மேற்கொள்ளும் பல்வேறு நிலைகளில் மொழியின் பங்கு சிறப்பிடம் பெறுவதைக் காண்கிறோம். கல்வித்துறையில். பயிற்று மொழியாக 30 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்மொழி

ஈடுபடுத்தப்பட்டது. அண்மைக் காலத்தில் அறிவியல் தமிழ் என்பது குறித்துப் பல நிலைகளில் பரவலாகப் பேசப்பட்டு வருவதோடு, அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கான முயிற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் இச்சொற் பொழிவில் ஒரு பகுதியாக அறிவியல் தமிழ் பற்றி கருத்துக்களும், அதனை உருவாக்குவதற்கான நெறிமுறைகளும் இடம் பெறுகின்றன.

அறிவியல் தமிழ் என்றால் என்ன?

அறிவியல் தமிழ் என்பது பல்வேறு அறிவியல் துறைகளில் அறிவியல் கருத்துக்களை எடுத்துச் சொல்லப் பயன்படுத்தப்படும் தமிழாகும். அறிவியல் தமிழ் இலக்கியத் தமிழினின்றும் ஓரளவு மாறுபட்டு நிற்கவேண்டிய இன்றியமையாமையும் ஏற்படுகிறது. மொழியை ஆளும் திறன், மொழிநயம், மொழியின்பம் என மொழித் தேர்ச்சியையும், புலமையையும் காட்டும் நிலைக்களனாக இலக்கியத் தமிழ் விளங்குகிறது. இலக்கியத் தமிழில் மொழியோடு உணர்ச்சியும் இயைந்திருக்கும். முத்தமிழைப் போன்று அறிவியல் தமிழில் மொழி நயத்திற்கோ, உணர்ச்சிக்கோ மொழியின்பத்தை நுகரவைக்கும் முயற்சிக்கோ சிறிதும் இடமில்லை. அறிவியல் கருத்துக்களை மிகைப்படக் கூறாமலும் அதே சமயத்தில் குன்றக் கூறாமலும் தெளிவாகவும் எளிதாகவும் திறம்படவும் எடுத்துக்கூறும் ஒரு கருவியாக மட்டுமே அறிவியல் தமிழைப் பயன்படுத்த வேண்டும்.

அறிவியல் மொழி ஏன்பது ஒரு மொழியின் பயன்பாட்டில் (language use) அறிவியற் கருத்துக்களைத் தெளிவாகவும் எளிமையாகவும் செய்தித் தொடர்பின் ஆற்றல் மிக்கவையாகவும் ஆக்க பல்வேறு மொழிக்கூறுகளை (linguistic features) அந்தந்தச் சமுதாயச் சூழல்களுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ளப்படும் ஒரு மொழிநடையாகும் (language style) இவ்வகை மொழிவழக்கு பிற துறைகளில் பயன்பட்டுவரும் மொழிவழக்குகளிலிருந்து ஓரளவிற்கு அதன் பல்வேறு நிலைகளில் (levels) மாற்றங்கள் பெற்று அமைவது என்றால் அது மிகையாகாது.

கலைச்சொல்லாக்கம்

ஒரு மொழியில் இல்லாததொரு சொல்லுக்கு வேற்று மொழியினின்று நேரிடையாகச் சொற்களைப் பெற்றோ அல்லது அவற்றை ஒலிபெயர்த்தோ அல்லது மொழிபெயர்த்தோ புதுச்சொற்களை, புதுக்கருத்தினைப் புகுத்தி மொழி அல்லது அறிவியல் பணிக்கு ஏற்றம் தருவது கலைச்சொல்லாக்கம் எனப்படும். இவற்றுள் முதலிரண்டு பணிகள் கலைச்சொல்லாக்கக் கருத்திற்கு ஏற்றதாயினும் ஒரு மொழியின் சிறப்பியல்பு வெளிப்பட ஏதுவாக இருப்பது இவற்றுள் மூன்றாவதாகக் கூறப்பட்ட மொழிபெயர்ப்பு முறையே ஆகும். இருப்பினும், கலைச்சொல்லாக்கப் பணிகளுக்கு இம்மூன்று முறைகளையும் கருத்து நடைக்கேற்ப கையாளுவது மிக அவசியமாகும். எல்லாச் சொற்களையும் மொழிபெயர்த்தல் அல்லது சொற்கருத்தினை மருவி அமைத்தல் என்பது உற்ற முறையாகாது. அதற்கெனச் சொற்களை அப்படியே வேற்று மொழியினின்று பெற்றுக் கையாளுவதும் சிறப்பன்று. அப்படியெனில் கலைச்சொல்லாக்கப் பணி எந்நிலை நின்று எப்படி உருவாக்கப்பட வேண்டும் என்பது ஒரு முக்கிய வினாவாகும். இதற்கு மொழித்திட்டமிடும் பணியே வழிகோலும். கலைச்சொல்லாக்கப் பணிக்கு மொழித்திட்டமுறை -யில் சிலகோட்பாடுகள் கையாளப்படுகின்றன. அவையாவன:

1. முதலில் வேற்றுமொழிக் கலைச்சொற்களை மாற்றம் இன்றி அப்படியே மொழிகளில் பெறுதல்.
2. இவற்றை மொழித்தேவைக்கேற்ப ஒலிபெயர்த்தல்
3. இச்சொற்களுள் பொதுவானவற்றை ஒலிபெயர்ப்புடனோ மொழிபெயர்ப்புடனோ ஏற்றுக்கையாளல்.
4. பொதுமையல்லாச் சொற்களை முறையே புதுச் சொல்லாக்க முறையிலோ, பழஞ்சொற்களுக்குப் புதுக்கருத்தினைத் திணித்தோ கையாளுதல்.

இவ்வகை கலைச்சொல்லாக்கம் அறிவியல் வளர்ச்சிக்கு ஏதுபயப்பினும் இப்புதுமையாக்க முறைகளில் சில சிக்கல்கள் உள்ளன.

ஆக்ஸிஜன் என்ற சொல் பொதுச்சொல்லாகும். இதனை அடிப்படியே கையாளுவதா அல்லது ஒலி/மொழி பெயர்த்துக். கையாளுவதா? ஒரு மொழியில் ஒரு புதுச்சொல்லைத் திணிக்கும் போது வேற்றுமொழிச் சொல்லை அப்படியே கையாளுவது நல்லதன்று. முதலில் இதனை ஒலிபெயர்த்து அதனைப் பெறும் மொழி அமைப்பிற்கு ஏற்பக் கையாளுதல் நன்று. பிறகு இச்சொல்லுக்குரிய மொழி பெயர்ப்பு அம்மொழியில் இருப்பின் அதனை எடுத்துக் கையாளுதல் நல்லது. ஆக்ஸிஜன் என்ற சொல்லுக்குத் தமிழில் உயிரகம், உயிர்வளி என்ற மொழி பெயர்ப்புக்கள் உள்ளன. இச்சொல்லைக் கலைச்சொல்லாக்கம் செய்யவேண்டுமெனில் சில காலம் ஆக்ஸிஜன் என்ற சொல்லில் துணையுடன் உயிரகம்(ஆக்ஸிஜன்)என அறிவியல் தமிழில் கையாள வேண்டும். உயிரகம் என்ற சொல் நிலைபேறு அடைந்தான் இதனைப் பிறசொல் துனையின்றி அறிவியல் கருத்துக்களை வெளிப்படுத்தக் கையாளலாம். ஆனால் இச்சொல் நிலைபேறு அடையும் வரையில் பிறமொழிச் சொல் துணைகொண்டு கையாளல் தவிர்க்கமுடியாத ஒன்றாகும்.

இதுபோன்று புதுச்சொற்களையும் புதுக்கருத்துப் பெற்-பழஞ்சொற்களையும் கையாளும்போது அவை நிலைபேறடையும் வரை பிறமொழிச் சொல்துணையுடன் கையாளல் அவசியமாகும்.அறிவியல் மொழிநடையினைச் செம்மையாக்கவும் ஒரு மொழி பல்வேறு துறைகளுக்குரிய கருத்துக்களைச் செவ்வனே வெளிப்படுத்தவும் மிக முக்கியமானவை இம்மொழி பெயர்ப்பு மற்றும் புதுச்சொல்லாக்கம். இது போன்ற மொழிப் புதுமையாக்க (modernization) முயற்சிகளே பின்னர் அறிவியல் மொழிக்கேற்ப ஒரு மொழியினை நிலைபேறாக்கம் செய்யத் துணைபுரியும்.

கலைச்சொற்களைத் தரப்படுத்துதல்

கலைச்சொற்களைத் தரப்படுத்தும்போது சில கோட்பாடு-களை / நெறிமுறைகளை வரையறுத்துக் கொண்டு செய்ய வேண்டும். ஊஸ்டர் என்பவர் சில கோட்பாடுகளை வரையறுத்துள்ளார். அவையாவன;

1. பொருத்தமுடைமை / திறனுடைமை (appropriatness efficiency)
2. ஏற்புடைமை (adaptability)
3. சொற்செட்டு / எளிமை (economy / simplicity)
4. ஒருமைப்பாடு (uniformity)
5. பலதுறைநோக்கு (interdisciplinary approach)
6. மொழித் தூய்மை (language purity)

பொருத்தமுடைமை

ஒரு கருத்துப் படிமத்துக்குப் பல கலைச்சொற்கள் இருக்கும் போது அவற்றுள் பொருத்தமான சொல்லைத் தரப்படுத்துதல்

Bibliography — நூல் பட்டியல், நூல் அட்டவணை, நூலோதி, நூலடைவி போன்ற பல சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன

அவற்றில் நூலடைவு என்ற சொல்லே பொருந்துவதாக அமைகிறது.

ஏற்புடைமை

ஒரு கலைச்சொல் பெருவழக்கினதாகவும் மற்றொன்று அருகிய வழக்கினதாகவும் இருக்கும்போது பெரு வழக்கி லுள்ளதை எடுத்துக்கொள்ளுதல் நல்லது.

Joint Secretary — இணைச்செயலர்
Joint account — கூட்டுக்கணக்கு

பெரு வழக்கு என்பது சமுதாயத்தில் பொது இசைவு பெற்றதற்கு அடையாளமாகும். சில சமயங்களில் கருத்துப் படிமத்துக்குப் பொருந்தாத சொல்லாக இருப்பினும் வழக்கில் வந்தபின் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

Engineer – பொறியாளர்.

எளிமை

சொற்கள் உச்சரிக்க எளிமையாக இருக்க வேண்டும். அதோடு கேட்பதற்கு இனிய ஓசையுடையதாகவும் இருக்க வேண்டும்.

மின்சார வாரியம், மின்சாரத்தடை, அஞ்சல் அலுவலகம் என வழங்கப் பெற்று வந்தவை சொற்செட்டு கருதி தற்போது மின்வாரியம், மின்தடை, அஞ்சலகம் என வழங்கப்பட்டு வருகின்றன.

ஒருமைப்பாடு

கூடுமானவரை ஒரு துறை சார்ந்த கலைச்சொற்களைத் தரப்படுத்தும் போது ஒருமைப்பாடு குலையா வண்ணம் தரப்படுத்துதல் நல்லது. Angle என்பது கோணத்தைக் குறிக்கும்

Angle of friction — உராய்வுக்கோணம்
Angle of kinetic friction — நகர் உராய்வுக்கோணம்
Angle of static friction — நிலை உராய்வுக்கோணம்

சில கலைச்சொற்களில் இவ்வகை ஒருமைப்பாடு அமைதல் சத்தியமில்லாது போகலாம். (எ. கா) — என்கிற முன்னொட்டுக்கு நிகராகத் தமிழில் எதிரி, பகை, முரண், அடக்கி, தடை, நீக்கி, முறி, ஒழிப்பு எனப் பல சொற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

Anti malaria — மலேரியா ஒழிப்பு
Anti leprosy — தொழுநோய் ஒழிப்பு
Anti Hindi — இந்தி எதிர்ப்பு

இவற்றுள் நோய் சம்பந்தப்பட்ட சொற்களோடு Anti — சேரும் பொழுது 'ஒழிப்பு' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதற்குக் காரணம் நோய் பற்றிய சமுதாயத்தின் அச்சமும் அதை ஒழிப்பதில் காட்டும் ஆர்வமுமேயாகலாம். இச்சமுதாயக் காரணியை மனதில் கொண்டே இக்கலைச்சொற்களை இவ்வாறு ஆக்கியிருக்க வேண்டும். எதிர்ப்பு, பகை தடை முதலிய

சொற்களைவிட ஒழிப்பு என்பது இந்த இடத்தில் பொருள் திறனுடைய சொல்லாக உள்ளது. இந்தி எதிர்ப்பு எனும்போது இந்தித் திணிப்பை எதிர்ப்பதாக விளக்கப்படுகிறது. இது இந்தி ஒழிப்பு அன்று. இம்மாதிரி இடங்களில் ஒழிப்பு என்பதைவிட எதிர்ப்பு என்பது எதிர்பார்க்கும் கருத்தைப் புலப்படுத்துகிறது. ஒருமொழியின் திணிப்பை எதிர்க்க வேண்டும். ஆனால், மொழியை எதிர்க்கவோ, ஒழிக்கவோ வேண்டாம். ஆனால் ஒரு நோயை எதிர்த்தால் மட்டும் போதாது ஒழிக்கவும் வேண்டும். எனவேதான் ஒழிப்பு என்பது நோய்களோடு சேர்க்கப்பட்டது போலும் என எண்ணத் தோன்றுகிறது. எனவே, இவ்வகை கலைச்சொல் தொகுதியில் முழு ஒருமைப்பாடு காணல் இயலக்கூடியதன்று.

பலதுறை நோக்கு

கலைச்சொற்களில் பலவும் ஒரு குறிப்பிட்ட துறைக்கென இல்லாது தொடர்புடைய பிற துறைகளிலும் பயின்று வரக் காணலாம். எனவே, கலைச் சொல்லாக்கும் போதும், அவ்வத்துறை வழக்கையும் கவனத்தில் கொண்டு தரப்படுத்தல் பயனுடையதாகும்.

sub-soilwater — அடிமண் நீர் (பொறி.)

sub-collector — துணை ஆட்சியர் (நிர்.)

இதில் துணைமண்நீர் என்றே அடிஆட்சியர் என்றோ வழங்கினால் கருத்துப் புலப்பாடு சரிவர நிகழாது.

தொடர் வாக்கிய அமைப்பு

அறிவியல் கருத்துக்களை வெளியிட கலைச்சொல் மிக இன்றியமையாதது. அதுபோல் அச்சொற்கள் அமைந்த தொடர் வாக்கிய அமைப்பு இன்றியமையாத ஒன்றாகும். இலக்கியக் கருத்துக்களைச் சொல்லும் வாக்கிய அமைப்பு வேறு, அறிவியல் கருத்துக்களைச் சொல்லும் வாக்கிய அமைப்பு வேறு. அறிவியலில் வாக்கிய அமைப்பு கருத்தின் வெளிப்பாட்டிற்கு முக்கியத்துவம் தருகிறது. அதாவது பொருள் மையமாக அமைய

அதனை ஒட்டி வாக்கிய அமைப்பும் பிற சிறு அமைப்புக்களும் அமைக்கப்படுகின்றன. சொல்லப்படும் கருத்துக்கள் சுருக்க மாகவும், தெளிவாகவும், எளிமையாகவும் இருத்தல் வேண்டும். அறிவியல் வாக்கிய அமைப்பில் செய்வினை, செயப்பாட்டுவினை வாக்கியங்கள், நேர்கூற்று, அயற்கூற்று போன்ற இலக்கண அமைப்புக்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. பரிசோதனைகளை வளர்க்க நேர்கூற்று முறை பயன்படுத்தப் படுகிறது.

கருத்துக் கோவையை வெளியிட இணையமைப்பு வாக்கியங்கள் பயன்படுகின்றன. இவ்வகை வாக்கியங்களில் பயன்படுகின்றன. இவ்வகை வாக்கியங்களில் கருத்துச் செறிவு காணப்படுகின்றது. ஆனால், சில நேரங்களில் அமைப்பிலும் பொருளிலும் சிக்கல்கள் தோன்ற வாய்ப்புண்டு. அதிகப்படியான இணைப்புச் சொற்களை வாக்கியங்களில் பயன்படுத்துதல் கூடாது. தேவைக்கு ஏற்பவே இணைப்புச் சொற்களைப் பயன் படுத்த வேண்டும்.

ஆக்கத்திற்கான செயல்முறைத் திட்டம்

இன்றைய அளவில் அறிவியல் ஆராய்ச்சி மற்றும் அறிவியல் நூல்படைப்புக்கள் பெரும்பாலும் பிற மொழிகளிலேயே நடைபெற்று வருகின்றன. இன்னமும் தமிழ் மொழி வாயிலாக ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளிப்படுத்தும் இயல்பு நமக்கு ஏற்படவில்லை. இன்று அறிவியல் வளர்ச்சிப் பணிகளிலும் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இப்பணி துவங்கிய சில காலம் வரை வேற்றுமொழிக் கருத்துக்கள் வரிக்கு வரி மொழிபெயர்க்கப்பட்டுத் தமிழில் எழுதப்பட்டன பின்னர் கருத்தினைச் செறித்து மொழிபெயர்க்கும் பணி நடைபெறத் துவங்கியது. அறிவியல் ஆக்கப் பணி சிறப்புற வேண்டுமாயின் எழுத்தாளர்கள் தமிழிலேயே சிந்தித்து ஏற்ற தமிழ்நடையில் கருத்தினை வெளிப்படுத்துவதே அறிவியல் தமிழ் வளர்ச்சிக்குச் செம்மைபயக்கும். இதற்குச் சில அடிகோல்கள் உள்ளன. அவையாவன;

1. மொழி நடை எளிமையாக அமைய வேண்டும்.
2. கருத்துக்கள் நேரிடையாகச் சொல்லப்படவேண்டும்.
3. கலைச்சொற்களை உரிய இடங்களில் ஆய்ந்து கையாளவேண்டும்.
4. முடிந்த வரையில் மொழிபெயர்ப்பு முறையினைத் தவிர்த்தல்வேண்டும்.
5. ஒரு வாக்கியத்தின் நீளம் பத்துச் சொற்களுக்கு மிகாமல் அமைதல் நலம்.
6. கலப்பு மற்றும் இணை வாக்கியங்களைத் தவிர்த்தல் நன்று. இப்படிச் சிந்தித்து எழுதப்பட்டால் தமிழ் எழுத்து நடை அறிவியலுக்கேற்ப சிறந்த முறையில் வளர வாய்ப்புண்டு.

மொழிநிலை பேறாக்கம்

மொழி நிலைபேறாக்க முயற்சி என்பது கலைச் சொல்லாக்கம், மொழி நடையைச் செப்பனிடல் ஆகிய முயற்சிகளைச் சார்ந்ததேயாகும். அறிவியல் உரைநடை நிலைபெற இம் மூன்று முயற்சிகளும் சிறந்த முறையில் வளர்ச்சி பெறவேண்டும். அதன் வாயிலாக இம்மொழி நடை மக்களிடையே பரப்பப்பெறவேண்டும். இவற்றுள் சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் அறிவியல் நடைகளே நிலைபேறடையும். ஏனையவை மீண்டும் முறையே தேர்ந்தெடுக்கப்பட்டு உருப்பெற்று அதன் பின் நிலைபேறாக்க முயற்சியில் ஈடுபடுத்தப்பட வேண்டும். இப்படியான தெரிந்தெடுத்தல், ஒதுக்கித் தள்ளல் ஆகிய முயற்சிகளின் வாயிலாக மொழிநடை புதுமை பெற்று நிலைபேறடைகின்றது. இவ்வாறாக, புதுமையாக்கப் பணிகளின் வாயிலாக அறிவியல் தமிழ் நடை வளர்ச்சி பெறுகின்றது.

அறிவியல் மொழியாக்கம் என்பது சிறிய பணியன்று; மொழியாக்கத்திற்கும் நடையாக்கத்திற்கும் அடிகோலுவன கலைச்சொல்லாக்கம், எழுத்து சீர்திருத்தம் மொழிநடையைச் செப்பனிடல் என்பன முயற்சிகளே. இப்புதுமையான முயற்சிகள் சமுதாயத்தின் ஒப்புதலைப் பெற்று நிலைபெற்றாலே அது மொழிக்குகந்த நடையாக உருப்பெறுகிறது. இவ்விதம்

மொழியாக்கங்களில் சிக்கல்கள் பல இருப்பினும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும், மொழியாக்க முயற்சிகளே அறிவியல் நடையினைத் தமிழில் பெற எளிதில் வாய்ப்பளிக்கும்.

உரைக்கோவை (discourse)

கடிதம், விளம்பரம், பத்திரிகைச்செய்தி, அரசின்கோப்புக் குறிப்புக்கள், சிறுகதை முதலிய பல பொழிவு வடிவங்களில் மொழியமைப்பு (discourse structure) வேறாக இருக்கும் அறிவியலில் மொழியமைப்பு வேறாக இருக்கும். அறிவியலிலேயே ஆய்வுக்கட்டுரை, ஆய்வு அறிக்கை, அறிவியல் பாடம், அறிவியல் பத்திரிகைக், கட்டுரை முதலியவற்றிடையே மொழியமைப்பில் வேறுபாடு இருந்தாலும் எல்லாவற்றுக்கும் பொதுவான உண்மைகள் உண்டு. இவை மொழியின் குணங்கள் அல்ல; அறிவியலின் குணங்கள். அறிவியல் மொழியின் தனித்தன்மைகள் என்று சிலவற்றைக் கூறலாம். சாதாரண மொழியைச் சேராத குறியீடுகளைப் (formulas) பயன்படுத்திக் கருத்தைத் தெரிவிப்பது ஒரு தன்மை. அறிவியல் மொழியின் இன்னொரு தன்மை எழுதுபவனிடமிருந்து பிரிந்து நிற்றல், அவனுடைய உணர்வுகள், ஆசைகள், நம்பிக்கைகள், முதலியன மொழியில் பிரதிபலிக்கா. அறிவியல் மொழியில் தன்மை வாக்கியங்கள் இருப்பதில்லை. செய்வோனைவிடச் செயலுக்கு முக்கியத்துவம் கொடுத்து வாக்கியங்கள் அமைக்கப்படும். உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் அசைச்சொற்கள் இருக்காது. வியப்புக்குறிகள் தேவைப்படாது. ஒவ்வொரு பொழிவிலும் ஒரு சில மொழிச் செய்கைகள் (Communicative aets) பிரதானமாக இருக்கும். அறிவியல் எழுத்துக்களில் வரையறுத்தல் (defining) நிரூபித்தல் (Proving), மேற்கொள் காட்டுதல் (referencing) முதலான மொழிச் செய்கைகள் அதிகமாக இருக்கலாம். இந்த மொழிச் செய்கைகளுக்குத் தனி மொழிக் கூறுகள் உண்டு. அவை அறிவியல் மொழியின் இடம் பெற வேண்டும்.

மேலே சொன்ன மொழி முறையில்லாத (non - Verbal) முறைகள் மூலம் கருத்துத் தெரிவித்தல், மொழியைத் தன்னிட

மிருந்து வேறுபடுத்தல், சில சிறப்பான மொழிச் செய்கைகளைக் கொண்டிருத்தல் முதலிய தன்மைகளில் அறிவியல் மொழி வேறுபட்டிருக்கும். எடுத்துக்காட்டாக, தன்மைக்கூறு இல்லாமல் இருப்பதற்காகச் சில மொழிகள் செயப்பாட்டுவினை (Pasrive voice) வாக்கியங்களை உபயோகிக்கலாம். இந்த வாக்கிய அமைப்பை இல்லாத மொழிகள் வேறு வகையான வாக்கிய அமைப்பை உபயோகிக்கலாம். மேற்கோள் காட்டும் முறையில் மொழிகளுக்கிடையே வேறுபாடு இருக்கலாம். கட்டுரையை அமைக்கும் முறையிலும் வேறுபாடு இருக்கலாம். தமிழின் தன்மைகளுக்கேற்ற அறிவியல் எழுத்துமரபை உருவாக்க வேண்டும். மரபு உருவாகப் பலரும் தமிழில் அறிவியல் எழுத வேண்டும்.

அறிவியல் தமிழில் எளிமையாக்கமும் விரிவாக்கமும்

மொழியில் புதுமையாக்கம் பற்றிப் பேசும் வல்லுநர்கள், திட்டமிடுவோர் ஆகியோர் எளிமையாக்கம் (Simpltification) என்ற கொள்கையினைப் புதுமையாக்கத்தின் ஒரு பகுதி என்றே கொள்கின்றனர். எளிமையாக்கம் எழுத்தளவில் செய்யப் படலாம். வாக்கிய அமைப்பிலும் செய்யப்படலாம். இதன் முக்கியநோக்கம் அறிவியல் மொழி அமைப்பானது, எந்தச் சமுதாயப் பிரிவினருக்காக அமைக்கப்படுகிறதோ, அவர்களுக்கு அது தங்கு தடையின்றிச் சென்று சேரவேண்டும் என்பதேயாகும். உயர்கல்வித் துறைகளுக்கு இவை நேரிடையாகச் சென்று சேரும். ஆகவே, அச்சூழலில் எளிமையாக்கம் என்பது சம்பிரதாயமாகவே அமையும். ஆனால், அறிவியல் கருத்துக்களை ஓரளவே கற்றவரும் கல்வியறிவு ஏதும் பெறாதவரும் சிறிதளவேனும் அறிந்து கொள்ளும் வகையில் செய்திட அறிக்கைகள், அறிவிப்புகள், விளம்பரங்கள், சிறு விளக்கங்கள் போன்றவை மிகவும் பயன்படுகின்றன. பரவல்செய்தித் தொடர்பில் இவை பெரும்பங்கு வகிக்கின்றன என்றுகூடச் சொல்லலாம். ஆகவே, இவற்றின் மூலம் இக் கருத்துக்கள் யாவும் தெளிவாகவும் எளிமையாகவும் ஆற்றல் மிக்க வகையிலும் வெளிப்படுத்தப்பட மொழியிலே எளிமையாக்கம் நிச்சயம் தேவை - ஏற்படுத்தப்படுதலும் வேண்டும். மேலும் இது

போன்ற சமுதாயப்பிரிவினருக்குக் கலைச்சொற்களை அப்படியே சொல்லாமல் அவற்றை எளிமைப்படுத்தி விளக்கும் முறையில் சொற்களையும், தொடர்களையும் விரிவாக்கிக் கொள்ளும் முறை (method of cleboration) மிகவும் தேவையானதாகவும் உகந்ததாகவும் தோன்றுகிறது. இதனைக் கருத்திற் கொண்டு எளிமையாக்கம் செய்யப்படும் நேரத்தில் எளிமையாக்கப்பட்ட மொழிக் கூறுகள் ஒரு குறிபிட்ட சமுதாயப் பிரிவினருக்குப் பயன் படும் வகையிலும் இன்னொரு பிரிவினருக்கு விரிவாக்க நிலையிலும் மொழித் திட்டமிடுதல் பணி மேற்கொள்ளப் படுதல் நலம் பயக்கும் என்பர். இவற்றைச் செய்யும்போது கீழ்க்காணும் நான்கு முக்கியமான கொள்கைகள் வலியுறுத்தப் படுகின்றன. அவையாவன;

1. மொழிக்கூறுகளை நிலைபேறாக்கத்திற்காகத் தேர்ந் தெடுத்தல் (selection)
2. தேர்ந்தெடுக்கப்பட்ட மொழிக்கூறுகளுக்கு வடிவம் அமைத்தல் (அ) உரு கொடுத்தல் (Codification)
3. வடிவம் கொடுத்த பின்னர் அவற்றை அனைவரும் அறிந்திடும் வகையிலும் எடுத்தாளும் வகையிலும் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு அவற்றை முறையாகப் பரப்புதல் (elaboiation of function and propagation),
4. இவ்வாறு விரிவாக்கம் செய்யப்பட்டுப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட மொழிக் கூறுகள் நடைமுறைப் பயன்பாட்டில் இடம் பெற்று அவற்றைச் சமுதாயம் ஏற்றுக் கொள்ளுதல் அல்லது ஒதுக்கிவிடுதல் (Social acceptance or rejection).

இக்கொள்கைகள் ஒவ்வொன்றும் மொழியின் ஒவ்வொரு நிலையிலும் (எழுத்து ஒலியின் நிலை, சொல்நிலை, தொடர் நிலை) பயன்படுத்துபவையாகும். ஆகவே, புதுமையாக்கம் என்ற பெயரில் மொழியில் அவ்வப்போது ஏற்படும் அணைத்து வகையான மாற்றங்கள் சீர்திருத்தங்கள் போன்றவை முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டு, முறையாக வடிவமைக்கப்பட்டுப் பல

மூலங்களின் (Channels) மூலம் சமுதாயத்தில் பரப்பப்பட்டு பின்னர் அவற்றைச் சமுதாயம் ஏற்றுக் கொள்வதும் ஒதுக்கி விடுவதும் கண்கூடு. தமிழ் மரபிலக்கிணங்கள் (traditional grammars) கூட இதனை ஒரு விதியாகவே சொல்லியிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

எளிமையாக்க முயற்சிகள்

1. தொடர்மைப்புக் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுவது மாற்றியமைக்கப்படுதல்.
2. வாக்கியங்களில் மிகைக்கூறுகள், தேவையற்ற கூறுகள் நீக்கப்படுதல் பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே (நான்னூல் சூத். 463)
3. பெயர்ச்சொல் — பெயரடை, வினை — வினையடைப் பயன்பாடு அளவாகவும் முறையாகவும் அமைக்கப் படுதல்.
4. இணையமைப்பு மற்றும் கலப்பு வாக்கியங்கள் முறையாக அமைக்கப்படுதல்.

மொழிநடையும் மொழி வளர்ச்சியும்

ஒரு மொழியின் வளர்ச்சி என்பது இரு நிலைகளில் எண்ணிப் பார்க்கப்படுகிறது. ஒரு நிலை அதன் அமைப்பை (language structure) ஒட்டியது. மற்றொரு நிலை அதன் பயன்பாட்டை (language usc) அடிப்படையாகக் கொண்டது. இவ்விரு நிலைகளையும் ஒருசேர இணைத்துப் பார்த்து மேற்கொள்ளப் படும் பணியே அதன்அதன் வளர்ச்சிக்கு உதவும் என்பார்கள். மொழி நடை என்பது மொழிப் பயன்பாடு யாருக்குத் தேவை, எதற்குத் தேவை என்பனவற்றைப் பொறுத்தும் எந்த வகைச் சமுதாயச் சூழலில் அது மொழிப் பயன்பாட்டில் ஈடுபடுத்தப் படுகிறது என்பதைப் பொறுத்துமே பெருமளவில் அமைகிறது எனலாம்.

ஆகவே, மொழி நடைக்கூறுகள் செம்மை பெறும் வகையில் மொழித் திட்டமிடுதல் மேற்கொள்ளப்பட்டால், அது மொழியின

சீரான வளர்ச்சிக்கு நேரிடையாக உதவும் வகையில் அமையும் என எதிர்பார்க்கலாம். இதனால்தான் இன்று மொழி பயன்பாட்டை ஆராய்வோர் மொழி நடை பற்றிய ஆய்வினை முதலில் சிறப்பாகவும் முழுமையாகவும் மேற்கொண்டு அதன் மூலம் மொழி வளர்ச்சிக்கான திட்டங்களுக்குத் தேவையான கொள்கைகளை வரையறை செய்கின்றனர்.

இவ்வாறு வரையறை செய்யப்பட்ட கொள்கைகளைப் பயன்படுத்தி அதன் வாயிலாக மொழிக்கூறுகளைச் செம்மைப் படுத்தும் (corpus planning) திட்டத்தைச் சீர்படுத்திக் கொள்ள முடியும். இதனால் மொழிக் கூறுகள் பல நிலைகளில் பயன்பாட்டிற்கு மிகவும் ஏற்றவகையில் அமைந்து, அறிவியல் கருத்துக்கள் பல துறைகளுக்கும் பல சமுதாய பிரிவினருக்கும் சிறப்பாகச் சென்று சேருவதற்கான வழி ஏற்படும். மொழிநடை மொழிக்கூறுகளைச் சீர்ப்படுத்துவதோடு அவை வெளிப்படுத்தும் முறையினையும் ஓரளவிற்குத் தெளிவுபடுத்துகிறது என்றே சொல்ல வேண்டும். எடுத்துக்காட்டாக. சுருங்கக் சொல்லி விளங்க வைத்தல் சூழ்நிலைக் கேற்ப மொழிக் கூறுகளை மாற்றிக் கொள்ளுதல் போன்றவை இதில் அடங்கும்.

மொழித் திட்டமிடுதலின் முதல் பிரிவான கொள்கை அமைப்புமுறையைச் (Status planning) சீர்படுத்திக் கொள்வதற்கும் மொழிநடை பற்றிய தெளிவான விளக்கம் ஓரளவிற்கு உதவும். எந்த வகையான நடையியற் கூறுகளைக் (stylistic features) கொண்ட வழக்கு, குறிப்பிட்ட சமுதாயப் பணிகளைச் செய்வதற்கு ஏற்றது, நிலைபேறாக்கம் கொண்டது என்பனவற்றைத் தீர்மானித்தால், அவற்றின் மூலமாக. நாட்டில் மொழிக் கொள்கைகள் (language policies) சீர்திருத்தப்படவும் எலோரும் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக அமைத்துக் கொள்ளவும் துணைபுரியும். இதனால் மொழி நடை அமைப்பு அறிவியலுக்கு ஏற்றதாக அமைந்து அறிவியல் வளர்ச்சிகள் சமுதாயத்திற்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் மிக

எளிதாகக் கிடைத்திடும் சூழ்நிலை உருவாகும். நாடு - மொழி - சமுதாயம் என்ற தொடர்பின் உண்மைப் பொருளுக்கு உரிய இடம் வெளிபடும்.

மொழிகளுக்கிடையேயான செய்திப் பரிமாற்றத்திற்கு மொழிபெயர்ப்பு மிகப்பெரும் பங்காற்றுகிறது. மொழிபெயர்ப்பின் வாயிலாக இருமொழிகளுக்கிடையிலான துவக்கநிலை செய்தி பரிமாற்றம் நிகழ்கிறது. பின்னர், இவ்வாறு மொழி பெயர்க்கப்பட்ட செய்திகள் குறிக்கோள் மொழியின் (target language) அமைப்பிற்கு ஏற்ற விதத்தில் தமதாக்கிக் கொள்ளப்படுகின்றன (nativised) வாய் வழியான செய்திப் பரிமாற்றத்திற்கும் எழுத்து வழியிலான செய்திப் பரிமாற்றத்திற்கும் எனத் தனித்தனியேயான மொழிபெயர்ப்பு முறைகள் உள்ளன. இவற்றுள்ளும், வரலாறு, சமுதாயவியல், மதம், தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளில் உள்ள நூல்களை மொழிபெயர்க்க வெவ்வேறு முறைகள் பின்பற்றப் படுகின்றன. எடுத்துக்காட்டாக, வரலாற்று மொழிப் பெயர்ப்பானது அதில் கூறப்பட்டுள்ள மரபுகளையும் நிகழ்ச்சிகளின் கோவையையும் காப்பாற்றவேண்டும். சமுதாய அறிவியல் துறையில் உள்ள மொழிபெயர்ப்பானது மூலநூலின் பண்பாட்டையும் சமுதாய அமைப்பையும் அவற்றின் மாண்பையும் பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டும், அதேபோல. அறிவியல் துறையில் மொழிபெயர்ப்பானது கருத்துக்களைத் தெளிவாகவும் முற்றிலுமாகவும் கூறும் திறன் பெற்றிருப்பதுடன் குறிக்கோள் மொழியில் ஐயத்திற்கு இடமில்லாது கருத்துக்களை விளக்குவனவாகவும் அமைதல் வேண்டும்.

இதிலிருந்து ஒவ்வொரு வகையான மொழிப்பயன்பாடும் தனக்கென ஒரு குறிப்பிட்ட நடையை வகுத்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாதது என்பது தெளிவாகிறது. இந்த ஆய்வுக் கட்டுரையானது பிற மொழிகளிலிருந்து அறிவியல் கட்டுரைகளையும் நூல்களையும் தமிழிற்கு மொழிபெயர்க்கையில் எழும் சிக்கல்களையும் அவற்றிற்கான தீர்வுகளையும் வழங்குகின்றது. இதில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் பிற குறிக்கோள் மொழிக்கும்கூட பொருந்தக் கூடியனவே.

அறிவியல் மொழி

அறிவியல் மொழி என்பது முன்பே குறிப்பிடப்பட்டது போல மொழியின் ஒரு சிறப்பு நடையாகும். எழுத்து வடிவில் உள்ள செய்தியை மொழிப்பெயர்ப்பதற்கு வாய் வழிச் செய்தியை மொழி பெயர்ப்பதற்குத் தேவைப்படும் நடையை விட மாறுபட்ட நடை தேவைப்படுகிறது.

அறிவியல் மொழியானது அடிப்படையில் மூன்று கூறுகளைக் கொண்டு விளங்குகிறது. அவை (1) ஒலியில் கூறு (2) சொல்லியல் கூறு மற்றும் (3) இலக்கணக் கூறு. இம்மூன்று கூறுகளும் மொழியின் மூன்று அடிப்படைக்கூறுகளை ஆதாரமாகக் கொண்டவையாகும். மொழிபெயர்ப்பில் இம்மூன்று கூறுகளையும் சிறப்பாகக் கவனிக்க வேண்டியுள்ளது.

அறிவியல் கருத்துக்களை மொழிபெயர்த்தல்

அறிவியல் கருத்துக்களை மொழிபெயர்க்கும்பொழுது மிகவும் கவனத்துடனும் எல்லாச் செய்திகளையும் தெளிவாகவும் கூறவேண்டும். அறிவியல் கருத்துக்களை மொழிபெயர்க்கையில் பல விவரங்களையும் நாம் சிறப்பாக ஆராயவேண்டியுள்ளது மொழிபெயர்ப்பின் ஒலியியல் புலப்பாடு (phonological expression மிகவும் துல்லியமானதாயிருத்தல் வேண்டும், மொழுபெயர்ப்பில் பயன்படுத்தப்படும் சொற்கள் மூலநூலின் சொற்களுக்கு இணையானதாக இருத்தலோடு எளிமையானதாகவும் கற்போரால் எளிதில் தன்னினமாக்கிக் கொள்ளக்கூடியனவாகவும் இருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்பின் உரைக்கோவையும் (discourse) சொற்றொடர்களின் கருத்துப் புலப்பாட்டுத் திறனும் மூலநூலில் உள்ளதைப்போலவே சிறப்பான விதத்தில் இருத்தல் வேண்டும். இக்கருத்துக்களைப் பின்வரும் பகுதிகளில் விரிவாகக் காண்போமாக.

மொழி பெயர்ப்பின்போது ஒலிபெயர்ப்பில் எழும் சிக்கல்கள்

அறிவியல் கருத்துக்களை மூலமொழியிலிருந்து குறிக்கோள் மொழிக்கு மாற்றும்பொழுது பல்வேறு கருத்துக்கள், அவற்றின்

சிறப்புக்கள் போன்றவற்றைக் கூறுகிறோம். சரியான செய்திப் பரிமாற்றத்திற்கு இவைகள் யாவும் சிறப்பான முறையில் மொழிபெயர்க்கப்பட்டிருத்தல் வேண்டும். இதன் விளைவாக மூலமொழியிலிருந்து பல ஒலியியற் கூறுகள் (கடன் வாங்குதலின் காரணமாகவோ அல்லது தன்னினமாக்கப்பட்ட கடன் சொற்களாலோ) குறிக்கோள் மொழிக்குள் நுழைந்துவிடுகின்றன. பெரும்பாலான வேலைகளில் இத்தகைய ஒலியமைப்புக்களைக் குறிக்கோள் மொழியில் காட்டுவதற்குத் தேவையான எழுத்து வடிவங்கள் இல்லாமற்போய்விடுகின்றன. எனவே, மொழியின், எழுத்து வடிவத்தில் புதுமையாக்கம் மேற்கொள்வது இன்றியமையாததாகிறது. எடுத்துக்காட்டாக, தமிழில் nitrite மற்றும் nitritde என்னும் சொற்களைப் பயன்படுத்தும் விதத்தைக் காண்போம். இந்தச் சொற்களை வாய்வழியாகக் கூறும்போது சரியான முறையில் வேறுபடுத்திக்காட்ட இயலும். ஆனால் இச்சொற்களை எழுத்தில் வடித்திடும்பொழுது தமிழ் மொழியில் அதிர்வுள்ள எழுத்தில் - வடித்திடும்பொழுது- தமிழ் வெடிப்பொலிகளைக் குறிக்க எழுத்துக்கள் இல்லாமையால் பிரச்சினை ஏற்படுகிறது. இதேபோல் ஆங்கில உரசொலியான (f) போன்ற ஒலிகளைக் குறிப்பதற்குத் தமிழில் எழுத்து வடிவம் இல்லாமையால் சிக்கல் ஏற்படுகிறது.

மேலும், சில கடன் வாங்கப்பட்ட சொற்களைத் தன்னினமாக்கிக்கொண்டு அவற்றை எழுத்தில் வடிவப்பதிலும் சிக்கல்கள் உண்டாகின்றன. இதற்குக் காரணம் இதுபற்றிய சரியான விதிமுறைகள் நம்மிடமில்லாமையே. கீழ்க்கண்ட சொற்க்கள் எவ்வாறு வெவ்வேறு விதத்தில் எழுதப்பட்டுள்ளன என்பதைக் கண்டால் இதில் உள்ள சிக்கல்கள் புரியும்.

மூலச்சொல்	குறிக்கோள் மொழியில் எழுத்துவடிவம்
1. Acotone	அசிடோன்
	அசிட்டோன்
2. Calamite	காலமைட்
	காலமைட்டு

	கேலமைட்
	கேலமைட்டு
3. Coffee	காபி
	காப்பி
	காஃபி
4. Malacite	மேலகைட்டு
	மேலக்கைட்டு
	மேலகைட்
	மேலக்கைட்
	மாலகெய்ட்
	மாலக்கெய்ட்டு
5. Nitrite and Nitride	நைட்ரைட்
	நைட்டிரைட்
	நைட்டிரைட்டு
	நைட்ரெய்ட்
	நைட்டிரெய்ட்
	நைட்ரெய்ட்டு
	நைட்டிரெய்ட்டு

எழுத்து வடிவாக்கலில் உள்ள இத்தகைய சிக்கல்களைத் தீர்க்க தமிழில் பின்வரும் வழிமுறைகளைக் பின்பற்றுவது சிறப்பானதாக இருக்கக்கூடும்.

1. அதிர்வு வெடிப்பொலிகளுக்கும் மற்றும் மொழியில் எழுத்து வடிவம் பெற்றிராத ஒலிகள் யாவற்றிற்கும் உடனடியாக எழுத்துவடிவம் கொடுத்திடல் வேண்டும்.
2. கடன் வாங்கப்பட்ட சொற்களில் மெய்யொலிகளின் இரட்டிப்பு (gemination), சொற்புணர்ச்சி போன்றன தவிர்க்கப்படவேண்டும். சொல்லாக்கத்தில் ஒலிகளின் தன்னினமாதல் குறிப்பாக பின்னோக்கிய தன்னின-மாதல் (regressive assimilation) மிகுதியான அளவில் பயன்படுத்தப் படவேண்டும்.

3. உயிரெழுத்துக்களைப் பொறுத்த அளவில் மூல-மொழியில் பயன்படுத்தப்பட்டுள்ள உயிரெழுத்துக்கள் யாவற்றிற்கும் குறிக்கோள்மொழியிலும் எழுத்துக்கள் இருத்தல் வேண்டும். மூலமொழியிலேயே உயிரெழுத்துக் களைப் பயன்படுத்துவதில் சிக்கல்கள் : இருப்பின் அவற்றில் எவ்வகையான பயன்பாடு பரவலாகவும் சிறப்பாகவும் காணப்படுகிறதோ அதை ஏற்றுக் கொள்ளலாம்.

4. குறிக்கொள் மொழியில் பயன்படுத்தப்படும் புதுச் சொற்கள் சமுதாயத்தால் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டு மொழிப் பயன்பாட்டில் எடுத்துக் கொள்ளப்படும் வரை அத்தகைய சொற்களின் மூலவடிவத்தை அடைப்புக் குறிகளுக்குள் கொடுத்துவிட வேண்டியது மிகவும் அவசியமானது.

இக்கொள்கைகள் சரியான முறையில் பின்பற்றப்பட்டால் மொழிகளுக்கிடையேயான செய்திப் பரிமாற்றம் சரியான விதத்திலும் எளிதானதாகவும் நடைபெறும்.

மொழிபெயர்ப்பில் சொல் பெயர்ப்பு

மொழிபெயர்ப்பில் சொற்களை முதல்மொழியிலிருந்து குறிக்கோள் மொழிக்கு மாற்றுவதால் இரு நிகழ்ச்சிகள் நடை பெறுகின்றன. அவை,

1. சொற்பெருக்கம் (lexical expansion) 2. மொழி வளர்ச்சி.

மூல மொழியிலிருந்து கருத்துக்களைக் குறிக்கோள் மொழிக்குப் பெயர்க்கும் பொழுது சொற்பெருக்கம் நிகழ்கிறது. இத்தகைய செயல்களின் விளையாகப் பின்வரும் சொல் வளர்ச்சி ஏற்படுகிறது.

1. சொற்களை நேரிடையாகக் கடன் வாங்குதல் அல்லது கடன் சொற்களைத் தன்வினமாக்கிக் கொள்ளுதல்
2. கலப்புச் சொற்களை உருவாக்குதல்
3. பழஞ்சொற்களுக்குப் புதுப் பொருள் கொடுத்துப் பயன்படுத்துதல் மொழிவளர்ச்சியின் பயனாக ஒரு மொழியில் புதுப்புதுச் சொற்கள் உருவாக்கப் படுகின்றன. இவற்றை இனி விரிவாகக் காண்போம.

கடன் வாங்குதல்

சொற்களை நேரிடையாகக் கடன் வாங்குதல் அல்லது தன்னினமாக்கிக் கொண்ட பின் பயன்படுத்துதல். நான் முன்பு விளக்கியது போன்ற ஒலிபெயர்த்தல் (transcription) நிகழ்கின்றது. இதன்விளைவாக ஒரு மொழிக்குள் புது ஒலியங்களும் புது எழுத்துக்களும் நுழைகின்றன.

கலப்புச் சொற்கள்

கலப்புச் சொற்கள் உருவாக்குதல் இருவிதத்தில் நிகழக் கூடும்.

1. மூலமொழியில் கூறப்பட்டுள்ள புதுக்கருத்தைக் கூற,
2. குறிக்கோள் மொழியில் உள்ள சொற்குறைபாட்டை (deficiency) ப் போக்க மூலமொழி மற்றும் குறிக்கோள் மொழிக்கூறுகளைக் கலத்தல். பின்வரும் எடுத்துக் காட்டுக்கள் இவற்றை விளக்கக் கூடியன.

மூல மற்றும் குறிக்கோள் மொழிக் கூறுகளைக் கலத்தல்

மூலமொழிக்கூறு	குறிக்கோள் மொழிக்கூறு	கலப்பு வடிவு
மூல	இயங்கி	மூல இயங்கி
X	கதிர்	எக்ஸ் கதிர்
யந்திர	கலப்பை	இயந்திரக்கலப்பை

போன்றன.

குறிக்கோள் மற்றும் மூலமொழிக் கூறுகளைக் கலத்தல்

குறிக்கோள் மொழிக்கூறு	மூலமொழிக்கூறு	கலப்புவடிவம்
பகுதி	நகல்	பகுதிநகல்
புள்ளி	விவரம்	புள்ளிவிவரம்
		போன்றன.

புதுக்கருத்துக்களைத் தெரிவிக்க இரு கூறுகளை சேர்த்தல்

மூலமொழியிலிருந்து குறிக்கோள் மொழிக்கு அறிவியல் கருத்துக்களை மொழிபெயர்க்கும் பொழுது குறிக்கோள் மொழியின் இரு கூறுகளை இணைத்து ஒரு புதுக் கருத்தைக் சுட்ட அதனைப் பயன்படுத்தும் முறை மிகவும் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. கீழ் வரும் எடுத்துக்காட்டுக்களைக் காண்போமாக;

மொழிக்கூறு-1	மொழிக்கூறு-2	சேர்க்கை
ஒலி	பெருக்கி	ஒலிபெருக்கி
உடல்	கவசம்	உடற்கவசம்
உயிர்	வளி	உயிர்வளி
புகை	வண்டி	புகைவண்டி
		போன்றன

வழக்கிழந்த சொற்கள்

ஒரு மொழியில் வழக்கொழிந்து போன சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றுக்குப் புதுப்பொருள்களை அளித்துப் பயன்படுத்தலாம். இத்தகைய முறையைக் கடைப்பிடிப்பதால் சொற்தேர்வு பற்றிய கருத்து வேறுபாடுகளைக் குறைக்கலாம். மேலும், இவை பெரும்பாலும் மொழி பேசுநர்களால் விரைவாகவும் எளிதாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இத்தகைய சில எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

மூலச்சொல்		குறிக்கோள் மொழிச்சொல் (வழக்கொழிந்தனவற்றைப் பயன்படுத்துதல்)
capacity	—	கொள்ளளவு
delivery	—	ஒப்படைப்பு
dust	—	துகள்
fission	—	பிளவு போன்றன.

வளர்ச்சிக் கூறுகள்

மேலே கூறப்பட்ட மூன்றுவிதமான சொற்பெருக்க வழி முறைகளும் குறிக்கோள் மொழியில் வளர்ச்சிக்கூறுகள் ஏற்படு வதற்கு உதவி புரிகின்றன. இவற்றின் பயனாய்ப் புதுப் புதுக்கருத்துக்களைக் கூற மொழியில் சொற்கள் உருவாக்கப் படுகின்றன. பிறமொழிச் சொற்களைத் தமிழ் மொழியில் கூறுவதன் விளைவாய் புது ஒலிகள் மொழிக்குக் கிடைக்கின்றன. மொழி முதலில் வரும் ஒலிகளின் பட்டியல் நீளுகிறது மொழியமைப்பு விரிவு படுகிறது. இதேபோல அறிவியற் கருத்துக்களைத் தமிழ்ப்படுத்தியதன் பயனாய், பற்பல புது உருபன்கள் கிடைத்துள்ளன. இவ்வுருபன்களைப் பயன் படுத்திப் பல புதிய அறிவியற் சொற்கள் படைக்கப்பட்டுள்ளன (சண்முகம் 1986: 138 மற்றும் கண்ணப்பிரான் 1986 ; 34-6). கீழே கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டுக்கள் மேலே கூறியனவற்றை விளங்குவதாக அமைகின்றன.

சொல்	படைப்பு-உருபன்	புதுச்சொல்
தனி	-மம்	தனிமம்
சேர்	-மம்	சேர்மம்
திணி	-மம்	திண்மம்
ஒலி	-அன்	ஒலியன்
உருபு	-அன்	உருபன்
எழுத்து	-அன்	எழுத்தன்
மொழி	-இயல்	மொழியியல்
தாவர	-இயல்	தாவரவியல்
		போன்றன.

இவ்வாறு மொழிபெயர்ப்பின் காரணமாக சொற்பெருக்கம் நிகழ்வதோடு புதுப்புதுக் கூறுகளின் வருகையால் இலக்கணத்திலும் விரிவாக்கம் நிகழ்கிறது. இவ்வாறு அறிவியல் மொழி பெயர்ப்பானது மொழி வளர்ச்சிக்கு உதவியாயிருப்பதோடு அதன் இலக்கண வளர்ச்சிக்கும் உதவுகிறது.

மொழிபெயர்ப்பால் நிகழும் இலக்கண நடையில் மாற்றங்கள்

தொடரியல் மற்றும் பொருளியல் (Semantics) அளவிலான செய்திப் பரிமாற்றத்திற்கு மொழிபெயர்ப்பு முக்கிய காரணமாக இருக்கிறது. இத்தகைய செய்திப் பரிமாற்றத்திற்கு உதவும் மொழிபெயர்ப்பால் சில புது ஒலியன்களும் சொற்களும் குறித்கோள் மொழிக்குக் கிடைப்பதோடு அதன் இலக்கணமும் புதுக்குறிகளின் (Symbols) வருகையாலும். தொடர் அமைப்பு முறைகள், நடை போன்றவற்றின் பயனாய் வளமைபெறுகிறது. அறிவியல் கருத்துக்களின் தமிழாக்கத்தால் பற்பல கணித, அறிவியல் குறிகளும் இலத்தீன், கிரேக்க மொழிக்கூறுகளும் தமிழ் மொழியில் இடம் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக, கூட்டலைக் குறிக்கும் '+' குறியும், கழித்தலைக் குறிக்கும் '—' குறியும் பெரியதைக் குறிக்கும் '>' குறியும் இன்னும் இவை போன்ற பிறவும் அறிவியல் கருத்துக்களைத் தமிழாக்கம் செய்தலால் தமிழில் புகுந்துள்ளன. அதேபோல் கால்சியத்தைக் குறிக்க Ca என்னும் சுருக்கமும், சோடியத்தைக் குறிக்க Na என்னும் சுருக்கமும் இன்னும் இவை போன்ற பிறவும் வேதியியல் பாடங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய அமைப்புக்கள் யாவும் அறிவியல் மொழிபெயர்ப்பின் காரணமாகத் தமிழிற்குக் கிடைத்தனவாகும்.

தாமோதரன் (1982:35-43) அறிவியல் நூல்களைத் தமிழாக்கம் செய்யும்பொழுது எழும் சிக்கல்களைப் பின்வருமாறு விளக்கிக் கூறுகிறார். சரியான அறிவியல் மொழி பெயர்ப்புக்கு அவர் பின்வரும் மூன்று வழிமுறைகளைக் கூறுகிறார்.

1. தமிழ் ஒரு ஒட்டுமொழியாக (agglutinative) இருந்த போதிலும் அறிவியல் சொற்கோவைகள் ஒரு குறிப்பிட்ட அமைப்பின்படி இருத்தல் வேண்டும் இவ்வமைப்பு மாறினால் கருத்துப் பரிமாற்றம் நிகழ வாய்ப்பில்லாது போய்விடக்கூடும்.

2. குறிக்கோள் மொழியின் இலக்கண அமைப்புக் கேற்றவாறே மூலநூலிலிருந்து குறிக்கோள் மொழிக்கு மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. மூலநூலின் செய்தியை முற்றிலுமாகவும் தெளிவாகவும் குறிக்கோள் மொழியில் மொழிபெயர்ப்பானது தெரிவிப்பதாக இருத்தல் வேண்டும்.

இவற்றோடு கீழே கொடுக்கப்பட்டுள்ள கருத்துரைகளும் அறிவியல் மொழி பெயர்ப்பின்போது மிகவும் கண்டிப்பான முறையில் கடைப்பிடிக்கப்படவேண்டும்.

அ. மொழிபெயர்க்கப்பட்ட தொடரின் அளவு சிறியதா-யிருத்தல் வேண்டும்.

ஆ. வருணனைகள் எளிமையானதாகவும் இருத்தல் வேண்டும்.

இ. அறிவியல் மொழிபெயர்ப்பின்போது முப்பால் விகுதிகளைப் பயன்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும்

ஈ. ஒரே தொடரினுள் பல தொடர்களைப் புதைத் தொடர்களாகப் (multiple embeddings) பயன் படுத்துவது தவிர்க்கப்படவேண்டும்.

உ. கூட்டுத் தொடர்களை மிகவும் அரிதாகவே பயன்படுத்த வேண்டும்.

ஊ. அறிவியல் மொழிபெயர்ப்பின் நடை எடுத்துக்காட்டு நடையாக (demonstrative style) இருத்தல் வேண்டுமே. தவிர வருணணை நடையாக (narrative style) இருத்தலாகாது.

இம்முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அறிவியல் மொழி பெயர்ப்புக்கள் சிறப்பானதாகவும் மக்களுக்குப் புரியும்படியானதாகவும் இருக்கும். பெரும்பாலான வேளைகளில் வருணனை நடையை அறிவியல் மொழி பெயர்ப்பில் பயன் படுத்தும்போது அது போதுமான விளக்கம் கொடுப்பதாக இல்லை. அவை தேவையான படங்கள், அட்டவணைகள் போன்ற வற்றால் விளக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனவே, ஒரு அறிவியல் நூலை ஒரு மொழியிலிருந்து பிரிதொரு மொழிக்கு மாற்றும் பொழுது எடுத்துக்காட்டு நடைக்கும் வருணனை நடைக்கு இடையிலான தொடர்பு அழிந்துவிடாமல் பார்த்துக் கொள்வது சிறப்பானதாகும். பிறவகையான மொழிபெயர்ப்புக்களில் இத்தகைய பிரச்சினை இருப்பதில்லை; இது அறிவியல் மொழிபெயர்ப்புக்கு மட்டுமே உரித்தானது. எடுத்துக்காட்டாக, சோதனைக் கூடத்தில் நீர்வளியையும் உயிர்வளியையும் பயன்படுத்தி நீர் தயாரிப்பதைப பற்றிய சோதனையை மொழி பெயர்ப்பதாக வைத்துக் கொள்வோம். மொழிபெயர்ப்பில், சோதனைக்கூடத்தில் செய்முறையாக என்னென்ன செய்யவேண்டுமோ அவற்றைச் செய்து, அவற்றுக்கான திட்டவரைவு (schematic representation) வேதியியல் வினைச் சமன்பாடுகள் போன்றன சரியான முறையில் கொடுக்கப் பட்டிருத்தல் வேண்டும். இவ்விதத்தில் தயரிக்கப்பட்ட மொழி பெயர்ப்பு மிகவும் சிறப்பாக மக்களைச் சென்றடையும் என்பதில் ஐயமில்லை.

மொழிபெயர்ப்பானது ஒருமொழியிலிருக்கும் அறிவியல் கருத்துக்களை வேற்றுமொழிக்குப் பரிமான்ற பேருதவி புரிகிறது. அறிவு வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் உதவுவதுடன் மொழிபெயர்ப்பானது மொழி வளர்ச்சிக்கும் உதவுகிறது. இவ்வளர்ச்சி ஒரு மொழியின் எல்லா நிலையிலும் நிகழ்கிறது. அறிவியல் மொழிபெயர்ப்பானது வருணனை நடையை மட்டும் பயன்படுத்தாது படங்கள், அட்டவணைகள், சமன்பாடுகள் போன்று பல எடுத்துக்காட்டு முறைகளையும் பயன் படுத்துவதால் இது வருணனை நடையை மட்டும் பயன்படுத்தும் பிற மொழிபெயர்ப்புக்களிலிருந்து மாறுபட்டு நிற்கிறது. இதுவே அறிவியல் மொழிபெயர்ப்பாளர் எதிர்கொள்ளும் சிக்கலாக உள்ளது.

ஆட்சித்துறையில் தமிழ்

ஆட்சி மொழி, பிராந்திய மொழி, பொது மொழி என்றெல்லாம் ஆட்சித்துறையில் பயன்படுத்தப்படும் மொழியை (அ) மொழிகளை குறிப்பிடுகிறோம். ஆட்சித்துறை அனைவருக்கும் பொதுவானது: தேவையானது. ஆகவே, அதில் பயன்படும் மொழி (அ) மொழிகள் அனைவருக்கும் தெரிந்திருப்பது நல்லது. தாய்மொழியே ஆட்சி மொழியாகவும் அமையலாம். பிராந்திய மொழி ஆட்சி மொழியாகவும் அமையலாம், பொது மொழியும் ஆட்சி மொழியாக வழங்கலாம் சில நேரங்களில் இணைப்பு மொழியாகவும், ஏதேனும் ஒரு மொழி பின்பற்றப்படலாம். பன்மொழி வழக்குச் சூழலில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் பெரும்பாலும் ஆட்சித்துறையில் ஈடுப்படுத்தப்படுகின்றன. சில நாடுகளில் பெரும்பான்மை மொழியோ (அ) அந்தஸ்து பெற்ற மொழியோ பொது மொழியாகச் செயல்பட்டு வருவதையும் பார்க்கிறோம், இன்னும் சில நாடுகளில் தேசிய மொழிகள் என்ற தகுதி வழங்கப்பெற்று, சிலமொழிகள் ஆட்சித்துறையில் ஈடுபடுத்தப் படுகின்றன. வேறு சில நாடுகளில் பொதுமொழி என்று இருந்தாலும் சில துறைகளில் இன்றியமையாமை கருதி பயன்பாட்டில் ஆற்றல் பெற்றவை என்ற தகுதியினைப் பெற்றுள்ள சில மொழிகள் ஈடுபடுத்தப்பட்டு வருவதையும் பார்க்கிறோம். குறிப்பாக, சட்டத்துறை, பொருளாதாரத்துறை அறிவியல் துறை போன்றவற்றில் இத்தகைய நிலை வழக்கில் இருந்து வருகிறது.

ஆட்சித்துறைக்கான மொழி (அ) மொழிகள், மொழிக் கொள்கைகளின் மூலம் தீர்மானிக்கப்படும்போது சில முக்கியமான கருத்துக்கள் அடிப்படையாக எடுத்துக்கொள்ளப் படுகின்றன. அவையாவன;

1. வரலாற்றுப் பின்புலம்
2. மொழியின் கருத்துப் புலப்பாட்டு ஆற்றல்

3. மொழி வழங்கு நிலை: பெரும்பான்மை - சிறுபான்மை; பரவலாக்கம் பெற்றா பரவலாக்கம் பெறாத சூழல்,

4. மக்களது மொழிப் பயன்பாட்டு மனப்பான்மை போன்றவை.

இந்த அடிப்படையில் நோக்கும்போது சில மொழிகள் மேற்குறிப்பிட்ட எல்லாப் பண்புகளையும் பெற்றும் இருக்கலாம்; பெறாமலும் இருக்கலாம். (அ) ஓரிரு பண்புகள் குறைந்தோ, கூடியோ அமைந்திருக்கலாம். குறிப்பாக, வரலாற்றுப் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது பிறமொழி இன, பண்பாட்டு, அரசியல் தாக்கங்களால், தேசிய (அ) பிராந்திய மொழிகளின் பயன்பாடு குறைந்ததும் செல்வாக்கற்றும் போய்விடுவதைக் காண்கிறோம். இந்திய நாட்டு மொழிச் சூழல் இதனையே தெளிவாக்குகிறது. பல்வேறு காலகட்டங்களில் இம்மண்ணில் நடைபெற்ற அரசியல் மாற்றங்கள் இத்தகைய நிலைக்கு வழிவகுத்தன. அதனால், நாட்டு மொழிகள் பெறவேண்டிய அல்லது பிராந்திய மொழிகள் பெறவேண்டியதகுதி, பயன்பாடு போன்றவை அவற்றிற்குக் கிடைக்கவில்லை. மேலும், இத்தகையச் சமுதாய மொழியியல் சூழலால், சிறப்பானதொரு பாரம்பரியமிக்க இலக்கிய இலக்கண வளத்தைக் கொண்டிருந்த மொழிகள் கூட ஆட்சித்துறை / கல்வித்துறை போன்றவற்றில் எந்தவித தகுதியும் தரப்படாமல் புறந்தள்ளப்பட்டன. இத்தகையப் புறக்கணிப்பு நாட்டு மொழிகள் பயன்பாட்டில் பெறவேண்டிய உரிய தகுதியினைத் தராததோடு, அவற்றின் வளர்ச்சிக்கும் ஊறுவிளைவித்தது. எனவேதான், பல்வேறு இந்திய மொழிகள் நாடு விடுதலை பெறும்முன்னர் வலுவிழந்தும், வழக்கிழந்தும் இருந்தன. நாட்டு விடுதலைக்குப் பின்னரே இம்மொழிகள் கல்வித்துறையிலும், ஆட்சித்துறையிலும் சிறுகச் சிறுக ஈடுபடுத்தப்படலாயின. இந்த அடிப்படையில்தான் தமிழ் மொழியும் ஆட்சித்துறையில் ஈடுபடுத்தப்பட்டது. மாநில ஆட்சித் துறைகளில் தமிழ்மொழி சிறிது சிறிதாக பலநிலைகளில் ஈடுபடுத்தப்படலாயிற்று. பிற மாநில, மைய தொடர்பிற்கு

ஆங்கிலம் பயன்படுத்தப்படலாயிற்று. இதுவே, ஆட்சித்துறைக்கான மொழிக்கொள்கையாகவும் கொள்ளப் பட்டது.

மொழிகளைக் குறிப்பிட்ட பணிக்கென ஈடுபடுத்தும் நிலையில் அம்மொழிகள் பயன்பாட்டுத் துறைகளில் செம்மையாகப் பயன்பட வேண்டுமென்றால் அம்மொழிகளில் தேவையான மாற்றங்களையும், புதுமைகளையும் ஏற்படுத்த வேண்டும். புகுத்த வேண்டும். தமிழ்மொழியில் ஆட்சித் துறைக்கெனத் தேவைப்படும் கலைச்சொற்களையும், மொழிபெயர்ப்புகளையும், பிறமொழி அமைப்புக் கூறுகளையும், மாதிரிகளையும் உருவாக்கத் தொடங்கினோம். இப்பணிகளை எல்லாம் நிறைவேற்றுவதற்கு ஏற்ப தமிழ்வளர்ச்சி இயக்கம், மொழிபெயர்ப்புத்துறை, ஆட்சிமொழிக்குழு போன்றவை எல்லாம் தோற்றுவிக்கப்பட்டன. இவ்வமைப்புகள் இக்காலத் தமிழில் இல்லாத கலைச்சொற்களையும், ஆட்சிப்பணிகளுக்குத் தேவைப்படும் மொழிபெயர்ப்புகளையும் ஆக்கித் தரதொடங்கின. முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட கலைச்சொல் அகராதித் தொகுப்புக்கள், பல்வேறு மொழிபெயர்ப்புக்கள் போன்றவை கடந்த 30 ஆண்டுகளில் வெளியிடப்பட்டு, பயன்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ் மொழியின் வளர்ச்சி பாதையில் ஆட்சித்துறைக்கான மொழி வளத்தையும், மொழி ஆற்றலையும் நிறைவேற்றி மேற்கொள்ளப்பட்டுள்ள மொழி வளர்ச்சிப் பணிகள், தேவையான பணிகள் என்பதோடு காலத்தால் மேற்கொள்ளப் பட்ட பணிகளும் ஆகும். பல்வேறு மொழி வளர்ச்சிக் கொள்கைகளைப் பயன்படுத்தி மேற்குறிப்பிட்டவாறு மொழிக் கூறுகள் உருவாக்கப்பட்டன. அவற்றுள் புதுமையாக்கம் முக்கியமான கொள்கையாகும்.

ஒரு குறிப்பிட்ட துறையில் மொழி வளர்ச்சி என்னும் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது புதுமையாக்கம் அல்லது பிறதுறைகளிலோ புதுமையாக்கம் மேற்கொள்வதற்குச்

சொற்பெருக்கம் அல்லது சொற்களஞ்சியப் பெருக்கம் என்னும் பணி மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் இத்தகையச் சொற்பெருக்கம் (Rexlcal Expansion) பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப் பட்டுள்ளதை நாம் காண்கிறோம் சொற்பெருக்கம் வழிமுறைகளான புதுச்சொல்லை உருவாக்குதல், சொற்களை மொழிபெயர்த்துப் பயன்படுத்துதல், பழந்தமிழ் அல்லது உயிர்வழக்கு பெற்ற சொற்களைப் புதுப்பொருளில் பயன் படுத்துதல், வட்டார. வளர்ச்சித்துறைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்குப் புதுப்பயன்பாடு கொடுத்தல் போன்ற பல்வேறு வழிமுறைகள் பின்பற்றப்பட்டன.

புதுச்சொற்களை உருவாக்கும்பொழுது துவக்கத்தில் ஒரு தெளிவற்ற நிலை இருப்பதை நாம் காண்கிறோம். பொதுவாக புதுசொற்களை உருவாக்கும்போது அச்சொற்கள் எளிமையானவையாகவும், அவற்றைக்கொண்டு பல புதிய சொற்களை அல்லது கூட்டுச் சொற்களை வருவிக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும். கலெக்டர் (Collector) என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையாக ஆட்சித்தலைவர், ஆட்சியாளர், ஆட்சியர் போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றுள் ஆட்சியர் என்னும் சொல் எளிமையானதாக இருப்பதோடு பிற கூட்டுச் சொற்களை வரவிப்பதற்கு ஏதுவானதாகவும் இருக்கிறது. ஓலை, தடம், வண்டி போன்ற பேச்சு வழக்குச் சொற்கள் ஆட்சிச் சொல்லு அகராதிக்கு கொண்டுவரப்பட்டு புதுப்புது பொருளில் பயன்பட்டு வருவதை நாம் அறிவோம்.

காசோலை, வரைவோலை, நெடுஞ்சாலை, விரைவுத்தடம், உந்துவண்டி போன்ற சொற்கள் இத்தகையப் புதுப்பயன்பாட் டினைப் பெற்றுள்ளன. இவற்றுள் பொருள் விரிவாக்கம் (Semantic expansion) பொருள் சுருக்கம் (Semantic restriction) போன்றன நிகழ்ந்துள்ளதைக் காணலாம். நீதித்துறையிலும், நிதித்துறையிலும் மொழிபெயர்ப்பு முறையான பெரும் பங்கு ஆற்றியுள்ளது. குறிப்பாக நீதிபதிகளின் தீர்ப்புகள், நிதிநிலை அறிக்கை, ஆண்டறிக்கை போன்றன. இத்தகையக் குறிப்பிட்ட

வடிவத்தில்தான் இருக்கவேண்டும் என்று வரையறை செய்து ஓரளவுக்குத் தரப்படுத்தப்பட்டுள்ளன. மாறிவரும் சமுதாய சூழலுக்கு ஏற்ப ஆட்சிச் சொல் அகராதியில் புதுப்புதுச் சொற்களை அன்றாடம் சேர்க்கவேண்டியிருப்பதால், இத்தகைய பல்வேறு சொல் விரிவாக்க நெறிமுறைகள் தமிழில் பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு உருவாக்கப்பட்ட சொற்கள் யாவும் தமது பணியினைச் செம்மையாகச் செய்கின்றனவா, கருத்துப் புலப்பாட்டுத் தரத்தில் உயர்ந்து நிற்கின்றனவா? சொற் படைப்புகளில் (Word formation) எளிமையாகச் செயல்படு கின்றனவா? என்ற கேள்விகள் இச்சூழலில் எழுகின்றன. இதற்கு உரிய விடைகளை அறிவியல் பூர்வமாக கண்டறிந்தால்தான் நமது பணி வெற்றி அடையும். இதற்கு, இச்சொற்களின் பயன் பாடு பற்றிய அறிவியல் பூர்வ மதிப்பீடுகளை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் சொற் பயன்பாடு பற்றிய மதிப்பீடுகள் மிகவும் அருகியே மேற் கொள்ளப் பட்டுள்ளன. சில ஆய்வு நிறுவனங்கள் இப்பணியில் தற்போது மிகுந்த ஈடுபாட்டுடன் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்பது வரவேற்கத்தக்கதாக உள்ளது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு ஆய்வுகள் தமிழில் ஆட்சிச் சொற்களில் தரப்படுத்துதல் இவ்வளவாக நிகழ்ந்திருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றன. ஆட்சிச் சொற்களின் கருத்து புலப்பாட்டுத்திறன் மற்றும் புரிந்து கொள்ளும் திறன் என்பது பற்றி ராமமூர்த்தி (1987) மேற் கொண்ட ஆய்வு இதனை உறுதிப்படுத்துகிறது. இத்தகைய ஆய்வுகளிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன வென்றால் ஆட்சிச் சொல் துறையில் சொற்பெருக்கத்திற்கு நாம் எவ்வளவு சிறப்பளிக்கின்றோமோ அதற்கு இணையான சிறப்பை சொற்களின் தரப்படுத்துதலுக்கும் அளித்திட வேண்டியது இன்றி யமையாதது என்பதாகும். சொற்கள் தரப்படுத்தப்படவில்லை என்றால் அவை கருத்துப்புலப்படுத்துதல் திறனை இழந்து காலப் போக்கில் பொருள் மையத்தை அளிப்பனவாக மாறிவிடும்.

தரப்படுத்துதல், நெறிமுறைகள் பற்றிய விரிவானதொரு ஆய்வும் மேற்கொள்ளப்பட வேண்டியது சிறப்பானதாக

அமையும். அதனோடு சேர்ந்து ஆட்சிச் சொற்களைக் கருத்துப் புலப்பாட்டுத்திறன், புரிதிறன் பற்றிய விரிவான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட வேண்டியது இச்சூழலில் இன்றியமையாத தாகிறது. இவற்றை வலியுறுத்துவதற்கு காரணம், நம்நாட்டில் கல்வியறிவு பெற்றோரின் விழுக்காடு குறைவாக இருக்கிறது என்பதோடு தமிழ்மொழி இவ்வழக்குமொழியாக உள்ளது என்பதுமாகும்.

எந்தவொரு மொழியிலும் புதிதாகச் சொற்பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளும் போது இருமொழி வழக்கைப் பயன்படுத்துவது கருத்துப்புலப்பாட்டிற்கு ஏதுவாக அமையும் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். இதனை ஒட்டியே நாமும் புதிய சொற்களைப் பயன்படுத்தும்பொழுது அவற்றிற்கு இணையான ஆங்கிலச் சொற்களை அடைப்புக் குறிக்குள் கொடுத்து கருத்துப்புலப்பாடு எளிமையாக நிகழ வழிவகுக்கிறோம். இம்முறையில் சில நன்மைகள் இருந்த போதும், குறைபாடுகள் இல்லாமல் இல்லை. குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், எந்தக் காலகட்டத்தில் இத்தகைய இருமொழி பயன்பாட்டு வழக்கை தவிர்த்து ஒருமொழி பயன்பாட்டு மொழிக்கு மாறுவது; மக்களின் மொழியின்பாற்பட்ட மனப்பாங்குகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பன பிரச்சினைகளாக உள்ளன. ஆங்கில மொழி ஆட்சிச் சொற்களிலிருந்து தமிழ்மொழி ஆட்சிச் சொற்களுக்கு மாறும்பொழுது பொதுவாக கருத்துப்புலப்பாட்டு சிக்கல்கள் எழுவது இயற்கையே. இங்கு மக்களின் மொழியின்பாற்பட்ட மனப்பாங்குகளையும், மனப்பாங்குகளின் பின் விளைவுகளையும் புரிந்துகொண்டு ஆட்சித் துறையில் சொற்பெருக்க முயற்சிகளை மேற்கொள்வதும், தரப்படுத்தும் செயலில் ஈடுபடுவதும் சிறப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மொழி பெயர்ப்பில் காணும் சில சிக்கல்கள்

கோ. சுப்பையா
மதுரை

மொழி பெயர்ப்பு என்பது ஒரு மொழியில் காணும் கருத்துக்களை / செய்திகளை / பட்டறிவுகளை வேறொரு மொழியில் எடுத்துலரக்கும் செயலாகும். இச்செயலை மேற் கொள்ளும் போது பொதுவாக மொழிகளிடையேயுள்ள கருத்து ஒப்புமைகளில்லோ அல்லது சொற்றொடர்கள் ஒப்புமைகளில்லோ அல்லது இவ்விருநிலைகளில்லோ வேறு பட்டோ, மாறுபட்டோ சூழல் காணும் வாய்ப்பை பெறும் நிலை வரலாம், இயல்பாக மக்கள் பேசும் மொழி அவர்களிடயே வழங்கப்படும் சமூகப்பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட பயனாக்கத்திலும் உரையாடலிலும் பெரும் பங்கு பெறுகிறது.

இந்தியாவில்[1] பல்வேறு மொழிக் குடும்பத்தினைச் சார்ந்த மொழிகள் பேசப்பட்டாலும், மேலோட்டமான சமூகப் பண்பாட்டுக் கூறுகளிடையே சில பல ஒப்புமைகளை நாம் கண்டுணரலாம். இருப்பினும் மொழிக்கட்டமைப்பு இலக்கணக் கூறுகளிடையே (language struatural patterns) நீண்ட இடைவெளிகாணப்படுகிறது. இக்கருத்தைப் பின் வரும் வரைப் படத்தின் மூலம் விளக்கலாம்.

1. இந்தியாவில் திராவிடமொழிக்குடும்பம்; ஆரிய மொழிக்குடும்பம்; திபேத்திய - பர்மியமொழிக் குடும்பம்; மற்றும் ஆசிய - ஆஸ்ட்ரோ (முண்டாரி) மொழிக்குடும்பம் என நான்கு மொழிக்குடும்பங்களைச் சார்ந்த மொழிகள் பேசும் மக்கள் வாழ்கின்றனர்.

சமுக பயன்பாட்டுக்
கூறுகள்

இத்தகையச் சூழலில் இந்தியமொழியில் காணும் பண்பாட்டுக் கூறுகளை அயல்மொழி - பெறப்பட்டமொழி (Acquired language) யிலிருந்து இயல்பான நிலையில் கூறும் போது மொழிச்சிக்கல் ஏற்பட இயலும். அதாவது ஏதாவது ஒரு இந்திய மொழியிலுள்ளவற்றை அயல் மொழியில் முதன்மையாக (original rendering) கூறப்பட்டவற்றை இன்னொரு இந்திய மொழியில் மொழி பெயர்க்கும்போது, பண்பாட்டுக்கூறுகளில் ஏற்படும் சிக்கல்களை விட மொழிக்கட்டமைப்பு இலக்கணக் கூறுகளில், பயனாக்க அமைப்பில் சொல்லமைப்பு, பொருண்மைச் செறிவு போன்ற நிலையில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. கீழ்க் காணும் அட்டவணை இக்கருத்தைத்தெளிவாக விளக்கும்.

	அயல்மொழி	:	இந்தியமொழி-1	:	இந்தியமொழி-2
பண்பாட்டுக் கூறுகள்	√	:	√	:	√
மொழிக்கட்டமைப் பிலக்கணக் கூறுகள்	X	:	Y	:	Z

சொற்கள் { .... / ———————— / ———————— } பொருண்மைச் செறிவு

பொருண்மைச் செறிவு { .... / ———————— / ———————— } சொற்கள்

புள்ளிகள் பண்பாட்டுக் கூறுகளின் ஒப்புமையைக்காட்டுகின்றன

விடுபட்ட கோடுகள் பண்பாட்டுக் கூறுகளைக் குறித்த தக்கசொற்கள் இன்மையைக்காட்டுகின்றன.

நேர்கோடு (இடைவெளியில்லாத) சொற்கள், பொருண்மை இணைபுகளைக் குறிக்கின்றன.

சமூதப்பண்பாட்டுக் கூறுகளிடையே ஒப்புமை கொண்டிருந்தாலும், ஒரேமொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் மொழிப் பயனாக்கத்தில் வேறுபட்டிருப்பதைச் சான்றுகளுடன் விளக்கலாம். சான்றாக "இயலும்" எனும் பொருண்மை விளக்க தமிழ் "முடியும்" எனும் வினையயும், கன்னடம் "ஆகு" எனும் வினையையும் வழங்குகின்றன. இதே போன்று இவ்விருமொழிகளில் வழங்குகின்ற "தீர்" எனும் வினை, தமிழில் முடிந்தது என்ற பொருளிலும், கன்னடத்தில் இறந்தது என்ற பொருளிலும் வழங்கப் பெறுகிறது.

சமூகப்பண்பாட்டுக் கூறுகளை நன்கு பட்டறிந்தாலும், அவற்றை அவர் மொழியிலிருந்து (Acquired language தம்மொழிக்கு (target language) மொழி பெயர்க்கும்போது எதிர்நோக்கும் பல்வேறுபட்ட சிக்கலை விளக்க இக்கட்டுரை முயல்கிறது. இதனை ஆராய்ந்து விளக்க வங்காள மொழிக் கவிஞரான ரவிந்திரநாத் தாகூர் அவர்களின் சிறுநாடகங்களில் ஒன்றான "கர்ணன் குந்தி" எனும் நாடக உரையாடல் கருபொருளாக அமைகிறது. வங்காளகவிஞர் தம்தாய் மொழியான வங்காளத்திலும் அயல்மொழி ஆங்கிலத்திலும் பெரும் தன்னிகர் புலமை பெற்றிருந்தவர். அவர் மேலே குறிப்பிட்ட நாடகங்களை முதன்மையாக (original) ஆங்கில மொழியில் படைத்தார். அவ் ஆங்கிலமொழி மூலத்திலிருந்து தமிழ் மொழியில் மொழிபெயர்க்கும் நேரிட்ட சிக்கல்களை இக்கட்டுரையில் விளக்கமுற்பட்டுள்ளது.

தாய்கும் மகனுக்கும் இடையே நிகழ்கின்ற உரையாடலில் காணும் தொடரன்கள், நிகழ்ச்சியின் ஆழ் உணர்வுகள், செயல் ஆற்றல்தன்மைகள் முதலிய வெளிக்கொணர்வதில், மொழி வழக்கில் ஆழம் காணப்படுகிறது. உரையாடல் நிகழும் சூழல்,

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையே நிகழ்கின்ற போரின் பின்னணியாக அமைந்துள்ளது. இச்சூழலில் தனக்கும் மகனுக்கும் இடையே விடுபட்டுபோன உறவை நிலை நிறுத்திக் கொள்ளும் வகையில் உரையாடல் இயல்பான உரையாடலாக அமையாமல் இலக்கிய வளச்செறிவு (dramatic Performance) கொண்டதாக அமைந்து ஒவ்வொரு நிகழ்ச்சியில் வழங்குகின்ற மொழித் தொடர்கள் பொருண்மைச் செறிவை விளக்குவதை உணரலாம்.

மொழிவெளிபாடு (linguistic Exposition) உரையாடலில் பங்கேற்பவர்களிடையே காணும் ஆழ் உள் நிலையினையும், அதனால் விளையும் செயல்பாட்டினை (behavioural exposure) தெளிவாக மொழித் தொடரிலக்கண அமைப்பில் எடுத்துரைக்கிறது. இத்தகையச் சூழலில் பெறுமொழி (target language) சமூகப் பண்பாட்டு அமைப்பில் பொருண்மைச் செறிவு கொண்ட சொற்களோ, தொடர்களோ உருவாகலாம் அல்லது மாறுபட்டகருத்துக்கள் உருவாகலாம். இதனால் செய்திபரிமாற்றத்தில் மொழிச்சிக்கலுடன், கருத்துச்சிக்கலும் எற்பட நேரிடுகிறது. பெரும்பாலும் மொழிகளுடையே — இங்கு தருமொழியாக (Source language), அயல்மொழியான (acquired language) ஆங்கிலம் பயன்படுகிறது — தருமொழி, மற்றும் பெறுமொழிகளின் பாட அமைப்பில் (textoral relation) ஏராளமான ஒப்புமைகள் புறத்தோற்றத்தில் (External structure) காணப்பட்டாலும், சமூகப்பண்பாட்டுக் கூறுகளில் சுற்சில மாறுபாடுகளோ வேறுபாடுகளோ காண்பதை உணரலாம்.

இக்கருத்தை விளக்கக் கீழ்க் காணும் படத்தை மேற்கொள்ளலாம்.

அயல்மொழியில் காணும் சமூகப் பண்பாட்டுக் கூறுகள்	
	கருத்து — மொழி ————————→ மாற்றம்
தருமொழியின் மொழி அமைப்பு	

——→

அயல்மொழியில் காணும் சமூகப் பண்பாட்டுக் கூறுகள்
பெறுமொழியின் மொழி அமைப்பு

தமிழும் ஆங்கிலமும் மொழிக்கட்டமைப்பிலக்கணக் கூறுகள் மட்டுமின்றி **சமூகப்** பண்பாட்டுக் கூறுகள் ஆகியவற்றில் வேறுபாடுகளைக் கொண்டவையாகும். மொழி வெளிபாட்டு/ பயனாக்கத் தன்மையிலும் இவ்விருமொழிகள் வேறுபட்டுள்ளன.

இந்தியப் பண்பாட்டுக் கூறுகளுக்கேற்ப இந்நாடகத்தில் மொழிக்கூறுகள் அமைந்து காணப்படுகின்றன. பல புதிய மரபுத் தொடரன்களும் தொடரமைப்புகளும் ஆங்கில மொழி பெற்றுள் ளதைக் கண்டுணரலாம். இத்தகையப் பயனாக்கத்தின் விளை வாக, ஐயப்பாடின்றி மொழிபெயர்க்கும்போது பல மொழிச் சிக்கல்கள் உருவாகுகின்றன. மொழிக்கூறு ஒப்புமையில் வேறு பட்ட மொழியிலுள்ள அறிந்த பண்பாட்டுக் கூறுகள் / மொழி இயைபுகள் பெறுமொழிக்கு ஏற்ப மொழிபெயர்க்கும்போது இணையான உரையாடல் கூறுகளைக் கண்டறிவதில் தடுமாற்றம் ஏற்படுவதை உணரலாம்.

இக்கூற்றினை விளக்க பின்வரும் தொடரன்களை உரையாடல் பகுதியிலிருந்து சான்றாக விளக்கிக் கூறலாம்.

1. *"to my breast thirsting for your love, my Son"*
2. *"You stood speechless like a thunder cloud at sunset flashing, with an agony of suppressed light"*
3. *"Let your forgiveness burn her heart like fire and consume to sin"*
4. *"Your eyes melt my heart as the kiss of the morning sun melts the snow on a mountain top"*
5. *"I am dogged by a curse more deadly your reproaches"*

மேலே கூறிய சான்றுகளின் மூலமாக புதிய தொடரன் அமைப்புகள் உருவாகுவதோடு, செயல்பாட்டினை மொழி பெயர்ப்பாளர் படைக்க முற்படலாம். சமூக விழிப்புணர்வு குறைவு படலாம் அல்லது மாறுபட்ட விழிப்பு உணர்வு(களை) பெறுமொழிப்பண்பாட்டமைப்பில் உருவாகிவிடலாம். சான்றாக தொடரன் "I am dogged by a curse more deadly than your reproaches" காட்டும் பொருண்மைப் புறத்தன்மை (Exocentric meaning) உளவியல் அடிப்படையில் பெறுமொழியில் சாதாரண தொடரனாக மாற்றப்பட்ட தன் பொருண்மைச் செறிவு இழந்து விடுவதை உணரலாம்.

"உன் அன்பான பேச்சைவிட, நான் தீராத துயரத்தில் அகப்பட்டுள்ளேன்" —

எனவும்,

"உன் ஆறுதலான பேச்சில் மீளமுடியாத இன்னலிற்கு சபிக்கப்பட்டேன்" —

எனவும் தமிழில் மொழிபெயர்க்கப்படுகிறது. தமிழில் காணும் தொடரன்கள் இரண்டும் ஆங்கிலத் தொடரன் கொண்டுள்ள பொருண்மைச் செறிவின் ஆழ்த்தன்மை - உளவியல் கூற்றியல்பை வெளிப்படுத்தவில்லை என்பது தெளிவு.

தமிழில் பொருண்மை அகத்தன்மை (Endocentric meaning) தொடரானதால் எதிர்பார்க்கப்பட்ட உளவியல் செயல்பாட்டினை கொணர முடியவில்லை. உளஉணர்வு கொண்ட தொடரன்கள், உளஉணர்ச்சிகளை வெளிப்படுத்தும்போது மொழி மாற்றத்தினால் உள இரைச்சலினை (Psychological distribances) பெறுமொழியின் சமூகப் பண்பாட்டின் சூழலில் உருவாகுவதை நாம் உணரலாம்.

இதை விளக்க சான்றாக தொடரன் "*Your eyes melt my heart as the kiss of the morning sun melts the snow on a mountain top*" - யை நோக்கினால், இவ் ஆங்கில தொடரனில் ஒப்புமைத் தன்மை (Comparativeness) உள்ளது. ஆனால் தமிழில் ஒப்புமைத் தன்மையோடு பெயரெச்சத் தொடர்த்தன்மையும் உருவாகிறது.

"மலை உச்சியில் இருக்கின்ற பனியை உருக்குகின்ற காலைக் கதிரவனின் முத்துகள் போல் உன் பார்வை என்னுள்ளத்தை உருக்குகின்றது" –

எனும் இம் மொழிபெயர்ப்பில் "*eyes*" எனும் ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் "**கண்கள்**" என்றிருந்தாலும், இங்கு "**பார்வை**" எனும் சொல்தான் ஏற்புடையதாகுகிறது. இதேபோன்றே "**முத்தம்**" எனும் தமிழ்ச்சொல் "*kiss*" எனும் ஆங்கிலச்சொல்லிற்கு இணையானது என்றாலும் "**முத்துக்கள்**" எனும்சொல்தான் பொருண்மைச் செறிவோடு ஏற்புடையதாகும்.

ஆங்கிலமொழிச் சொற்கள்		தமிழ்ச்சொற்கள்
"*eyes*"	மாற்றுதல் ------→	"கண்கள்" (நேரான இணைச்சொல்)
		"பார்வை" (உளவியல் தன்மை இணைச்சொல்)
"*kiss*"	மாற்றுதல் ------→	"முத்தங்கள்" (உணர்வுச்சொல்)
		"முத்துக்கள்" (இணையான பொருண்மைச் செறிவுள்ள சொல்)

ஆங்கிலமொழி ஏவல் தொடரான (**Paratexis**) — "*Let your forgiveness burn her heart like fire and consume its sin*", தமிழில் '**என்று**' எனும் தொடராக (Complementory) மாறுகிறது. ஆங்கிலச் சொல்லான "*Consume*" என்பதற்கு இணையான சொல்லாக "**விழுங்கிவிடு / சாப்பிடு**" என தமிழில் கண்டாலும், "**அழி**" எனும் தமிழ்ச்சொல்தான் ஏற்புடையதாக உள்ளது.

"நெருப்பென உன் மன்னிப்புகள் அவள் உள்ளத்தை எடுத்து, அவளின் பாவத்தினை அழித்துவிடட்டும்'

என தமிழில் தொடரன் வருகிறது. ஆங்கிலமொழியில் இரண்டு சமத் தொடரன்கள் இணைந்து ஓரே ஏவல் தொடரனாக இருந்த

போதிலும், தமிழில் வினையெச்சத்தைத் தன்னகத்தே கொண்ட ஏவல் தொடரனாகத்தான் மொழி பெயர்க்கப்படுகிறது.

அதாவது,

ஆங்கிலமொழி	→	தமிழ்மொழி
இரண்டு சமத்தொடரன்கள் கூட்டுத் தொடரனாகி ஏவல் தொடரன்	→	வினையெச்சத் தொடரனாகி ஏவல் தொடரன்

மன உணர்வுகளின் ஆழ்த்தன்மை மொழிபெயர்ப்பில் மறைந்துவிடுகின்ற தன்மையை இச்சான்றின் மூலம் உணர்த்தலாம்.

சிற்சில வேளைகளில் பெறுமொழியில் ஒரு குறிப்பிட்ட கருத்தை வெளிப்படுத்த பல தொடரன்களை கையாளப்படுவதும் உண்டு. இத்தன்மை தருமொழிக்கும் பெறுமொழிக்கும் இடையே காணும் பொருண்மைத் தன்மையை வெளிக்கொணர–இணைக்க கையாளும் உத்தியாகும்.

"*You stood speechless like a thunder cloud at sunset flashing, with an agony of suppressed light*" — எனும் ஆங்கிலத் தொடரன் எச்சத் தொடரனைப்பையும், ஒப்புமைத் தொடரமைப்பையும் கொண்டுள்ளது. இயற்கை நிகழ்ச்சிகளுக்கு முரண்பாடான கருத்துக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. எனினும் உளவியல் தன்மையில் ஆழ் உணர்வினை வெளிபடுத்துகிறது. "*Thunder Cloud*" "*agony of suppressed. light*" போன்ற தொடர் மொழிபெயர்ப்பில் இனைச் சொற்களைக் காண்பதிலும் பொருண்மைச் செறிவை வெளிகொணர்வதிலும் சிக்கல்களை உருவாக்குகின்றன.

"*Thunder cloud*" எனும் ஆங்கிலத் தொடரை "இடியின் மேகக் கூட்டம்" என மொழிபெயர்த்தால், அவ் ஆங்கிலச் சொல் தன்னகத்தே கொண்டுள்ள பொருண்மைச் செறிவை தமிழ்த்தொடர் உணர்த்தாமையைக் காணலாம். ஆனால் தமிழிலுள்ள "இடியோசை" எனும் தொடர் ஆங்கிலச் சொல்லின் பயனாக்கத்தைத் தெளிவாக மரபுத்தொடராக

வெளிப்படுத்துவதை அறியலாம். இதேபோன்று "*agony of suppressed* Light" எனும் தொடரை **"மங்கிய ஒளியின் சோகம்"** என்று கொண்டால், ஆங்கிலத்தொடரின் மரபுத் தன்மையைக் குறைப்பதோடு, பொருண்மைச் செறிவின் சிதைவும் ஏற்படுகிறது. ஆனால் **ஒளியிழந்த ஒளி** எனக் கொண்டால், இலக்கிய வளத்தன்மையோடு, "இடியோசை" எனும் தொடருடன் இணைந்துக் கொண்டு, உரையாடலில் உள உணர்வோடு பொருண்மைச் செறிவைத் தெளிவாக உணர முடிகிறது. எனவே ஆங்கிலத் தொடரனுக்கு இணையாக **"மலையில் மறைகின்ற ஒளியிழந்த கதிரவனின் ஒளியில் தோன்றுகிற ஒலி இழந்த இடியோசையால் பேச்சற்றவனாய் நின்றாய்"** என தமிழில் மொழி பெயர்க்க வேண்டும்.

மேலும் ஆங்கிலத் தொடரனின் இலக்கணப்பண்பை ஆராய்ந்தால், அத்தொடரன் ஒப்புமைத்தன்மையோடு எச்சத் தொடரனாக உள்ளது. ஆனால் தமிழ்த் தொடரன் பெயர்ரெச்சத் தொடரனாகி, காரணவிளைவுத் தொடரனாகி வருகிறது என்பதைக் காணலாம்.

தருமொழியில் காணும் சில மரபுத் தொடரன்களுக்கு பெறுமொழியான தமிழில் நேரான அல்லது இணையான சொற்களோ தொடரன்களோ இல்லாததால், இடைவெளி உருவாகிறதைக் காணலாம். சான்றாக. "*to my breast thirsting for your love*" எனும் தொடரனைக்காட்டலாம். இத்தொடரில் உள்ள "*Breast thirsting*" எனும் மரபுத் தொடருக்கு இணையானத் தொடர் தமிழில் கிடைக்கவில்லை. இதனை **"உன் அன்பிற்காக ஏங்கும் தாயுள்ளம்"** என மொழி பெயர்த்தாலும், இணையான பொருண்மைச் செறிவை உணர்த்த இயல முடியவில்லை.

இதேபோன்று "*But ……… Whose, ……… and*' போன்ற இணைப்புத்தொடர்களுக்கு ஏற்ற தொடர்கள் தமிழில் இல்லை இக்கருத்தை விளக்க, "*But who was the woman whose heart caught fire from your shame and anger and flowed up in silence?*"

எனும் ஆங்கிலத்தொடரனைக்கூறலாம். இவ் ஆங்கிலத் தொடரனை "யார் அந்தப்பெண்" உனக்கு ஏற்பட்ட அவமானத்திலும், கோபத்திலும், அவள் உள்ளம் நெருப்பென கொதித்தது; அவள் உள்ளம் அமைதிபொங்கி வெடித்தது" என மூன்று தனித்தனித்தொடரனகளாக மொழிபெயர்க்க இயல்கிறது. "*Anger,*' எனும் சொல்லிற்கு கோபம் எனக் கொண்டாலும், இச்சொல், ஆங்கிலச்சொல்லின் பொருளாழுத்தை உணர்த்தவில்லை. *Woman whose heart* எனும் தொடர் அவள் உள்ளம் என இருமுறை தனித் தனியாக இரு தொடரன்களின் எழுவாயாகத் தோன்றுகிறது.

மேற்சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் புதிய மொழித் தொடரன்கள், இலக்கண அமைப்புகள் பெறு மொழிக்கு மட்டுமின்றி தருமொழியிலும் உருவாக்கும் சூழலைக் கண்டுணரலாம். சொற்களுக்கும், தொடரன்களுக்கும் புதிய அல்லது மாறுபட்ட பொருண்மைச் செறிவுகளும் மரபுத் தன்மைகளும் மொழிபெயர்ப்பினால் விளையும் என்பது தெளிவு. இலக்கியவளத்தன்மை புதிய கோணத்தில் ஆராயப்பட வேண்டிய சூழல் உருவாகுவதை அறிந்து கொள்ளலாம். மொழிகளின் பயனாக்கமும், செய்திப் பரிமாற்றமும் மொழிபெயர்ப்பின் இரு கண்கள் என்பது தெளிவான செய்தி.

உதவிய நூற்களும் கட்டுரைகளும்

1. Nida. E. A., 1964 Toward A Scionre of Translating, Leiden.
2. Rabindranath Tagore., Karna and Kunti.
3. Susan Bassnett Mcguise 1980 Translation Studies, Newyork.
4. Subbiah. G. 1991 The Growth of language Structure, Seminar Paper, Annamalai University, Annamalai Nagar

Discourse Markers and Malayalam Learning*

N. Rajasekharan Nair
Annamalai University

0. Introduction

A learner who learns Malayalam as a second language encounters many problems. As in many other Indian languages, Malayalam also show a few notable differences between the written and spoken varities. The L_2 learner has to learn both the varities, if he wants to master the language. It is the accepted practice to introduce the written language before teaching the spoken Variety. Usually the standard spoken variety is chosen to teach the language. The teaching materials are prepared taking into account the importance of this aspect.

The use of the 'discourse markers' are more predominant in the spoken variety. An attempt is made in this paper to focus the problems encountered by the learners of Malayalam in learning the discourse markers in the appropriate contexts.

1. Methodology

The data for the present study is collected from the M. A. Linguistics students of Annamalai University who study

---

* An earlier version of this Paper was presented in the National Seminar on Linguistics and Language Teaching which was held at Aligarh Muslim University.

Malayalam as a second language. Their mother tongue is Tamil. In the course of learning Malayalam, they commit different types of errors, like the following:

1. Errors in verb forms, 2 errors in auxiliary verbs, 3. errors in tense formation, 4. errors in the use of case suffixes, 5. errors in syntax, 6. errors in spelling 7. errors in the choice of lexical items etc. The errors which are analysed in the paper come under the last category.

The learners who are members of a relatively homogenous group, make similar errors in the choice of lexical items, especially the 'discourse markers'. It is found that during the early stages of Malayalam (L_2) learning, the learner makes a number of errors. The reasons for this are many. The analysis on this phenomenon is not intended here. During the advanced stages of learning, it is found that, the learner is able to acquire good competence of the L_2. It is also proved that there is a continuam in the process of second language learning. Prior to achieving the mastery over the target language, the learner makes his own rules about the language. The stages between the early stages of learning and the advanced stages of learning can be termed as 'intermediate stages'. Corder (1967) calls such intermediate stage as 'Transitional Competence' and Selinker (1972) calls this as 'Inter language'.

The linguists identify two types of errors in the Process of second language learning. They are;

1. 'Local' errors and
2. 'Global errors.

The 'global' errors are more serious errors which alter the whole structure. The 'local' errors are mostly found in the morphologioal and lexical levels. The errors which are found in

the "learning of discourse markers come under the first category" i. e., the 'local errors'.

2. Source for the errors

It is found that the wrong choice of the discourse markers in Malayalam is due to the L_1 interference. Overgeneralisation is also another cause for the errors.

3. Analysis

The data with incorrect discourse markers are analysed. The frequency of errors was also determined. Depending on the gravity of errors, the learners are given more linguistic training.

The learner's vocabulary development and the mastery of the grammatical rules of the target language are not enough to speak the language fluently. He has to learn the discourse markers for Malayalam to use them in the appropriate environments also. Then only a smooth conversation is possible. Prabhakara Variar (1988) while discussing the importance of discourse markers in Malayalam explains some of the serious problems connected with the learning of discourse markers of Malayalam.

The discourse markers in Malayalam occur in front of a sentence. Semantically these forms convey the complete sense Hence these forms can be considered as elliptical sentences Consider the following sentences.

1a. *sari*, na:!e Ka:*na*:m.
O.K. tomorrow see
'O.K., Let us see tomorrow'

b. na:!e *sari* Ka:*na*:m.
'tomorrow O. K. see'

2a. *appo :* (!), ni: varunnille: ?
that time, you come neg-intrm.
